
தோழர் ஆர். நல்லகண்ணு
எண்பதாண்டு நிறைவு மலர்

C.R.I. PUMPS

With best compliments from:

C.R.I. PUMPS (PVT) LIMITED

54-A, Avarampalayam Road, Ganapathy, Coimbatore-641 006

Phone: +91-422-2562091. Fax: +91-422-2562144. E-mail: corp@magna.co.in

Website: www.cripumps.com

An **ISO 9001** company

Pumping trust. Worldwide.

தோழர் ஆர். நல்லகண்ணு

எண்பதாண்டு நிறைவு மலர்

1250



வெளியீடு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி

தமிழ்நாடு மாநிலக் குழு

பாலன் இல்லம்,

19, செவாலியே சிவாஜி கணேசன் சாலை,

தியாகராய நகர், சென்னை 600 017.

விலை ரூ.100



உங்களுடன் ...

எண்பது ஆண்டுகள் வாழ்ந்த நிறை வாழ்வின் ஞாபகத் தொகுப்பு மட்டுமல்ல இந்த மலர். நீண்ட வாழ்க்கைப் பரப்பில், முதலில் தனது ஒடுக்குமுறையை உணர்ந்து, ஒடுக்கப்பட்டவர்கள் அனைவரையும் விடுதலை செய்ய, தானும் தனது தோழர்களுமாக வெற்றுக் கால்களுடன் வரலாற்றின் வேகத்துக்கு ஈடு கொடுத்து, நடந்து வந்த போராட்ட வாழ்க்கையை பதிவு செய்யும் முயற்சி இது. எண்பது ஆண்டுகளில் அறுபது ஆண்டுகளை தீவிர அரசியலில் நிறைவு செய்யும் எமது தலைவரின் வாழ்க்கை தமிழக உழைக்கும் மக்களின் வரலாற்றுக்கு ஒரு சிறிய பங்களிப்பை செலுத்தியுள்ளது என்றால், இது மிகைப்படுத்தப்பட்டதல்ல, என்பதை மலரை வாசிப்பவர்களால் உணர்ந்து கொள்ளுதல் இயலும்.

தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்களைப் போலவே இந்த மலரும் எளிமையுடன் இருக்க வேண்டும் என்று, திட்டமிட்டோம். எளிமை என்பதற்கு ஆடம்பரமற்றது என்று பொருள் கொண்டோம். எளிமை என்ற பெயரில் எதுவும் ஆழமற்றதாகவும் இருந்து விடக் கூடாது. எங்கள் முடிவில் முக்கியமானது முகப்பு அட்டையைத் தவிர வேறு எந்தப் பக்கத்தையும் வண்ணங்களில் அச்சிடுவதில்லை என்பதுதான். ஆனால் விளம்பரங்கள் இதற்கு விதிவிலக்கு. தகவல்களின் முக்கியத்துவம் கருதியும், புகைப்படங்களை தெளிவுடன் பதிப்பிக்கும் அவசியம் கருதியும், ஓரளவிற்கு தரமுடைய காகிதங்களில் அச்சிடுதல் தவிர்க்க இயலாததாகி விட்டது. மலர் செலவுகளிலேயே கூடுதல் தொகை காகிதத்திற்குத் தான் கொடுக்கப்பட்டது.

மலருக்கு செழுமை வழங்கியதில் முக்கியத்துவம் வகிப்பது டாக்டர் கலைஞர் முதல் அரசியல் தலைவர்களின் வாழ்த்துச் செய்திகள்தான். வேண்டுகோள் கடிதம் அனுப்பிய உடன் முதலில் கட்டுரை அனுப்பி வைத்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். அந்த அளவிற்கு தோழர் ஆர்.என்.கே. அவர்கள் மீது ஆழ்ந்த பாசம் கொண்டுள்ளவர். இதைப் போலவே எல்லா அரசியல் தலைவர்களும் ஆர்வத்துடன் காலத்தில் செறிவுமிக்க வாழ்த்துச் செய்தி அனுப்பி மலரை சிறப்பித்துள்ளார்கள். தகவல்களையும் புகைப்படங்களையும் மாநிலம் முழுவதிலுமிருந்து தோழர்கள் ஆர்வத்துடன் அனுப்பி மலர் சிறக்க உதவியிருக்கிறார்கள். இந்த உதவியை மலருக்கான பேருதவியாகக் கருதுகிறோம்.

மலரில் நிரம்பி ததும்பும் அழகுணர்ச்சிக்கு, காரணியாக அமைந்தவர், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் நண்பர் ஏ.கோபண்ணா அவர்கள்தான். இந்த மலரை அழகுற உருவாக்குவதில், இவரது ஓய்வறியா உழைப்பு பிரம்மிக்க வைக்கிறது. கம்யூனிஸ்டுகளைப் போன்றே கூட்டு செயல்பாட்டில் நம்பிக்கைக் கொண்டவர். ஒரு சிறந்தக் குழு தேர்வு செய்து மிகக் குறுகிய காலத்தில் மிக சிறப்பான மலரை சாத்தியப்படுத்தியுள்ளார். இவரது குழுவில் உள்ள ஓவியர் இரா.ஜெயசீலன் மற்றும் சில நண்பர்கள் இடம் பெற்று உறக்கமற்று உழைத்திருக்கிறார்கள். இவர்களுக்கு நன்றி சொல்லல் சம்பிரதாயமாகிவிடக் கூடாது என்ற தயக்கம் எங்களுக்கு.

ஜனசக்தி, பாவை ஆகிய இரண்டு அச்சகங்களும் ஆர்.என்.கே. அவர்களின் தோழமையில் வளர்ந்தவை. மலருக்கு பொறுப் பேற்ற இந்தத் தோழர்களின் அர்ப்பணிப்பு குறிப்பிட்டுச் சொல்லத்தக்கது. ஜனசக்தியின் தோழர்கள் கே.சி.ஏ.கருத்திருமன், எஸ்.தனசேக ரன், சி.கே.பிருதிவிராஜ், ஆர்.ஜீவ பாரதி ஆகிய நால்வருக்கும், பாவை அச்சகத் தின் தோழர்கள் பொறுப்பாளர் ஜி.துரைராஜ், சேகர், ஏ.ராஜ்குமார் ஆகியோருக்கும் எங்களின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மலருக்கான விளம்பரங்களை மனப் பூர்வமாக பலரும் வழங்கியிருக்கிறார்கள். திரை யுலகத்தைச் சார்ந்தவர்கள் வணிக நிறுவனங் கள், இயக்கத் தோழர்கள், ஆர்.என்.கே. ஆர்வலர்கள் என்று, எத்தனையோ வகையினர் மலருக்கான விளம்பரத்தை வழங்கியிருக்கிறார் கள். இதைப் போலவே, மாநிலம் முழுவதிலும் பயணம் செய்து, விளம்பரங்களை திரட்டுவதில் ஜனசக்தி மேலாளர் எஸ்.எஸ்.கணேசன் கவனம் செலுத்தியுள்ளார். இவர்கள் அனைவருக்கும் மலர்க்குழு சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

புகைப்படம் எடுத்தல் சிறந்த படைப்புத் தொழில். ஆர்.என்.கே. அவர்களின் மிகச் சிறந்த புகைப்படங்களை உருவாக்கித் தந்த புகைப் படக் கலைஞர் ஸ்ரீஹரி இங்கு நினைவு கூறத் தக்கவர். புகைப்படங்களை அழகுறச் செய்த வி.கேசவன், ஏ.ஸ்டாலின் ஆகியோரின் பணியும் குறிப்பிடத்தக்கது.

அன்புடன்

சி.மகேந்திரன்

இரா.முத்தரசன்

மலர்க்குழு

18.10.2005

கே.எண். 1250

பொருளடக்கம்

1.	ஏ.பி.பரதன்	4
2.	பிரகாஷ் கரத்	5
3.	டாக்டர் கலைஞர்	6
4.	டி.ராஜா	8
5.	தா. பாண்டியன்	9
6.	க.அன்பழகன்	11
7.	ஜி.கே.வாசன்	13
8.	என்.சங்கரய்யா	15
9.	கி.வீரமணி	16
10.	என்.வரதராஜன்	19
11.	மருத்துவர் ச.இராமதாசு	20
12.	வைகோ	21
13.	கே.எம்.காதர் மொகிதீன்	24
14.	இராம. வீரப்பன்	25
15.	கவிக்கோ அப்துல் ரகுமான்	27
16.	ந. ரெங்கசாமி	28
17.	தயாநிதி மாறன்	29
18.	எஸ்.எஸ்.பழநிமாணிக்கம்	30
19.	எஸ்.ரகுபதி	31
20.	சிற்பி	32
21.	ஜெயகாந்தன்	32 அ
22.	கவிஞர் அறிவுமதி	32 ஆ
23.	பேரா. கார்த்திகேசு சிவத்தம்பி	33
24.	தவத்திரு பொன்னம்பல அடிகளார்	35
25.	டாக்டர் நா.சேதுராமன்	36
26.	தி.க.சி.,	37
27.	நடிகை மனோரமா	39
28.	நடிகர் சிவக்குமார்	40
29.	நடிகர் சத்யராஜ்	41
30.	கவிஞர் பொன்னடியான்	42
31.	மாஜினி	43
32.	பேரா. நா.தர்மராஜன்	45
33.	'நக்கீரன்' கோபால்	47
34.	கவிஞர் கே.ஜீவபாரதி	51
35.	தஞ்சை இராமமூர்த்தி	52
36.	தமிழருவி மணியன்	54
37.	திரு. வீரபாண்டியன்	56
38.	ச. பீட்டர் அல்போன்ஸ்	57
39.	ஸ்ரீ வரத எத்திராஜ ஜியர்	60
40.	பெ.சு. மணி	61
41.	ஆனாரூனா	63
42.	நெல்லை கண்ணன்	65
43.	கவிஞர் பரிணாமன்	66
44.	கவிஞர் இரவீந்திரபாரதி	67
45.	கவிஞர் ஜகன்	68
46.	எம்.ஆதிமூலம்	70
47.	எஸ்.அழகிரிசாமி	73
48.	ஏ.எம்.கோபு	73
49.	எஸ்.எஸ்.தியாகராஜன்	75
50.	சி.மகேந்திரன்	77
51.	தேவ.பேரின்பன்	79
52.	கே.சுப்பராயன்	82
53.	எம்.அப்பாதுரை	84
54.	வே.துரை மாணிக்கம்	84
55.	ஆர்.முத்தரசன்	89
56.	பொன்னீலன்	91
57.	இளசை மணியன்	92
58.	கோ. பழனிச்சாமி	94
59.	வீ.இராஜமோகன்	95
60.	பெ. அன்பு	96
61.	எஸ். குணசேகரன்	97
62.	பி.பத்மாவதி	97
63.	த.லெனின்	99
64.	இரா. திருமலை	100
65.	இரா.விஸ்வநாதன்	101
66.	நாரா.கலைநாதன்	103
67.	கவிஞர் செ.மாயக்கிருட்டிணன்	106
68.	ரஞ்சிதம் நல்லகண்ணு - நேர்காணல்	107
69.	கவிஞர் குமார சுப்பிரமணியன்	117
70.	கவிஞர் பல்லவன்	118
71.	வாத்தியார் ஆர்.எஸ்.ஜேக்கப்	120
72.	ச.பலவேசம் செட்டியார்	122
73.	கேப்டன் பாரதி இராமநாதன்	125
74.	இராஜேஸ்வரி பாரதி	127
75.	சிந்தனைச் சிதறல்	128
76.	வாழ்க்கைக் குறிப்புகள்	132
77.	படைப்புகள்	138
78.	புகைப்படங்கள்	158
79.	மே.து. ராசுகுமார்	192
80.	டி.எம். மூர்த்தி	195
81.	இரா. காமராசு	196
82.	ஏ.வி. சரவணன்	197
83.	மணவை த. இந்திரஜித்	198
84.	துறையூர். பி. கணேசன்	199
85.	என்.எம். கிருஷ்ணன்	200
86.	சமயநல்லூர் நவநீதன்	203



I Salute Com.Nallakannu!

A.B.BARDHAN

Com. Nallakannu is one of the most respected leader of the Communist Party. This is so not merely because of his seniority, but his innate qualities.

He is a pillar of strength to the Party not only in the state of Tamilnadu, but also to the Central Party leadership. He is a pillar of strength in the National Executive of the Party. His grave demeanour frank and clear opinion on the issue under discussion is always listened to with great attention. He never butts in, never interferes in the midst, but awaits his trun and then speaks out his views.

He is a builder of the Communist Party in the state. It is to his credit that the Party in Tamilnadu could also integrate with the social reform movement led by Periyar. He had to suffer long imprisonment for his bold and militant activities as a Communist.

He has always espoused the cause of the most downtrodden section of society. Only recently he led and organised the mass satyagraha in the form of a hunger strike against the upper caste hostility to the right of the dalits to contest for panchayat election.

In opposing the communal forces and those who opportunistically allied with them, and forging the Democratic Alliance under the leadership of Dr. M.Karunanidhi, Nallakannu played a positive role.

I look forward to many years of Nallakannu`s leadership for our Party. I salute him and greet him as a comrade, a friend, a leader.



Senior Leader of the Communist Movement

PRAKASH KARAT

I am glad to know that the 80th birth anniversary of Comrade R.Nallakannu, one of the senior leaders of Communist movement in Tamilnadu is being commemorated.

Com. R.Nallakannu has spent more than six decades in the Communist movement. He emerged as one of the important leaders of the kisan movement starting from the Tirunelveli District. His dedicated work, simplicity and honesty are notable features of his political life which should be an example for all those who wish to serve the cause of the people. I am happy to know that a function to commemorate his completing 80 years is being held on October 18, 2005.

I wish Com. R.Nallakannu good health and many more years of service to the working people and the Communist movement.

❖





நெடுங்காலம் வாழ்க! நிறைவோடு வாழ்க!

டாக்டர் கலைஞர்

காட்சிக்கு எளியவராகவும், கடுஞ்சொல் கூறாத இனிய பண்பாடு உடையவராகவும் ஒருவர்; கட்சிக்குக் கருவூலம் போன்றவராகவும், கடுமையாக உழைத்திடும் வர்க்கத்தினர்க்கு உற்ற தோழராகவும் ஒருவர்; கன்னலையொத்த பேச்சாளராகவும், நெறி பிறழும் நேரத்தில் கனலையொத்த விழியினராகவும் ஒருவர்; தூய்மை, எளிமை, வாய்மை எனும் மூன்று முழுமுதல் குணங்களின் இருப்பிடமாகவும் - எந்தப் பிரச்சினையாயினும் கனிவு, தெளிவு, துணிவு ஆகிய அணுகுமுறையைப் பின்பற்று பவராகவும் ஒருவர்; அந்த ஒருவர் - உன்னத மானவர் - உயர்ந்தவர் - நண்பர் திரு.இரா.நல்லகண்ணு அவர்கள் ஆவார்.

1925ஆம் ஆண்டு டிசம்பர் 26ஆம் நாள் திருவைகுண்டத்தில் ஒரு நடுத்தர விவசாயக் குடும்பத்தில் மூன்றாவது பிள்ளையாகப் பிறந்து - உயர்நிலைப் பள்ளிக் கல்வியைத் தொடர்ந்த இளம்பிராயத்திலேயே தம்மையொத்த இளைஞர் களுடன் இணைந்து கையில் கொடியுடன், நாவில்

''என்று தணியுமிந்த சுதந்திர தாகம்?
என்று மடியுமெங்கள் அடிமை
யின் மோகம்?
என்றெம தின்னல்கள்
தீர்ந்துபொய் யாகும்?
. . . .
பஞ்சமும் நோயும் நின் மெய்யடி யார்க்கோ?
பாரினில் மேன்மைகள் வேறினி
யார்க்கோ?''

என்று பாட்டுக்கொரு புலவன் பாரதி தொடுத்துத் தந்த கேள்விக் கணைகளு டனும் ஊரெங்கும் உணர்ச்சிப் பிரவாகமாய் வலம்வந்து - படிப்பில் கவனம் படியாமல் பள்ளியை விட்டு வெளியில் வந்து கொடிபிடித் துக் கொணடு இப்படி ஊர் சுற்றுகிறாயே என்று தந்தையார் கடிந்து கொண்ட பிறகும் பிடிவாத மாக இருந்து - பள்ளிக் கட்டணம் செலுத்தத் தந்த பணத்தை கட்சிக் கூட்டத்திற்குச் செல்லப் பயன்படுத்தி - நாட்டுபற்றும், விடுதலை வேட்கையும்



சமூகப்பிரக்னையும் தொடர்ந்து உந்தித்தள்ள - அரசியல் அரங்கத்திற்குள்ளே அடியெடுத்து வைத்தவர் நண்பர் இரா.நல்லகண்ணு ஆவார்.

உப்புச் சத்தியாக்கிரகத்தில் முதல் ஆளாய்க் கொடி பிடித்துச் சென்று- அண்ணல் காந்தி அடிகளாரின் அழைப்பினையொட்டி நடைபெற்ற யுத்தத்துக்கெதிரான போராட்டத்தில் கலந்து கொண்டு, காவல்துறையினரின் கடுமையான தாக்குதலுக்காளாகி - 1942-இல் குலசேகரப் பட்டிணத்தில் வெள்ளைக்கார உப்பள அதிகாரி ஒருவர் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, மலபார் தனிப்படை அடக்குமுறையை எதிர்த்தும் - தூத்துக்குடி ஆர்.வி.மில்லில் வேலை நிறுத்தம் நடைபெற்றபோது மற்ற நண்பர்களுடன் சேர்ந்துகொண்டு வீட்டுக்கு வீடு சென்று அரிசி, பணம் ஆகியவற்றை வசூலித்து, பாதிக்கப்பட்டிருந்த தொழிலாளர்களின் குடும்பங்களுக் கெல்லாம் கொடுத்துதவி - தமிழ்த்தென்றல் திரு.வி.க.வின் பொதுவுடமை, சமத்துவம் பற்றிய பொருள் பொதிந்த உரைகளை மனம் ஒன்றிக்கேட்டு, அதன் விளைவாக உள்ளத்தினுள்ளே உறைந்து கிடந்த போர்க்குணம் தூண்டப்பெற்று நெருப்பாய்க் கனன்றெரிய - பண்டித நேரு, பாவேந்தர் பாரதிதாசனார் ஆகியோரின் நூல்களைப் படிக்கத் தொடங்கியதன் விளைவாக தேசிய அரசியல் சிந்தனை பொதுவுடமைச் சிந்தனையாகப் புத்துருவம் பெற்று - 1944-இல் கம்யூனிஸ்ட்டாகப் பரிணாம வளர்ச்சி பெற்றவர் நண்பர் திரு.இரா.நல்லகண்ணு அவர்கள் ஆவார்.

விவசாயிகள், நெசவாளர்கள், தொழிலாளர்கள் போன்ற அடித்தட்டு மக்களின் பிரச்சினைகளை ஆணிவேரிலிருந்து, நுனிக் கொம்புவரை அலசி ஆராய்ந்து -

> ''கஞ்சியின்றிச் சாவது யாரார்? - பிச்சைக்
> காரராகி இரந்துண்டு மாள்வது யாரார்?
> கெஞ்சியே தவிப்பது யாரார்? - சற்றும்
> கேள்விமுறை இன்றி மோசம்போவது யாரார்?
> பஞ்சணையில் தூங்குவது யாரார்? - தினம்
> பாலமுதக் கொழுப்புற்று வாழுவது யாரார்?
> மிஞ்சுகின்ற வித்தியா சத்தால் - வீணர்
> மேன்மையுறத் தொழிலாளர் வீழ்கிறாரடா!''

என்று நாமணக்கும், நல்ல தமிழ் மணக்கும், நாஞ்சில் என்ற பேர்மணக்கும், பாமணக்கும், பூதப்பாண்டியெனும் ஊர்மணக்கும் பண்பாளர் ஜீவா எழுப்பிக்கொண்டிருந்த கேள்விகளையெல்லாம் எதிரொலித்து - படிப்படியாக வளர்ந்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளராக இணையிலாப் பணியாற்றி - எல்லோரது நெஞ்சத்திலும் நீங்காத இடத்தைப் பெற்றிருப்பவர் நண்பர் திரு. இரா.நல்லகண்ணு அவர்கள் ஆவார்.

கழகத்துடன் இணைந்தும் - கழகத்தை எதிர்த்தும் அரசியல் காரியங்கள் ஆற்றிட வேண்டிய கட்டாயம், கடந்த காலங்களில் கம்யூனிஸ்ட் கட்சிக்கு நேரிட்டதுண்டு. எதிர்த்துப் பேசிய கட்டத்தில் - வேறுசிலரைப் போல, காழ்ப்புணர்ச்சியைக் கக்கி அரசியல் சுற்றுப்புறச் சூழலைச் சிறிதளவும் மாசுபடுத்தாமல் - நனிநாகரிகத்தையும், பண்பாட்டையும், மென்மையான, மேன்மையான அணுகு முறையையும் கையாண்டு - என்றும் அவற்றைப் போற்றிக் காத்து வருபவர் நண்பர் திரு.ஆர்.நல்லகண்ணு அவர்கள் ஆவார்.

கருப்பு நிறமும், சிவப்புச் சிந்தனையும் - காரியமாற்றுவதில் கண்ணும் கருத்தும் - மற்றவர்களுடன் தொடர்பில் அன்பும் அடக்கமும் - மாற்றுத்தரப்பினரிடம் மதிப்பும் மாண்பும் - இலக்கியத்தில் ஈடுபாடும் பிடிப்பும் - புதிய புதிய செய்திகளைப் படித்தறிந்து கொள்வதில் ஆர்வமும் ஆவலும் கொண்டு, நண்பர் திரு இரா.நல்லகண்ணு அவர்கள் எண்பதாவது வயதை எட்டிய நிலையிலும், முன்னெப்போதும் போல் முனைப்போடு உழைத்து வருவது அரசியல் துறையில் அற்புதமான முன்மாதிரி. நண்பர் திரு இரா.நல்லகண்ணு அவர்கள் உடலில் நல்ல நலத்தோடும், உள்ளத்தில் நிறைந்த மகிழ்ச்சியோடும் நீண்ட நெடுங்காலம் வாழ்ந்திருந்து - அவரது இயக்கத்திற்குத் தமது அனுபவத்தின் அடிப்படையில் அமைந்த ஆக்கப்பூர்வமான வழிகாட்டுதலை வழங்கிக் கொண்டே இருந்திட வேண்டுமென்று எனது இதயப்பூர்வமான வாழத்துக்களைத் தெரிவிக்கிறேன்.

❖

வரலாற்றில் தோழர் நல்லகண்ணு!

டி. ராஜா

தமிழ்நாட்டின் சமூக - பொருளாதார வளர்ச்சிகளுக்காகப் பலர் பாடுபட்டு வருகிறார்கள். விவசாயிகளின் தொடரும் துயரங்கள், விவசாயத் தொழிலாளர்கள் மீதான சமூக ஒடுக்குமுறைகள், அவர்களின் வாழ்வுரிமைகளுக்கானப் போராட்டங்கள், காவிரி உட்பட நதிநீர் பங்கீட்டுப் பிரச்சினைகள், தொழில் வளர்ச்சி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, தமிழ்மொழி, கலை, இலக்கிய வளர்ச்சிக் கூறுகள் என பல இன்று கருத்தியல் தளத்திலும் மக்கள் போராட்டத் தளத்திலும் கூர்மையாக முன்வந்திருக்கின்றன. தீண்டாமை ஒழிப்பு, ஜாதி உடைப்பு, தலித் மற்றும் பழங்குடி மக்களின் விடுதலை, பெண்ணுரிமை என்பன தமிழ்ச் சமூகத்தின் மனசாட்சியை முன்னப்போதும் இல்லாத அளவிற்கு உலுக்கி வருகின்றன.

வரலாற்றில் அந்தந்த காலக் கட்டத்தின் பிரச்சினைகளைச் சரியாக ஆராய்வதின் மூலம், தீர்வுக்காகப் போராடுவதன் மூலம் தனிநபர்கள் வரலாற்றில் தமக்கென ஒரு இருப்பைப் பெறுகிறார்கள். அப்படிப்பட்டவர்களில் தோழர் நல்லகண்ணு ஒருவர் ஆவார்.

நான் கல்லூரி மாணவனாக இருந்தபோது 1970களின் தொடக்கத்தில் ஆரணியில் நடைபெற்ற கட்சி மாநாடு ஒன்றில் அவரை நேரில் சந்தித்திருக்கிறேன். பின்னர் நான் முழுநேரப் போராளியாக - கட்சிப் பணியை முழுநேரப் புரட்சிப் பணியாக ஏற்று மாநில மையத்தில் செயல்படத் தொடங்கிய 1975ன் தொடக்கத்திலிருந்து அவரிடம் நெருங்கிப் பழகிச் செயல்பட்டு வருகிறேன். பாலன் இல்லத்தில் கவிஞர் கே.சி.எஸ்.அருணாசலம் மற்றும் தோழர் நல்லகண்ணு ஆகியோரோடு ஒன்றாக உண்டு, உறங்கி பல ஆண்டுகளைக் கழித்திருக்கிறேன். அகில இந்தியப் பொறுப்புகளை ஏற்று டில்லியிலிருந்து செயல்படத் தொடங்கிய பின்னரும் அன்றைக்கு அவரிடம் ஏற்பட்ட அதே நெருக்கம் நெகிழ்வுடன் இன்றைக்கும் இருந்து வருகிறேன்.

தமிழ்நாட்டில் விவசாயிகள் - விவசாயத் தொழிலாளர் இயக்கத்தைக் கட்டிவளர்த்த பெருமைக்குரியவர்கள் என்கிற போது தோழர் ப.சீனிவாசராவ் அவர்களுக்குப் பின்னர் தோழர் நல்லகண்ணு அவர்களையும் தோழர் எம்.ஆதிமூலம் அவர்களையும் குறிப்பிட வேண்டும். சின்னப் பை ஒன்றைக் கையில் பிடித்துக் கொண்டு கிராமம் கிராமமாக அலைந்து இயக்கத்தை அவர்கள் கட்டியிருக்கிறார்கள். உடல் நலம்குன்றி தோழர் ஆதிமூலம் ஒதுங்கியிருக்கிறார். தோழர் நல்லகண்ணு விவசாயத் தொழிலாளர் வர்க்கப் பணிகளோடு கட்சிப் பணிகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டில் விவசாயத் தொழிலாளர்களுக்கு அர்ப்பணிப்பு உணர்வோடு பாடுபட்டு வருபவர் தோழர் நல்லகண்ணு. விவசாயத் தொழிலாளர் இயக்கம் இன்று அமைப்பையும் வலிவையும் பெற்றுச் செயல்படுவதில் பெரும்பங்கு தோழர் நல்லகண்ணு அவர்களைச் சார்ந்ததே. தமிழ்மாநில விவசாயத் தொழிலாளர் சங்கம் தோழர் நல்லகண்ணு அவர்களின் கடும் உழைப்பால் - இலக்குச் சிதறாத ஈடுபாட்டால் உருவாக்கப்பட்டது என்பதை வரலாறு சான்றாக நின்று சுட்டிக்காட்டும்.

தோழர் நல்லகண்ணு அவர்களுக்கு இப்போது 80 வயது. இந்தியாவில் - தமிழ்நாட்டில் இருக்கிற நமது கட்சியின் மூத்தத் தலைவர்களில் ஒருவர்; வயதைப் பொருட்டாகக் கொள்ளாமல் போரிடும் குணம் கொண்டவர். தலித் மக்களின் உரிமைகளுக்காக - பஞ்சாயத்துத் தலைவர் தேர்தலில் தலித் மக்கள் பங்கு கொள்வதற்கான சட்டரீதியான உரிமையைக் காத்திட - சமூக நீதியை நிலைநிறுத்திட மதுரையில் இந்த வயதில் அவர் தலைமை ஏற்று நடத்திய உண்ணா விரதப் போராட்டம் அவருடைய போர்க் குணத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

வாழ்க தோழர் நல்லகண்ணு அவர்கள்.

❖



சேவையில் சிறந்தவர்!

தா. பாண்டியன்

நம்முடைய நாட்டில் நெடுங்காலமாகவே சிலபழக்கவழக்கங்கள் நாட்டின் பண்பாடாக, வாழ்க்கை முறையாக வளர்ந்து வந்திருக்கிறது. தொன்மை காலம் தொட்டே இந்தியாவில் சிற்றின்பம், பேரின்பம் என இரு வாழ்க்கை முறைகள் போதிக்கப்பட்டு வந்துள்ளன. பிறவிப் பெருங்கடல் நீந்த துறவறமே சிறந்தது என்பாரும் இருந்தனர். வள்ளுவப் பெருந்தகை இல்லறமே நல்லறம் என்று வரையறுத்தார். துறவறம் பூண்டோரையும் இல்லறத்தாரே காத்துவந்தனர் என்பது கண்ட உண்மை. துறவறம் மேற்கெண்டோரையும் இல்லறம் நடத்தியோர் தான் பெற்றுத்தந்தனர். இவை ஆன்மீக வாதங்களாக மட்டுமல்லாமல் எது சிறந்த வாழ்க்கை நெறி என்பது இன்றும் தொடர்கிறது.

கந்தையானாலும் கசக்கிக்கட்டு, கூழானாலும் குளித்துக்குடி என்பது தமிழ்நாட்டில் நெடுங்காலமாக வழங்கிவரும் முதுமொழி. உண்பது நாழி உடுப்பது நான்கு முழம் என பேசப்படுவதும் நாம் கேட்டதே.

ஆனால் மனித குலத்தின் முன்னேற்றம், நமது வாழ்க்கை முறைகளில் பல மாற்றங்களை செய்து வருகிறது. உலகத்தோடு ஒட்ட ஒழுகல் என்பது வள்ளுவர் காட்டும் வழி. இவைகளின் சாரமாக நாம் எடுத்துக்கொள்ளும் பண்பாடு, மனப்பக்குவம் எல்லா காலத்திற்கும் பொதுவாகவே நீடிக்கும். ஆடைகளும், வாகனங்களும், கருவிகளும் அணிகலன்களும் மாற்றங்கள் அடையலாம். ஆனால் அன்பு செலுத்துவது, தீமை செய்யாமலிருப்பது, நல்லன நாடுவது என்பது மனித உள்ளத்தைப் பொறுத்தது.

இந்த வகையில் இந்திய நாடு அடிமைப்பட்டுக்கிடந்ததை இந்த நாட்டில் பிறந்த பலரும் உணர்ந்திருந் தாலும் சிலர்தான் அடிமைத்தளையை அகற்றிட வழிகள் தேடினார்கள்.

இளம் பருவத்திலேயே இந்தியா விடுதலை பெற வேண்டும் என்ற ஆவலை வெளியிடுபவராக மட்டும் அல்லாது அதில் தானும் பங்கேற்க வேண்டும் என சுதந்திரப்போரில் பங்கேற்ற சிறப்பை தோழர் நல்லகண்ணு பெற்றார்.



இந்திய விடுதலைக்கு போராடும் போதே, அன்னிய ஆட்சியை அகற்றுவது மட்டுமே போராட்டத்தின் நோக்கம். அதைத் தவிர இந்தியாவில் நீடித்துவரும் சமுதாய அமைப்பில் எந்த மாற்றமும் செய்யத் தேவையில்லை என்ற கருத்துடையோரும் இருந்தனர். இதில், இந்திய மக்களை அடக்கி ஒடுக்கிவரும் ஆதிக்க சக்திகளும் அப்புறப் படுத்தப்பட வேண்டும் என பாரதி போன்றவர்கள் கண்ட கனவையே, பாரதி பாடல்களில் மிக்க ஈடுபாடுள்ள நல்ல கண்ணுவும் நெடுந்தொலைவுப் பார்வையைப் பெற்றார். இதையும் ஒருபடி தாண்டி மனித குலம் முழுமைக்குமான முழு விடுதலை வேண்டும் என்ற பொதுவுடமை லட்சியத்திலும் நாட்டம் கொண்டார். எனவே மேலும் சிறப்பைப் பெற்றார்.



கம்யூனிஸ்ட் கட்சியின் 80 ஆண்டு வரலாற்றில் மும்முறை தடை செய்யப்பட்டது. இரண்டு முறை கட்சி பிளவுபட்டது. இவை சோதனைகள் நிறைந்த காலம். தடை செய்யப்பட்ட காலத்தில் முழுமையான அடக்குமுறை நேரடியாகச் சந்தித்த ஒரு மூத்த சந்ததி வேகமாக மறைந்துவருகிறது. நல்லவேளையாக அடிகள் பல பட்டு, தழும்புகள் பல தாங்கிய பின்னும் இன்றும் நடமாடும் நிலையில் நம்முடன் வாழும், பழைய வரலாற்றை எடுத்துக்கூறும் பிரதிநிதி யாக நிற்கும் சிறப்பை பெற்றிருக்கிறார் நல்லகண்ணு.

கம்யூனிஸ்ட் கட்சியில் முன்னோடிகளாகத் திகழ்ந்த சகல தலைவர்களும் ஈடு சொல்ல முடியாத தியாகிகளாகத்தான் வாழ்ந்தார்கள் என்பதை அறிவேன். அவர்களது வாழ்க்கை யில் தூய்மையும், எளிமையும் அர்ப்பணிப்பும் இயற்கை குணங்களாக பதிந்திருந்ததையும் கண்டிருக்கிறேன். இன்றைய அரசியல் களத்தில் பல கட்சிகள், பல வகைத் தலைவர்கள், பல வகை வாழ்க்கை முறைகள் மலிந்து விட்ட நிலையில் இந்திய நாட்டின் புகழ் மண்டிக் கிடக்கும் பண்பாட்டிற்கும், கம்யூனிஸ்ட் இயக்க தியாக சகாப்தத்திற்கும் நின்று சாட்சியம் கூறும் பேற்றினைப் பெற்றி ருக்கிறார் நல்லகண்ணு. இவர், அரசியல் வாழ்க்கையில் மிகுதியும் விவசாயிகளுக்காகவே பாடு பட்டவர் என்பதை நாடறியும்.

இவருக்கு இலக்கியத்தில் புலமையும் உண்டு, மிக்க ஈடு பாடும் உண்டு. இலக்கியத்தில் ஜீவாவின் வழி நிற்பவர். இவர் இயக்கத்தில் சீனிவாசராவ், மணலி கந்தசாமி, காத்தமுத்து, ஆதிமூலம் ஆகியவர்களின் சக போராளியாக வாழ்ந்தவர்.

இவையெல்லாவற்றிற்கும் மேலாக இயற்கை தந்த ஒரு மாபெரும் சிறப்பு, கான்பூரில் 1925 டிசம்பர் 26ல் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நிறுவப்பட்ட அதே நாளில் இந்தியாவின் தென்கோடியில் உள்ள ஒரு கிராமத்தில் பிறந்த சிறப்பையும் இவர் பெற்றிருக்கிறார். அவர் தொண்டு தொடர வாழ்த்துகிறேன்.

❖



சாதிவழக்கை இன்முகத்துடன் சந்தித்தவர்!

பேராசிரியர் **க. அன்பழகன்**

எனது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்களின் எண்பதாம் ஆண்டு நிறைவு ஆண்டு நிறைவைக் கொண்டாடும் செய்தி அறிந்து மகிழ்கிறேன். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செய லாளராக அவர்கள், பொறுப் பேற்றிருந்த அண்மை ஆண்டுகளில் தான் அவருடன் பழகவும் அறியவும் வாய்ப்பு அமைந்தது.

அவர் நெல்லை மாவட்டத்தில் பிறந்தவர். கல்வி கற்கும் பருவத் திலேயே அந்த மண்ணின் மைந்தர் களான வ.உ.சிதம்பரனார், வாஞ்சி நாதன் முதிலியோரைப் பற்றி அறிந்து விடுதலை ஆர்வம் கொண்டார். அதே காலத்தில், பொருனை ஆற்றின் நீர்ப் பெருக்கில், பாடுபட்டு வாழும் உழவர் மக்கள், நாளெல்லாம் உழைத்தும், நல்வாழ்வு பெற முடியாமல் வறுமை யில் வாடுவதைக் கண்டபோது, அவர்கள் சுரண்டப்படுவதை தடுக்கப் பொதுவுடமைக் கொள்கையை நடைமுறைப்படுத்த ஆர்வம் கொண்டார்.

தேசியகவி பாரதியின் பாடலில் கொண்ட ஆர்வம், புரட்சிக் கவியின் பாடல்களில் நிறைவு கண்டது. பண்டித நேருவின் தியாக வாழ்விலே பிறந்த மதிப்பும் தேசிய ஆர்வமும், தோழர் பாலன் தலைமறைவு வாழ்க்கையில் ஏற்றுக்கொண்ட தியாகத்தைக் கண்டு பொதுவுடமைக் கட்சியில் இணையச் செய்தது.

நெல்லை மாவட்டத்திற்கு உரிய தாய்மொழி வேட்கையினால், சங்க இலக்கியமும், திருக்குறளும் அவர் நெஞ்சைக் கவர்ந்தாலும், புரட்சி உணர்வு பொங்கித் ததும்பும் மார்க்சிம் கார்க்கியின் எழுத்தும், புதுமைச் சிந்தனை பூத்திடச் செய்த தமிழ்ப் புதினங்களும் அவரது இதயத்தை நிறைத்தன.

அக்காலத்தில் தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபட்டு பணியாற்றிய அஞ்சா நெஞ்சன் தோழர் ஜீவா அவர்கள் பொதுவுடமைக் கோட்பாட்டினால்தான் சமுதாய அவலங்களைப் போக்க முடியும் என்று தீர்மானித்து கம்யூனிஸ்ட்

கட்சியில் சேர்ந்து தமிழகமெங்கும் போர்க்குரல் எழுப்பிய தொண்டராகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர் அவர்.

மறைந்த வீரர் ஜீவா அவர்களையும், தோழர் இராமமூர்த்தி, தோழர் கல்யாணசுந்தரம், தோழர் மாணிக்கம் முதலான பொதுவுடமை இயக்கத்தின் கொள்கை வழிபட்ட வீரர்கள் பலரையும் அறியவும் பழகவுமான நல்வாய்ப்பு எனக்கு கிடைத்துள்ளது. அந்த வீரர்தம் அணிவகுப்பில் நெஞ்சுறுதி குலையாத ஒரு தியாகியாக தோழர் நல்லகண்ணு அவர்களை நான் காணுகிறேன்.

நெல்லைச் சதி வழக்கில் இணைக்கப்பட்டு, கடுமையான தண்டனைக்கு ஆளானபோதும், அந்த சிறைவாழ்வு தனது லட்சியத்திற்குத் தரும் விலையாக மதித்து இன்முகத்துடன் ஏற்றவர் அவர்.

அவருடைய மாமனார் இரு வகுப் பாரிடையே ஏற்பட்ட மோதுதலில் படு கொலைக்கு ஆளாக்கப்பட்டதால், கடுமையான துயரத்திற்கு அவர் ஆளானபோதும், அக்கொலை குறித்துத் தான் எழுப்பும் கண்டனக் குரல், பழிவாங்கும் உணர்வைத் தூண்டி மேலும் பல உயிர்களைப் பலி வாங்கிட ஏதுவாகும் என்று அஞ்சி மவுனம் காத்தார்.

தமிழ்ப்பற்று, மறுமலர்ச்சி இலக்கிய ஆர்வம், புரட்சி வரலாற்றில் ஈடுபாடு, இலட்சித் தொண்டு செய்வதே வாழ்க்கைப் பேறு என்னும் மனோபாவம், எளிய வாழ்க்கை முறையை நிம்மதிக்கு அடிப்படை என்னும் தெளிவு - பொது நலத்திற்கு ஏலாத தனி மனித நலம் எதுவும் ஏற்படக்கூடாது என்னும் உறுதி - ஆகியவற்றின் ஒட்டுமொத்த வடிவமாகவே காணப்படுபவர் தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்கள்.

நெருப்பாற்றைக் கடக்கும் புரட்சிப் பாதையில் பொதுவுடமை இயக்கம் வீறுநடை போட்டிருப்பினும் - எளிமையும் இனிமையும் பயக்கும் சமத்துவ, சமதர்ம வாழ்வை வழங்குவதுதானே அதன் குறிக்கோள்!

ஆம்! அப்படிப்பட்ட எளிமையும் இனிமையும் கொண்டவராய், அமைதியும் உறுதியும் குலையாதவராய், பொதுவுடமை இலட்சியத்திற்குத் தன்னை ஒப்படைத்துள்ள தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்களின் தொண்டு தொடர நலமுடன் வாழ்க பல்லாண்டு என்று வாழ்த்துகிறேன்.

❖



பொதுவுடமைப் பூங்காவில் பூத்த செம்மலர்!

ஜி.கே. வாசன்

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நுகத்தடியில் இந்தியா பூட்டப்பட்டிருந்த அக்காலக் கட்டத்தில் ''என்று தணியும் இந்த சுதந்திர தாகம்; என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்'' என்ற மகாகவி பாரதியின் அற்புதமான பாடலை உரத்தக் குரலில் முழங்கிக் கொண்டு திருவைகுண்டம் தெருக் களில் ஊர்வலமாகச் சென்று பொதுவாழ்வில் அடியெடுத்து வைத்த அய்யா ஆர்.நல்லகண்ணு அவர்களுக்கு முத்துவிழா கொண்டாடப் படுவதையொட்டி, சிறப்பு மலர் வெளியிடப் படுவது அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். போற்றுதலுக்குரிய ஐயா ஆர்.என்.கே. அவர்களின் பெருமைகளைப் பறைசாற்றும் வகையில் மலர் வெளியிடுவது நமது கடமையாகும்.

இந்திய விடுதலைப் போராட்ட உணர்வு களைப் பெற்ற அதேவேளையில் 'பஞ்சமும் நோயும் நின் மெய்யடியார்க்கோ, பாரினில் மேன்மைகள் வேறினியார்க்கோ'' என்னும் வரிகளில் புதைந்து கிடக்கிற வறுமையும் பசியும் நாட்டில் நிலவுவதைக் கண்டு பொங்கி எழுந்தவர் அய்யா ஆர்.என்.கே. சமூகத்தில் நிலவுகிற ஏற்றத்தாழ்வுகளை துடைத்தெறிய வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் பொதுவுடமை இயக்கத்தில் முழுமையாக தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர்.

விடுதலைப் போராட்ட வீரராக, விவசாயி களின் உரிமைக் குரலை எழுப்புபவராக, தொழிற்சங்கத் தலைவராக தமது வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர் அய்யா ஆர்.என்.கே.

தமிழக அரசியலில் எளிமை, நேர்மை, தூய்மை ஆகியவற்றின் சின்னமாக விளங்கிக் கொண்டிருப்பவர். இவரைப் பார்க்கும்போது ஒரு பக்கத்தில் பெருந்தலைவர் காமராஜரின் நினைவு நமக்கு வருகிறது. இன்னொரு



பக்கத்தில் கம்யூனிஸ்ட் தலைவர் மறைந்த ஜீவானந்தத்தின் நினைவு வருகிறது.

விடுதலைப் போராட்ட காலத்தில் கோடான கோடி ஏழை எளிய மக்கள் எந்த உடையை அணிந்தார்களோ, அதே உடையை அணிந்து கொண்டு நாட்டு மக்களிடையே நம்பிக்கை விதையை தூவி வளர்த்தவர் மகாத்மா காந்தி. அதே போல கம்யூனிஸ்ட் இயக்கத்தில் எளிமையின் சின்னமாக வாழ்ந்தவர் ஜீவானந்தம். அத்தகைய போற்றுதலுக்குரிய தலைவர்களின் வரிசையில் இன்று நம்மிடையே உலா வந்துக் கொண்டிருப்பவர் ஐயா ஆர்.என்.கே. அவர்கள்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளராக அவர் பதவிக்கு வந்த பிறகு அவரோடு பழகுகிற வாய்ப்புகள் எனக்கு நிறைய கிடைத்தது. அத்தகைய சந்தர்ப்பங்களில் ஐயா ஆர்.என்.கே. அவர்களிடம் இருக்கிற அரசியல் தெளிவு, பதட்டமில்லாத, அமைதியான சூழல் ஆகியவை நாமெல்லாம் கற்றுக் கொள்ள வேண்டியவைகளாகும். தமது தூய்மையான அரசியல் பணியால் தமிழக அரசியலில் தமக்கென ஒரு இடத்தைப் பிடித்து பெருமை பெற்றவர் ஐயா ஆர்.என்.கே. அவர்கள்.

கடந்த காலங்களில் தமிழக காங்கிரஸ் இயக்கத் தலைவர்களுக்கும், கம்யூனிஸ்ட் இயக்கத் தலைவர்களுக்கும் நெருக்கமான தொடர்புகள் உண்டு. அந்த வகையில் பெருந்தலைவர் காமராஜரின் நம்பிக்கைக்குரிய சகாவாக மறைந்த பி.ராமமூர்த்தி, ஜீவானந்தம், கே.பாலதண்டாயுதம், எம்.கல்யாணசுந்தரம் ஆகியோரைக் குறிப்பிடலாம். அந்தப் பட்டியலில் தற்போது பெருமையுடன் இடம் பெற்றிருப்பவர் ஐயா ஆர்.என்.கே. அவர்கள். நம்மைப் பொறுத்தவரை ஐயா ஆர்.என்.கே. அவர்கள் பொதுவுடமைப் பூங்காவில் பூத்த செம்மலராக விளங்கிக் கொண்டிருக்கிறார்.

ஐயா ஆர்.என்.கே. அவர்கள் பேசுகிற போது உண்மையைத் தான் பேசுகிறார் என்று மக்கள் நம்புகிறார்கள். அந்த அளவிற்கு ஐயா ஆர்.என்.கே. அவர்கள் மீது மக்கள் அளவற்ற நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். நாட்டில் உள்ள கோடான கோடி ஏழை எளிய, பாட்டாளி மக்களின் நம்பிக்கையை நிரம்பப் பெற்றுள்ள ஐயா ஆர்.என்.கே. அவர்கள் நீண்ட ஆயுளுடன் பொது வாழ்வுப் பணி சிறப்புடன் தொடர வாழ்த்துகிறேன்.

❖



எடுத்துக் காட்டாக விளங்குபவர்!

என். சங்கரய்யா

தோழர் ஆர். நல்லகண்ணு அவர்களின் 81வது பிறந்த நாள் விழாவில், என்னுடைய மனப்பூர்வமான வாழ்த்துக்களையும், பாராட்டுக் களையும் அவருக்குத் தெரிவித்துக் கொள்கி றேன்.

தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் தோன்றி, இளம் பருவம் முதற்கொண்டே நம் நாட்டின் விடுதலை இயக்கத்திலும், கம்யூனிஸ்ட் கட்சியிலும் அரை நூற்றாண்டுக்கும் மேலாக, அரும்பணி ஆற்றி வருபவர்.

தமிழகத்தில் நடைபெற்ற பல்வேறு மக்கள் இயக்கங்களிலும், கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் போராட்டங்களிலும் ஈடுபட்டு பல ஆண்டு காலம் சிறையில் இருந்தவர். கடுமை யான அடக்குமுறைகளைத் துணிவுடன் சந்தித்தவர்.

நெல்லை மாவட்டத்திலும் தமிழகத்திலும் விவசாயிகளின் இயக்கத்தைக் கட்டி வளர்ப்ப தில் முக்கிய பங்காற்றி வருபவர். தோழர்களிட மும், பொதுமக்களிடமும் மனம் விட்டுப் பேசிப் பழகக்கூடியவர்.

தோழர் மாணிக்கம் அவர்களின் மறைவிற் குப் பின்னர், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழுவின் செயலாளராக பல ஆண்டுகள் சிறப்பாக பணியாற்றி, இப்பொழுது கட்சியின் அகில இந்திய தலைவர்களில் ஒருவராக செயல்பட்டு வருபவர்.

அவரது எளிய வாழ்க்கை முறையும் பொதுவாழ்வில் தன்னலமற்ற நடைமுறையும் அரசியல்வாதிகளுக்கு ஒரு சிறப்பான எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் தமிழகத்தில் கூட்டாக நடத்திய பல பேரணிகளிலும் மாநாடுகளிலும் நானும் அவரும் கலந்துகொண்டு இடதுசாரி இயக்க ஒற்றுமைக்காக குரல் கொடுத்துள்ளோம்.

பல துறைகளிலும் சிறப்புமிக்க தொண் டாற்றியுள்ள தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்கள் நீண்ட காலம் வாழ்ந்து தமிழகத்தில் கம்யூ னிஸ்ட், இடதுசாரி மற்றும் ஜனநாயக இயக்க வளர்ச்சிக்கு தொடர்ந்து பாடுபட வேண்டு மென்று வாழ்த்துகிறேன்.

❖





எண்பது வயது இளைஞர்!

கி. வீரமணி

திராவிடர் கழகத்திற்கும், பொதுவுடமை இயக்கத்திற்கும் தத்துவ ரீதியான உடன்பாடுகள் மிகவும் உண்டு. இந்தியச் சமூகம் என்பது பிறவியின் அடிப்படையில், வருணாசிரம தர்மத்தின் அடிப்படையில் பிறவிப் பேதம் என்ற வேர் ஆழமாகப் பதிந்த சமூகமாகும்.

தன்னுடைய தாழ்வுக்கும், பிறவி இழிவுக்கும், வறுமைக்கும் பாதிப்புக்கு ஆளானவர்களே நியாயம் பேசும் அதிசயச் சமுதாயமுமாகும்.

ஆதிக்கவாதிகள் தங்கள்கீழ் ஒடுக்கப்பட்டுக் கிடக்கும் மக்களை மேலும் ஒடுக்க அவர்களுக்குக் கருவிகள் தேவைப் படவில்லை.

விதிப்பயன், கர்ம பலன் தான் தங்களின் தாழ்வுக்குக் காரணம் என்பதை பக்திப்போதையின் மூலம் அவர்கள் மத்தியில் ஆழமாகப் பதிவு செய்துவிட்டனர். இன்னும் சுருக்கமாகச் சொல்லவேண்டும் என்றால், இவை ஒடுக்கப் பட்ட மக்களின் மூளையின் மீது மாட்டப்பட்ட விலங்காயிற்று!

இன்னொரு கட்டத்தில் இவர்களை ஒடுக்க எதிரிகள் தேவைப்படவில்லை. அவர்களின் அழிவுக்கு அவர்களுக் குள்ளாகவே மூடத்தனக் கருவிகள் கூர்மையாக உற்பத்தியாகி விட்டன.

இத்தகைய மக்களிடத்தேதான் தந்தை பெரியார், சுயமரியாதை இயக்கம் - திராவிடர் கழகம்- பொதுவுடமைக் கட்சிகள் பாடுபட வேண்டியிருந்தது என்பதை மறுக்க முடியாது.

கொள்கைகளை ஏந்திப் போராடும்போது இந்த மக்களை ஒன்று திரட்டுவது அவ்வளவு எளிதாக அமைந்துவிடவில்லை.

திராவிடர் கழகம் அரசியல்- தேர்தல் என்கிற நிலத்துக்குள் அடி வைக்காமல் பாடுபடக்கூடிய இயக்கம். அதன் கால்களைப் பிணைக்கச் சங்கிலிகள் இல்லை.

அத்தகைய இயக்கத்திற்கே பெரும் இடர்ப்பாடுகள் சூழ்ந்து வருகிறபோது அரசியல் - தேர்தலில் பயணிக்கும் கம்யூனிஸ்ட் கட்சிகள் சித்தாந்தங்களைக் கையில் எடுப்பது என்பது அவ்வளவு எளிதல்ல- எடுத்தாலும் வெற்றியை சுலபத்தில் சுவைத்திடமுடியாது.

தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்கள் ஒரு பேட்டியில் சுருக்கமாகச் சொன்னது இங்கு நினைவுக்கு வருகிறது.

கேள்வி: ஒரு சில மாநிலங்களைத் தவிர இந்தியாவின் மற்ற பகுதிகளில்



கம்யூனிஸ்ட் கட்சி வளர்ச்சி அடையாததற்கு என்ன காரணம்?

பதில்: மதம், ஜாதி போன்ற பிரச்சினையிலிருந்து மக்களை வளர்ச்சிப்பாதைக்கு அழைத்துச் செல்வதை முக்கியமானதாகக் கருதுகிறோம். ஆனால், இந்த நம்பிக்கைகள் மக்களிடம் ஆழமாக உள்ளதால் எங்களால் வளர்ச்சி அடைய முடியவில்லை. (குங்குமம் - 5.11.2004)

என்று தோழர் ஆர்.என்.கே. கூறி இருக்கும் கருத்து யதார்த்தமானதாகும்.

இந்த நிலையில் திராவிடர் கழகமும், பொதுவுடைமைக் கட்சியும் ஒரே படகில் பயணம் செய்யும் சகப்போராளிகள் என்பது வெளிப்படையாகும்.

தந்தை பெரியார் அவர்களைப் பொறுத்தவரை சோவியத்து ருசியாவிற்குச் செல்லும் முன்பே மார்க்ஸ் - ஏங்கல்ஸ் கொள்கை அறிக்கையைத் தமிழில் மொழி பெயர்த்து குடி அரசு இதழில் வெளியிட்டவர் ஆவார்.

பொதுவுடைமைக் கொள்கையைப் பரப்புகிறார் என்று சொல்லி பிரிட்டிஷ் அரசால் தண்டிக்கப் பட்டவரும் கூட!

காங்கிரஸ் ஆட்சியில் கம்யூனிஸ்ட் கட்சியினர் வேட்டையாடப்பட்டபோது, அவர்களுக்கு பாதுகாப்பு அரணாக - சரணாலயமாக இருந்தது- திராவிடர் கழகமே!

தோழர் எம்.கல்யாணசுந்தரம் அவர்கள், 27.6.1951 நாளிட்டு பெரியகுளத்திலிருந்து விடுதலைக்கு எழுதிய கடிதம் ஒன்று, 28.6.1951ம் நாளன்று விடுதலை ஏட்டில் இடம்பெற்றது.

அக்கடிதம் வருமாறு:

எனது அன்பிற்கும், மதிப்பிற்கும் உரிய தோழர் குருசாமி அவர்களுக்கு,

நான் 14.6.1951 தேதியன்று புதுக்கோட்டை சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டேன். எனது பழுதுபட்ட இதயத்தை சீர்படுத்தும் அளவிற்கு நமது நாட்டில் வைத்திய விஞ்ஞானம் இன்னும் வளரவில்லை. இருந்தாலும் இந்த காங்கிரஸ் ஆட்சிக்கு நமது நாட்டுத் தொழிலாளிகளும், விவசாயிகளும், மக்களும் இறுதிச் சடங்கு செய்வதை நான் உயிருடன் பார்ப்பேன் என்று நிச்சயமாக நம்புகிறேன். எனது கடைசிச் சொட்டு இரத்தமும் காங்கிரஸ் ஆட்சியை ஒழிக்கும் பணியில்தான் அர்ப்பணிக்கப்படும்.

என்னுடைய விடுதலைக்காக திராவிடர் கழகமும், விடுதலை பத்திரிகையும் செய்த கிளர்ச்சிக்கு என் சார்பிலும், எங்களுடைய கட்சியின் சார்பிலும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய விடுதலை என்பது திராவிடர் கழகம், கம்யூனிஸ்ட் கட்சியின் அய்க்கியத்தின் வெற்றியாகும். தமிழ்நாட்டின் ஜனநாயக சக்திகளின் வெற்றியாகும்.

திராவிடர் கழகம்- கம்யூனிஸ்ட் கட்சியின் அய்க்கியம் தமிழ்நாட்டு மக்களின் விடுதலைப் போராட்டத்தின் வெற்றியை நிர்ணயிக்கும் ஒரு பெரிய சக்தியாகும். மேலும் மற்ற ஜனநாயக சக்திகளையும் திரட்டவல்ல அச்சாகும். இந்த அளவிற்கு வளர்ந்து வந்திருக்கும் கருத்தொற்றுமையையும், செயல் ஒற்றுமையையும் மேலும் மேலும் வளர்த்து கண்மணியைப்போல் பாதுகாக்க வேண்டியது ஒவ்வொரு திராவிடர் கழகத் தோழர்களின், கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களின் கடமையாகும். கம்யூனிஸ்ட் கட்சிக்கும், திராவிடர் கழகத்திற்கும் இடையே ஒற்றுமையை வளர்ப்பதற்கு தாங்கள் கடந்த நாலைந்து ஆண்டுகளாக எடுத்துள்ள முயற்சி குறிப்பாக பாராட்டத்தக்கது.

கம்யூனிஸ்ட் கட்சியும், தொழிலாளி - விவசாயி மக்களின் இயக்கங்களும் காங்கிரஸ் பாசிஸ்ட் அடக்குமுறைக்குப் பலியானபோது விடுதலை பத்திரிகை செய்துள்ள சேவை சரித்திரத்தில் இடம்பெற வேண்டியது. தமிழ்நாட்டு மக்களின் பத்திரிகையாக மேலும் மேலும் விடுதலை வளர்ந்து தமிழ் பேசப்படும் ஒவ்வொரு வீட்டிற்கும் பிரதி செல்லும் நாளை எதிர்பார்க்கிறேன்.

....என்னுடைய விடுதலையைக் கோரி கிளர்ச்சி செய்து வெற்றியடைந்த தொழிலாளி விவசாயி மக்களுக்கும், நண்பர்களுக்கும், பத்திரிகைகளுக்கும் எனது மனப்பூர்வமான நன்றியை விடுதலைப் பத்திரிகையின் மூலம் தெரிவித்துக் கொள்ள அனுமதியுங்கள். என்னிடத்தில் காட்டியுள்ள நம்பிக்கைக்கும், அன்பிற்கும் தகுதியுடையவனாகவும், விசுவாசம் உள்ளவனாகவும் கடைசி மூச்சு உள்ளவரை நடக்க உறுதி கூறுகிறேன்.

பெரியகுளம் — *தங்கள் அன்பு மறவாத,*
27.6.1951 — *கல்யாண சுந்தரம்.*

குறிப்பு: நான் இன்னும் படுக்கையிலேயே இருப்பதால்தான் கடிதம் எழுதுவதற்கு இவ்வளவு தாமதம் ஆனதன் காரணம்.

இது ஏதோ தனிப்பட்ட தோழர் கல்யாண சுந்தரம் அவர்களை மட்டும் மையப்படுத்தி திராவிடர் கழகமோ, விடுதலையோ சமர் செய்தது என்று கருதக்கூடாது.

அந்தக்காலகட்டத்தில் பொதுவுடைமைக் கட்சியினர் கண்மூடித்தனமாக ஒடுக்குமுறைக்கு ஆளானபோதும், சேலம் சிறையில் காக்கை குருவிகளைப்போல அவர்கள் சுடப்பட்டபோதும், தந்தை பெரியார் தலைமையில் கழகம் கிளர்ந்தெழுந்தது - காக்கும் கரங்களைத் தாராளமாக நீட்டியது.

பம்பாய் - மாதுங்கா நெப்போ தோட்டத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய தோழர் எஸ்.ஏ.டாங்கே அவர்கள் கூறிய கருத்து இந்த நேரத்தில் எடுத்துக்காட்டத் தகுந்ததாகும்.

இந்து மதத்தையும், பார்ப்பனீயத்தையும் ஒழித்தாக வேண்டும் என்று பெரியார் சொல்லுவதில் எனக்கு விருப்பமே, கம்யூனிஸ்ட் கொள்கையையே திராவிடர் கழகமும் கொண்டுள்ளது. இதில் எவ்வித வேற்றுமையு மில்லை. இந்தத் திராவிடர் கழகம் கம்யூனிஸ்டு களுக்காக மிகவும் பாடுபட்டுள்ளது. நாம் அனை வரும் சர்க்காரின் அடக்குமுறைக்கு ஆளாகிச் சிறைச் சாலைகளில் அவதியுற்ற பொழுதும், நம் தொண்டர்கள் சிறையில் சுட்டுக்கொல்லப்பட்ட பொழுதும் இந்தியாவிலுள்ள எல்லாக் கட்சிகளும் நம்மைப் பற்றிச் சிறிதும் கவலைப்பட்டதில்லை. ஆனால், தென்னாட்டின் திலகம் திராவிடத்தின் தந்தை பெரியாரும், விடுதலைப் பத்திரிகையும் மட்டிலும் நம்மைக் கவைவிடாமல் காப்பாற்றியது. ஆகையால்தான் நாம் திராவிடர் கழகம் உண்மை யான மக்கள் கழகம் என்பதை உணருகிறோம் என்று பேசினார்.

திராவிடர் கழகமும், தி.மு.க.வும் இரட்டைக் குழல் துப்பாக்கி என்று அறிஞர் அண்ணா சொன்னதுண்டு.

இன்னொரு வகையில் திராவிடர் இயக்கமும், பொதுவுடைமைக் கட்சிகளும் இரட்டைக் குழல் துப்பாக்கிகளாகப் பாடுபட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

இன்றைய தினம், மதவாதம் தலைதூக்கி நிற்கிறது. இந்து ராட்டிரம் என்கிற பார்ப்பனீய வல்லான்மைப் பாசிசத்தை - மனுதர்மக் கொடுங் கோலைக் கெண்டுவர வாலை முறுக்கிக் கிளம்பி யுள்ளனர்.

சமூகத் தளத்தில் திரிசூலங்களைத் தூக்கிக் கொண்டு சங் பரிவார்கள் கிளம்பினாலும், அரசியல் பசுத்தோலைப் போர்த்திக் கொண்டு பா.ஜ.க. என்னும் விலங்கு வந்தாலும் அவற்றை நகத்துக்கு நகம், பல்லுக்குப் பல், என்கிற தோரணையில் சந்திக்கும் சகப் போராளிகளாக இருக்க வேண்டிய வர்களாக நாம் இருக்கிறோம்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை அரசியல் க(கூ)ட்டமைப்பை உருவாக்கும்போது பா.ஜ.க. வின் எதிர் அணியில் கம்யூனிஸ்டுகள் எந்த வித ஐயப்பாட்டுக்கும் இடமில்லாமல் நிமிர்ந்தே நின்று வந்துள்ளனர். திராவிடர் கழகம் இதில் வகித்துவரும் பாத்திரமும் நாடறிந்ததே ஆகும்.

தோழர் நல்லகண்ணு அவர்கள் தலைமையில் அக் கட்சி தலை தாழாது நடைபோட்டது குறிப்பிடத் தகுந்ததாகும்.

அவர் இன்று 80-ஆம் அகவையை அடைகிறார்- இதில் 60 ஆண்டுகளுக்கு மேலான பொது வாழ்வுக்குச் சொந்தக்காரர். தியாகத் தீயில் புடம் போட்டவர் - வாழ்வின் வசந்தப் பருவத்தை சிறைக் கொட்டடியில் கருக்கிக்கொண்டவர். தியாகத்தை விலை பேசாதவர் - எளிமையின் இலக்கணம் - அடக்கத்தின் பெட்டகம்.

ஆடம்பரமற்ற மேடைப்பேச்சு - அதே நேரத்தில் ஆழமான கருத்து வளத்திற்குச் சொந்தக்காரர் - இலக்கிய ஆர்வலர்- இன்னோரன்ன பன்முகங்கள் கொண்ட- தமிழ்நாட்டுப் பொது வாழ்வின் மூத்த தலைவர்.

தோழர் கே.டி.கே. என்ற சுயமரியாதைச் சமதர்ம வீரருக்கு, எண்பதாம் ஆண்டு பிறந்த நாள் விழாவை மதுரையில் நடத்தி 50 லட்சம் ரூபாயை அளித்தது போல, தோழர் ஆர்.என்.கே. அவர்களுக்கும் 80ஆம் ஆண்டு விழா நடத்தி பண முடிப்பும் தருவது பொருத்தமானது.

பொது வாழ்க்கையின் மீது இளைஞர்களுக்கு வற்றாக் காதலை ஏற்படுத்த தொண்டறத்தை மேற்கொள்ளும் தூயவர்களைப் பாராட்ட வேண்டும் - அந்த வகையிலும் . தோழர் ஆர்.என்.கே. எடுத்துக்காட்டாக திகழ்கிறார்.

அவர் நூற்றாண்டும் கண்டு என்றும் இளைஞராக வாழட்டும்!

❖



இலட்சியப் பணி தொடரட்டும்!

என். வரதராஜன்

எண்பதாவது ஆண்டு நிறைவு விழா காணும் அன்புத் தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்களுக்கு என் சார்பிலும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு சார்பிலும் புரட்சி வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்களை முதன் முதலாக மதுரை சிறையில் வைத்து அறிந்து கொண்டேன். 1948-51 ஆம் ஆண்டுகள் கடுமை யான அடக்குமுறைகளை கம்யூனிஸ்ட்டுகள் சந்தித்த காலம்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 5வது அகில இந்திய மாநாடு, கட்சி அமைப்பில் மூன்றடுக்கு முறையை வகுத்தது. அதையொட்டி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அமைப்பில் மாநில செயற்குழு, நிர்வாகக்குழு, மாநில கவுன்சில் என மூன்றடுக்கு அமைப்பு தமிழகத்தில் உருவாக்கப் பட்டது. அத்தகைய தமிழ் மாநில கவுன்சில் உறுப்பினராக தோழர் ஆர்.நல்லகண்ணு நெல்லை மாவட்டத்திலிருந்து தேர்வு செய்யப்பட்டார். நான் மதுரை மாவட்டத்திலிருந்து தேர்வு செய்யப் பட்டேன்.

இருவரும் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலக் கவுன்சில் உறுப்பினர்களாக செயல் பட்டோம். அத்தகைய காலத்தில் கவுன்சில் கூட்டங்களில் அரசியல், தத்துவார்த்த விவாதங்கள் கூடுதல் நுணுக்கமாக நடைபெறும். தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்கள் தான் மேற்கொள்ளுகிற நிலைப்பாட்டிற்காக உறுதியாகப் போராடுவதைப் பார்த்தேன்.

தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்கள் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளராக பணியாற்றிய காலத் தில் மிகவும் நெருங்கிப் பழகியதால் அவரது இயல்பான நற்குணங்களை காண முடிந்தது. கருத்து வித்தியாசங்கள் எழுந்தாலும் தோழமை உணர்வோடு விவாதிக்கும் பாங்கை பெற்றிருந்தார்.

அவரது எளிய வாழக்கை முறையும் நற்பண்புகளும் அனைவருக்கும் தேவை. இன்னும் பல்லாண்டு கள் வாழவும், இலட்சி யப் பணி தொடரவும் புரட்சி வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

❖



தோழமைக்கு இலக்கணம் வகுத்தவர்!

மருத்துவர் ச.இராமதாசு

மக்களால் மக்களுக்காக நடத்தப்படும் மக்களாட்சி என்று சொல்லப்படும் இந்த நாளில் கூட, விலை கொடுக்காமல் நியாயமான உரிமைகளைக்கூட வென்று எடுக்க முடியவில்லை. அப்படியென்றால், நாட்டின் விடுதலைக்காக அந்த நாளில் கொடுக்கப் பட்ட விலை எவ்வளவு இருக்கும் என்று எண்ணி னாலே கண்களில் நீர் கசிகிறது. அதுவும் அந்நியனான ஆங்கிலேயனிடமிருந்து நமக்கே உரிமையான தேசத்தை விடுவிக்க கொடுத்த விலையை நினைக் கும்போதே நெஞ்சு கனக்கிறது. அதனால் தானோ என்னவோ ''இந்திய வரைபடத்தின் எல்லைக்கோடு கள் விடுதலைக்குப் பாடுபட்ட வீரத் தியாகிகளின் விலா எலும்புக் கூடுகள்'' என்ற பாடல் வரி என் நெஞ்சைவிட்டு நீங்குவதே இல்லை. உடல் பொருள் ஆவி என்று எதையும் (அ) எல்லாவற்றையும் எந்த நேரத்திலும் இழக்கத் தயாராகி இந்திய மக்கள் ஓரணியில் திரண்டு நின்று நடத்திய மிகப்பெரிய விடுதலைப் போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர் பெருமைக்குரிய நல்லகண்ணு என்று நினைக்கும் போதே அவர் மீது மதிப்பும் மரியாதையும் மலைபோல் உயர்கிறது.

மக்களின் உரிமை என்று போராடினால் போராடு பவர்களுக்கு கிடைக்கிற முதல் பரிசு சிறைத் தண்டனை தான். அந்த வகையில் விடுதலைக்குப் பிறகும் மக்களுக்கான உரிமைகளுக்காகப் போராடி சிறையில் இருந்தவர் தோழர் நல்லகண்ணு அவர்கள். அவரின் அயராத உழைப்பால் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலத் தலைமைப் பொறுப்பேற்று அந்த பொறுப்பிற்கே பெருமை சேர்க்கும்படி அரிய பணிகளை ஆற்றினார்.

''விவசாயம் நாட்டின் முதுகெலும்பு'' என்பார்கள். இதைத்தான் அந்தக் காலத்திலேயே வரப்பு உயர என்று ஔவையார் பாடினார். வரப்பு உயர நீர் உயரும். நீர் உயர நெல் உயரும். நெல் உயர குடி (மக்கள்) உயரும். குடி உயர கோல் உயரும். கோல் உயர கோன் உயரும் (அரசன்) என்கிறது அந்தப் பாடல் வரி. இந்த அடிப்படையில் நல்லகண்ணு அவர்கள் விவசாயத்தை பெருக்க விரும்பினார். அதற்காக விவசாய சங்கங்களை அமைத்தார். விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக அரும் பாடுபட்டார்.

எப்போதும் உடையிலும் விவசாயி போலவே தோற்றமளிக்கும் நல்லகண்ணு அவர்கள் மிகவும் எளிமையான தலைவர். அடக்கத்தை அணிகலனாகக் கொண்டவர்கள். பொது வாழ்வின் தூய்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்குபவர். அவரின் சிந்தனை, பேச்சு, செயல் என எல்லாவற்றிலும் கம்யூனிசத்தின் வாசம் வீசும் என்பதை நாடே அறியும். கம்யூனிசத்தின் காதலர் என்றே அவரை சொன்னால் அது மிகையாகாது. மக்களுக்கான தொண்டு, அதனால் கிடைக்கும் மனநிறைவு இவைகளையே தனது சொத்தாகக் கருதுபவர். பிற கட்சித் தலைவர்களையும் மதிப்பவர். நல்லவைகளை ஆதரிக்கும் பண்பும், தீயவைகளை எதிர்க்கும் துணிவும் நிரம்பப் பெற்றவர். தோழமைக்கான இலக்கணத்துடன் தொடர்ந்து வாழ்ந்து வருபவர்.

தோழர் நல்லகண்ணு 80 வயதை எட்டிப்பிடித்த நிலையிலும் தனது கட்சிப் பணிகளிலும் மக்கள் பணிகளிலும் ஒரு இளைஞரைப் போல் பணியாற்றும் சுறுசுறுப்பை இன்றும் காண முடிகிறது. பண்புகளின் நிறைகுடமாக விளங்கும் நல்லகண்ணு அவர்கள் 80வது அகவை நிறைவடைவதைப் பாராட்டும் வகையிலும் அவர் தொண்டின் சிறப்புகளைப் பாராட்டும் வகை யிலும் விழா எடுப்பதும், விழா மலர் வெளியிடுவதும் போற்றுதலுக்குரியது. பாராட்டுதலுக்குரியது. அவர் இன்னும் ஆண்டுபல நீண்டு வாழ்ந்து நாட் டுக்கும் மக்களுக்கும் தொண்டுகள் செய்து, பேரும் புகழும் பெற்று வாழவேண்டும் என்று மனதார வாழ்த்து கிறேன். விழா மலர் சிறக்க, மணக்க வாழ்த்துகிறேன். விழா எடுப்பதற்கும் நன்றி.

வாழ்க தோழர் நல்லகண்ணு. வளர்க அவரின் தொண்டு.

❖



நெல்லைச் சீமை தந்த புகழ்மிகு புரட்சியாளர்!

வைகோ

உலகளாவிய, மார்க்சிய- லெனினியக் கொள்கைகளால் வழிகாட்டப்பட்டு இந்திய நாட்டின் தொழிலாளர் வர்க்கக் கட்சியாக செயல்படும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக்குழு உறுப்பினராக அரும்பணி ஆற்றிக்கொண்டு இருக்கும் தன்னலம் அற்ற செயல் வீரர் அண்ணன் நெல்லைச் சீமையில் ஆர்.நல்லகண்ணு. எண்பது வயதை நிறைவு செய்திட இருக்கும் இவரது எளிமை, பழகும் பண்பு, அகந்தை படபடக்காத அவர்தம் பேச்சில் தொனிக்கும் அக்கறை. மென்மையான அவர்தம் குரலுக்கு உள்ளே எத்தனை வன்மையான, திண்மையான கொள்கைத் தாகம்!

பாஞ்சைப் பெருந்தேவன் வீரபாண்டிய கட்டபொம்மன், தேசபக்தச் செம்மல் வ.உ.சி., தேசியக் கவி பாரதி போன்ற வீரர்கள் உலவிய பூமியில் தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டத்தில் (பெரும்பத்து) ந.இ.இராமசாமி - கருப்பாயி தம்பதியரின் ஒன்பது பிள்ளைகளளில் ஒருவராக, 1925 டிசம்பர் 26ல் பிறந்தவர் நல்லகண்ணு. 1925 டிசம்பர் 28 முதல் 30 வரை, கான்பூரில், சென்னையைச் சேர்ந்த சிங்காரவேலு தலைமை தாங்கிட, பம்பாயைத் தலைமையகமாகக் கொண்டு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உருவாக்கப்படுவதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கருத்து மாறுபாடுகள் இருப்பினும், கான்பூர் நகரில் கம்யூனிஸ்ட் கட்சி அமைக்கப்பட்டதாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைபாடு உள்ளது. ஆக நல்லகண்ணுவின் பிறப்பே, 1925 டிசம்பர், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பிறந்த மாதத்தில் என்ற பெரும் பெருமை அவருக்கு உண்டு. திருவைகுண்டம் கார்னேசன் உயர்நிலைப் பள்ளியில் படிப்பு, திருநெல்வேலி ம.தி.தா இந்துக் கல்லூரியில் இன்டர்மீடியட் கல்வி, புலவருக்காகப் படித்து, பட்டம் பெறாமலே பாதியிலேயே கல்வியை விட நேர்ந்த நிலை.

மருதன் வாழ்வு கிராமத்தைச் சேர்ந்த அண்ணாச்சாமி - சந்தோஷி அம்மாளின் மகள் ஏ.ரஞ்சிதம் அம்மையாரை, தனது 33வது வயதில் 1958இல் நெல்லையில் குறுக்குத்துறையில் பேராசிரியர் நா.வானமாமலை தலைமையில் கலப்புத் திருமணம் செய்து, மதவேற்றுமைகளில் குளிர்காய்பவர்கள் மண்டிக்கிடக்கும் சமுதாயத்தில் சமயக்கட்டுப்பாட்டு வேலியைக் கடந்த இலட்சியக் கணவராக வாழ்ந்து வருபவர் ஆர்.நல்லகண்ணு.

அவருடைய மூத்தமகள் காசிபாரதி எம்.ஏ.எம்.எட், அரசு மேல்நிலைப் பள்ளி ஆசிரியர், இவருக்கு ரஞ்சனி கண்ணம்மா என்று மகள். இளைய மகள் ஆண்டாள் எம்.பி.பி.எஸ்., எம்.டி. முடித்து சென்னை மருத்துவக் கல்லூரியில் பேராசிரியராகப் பணி ஆற்றுகிறார். அவருக்கு சத்தீஷ்குமார், கீர்த்தனப்ரியா என்ற இருபிள்ளைகள் உள்ளனர்.

பி.சுந்தரய்யாவும், எஸ்.வி.காட்டேவும் கட்சியின் மத்தியக்குழு உறுப்பினர்கள். அவ்விருவரின் கூட்டு முடிவின்படி தமிழகத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் கிளை 1936 ஆம்



ஆண்டில் உருவாக்கப்பட்டது. பி.ராமமூர்த்தி, பி.சீனிவாசராவ், ஜீவானந்தம், எஸ்.ஏ.கே. அய்யங்கார், சி.எஸ்.சுப்பிரமணியம், கே.முருகேசன், நாகர்கோவில் சி.பி.இளங்கோ, டி.ஆர்.சுப்பிரமணியம், திருத்துறைப்பூண்டி முருகேசன் ஆகியோரைக் கொண்டதாக அந்தக் கிளை இருந்தது. செயலாளர் என்று யாரும் இல்லை. மினிட்ஸ் (கூட்ட நிகழ்ச்சிகள்) சி.எஸ்.சுப்பிரமணியம் எழுதினார். அவரே செயலாளராகக் கருதப்பட்டார். எஸ்.வி.காட்டே நெல்லை மாவட்டத்துக்கு வந்து கம்யூனிசக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்ட இளைஞர்களோடு தொடர்பு கொண்டார். கேரளத்தில் இருந்து வந்த ஏ.கே. கோபாலன் திருச்சி, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களை நேரடியாக கவனித்தார்.

என்.சி.சேகர் கோவை மாவட்டப் பொறுப்புகளைப் பார்த்தார். ராமச்சந்திர நெடுங்காடி நெல்லை மாவட்டத்தில் கம்யூனிஸ்ட் இயக்கப் பணிகளைப் பொறுப்பு ஏற்று கவனித்தார். பலர் உறுப்பினர்கள் ஆனார்கள். சாம்பவர் வடகரையில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த கோவில்பிள்ளை என்ற ஆசிரியரின் வீட்டில் தலைமறைவாக முதல் மாநாடு நடைபெற்றது. அதைத் தொடர்ந்து சிவகிரி, வாசுதேவநல்லூர், ஆறுமுகனேரி, கோவில்பட்டி போன்ற இடங்களில் கட்சிக்கிளைகள் உருவாயின. ஏ.சுப்பையா மாவட்டச் செயலாளர், பின்னர் வி.மீனாட்சிநாதன். அப்படித் தொடர்ந்து இன்று வரை எத்தனையோ மாவட்டச் செயலாளர்கள் பணியாற்றி இருக்கிறார்கள்.

1939 செப்டம்பர் 2 இரண்டாம் உலகப்போர் வெடித்தது. கம்யூனிஸ்ட் கட்சி நாடெங்கும் போர் எதிர்ப்புப் பிரச்சாரம் செய்தது. ஆங்கிலேய அரசு நெல்லை மாவட்டத்தில் சங்கர நாராயணன், ராமச்சந்திர நெடுங்காடி, தூத்துக்குடி கணேசன், வி.மீனாட்சிநாதன், பெ.சீனிவாசன், தளவாய் ராகவன் போன்றவர்களைக் கைது செய்தது. பாதுகாப்புச் சட்டத்தில் இவர்கள் வேலூர்ச் சிறையில் வாடினர். ஆண்டுக்கணக்கில் சிறைத்தண்டனை பெற்று பெல்லாரி, அலிப்புரம் ஆகிய இடங்களில் சிறைவாசம் ஏற்றனர். 1942 பிப்ரவரியில் கட்சியின் தலைமைக்குழுவின் தீர்மானத்தை அரசு ஏற்றது. சிறையில் இருந்த கம்யூனிஸ்டுக் கைதிகளை விடுதலை செய்தது.

நாங்குநேரி தாலுகாவின் முதல் முழுநேர ஊழியராக ஓய்வு இன்றிப் பணிகளை ஆற்றிய நல்லகண்ணு, களக்காடு வரை பல ஊர்களில் விவசாய சங்கங்கள் அமைக்கப்படுவதற்குக் காரணமாக இருந்தார். நிலப்பிரபுத்துவத்தை இப்பகுதியில் எதிர்த்துப் போரிட விவசாயிகளைத் திரட்டி அருந்தொண்டு ஆற்றியவர் நல்லகண்ணு. நாங்குநேரியில் காலை 10 மணிக்கு, 1947-இல் மே தினக் கொண்டாட்டம். தோழர் காந்தி, ஆர்.நல்லகண்ணு, பேராசிரியர் வானமாமலை, சாத்தூர் சா.பிச்சைக்குட்டி ஆகியோர் பேசினர். கூட்டம் முடிந்தது; குளக்கரையில் சாப்பாடு. ஆர்.நல்லகண்ணுவும், கூட்டுறவுப் பண்டகசாலைப் பணியாளர் சோமசுந்தரமும் கொடிகளை எடுத்துக்கொண்டு கல்மண்டபம் வழியாகத் திரும்பும் போது, நிலச்சுவான்தார்களின் ஆட்கள் திரண்டு வந்து பலமாகத் தாக்கினர். ஆர்.நல்லகண்ணுவைக் கம்புகளோடு கல்தூணில் அணைத்து நசுக்கினார்கள். சோமசுந்தரத்தை அடித்து நொறுக்கினார்கள். சம்பவம் நடந்த மூன்று ஆண்டுகளில் அவர் மறைந்தார் என்றால் எதிரிகளின் தாக்குதலின் அளவை எவரும் புரிந்துகொள்ள முடியும். அந்தத் தாக்குதலில் உயிர் தப்பியவர் நல்லகண்ணு.

1948இல் கட்சி உறுப்பினர்கள், பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு முறையான மாநாடாக நெல்லை வண்ணார்பேட்டையில் சிறப்பாக நடந்தேறியது. ப.மாணிக்கம் மாவட்டக்குழுச் செயலாளர், இயக்கம் பரவிய வேளை. பல வழக்குகள், அரசைக் கவிழ்க்கச் சதி, நாசவேலை, அரசுக்கும் மக்களுக்கும் இடையே பகைமையை வளர்த்தல் போன்ற பல குற்றச்சாட்டுகள் இயக்கத்தவர் மீது. இயக்கம் நின்றுவிடவில்லை. அரசாங்கமும் சும்மா இருக்கவில்லை. 1948 ஆகஸ்ட் முதல் கைது செய்தல் தொடங்கியது. பல வழக்குகள் தொடரப்பட்டன. முன்னணியினர் பலர் கைது செய்யப்பட்டனர். சித்திரவதைகள் தொடர்ந்தது. பல வழக்குகளையும் ஒன்றாக ஆக்கி 'திருநெல்வேலி கம்யூனிஸ்ட் சதி வழக்கு' என்ற பெயரால் இரு வழக்குகள் நடந்தன.

1949இல் சதி வழக்கு போடப்பட்டாலும், 1956 இல்தான் விசாரணை துவங்கியது. சிறப்பு விசாரணை நீதிமன்றத்திலும், சிறப்பு செசன்ஸ் நீதிமன்றத்திலும் ஒரு ஆண்டுக்கு மேலாக விசாரணை நடத்தப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவர்களுக்காக என்.டி. வானமாமலையும், பாலசண்முகமும் வாதாடினர். 11.8.1952இல் தீர்ப்பு வெளியாயிற்று.

கே.பாலதண்டாயுதம், ப.மாணிக்கம், சிங்கை வி.மீனாட்சிநாதன், திருவைகுண்டம் ஆர்.நல்லகண்ணு, பூதலப்புரம் ஆர்.வேலுச்சாமி, வாகைக்குளம் வேலாயுதம், சிங்கை கே.பி.எஸ்.மணி, மன்னார்கோவில் வி.அழகுமுத்து, ஐ.மாயாண்டிபாரதி, முத்தையாபுரம் ஆர். கிருஷ்ணன், தூத்துக்குடி எம்.பொன்னு ஆகியோருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

தூத்துக்குடி ஏ.ராமச்சந்திரன், நெல்லை டி.பி.ராமலிங்கம், டோனாவூர் ஆர்.பெருமாள், ஏரல் அண்ணாமலை, சிங்கை ஆர்.வி.அனந்தகிருஷ்ணன்,

பி.சொர்ணம் ஆகியோர் ஐந்து ஆண்டுகள் தண்ட னைக்கு ஆளாயினர். தூத்துக்குடி பயில்வான் அரு ணாசலத்துக்கு நான்கு ஆண்டுகள் தண்டனையும் தூத்துக்குடி முனுசாமிக்கு ஓராண்டு தண்டனையும் விதிக்கப்பட்டது.

இரண்டு மூன்று ஆண்டுகள் சிறையில் வாடி யபின் விடுதலை ஆனவர்கள் 51 பேர். தூத்துக்குடி சேவியர், சண்முகவேல், செல்லையா, ஞானவடிவு, எம்.காசி, எம்.பீர் இஸ்மாயில், எம்.ஐசக், எம்.துரை ராஜ், எஸ்.துரைராஜ், வி.செல்லப்பா, செண்பகப் பெருமாள், ஜி.சுடலைமுத்து, பலவேசம், எஸ்.எஸ். மாணிக்கம், பரமசிவன், பட்டாணி, சிங்கை யாக் கோபு பரதேசியாபிள்ளை, சப்பாணிமுத்து, சேக் சுலைமான், திருவேங்கடம், பரமசிவன், நாராய ணன், பாப்பையங்கோட்டை வாத்தியார் ஆர்.எஸ். ஜேக்கப், நெல்லை டி.ஜி.சுப்பிரமணியம், பாஸ்க ரன், தச்சநல்லூர் ஆர்.கோமதியாகம், குறுக்குச் சாலை சுப்பா, கோடங்கால் குருசாமி, கிருஷ்ண சாமி, ஏ.ஜி.பெருமாள், கழுகுமலை கே.அழகிரி, எம்.முத்தையா, கடம்பூர் வேலையா, கொல்லங்கி ணறு ஆர்.சீனிவாசன், மன்னார்கோவில் ஜி.சண்மு கவேல், சாத்தா, யு.எஸ்.மாணிக்கம், கோமதிநாய கம், இசக்கி, புதுமாடன், ராமையா புலவர், கொன்னா சிவனான், பிரம்ம தேசம், ஏ.நல்லசிவன், அம்பை யு.ஆர்.சுப்பையா, ஏ.சங்கரன், லட்சுமணன், பொன் னையா, பிச்சையா, சங்கரலிங்கம்.

ஆர்.நல்லகண்ணு மீது சுமத்தப்பட்ட வழக்கு களுக்காக விதிக்கப்பட்ட தண்டனை 21 ஆண்டு கள் சிறை. ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டும் என்பதால் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு இருந் தது. அரசியல் கைதிகளை விடுதலை செய்; வழக் குகளை வாபஸ் வாங்கு என்ற முழக்கம் தமிழகமெங் கும் கேட்டது. சென்னை சட்டமன்றத்தில் கம்யூ னிஸ்ட் கட்சியின் தலைவர் டி.நாகிரெட்டி, பி.ராம மூர்த்தி, ப.ஜீவானந்தம் தலைமையில் கம்யூனிஸ்ட் உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். பலத்த நிர்ப்பந்தம் அரசுக்கு; கடைசியாக ராஜாஜி அரசாங் கம் நெல்லைச் சதிவழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டவர்களை விடுதலை செய்தது. வேறு வழக்குகளின் தண்டனையால் நல்லகண்ணு விடு தலை ஆகவில்லை. வெடிகுண்டு வைத்து இருந் ததற்காக குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் ஐந்து ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையை அனுப வித்து மதுரை சிறையில் இருந்து 1956 டிசம்பர் 13 அன்று நல்லகண்ணு விடுதலை ஆனார்; டிசம்பர் 14 திருவைகுண்டம் வந்த அவருக்கு மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. திறந்த காரில் ஊர்வ லமாக அழைத்துச் செல்லப்பட்டார் நல்லகண்ணு.

நெல்லை மாவட்ட விவசாய சங்க மாநாடு 1952இல் களக்காடு ஊரில் ஆர்.வேலுச்சாமி தலை மையில் நடைபெற்றது. இரண்டாவது மாநாடு 1957 செப்டம்பரில் வெள்ளூர் டி.ஆர்.சுப்பிரமணியம் தலைமையில் நடந்தது.

1958- மூன்றாவது மாநாடு, நெல்லை.
1959- நான்காவது மாநாடு, நெல்லை.
1961- ஐந்தாவது மாநாடு, ஆம்பூர்.
1965- ஆறாவது மாநாடு, ஆம்பூர்.
1967- ஏழாவது மாநாடு, புளியங்குடி.

ஆகிய இடங்களில் நடைபெற்றது. தொடர்ச் சியாக ஐந்து விவசாய சங்க மாநாட்டுக்குத் தலைமை தாங்கிப் பொறுப்பு ஏற்றுச் சாதனை புரிந் தவர் ஆர்.நல்லகண்ணு. 1970 ஆகஸ்டில் நெல்லை மாவட்டத்தில் நடைபெற்ற நிலமீட்சிப் போராட்டத் தில் எஸ்.ஏ.முருகானந்தமும் ஆர்.நல்லகண்ணுவும் போராட்டத் தளபதிகளாகச் செயல்பட்டனர்.

கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளராக இரு தடவைகளே ஒருவர் பொறுப்பு வகிக்க முடி யும் என்ற கட்சி சட்டவிதியை கட்சியின் அனைத்து இந்திய மாநாடே திருத்தியது. மூன்றாவது முறை மட்டும் அல்ல; நான்காவது முறையும் கட்சியின் மாநிலச் செயலாளராக எதிர்ப்பு இன்றி ஒருமனதா கத் தேர்ந்து எடுக்கப்பட்டு கம்யூனிச இயக்கத்துக் காக அவர் ஆற்றிய பணிகள் அளவிடற்கு அரியது.

விடுதலைப் போராட்டக் காலத்தில் பள்ளிச் சிறு வனாகப் போராட்ட வாழ்க்கையைத் தொடங்கி, கம் யூனிசப் போராளியாகப் பரிணாமம் பெற்று, தலை மறைவு வாழ்க்கை, வெடிகுண்டுகளுடன் கைதாகி கடுங்காவல், ஒரே முறையில் ஐந்து ஆண்டுகள் என ஏழு ஆண்டுகளுக்கும் மேலாக அரசியல் சிறைவா சம் அனுபவித்து வாழ்க்கையையே போராட்டமாகக் கருதி வாழ்ந்து வரும் பண்பாளர் ஆர்.நல்லகண்ணு.

தமிழ்நாடு விவசாயிகள், விவசாயத் தொழி லாளர் இயக்கத்தில் தன்னை முழுமையாக ஒப்படைத் துக்கொண்டு, 'நதிநீர் இணைப்பு, காவிரி நீர்ப் பிரச் சினை' இவைகளுக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்து வாதாடி வரும் தீரர் இவர்.

தமிழகத்தின் பொதுவாழ்வு சிறக்க நல்ல கண்ணுவின் தொடர்ந்த சேவை இன்றைய காலக் கட்டத் தில் மிகமிகத் தேவை என்பதை எவரும் மறுத் திடல் இயலாது.

துடிக்கும் இரத்தம் பேசட்டும்!
துணிந்த நெஞ்சம் நிமிரட்டும்!
உழைக்கும் வர்க்கம் சேரட்டும்!
உலகம் உடைமை ஆகட்டும்!

நெல்லைச் சீமை தந்த புகழ்மிகு புரட்சியாளர் அண்ணன் ஆர்.நல்லகண்ணு அவர்கள் நூறாண் டைத் கடந்து பல்லாண்டுகள் நலனுடன் வாழ இயற்கைத் தாயின் நல்லருளை யாசிக்கிறேன். ❖

உரிமைக் குரல் எழுப்பி வரும் தீரர்!

கே. எம். காதர் மொகிதீன்

பெரியவர் நல்லகண்ணு அவர்களின் எண்பதாவது ஆண்டு நிறைவை ஒட்டி விழாவும் மலர் வெளியீடு நடப்பதும் அறிய பெரிய மகிழ்வு ஏற்படுகிறது.

ஐயா நல்லகண்ணு அவர்கள் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் என்ற முறையில் அரசியலில் அனைவரும் மதித்து வருகின்றனர் என்பதைவிட, எல்லா சமுதாய மக்களின் உள்ளார்ந்த அன்பையும் பாசத்தையும் பெற்றுத் திகழம் பெரியவர் அவர் என்பதே சாலப் பொருத்தமுடையதாகும்.

ஒரு முறை ஐயா அவர்களுடன் ரயிலில் திருநெல்வேலி வரை பயணம் செய்யும் வாய்ப்பு ஏற்பட்டது. ரயிலில் ஏறியவர்கள் எல்லோருமே ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், சிறுமிகள், அனைவருமே அவரிடம் வந்து மரியாதை செய்து, முக மலர்ச்சியுடன் அவருடன் உரையாடியதைப் பார்த்தேன். ஒரு பெரிய குடும்பத்தில் உள்ள மூத்த பெரியவரிடம் அன்பும் மரியாதையும் காட்டுவது போல மக்கள் எல்லோரும் அவரிடம் அன்பைப் பொழிந்தனர்.

இது எதனால் ஏற்பட்டது? மக்கள் மீது தணியாத அன்பு கொண்டு, மக்களுக்கு தளராத பணி மேற்கொண்டு, தூய உள்ளத்துடன் நேர்மையும் வாய்மையும் உண்மையும் ஒருசேர உள்ள தொண்டுள்ளத்துடன் வாழும் உயரிய வாழ்க்கை, பெரியவர் அவர்களிடம் இயல்பாக இருக்கிறது.

ஐயா நல்லகண்ணு அவர்களைக் காணும் போதும், அவர்களுடன் உரையாடும்போதும் அவர்களுடன் அமரும்போதும், ஒரு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவருடன் இருப்பதாக நான் என்றும் நினைத்தது இல்லை. மாறாக ஓர் ஆன்மீகப் பெருந்தகையுடன் இருப்பதைப் போன்ற உணர்வில்தான் நான் என்றும் இருந்து வந்திருக்கிறேன்.

''யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்'' என்றும் ''எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே'' என்றும் கூறி வாழ்ந்து சென்ற இறைநேச நல்லடியார்களைப் போல பெரியவர் நல்லகண்ணு அவர்களின் வாழ்க்கை, நலம் பெற்றிருக்கிறது.

சுதந்திரப் போராட்ட வீரர், சமதர்மக் கொள்கைத் திலகம், பகுத்தறிவுச் சிந்தனையாளர், தொழிலாளர் இனத்துக்காக- குறிப்பாக விவசாயத் தொழிலாளர்களுக்காக காலமெல்லாம் உரிமைக்குரல் எழுப்பி வரும் தீரர், நேர்மை யும் தெளிவும் உறுதியும் இலட்சியப் பிடிமான மும் இணைந்திருக்கும் அரசியல் தலைவர் என்றெல்லாம் மக்கள் போற்றுகின்றனர்.

எல்லாவற்றுக்கும் மேலாக, தமிழ்ச் செம்மொழி இலக்கியம் கூறும், ''யாதும் ஊரே; யாவரும் கேளிர்'' என்னும் மனிதநேய நெறியின் திருவுருவம் பெரியவர் நல்லகண்ணு அவர்கள்.

''உண்டால் அம்ம உலகு நல்லார் ஒருவர் உளனானே'' என்பதற்கொப்ப, பெரியவர் நல்லகண்ணு போன்ற நன்மக்கள் நம்மிடையில் வாழ்வதால்தான் நானிலத்தில் இன்றும் ஏதோ சில நன்மைகள் தொடர் கின்றன என்பது எனது ஆழமான நம்பிக்கை.

நல்லாரைக் காண்பதுவும் நன்று; நல்லார் சொல் கேட்பதுவும் நன்று என்பர். தமிழக மக்கள் பார்த்து, கேட்டு, நடப்பதற்கு உரிய அழகிய முன் மாதிரி யானவர் பெரியவர் நல்லகண்ணு அவர்கள்.

வாழும் காலமெல்லாம் எல்லா வளத்துடன் எல்லா நலத்துடனும் அவர்கள் வாழவேண்டும் என எல்லோரும் வாழ்த்துவோம்.

❖



ஆழ்கடலைப் போல அமைதியானவர்!

இராம. வீரப்பன்

தோழர் நல்லகண்ணு அவர்களுக்கு 80 ஆண்டு நிறைவு பெறுகிறது என்ற செய்தி மிகுந்த மகிழ்ச்சிக்குரியது. அதையொட்டி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஒரு சிறப்பு மலர் வெளியிடுவது போற்றுதலுக்குரியது.

தோழர் நல்லகண்ணு அவர்கள், கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்தத் தலைவர்களில் ஒருவர். விடுதலைப் போராட்ட வீரர். பல தியாகங்களைச் செய்து, பொதுவாழ்க்கைக்குச் சிறப்புகளைச் சேர்த்தவர். பொது வாழ்க்கையில், குறிப்பாக அரசியல் வாழ்க்கையில் ஈடுபடுகிறவர்கள்- அதிலும் தலைவர்களாக வளருகிறவர்கள், வளர வேண்டுமென்று விரும்புகிறவர்கள் எப்படி வாழ வேண்டும் என்பதற்கு இலக்கணம் வகுத்துக் கொண்டிருப்பவர்.

நான், தோழர் நல்லகண்ணு அவர்களை 30 ஆண்டுகளாக அறிவேன். அரசியல் ரீதியாக எனக்கும் அவருக்கும் பல நேரங்களில் உறவுகள் இருந்திருக்கின்றன. பல நேரங்களில் எதிர்ப்பவர்களாகவும் இருந்திருக்கிறோம். ஆனால், எந்த நேரத்திலும் மனிதர்கள் எப்படி இருக்க வேண்டும், பழக வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கிக் கொண்டிருக்கிறவர்.

இப்பொழுதெல்லாம், அரசியலில், தலைவர்கள் எப்படி உருவாகிக் கொண்டிருக்கிறார்கள் என்பதும், தலைவர்களாகப் பெயர் வைத்துக் கொண்டு இருக்கிறவர்கள் எப்படி நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதும் எல்லோரும் அறிந்த செய்தியாகும்.

இந்த நூற்றாண்டுக் காலத்தில், இந்திய நாட்டின் வரலாற்றில், விடுதலைப் போர் தொடங்கியதற்குப் பிறகு, சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு தன்னுடைய இன்னுயிரை ஈந்த தியாகிகள், சிறையிலேயே வாழ்க்கையைக் கழித்த வீரர்கள், போராட்டங்களையே வாழ்க்கையாக மாற்றிக் கொண்ட மகத்தான மனிதர்கள் நாடு முழுவதும் வாழ்ந்தார்கள். தமிழகத்

திலும் அப்படிப்பட்ட ஒரு பரம்பரை தோன்றி இன்றைக்கும் வரலாற்றில் புகழ் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், அந்த தியாகப் பரம்பரையில் கடைசிச் சின்னங்களாகத்தான் இந்திய நாடு முழுவதும் பலர் அடையாளங்களாக இப்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்படி தமிழகத் திலே அடையாளமாக வாழ்ந்து கொண்டு இருக்கிறவர்களில், அந்த மாமனிதர்களில் தோழர் நல்லகண்ணு அவர்களும் ஒருவர் ஆவார்.

ஆனாலும், விடுதலை வீரர்கள், தியாக சீலர்கள் - பொதுவாழ்வில் சிறந்த நெறிகளை உருவாக்கியவர்கள் என்று பலர் இருந்தாலும், அந்தப் பட்டியலிலே தோழர் நல்லகண்ணு அவர்கள் ஒரு தனி இடத்தை வகிக்கிறவர்.

தோழர் நல்லகண்ணு அவர்களை முன்பின் தெரியாமல் ஒருவர் சந்தித்தால் இவர் ஒரு இயக்கத்தின் பெரிய தலைவர்களில் ஒருவர் என்று அடையாளம் காணமுடியாது. மேலும் இன்றைய அரசியல் தலைவர்கள் என்பவர்கள் எப்படி அடையாளம் காட்டிக் கொண்டிருக் கிறார்களோ அந்த முறைகளிலேயும் இவரைக் கண்டுபிடிக்க முடியாது. பல்லாயிரக்கணக்கான - உழைத்து உழைத்துக் கறுத்துப்போன உழைக்கும் வர்க்கத்தில் ஒருவராகத்தான் இவரை அடையாளம் காண்பார்கள்.

ஏனெனில் பார்த்தவுடனேயே இவர் ஒரு பெரிய மனிதர் என்ற படாடோபத்தையோ அல்லது ஆடம்பரத்தையோ அல்லது பரிவாரங் கள் புடைசூழ பவனிவரும் செயல்பாடு களையோ இவரிடத்திலே காண முடியாது.

ஆழ்கடல் அமைதியாக இருக்கும் என்று சொல்கிறார்களே, அதற்கு உதாரணம் காட்ட வேண்டுமானால் தோழர் நல்லகண்ணு அவர்களைத்தான் காட்ட முடியும்.

அவ்வளவு அமைதியானவர் - அடக்கமான வர் - ஆனாலும், கொள்கைகளுக்காகப் போராடு கிறவர் - துணிந்து வாதிடுகிறவர் - எதையும் தனக்காக என்று பாதுகாப்பதற்காக வாழ்பவர் அல்ல என்பது போன்ற ஒரு தலைவருக்குரிய எல்லா லட்சணங்களும் தோழர் நல்லகண்ணு அவர்களிடத்திலே உண்டு.

ஆனால் அவைகளையெல்லாம் உள்வாங்கிக் கொண்டு அமைதியான ஒரு அற்புதமான முகத்தை- தோற்றத்தை இயற்கை அவருக்குச் செல்வமாகத் தந்திருக்கிறது. கொள்கைகளில் உறுதியாக நிற்பார். ஆனால், மற்றவர்களோடு பகைத்துக் கொண்டால்தான் கொள்கை உறுதியைக் காப்பாற்ற முடியும் என்ற செயல்களுக்கு இடமளிக்கமாட்டார். கொள்கைகளுக்காக எதிரானவர்களை எதிர்த்துப் போராடுவார் - வாதாடுவார், ஆனால், மனிதநேயத்தை மதித்து யாரையும் மனிதனாகப் பார்ப்பார்.

இப்படிப்பட்ட பண்புகள் தீவிரவாதம் பேசுகிற எல்லோரிடத்திலும் அமைவது அரிது. அதிலே சிலர்தான் தப்பிப் பிறந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு அற்புத மனிதராக நம்மிடையே வாழ்ந்து கொண்டிருப்பவர்தான் தோழர் நல்லகண்ணு அவர்கள். அவர் பெயரிலேயே 'கண்ணும்' இருக்கிறது. 'நல்ல' என்ற சொல்லும் இருக்கிறது. கண் எல்லோரையும் ஒன்றாகத்தான் பார்க்கும். பார்வையில் வேறுபாட்டை உருவாக்குவது மனித உணர்ச்சிகள்தான்.

ஆனால், அந்த உணர்ச்சிகளை எல்லாம் கட்டுப்படுத்தி, அந்தப் பார்வையை கண்ணுக்குள்ள இயற்கையான தகுதியோடு நல்ல பார்வையைக் கொண்ட நல்லகண்ணாக வாழ்க்கையையே மாற்றிக் கொண்டிருக்கிற அற்புத மனிதர். எல்லோருடைய அன்பையும் பெற்றவர். நாமும் இவரைப் போல வாழவேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்கி ஒரு பாடமாக வாழ்ந்து கொண்டிருக்கிற அந்த மாமனிதருக்கு 80 ஆண்டுகள் நிறைந்து 100 ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்து தமிழ்ச் சமுதாயத்திற்கும் இந்திய நாட்டிற்கும் ஈடு இணையற்ற சேவைகள் புரிய என் வாழ்த்துக் களையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

❖

உறங்காத கண்

குருட்டுக் கண்
மாலைக் கண்
காமாலைக் கண்
மாறு கண்
சாளேசுவரக் கண்
தூரப் பார்வைக் கண்
கிட்டப்பார்வைக் கண்
இத்தகைய கண்களெல்லாம்
தலைவர்களாக இருக்கும்
அரசியலில்
நல்லகண்ணு! நீ மட்டும்
நல்ல கண்

உடலில் எந்த உறுப்பு
காயம் பட்டாலும்
கண் அழும்

சமுதாயத்தின்
எந்த உறுப்புக்கும்
பிரச்சினை என்றால்
கலங்கும் கண் நீ

உன் வார்த்தைகளும்
கண்ணீர்த் துளிகளே

உழைப்பவர் நலத்தில்
கண்ணாய் இருப்பவன் நீ

சில நேரம் நீ
நெற்றிக் கண்
ஆவதும் உண்டு

நீ உறங்காத கண்
உன்னை எந்த இமையும்
மூட முடியாது.

கவிக்கோ அப்துல் ரகுமான்

எளிமையின் வடிவம் !

ந. ரங்கசாமி
முதலமைச்சர், புதுவை மாநிலம்

இந்திய விடுதலைப் போராட்ட வீரரும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய நிர்வாகக் குழு உறுப்பினருமான தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்களின் 80ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாவை ஒட்டி ஜனசக்தி வார இதழின் சார்பில் சிறப்புமலர் வெளியிடுவது அறிந்து மகிழ்கின்றேன்.

பொதுவாழ்வில் எளிமையும், நேர்மையும் கொண்டு, தூய்மையான தொண்டாற்றி அனைவராலும் போற்றி மதிக்கப்படுபவர் நல்லகண்ணு அவர்கள். எளிமையின் - தூய்மையின் வடிவமாக தமிழகத்தில் திகழ்ந்த பெருந்தலைவர் காமராசர், இலக்கிய பேராசான் ஜீவா ஆகியோரைத் தொடர்ந்து இவர் அரசியல் வானில் மின்னுகின்றார்.

விடுதலைப் போராட்ட காலத்திலும், தலைமறைவு, சிறைவாசம், அடக்குமுறை என்று அனுபவித்தவர். அதற்கு பின்பும் சாதாரண ஏழை - எளிய மக்களின், விவசாயத் தொழிலாளர்களின் முன்னேற்றத்திற்காக தொடர்ந்து போராடி வருபவர்.

தமிழகம் மற்றும் புதுச்சேரி மாநிலத்திலும் கம்யூனிஸ்ட் கட்சியின் வளர்ச்சிக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் பாடுபடும் உன்னத மானவர்.

எண்பது அகவை நிறையும் இவ்வேளை யில் அவரின் தூயத் தொண்டு தொடரவும், அரசியலில் இன்றைய இளைஞர்களுக்கு அவரின் வழிக்காட்டுதல் தொடரவும் நூற்றாண்டைக் கண்டு நீடூழி வாழ்க! என அன்புடன் வாழ்த்துகிறேன்.



பல்லாண்டு வாழ்க !

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும் தமிழக விவசாயிகள் சங்கத்தைக் கட்டி எழுப்பிய முன்னோடிகளில் ஒருவரும் கார்ல்மார்க்ஸ் - லெனின் கொள்கை களில் தீவிர ஈடுபாடு கொண்டு, தொழிலாளர் இயக்கங்களில் ஈடுபட்டு, பலமுறை சிறை சென்ற பெருமைக்குரியவருமான தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்களின் 80ஆம் ஆண்டு நிறைவு விழா மலர் வெளியிடுவது அறிந்து மிகழ்ச்சியடைகிறேன்.

சுதந்திரப் போராட்டத் தில் ஈடுபட்டவர்களில் இன்று நம்மிடையே வாழும் விரல் விட்டு எண்ணக்கூடிய சிலரில் ஒருவராகவும், தியாகத் தழும் பேறிய அரசியல் தலைவராக வும் திகழும் திரு.ஆர்.நல்ல கண்ணு அவர்கள் எண்பதாம் அகவையை நிறைவு செய்தி டும் செய்தியை அறிந்து களிபேருவகை கொள் கிறேன்.

நெல்லை மாவட்டம் நாட்டுக்களித்த நன் முத்துக்களில் ஒருவரான நல்லகண்ணு அவர் கள் பள்ளியில் படிக்கும் போதே போராட்டத் தில் ஈடுபட்டார்.

இந்தியாவில் குறிப் பாக தமிழ்நாட்டில் விவ சாய சங்கத்தை உரு வாக்கிய முன்னோடிகளில் ஒருவர். பத்தாண்டுகளுக்கு மேலாக சிறைவாசம் அனு பவித்தவர்.

''காட்சிக்கு எளியவ னாய் கடுஞ்சொல் அல்லா னாய்'' எளிமையும் இனிமையும் கொண்டு பழகும் ஆற்றல் பெற்ற அரசியல் தலைவர். பொது வாழ்க் கையில் தூய்மைக்கும் எளிமைக் கும் அடையாளமாகத் திகழ்பவர்.

13 ஆண்டுகள் இந்தியக் கம்யூ னிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளராக பொறுப்பு வகித்து ஒவ்வொரு தோழரின் உணர்வோ டும் கலந்தவர்.

எண்பதாம் ஆண்டை நிறைவு செய்திடும் அவர் நூறாண்டும் கொண்டாட வேண்டும் என்ற என் விருப்பத்தையே வாழ்த்தாக்கி மகிழ்கிறேன்.

❖

தயாநிதி மாறன்

மத்திய அமைச்சர்

எளிமையில் உறையும் வலிமை!



தமிழ் இலக்கியத்தில் எல்லையில்லா ஆழமும், வேளாண் தொழிலாளர் பிரச்சினையில் முழுமையான புரிதலோடு கூடிய ஈடுபாடும், சர்வதேச அரசியலில் பெரும் ஞானமும் அவையோர் அலட்சியப்படுத்த முடியாத ஆனால் அர்த்தமுள்ள மௌனமும், சுற்றத்தாரை கண் முன்னே இழந்தாலும் கலையாத கொள்கைப் பற்றும் எத்தனை ஆண்டு காலம் என்று எண்ணிட முடியாத சிறைவாசமும் பெயருக்கேற்ற, சுற்றுச்சூழல் மாற்ற முடியாத நற்குணங்களும் பொருந்திய தாங்கள், இந்திய பொது வாழ்விற்கு எளிமையோடு கிடைத்த வலிமை.



அரசியல்வாதிக்குரிய எதையும் வாழ்வில் தாங்கள் அடையவில்லை. ஆனால் அரசியல்வாதிகள் யாரும் அடைய முடியாத எல்லாவற்றையும் தாங்கள் அடைந்துவிட்டீர்கள்.

வாழ்க பல்லாண்டு!

எஸ்.எஸ். பழனிமாணிக்கம்
மத்திய இணை அமைச்சர்

அடக்குமுறை கொடுமைகளுக்கு ஆளானவர்!

இந்திய பொதுவுடமை இயக்கத்தின் முன்னணித் தலைவர்களில் ஒருவரும் விடுதலைப் போராட்ட வீரருமான பெருமதிப்பிற்குரிய தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்களின் 80-வது பிறந்த நாளையொட்டி மலர் வெளியிடுவது குறித்து பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தியாவில் பொதுவுடைமை இயக்கம் தோன்றிய ஆண்டில் பிறந்து, அந்த இயக்கத்தோடு இரண்டறக் கலந்து, இன்று 80-வயதை எட்டியுள்ள தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்கள் பொதுவாழ்வில் ஈடுபடுவோர் போற்றி பின்பற்றத் தக்க அளவிற்கு பல்வேறு நற்பண்புகள் ஒருங்கே அமையப் பெற்றவர். இந்தியத் திருநாட்டின் விடுதலைக்காகப் போராடி பல்வேறு இன்னல் களை அனுபவித்தவர். சாதிய ஆதிக்கம் மேலோங்கியிருந்த அன்றைய காலக்கட்டத்தில் அந்த ஆதிக்கத்தால் ஒடுக்கப்பட்டுக் கிடந்த மக்களின் உரிமைகளுக்காப் போராடி ஆதிக்க சக்திகளின் அடக்குமுறைகளைச் சந்தித்தவர். ஆதிக்கம் என்பது எந்த வகையில் நுழைந்தாலும் அதனை துணிவுடன் எதிர்த்து நின்றவர். தமிழகத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றியவர். அந்த இயக்கம் நடத்திய பல்வேறு போராட்டங்களில் முக்கியப் பங்கெடுத்து செயல்பட்டு அதன் விளைவாக அதிகார வர்க்கத்தின் அடக்குமுறைக் கொடுமைகளுக்கு ஆளானவர்.

தமிழ்நாட்டு மக்களின் வாழ்வுரிமைக்காக திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திய பல்வேறு போராட்டங்களுக்கு ஆதரவாக துணை நின்றவர். இன்றளவும் கழகத்தோடு இணைந்து களப்பணியாற்றி வருபவர். தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு உற்ற தோழராக விளங்கு பவர்.

தமிழக அரசியல் அரங்கில் பெருமைக்குரிய இடத்தைப் பெற்றிருக்கும் தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்கள் பொது வாழ்வில் எளிமை, நேர்மை, தூய்மை ஆகிய நற்பண்புகளுக்கு எடுத்துக்காட்டாய் திகழ்பவர். இன்று 80 - வயதை எட்டியிருக்கும் பெருந்தகையாளர் ஆர்.நல்லகண்ணு அவர்கள் வருங்காலத் தலைமுறைக்கும் வழிகாட்ட இன்னும் பல்லாண்டு காலம் வாழ இதயங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



எஸ். ரகுபதி

மத்திய இணை அமைச்சர்

பண்பில் உயர்ந்தார்க்கு பல்லாண்டு கூறுவோம்!

சிற்பி



தலைவ ரேன்றால் உடையழகு மிளிர வேண்டும்
தலைவ ரேன்றால் நடைமிடுக்கு மிகவும் வேண்டும்
தலைவ ரேன்றால் காந்தமிகு கவர்ச்சி வேண்டும்
தலைவ ரேன்றால் தந்திரமாய்ப் பேச வேண்டும்
தலைவ ரேன்றால் அடையாளம் இதுவே என்றும்
தமிழகத்தின் தலைவிதியாய்ப் போக, மக்கள்
தலைவ ரேன்றால் தோழர் நல்ல கண்ணுவைப் போல்
தகை சான்ற எளிமை வேறு எவர்பால் உண்டு?

தேசத்தில் விடுதலைப் போர் மூண்ட நேரம்
தியாகம் தன் வரலாற்றை எழுதும் காலம்
நேச மிகும் நம் தோழர் நல்ல கண்ணு
நெருப்புக் குள் புடம் போட்ட தங்க மானார்;
கூசாமல் அன்னியரைக் குனிந்து போற்றிக்
கும்பிட்டு வாழ்ந்தவர்கள் நடுவே, நாட்டுப்
பாசத்தால் விடுதலைமேல் வைத்த பற்றால்
பரங்கியரின் வெஞ்சிறையைக் கண்டார் தோழர்.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் என்ற
ஒரு மொழியும் பொய்யாக, உழவனுக்கு
வழிகின்ற கண்ணீரே வாழ்க்கை யாக,
வளர்ந்து வந்த பொதுவுடைமை இயக்கம் அன்று
விழிநீரைத் துடைப்பதற்கேன் றமைத்த சங்கம்
விவசாயத் தொழிலாளர் சங்கம் - அந்தப்
பழுதில்லாச் சங்கத்தின் தலைமை ஏற்றுப்
பணிசெய்த சிறப்பை வர லாறு பேசும்.

நமது தமிழ் மாநிலத்தின் செயல ராக
நாடு மெச்சப் பன் முறையும் தேர்வு பெற்று
இமை போலப் பொதுவுடைமை இயக்கம் காத்த
இணையற்ற தலைவர் நம் நல்ல கண்ணு
சம கால அரசியலில் கண்போல் காத்த
நாகரிகம் கண்டு வியப் பெய்தாதார் யார்?
இமய முதல் குமரிவரை பறக்கும் அந்த
எழுச்சிச் செங் கொடிக்கே ஓர் பெருமை ஆனார்!

தண்ணீரைப் போல் எளிமை, பட்டுப் போலத்
தகதகக்கும் மிகுமேன்மை, கொள்கை காக்கும்
திண்மையிலே உருக்கு போல் உறுதி, ஓடித்
தீராத நதியைப் போல் உழைப்பு, என்றும்
எண்ணத்தில் களங்க மில்லாச் சிரிப்பு மிக்க
இனிய வராம் நம்தோழர் நல்லகண்ணு
எண்பதினைக் கடக்கின்ற மகிழ்வுப் போதில்
இன் தமிழால் பல்லாண்டு கூறு கின் றோம்.

●

தாய்மைக் கணப்பு



அடைமழை மேக
அடர்
தமிழ்க்
கருப்பு
அடிநிலை மக்களின்
அவலம்
துடைக்கக்
குமுறி எழுந்த
கொள்கைச்
சிவப்பு!
✱
இறுகிய கொள்கை
இளகிய
நெஞ்சு
இணைந்து கிடைத்த
எளிய
வியப்பு!
✱
நெல்லிக் கடித்து நீர்
குடித்தாற்
போல்
நினைக்க நினைக்க
நீளும்
இனிப்பு!
✱
பண்பின் செழிப்பு!
பணி பணி பணி என
படுத்தல்
அறியா
பம்பர
விழிப்பு!
✱
உலகப் பொதுமையின்
உட்
கரு
உணர்ந்த
உயர்தமிழ்
நாட்டின்
உன்னத
உழைப்பு!
✱
நெடு நெடு நெடுவென
நீள
வளர்ந்த
நேர்மை
வனப்பு!
✱ நெகிழ நெகிழ
எம்
போன்றோரை
நெஞ்சில்
வைத்து
நீர்மையில் அணைக்கும்
தாய்மைக்
கணப்பு!
✱ பாரதியோடு
பாரதிதாசனை
இணைத்தே
பார்க்கும்
இன்
தமிழ்
கணக்கு!
இவரது
அன்புப்
பிள்ளையாய்
இருக்கக்
கிடைத்த
வாய்ப்பே
போதும்
எனக்கு!

கவிஞர் அறிவுமதி



வாழ்த்தும் வணக்கமும் !

ஜெயகாந்தன்

விடுதலைப் போராட்டத்தில் நேரடியாக பங்குபெற்ற தலைமுறையினர் மெல்ல மெல்ல அருகி வருகின்றனர். தோழர் நல்லகண்ணு போன்றவர்கள் அந்த விடுதலைப் போராட்ட வீரர்களின் கடைசிப் படை வீரராக இருப்பர். எனவே, இவர்களின் வரலாற்றை இன்றைய இளைஞர்கள் அறிந்துகொள்ள வேண்டியது வேறு எப்போதையும் விட இப்போது அவசியமாகிறது. ஏனெனில் இதுவே கடைசி வரிசைத் தருணம்.

இந்தியாவில் உள்ள கம்யூனிஸ்டுகள் அனைவரும் தேசபக்த விடுதலைப் போரில் விளைந்தவர்கள் தான். அதற்கும் புறம்பான எதிரான இயக்கங்கள் ஒரு சில அக்காலத்தில் இருந்த போதிலும் அதற்கு வசப்படாத முற்போக்கு சிந்தனையுடையவர்கள் தான் காங்கிரஸிலிருந்து கம்யூனிஸ்டுகளாக மாறி விடுதலைப் போராட்டத்தில் இணைந்தே அரசியல் பணியாற்றினர்.

அந்தப் பாரம்பரியத்தில் வந்த தேசபக்த அணியினரைச் சேர்ந்தவர் தோழர் நல்லகண்ணு, இக்காலத்தில் நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார். நமக்கு கடந்த கால அரசியல் நெறிகளையும், நிகழ்கால அரசியல் கடமைகளையும் வலியுறுத்தி கட்சி பேதமின்றி அனைத்து மக்களுக்கும் வழிகாட்டி வருகிற அரிய தலைவர்களுள் ஒருவர் தோழர் நல்லகண்ணு.

சுதந்திரப் போராட்டத்திலும் சுதந்திரம் அடைந்த பிறகு நடந்த மக்கள் போராட்டங்களிலும் தொடர்ந்து பங்கெடுத்ததால் சொந்த வாழ்க்கையை போராட்டக் களமாக்கிக் கொண்ட தியாகிகள் மிகச் சொற்பம். அவர்களில் ஒருவர் தோழர் நல்லகண்ணு.

இப்படிப்பட்ட தலைவர்களை எந்தக் கட்சியில் இருந்தாலும் மக்கள் மறப்பதில்லை. பொதுமக்கள் மறந்தாலும் உழைப்பாளி மக்கள் ஒரு பொழுதும் மறக்க முடியாது இவர்களை.

மக்கள் மீது நான் கொண்ட நேசமே எவ்வளவு கொள்கை பேதங்கள் இடையில் இருந்தாலும் இத்தகு தலைவர்களோடு என்னை நெருக்கமும் நேசமும் கொள்ள வைத்திருக்கிறது. எண்பது வயதிலும் தியாக சீலர்கள் இளைஞர்களாக விளங்க முடியும் என்பதற்கு இன்னுமோர் உதாரணம் இவர். கம்யூனிஸ்ட் இயக்கத்தின் வீர வரலாற்றை வணங்குகிறவர்கள் தோழர் நல்லகண்ணுவை வணங்காமலும் வாழ்த்தாமலும் இருக்க முடியுமோ?

எண்ணற்ற பாட்டாளி மக்களின் இதயத்தில் வீற்றிருக்கின்ற தோழர் நல்லகண்ணு இன்னும் பல்லாண்டு காலம் இளமையோடும் பொலிவோடும் விளங்க வாழ்த்துகிறேன்.

தியாகம் வெல்லும். அது வென்றிருக்கிறது. இன்னும் பல வெற்றிகளை காணவும் அது போராடிக் கொண்டிருக்கிறது. இந்தப் போராட்டம் ஆக்கப்பூர்வமானது. இந்து ஆக்கப்பூர்வமான போராட்டத்தில் இருந்து தோழர் நல்லகண்ணு ஒரு போதும் ஓய்வுபெற மாட்டார்.

எனினும், அவர் ஏற்றுள்ள பொறுப்புகளை அவரைச் சார்ந்துதள்ள அனைவரும் துணை நிற்கவும் தோள் கொடுக்கவும் உறுதிமொழி மேற்கொள்வோமாக என்று தோழமை நிறைந்த எனது வாழ்த்துக்களை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

❖



வாழ்த்துக்கள் மாத்திரமல்ல வணக்கங்களும்!

பேரா. கார்த்திகேசு சிவத்தம்பி

கொழும்பு

ஆர்.என்.கே. என அன்புடன் தோழர்களால் அழைக்கப்பெறும் திரு. ஆர்.நல்லகண்ணு அவர்கள் 80வது வயதை எட்டுவதையொட்டி வெளியாகும் இந்த மலரில் நானும் இடம்பெறுவது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

தோழர் நல்லகண்ணு தமது கொள்கை நேர்மைக் காரணமாகவும், ஆளுமையின் சிறப்புக் காரணமாகவும் இன்று தமிழகத்தில் எல்லோராலும் போற்றப்படுகின்ற ஒருவராக காணப்படுகிறார்.



பொதுவுடைமை இயக்கத்தின் புகழ்பூத்த தலைவர்கள் தொழிற் சங்கங்களினதும், தொழிலாளிகளினதும் பிரதி நிதிகளாக போற்றப்படுவதே மரபு. அத்தகைய ஒரு பாரம்பரியம் தமிழ் நாட்டிலும் உண்டு. ஆனால், தோழர் நல்லகண்ணு அவர்களோ விவசாய தொழிலாளியின் ஊடாக அத்துறையில் அவர் ஆற்றிய பெரும் பணியின் காரணமாக முன்னுக்கு வந்துள்ளவர். அவரது ஆளுமைச் சுட்டும் இயல்பு அவரை தமிழ்நாட்டின் அடி நிலை மக்கள் பிரதிநிதியாக நம்முன் நிறுத்துகிறது. விவசாயத்துறையின் மூலம் வருவதினால் அவர் இந்த பண்பாட்டின் பிரதிநிதியாகவும் விளங்குகிறார்.

சோவியத் யூனியன், சீனா ஆகிய நாடுகளிலும் கிழக்கு ஐரோப்பாவில் ஏற்பட்ட அனுபவங்களினாலும் மார்க்சீய பரவலில் இப்போது ஒரு பேருண்மை வலியுறுத்தப் படுகிறது. அதாவது பொதுவுடைமை இயக்கம்தான் தொழிற்படுகின்ற சமூகத்தின் பண்பாட்டினது முற்போக்கான

அம்சங்களைத் தனதாக்கிக் கொண்டு வளர்தல் வேண்டும் என்பதாகும். ஏற்கெனவே கேரளத்திலும், வங்காளத்திலும் இது வெற்றிகரமாக தொழிற்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் தோழர் நல்லகண்ணு- உடைய ஆளுமைக் கணிப்புடன் பொதுவுடைமைக்கு வேண்டிய அடிநிலை விவசாய பண்பாட்டு ஊக்கம் முக்கியம் பெறுகிறது.

இது ஒரு முக்கியமான விஷயம். ஏனெனில் தமிழ்நாட்டில் இடதுசாரிக் கொள்கைகள் தொடங்கியக் காலத்து அது, பகுத்தறிவு வாதத்தோடு தொடர்புற்று நின்று அதன் காரணமாக தமிழ்நாட்டின் அடிநிலை பண்பாட்டு அம்சங்கள் பலவற்றை தன் வளர்ச்சி நிலையில் வளத்துக்கு பயன்படுத்தவில்லை. உண்மையில் அந்த நிலையில் நாட்டின் பண்பாட்டு உயிர்களோடு அதிக தொடர்பும் இருக்கவில்லை. ஆனால், தோழர் ஜீவா அவர்கள் அந்தப் போக்குக்கு புறநடையாக இருந்தார். தமிழ்நாட்டில் பொதுவுடைமை தரவேண்டுமெனில் அது கம்பனையும், பாரதியையும் உள் வாங்க வேண்டும் என்று வற்புறுத்தினார்.

இன்று திரு.நல்லகண்ணுவோ, அந்தப் பாரம்பரியத்தில் வந்து தமிழ்நாட்டின் விவசாயிகள் மற்ற பண்பாட்டினை பொதுவுடைமை கருத்து நிலைக்கான தளமாகக் காண்கிறார்.

திரு. நல்லகண்ணு அவர்களினது பொதுவு டைமை தமிழ் மண்ணுக்குள்ளிருந்து வருவது. அந்த வலுதான் இன்று அவரை தமிழ்நாட்டின் முக்கியத் தலைவர்களில் ஒருவராக மாத்திரமல்லாது அனைத்திந்திய முக்கியத்துவம் உடைய ஒருவராகவும் ஆக்கியுள்ளது.

தனிப்பட்ட நிலையில் என்னைப் பொறுத் தவரையில் தமிழ்நாட்டின் நவீன கால வரலாற்றின் சமூக பிரச்சினைக்கான விளக்கங்களை தோழர் நல்லகண்ணு மூலம் அறிந்ததுப் போன்று தெளிவாக வேறு ஒருவரிடத்திலிருந்தும் நான் அறிந்து கொள்ளவில்லை. வள்ளலாருடைய இயக்கத்தின் சமூக பின்புலத்தை அவர் மார்க்சிய கண்ணோட்டத் திலிருந்து கூறுகின்றபோது கேட்கச் சிலிர்க்கும்.

தோழர் நல்லகண்ணுவிடம் நான் கண்ட மிகப்பெரிய பண்பு அவர் எப்போதும் ஒரு மாணவனாக இருக்கின்றார் என்பதேயாகும். அறிவுக்கான தேடல் அவரை விருப்பத்துக்குரிய தலைவ ராக்கியுள்ளது.

தமிழ் பாரம்பரியத்தில் இறைவனை வாழ்த்துகின்ற ஒரு மரபுண்டு. இறைவன் வாழ்த்தப்பட வேண்டுமா? என்ற ஒரு வினாவும் உண்டு. அதற்கு பதிலாக சொல்லப்படுவது மிக முக்கியமானது. இறைவனை வாழ்த்துவதன் மூலம் அவர்களது நம்பிக்கையின்படி மக்கள் எல்லோரையும் வாழ்த்துவதாகும். தோழர் நல்லகண்ணு அவர்களை வாழ்த்தும்போது தமிழ் பயிலும் எனக்கும் அந்த உணர்வுதான் மேலோங்கி நிற்கிறது. அவரை வாழ்த்துவதன் மூலமாக நம்மை நாம் வாழ்த்துகிறோம். நமது எதிர்கால இலட்சியக் கனவுகளை வாழ்த்துகிறோம். நமது பண்பாட்டை வாழ்த்துகிறோம்.

உண்மையில் இந்த வாழ்த்துக் களினூடே ஒரு அடக்கமான வணக்கம் உள்ளது. தோழர் நல்லகண்ணு அவர்களுக்கு எல்லா வளங்களும் தொடர்ந்து கிடைக்க வேண்டுமென்று வாழ்த்துக் கூறவில்லை. வணங்கிக் கொள்கிறேன்.

❖



கொள்கைக் காவலர் வாழ்க!

தவத்திரு பொன்னம்பல அடிகளார்

மாபெரும் பொதுவுடைமை இயக்கத் தூண் களில் ஒருவராகிய முதுபெரும் தலைவர் தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்கள் எண்பதாண்டு நிறைவு கண்டிருப்பது மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது. அடித்தளத்து மக்களுக்காக அயராத உழைப்புடன் பாடுபடுவர்.

''தேடிச் சோறுநிதந் தின்று - பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி..
...... நரை
கூடிக் கிழப்பருவ மெய்தி- கொடுங்
கூற்றுக் கிரையெனல் பின்மாயும் - பல
வேடிக்கை மனிதரைப் போலே - நான்
வீழ்வே னென்றுநினைத் தாயோ?''

என்று பாரதி கேட்பான். 'வெந்ததைத் தின்று விதிமுடிந்தால் மாள்வோம்' என்னும் மனிதர்களின் விதியை மாற்றி எழுதுகின்ற போரில் மகத்தான வெற்றி பெற்று வருபவர்.

''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை''

என்ற திருக்குறளின் இலக்கணம் படைக்கும் சமதர்ம சமுதாயத்திற்குப் பாதை சமைத்து வருபவர்.

அமரத்துவம் அடைந்த மகாசன்னிதானம் தவத்திரு குன்றக்குடி அடிகள் பெருமானின் சமுதாயப் பணிகளில் இரண்டறக் கலந்தவர்; மாறாத நட்புப் பூண்டவர். மண்டைக்காடு மதவெறித் தீயை அணைக்கும் பணியில் கட்சி கடந்த நிலையில் அயராது பாடுபட்டவர். சாதித் தீ கொழுந்து விட்டு எரிந்த தென்மாவட்டக் கலவரங்களை அமைதிப் படுத்தும் பணியில் அரசியல் தளத்தில் நின்று அயராது பணியாற்றியவர். கொள்கையா? பதவியா? என்ற நிலை வரும் பொழுது எல்லாம் கொள்கைக்காகப் பதவியை தூர எறிந்த கொள்கைக் காவலர்.

''நாமார்க்கும் குடியல்லோம்
நமனை அஞ்சோம்''

என்று அஞ்சாது அயராது சமூகப் பணியாற்றி வருபவர்.

''எல்லோரும் ஓர்குலம் எல்லோரும் ஓரினம்
எல்லோரும் இந்திய மக்கள்
எல்லோரும் ஓர்நிறை எல்லோரும் ஓர் விலை''

என்ற சமதர்ம நிலைக்கு பொதுவுடைமை நிலைக்குக் கால்கோல் இட்டவர். அரசியல், சமூக, விஞ்ஞானம், பொருளாதாரப் பிரச்சினைகளைத் தொலைநோக்குப் பார்வையுடன் சிந்தித்துச் செயலாற்றி வருபவர். நதிநீர் இணைப்பு என்பது காலத்தின் கட்டாயம் என்று தொலைநோக்குப் பார்வையோடு குரல் கொடுத்து வருபவர். தியாகம், தன்னலமற்ற உழைப்பு, பிறர் நலம் பேணுதல், ... சான்ற பேருள்ளம் இவைகளின் மறுவடிவம்தான் ஆர்.என்.கே. என அன்பொழுக அழைக்கப் பெறும் தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்கள்.

எண்பதாண்டு காணும் இனியவர் ஆர்.என்.கே. அவர்கள் பல்லாண்டு எல்லா வளமும் நலமும் பெற்று வாழ வேண்டும். எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும் இனிய பொது வுடைமைச் சமுதாயம் படைக்கும் படையை வல்லமையுடன் நடத்திச் செல்ல வாழ்த்துகின் றோம்.

வாழ்க தோழர் நல்லகண்ணு!

வளர்க அவர்தம் தொண்டு!

என்றும் வேண்டும் இன்ப அன்பு!

❖

பல்லாண்டு பல்லாண்டு வாழ்க நீ!

உழைக்கும் மக்களின் உரிமைக் காவலன்
ஊரார் உயர உழைக்கும் சேவகன்
தழைக்கும் நாடு செழிக்க நினைப்பவன்
சாமானி யருக்கும் சாமானிய மானவன்
பழிப்போர் தன்னையும் பாங்குடன் பார்ப்பவன்
பாரத மக்களின் இதயத்தை ஈர்ப்பவன்
விழுப்புண் பெற்றவன் சுதந்திரப் போரில்
வீரனாய் கொள்கையில் நிற்பவன் பாரில்...!

எண்பது காண்பவர் இனிதுற வாழ்க
இன்னும் பல்லாண்டு இனிப்புடன் வாழ்க
பண்புடை மனத்தினோய் பாங்குடன் வாழ்க
பாருக்குப் பயன்தரும் பயன்மரம் வாழ்க
நயத்தகு அரசியல் நட்பினர் வாழ்க
நல்ல(வர்) கண்ணோய் நாநிலம் வெல்க
அன்புடன் சேது அணிந்திடும் மாலை
அகிலத்தை வென்றிட அளிக்குபா மாலை...!

வேட்டியில் வலம் வரும் வீரத் தமிழனை
வெள்ளை மனத்தனை விவசாயி தோழனை
பாட்டாளி மக்களின் பாசத் தலைவனை
பார்வையில் கூடக் களங்கம் இல்லானை
கூட்டாளி தொழிலாளி போற்றும் மறவனை
குமுறும் ஏழையின் குரலாய் உயர்ந்தனை
பாட்டினில் வைத்துப் போற்றினேன் இன்று
பல்லாண்டு பல்லாண்டு வாழ்நீ என்று!!

டாக்டர் நா. சேதுராமன்

தலை சிறந்த முன்னோடி!

தி. க. சி.

2005, டிசம்பர் 25-ம் தேதியன்று தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்களுக்கு 80-வயது நிறைகிறது. அவருடன் பல்லாண்டுகள் பழகியவன் என்ற முறையில், அவரைப் பற்றிச் சில கருத்துக்களை இங்கு பதிவுசெய்ய விரும்புகிறேன்.

நான் திருநெல்வேலிக்காரன். அவர் திருநெல்வேலி மாவட்டத்தில் ஸ்ரீவைகுண்டத்தில் நடுத்தர விவசாய குடும்பத்தில் பிறந்தவர். நான் பயின்ற நெல்லை இந்துக் கல்லூரியில் தான் அவரும் பயின்றார். நாங்கள் இருவரும் சம வயதுக் காரர்கள். கல்லூரிப் பருவத்திலேயே தேசிய இயக்கத்திலிருந்து பொதுவுடமை இயக்கத்திற்கு வந்தவர்கள். நான் 1943 வாக்கில் கல்லூரிப் படிப்பை நிறுத்திவிட்டு நெல்லையில் ஒரு வங்கியில் ஊழியராகச் சேர்ந்தேன். வங்கித் தொழிற்சங்கப் பணிகளிலும் ஈடுபட்டேன். அவரும் கல்லூரிப் படிப்பை இடையில் நிறுத்திவிட்டு, குடும்பத்தின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் கம்யூனிஸ்ட் கட்சியின் முழு நேர ஊழியரானார்.



விவசாய இயக்கத் தொண்டராக இருந்து, பற்பல போராட்டங்களில் ஈடுபட்டு நெல்லைச் சதி வழக்கில் பல ஆண்டுகள் சிறைவாசத்தை அனுபவித்து, கட்சியின் நெல்லை மாவட்ட செயற்குழு உறுப்பினர் என்ற பதவியில் இருந்து படிப்படியாக உயர்ந்து, கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளராக 12 ஆண்டுகள் திறம்படப் பணியாற்றி தமிழக மக்களின் நன் மதிப்பைப் பெற்று இன்று கட்சியின் அகில இந்தியத் தலைவர்களுள் ஒருவராகத் திகழ்கிறார்.

அவருடைய 60 ஆண்டுக் காலத் தன்னலமற்ற பொது வாழ்க்கையை நான் நினைவுகூறும் போது, ''ஒரு சிறந்த கம்யூனிஸ்ட் எப்படி இருக்க வேண்டும்'' என்பதற்கு அவர் ஒரு சீரிய எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார்.

இன்று, பொதுவுடமை இயக்கத்தில் சேர்ந்து பணியாற்ற விரும்பும் ஒரு இளைஞனுக்கு இவர் ஒரு முன்மாதிரியாக (Role Model) திகழ்கின்றார். அதற்கான

சகல தகுதிகளும், பண்புகளும் இவருக்கு உள்ளன. இவர் வெறும் பொதுவுடமைவாதி மட்டுமல்ல, ஒரு சிறந்த தமிழனாகவும் சிறந்த இந்தியனாகவும் சிறந்த உலகக் குடிமகனாகவும் திகழ்கின்றார்.

தமிழக அரசியலில் இந்த மூன்று அம்சங்களும் இணைந்திருக்கக் கூடிய தலைவர்கள் வெகு சிலரே. அவர்கள் மத்தியில் இவர் புடம் போடப்பட்ட பொன்னாகத் திகழ்கின்றார். எனவேதான் ஒட்டுமொத்தத் தமிழ் மக்களிடையே இவர் தனி மதிப்பைப் பெற்றிருக்கின்றார்.

இவர், பொதுவாழ்க்கையில் மட்டுமன்றி தனி வாழ்க்கையிலும் மனித நேயத்திற்கும் உன்னத தோழமைக்கும் நல்லொழுக்கத்திற்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றார்.

பொதுவுடமைத் தத்துவத்தில் இவருக்கு எவ்வளவு பற்றும் ஞானமும் உண்டோ, அந்த அளவிற்கு, இவருக்கு, கலை இலக்கியத்தின் மீதும் தமிழ் மொழியின் மீதும் என்றும் மாறாத பற்றும் பாசமும் உண்டு. பழந்த மிழ் இலக்கியத்தில் இருந்து, இன்றைய நவீன இலக்கியம் வரை இவருக்கு பரிச்சயமும் புலமையும் உண்டு.

பேராசிரியர் நா.வானமாமலையின் நெருங்கிய நண்பரான இவர், அவரைப் போலவே பன்முக ஆற்றல் பெற்றவர். மூத்த எழுத்தாளர்களை மதித்துப் போற்றுவதுடன், இளம் எழுத்தாளர்களைத் தட்டிக் கொடுத்து ஊக்கப்படுத்துபவர். இந்த வகையில் தோழர் ஜீவானந்தத்தின் மரபுகளையுப் பேணி வளர்க்கும் உண்மைச் சீடர் என்ற தயக்கமின்றிக் கூறலாம்.



''இந்தியாவில் பொதுவுடைமைத் தத்துவமும் நடைமுறையும் என்பது இந்திய முகத்தையும் குரலையும் பெற்றிருக்க வேண்டும்.'' என்று இவர் கருதுகிறார் என்பது என் கருத்தாகும்.

சுதந்திரம், ஜனநாயகம், சோசலிசம், உலக அமைதி என்னும் கொள்கைகளின் அடிப்டையில் ஒரு புதிய இந்தியாவை இந்திய மக்கள் ஒன்றுபட்டு உருவாக்க வேண்டும் என்பதில் ஆர்வமும் அக்கறையும் உள்ள தோழர் ஆர்.நல்லகண்ணு அதற்கு அடிப்படையாக, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் (சி.பி.ஐ.), இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் (சி.பி.எம்) பிற இடதுசாரிக் கட்சிகளும் இணைவது காலத்தின் கட்டாயம் என்று கருதுகிறார்.

நவம்பர் (1-15) 2004 ''புதிய பார்வை'' இதழில் வந்துள்ள நேர் காணலில் தோழர் ஆர்.நல்லகண்ணு இவ்வாறு கூறுகின்றார். ''உழைக்கும் மக்களைப் பல்வேறு சக்திகள் பிளவுபடுத்தும் போது அவர்களை ஒன்றுபடுத்த வேண்டியது கட்டாயத் தேவை. முதலாளித்துவ தாக்குதலை எதிர்த்து நிற்க வேண்டும். வேலையில்லாத் திண்டாட்டமும், வறுமையும் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. ஏகாதிபத்திய சூழ்ச்சிகளும் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. மத, சாதிய முரண்பாடுகளைப் பெரிதுபடுத்துபவர்களும் அதிகப் பட்டிருக்கிறார்கள். இந்த நிலையில் இருந்து மக்களை விடுவித்து ஒன்றுபடுத்த வேண்டும் என்றால், மக்கள் நலனை மையப்படுத்தி இயங்கிக் கொண்டிருக்கும் இடதுசாரிக் கட்சிகள் இணைய வேண்டும் என்பது காலத்தின் கட்டாயம். என்னுடைய தனிப்பட்ட விருப்பம் அதுதான்''

தோழர் ஆர்.நல்லகண்ணுவின் ஆர்வ விருப்பத்தை நான் முழுமையாக ஆதரிக்கிறேன். இதற்கான முயற்சிகளில், இடதுசாரிக் கட்சிகள் இனியும் காலம் தாழ்த்தாமல் ஈடுபட வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

தோழர் ஆர்.நல்லகண்ணுவினுடைய இந்தக் கருத்து, கோடான கோடி இந்திய மக்களின் இதய ஒலியாகும்.

81-வது வயதில் விரைவில் அடியெடுத்து வைக்க இருக்கும் தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த தோழமை நல்வாழ்த்துக்கள்!

❖



இரண்டாவது ஜீவா!

நடிகை மனோரமா

கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் கலை - இலக்கியங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர் மறைந்த மாபெரும் தலைவர் பா.ஜீவானந்தம் அவர்கள். அவரைப் போலவே ஐயா நல்லகண்ணு அவர்களும் கலை இலக்கியங்களில் பெரிதும் ஈடுபாடு கொண்டவர் என்பதை அறிவேன்.

கலை இலக்கியப் பெருமன்றத்துடன் நல்லகண்ணு நெருக்கமான தொடர்பு வைத்திருப்பவர். இவர் கம்யூனிஸ்ட் இயக்க பாடகர்களாக விளங்கிய பாவலர்.வரதராஜன் (இசையமைப்பாளர் இளையராஜாவின் அண்ணன்), திருமூர்த்தி போன்ற மக்கள் கலைஞர்களை பெரிதும் மதிப்பவர். பாட்டாளிகளைப் பாடவந்த பாவலர்கள் என்று புகழாரமே சூட்டியிருக்கிறார்கள் இவர்களுக்கு!

நல்லகண்ணுவைப் பற்றி நான் அறிந்த ஒரு முக்கியமான விஷயம் ஒன்றுள்ளது. இந்த நவீன உலகத்தில் விலைவாசிகள் விஷம்போல் ஏறியுள்ள இந்தக் காலக்கட்டத்தில் இவரது மாதத் தேவையே ரூ.1200க்குள் தான்! இவர் என்ன இரண்டாவது காந்தியா? இரண்டாவது ஜீவாவா?

இதில் இருந்து ஒன்று புரிகிறது. இவர் இந்த நாட்டின் பெரும்பான்மையான மக்களைப் போல் வாழ விரும்புகிறார் அல்லது தன்னை வருத்தி மக்களை, ஏழைப் பாட்டாளி வர்க்கத்தை வாழ வைக்க ஆசைப்படுகிறார். எண்பது ஆண்டுகால வாழ்க்கையில் முழுசேவை மக்களுக்கே என்று வாழ்ந்து வருகிறார். அவருடைய தொண்டு நீண்ட நெடுங்காலம் தொடர எல்லாம் வல்ல இறைவனை வணங்குகிறேன்.

❖



தொள்கையில் உறுதி கொண்டவர் !

நடிகர் சிவகுமார்

ஒன்பது ஆண்டு சிறைவாசம். ஒன்பது ஆண்டு முதல்வர் பதவி. இருமுறை பிரதமரா கும் வாய்ப்பு வந்துகூட, தகுதியானவர் என்று தமக்குத் தோன்றிய லால்பகதூர், இந்திரா - இரு வரையும் பிரதமராக்கிய 'கிங் மேக்கர்'

எளிமையும் நேர்மையுமாய் இறுதிவரை இந்த நாட்டைப் பற்றியே சிந்தித்து வாழ்ந்து, ஐந் தாறு புத்தகங்கள், நாலு வேட்டி சட்டை, இரண்டு ஜோடி காலணியை மட்டுமே தன் உடைமை களாகக் கடைசியில் விட்டுச் சென்றவர் கர்ம வீரர் காமராசர்.

மானத்தைக் காக்க, ஒரு வேட்டி சட்டையே போதும் என, எளிமையின் வடிவமாய், பதவி பற்றிய கனவில் மிதக்காமல், விடுதலை வீரராய், எழுத்தாளராய், பேச்சாளராய் அனைத்திற்கும் மேலாக நல்ல மனிதராய் வாழ்ந்து மறைந்தவர் பொதுவுடைமைப் புரட்சிப்புயல் ஜீவா.

இந்த இருவரின் வழித்தோன்றலாய் பழுப் பேறிய வெள்ளைச் சட்டை வேட்டியும், படியாத சாம்பல் முடியுமாய், வெள்ளை உள்ளத்தோடு, நிதானம், தெளிவு கொண்ட கொள்கையில் உறுதி, இவற்றுடன் பொதுவுடமைச் சித்தாந்தத் தைத் தன் சுவாசமாகக் கருதி வாழ்ந்து, ஒடுக் கப்பட்ட சமுதாயத்திற்கு, உழைக்கும் வர்க்கத் தின் முன்னேற்றத்திற்கு ஓய்வின்றி உழைத்துக் கொண்டிருப்பவர் பெரியவர் நல்லகண்ணு அவர்கள்.

அன்னாரின் 80-வது ஆண்டு நிறைவு விழா வினை ஒட்டி மலர் வெளியிடும் 'ஜனசக்தி'க்கு என் இதயபூர்வமான பாராட்டினை தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த மனிதரின் சேவை நூறாண்டு தொடர இறைவனை வேண்டிக் கொள்கிறேன்.

❖





திறமை நிறைந்த தலைவர்!

நடிகர் சத்யராஜ்

கம்யூனிஸ்டுகளின் புகழைப் பற்றியும், பெரியாரைப் பற்றியும் அடிக்கடி பொது மேடைகளிலும் பத்திரிக்கைகளிலும் முழங்கி வருபவர் நடிகர் சத்யராஜ். கடந்த ஆண்டு ''தமிழகத்தில் கம்யூனிஸ்ட் ஆட்சி வரும்'' என்று பகிரங்கமாக பத்திரிக்கைகளில் பேட்டி அளித்து அனைவருக்கும் நம்பிக்கையை ஊட்டி திரையுலக ஒளிக்கீற்றாய் மின்னினார்.

கலை உலகில் மிகவும் பிஸியான நடிகரான இவர் படப் பிடிப்பில் மும்முராக ஈடுபட்டுக் கொண்டிருந்தார். அவர் ஆர்.என்.கே.வைப் பற்றி நம்மிடையே படப்பிடிப்பிற்கு இடையிலும் உரையாடினார். அவரது உரையாடலில் சிறுபகுதி:

''தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்கள் எளிமையான, நேர்மையான, கண்ணியமான தலைவர்.

புகழ்பெற்ற சிந்தனையாளர். விவசாயிகளோடும் விவசாயத் தொழிலாளர்களோடும் இணைந்து மக்களின் முன்னேற்றத்திற்காக தொடர்ந்து போராடியவர். அவரின் எளிமையான தோற்றமே அவரை மதிக்கச் செய்யும்.

உலக அரசியல், தேசிய அரசியலைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் முதலில் கிராம அரசியலை தெரிந்து கொண்டு, அவர்களின் வளர்ச்சிக்காக போராடுவதில் நாட்டம் கொள்ள வேண்டும். அந்த வகையில் கிராமத்திலிருந்து அரசியலை தொடங்கி மாநில அளவில் வளர்ந்து இன்றைக்கு தேசிய அளவிலான தலைவராக ஆர்.என்.கே. அவர்கள் உயர்ந்திருக்கிறார்.

ஆர்.என்.கே. அவர்களின், பகுத்தறிவையும் விழிப்புணர்வையும் ஊட்டுகின்ற மேடை முழக்கங்களை படிக்கின்ற போது உள்ளபடியே மனம் வீறுகொள்கிறது. அவரது வாழ்க்கை எதார்த்தமானது.

அந்தத் திறமையான, தீர்க்கமான எண்ணமும் தகுதியும் கொண்ட தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்கள் தமிழகத்திற்கு முதல்வராக வராதது தமிழகத்திற்கு மிகப் பெரிய நஷ்டம். தமிழகத்திற்கு மட்டுமல்ல, அவரைப் போன்ற கம்யூனிஸ்டுகள் இந்தியாவிற்கு பிரதமராக வந்தால் இந்தியா வளமான நாடாக இருக்கும்.

இன்னும் காலம் கடந்து விடவில்லை. ஆர்.என்.கே. அவர்கள் 80 வயதைக் கடந்தவர் என்று சொன்னால் யாரும் நம்ப மாட்டார்கள். 40 வயதே மதிக்கத்தக்க உடல்வாகு, செயல் என அவர் இன்னும் நடுத்தர வயதினராகவே தோன்றுகிறார். அவர் வெற்றியையும், தோல்வியையும் சமமாகவே பாவிப்பவர். வெற்றியைக் கண்டு அதிக மகிழ்ச்சியோ, தோல்வியைக் கண்டு விரக்தியையோ அவரிடம் காண முடியவில்லை.

கடந்த ஆண்டு தமிழகத்தில் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சிக்கு வர வேண்டும் என்று நான் சொன்னேன். அதற்குக் காரணம் ஐயா நல்லகண்ணு அவர்களின் மீதான ஈர்ப்புதான்.

ஐயா ஆர்.நல்லகண்ணுவின் பெருமைகளையும், கம்யூனிஸ்டுகளையும் மக்கள் விரைவில் தெரிந்து கொண்டு ஒரு வளமான தமிழகத்தை உருவாக்குவார்கள்; உருவாக்க வேண்டும்; உருவாகும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

மக்கள் ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்திற்கு வரவும், நலமாகவும் வளமாகவும் வாழ ஐயா நல்லகண்ணு அவர்களின் வழியில் செல்ல வேண்டும். ஐயா அவர்களின் 80 ஆண்டு அகவை நிறைவுக்கு வாழ்த்துக்களைத் தெரித்துக் கொள்கிறேன்.

- தொகுப்பு: சி.கே. பிருதிவிராஜ்





ஒளிர்பவர் உயர்ந்து வாழ்க!

அந்நாள் தொட்டு இந்நாள் வரையில்
போற்றுதற் குரிய புகழ்மிகு தலைவர்!
எல்லா மக்களும் இதயத்தால் ஏற்கும்
இனிய பண்புகள் இழைந்திடும் நாயகர்
சிலரே உண்டு! சீர்மிகு அந்தச்
சிலருள் சிலராய்ச் சிறப்புடன் விளங்கும்
களவீரரில் முதல் களவீர ரானவர்
காவியக் கருப்பொருளுமான கண்ணியர்!
நாமெலாம் போற்றும் நற்குணச் செம்மல்-
நல்லகண் ணர் எனில் நாடே ஏற்கும்!

விடுதலை வேள்வியின் வினைத்திறன் மிக்க
வீரர்: விவசாயத் தொழிலாளர் விடிவுக்குத்
தன்னை ஒப்படைத்து உழைத்த தோழர்!

மாண்புறு அன்னார் மறைவிலாப் பாடுகள்
அனைத்தும் அவனியில் அயர்விலா துழைக்கும்
பாட்டாளர் இனத்தின் பட்டொளி வீசும்
விடிவுக்கு அன்றி வேறெதற்கும் உண்டோ?

எளிமை தான்உயிர் வடிவம் எடுக்க
எண்ணினால் இவரின் வடிவமே எடுக்கும்:
உண்மை தனக்கொரு உருவம் கொடுக்க
விரும்பினால் இவரின் உருவமே கொடுக்கும்!
தூய்மை, பொதுவாழ்வின் தூய்மை தனக்கொரு
இலக்கணம் வகுக்க விரும்பினால் இவரின்
சொல், செயல் வழியில் இலக்கணம் வகுக்கும்!

இப்பெரு நாட்டின் இன்றைய வெற்றிகள்
தழைத்து ஏங்கிடத் தன்னைத் தந்தவர்
வாழும் காலத்தில் நாமும் வாழ்கின்றோம்
என்ற நினைப்பால் இதயம் களித்திடும்!
நலிவெலாம் களைந்திடும் நம்பிக்கை துளிர்த்திடும்!

இளைஞராய்த் தோன்றி எழுந்துழைத்தார் இன்று
எண்பதைத் தொட்டுவிட்டார்!
என்றும் செஞ் சேனையின் படைவீரரானவர்
நற்கொள்கை நட்டுவிட்டார்!
விலைமதிப் பில்லாத உயர்பண்பின் உயர் மகன்
பெருமைகள் பெற்றுவிட்டார்!
பீடுடை நாயகர் கோடுயர் குன்றமாய்
உச்சியைத் தொட்டுவிட்டார்!

எண்ணங்க ளால்உயர் தொண்டராய்த் தோழராய்
ஒளிர்பவர் உயர்ந்துவாழ்க!
எளியவர் நலம்பேணத்தன்னையே தருபவர்
எழுகதி ராகவாழ்க!
தன்னலம் என்பதே அறியாத பெருமகன்
தடம் நடந்து உலகு வெல்க!
தணியாத சமதர்மக் கொள்கையின் புகழ்மகன்
வழிநின்று உயர்வு கொள்க!

கவிஞர் பொன்னடியான்

பொது வாழ்வுக்கு இலக்கணம் வகுத்தவர்!

மாஜினி

அரசியல் என்பது ஒரு சேவைத்துறை, நாட்டுக்கும் மக்களுக்கும் தன்னலம் கருதாது, பிரதிபலன் எதிர்பாராது சேவை செய்யும் துறை. இந்த உண்மையை நடைமுறையில், தங்கள் வாழ்க்கையில், நோக்கில், போக்கில் செயல்படுத்திக் காட்டிய, காட்டி வருகின்ற பெருமை, சிறப்பு, கௌரவம் முக்கியமாக கம்யூனிஸ்டுகளுக்கு உண்டு. இதற்கு எத்தனையோ உதாரணங்களைக் கூறலாம்.

தோழர் இ.எம்.எஸ்.நம்பூதிபாட் 1957-59 ஆம் ஆண்டுகளிலும் 1967-69 ஆம் ஆண்டுகளி லும் இரு முறை கேரள முதலமைச்சராக இருந்தார். அவர் தமது பதவியைப் பயன்படுத்தி, மாட மாளிகை, கூட கோபுரங்களைக் கட்டிவிடவில்லை. இறுதிமூச்சு உள்ளவரை அவர் மிக எளிய வாழ்க்கையே வாழ்ந்து வந்தார். அது மட்டுமல்ல, ஆரம்ப காலத்திலேயே தமது பூர்வீக சொத்து முழுவதையும் கட்சிக்குத் தானம் செய்து விட்டார்.



தோழர் அச்சுதமேனனும் கேரளத்தின் முதலமைச்சராக இருந்தவர். அவரும் மிக எளிய வாழ்க்கையே வாழந்து வந்தார். பதவிக்காக நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு பல அரசியல்வாதிகள் அலையும் இந்நாட்களில் இரண்டாம் முறை முதல்வர் பதவி தம்மைத் தேடிவந்தபோது அதனை ஏற்க மறுத்த பெருந்தகை அவர்!

திரிபுரா மாகாணத்தின் முதலமைச்சரான நிருபன் சக்கரவர்த்தியைப் பற்றிப் பலர் கேள்விப்பட்டிருக்கலாம். அவர் பதவி விலகிச் சென்ற போது அவரது முழுச் சொத்து என்ன

தெரியுமா? ஒரு கைப்பெட்டி, ஒரே ஒரு நாள் உடுத்துவதற்கான ஆடைகள் மட்டுமே அதில் இருந்தன!'' இந்தச் செய்தி அச்சமயம் அனைத்துப் பத்திரிகைகளிலும் வெளிவந்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது!

உலக வரலாற்றிலேயே இல்லாதவாறு 20 ஆண்டுகளுக்கும் மேலாக வங்காளத்தின் முதலமைச்சராக இருந்த தோழர் ஜோதிபாசுவின் வரலாறும் அதே போன்றுதான். அந்த மார்க்சிஸ்டுக் கம்யூனிஸ்டுத் தலைவர் 20 லட்சம் ரூபாய் பெருமானமுள்ள தமது மூதாதையர் சொத்தை கம்யூனிஸ்டுக் கட்சிக்குத் தந்துவிட்ட செய்தியை பல பத்திரிகைகள் வெளியிட்டிருந்தன.

இதே போன்று தமிழ்நாட்டிலும் பல தோழர்கள் பொது சேவை செய்யும் நோக்கில், போக்கில் தங்கள் சொத்துகளைக் கட்சிக்குத் தானம் வழங்கியுள்ளனர். எஸ்.ஆர்.கே. என்று அன்போடு அழைக்கப்படும் தோழர் ராமகிருஷ்ணன், தோழர் சீனிவாசன், தோழர் அங்குசாமி போன்றோரை இவ்வகையில் குறிப்பிடலாம்.

பதவியைப் பணம் காய்க்கும் மரமாகக் கருதாத தலைவர்களும் ஊழியர்களும் எத்தனை எத்தனையோ பேர் கம்யூனிஸ்டு இயக்கத்தில் இருந்து வந்திருக்கின்றனர் என்பதை உள்ளங்கை நெல்லிக்கனி எனக் காட்டவே இதனை இங்கு கூறுகிறோம்.

இவ்வகையான நேரிய, சீரிய, விழுமிய கம்யூனிஸ்டுத் தலைவர்களில் ஒருவர்தான் நமது அன்புக்கும் பாசத்துக்கும் நேசத்துக்கும் உரியவரான தோழர் நல்லகண்ணு அவர்கள். அவரை நான் முதல் முறையாக சந்தித்ததே சிறையில்தான்.

1950 ஆம் ஆண்டுகள். அச்சமயம் ஆட்சியாளர்கள் கம்யூனிஸ்ட்கள் மீது மிகக் கொடிய அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டனர்; பல்வேறு சதி வழக்குகளை ஜோடித்து சிறையிலடைத்தனர்; வன்னெஞ்ச சித்திரவதை செய்தனர்; தூக்கு மேடை ஏற்றினர்; துள்ளத் துடிக்கச் சுட்டுக் கொன்றனர். மக்கள் கவிஞர் மணவாளன் பச்சை படுகொலை செய்யப்பட்டதை இதற்கு உதாரணமாகக் கூறலாம். இவ்வாறுதான் அச்சமயம் அருமைத் தோழர் நல்லகண்ணுவும் சிறையிலடைக்கப்பட்டார். அவர் மீது நெல்லை சதி வழக்கு தொடரப்பட்டது. பின்னர் பல ஆண்டுகளுக்குப் பிறகு அவர் விடுதலை செய்யப்பட்டார்.

1960ஆம் ஆண்டுகளில் ''ஜனசக்தி''யின் துணை ஆசிரியராகவும் பின்னர் ''தாமரை''யின் பொறுப்பாசிரியராகவும் நான் பணியாற்றியபோது பெருமதிப்பிற்குரிய தோழர் நல்லகண்ணு அவர்களுடன் நெருங்கிப் பழகும் அரிய வாய்ப்பு கிடைத்தது. அடுத்து, ''சோவியத் நாடு'' இதழின் ஆசிரியராக 26 ஆண்டு காலம் நான் பணியாற்றிய சமயத்திலும் அவருடன் அடிக்கடி தொடர்பு வைத்துக் கொண்டிருந்தேன்.

இத்தகைய நீண்ட நெடுங்காலத் தொடர்பு மூலம் அந்த மாமனிதனின் சீரும் சிறப்பை, அருமை பெருமையை அறிந்து, தெரிந்து, புரிந்து கொண்டேன். தோழர் நல்லகண்ணு அவர்கள் பல அரிய பண்புகளின் பெட்டகமாகத் திகழ்பவர். அவர் மாசுமறுவற்ற தேசபக்தர்; தளராத நெஞ்சிலே தங்கமெனத் தகதகக்கும் உன்னத உயரிய கம்யூனிஸ்டு இலட்சியங்களைக் கொண்டவர்; ஏழை எளியோர் ஏற்றமுறவும் மனிதனை மனிதன் சுரண்டும் கோரக் கொடுமை ஒழியவும் சமதர்ம சுபிட்ச சமுதாயம் மலரவும் அயராது சோராது பாடுபட்டு வருபவர்; சிறைக் கூடங்களைச் சிந்தனைக் கூடங்களாக ஆக்கிக் கொண்டவர்; அநீதிக்கு, அக்கிரமத்துக்கு, சுயநலத்துக்கு, சுரண்டலுக்கு, லஞ்ச லாவண்யத்துக்கு எதிராக தமது எழுதுகோலைப் பயன்படுத்தி வருபவர்.

அவர் பொதுக் கூட்டங்களில் மண்ணுக்கும் விண்ணுக்கும் எட்ட ஆக்ரோஷமாகப் பேசமாட்டார். ஆனால் அவரது பேச்சில் சத்து இருக்கும், சாரம் இருக்கும், உண்மை இருக்கும், உத்வேகம் இருக்கும், எவரையும் சிந்திக்க வைக்கும். அருமைத் தோழர் நல்லகண்ணு எல்லோருக்கும் இனிய நண்பர்; தோழர்களிடம் பரிவும் பாசமும் மிக்கவர்; பழகுவதற்கு அருமையானவர்; ஆடம்பர ஆர்ப்பாட்டமில்லாத எளிய தோற்றம் கொண்டவர்; பரந்த மனோபாவமும் பிறருக்கு உதவும் சீரிய பண்பும் நிறைந்தவர்.

இத்தகைய தியாகச் செம்மல் தமது எண்பதாவது அகவையில் அடியெடுத்து வைக்கிறார். அவரும் அவரது குடும்பத்தினரும் நீடூழி வாழ நமது இதயங்கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

❖

என் பார்வையில் ஆர்.என்.கே.!

பேரா. நா.தர்மராஜன்

தோழர் நல்லகண்ணு அவர்களுடைய 80ஆம் ஆண்டு நிறைவு சிறப்பாகக் கொண்டாடப்படுகின்ற நேரத்தில் என்னுடைய நல்வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன். 1975க்குப் பிறகு அவருடைய கட்சிப் பணி பற்றியும் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்துக்கு அவருடைய வழிகாட்டுதலைப் பற்றியும் எனக்குத் தெரியும். ஆனால் சுதந்திரப் போராட்டத்தில் அவருடைய பங்கு மற்றும் சிறை வாழ்க்கையைப் பற்றி எனக்குத் தெரியாது.

திரு.இரா.பசுமைக்குமார் எழுதிய 'நினைவுகள் அழிவதில்லை' என்ற புத்தகத்திலிருந்துதான் அவருடைய சிறை வாழ்க்கையைப் பற்றித் தெரிந்து கொண்டேன். சிறையில் ஆர்.என்.கே. எழுதிய கவிதைகளைப் படித்தேன். அவர் சிறையில் எழுதிய குறிப்பேடு இலக்கிய ரீதியில் முக்கியமான ஆவணம் என்பது என்னுடைய கருத்து.

எனக்கு ஒரு நண்பர் இருக்கிறார். அவர் எல்லா விஷயங்களைப் பற்றியும் வித்தியாசமாக சிந்திப்பவர். கம்யூனிஸ்ட் கட்சியில் மாவட்டச் செயலாளர் பதவி என்பது சாதாரண சிறைத் தண்டனை என்பார். மாநிலச் செயலாளர் பதவி கடுந்தண்டனை என்பார். ஒரு கம்யூனிஸ்டு சட்டமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர் பரோலில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார் என்று கூறுவார்,.

என்னுடைய நண்பரைப் பற்றி கோபமடையாமல் சிந்தித்தால் அவர் சொல்வது எவ்வளவு உண்மை என்று தெரியும்.

கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பதவி என்பது முள் கிரீடம் (Crown of Thorns) என்பது உண்மைதானே? எத்தனை அரசியல் - ஸ்தாபனப் பிரச்சினைகள்! எல்லாவற்றையும் சமாளிக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களுக்கும் போக வேண்டும். கட்சியின் தளங்களான கிராமங்களுக்குப் போக வேண்டும். பொதுக்கூட்டங்களில் பேச வேண்டும். இரவு பத்து மணிக்குப் பிறகு தங்கியிருக்கின்ற விடுதிக்குத் திரும்புகின்ற வழியில் உடல் நலமில்லாமல் இருக்கின்ற உள்ளூர்த் தோழர்களைப் பார்த்து நலம் விசாரிக்க வேண்டும்.

கட்சிப் பத்திரிகைக்கு கட்டுரை எழுத வேண்டும். கட்சியின் தலைமையகத்தை நிர்வாகம் செய்ய வேண்டும். தேர்தல் நிதி வசூலிக்க வேண்டும். கட்சிக்



குடும்பங்களில் நடக்கும் திருமணங்களுக்குத் தலைமை தாங்கிச் சிறப்பிக்க வேண்டும். முதல் நாள் மாலையில் வள்ளுயூரில் பொதுக்கூட்டத்தில் பேசிவிட்டு மறுநாள் காலை எட்டு மணிக்குள் சென்னையில் இருக்க வேண்டும். தோழமைக் கட்சிகளின் தலைவர்களுடன் நெருக்கமாக இருக்க வேண்டும்.

மேற்கூறிய பணிகளுக்கு இடையில் கட்சியின் மாநில மத்திய நிர்வாகக் குழு மற்றும் தேசியக் கவுன்சில் கூட்டங்களில் பங்கெடுக்க வேண்டும். (இக்கூட்டங்கள் பெரும்பாலும் டில்லியில் நடைபெறும்)

மாநிலச் செயலாளருக்குக் கார் வசதி இருந்தால் மட்டும் போதாது. அவருக்கு தனிச் செயலாளர், சுருக்கெழுத்தாளர் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் மேற்கூறிய பணிகளை நிறைவேற்ற முடியும்.

மாநிலச் செயலாளர் தன்னுடைய குடும்பத்துக்காக ஒரு நாள் ஒதுக்க முடியுமா? ஒரு மணி நேரம் கூட ஒதுக்க முடியாது?

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் நேருஜியைச் சீண்டினார். அவர் முன்னாள் ஐ.சி.எஸ். அதிகாரி. நேருஜி காட்டமாக பதலளித்தார். ''நாங்கள் இந்தியப் புரட்சியின் குழந்தைகள். கடுமையாக உழைக்குமாறு தண்டிக்கப்பட்டவர்கள்'' (We are children of the Indian Revolution. We are condermed to hard labour).

இந்தியப் புரட்சியின் குழந்தைகளான கம்யூனிஸ்டுகள் கடுமையாக உழைக்குமாறு தண்டிக்கப்பட்டவர்கள். தோழர் நல்லகண்ணு அதற்குச் சிறந்த உதாரணமாக இருக்கிறார்.

தோழர் நல்லகண்ணு 13 ஆண்டுகள் (1992 - 2005) மாநிலச் செயலாளராக இருந்தார். தமிழ்நாட்டில் அவருக்கு ஒரு இமேஜ் (பிம்பம்) ஏற்பட்டது. கடும் வெய்யிலில் காடு, கழனியில் உழைக்கின்ற விவசாயியின் பிம்பம் அது. கிராமத்தில் தரையில் உட்கார்ந்து நாட்டுப்புறக் கலைகளை ரசிக்கின்ற விவசாயியின் பிம்பம் அது. ஆனால் ஜெயகாந்தன் முதல் படித்த அய்யனார் வரை அவரைப் பார்க்க 'பாலன் இல்லத்துக்கு' வந்தார்கள். அவர்கள் அன்பளிப்பாக தந்த புத்தகங்களை மாநிலச் செயலாளர் அக்கறையுடன் படித்தார். தன்னுடைய விமர்சனத்தை அவர்களுக்கு எழுதினார். எழுத்தாளர்கள் ஆச்சிரியமடைந்தார்கள். விவசாயி என்ற பிம்பத்தில் இலக்கியவாதி என்னும் அடையாளம் சேர்ந்து கொண்டது.

தமிழ்நாட்டு அரசியல்வாதிகளுக்கு மத்தியில் ஆர்.என்.கே. வித்தியாசமான தோற்றத்துடன், மற்றவர்களிடம் இல்லாத அடக்கத்துடன் மேடைகளில் தோன்றினார். தொலைக்காட்சிகளில் கட்சியின் கொள்கையை விளக்கினார். தமிழ்நாட்டு மக்கள் அவரை அதிசயமாகப் பார்த்தார்கள். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளரா இவர்? மிகவும் எளிமையாக இருக்கிறாரே என்றார்கள். இது காந்திஜி, திரு.வி.க., ஜீவா, காமராஜர் பின்பற்றிய மரபு. இடைக்காலத்தில் நமது அரசியல்வாதி மறந்துவிட்ட எளிமையை நல்லகண்ணு நினைவுபடுத்தினார்.

உலகப் புகழ்பெற்றிருக்கும் எம்.ஐ.டி.எஸ். போன்ற ஆராய்ச்சி நிறவனங்கள் நிலச்சீர்திருத்தம், விவசாயத் தொழிலாளியின் பொருளாதார நிலையைப் பற்றி நடத்திய கருத்தரங்குகளுக்கு அழைத்தார்கள். அங்கு நடைபெற்ற விவாதங்களில் தோழர் நல்லகண்ணு காத்லீன் காவ், டோனியல் தோர்னர் ஆகிய நிபுணர்களின் கருத்துக்களை மேற்கோள் காட்டிப் பேசினார். ஆராய்ச்சியாளர்கள் அசந்து போனார்கள். ஆர்.என்.கே. அவர்களுடைய பிம்பத்தில் விவசாயப் பொருளாதார நிபுணர் என்ற அடையாளமும் சேர்ந்து கொண்டது.

சிவகங்கையில் பேராசிரியரும் கவிஞருமான மீரா உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்தார். ஆர்.என்.கே. அவர்கள் அவரை அடிக்கடி பார்த்து ஆறுதல் அளித்தார். 2002ல் சென்னையில் கலைஞர் தலைமையில் மீராவுக்கு அப்துல் ரகுமான் கவிதைப் பரிசு அளிக்கப்பட்டது. ஆர்.என்.கே. பம்பாயிலிருந்து விமானத்தில் பறந்து வந்து விழாவில் கலந்து கொண்டார். அவருடைய மனித நேயத்தை கவிஞர் மீராவின் குடும்பம் இன்றளவும் மதிக்கிறது.

தமிழ்நாட்டில் தேச விடுதலைப் போராட்டமும் சமூக விடுதலைப் போராட்டமும் தனிப் பாதைகளில் செல்கின்றன என்பது வரலாறு, கம்யூனிஸ்டுகளும் பெரியாரும் நெடுங்காலம் பிரிந்து இருந்தார்கள். அதற்குப் பல காரணங்களைச் சொல்ல முடியும். ஆனால் அதை நியாயப்படுத்த இயலாது. கம்யூனிஸ்ட் கட்சியும் திராவிடக் கழகமும் 1952 பொதுத் தேர்தலில் ஒன்று சேர்ந்தபொழுது கம்யூனிஸ்ட் கட்சி வெற்றிகளை அறுவடை செய்தது. ஆனால் தேர்தல் முடிந்ததும் பிரிந்துவிட்டோம். சென்னையில் பெரியார் இராமசாமி அவர்களுடைய சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகின்ற நல்ல வழக்கத்தை ஆர்.என்.கே. ஆரம்பித்து வைத்தார். அது தொடரட்டும், வளரட்டும்.

என்னைப் போன்ற இளைஞர்களுக்கு ஜீவா அவர்கள் தான் வழிகாட்டியாக இருந்தார். ஜீவா மறைந்த பிறகு, பாலதண்டாயுதம், அவருக்குப் பிறகு கட்சிக்கும், கலை இலக்கியத் துறைக்கும் ஆர்.என்.கே. வழிகாட்டினார். மாநிலச் செயலாளர் பொறுப்புக்கு தோழர் தா.பாண்டியன் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, ஆர்.என்.கே. அவர்கள் கலை இலக்கியப் பெருமன்றத்திற்கு விழிகாட்டியாக இருக்க வேண்டும்.

தோழர் ஆர்.என்.கே. மற்றும் திருமதி ரஞ்சிதம் நல்லகண்ணு பல்லாண்டு வாழ்க.

விதை விதைத்தவர்!



நக்கீரன் கோபால்

பழிவெறி கொண்ட ஓர் அரசுடன் நக்கீரன் தர்மயுத்தம் நடத்திக் கொண்டிருக்கிறது. தான் ஆட்சிக்கு வந்தால் என்ன செய்வேன் என மக்களுக்கு அளித்த வாக்குறுதியிலேயே நக்கீரனை கைது செய்வோம் என்று தன் பழிவெறியை பகிரங்கப்படுத்தியவர் ஜெயலலிதா. ஆட்சிக்கு வந்ததும் பழிவெறியைத் தீர்த்துக் கொள்ளத் தொடங்கினார். செய்தி சேகரிப்பதற்காக வீட்டை விட்டுப் புறப்பட்ட தம்பி சிவசுப்ரமணியனை கடத்திச் சென்று, வீரப்பன் காட்டில் கைது செய்ததாக கதை கட்டினார்கள். தம்பிகள் மகரன், சுப்பு, ஜீவா என பழிவாங்கப்பட்ட நக்கீரன் நிருபர்களின் பட்டியல் நீண்டு கொண்டிருந்த நேரத்தில் தான், ஒரு காரில் 70 லட்ச ரூபாய் பணத்தை வைத்துக் கொண்டு என்னைப் பிடிக்க வலைவீசியது காவல்துறை. தம்பி சிவசுப்பிரமணியனைப் போல் என்னையும் கடத்திச் சென்று, 70 லட்ச ரூபாய் பணத்துடன் வீரப்பன் காட்டில் நான் 'பிடிபட்டதாக' செய்தி வெளியிடத்தான் காவல்துறை அத்தனை பெரும்பாடு பட்டுக் கொண்டிருந்தது.

2002-ம் ஆண்டு டிசம்பர் 27 முதல் போலீசார் இப்படித்தான் அலைந்து கொண்டிருந்தனர். என்னைப் பிடிப்பது மட்டுமல்ல அவர்களின் நோக்கம். அதன் மூலம் கலைஞர், ரஜினி, கர்நாடக முன்னாள் முதல்வர் கிருஷ்ணா எல்லோரையும் பொடாச் சிறையில் தள்ள வேண்டும் என்ற பழியுணர்ச்சி மேலோங்கியிருந்தது. உயர்நீதிமன்றம் சென்ற நக்கீரன், ''எங்கள் மீது என்ன வழக்கு?'' எனக் கேட்டது. 'வீராதிவீரரான' அன்றைய டி.ஐ.ஜி. முகமது அலி, 'தேடப்படும் குற்றவாளி' என நம்மீது குற்றம் சாட்டினார். ஆனால், அவரே நாடறிந்த குற்றவாளி என்பதை நாட்டுக்கு உணர்த்தியது நக்கீரன். நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைத்த முத்திரைத்தாள் மோசடியில் முக்கிய நபராக முகமது அலி பங்கு வகித்திருப்பதை முதலில் வெளிக் கொண்டு வந்தது நக்கீரன்தான். பின்னர் அது பூதாகரமாக வெடித்தது. முக்கிய குற்றவாளியான முகமது அலி சிறை சென்றதும், இடைக்கால பதவி நீக்கம் செய்யப்பட்டு, வழக்கை எதிர்கொண்டிருப்பதும் நாடறியும்.



எனினும், இந்த உண்மைகள் வெளிவருவதற்கு முன் நக்கீரன் மீதான பொய் வழக்குகளில் முழுநேர கவனம் செலுத்திய ஜெ., அரசின் காவல்துறை, 2003 ஏப்ரல் 11-ம் தேதி இரவில் கடத்தல் திட்டத்தை நிறைவேற்றி 'கைது' எனக் காட்டியது. அந்த இரவிலும் தமிழகத்தின் அனைத்து முன்னணி பத்திரிகையைச் சேர்ந்தவர்களும் சென்னை சி.பி.சி.ஐ.டி. தலைமை அலுவலகத்தின் முன் எழுச்சியோடு திரண்டு, பத்திரிகை சுதந்திரத்திற்காக விடியவிடிய குரல் கொடுத்தனர். ஓர் இரவு முழுவதும் 200 பத்திரிகையாளர்கள் திரண்டு போராட்டம் நடத்தியதென்பது இந்திய வரலாற்றிலேயே அதுவரை நடந்ததில்லை. ஆனாலும் பெண் ஹிட்லர் அரசு தனது பேயாட்டத்தின் உச்சகட்டமாக பொடாவை நம் மீது ஏவியது.

இந்த அநீதியை தமிழகத்தின் அனைத்துப் பிரிவினரும் கண்டித்தனர். நக்கீரன் குடும்பத்தினர்,, அலுவலக வாசலில் ஒரு நாள் உண்ணாவிரதம் இருந்தபோது எதிர்க் கட்சி பிரமுகர்கள் பலரும் வந்து போராட்ட உரை நிகழ்த்தினர். அந்த உண்ணாவிரதத்தை நிறைவு செய்து வைத்த அய்யா நல்லகண்ணு அவர்கள், ''நக்கீரன் கோபாலை விடுதலை செய்வதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம்'' என உறுதியளித்தார். அந்த வாக்குறுதியை நிறைவேற்ற என் விடுதலை வரை பாடுபட்டார் என்பதுதான் அந்த மாமனிதருக்கேஉரிய சிறப்பு.

உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடர்ந்து அடுத்தக் கட்டமாக என்னப் போராட்டம் நடத்துவது என நக்கீரன் இணையாசிரியர் தம்பி காமராஜ், சன் டி.வி.யின் செய்தி பொறுப்பில் அன்று இருந்த ஏ.எஸ்.பன்னீர்செல்வம், மூத்த பத்திரிகையாளர்கள் அய்யா சின்னக்குத்தூசி, அண்ணன் இரா.ஜவஹர் ஆகியோர் ஆலோசித்தபோது, அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஒரே மேடையில் கண்டனக் குரல் எழுப்பும் விதத்தில் ஒரு கூட்டத்தை நடத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. இன்றைக்கு உள்ளதுபோல் அன்றைக்கு கூட்டணி இல்லை. அதனால், எந்தத் தலைவரை முதலில் சந்திப்பது என்ற கேள்வி எழுந்த நொடியில் கிடைத்த விடை, 'தோழர் ஆர்.என்.கே.வை முதலில் பார்ப்போம்' என்பதுதான்.

பாலன் இல்லத்தில் இருந்த அவரை உடனே தொடர்பு கொள்கிறார்கள். நேரில் வர அன்புடன் அழைக்கிறார். பாலன் இல்லத்தில் தம்பி காமராஜ், பன்னீர், இரா.ஜவஹர் ஆகியோர் தோழர் ஆர்.என்.கே.வை சந்திக்கிறார்கள். 'நக்கீரன்' மீது போடப்பட்டுள்ள பொடாவை நாட்டில் உள்ள எல்லோரும் கடுமையாக கண்டிக்கணும். இந்த நடவடிக்கையை எதிர்க்காமல் இருக்க முடியாது. நான் என்ன செய்யணும்னு சொல்லுங்க'' என்று தானே முன் வந்து கேட்கிறார், உணர்வும் செயல்பாடும் ஒரே மாதிரியாக அமைந்துள்ள அதிசயத் தலைவர்களில் ஒருவரான ஆர்.என்.கே. அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துக் கூட்டம் போடவிருப்பதை அவரிடம் தெரிவித்து, ''அ.தி.மு.க., பா.ஜ.க. தவிர மற்ற கட்சிகள் அனைத்தையும் கூப்பிடலாம். உங்களுடைய முழு ஒத்துழைப்பும் தேவை'' என்று சொல்கிறார்கள்.

அதற்கு தோழர் ஆர்.என்.கே. ''இது அரசியல் கூட்டமல்ல. பொது விஷயத்துக்காக ஒரே மேடையில் ஏறுகிறோம். அனைத்துக் கட்சிகளையும் கூப்பிடணும், அ.தி.மு.க. ஆளுங்கட்சி. அவர்கள்தான் பொடாவை பயன்படுத்துகிறார்கள். அதனால் அவர்கள் இதில் கலந்து கொள்ள முடியாது. பா.ஜ.க. இந்த மாநிலத்தில் எதிர்க் கட்சிதானே! அவர்களையும் கூப்பிடுங்கள்'' என்றிருக்கிறார். இடதுசாரிகளின் பரம்பரை எதிரி பா.ஜ.க.தான் என்ற போதும், அதனையும் தாண்டி ஒரு பொது விஷயத்திற்கான போராட்டத்தில் அவர்களையும் பங்கு கொள்ளச் செய்ய வேண்டும் என்கிற தன்மை தோழர் ஆர்.என்.கே. எனப்படும் அய்யா நல்லகண்ணுவுக்கு மட்டுமே உரியது. அவரால் மட்டுமே இப்படிச் சொல்ல முடியும்.

அனைத்துக் கட்சிக் கூட்டத்தை குறுகிய காலத்தில் நடத்த வேண்டியிருந்தது. ஏனெனில், சிறையில் இருக்கும் என்னை விடுதலை செய்ய வேண்டும் என்பதோடும், ஜெ.வின் அராஜகத்தை மக்களிடத்தில் உடனே கொண்டு செல்ல வேண்டும் என்பதும் இந்த வேகத்திற்கான காரணம். இடதுசாரிக் கட்சியினரைப் பொறுத்தவரை, எதையும் அவர்கள் தங்கள் கட்சி மட்டத்தில் ஆலோசித்தே முடிவு செய்கிற ஜனநாயகத் தன்மை வாய்ந்தவர்கள். அவர்கள் ஆலோசித்து முடிவெடுப்பதில் தாமதம் ஏற்பட்டால், கூட்டத்தை குறிப்பட்ட நாளில் நடத்த முடியாமல் போய்விடும் என்பதை தோழர் ஆர்.என்.கே.விடம் அண்ணன் ஜவஹர் தெரிவிக்க, ''இடதுசாரி கட்சிகளை அழைத்து வருவது என் பொறுப்பு'' என அதனை தன் தோளில் சுமந்து கொண்ட தோழர் ஆர்.என்.கே. ''நீங்கள் எல்லாத் தலைவர்களையும் கூப்பிடுங்கள்'' எனச் சொல்லியிருக்கிறார்.

''எல்லாத் தலைவர்களையும் அழைக்கிறோம்'' என மூவரும் புறப்பட்டபோது, ''பொடாவிலிருந்து நக்கீரன் கோபாலை விடுவிக்க அடுத்த நடவடிக்கை என்ன?'' என்று தோழர் ஆர்.என்.கே. கேட்க, மூவருமே யோசித்திருக்கிறார்கள். அனைத்துக் கட்சிக் கூட்டம் என்கிற கட்டத்திலேயே மூவரும் நின்று கொண்டிருக்க, அதில் கலந்து கொள்ள அழைக்கப்பட்ட ஆர்.என்.கே.வோ அடுத்த கட்டம் குறித்து கேள்வி எழுப்பியதுடன், அதற்கான விடையையும் அவரே சொல்லியிருக்கிறார். ''சென்னை யோடு இந்த கண்டனக் கூட்டம் நின்று விடக் கூடாது. மதுரை, கோவை, நெல்லை என்று இந்த கண்டனக் கூட்டங்களை நடத்தணும். மதுரையில் தா.பாண்டியன், கோவையில் சுப்பராயன் இவங்களெல்லாம் எங்க கட்சி சார்பாக கலந்துக்குவாங்க. இந்த கண்டனக் கூட்டங் களையெல்லாம் நடத்தியபிறகு, தமிழ்நாடு தழுவிய மிகப் பெரிய இயக்கமாக இதை நாம் கொண்டு போகணும்'' என அடுத்தடுத்த கட்டங்களை ஆர்.என்.கே. விளக்கிக் கொண்டே போக, மூவரும் அவரை ஆச்சரியமாக பார்த்தபடி நின்றிருக்கிறார்கள்.

பின்னர், அனைத்து தலைவர்களையும் சந்தித்து கண்டனக் கூட்டத்திற்கு அழைக்க அவர்களும் சம்மதம் தெரிவித்தனர். இடதுசாரி அமைப்புகளில் ஒன்று தங்கள் செயற்குழுவில் முடிவு செய்து தெரிவிப்பதாக கூற, இந்தத் தகவலை தோழர் ஆர்.என்.கே.விடம் மூவரும் சொல்கிறார்கள். ''நானே போனில் அவர்களிடம் பேசிவிடுகிறேன்'' என்று அவர்களிடம் தெரிவித்த ஆர்.என்.கே. சிறிது நேரம் கழித்து லைனில் வருகிறார். ''அவங்ககிட்ட நான் பேசிட்டேன். ஒத்துக்கிட்டாங்க. அவங்க பெயரையும் போட்டுக்குங்க'' என்கிறார். தோழரின் தீவிர ஒத்துழைப்புடன் 2003-ம் ஆண்டு மே-13ம் தேதி சென்னை காமராஜர் அரங்கில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் பங்கேற்ற கண்டனக் கூட்டம் அரங்கம் நிறைந்துவழிந்த பொதுமக்கள் முன் நடைபெற்றது.

தி.மு.க. தலைவர் கலைஞர், பா.ம.க. நிறுவனர் ராமதாஸ், காங்கிரஸ் சார்பில் அப்போதைய செயல் தலைவர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன், ம.தி.மு.க. சார்பில் அவைத் தலைவர் எல்.கணேசன், சிபிஐ சார்பில் தோழர் ஆர்.என்.கே., சிபிஎம் சார்பில் தோழர் என்.வரதராஜன், புதிய தமிழகம் டாக்டர் கிருஷ்ணசாமி, பத்திரிகையாளர்கள் 'இந்து' என்.ராம், வாசந்தி ஆகியோர் பங்கேற்றனர். அதில் பேசிய தோழர் ஆர்.என்.கே.வின் ஒவ்வொரு சொல்லுக்கும் அரங்கம் கைதட்டியது. கலைஞரே, 'நல்லகண்ணு நல்லகண்ணுதான்' என்று ரசித்து கூறியிருக்கிறார்.

ஆபத்தில் துணை நிற்கும் உற்ற நண்பனாக அவரது குரல் அந்த மேடையில் ஒலித்தது. 'ஜனநாயகத்தில் 4 தூண்கள் இருக்கிறது. 4வது தூண் பத்திரிகை. ஆனால், இந்த 4 தூண்களுமே தமிழகத்தில் அச்சுறுத்தப்படுகின்றன. ஏதேனும் ஒரு வகையில் சேதப்படுகின்றன. ராணி மேரி கல்லூரி மாணவிக்கு 9 வருஷம் கழித்து 9 லட்ச ரூபாய் தரப்படுகிறது. அதென்ன 'ஒன்பது?' தெரியவில்லை. ஆனால் மக்களை சந்திக்கிறப்பல்லாம் இதைப் பற்றியே கேட்கிறார்கள். 3 மாசத்தில் தீர்ப்பு வந்துவிடும் என்றார்கள். ஆனா, 6 மாசமாயிடிச்சு. 9 மாசத்தில்தான் வரும்போல.

லைசன்ஸ் இல்லாத துப்பாக்கி வைத்திருந்ததாக நக்கீரன் கோபாலை பொடா சட்டத்தில் கைது பண்ணி யிருக்காங்க. நக்கீரன் நிருபர்களையெல்லாம் தேடுகிறார்கள் என்ற நிலையிருக்கும்போது எந்த கிறுக்கனாவது லைசன்ஸ் இல்லாத துப்பாக்கி வைத்திருப்பானா? யாரோ ஒரு தினகர் என்பவர் எழுதிய புத்தகத்தை வைத்து வழக்கு போடுகிறார்கள். 'எம்.ஜி.ஆர். ஒரு புதிர்' என்று மோகன்தாஸ் புத்தகம் எழுதினார். வைகுந்த் அவர்கள் 'நான் சமாளித்த சவால்கள்', லட்சுமி நாராயணன் 'கடமைகளும் காயங்களும்' என்று புத்தகங்கள் எழுதினார்கள். இந்தப் புத்தகங்களைப் படித்து வழக்கு போடுவதென்றால் யார் யாரோ உள்ளே போக வேண்டியதிருக்கும். இதை நாம் தடுக்காவிட்டால் இந்த 'பழி'கள் தொடர்கதையாகிவிடும். நாடே குட்டிச் சுவராகிவிடும். யாரும் அரசியல்கூட பேசமுடியாது.

இன்னைக்கு கோபாலுக்கு வந்தது, நாளைக்கு உங்களுக்கும் வரலாம். ஏன், எல்லோருக்கும்கூட வரக்கூடும். தலைவர்கள் திடீர்னு கையை உயர்த்துவதும், திடீர்னு இறக்குவதாகவும் இல்லாமல் தொடர்ந்து கை உயர்த்த வேண்டும். பத்திரிக்கை சுதந்திரத்தை பாதுகாக்க நடக்கும் இந்தக் கூட்டம் தமிழக நகரங்கள் தோறும் நடத்தப்பட வேண்டும். இதற்கான அனைத்து நடவடிக்கை களிலும் நாங்க துணை நிற்போம்'' என்று பேசினார் ஆர்.என்.கே.

அந்த கண்டனக் கூட்டம் பொடாவுக்கு எதிரானதாக மட்டுமல்லாமல், இந்த ஆட்சிக்கு எதிராக தமிழகத் தலைவர்கள் அனைவரும் ஒரே மேடையில் ஏறிய முதல் நிகழ்வாக அமைந்தது. அதன் தொடர்ச்சியாகத் தான் 2004 நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க., காங்கிரஸ், பா.ம.க., ம.தி.மு.க., சி.பி.ஐ., சி.பி.எம். உள்ளிட்ட ஏழு கட்சிக் கூட்டணி அமைந்து நூற்றுக்கு நூறு வெற்றி பெற்றது. இதற்கு மூலவிதையாக இருந்தவர் தோழர் ஆர்.என்.கே. என்னுடைய விடுதலைக்காக நடந்த கண்டனக் கூட்டத்தில்தான் அந்த விதை விதைக்கப்பட்டது.

பொடா சிறையில் தள்ளப்பட்ட என்னை எப்படியும் தீர்த்துக்கட்ட வேண்டும் என்ற திட்டத்தோடு அப்பப்பா... ஜெயலலிதா அரசும் காவல்துறையும் எடுத்த முயற்சிகள் எத்தனை. காட்டுக்குக் கூட்டிச் சென்று சுட்டுத்தள்ள முயற்சி, போலீஸ் லாக்கப்பில் ஜட்டியுடன் சித்ரவதை, சென்னை சிறையில் விஷம் வைத்துக் கொல்ல முயற்சி, திருச்சி சிறையில் பைத்தியங்களுடன் அடைப்பு, அதனைக் கோர்ட்டில் சொன்னதால் இருட்டறையில் அடைப்பு, சேலம் சிறையில் வெல்டிங் குமார் என்ற கொலைகாரனுடன் அடைத்து வைத்தல், கோவையில் வ.உ.சி.யை வைத்திருந்த கொடுமையான சிறை இப்படி பல அலைக்கழிப்புகளுக்கு நடுவிலும் இடைவெளியிலும் புத்தகங்களை படிப்பது எனது வழக்கமாக இருந்தது. அப்படி ஒரு இடைவெளியில்தான், நக்கீரன் வெளியீடான அண்ணன் இரா.ஜவஹர் எழுதிய 'கம்யூனிசம் - நேற்று - இன்று - நாளை' புத்தகத்தை மீண்டும் ஒரு முறை படித்தேன்.

போராட்டக் களம் என்றால் தோழர் ஆர்.என்.கே. எப்போதுமே தயங்கியதில்லை என்பதற்கு எத்தனையோ சம்பவங்கள் உண்டு. அதில் ஒன்றை, அந்த நூல் உயிரோட்டமாக விவரித்தது.

மதுரை மத்தியச் சிறை.

ஆயுள் தண்டனை அடைந்துள்ள கம்யூனிஸ்ட் கைதி ஒருவர், 27 வயது இளம் வாலிபர். அவரது சட்டையின் நெஞ்சுப் பகுதியில் ஒரு பச்சை குத்தப்பட்டுள்ளது. அதில் அவரது என் கைதி நம்பர் - குறிப்பிடப்பட்டுள்ளது. கைதி எண்: 9658.

ஆயுள் தண்டனை பெற்றதால் அவர் அஞ்சி அஞ்சி அழுகிறாரோ? அச்சமா? அதன் அர்த்தமே தெரியாது அவருக்கு. அமைதியாக உட்கார்ந்து கவிதை அல்லவா எழுதிக் கொண்டு இருக்கிறார். இதோ அந்தக் கவிதை.

ஆயுள் தண்டனையும் அதற்கு மேல் தண்டனையும்

பேய்ச்சட்டம் அளித்திட்ட பெரும்பரிசு எங்களுக்கு!

ஆண்டுபலவாக அடக்கியே வைத்தாலும்

மாட்டிச் சிறைக்குள்ளே மடக்கிப் போட்டாலும்

மக்கள் சக்தியின் மேல் மாளாத நம்பிக்கை

எக்காலும் கொண்டுள்ளோம். எதற்கும் அஞ்சவில்லை.

இப்படி அப்போது - 1952ம் ஆண்டில் - கவிதை எழுதிய ஆயுள்தண்டனைக் கைதி எண்:9658 யார் தெரியுமா?

அவர்தான் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் இன்றைய தமிழகச் செயலாளர் ஆர்.நல்லகண்ணு. கட்சி தடை செய்யப்பட்டதும் 1948, 49 ஆகிய இரண்டு ஆண்டுகள் அவர் தலைமறைவாகச் செயல்பட்டு வந்தார்.

தலைமறைவு வாழ்க்கை என்பது எங்கோ ஆளில்லாத தீவிலோ அல்லது வசதியான ஒரு வீட்டிலோ சும்மா முடங்கிக் கிடக்கும் வாழ்க்கை அல்ல.

கிராமம் கிராமமாக நகரம் நகரமாகச் சென்று உழைக்கும் மக்களைத் திரட்ட வேண்டும். போராட்டத்துக்கு ரகசியமாகத் தலைமை தாங்க வேண்டும். தீர்வுக்கு வழிகாட்ட வேண்டும். ஆனால் போலீசின் கண்களில், எதிரிகளின் கண்களில் பட்டுவிடக் கூடாது. இன்று ஒரு மறைவிடம்; நாளை வேறு ஒரு மறைவிடம். ஒருவேளை உணவு கிடைக்கும்; மறுவேளை கிடைக்காது. ஒருவேளை வாகனத்தில் பயணம், மறுவேளை 20 மைல் என்றாலும் காட்டுப் பகுதியில் நடந்தே பயணம். இதற்கிடையில் கட்சித் தலைமையுடன் ரகசியமாக இடைவிடாதத் தொடர்பு கொண்டு விவரங்களைத் தெரிவிக்க வேண்டும். வழிகாட்டுதலைப் பெற்றுச் செயல்படுத்த வேண்டும். போலீசாரிடமோ, மற்ற எதிரிகளிடமோ மாட்டிக் கொண்டால், தேவையானால் அவர்களைத் தாக்கிவிட்டுத் தப்பிக்க வேண்டும். எனவே கைவசம் வெடிகுண்டு உட்பட சாத்தியமான ஆயுதங்களை எப்போதும் வைத்திருக்க வேண்டும்.

இப்படி இரண்டாண்டுக் காலம் தப்பித்துச் செயல்பட்டு வந்த நல்லகண்ணு 1949 டிசம்பர் 20 அன்று, வெடிகுண்டுகளுடன் அயர்ந்து உறங்கும்போது பிடிபட்டார்.

திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி தாலுகா புலியூர்குறிச்சி என்ற ஊரில் ஒரு தலித் தோழரின் வீட்டில் தூங்கிக் கொண்டு இருந்தபோது தான், போலீசார் அவரைச் சுற்றி வளைத்துப் பிடித்தார்கள்.

உடனே அவரை அந்த ஊரின் பண்ணையாரின் வீட்டுக்குக் கொண்டு சென்றார்கள். பண்ணையாரின் கண்முன்னே அவரை அடித்து உதைத்து விசாரணை. பதில்? ஒரே பதில்தான்: 'தெரியாது'.

உடனே டோனாவூர் விலக்கு என்னும் முச்சந்தியில் நல்லகண்ணுவை உட்கார வைத்தார்கள். இன்ஸ்பெக்டர் கிருஷ்ணமூர்த்தி, தனது கனத்த பூட்ஸ் கால்களால் நல்லகண்ணுவின் கால்களின் மேல் ஏறி மிதித்துக் கொண்டு மீண்டும் விசாரித்தார். பதில்: 'தெரியாது'

இன்ஸ்பெக்டர் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டார். புகைப்பதற்காக அல்ல. நல்லகண்ணுவின் பெரிய மீசையை சிகரெட் நெருப்பால் சுட்டுப் பொசுக்கினார். மீசை முழுவதும் கருகிய பிறகும் மீண்டும் மீண்டும் சிகரெட்டைப் பற்ற வைத்து கருகிய இடத்தில் நெருப்பை வைத்துத் தேய்த்துத் தேய்த்து சுட்டுக் கொண்டே இருந்தார்.

வேதனை தாளாமல் துடித்தார் நல்லகண்ணு. உடனே மீண்டும் கேள்விகள். பதில்? அதே பதில்தான் 'தெரியாது'.

பிறகு களக்காடு டூரிஸ்ட் பங்களாவில் வைத்துச் சித்ரவதை. பின்னர், நாங்குநேரி டூரிஸ்ட் பங்களாவில் வைத்துச் சித்ரவதை.

ஆனால் அந்த உருக்கு மனிதன் நல்லகண்ணு அசையவே இல்லை. மலைபோல் உறுதியாக இருந்தார். அவரிடமிருந்து ஒரு தகவலைக் கூடப் போலீசாரால் பெற முடியவில்லை. பிறகு சப்-ஜெயில்களில் பல மாதங்கள்.

இதற்கிடையில் பிரபலமான 'நெல்லை சதிவழக்கு' தொடரப்பட்டது. நல்லகண்ணு உள்ளிட்ட 109 பேர் மீது வழக்கு. இறுதியில் 16 பேருக்குத் தண்டனை.

இதில் 9 பேருக்கு ஆயுள் தண்டனை.

ப.மாணிக்கம், ஆர்.நல்லகண்ணு, ஐ.மாயாண்டி பாரதி, பொன்னு ஆர்.கிருஷ்ணன், கே.ப.எஸ்.மணி, அழகுமுத்து, அ.வேலாயுதம், ஆர்.பழனிச்சாமி ஆகிய 9 தோழர்களுக்கு ஆயுள் தண்டனை.

மற்றவர்களுக்கு ஓராண்டு முதல் 5 ஆண்டு வரை கடுங்காவல் தண்டனை.

நல்லகண்ணுவும் மற்ற தோழர்களும் மதுரைச் சிறையில் அடைக்கப்பட்டார்கள்.பாலு தூக்கிலிடப்பட்ட சம்பவம் நடந்தபோது இவர்கள் எல்லாம் உடன் இருந்து முழக்கம் எழுப்பினார்கள். சிறைக்குள்ளேயே கறுப்புக் கொடி ஏந்தி ஊர்வலம் நடத்திசூளுரை செய்தார்கள்.

ஏழு ஆண்டுச் சிறைவாசத்துக்குப் பிறகு 1956 டிசம்பர்-13 அன்று நல்லகண்ணு விடுதலையானார்.

ஆர்.என்.கே. போன்ற கம்யூனிஸ்ட் தோழர்கள் ஆட்சியாளர்களின் சிறைக் கொடுமைகளுக்கு அஞ்சமாட்டார்கள் என்பதை அந்த இயக்கத்தின் வரலாற்றை படிக்கும்போது தெளிவாக அறிய முடியும்.

தியாகம் - எளிமை - உறுதி - உண்மை இவற்றை உயிர்மூச்சாகக் கொண்ட மனிதநேயரை இன்றைய அரசியலிலும் பொதுவாழ்விலும் காண்பது அரிது. ஆடம்பர அம்மணிகள் - காவலர்களை ஏவலர்களாக வைத்துக் கொண்டு மகாராணிகளைப் போல் அதிகாரம் செலுத்தும் நாட்டில், ஏழைகளின் தலைவராக வாராது வந்த மாமணிபோல் நமக்கு கிடைத்துள்ள அய்யா நல்லகண்ணு அவர்களுக்கு நக்கீரன் தனது நல்வாழ்த்துக்களை வணக்கத்துடன் தெரிவித்துக் கொண்டு, அவரது நூற்றாண்டு விழாவிலும் அவரை நேரில் வாழ்த்தும் என்ற நம் பிக்கையை வெளிப்படுத்துகிறது.

❖



ஈடில்லை! இவருக்கு ஈடில்லை!

மடிப்புக் குலையாத
சட்டையும் வேட்டியும்
மல்லிகை மலர் போன்று அணிவர்
நொடிக்கு நொடி நூறு
பொய்கூறும் வித்தையை
நுட்பமாய்த் தினம்செய்து பிழைப்பர்
இதுபோன்ற தலைவர்கள்
ஏராளம்! ஏராளம்!
இருக்கின்றார் இந்நாட் டிலே
எளிமைக்கும் எளிமையாய்
எளியோரின் தோழராய்
இருப்பவர் நல்லகண்ணு தான்!

★

அடியாட்கள் புடைசூழ
ஆயிரம் கார்வர
அன்றாடம் வீதியில் அலைவர்
அடிமட்டத் தொண்டனின்
உழைப்பிலே தலைவர்கள்
அரண்மனை வீட்டிலே வசிப்பர்

வீடில்லை; காரில்லை
வெகுமதிப் பொருளில்லை
விலைபோகா பொதுவாழ்க் கையில்
ஈடில்லை இவருக்கு
ஈடில்லை எனும்படி
வாழ்பவர் நல்லகண்ணு தான்!

★

அயராத உழைப்பாலும்
அறிவார்ந்த செயலாலும்
அண்ணாந்து பார்க்கச் செய்பவர்
அமைதியே உருவான
அடக்கமே நிலையான
அணிகலன் தனைகொண் டவர்
பலநூறு தலைவர்கள்
மத்தியில் இவர் நின்றால்
பாமரர் போன்றி ருப்பார்
பலநூறு ஆண்டுகள்
கடந்தாலும் இவர்பெயர்
பதித்திடும் செயல்புரி ந்தார்!

கே. ஜீவபாரதி

தோழர் ஆர்.என்.கே !

அண்மை நாட்கள் வரை, தமிழ் மாநிலக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளராகப் பணியாற்றி பின்னர் தற்போது அகிலஇந்திய அளவிற்கு உயர்ந்துள்ள தோழர் ஆர்.என்.கே. என அனைவராலும் அன்புடன் அழைக்கப் பெறும் திரு.ஆர்.நல்லகண்ணு அவர்களது 80வது ஆண்டு நிறைவு விழா செய்தி அறிந்து மட்டிலா மகிழ்ச்சி அடைகின்றேன்.

அதனையொட்டி அந்த நல்லவரைப்பற்றிய நினைவு களைப்பதிவு செய்யவும், பகிர்ந்து கொள்ளவுமான இந்த வாய்ப்பினைப் பெற்றது ஒரு பேறு எனக் கருதுகின்றேன். நல்லவரைக் காண்பதும் நன்றே என்பது தமிழ் பழ மொழி. அவரோடு பழகுவதும் அதனினும்சிறந்த ஒன்று தானே. அந்த நன்றியினைப் பெற்ற பெரும் பேறு பெற்ற வன்என்பதில் எனக்கு பெருமை.

தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளில் தலைவர்களைக் குறிப்பிடுவது அல்லது அழைப்பதில் ஒரு மரபு உண்டு. பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் தந்தை என்றும் தந்தைப் பெரியார் என்றும் பெருமையோடு அழைக்கப் பட்டார். அதன் பிறகு அண்ணா அவர்களை முதலில் தளபதி என்றும், பின்னர் அறிஞர் என்றும், அதன் பிறகு பேரறிஞர் என்றும் அழைத்தனர். தி.மு.க.வின் தொடக்க காலத்தில் இரா.நெடுஞ்செழியனை நாவலர் நெடுஞ்செழியன் என்றும், ஈ.வெ.கி.சம்பத் அவர்களை சொல்லின் செல்வர் சம்பத் என்றும் அழைத்ததுண்டு. எம்.ஜி.ஆர். அவர்களை புரட்சித் தலைவர் என்று தான் அழைத்தார்கள். இன்றும், கலைஞர் கருணாநிதி அவர்களைக் கலைஞர் என்று மட்டுமே குறிப் பிடுவது உண்டு. காங்கிரசும் அந்தத் தாக்கத்திற்கு ஆளாகி தலைவர் காமராஜ் அவர்களைப்

தஞ்சை

அ.இராமமூர்த்தி

பெருந்தலைவர் என்றும், சோஷலிசக் காவலர் என்றும், வேறுபலசிறப்புப் பெயர்களாலும் அழைப்பதுண்டு. அந்தப் பழக்கம் காங்கிரசில் பின்னரும் நீடித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் கம்யூனிஸ்ட் கட்சியில் மட்டும் எவ்வளவு பெரிய தலைவரானாலும், அவருக்கு அடை மொழி கொடுத்து அழைப்பதில்லை. மரியாதைக்குரிய தலைவராக விளங்கிய இ.எம்.எஸ்.நம்பூதிரிபாடு அவர்களை அவரது கட்சிக்காரர்கள் காம்ரேட் இ.எம்.எஸ். என்று அவரோடு பேசும்போது நான் உடனிருந்து மகிழ்ந்திருக்கிறேன்.

அதே போன்று, தோழர் எம்.கல்யாணசுந்தரத்தை எம்.கே. என்றும், தோழர் ப.மாணிக்கத்தை பி.எம். என்றும் அழைத்தார்கள். அந்த வரிசையில் தோழர் நல்லகண்ணு அவர்களைஆர்.என்.கே. என்று கீழ்மட்டத்தில் கிராமத்தில் வி.தொ.ச.வில் உள்ள தோழர்கள் செல்லமாக அழைப்பதையும் நான் கேட்டிருக்கிறேன். ஆங்கில எழுத்துக்களால் குறிப்பிடுவது, அகில இந்திய சௌகரியத்திற்காக என்பது நியாயமானதே! ஆனால் தோழர் தா.பாண்டியன் அவர்களை எல்லோருமே எப்போதுமே தா.பா. என்று அழைப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்களை முதன் முறையாக 1967ல் எட்டயபுரம் பாரதி விழாவில் சந்திக்கும் பேறு பெற்றேன். அதாவது 41 ஆண்டுகளுக்கு முன்னர். அதற்கு இரண்டு ஆண்டுகட்கு முன்னால் தான் அமரர் ஜீவா கலை இலக்கியப் பெருமன்றத்தை உருவாக்கியிருந்தார். தோழர் அழகிரிசாமி இளைஞராக இருந்தபோது உருவாக்கிய பாரதி முற்போக்கு வாலிபர் சங்கத்தோடு இணைந்து, கலை இலக்கியப் பெருமன்றம்,பாரதி பிறந்த இல்லத்திலேயே பந்தல் போட்டு ஆண்டுதோறும் செப்டம்பர் 11, 12, 13 ஆகிய மூன்று நாட்களும் மெய்யான கலை இலக்கிய மாநாடே நடத்தப் பெறும்.அப்போது, எட்டயபுரம் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தது. தோழர் ஆர்.என்.கே. அந்த மாவட்டக் கட்சிப் பொறுப்பின் பல பிரிவுகளிலும், பல ஆண்டுகள் இருந்தவர் என்ற முறையில் பாரதி விழாவினைச் சிறப்பாக நடத்தி முடிப்பதில் மிகுந்த அக்கறை காட்டுவார்.

நமது தலைமுறையின் தலைசிறந்த மார்க்சிய இலக்கியப் பேராசான் தொ.மு.சி.ரகுநாதன் அவர்கள் தான் அறிமுகம் செய்து வைத்தார். நான் ஆர்.என்.கே. மாநாட்டுப் பொறுப்பாளர் என்று மட்டுமே எண்ணியிருந்தேன். ஆனால், அவர் முதல் நாள் மாலை நிகழ்ச்சியிலேயே புரட்சிக் கவிஞர் பாரதிதாசனைப் புகழ்ந்து பாராட்டிப் பேசிய பேச்சு என்னைப் பெரும் வியப்பிற்குள்ளாக்கிற்று. ஆகா என்றெழுந்ததுபார் 'யுகப்புரட்சி' என சோவியத் யூனியனைப் புகழ்ந்து பாடிய பாரதியைத்தான் தோழர்கள் புகழ்வார்கள். திராவிட இயக்கத்தைச் சேர்ந்த பாரதிதாசனை இவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை என்ற ஒரு குற்றச்சாட்டு உண்டு என்பதனை நான் அறிவேன். ஆனால் தோழர் நல்லகண்ணு அவர்கள் பாரதிதாசனின் 'புரட்சிக்கவி' என்ற நாடகத் தழுவலில், அந்தக் கவிஞன் பாடியுள்ள கவிதை வரிகளை முழுமையாக ஒப்பித்துவிட்டார். எனக்கு இப்போது அந்த முழுவரிகள் நினைவில் இல்லை. ஆனால் கல் பிளந்து, மலை பிளந்து... உழைக்கும் அந்தக் கைகள் எவரின் கைகள்? தோள்கள் எவரின் தோள்கள் என்ற தொடர்கள் மட்டும் நினைவில் உள்ளன. அடக்கமே உருவான ஆர்.என்.கே. அவர்களுக்கு ஆத்திர உணர்ச்சியையும் வெளிப்படுத்த முடியும் என்பதை அன்று கண்டேன். காரணம், அந்தவரிகள் தொழிலாளர் சம்பந்தப்பட்டதாகும்! அதன் பிறகு தொடர்ந்து பல ஆண்டுகள் எட்டயபுரம் பாரதிவிழா சென்று வந்த நான் அங்கே ஆர்.என்.கே. அவர்களோடு அளவளாவத் தவறியதில்லை.

அவர் தமிழ்மாநிலச் செயலாளராகப் பொறுப்பேற்ற சில வாரங்களில் எனது இரண்டு கட்டுரைகள். 'சோஷலிச சுவாமி விவேகானந்தர்', 'கடைவிரித்தேன் கொள்வாரிலை' (வள்ளலார்) என்பவை தினமணி நாளிதழ் மையப் பக்கத்தில் முழு அளவில் வந்தன. அவற்றைப் படித்தவுடன், தஞ்சைக்கு என்னோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவர் கூறிய பாராட்டுக்கள் மறக்க முடியாதவை. அதன் பிறகும் சில சந்திப்புகளின் போது வள்ளலாரையும் மற்றும் விவேகானந்தரையும் பற்றிநான் முழு நூல்களாக எழுத வேண்டும் என்று ஒரு அன்பான வேண்டுகோளை விடுப்பார். அவர் கூறியதை மனத்தில் கொண்டே, விவேகானந்தரை முடிக்கும் தருவாயில் இருக்கின்றேன்.

பொதுவாழ்வில் இருப்போர்க்குத் தேவையான நேர்மை, எளிமை, தூய்மை ஆகிய பண்புகளுக்கு அவர் உறைவிடம். அவைஎல்லாம் இன்றைய நடைமுறை அரசியலில் சாத்தியம்தானா என்று இன்றைய இளைய தலைமுறை கேட்பது என் காதுகளில் விழுகின்றது. முயற்சியுங்கள் முடியும் என்று தோழர் ஆர்.என்.கே. கூறுவதும் என் காதுகளில் விழுகின்றது. அவரது நம்பிக்கை வீண் போகாது.

ஓர் உண்மையான துறவி...

தமிழருவி மணியன்

உழைப்பில் முறுக்கேறிய ஒரு முரட்டுக் கிராமத்து விவசாயியின் முகவிலாசம். பளிங்கை விடவும் பரிசுத்தமான வாழ்க்கையைப் பிரதிபக்கும் பளீரென்ற வெள்ளைச் சிரிப்பு. நிர்மலமான எளிமையே ஆடை பூண்டு நேரில் வந்து நிற்பதுபோன்ற தோற்றம், பொய்மையும் போலித்தனமும் இல்லாத நேரிய நட்பு, எதுகை- மோனை அரிதாரப் பூச்சுக்கள் எதுவுமற்ற சாதாரண மனிதனின் சாமான்யப் பேச்சு, ஆரவாரமற்ற ஆழமான ஏரியின் அமைதியைக் காட்டும் அடக்கம், நேர்மையும் தூய்மையும் துலங்கும் பொதுவாழ்க்கைப் பண்பு நலன்... இவற்றின் கலவைதான், எண்பது வயது நிரம்பிய இளைஞர் தோழர் ஆர்.நல்லகண்ணு. ஊழல், அதிகார துஷ்பிரயோகம், பொதுநலச் சிந்தனையற்ற போக்கு, ஆணவம், பாமர மக்களின் அறியாமையைப் பயன்படுத்திக் கொள்ளும் மலினமான தந்திரம், பொதுச் சொத்தைக் குடும்பச் சொத்தாய் கபளீகரம் செய்துக் கொள்ளும் அற்பத்தனம் அனைத்தும் பல்கிப் பெருகி விட்ட இன்றைய சமூகச் சூழலில், பாரதத்தின் தேசிய விரதங்கள் தொண்டும் தியாகமும்தான் என்று மேடையில் வார்த்தை ஜாலம் காட்டி முழங்காமல், தன் வாழ்க்கையில் கடைப்பிடிக்கும் அரிய மனிதர் தோழர் நல்லகண்ணு.

ஊதியம் இல்லாவிட்டால் உழைப்பைத் தருவதற்கு இன்று பெரும்பாலான மனிதர்கள் தயாராக இல்லை. தர்ம காரியம் கூட அவனவன் கர்மம் தீரவேண்டும் என்ற பாவ புண்ணியப் போர்வையில்தான் இங்கே நடத்தப்படுகிறது. பொதுவாகவே இந்தியச் சமூகத்தின் சகல மட்டங்களிலும் ஏதோவொரு போர்வையில் பண்டமாற்றுப் பரிவர்த்தனை தான் நடந்து கொண்டிருக்கிறது. அதில் இந்த அரசியல் உலகம் ஒரு தரங்கெட்ட வியாபாரத் தளமாகவே வீழ்ச்சியடைந்துவிட்டது. இந்த இருள் சூழ்ந்த நிலையிலும் தோழர் நல்லகண்ணுவைப் போன்ற சில தலைவர்கள் கர்மயோகிகளைப் போல் நாட்டு நலனுக்காகக் கற்பூரமாய்க்

கரைவதும் மெழுகுவர்த்தியாய் உருகுவதும் ஆரோக்கிய மான அரசியலை நாடும் மனிதர்களுக்கு ஆறுதலைத் தருகிறது.

உலகம் முழுவதும் தீமைக்கும் நன்மைக்கும் இடையே இப்போதும் ஒரு குரு க்ஷேத்திரப் போர் நடந்துகொண்டு தான் இருக்கிறது. தீமையின் ஆணிவேரை அறுத்தெறியும் வரை அந்தப் போருக்கு அஸ்தமனம் கிடையாது. தீமைகள் திரண்டு கௌரவர் களாகக் காட்சிதரும்போது, நல்லறமனைத்தும் பாண்டவர்களாகப் படை நடத்தவேண்டும் என்பது தான் நியாயத்தின் நியதி. புழுத்துப்போன அரசியல் உலகத்தில் புதிய மாற்றங்கள் நிகழாதா என்று எத்தனையோ நெஞ்சங்கள் ஏக்கத்தில் தவிக்கின்றன. நாளும் ஒரு நல்லகண்ணு பொதுவாழ்வில் தோன்றினால் தான் அந்த ஏக்கம் தீரும்.

உணர்வுகள் மெல்ல முகிழ்க்கும் பள்ளிப் பருவந்தொட்டு, சகமனிதர் நலனில் நாட்டமுடைய வராய் அவர் நடந்துவந்திருக்கம் நீண்ட பொதுவாழ்க் கைப் பயணத்தில் பயங்கரமான தடியடி, சிறைவாசம், தலைமறைவு வாழ்க்கை, வன்கொடுமை அடக்கு முறைகள் என்று அடுத்தடுத்து ஆயிரம் சோதனைகளை அனுபவித்தபோதும் வறுமைப் பள்ளத்தில் விழுந்து கிடக்கும் ஏழைகளுக்காகவும்- வாழ்க்கையோடு போராடும் விவசாயக் கூலிகளுக்காகவும் அன்றாடம் அலைக்கழிக்கப்படும் ஆலைத் தொழிலாளர்களுக் காகவும் சமத்துவ சமதர்ம சமூக நீதிக்காகவும் இன்றுவரை சோர்வறியாப் போராளியாகவே, தன் தியாகம் செறிந்த பங்களிப்பைத் தந்துவருகிறார்.

ஊர் புகழக் காவி உடுத்திக் கற்றைச் சடை முடி வளர்த்துக் கானகத்தில் யாருமற்ற தனிமையில் கண்மூடித் தவமிருப்பதன்று துறவு. சாதி, மதம், இனம், மொழி, நாடு என்று பேதப்படுத்தும் எல்லா எல்லைகளையும் கடந்து, சுயநலம் துறந்து, பொதுநலச் சிந்தனையோடு சகமனிதர்களின் கண்ணீரைத் துடைத்தெறிய அன்புத் தவமிருப்பதுதான் உண்மை யான துறவு. அப்படிப்பட்ட துறவுநெறி பூண்டவர்கள் அரசியலுக்கு வரவேண்டும் என்பதுதான் காந்தியக் கனவு. காந்தியவாதியாய் அரும்பி, மார்க்சியவாதியாய் மலர்ந்து, பொதுவுடைமை மணம் பரப்பும் தோழர் ஆர்.நல்லகண்ணு இன்று நம்மிடையே அரசியல் உலகில் நம்பமுடியாத எளிமையுடன் நடைபோடும் ஓர் உண்மையான துறவி.

உத்தமர் நல்லகண்ணு... பொதுவுடைமை இயக்கத் தொண்டர்களுக்கெல்லாம் தோழர். ஆதரவற்ற அனைவருக்கும் ஆறுதல் தரும் நண்பர். என்னைப் பொறுத்தவ்ரை உண்மையும் எளிமையும் நேர்மையும் துலங்கும் காந்திய யுகத்தின் கடைசிக் கருணை!! அரசியல் அறம்வாழ, அவர் வாழ வேண்டும் நூறாண்டு!!.

ஆர்.என்.கே.யின் நாணம்!

தமிழகம் நன்கு அறிந்த முஸ் லீம் லீக் தலைவர் திரு அப்துல் லத்தீப் ஒருமுறை சென்னை அரசினர் பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். அவரைச் சந்தித்து உடல்நலம் விசாரிக்கத் தோழர் ஆர்.என்.கே. அரசு பொது மருத்துவமனை சென்றார். அவருடன் உதவிக்காக நானும் சென் றிடும் வாய்ப்பு கிடைத்தது.

லத்திப்பாய் படுத்தபடி இருந் தார். ஆர்.என்.கே. அருகில் சென் றதும் படுக்கையில் இருந்து எழுந்து அமர முயற்சி செய்தார். ஆர்.என்.கே. அவசர அவசரமாக அவரது கரங் களைப் பற்றி படுக்கச் செய்தார். உடல் நலம் விசாரித்தார். ஓரிரு நிமிடங் கள் கூட அல்ல உடனே அரசியல் பேச்சு துவங்கிவிட்டது. கூட்டாட்சி முறை குறித்து பேச்சு துவங்கியது. இந்து சமுதாயம் குறித்தும் கருத்துக் கள் எழுந்தன. புராதான இந்து சமுதா யத்தில் இரண்டு விதமான கூட்டாட்சி முறை குறித்து ஆர்.என்.கே. பேசி னார். முதலாவது பிராந்தியக் கூட் டாட்சி முறை (Territorial Federation) , இரண்டாவது சமுதாய அமைப்பு கூட் டாச்சி முறை (Social Federation).இந்த பேச்சுக்கள் முழுவதும் ஆங்கிலத்தில் இருந்தது இடையில் லத்திப்பாய் இடைமறித்து நல்லகண்ணு நீங்கள் இவ்வளவு நல்லபடி ஆங்கிலம் பேசு வீர்களா? அதுவும் இவ்வளவு செழு மையான பொருளோடு? என ஆச்சரி யபட்டுக் கேட்டார்.

''இல்லை இல்லை இது திருமா றன் எழுதிய புத்தகத்திலிருந்து படித் தேன். ஏற்கனவே சில புத்தகங்களிலி ருந்து படித்திருக்கிறேன்'' என்றார் மிகுந்த அடக்கத்தோடு. அவர் பேசிய விதமோ என்னவோ தெரியவில்லை லத்திப்பாய் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் ''தோழர் ப.மாணிக்கம் கூட மிக சிறப்பாக ஆங்கிலத்தில் பேசு வார். நீண்ட சிறைவாசம், சதி வழக்கு கள் சித்தரவதைகள் என ஒருபுறம். மறுபக்கத்தில் நல்ல கல்வி அறிவு.

இவை எதையும் வெளிப்படுத் தாமல் வெறும் பாமர தோற்றத்தோடு வாழ்கிறீர்களே.

நல்லகண்ணு நேரில் கூற தயங்கு கிறீர்களே. உண்மையில் நீங்கள் எல் லாம் நிறைகுடம் தான். அரசியல் பார் வையில் நிகரற்ற தலைவர்கள் தான்''. என வாயார புகழ்ந்தபடி இருந்தார்.

எல்லாவற்றிற்கும் ஆர்.என்.கே. ''இல்லை இல்லை'' என நாணத் தோடு காட்சி தந்நார்

தகவல் : மு.வீரபாண்டியன்



வையகம் இவரை நம்பும்!

எண்பது வயதில் இளைஞர் ஒருவர்;
இயற்கை நடத்தும் அதிசயம்; -வறுமை
என்பதைப் போக்க எண்திசை நடந்ததே
இவரது இளமையின் ரகசியம்!

அரைக்கைச் சட்டை; அரை முழத் துண்டு;
அறியாப் பாமரன் தோற்றம்; -கரிசல்
நிறத்தில் தேகம்; நெடுமால் வடிவம்!
நிலையில் மாறா ஏற்றம்!

ஏழையின் வாழ்வை ஏந்திப் பிடிக்க
எழுந்த கதிரின் பிம்பம்; - குலை
வாழையாய் நின்று வறுமையைப் போக்குவார்!
வையகம் இவரை நம்பும்!

கொள்ளிக் கண்கள் குலவும் அரசியல்
கோட்டான் கழுகையே பார்த்தது;- இந்த
நல்ல கண்ணுவின் நேர்மையைப் பார்த்து
நீசர் உலகம் வேர்த்தது!

அச்சம் என்னும் வார்த்தையை அறியார்;
அதற்கு இவரிடம் அச்சம்! - பண்புகள்
எச்ச மிலாமல் இறந்து போனதில்
இவரே இங்கே மிச்சம்!

திரு. வீரபாண்டியன்

மனிதம் பிரம்மாண்டமானது!



ஈ. பீட்டர் அல்போன்ஸ்

'சேவை' எனும் அடுப்பில் 'தியாகம்' எனும் அக்கினியில் பொதுவுடைமை இயக்கம் என்கிற லட்சியப் பட்டறையில் வார்த்து வடிவெடுக்கப்பட்ட அற்புதமான தலைவர்களுள் முதன்மையானவர் தோழர் நல்லகண்ணு. சுதந்திரத்திற்கு முன்பும் பின்பும் உள்ள அரசியல் தளத்தின் தமிழக அரங்கில் கால் பதித்துச் சென்ற பல்வேறு தலைவர்களை நான் நினைத்துப் பார்க்கிறேன். சிலரைப் பற்றி நினைக்கும்போது என் நெஞ்சம் பெருமிதத்தால் நிறைவதுண்டு. வேறு சிலரைப் பார்க்கும் போது ''இத்தனை ஆற்றலா? இத்தனை திறமையா?'' என்று வியப்பதுண்டு. மற்றும் சிலரின் போர்க்குணத்தையும், தீமைகளை - கொடுமைகளை அறுத்தெறிவதில் அவர்களுக்கிருக்கும் ஆவேச கோபத்தையும் பார்த்து நான் பயந்ததுண்டு. பொதுவாழ்வில் சில தலைவர்களுக்கு ஏற்பட்ட ஈடுசெய்ய முடியாத இழப்புகளும் அதனால் அவர்கள் பெற்ற உடல் மற்றும் உள்ள வேதனைகளும் என் கண்களையும் ஈரத்தால் பனிக்கச் செய்ததுண்டு. சில பெரும் தலைவர்களின் தியாக வாழ்வின் சிகரங்களை முதல் முறையாகத் தெரிந்தபோது இருந்த இடத்திலேயே எழுந்து நின்று அவர்கள் பிறந்த மண் நோக்கி கை தூக்கித் தொழுதிருக்கிறேன். உணவு, உறக்கம், உடல் நலம் என்று தன் சுய தேவைகளைப் பற்றிக் கவலைப்படாமல் ''மக்கள், இயக்கம், லட்சியம்'' என்று நாளும் பொழுதும் வாழ்ந்த தலைவர்களின் உழைக்கும் லட்சிய வெறியும் என்னைப் பிரமிக்க வைத்திருக்கிறது. அதிகார துரைத்தனத்தையும், எதேச்சதிகாரத்தின் ஆதிக்கத்தையும் தடுத்து நிறுத்தி ஜனநாயகத்தின் வெற்றிக்காக களம் புகுந்து போராடி குண்டாந்தடிகளால் தாக்கப்பட்டு, சிறைவாசம் ஏற்ற சில தலைவர்களின் நெஞ்சுரம் என்னைச் சிலிர்க்கச் செய்யும். இப்படிப்பட்ட தலைவர்களின் வரிசையில் தனக்கென ஒரு தனி இடத்தைச் செதுக்கிக் கொண்டவர் பெரியவர் நல்லகண்ணு அவர்கள்.



'அண்ணன்' என்றுதான் நான் அவர்களை விளிப்பேன். அவர்களைப் பார்க்கின்ற போதெல்லாம் ஆயிரம் ரோஜாக்கள் என் நெஞ்சுக்குள் பூத்ததைப் போல அவர்களது தியாக வாழ்வின் நறுமணம் என் உள்ளத்தையெல்லாம் நிறைத்துக் கொள்ளும். லட்சிய வெறியுடன் இயக்கத்தில் ஒரு தொண்டனாக எப்படிப் பணியாற்ற வேண்டும்? லட்சிய வேட்கையுடன் பணியாற்றும் தொண்டர்களை வழி நடத்தும் ஒரு தலைவர் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? அதிகார அரசியலுக்கு அருகிலே இருக்கும் போது கூட சாதாரண ஏழை எளிய மக்களுடன் தனக்கிருக்கின்ற நெருக்கத்தை எப்படி சேதமில்லாமல் பாதுகாத்துக் கொள்வது? பொதுவாழ்வில் தூய்மை, நேர்மை, எளிமை ஆகியவற்றிற்கு இலக்கணமாக வாழ்வதெப்படி? ஆளும் கட்சியிரையோ அல்லது மாற்றுக் கட்சியினரையோ கண்ணியம் தவறாமல் விமர்சிப்பது எப்படி? தனிப்பட்ட உறவுகளுக்கு சேதம் இல்லாமல், அதே நேரத்தில் லட்சியங்களுடன் சமரசம் செய்து கொள்ளாமல் பொதுவாழ்வில் இருப்பது

எப்படி? என்பது போன்ற அநேக கேள்விகளுக்கு அண்ணன் நல்லகண்ணு அவர்களுடைய வாழ்க்கைதான் பதிலாக இருக்க முடியும்.

பொதுவாழ்வின் மதிப்பீடுகள் சரிந்து விடுகின்ற காலம் இது. அதிகார ஆசைக்காக, பதவி சுகத்திற்காக, பணம் சேர்க்கும் சுயநலத்திற்காக அரசியலை வியாபாரமாகவும், வியாபாரங்களை அரசியலாகவும் நடத்திப் பார்க்க அரசியல்வாதிகளுடன் அநேகர் துணிந்து விட்ட காரணத்தால் பொதுமக்கள் மத்தியில் அரசியலுக்கும் அரசியல்வாதிகளுக்கும் மதிப்பும் மரியாதையும் மறைந்து போயிருக்கும் காலம் இது. பொதுவாழ்க்கைக்கு வர விரும்புகின்ற இளைஞர்களும், இளம் பெண்களும் தங்களுக்கு முன்உதாரணமாக வரித்துக் கொள்வதற்குத் தகுதியான தலைவர்களே வரும் காலங்களில் இருக்க மாட்டார்கள் என்று ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் ஆதங்கப்படுகின்ற நாட்கள் இந்த நாட்கள். புடம் போட்டெடுத்த பொன்னாக தங்களை சமைத்துக் கொண்டிருக்கின்ற அண்ணன் நல்லகண்ணு போன்றவர்கள்தாம் மதிப்பீடுகளின் பேரழிவின் மத்தியில் நம்பிக்கை தரும் கலங்கரை விளக்கங்களாக எழுந்து நிற்கிறார்கள்.

சந்தைப் பொருளாதாரத்தின் தாக்கத்தில் அரசியலின் முகம்கூட முழுமையாக மாறிவிட்டது. எளிமையான, நேர்மையான தலைவர்களை நமது மக்கள் கூட விரும்பவில்லையோ என்று நான் அடிக்கடி நினைப்பதுண்டு. அரசியல் கட்சிகளின் அலுவலகங்கள், அவர்களது அன்றாட நடவடிக்கைகள், வருடாந்தர மாநாடுகள், கருத்தரங்குகள், பொதுக் கூட்டங்கள் போன்றவற்றில் கூட மக்கள் தற்போது 'பிரமாண்டங்களை' எதிர்பார்க்கத் துவங்கிவிட்டனர். வெள்ளை நோட்டீசையும், ஒரு வண்ணத்தில் அச்சிடப்பட்ட போஸ்டர்களையும் மக்கள் திரும்பிக் கூடப் பார்ப்பதில்லை. 'எட்டு பிட்டில்' போஸ்டர் ஒட்டினால்தான் பொதுக்கூட்டம் நடக்கிறது என்று மக்கள் நினைக்கிறார்கள். சைக்கிளிலோ, ஆட்டோ ரிக்ஷாகளிலோ, அல்லது டாக்ஸியிலோ தலைவர்கள் யார் வந்தாலும் அவர்களை 'வா' என்று வரவேற்பதற்குக் கூட தொண்டர்கள் விரும்புவதில்லை. பொதுக்கூட்டத்திற்கு பேசவருகின்ற தலைவர்கள் கூட குறைந்தது 15 கார்களுடன்தான் வர வேண்டும் என்று இயக்க நண்பர்களே எதிர்பார்க்கின்றார்கள். நான்கு டியூப் லைட் கட்டி, ஒரு மைக் வைத்து அரசியல் கட்சிகள் கொள்கை முழக்கம் செய்த காலமெல்லாம் அந்தக் காலம். இப்பொழுது திருவல்லிக்கேணியில் பொதுக்கூட்டம் என்றால் தீவு திடலிலிருந்து குழல் விளக்குகள் போட வேண்டும். கட்சியின் மாவட்ட நிர்வாகிகள் பேச வந்தால் கூட வழியெல்லாம் வரவேற்பு வளையங்கள் வேண்டும். அரை முழ கதர் துண்டு போட்டு தலைவர்களை வரவேற்ற காலம் மலையேறி இப்போது இருபது பேர் தூக்கிச் சுமந்து வரும் 'ஆளுயர மாலையாக' மாறிப்போனது. இப்படிப்பட்ட விழாக்கள் நடக்கும் மேடைகளை நான் பார்க்கும் போதும், அவைகளில் நான் கலந்து கொள்ளும்போதும் நான் அண்ணன் நல்லகண்ணு அவர்களை தவறாமல் நினைத்துக் கொள்வதுண்டு.

1981 என்று நினைக்கிறேன். உடுமலைப் பேட்டையில் பொதுக்கூட்டம் பேசிவிட்டு ஊர் திரும்புவதற்காக இரவு 12 மணியளவுக்கு பேருந்து நிலையம் வந்தேன். மதுரைக்கு முதல் பஸ் அதிகாலை 3.00 மணிக்கு என்று சொன்னார்கள். வழியனுப்ப வந்த இயக்கத் தோழர்களோடு பஸ் ஸ்டாண்டில் இருந்த கல்பெஞ்சில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தேன். அடுத்த பெஞ்சில் தலைக்கு ஒரு பையை வைத்து பெரியவர் ஒருவர் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார். அருகில் அமர்ந்திருந்த நாங்கள் அடித்துக் கொண்டிருந்த அரட்டைக் கச்சேரிகூட அவரது தூக்கத்தைக் கலைக்கவில்லை. மதுரை பஸ் வந்தது. கண்டக்டர் ''மதுரை - மதுரை'' என்று கூவி அழைத்தார். நண்பர்களிடம் விடைபெற்றுக் கொண்டு நானும் பஸ் ஏறத் தயாரானேன். உறங்கிக் கொண்டிருந்த பெரியவரும் எழுந்து உட்கார்ந்தார். எங்கேயோ பார்த்த நபராகத் தெரிந்தது. உற்றுப் பார்த்தேன். சாட்சாத் - அண்ணன் நல்லகண்ணு அவர்கள்தான். அப்போதும் அவர்கள் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முன்னணித் தலைவர்களுள் ஒருவர். ''என்னண்ணே! இங்கே எப்படி?'' என்று கேட்டேன். தாலுகா விவசாயிகள் மாநாட்டில் கலந்து கொண்டு திரும்புவதாகச் சொன்னார்கள். இப்படிப்பட்ட 'எளிமை' இனிமேல் பொதுவாழ்வில் எங்கே கிடைக்கும்?

1980களின் துவக்கத்தில் திருநெல்வேலி மாவட்டத்தின் மேல்பகுதி - தென்காசி, கடையநல்லூர், புளியங்குடி, சங்கரன்கோவில், மானூர் மற்றும் பாளையங்கோட்டையைச் சுற்றியுள்ள பகுதியில் ஒரு பெரிய வகுப்புக் கலவரம் வெடித்துக் கிளம்பியது. எங்கு பார்த்தாலும் கொலை, எங்கு திரும்பினாலும் கொள்ளை என்று மாவட்டத்தின் சமூக அமைதி சின்னாபின்னமாகி இனிமேல் சகஜவாழ்க்கையே அங்கே சாத்தியமில்லை என்று சொல்லுமளவிற்கு நிலைமை மோசமாக இருந்தது. அரசியல் கட்சிகளின் கொடிக் கம்பங்கள் வெட்டி சாய்க்கப்பட்டு, விளம்பரப் பலகைகள் பிடுங்கி எறியப்பட்டு, எங்கே பார்த்தாலும் ஜாதி இயக்கங்களின் கொடிகள் மட்டுமே அனுமதிக்கப்பட்டன. அரசியல் கட்சிகளின் தலைவர்கள் செயலிழந்து கைபிசைந்து நின்றார்கள்.

முன்னாள் சபாநாயகர் ஐயா செல்லபாண்டியன் அவர்களும் மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.எஸ்.ஆறுமுகம் அவர்களும், கலவரத்தை எப்படியாவது நிறுத்திட வேண்டும் என்ற துடிப்பில் ஒரு சர்வ கட்சி கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தார்கள். கட்சி பேதங்களை மறந்து அனைத்துத் தலைவர்களும் ஒன்றாக ஓரணியில் திரண்டு மாவட்டம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து இரு தரப்பினரையும் சமரசப்படுத்தி ஒற்றுமைப்படுத்த முயற்சிகளை மேற்கொள்வது என்று முடிவெடுக்கப்பட்டது. அதன்படி திரு.செல்லப்பாண்டியன் அவர்களும், திரு. ஆர்.எஸ்.ஆறுமுகம் அவர்களும் மாவட்டத்தின் ஒரு புறமிருந்து சுற்றுப்பயணத்தைத் துவங்கினர். அந்த சமாதான சுற்றுப்பயணத்தை மேற்கொள்வதற்காக அண்ணன் நல்லகண்ணு அவர்கள் அன்று காலையில் சென்னையிலிருந்து நெல்லைக்கு வந்து சேர்ந்தார். அன்றைய தினம் வெறியூட்டப்பட்ட சில இளைஞர்கள், வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த அண்ணன் நல்லகண்ணு அவர்களின் மனைவியாரின் தந்தையை கண்டதுண்டமாக வெட்டி படுகொலை செய்து விட்டனர். ஏதுமறியாத, மிகுந்த வயோதிகரான அப்பெரியவரின் கொலை மனச்சாட்சியுள்ள எல்லோரையும் தலை கவிழ வைத்தது. மனம் கலங்கிப் போன அண்ணன் நல்லகண்ணு சுற்றுப் பயணத்தை ரத்து செய்துவிட்டு, தனது மாமனாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ளச் சென்று விடுவார் என்று எல்லோரும் கருதினார்கள். இக்கொலைக்குப் பிறகு அண்ணன் அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் பகுதிகளுக்குச் சென்றால் மீண்டும் கலவரம் வெடிக்கும் என்று சில பத்திரிகையாளர்களும், காவல்துறையினரும் கருத்துத் தெரிவித்தனர். ஆனால் நெஞ்சில் உரம் கலையாத அண்ணன் நல்லகண்ணு அவர்கள். சித்தம் கலங்கவில்.லை சிந்தனையைச் சிதறவிடவில்லை. திட்டமிட்டபடியே தனது சுற்றுப்பயணத்தைத் தொடர்ந்தார்கள். கலவரத்தில் கொலையுண்டு போன தனது மாமனாரின் சடலம் பிரேதப் பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்ட அதே வேளையில் தனது மனைவியையும் பிள்ளைகளையும், குடும்பத்தையும் உதறிவிட்டு அவர் உண்மையான பொதுவுடமைத் தோழனாய் பாதிக்கப்பட்ட தலித் மக்களைச் சந்தித்து ஆறுதல் அளிக்கச் சென்றார். இத்தகைய லட்சிய வேட்கையை நமது இளைஞர்கள் மத்தியில் இனிமேல் எப்படி வளர்ப்பது?

2001- ஆகஸ்ட் மாதம். மக்கள் தலைவர் ஐயா மூப்பனார் அவர்களின் கடைசி பிறந்த நாள் விழா. தனது பிறந்த நாள் விழாவையும் அது சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகிளலும் அவர்கள் ஒரு நாளும் கலந்து கொள்வதில்லை. அந்த ஆண்டு நான் எண்பது ஏழை மணமக்களுக்கு திருமணத்திற்கு ஏற்பாடு செய்திருந்தேன். பிறந்த நாளுக்கல்ல, மணமக்கள் வாழ்த்த மட்டும் அவர்கள் வருகை தர வேண்டும் என்று ஐயா அவர்களை நான் கெஞ்சிக் கேட்டுக் கொண்டேன். எனது கெஞ்சலுக்காக வரச் சம்மதித்தார். காமராஜர் அரங்கம் நிறைய கூட்டம். மேடை நிறைய மணமக்கள். மணமக்களை வாழ்த்த அண்ணன் நல்லகண்ணு அவர்களும் வந்திருந்தார். தலைவர் அவர்கள் மேடைக்கு வந்ததும் அண்ணன் அவர்களைப் பார்த்தவுடன் அவர்களது கைகளைப் பற்றிக் கொண்டார். தலைவர் அவர்கள் மிகவும் உடல் நலம் குன்றியிருந்த காலமது. அண்ணன் அவர்கள் தலைவரைப் பார்த்ததும் ''ஐயா, எனது பிறந்த நாள் வாழ்த்துக்கள்'' என்றதும் தலைவர் அவர்கள் 'உங்களுக்கு என்ன வயது?' என்று கேட்டார். 'உங்களை விட நான் இரண்டு வயது பெரியவன்' என்று அண்ணன் அவர்கள் சொன்னவுடன், தலைவர் அவர்கள் தனது தோளில் இருந்து துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக் கொண்டு, 'அப்படியே இருங்கள்' என்று அண்ணனைப் பார்த்துச் சொல்லி அவர்களது காலில் விழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து 'என்னை ஆசிர்வாதம் செய்யுங்கள்' என்று சொன்னார். இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த எங்களனைவரின் கண்களிலும் கண்ணீர். பதறிப் போன அண்ணன் நல்லகண்ணு அவர்கள் தலைவர் அவர்களைத் தூக்கி நெஞ்சாரத் தன் தோளில் சாய்த்துக் கொண்டார். அவர்களது கண்ணிலும் கண்ணீர்.

மறுநாள் இரவு. வழக்கம் போல தலைவர் அவர்களை சந்திக்க இரவு வீட்டுக்குப் போனேன். முதன் நாள் விழா நிகழ்ச்சிகளைப் பற்றி சொல்லிவிட்டு அண்ணன் அவர்களிடம் தலைவர் காலில் விழுந்து ஆசிப் பெற்றதை எல்லோரும் சிலாகித்துப் பேசியதாகச் சொன்னேன். சற்று நேரம் அமைதியாக இருந்த தலைவர் பின்பு சொன்னார் ''அவரை உள்ளும், புறமும் நான் அறிவேன். அவருக்குள் இருக்கும் 'மனிதம்' பிரம்மாண்டமானது'' என்று சொன்னவுடன் நான் அப்படியே உறைந்து போனேன். ஆம்! நல்லகண்ணு என்கிற மனிதருக்குள் இருக்கும் 'மனிதம்' பிரமாண்டமானது! ஆராதனைக் குரியது! இன்னும் நூறாண்டு வாழ்ந்து இம்மண்ணின் பொதுவாழ்வை அவர்கள் செழுமைப்படுத்திட இறையருளை வேண்டி நிற்கின்றேன்.

❖

திருவாய்மொழி தந்த மனித நேயர்!

புளிங்குடி கிடந்து வரகுண மங்கை
யிருந்து வைகுந்தத்துள் நின்று
தெளிந்தஎன் சிந்தை அகங்கழியாதே
என்னையாள்வாய் எனக்கருளி
நளிர்ந்த சீருலகம் மூன்றுடன் வியப்ப
நாங்கள் கூத்தாடி நின்றார்ப்ப
பளிங்கு நீர் முகிலன் பவளம் போல்
கனிவாய் சிவப்ப நீ காணவாராயே
(3571 திருவாய் மொழி 9-2-4)

என்ற நம்மாழ்வாரின் ஈரச் சொற்களில் நிறைந்த இத்தலம் திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூர் செல்லும் சாலையில் உள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள நவதிருப்பதிகளில் முதல் இருப்பிடம் ஆகும் இத்தலம்.

இத்தகு சிறப்பு வாய்ந்த திருத்தலம் ஸ்ரீவைகுண்டம் என்ற திவ்யதேசத்தில் இராமசாமி குமாரர் திரு. ஆர்.நல்லகண்ணு அவர்களின் சதாபிஷேகம் எனும் 80 வது ஆண்டு நிறைவு விழாவிற்கு எனது உள மார்ந்த நல்வாழ்த்துக்கள்.

108 வைணவ திவ்ய தேசங் களில் விண்ணுலகில் இருப்பதாகக் கருதப்படும் ஸ்ரீவைகுண்டம் என்னும் திருப்பெயர் மண்ணுலகில் தாங்கி நிற்கும் ஒரே திருத்தலம் ஆகும். புரட்சித் துறவி இராமாநுஜரின் ஆச்சாரியர் நம்மாழ்வாரால் மங்களாசனம் செய்யப்பட்டத் திருத்தலம் . இப்பெருமானுக்குக் கள்ளர்பிரான் என்ற திருநாமம் இன்றும் என்றும் மண்ணும் மலையும் கடலூர் உலகமே உள்ள வரை நிமிர்ந்து நிற்கும்.

கி.பி.1801ல் இந்திய நாட்டுச் சுதந்திரப் போரில் கட்டபொம்மனுக்கும் ஆங்கிலேயருக்கும் நடைபெற்ற போரில் இந்தக் கோவிலும் சுற்றியுள்ள பகுதிகளும் மையமாக வைக்கப்பட்டு ஒரே கோட்டையாகப் பயன்படுத்தப்பட்டது.

இத்தகைய வரலாற்றுச் சிறப்பு கொண்ட திருத்தலத்தில் பிறந்த தாங்கள் புரட்சித்துறவி இராமாநுஜரின் கொள்கையான சாதி சமரசம், திருக்குலத்தாரின் வாழ்வில் அவர்களுக்கு தொடர்ந்து குரல் கொடுத்து அவர்களுக்காக வாழ்ந்து கொண்டிருக்கும் தாங்கள் பொது வாழ்வில் எளிமை, தூய்மை மற்றும் மனித நேயப் பாதுகாவலரான தங்கள் பிறந்த நாளில் விடுக்கும் செய்தி நல்லவர்களையும் ஆழ்வார்களையும் மாமறையோர்களையும் கண்ணில் நீர் பெருக மகிழ்விக்கும்.



தாழ்த்தப்பட்ட மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காகப் போராடும் தாங்கள் இயக்கத்தின் திரு.தா.பாண்டியன் முன்னாள் எம்.பி. மாநிலச் செயலாளர் அவர்களிடம் நான் நேரில் கூறியபடி மத்திய அரசின் அறிவிப்பில் (கெஜட்) தாழ்த்தப்பட்ட மக்களை ஸ்ரீராமானுரே பெயரிட்ட முறையில் திருக்குலத்தார் என்ற அறிவிப்பினை வெளியிட்டு நிரந்தரமாகச் செய்ய இந்தச் சிறப்பு மலர் மூலம் விழுந்துத் தெரிவித்து கொடுத்து மீண்டும் தங்கள் பணிகள் தொடர் சங்கிலி போன்று வளரப் பல்லாண்டு பாடுகிறேன்.

''பல்லாண்டு பராமாத்மனைச் சூழ்ந்திரு
தேத்துவா பல்லாண்டே''

என்று சூடிக் கொடுத்தவள் தொல்லருளால் வாழ்கின்ற வள்ளல் பெரும்பூதூர் மாமுனிவன் திருவடி வாத்திலிருந்து வாழ்த்தி மன நிறைவு பெற்றோமாயிற்று.

❖

ஸ்ரீ வரத எத்திராஜ ஜீயர்

உண்டாலம்ம இவ்வுலகம்...

தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்கள், எனக்கு ஒரு புறநானூற்றுப் பாடலின் உயிரோவியமாய் விளங்குகிறார். புறநானூற்றின் 182ஆம் பாடலைத் தான் குறிப்பிடுகிறேன். இதோ அந்தப் பாடல்!

உண்டால் அம்ம, இவ்வுலகம் - இந்திரர்

அமிழ்தம் இயைவது ஆயினும், 'இனிது' எனத்

தமியர் உண்டலும் இலரே; முனிவு இலர்;

துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவது அஞ்சி,

புகழ் எனின், உயிரும் கொடுக்குவர், பழிஎனின்

உலகுடன் பெறினும், கொள்ளலர்; அயர்விலர்;

அன்ன மாட்சி அனையர் ஆகி,

தமக்கு என முயலுநர் உண்மையானே

தனிமனித விழுமிய நற்பண்புகளை, பொதுவாழ்க்கையிலும் பேணிப் பாதுகாத்து சாதனை படைத்து வருபவர், தோழர் ஆர்.என்.கே.

அவருடைய வியத்தகு எளிமை, ஆரவாரமற்ற பேச்சு, நடை, உடை, பாவனையைக் கண்டு ஒருவர் கடந்து செல்ல முயன்றாலும், அவருடைய ஆளுமை, கடந்து செல்ல நினைத்தவரையும் தன்பால் ஈர்த்துவிடும். கருத்துத் தெளிவும், கொள்கையில் உறுதிப்பற்றும், சந்தர்ப் பத்திற்கேற்ப சமரசம் நாடாமையும் அவருடைய ஆளுமையின் மின்னல் வீச்சுகள்.

நான் அவரை பல முறைச் சந்தித்து உரையாடும் பொழுதெல்லாம் அவருடைய நூலறிவின்

பெ.சு. மணி

ஆழத்தையும் பட்டறிவின் பக்குவத்தையும் வழிகாட்டும் நெறிமுறைகளாக ஏற்றுக் கொண்டவன்.

முப்பது ஆண்டுகளுக்கு முன்பு என நினைக்கிறேன். அவரை என் வீட்டிற்கு அழைத்து விருந்தோம்ப அணுகினோம். அவரும் அவருடைய அருமைத் தோழர் காத்தமுத்துவும் வந்திருந்து விருந்துண்டு மகிழ்வித்தனர். அன்று என் இரு செவிகளுக்கும் சிந்தனைகளுக்கும் கூட நல்விருந்து கிடைத்தது.

இதன் பிறகு மறைந்த என் உடன் பிறவா சகோதரர் அரூர் சி.இரா.இராமானந்தன் வழியாகவும் எங்கள் உறவு வளர்ந்தது.

என்னுடைய ''கார்ல் மார்க்ஸின் இலக்கிய இதயம் (1986)'' எனும் நூலிற்கு புகழ் பூத்த முற்போக்கு எழுத்தாளர் தொ.மு.சி.ரகுநாதன் அளித்த முன்னுரையில் என்னைப்பற்றி குறிப்பிட்ட பாராட்டுகளை நான் ஊக்கவுரை களாகக் கொண்டேன்.

ஒரு சமயம் ''ஆர்.என்.கே.'' என்னிடம் உரையாடிக் கொண்டிருக்கும் பொழுது, 'தொ.மு.சி.', அவரிடம் என் பாரதி ஆய்வுகளைக் குறிப்பிட்டு, 'பெ.சு.மணி கவனிக்கப்பட வேண்டியவர்'' என்று கூறினாராம். அவ்வுரையை சமயம் கிடைக்கும் போதெல்லாம் என்னுடைய நூல் வெளியீட்டுக் கூட்டங்களில் 'ஆர்.என்.கே.' தவறாமல் எடுத்துரைப்பார்.

என்னுடைய ''பாரதியார் ஆய்வுக் கட்டுரைகள்'' (2001), ''இந்திய தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்' மூன்றாம் பதிப்பு (2001) நூல்கள் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார், தோழர் ஆர்.என்.கே.

தோழர் ஜீவானந்தம் காலத்தில் இருந்தே கம்யூனிஸ்டுகளுக்கு வெ.சாமிநாத சர்மாவிடம் மிக்க மதிப்புண்டு. சாமிநாத சர்மாவும் அவ்வாறே இருந்தார். 'ஜீவா'வின் பாடல்களைக் கொண்ட நூலிற்கு சாமிநாத சர்மா அணிந்துரை வழங்கியுள்ளார். பேராசான் மார்க்ஸின் ''தாஸ்கேபிடல்'' நூலை சாமிநாத சர்மா தமிழாக்கம் செய்ய வேண்டும் எனும் வேண்டுகோளும் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால், அது ஒரு தனி நபரால் இயலாதது, குழு ஒன்று அமைத்து செய்யப்பட வேண்டிய பெரும் பணியாகும் என்று தம்மைச் சந்தித்த கம்யூனிஸ்ட் நண்பர்களிடம் கூறியதாக என்னிடம் சாமிநாத சர்மா கூறியுள்ளார். இதை நான் சற்று விரிவாகக் கூறுவதற்கு காரணம் உண்டு.

'வெ.சாமிநாத சர்மா ஆய்வு மன்றம்' எனும் பெயரில் ஓர் அமைப்பை நிறுவி அதன் மூலமாக 'சாமிநாத சர்மா நினைவு விருது'வை வழங்கி வருகின்றேன். 10.2.2004இல் மொழி பெயர்ப்பு சாதனையாளராக தோழர் நா.தர்மராஜனைத் தேர்வு செய்து அளிக்கப்பெற்ற விருதை தோழர் 'ஆர்.என்.கே.' வழங்கினார். அதே நிகழ்ச்சியில் 'பாரதி புகழ் பரப்பிய ராஜாஜி' எனும் என்னுடைய நூலைப்பற்றியும் பேசினார்.

இராமகிருஷ்ணர் இயக்கம் தொடர்பாக பத்து நூல்களை நான் எழுதியுள்ளேன். ஒரு சமயம் இது சம்பந்தமாக தோழர் 'ஆர்.என்.கே.'விடம் பேசிக் கொண்டிருந்தபோது, மார்க்சியர்கள், சுவாமி விவேகானந்தரை தக்கவாறு பயன்படுத்திக் கொள்ளவும் எழுதவும் பேசவும் வேண்டும் என்று கருத்து தெரிவித்தார்.

அவருடைய பொதுவுடமை இயக்கத் தொடர்பான நினைவுகள் பதிவு செய்யப்பெற்று, ஆவணமாக வெளிவரவேண்டும் என்று அவரிடம் கூறியுள்ளேன்.

எண்பதாவது அகவை நிறைவு ஆண்டைக் கொண்டாடவும், அதுசமயம் மலர் ஒன்றும் வெளிவரவுள்ளது என்பதை அறியவும் மிக்க மகிழ்ச்சியளிக்கிறது.

தமிழ் படித்தவன் மட்டுமன்று, மார்க்சியம்

கற்றவரும் சிரஞ்சீவிகளே

உண்மையைப் போல் எளிமையானவர்!

உண்மையைப்போல் எளிமையானவர்! என்று லெனினைக் குறிப்பிடுவார்கள்.

தோழர் இரா. நல்லகண்ணு அவர்களை ஒரு சொற்சித்திரமாய்த் தீட்டுவதற்கும் லெனினைச் சுட்டிய அதே சொற்றொடரைப் பயன்படுத்தவே விரும்புகிறேன்.

ஒருவருக்குச் சூட்டிய மாலையை இன்னொருவருக்குச் சூட்டுவது நாகரிகமில்லை என்று ஒட்டக்கூத்தர்கள் குறுக்கிடலாம்.

லெனினும் நல்லகண்ணுவும் இரு வேறு மனிதர்கள் என்பது, தலைகளை எண்ணி பெயர்களைக் கூட்டிக் கணிதவியலின்படி தீர்மானித்தால் சரியாக இருக்கலாம்.

ஆனால் காவியப்பாங்கில், தத்துவவியலில் - லெனின் என்றாலும் நல்லகண்ணு என்றாலும் ஒன்றேதான்.

அவதாரங்கள் எத்தனை எடுத்திருந்தாலும் எல்லாம் ஒருவனே: அவன் நாரணனே என்று இதிகாசங்கள் சொல்வதில்லையா?

இதிகாசக் கதைகளும் புராண நம்பிக்கைகளும் பகுத்தறிவுக்கு ஒவ்வாதவை என்று சிலர் மறிக்கலாம்.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்று சொன்னவர் இறை நம்பிக்கையாளர் அல்ல. பகுத்தறிவாளர். மனித நேயத்தை வலியுறுத்தும் முயற்சி அது.



அங்கே பாருங்கள், பகுத்தறிவுக் கவிஞன் மாயாகோவ்ஸ் ஒரு கூட்டத்தையே மறித்துக் கொண்டு சொல்கிறான்.

லெனின் இறந்துவிட்டார் என்று அழுது புலம்பாதீர். இதோ நானில்லையா? நம் ஒவ்வொருவரையும் லெனினாகத்தான் உருவாக்கியிருக்கிறார்.

தன்னை லெனினாக முன்னிருத்தும் வீறார்ந்த கவிஞனை யாரால் எதிர்க்க முடியும்? இது ஒரு கவிஞனின் புலமைக் கிறுக்கல்ல... தனித்துவச் செறிவு: இலட்சியப் பிடிப்பு.

எனது வாதத்தை நியாயப்படுத்த நான் அதிகமாகவே சிரமப்படுவதாகத் தோன்றலாம். உண்மைதான். இது எனக்கு நானே கூறிக்கொள்ளும் சமாதானம்.

ஏனென்றால் ஆரவாரமோ, புகழ்ச்சியில் மயக்கமோ கொள்ளாத தோழர் நல்லகண்ணு அவர்களின் எண்பதாவது பிறந்தநாளை முன்னிட்டு ஒரு சிறப்பிதழ் வெளியிட விரும்பியபோது அவர் அடக்கத்துடனும் உறுதியுடனும் அதை நிராகரித்தார். பிறகு, இது பற்றி அவரிடம் நான் எதுவும் பேசாமல், இலட்சியவாதிகளைக் கௌரவித்துள்ள மகிழ்ச்சியை இழக்க விரும்பாமல் இந்த சிறப்பிதழை கொண்டுவரத் துணிந்தேன்.

நான் ஆசைப்பட்ட அளவுக்கு இந்த இதழ் இல்லை என்றாலும் என் விருப்பம் நிறைவேறியதில் மகிழ்ச்சியே!

நான் கம்யூனிஸ்ட் பேரியக்கத்தில் ஒரு சாதாரண தொண்டன் என்பதற்கு மேலாக தோழர்

ஆனாரூனா

ஆர்.என்.கே. தம்மைக் குறித்து வேறு எதுவும் சொல்வதில்லை. ஆனால், அப்படி ஒரு :சாதாரணமானவர்: ஒரு புரட்சிகரமான இயக்கத்தின் தலைவராக முடிந்திருக்கிறதே, அது எப்படி?

இதிலேதான் இந்த சாதாரணரின் தனித்தன்மையும், அவர் சார்ந்திருக்கும் இயக்கத்தின் தனித்தன்மையும் அடங்கியிருக்கிறது. இவரிடம் இலட்சியப் பற்றுறுதி, இயக்கத்திலே ஜனநாயகத் தன்மை - இந்தச் சீராந்த இயல்புக்குத் தலை வணங்குவோம்.

ஒரு முரட்டு விவசாயி போன்ற தோற்றமுடைய இந்த எளிய மனிதரின் வெற்றி எதிலே அடங்கியிருக்கிறது என்று பல சந்தர்ப்பங்களில் நான் வியப்புடன் யோசித்ததுண்டு.

எனக்குக் கிடைத்த பதில் இதுதான். இவர் உண்மையைப்போல் எளிமையானவர். பொய்மையற்ற சொற்கள்: பொய்மையற்ற வாழ்க்கை. நெஞ்சுக்கு நேர்மையானதைச் சொல்கிறார். சொல்லுக்கு நேர்மையாக வாழ்கிறார்.

இவருடைய வீரம் முற்றிலும் வெளிப்பகட்டு இல்லாதது. உலகில் சமுதாய நியாயம் சாத்தியம் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கைக் கொண்ட நேர்மையுள்ள அறிஞருக்கும் புரட்சியாளருக்கும் உரிய அடக்கம் வாய்ந்த தன்னலத்தியாகம் அவரது வீரம்.

சில ஆண்டுகளுக்கு முன் நெல்லையிலே சாதிக் கலவரம் மூண்டெழுந்தது. கலவரக்காரர்களின் ஒரே நோக்கம், கலவர வெப்பம் குறைந்துவிடக்கூடாது என்பதுதான்.

அந்த வேகத்தில், சாதி உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட தோழர் ஆர்.என்.கேயின் மாமனார் கொல்லப்படுகிறார்.

பாதிக்கப்பட்ட குடும்பத்திலிருந்து மெல்லிய முணு முணுப்பு கேட்டால் கூட போதும், பழிக்குப்பழி, அப்புறம் அதற்கு விலை என்று வெறிபிடித்த கூட்டம் இரு பக்கமும் காத்திருக்கிறது.

தோழர் நல்லகண்ணுவோ, சாதியின் பெயரால் இரத்த ஆறு ஓடுவதை விரும்பவில்லை.

உயிரிழப்பின் துயரம் தமது குடும்பத்தோடு முடியட்டும் என்று கருதி, மாமனாரின் படுகொலை செய்யப்பட்ட துயர நிகழ்வை மௌனத்தில் கரைத்தார்.

அதனால் கலவரப் பிரியர்களுக்கு வாய்ப்பில்லாமற் போய்விட்டது. மிகச் சிக்கலான அரசியல் பிரச்சினைகளைப் பற்றி அவ்வளவு எளிமையுடன் பேச என்பதை அவரிடம்தான் கண்டேன்.

சங்கராச்சாரி கைது குறித்து அவர் என்ன நினைக்கிறார் என்று தெரிந்துகொள்ள விரும்பினேன்.

அவசரமாக வெளியே புறப்பட்டுக்கொண்டிருந்தவர், போகிற போக்கில் ஒரு பழமொழி மாதிரி சொன்னார்: கிறுக்கன் கிழித்த வேட்டி கோவணத்துக்காச்சு என்கிற கதைதான்! தோண்டத் தோண்ட ஆழம்மிகும் அரசியல் விமர்சனம் அல்லவா இது!

அழகிய சொற்றொடர்களை புனைந்துரைத்து, பகட்டுரைகளால் பம்மாத்து செய்யத் தெரியாதவர்.

ஆனால் ஒரு மொழி எத்தனை அழகும் வலிமையும் வாய்ந்தது என்பதை அதன் சரியான பொருளில் ஆச்சரியம் கொள்ளும் விதத்தில் வெளிப்படுத்திவிடுகிறார்.

ஒப்பனையற்ற சொற்கள், முகத்தில் இரண்டு கண்களும், கையில் ஐந்து விரல்களும் போல இயல்பாக இன்றியமையாதனவாக விளங்குகின்றன.

அவருடைய சிரிப்பில்தான் எத்தனை கவர்ச்சி!

மனித அறிவீனத்தின் பாங்கின்மையையும், அறிவின் தந்திரமான வித்தைகளையும் நன்கு இனம் காணக் கூடியவராக இருந்தும் சாதாரண மக்களின் குழந்தைமை நிறைந்த வெகுளித்தனத்தில் இன்புறத் தெரிந்த மனிதரின் உளமார்ந்த சிரிப்பு அது!

பொறுப்பற்ற தன்மையை இரக்கமற்ற முறையில் வெறுப்பவராக இருக்கிறார்.

மழலையர் வகுப்பு முதல் கல்லூரி வரை தமிழ் வழிக் கல்வி கட்டாயமாக்கப்பட வேண்டும் என்று தமிழ்ச்சான்றோர் பேரவை பட்டினிப்போர் தொடங்கியபோது, தமிழ் வழிக்கல்விக்கான போராட்டத்துக்கு ஆதரவு கேட்டுத் தோழர் ஆர்.என்.கேயைச் சந்தித்தோம். அப்போது அவர் மனம் திறந்து பேசினார்.

அந்தக் காலத்தில் நமக்கெதுக்கு படிப்பு என்கிற மனோபாவம்தான் நாடெங்கும் இருந்தது.

இன்றோ, வறுமைப்பட்ட குடும்பத்தினர் கூடத் தங்கள் பிள்ளைகளுக்குத் தரமான கல்வி கிடைக்க வேண்டும் என்று கழுத்தில் காதில் இருப்பதை விற்றுக் கூடப்படிக்க வைக்கிறார்கள்.

இந்த வெகுஜன ஆர்வத்தை நமது ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் சரியாகப்பயன்படுத்தி சமூக அக்கறையுடன் செயல்பட்டிருந்தால் ஆங்கிலப்பள்ளிகல் முளைத்திருக்குமா? என்று வேதனைப்பட்டார் ஆர்.என்.கே.

அப்போது ஒரு நண்பர், இந்தக் குறைபாட்டுக்கு நீங்களும் (அதாவது கம்யூனிஸ்டுகளும்) ஒரு காரணம் இல்லையா? என்று கேட்டார்.

தோழர் நல்லகண்ணு நழுவவில்லை.

உண்மைதான். இந்தப் பிரச்சினையில் நாங்கள் போதிய கவனம் செலுத்தவில்லைதான் என்று சுய விமர்சனம் செய்துகொண்டார்.

இந்தப் பண்புதான் மிகச் சிறந்த மனிதருள் ஒருவராக விளங்கும் இந்த மனிதர்பால் என் உள்ளத்தை ஈர்த்து இழுத்துக்கொண்டது.

யாரிடத்தும் தோழமையுடன் பழகும், இவருக்கு பகை உணர்ச்சியே கிடையாதா? அதுவும் இருக்கிறது.

சமூக அவலங்கள் மீது, மனித மேன்மைகளை அழிக்கும் ஆதிக்க சக்திகள் மீது, சமரசப்படுத்தவோ தணிக்கவோ முடியாத பகைமை கொண்டிருப்பதை அவரால் மறைக்க முடியவில்லை.

அவரது இயல்புக்கு மாறான இந்தப் பண்மபை இலட்சியவாதிகளின் போர்க்குணம் மிகுந்த தன்னம்பிக்கை என்றே கொள்ளலாம்.

கருணையுள்ளமும், போர்க்குணமும் நிறைந்த தோழர் ஆர்.என்.கே. அவர்களுக்கு நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்.

❖

ஓங்கிய உருவம் ஆங்கே
உண்மையின் வடிவாய் நிற்கும்
ஏங்கிய ஏழைக் கூட்டம்
இழந்ததை மீட்க நிற்கும்
தாங்கிடும் தாய்மைப் பண்பால்
தமிழையும் போற்றி நிற்கும்
ஈங்கிவர் பேரைச் சொல்வோம்
எம் அண்ணன் நல்ல கண்ணு

எளிமைக்கே எளிமையாகும்
எளிமையார் எங்கள் அண்ணன்
ஒளிமிக்க பாரதத்தின்
உயர்வுக்காய் உழைக்கும் தோழர்

பழியேதும் இல்லா வாழ்வைப்
பயின்றவர் வென்று நின்றார்
அழிவில்லாப் புகழே கொண்டார்
அண்ணன் எம் நல்லகண்ணு

ஒரு வேட்டி சட்டை துண்டோடு
உழைப்பவர்க்காக வந்தார்
மருவில்லா தோற்றம் அஃதே
மாற்றங்கள் இன்றும் இல்லை
கருவுற்றார் பெற்ற போதே
காம்ரேடாகத்தான் பெற்றார்
திருவுற்ற வைகுண்டத்தார்
திகழ் அண்ணன் நல்ல கண்ணு

சிரிப்பிலே உள்ளம் காட்டும்
சிந்தனையாளர் தோழர்
வெறுப்பவர் உள்ளத்துள்ளும்
வெண்மையாய் நிற்கும் பாங்கர்
பொறுப்பான நடையே காட்டும்
பொறுமையின் சிகரம் என்று
கருப்பான எங்கள் அண்ணன்
காம்ரேடாம் நல்ல கண்ணு

எழுதுவார் தம்மைக் கண்டால்
ஏற்றியே போற்றி நிற்பார்
பழுதின்றி அவர் எழுத்தில்
படித்ததை விரும்பிச் சொல்வார்
தொழுதிட்ட உழவர் தங்கள்
தொல்லைகள் நீங்கச் செய்தார்
அழுதிட்டார் துன்பம் நீக்கும்
அண்ணன் எம் நல்லகண்ணு

கோபமே இல்லா தான
கொள்கையின் தோழர் கண்டேன்
தாபங்கள் தனக்கென்றில்லா
தனிப்பெரும் தோழர் கண்டேன்
தீபங்கள் ஏற்றி இந்தத்
திருவைகுண்டத்தாரைப் பாடி
மாபயன் பெறுவோம் வாழி
தோழர் எம் நல்லகண்ணு

கொள்கையால் மகிழும் மூத்தோர்
கொண்டிட்ட உடல் எண்பதுவாம்
நல்குதல் நலங்கள் மட்டும்
நாட்டிலே வறியோர்க்கெல்லாம்
அள்ளியே அன்பைத் தந்து
அனைவரின் உள்ள கொண்ட
நல்லவர் நல்ல கண்ணு
நற்றமிழ் போல வாழி



காம்ரேடாகத்தான் பிறந்தார்

நெல்லை கண்ணன்

சுயபலம் அறிந்தவர்! சுயநலம் மறந்தவர்!



விவசாயி போலிருக்கும்
சமுதாய வல்லுனராம்
கரிசல் நிலம் ஐந்திணையும்
கண்டுணர்ந்த நல்லகண்ணு

சமதருமப் பெருங்களத்தில்
தலைமுறைகள் உழைத்துயர்ந்த
எமதருமைத் தலைவரின்று
எண்பதினை எட்டுகிறார்!

விரிவான கற்றறிவு
வரலாற்றுப் படிப்பினைகள்
மறவாத பட்டறிவு
வஞ்சமிலா நுண்ணறிவு

விடுதலைக்கு முன்னும் பின்னும்
வீறுகொண்ட அரசியலால்
சிறைவாசம் அனுபவித்த
செங்கொடியின் தோற்றவேர்

சாதிக்கோடிச் சுயநலத்தால்
தரம் தாழ்ந்த அரசியலில்
மார்க்சு லெனின் பாரதியை
மனம் சுமந்த தோழரிவர்

சுயநலமும் வாரிசுமாய்ச்
சுருங்கிவிட்ட தமிழகத்தில்
நெடும்பயணச் சமதருமம
நெறிகாட்டும் ஒரு தோழர்!

அன்பிழைந்த கம்பீரம்
அகந்தையினை மென்னகையால்
வென்றுவிடும் நடுவுநிலை
பிறழாத புருறார்த்தம்

கருவமிலாச் சருவகலா
சாலையெனில் மிகையில்லை
நெறியாளர் புருவங்களை
நெறிக்கின்ற நெறியறியார்!

கம்பன் முதல் பரிணாமன்
கவிதைவரை அடையாளம்
கண்டு மகிழ் கின்ற பெருங்
களியாளர் இலக்கியத்தில்

ஏழைவிவ சாயிகட்காய்த்
தமிழகத்தின் நிலப்பரப்பைப்
பாதங்களால் அளந்தமகன்
அறிவிப்பிலா நடைப்பயணி

சங்கத் தமி ழோடு தொழிற்
சங்கத் தமிழ் பொதுவுடைமை
சிங்கத் தமி ழோடுயர்ந்த
செம்மொழியாம் நல்லகண்ணு

தமிழகத்தின் அனைத்தியக்கம்
சார்ந்தோரும் போற்றுகின்ற
திசைவாத நோய் மருந்தாய்ச்
சித்தாந்தத் தால் உயர்ந்தார்!

நாடுநம தென்றிருக்கும்
நல்லகண்ணு பாலன் இல்லம்
வீடு என வாழ்ந்துவரும்
வெற்றியினும் வெற்றியுண்டோ

சுமமரியா தையை மறந்தோர்
அரசியலால் பொருள் குவித்தார்
இவர் மரியாதை எதனால்?
சுய பலத்தை அறிந்ததனால்

கவிஞர் பரிணாமன்



விருப்பங்களின் விருப்பம்!

எளிமை
தன் முகம் பார்த்துக்
கொள்ளும் கண்ணாடி
இலக்கியம்
தன்னை உரசிப் பார்த்துக்கொள்ளும்
உரைகல்
உழைப்பு உரிமையோடு
குடியிருக்கும்
வீடு
பண்பு பூக்கும்
அன்பு வனம் எங்கும்
கவலை போக்கப்
பிறர் கவலை போக்கக்
கவலைப்படுகிற
தொடர் பயணத்துக்கு
இப்போது
எண்பது
இது தலைமுறைகளோடு
தொடர விரும்புவதே
விருப்பங்களின்
விருப்பம்

இரவீந்திர பாரதி



ஆயிரம் பிறை காணும் ஆர்.என்.கே!

அலைகட லொத்தார் ஆயினும் சிறிதும்
ஆர்ப்பரிப் போசைக ளின்றி
நிலவிடும் அமைதிச் சுடரென அரசியல்
நிறைவான் கதிரென நெஞ்சில்
கலையொடு கவிதை இலக்கியம் கட்சிக்
கடமையென் றுயர்பல துறையும்
மலர்மனோ ரஞ்சித மணப்பொழில் சிறக்க
வாழ்பவர் தோழர் ஆர்.என்.கே.!

வெள்ளைய ராட்சிக் கொடுமையை எதிர்த்து
வீறுகொண் டெழுந்தவந் நாளில்
பள்ளியில் படிக்கும் பாலனா யிருந்தும்
படிப்பினைக் காட்டிலும் வேகத்
துள்ளலோ டார்வத் துடிப்புடன் நாட்டுச்
சுதந்திர வேட்கையாம் நெருப்பிற் (கு)
எள்ளினைப் பிழிந்த நெய்யெனத் துவைந்த
எரிதழல் தியாகி ஆர்.என்.கே.!

பொறுமையும் அன்புப் புன்னகை முகமும்
பொலிவுறும் எளிமையின் தோற்றம்!
வறுமையும் இல்லா வளமையும் இல்லா
மத்திய தரமெனும் வர்க்கச்
செறிவுறு வாழ்க்கைத் துவள்நிலை யெனினும்
தெள்ளிய இலட்சிய வேட்கைத்
திறமதில் சீறும் சிங்கம தொத்த
திண்ணியர் தோழர் ஆர்.என்.கே.!

ஏழ்மையின் ஆழப் படியினில் வீழ்ந்தே
இடர்ப்படும் உழைப்பவர் தமக்கு
வாழ்வழி காட்டிப் போர்க்குண மிக்க
வர்க்கநல் லுணர்வினை யூட்டி
ஊழ்வினை விதியெனும் பொய்மையை விரட்டி
ஓங்குக புரட்சியென் றார்த்துச்
சூழ்நிலைக் கேற்ப தலைமறைவு வாழ்க்கைத்
துன்பத்தையும் இன்பமாய் ஏற்றார்!

இளங்குருத் தாக இருந்த நா ளிலிருந்தே
எழுச்சியோ டுழைத்திடும் உறுதிக்
களனெனப் பரந்து விரிந்த மார்க் சீயத்
தத்துவக் கருத்தினில் ஊறித்
திளைத்தவ ராக ஆயிரம் பிறைகண்
டெண்பதாம் அகவையும் தாண்டி
அளப்பறுங் கொடுமைச் சிறையுளும் அறப்போர்
திறத்தினால் உயர்ந்தமா வீரர்!

நெல்லையில் வான மாமலை யாக
நிலைத்தபே ரறிஞர் ''ஆ ராய்ச்சி''
எல்லையின் உச்சிச் சிகரமாய் இமய
கங்கையோ டிணைந்ததாம் யமுனை
அல்லவோ நல்ல கண்ணுவென் றிவரை
ஆர்வலர் அனைவரும் போற்றும்
வல்லமை பெற்றார்! வாலிப முறுக்குடன்
வாழ்கநற் புகழ்மிக வோங்கி!

கவிஞர் ஜகன்

இயக்கத் தோழர்களின்

இனிய நினைவுகள்



விவசாயிகளின் தோழர்

எம்.ஆதிமூலம்

தனது எண்பதாவது ஆண்டை நிறைவு செய்து எண்பத்து ஒன்றாவது ஆண்டில் கால்வைக்கும் அருமைத் தோழர் நல்லகண்ணு அவர்கள் நீண்டகாலம் வாழ்ந்து தனது கட்சி பணியைத் தொடர வேண்டுமென்று எனது வாழ்த்துக்களை உளம் கனிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

தோழர் நல்லகண்ணு அவர்களின் 80வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி மலர் கொண்டு வரும் முயற்சியை நான் பாராட்டுகிறேன்.

தோழர் நல்லகண்ணு அவர்கள் தனது பள்ளி பருவத்திலேயே விவசாய இயக்கத்தோடு தன்னை இணைத்துக் கொண்டவர்.

தியாகி பூதளபுரம் வேலுச்சாமி அவர்களிடம் கம்யூனிஸ்ட் போதனை பெற்று ஸ்ரீவைகுண்டத் திலிருந்து 30 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள திருக்கருங்குடி கிராமத்து விவசாயிகளுக்கு நடந்து சென்றே தனது பணியைத் துவக்கிய வராவார்.

திருக்கருங்குடி கிராமம் ஜியர் மடத்துக்குச் சொந்தமானது. விவசாயிகளுக்கு நிலத்திலும், குடியிருப்பு மனையிலும் எந்த பாத்தியதையுமில்லை. மடத்தினுடைய அனுமதியில்லாமல் கெட்டிக் கட்டிடம் கட்ட முடியாது. கூரை வீடுகளுக்கு கதவு நிலை வைக்க முடியாது. வெறும் ஓலை வளைசலைத்தான் கதவாக வைத்துக் கொள்ளலாம். தோழர் நல்லகண்ணு அவர்கள் தொடர்ந்து அந்த விவசாயிகளை ஒன்று திரட்டி போராடியதின் பலனாக இப்பொழுது சாகுபடி நிலங்களும், குடியிருப்பு மனைகளும் அவர்களுக்கு சொந்தமானது. தொடர்ந்து இயக்கம் நடத்தியதின் விளைவாக அங்கு மடத்தின் ஆதிக்கம் ஒழிந்து தற்பொழுது மாடி வீடுகள் கட்டிக் கொள்ளும் அளவுக்கு விவசாயிகள் உரிமை பெற்று இருக்கிறார்கள்.



தோழர் நல்லகண்ணு அவர்கள் கல்லூரி படிப்பை தொடங்கி புலவர் பட்டத்திற்காக படித்து கொண்டிருந்தபோது கட்சியிலிருந்து ஜனசக்திக்கு பணியாற்ற வரும்படி அழைப்பு வந்ததையொட்டி ஜனசக்தியில் சில வருடம் பணியாற்றினார்.

1949ல் கட்சி தடைசெய்யப்பட்ட பின் மீண்டும் நெல்லை மாவட்டத்திற்கே தோழர்கள் பாலதண்டாயுதம், மாணிக்கம் போன்றவர்களோடு தோழர் நல்லகண்ணு அவர்களும் தலைமறைவாக இருந்து நெல்லை மாவட்டத்தில் கட்சிப் பணியாற்றினார். அந்த சமயத்தில் பல தீவிரமான இயக்கங்களை நடத்தியதால் நெல்லை சதிவழக்கில் சேர்க்கப்பட்டு மதுரை சிறையில் அடைக்கப்பட்டார். மதுரை சிறையில் இருந்த போது ஏராளமான நூல்களை படித்து தன்னுடைய மார்க்சிய அறிவை வளர்த்துக் கொண்டார். மதுரை சிறையில் தோழர் பாலதண்டாயுதத்திற்கு அடுத்தபடியாக அதிக நாள் சிறையில் இருந்தவர் தோழர் நல்லகண்ணு ஆவர்.

சிறையிலிருந்து விடுதலை ஆனதற்கு பின்னர் நெல்லை மாவட்ட விவசாய சங்க செயலாளராக தொடர்ந்து தனது விவசாயப் பணியை தொடர்ந்தார். ஸ்ரீவைகுண்டம் பக்கத்தில் ஆறுமுக மங்களம், பேத்துவார் விவசாயிகளுக்கு நிலத்தில் எந்த உரிமையும் இல்லை. தோழர் நல்லகண்ணு அவர்கள் தொடர்ந்து போராடியதன் விளைவாக இப்பொழுது அந்த விவசாயிகளுக்கு நிலங்கள் சொந்தமாக்கப்பட்டன. அங்கு முற்றிலும் நிலச் சுவாந்தாரி முறை மறைந்துபோய் விட்டது. விவசாயிகளின் ஒற்றுமை காரணமாக கீழப்பசளை கிராமத்தை போன்று நிதிக்காக நெல் வசூல் செய்வது பாசிக் குத்தகை வசூல், மேய்ச்சலுக்கு வசூல் போன்ற வகைகளில் கிராம நிதியாக வசூல் செய்து கிராம அபிவிருத்தி வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன. ஓவ்வொரு ஆண்டும் கிராம வரவு செலவு பார்க்கும் போதும் தோழர் நல்லகண்ணு அவர்களை வைத்துத்தான் பார்ப்பது இப்பொழுதும் நடந்து வருகிறது.

அதே போல் அம்பாசமுத்திரம் தாலுகா கீழஆம்பூர் கிராமத்தில் சங்கம் வைத்து சங்கத்தின்

வலுவை கொண்டு நிலச்சுவாந்தார்களை கட்டுப்படுத்தி இப்பொழுதும் கிராமச்சங்க தலைவர் களை வைத்துத் தான் நிலச்சுவாந்தார்களுக்கும் 75-25 என்ற முறையில் சங்கமே முன்னின்றுபிரித்து நிலச் சுவாந்தார்களுக்கு பிரித்துக்கொடுத்து சங்கத்திற்கு ஒரு நிதியை எடுத்துக் கொள்வது பாசிக்குத்தகை போன்ற வசூல்கள் மூலம் நிதி வசூல் செய்து சங்கத்தின் பெயரில் ஒரு கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. அங்கு ஊராட்சித் தலைவர், கூட்டுறவு சங்கத் தலைவர் போன்றோர் சங்கத்தின் மூலம் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஊராட்சித் தலைவ ராகவும், சங்கத் தலைவராகவும் தோழர் சுடலைமுத்து நம்பியார் அவர்கள் தனது இறுதி காலம் வரை போட்டியில்லாமல் தேர்ந்தெடுக்கப்பட்டு கிராம குடிநீர் உள்பட கிராம அபிவிருத்தி வேலைகளை சிறப்பாக நடத்தி வந்தார்.

தோழர் நல்லகண்ணு அவர்களால் துவங்கப்பட்ட அந்த இயக்கம் அம்பாசமுத்திரம், ஆழ்வார் குறிச்சி, பாப்பாங்குளம் போன்ற பகுதிகளிலும் பரவி இருக்கிறது.

ஆம்பூர், ஆழ்வார்குறிச்சி போன்ற கிராமங் களுக்கு பாசன வசதிக்காக, ராமநதி, கடனாநதி அணைகள் கட்டுவதற்கு தோழர் நல்லகண்ணு அவர்களும், தோழர் முருகானந்தம் அவர்களும் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து அரசிடம் உத்தரவாதம் பெற்று அணைகள் கட்டப்பட்டு அதன் கீழ் உள்ள ஆம்பூர், ஆழ்வார் குறிச்சி, பாப்பாங்குளம் போன்ற ஏராளமான கிராமங்களுக்கு நீர்ப்பாசன உத்தரவாதம் ஏற்பட்டிருக்கிறது. வறட்சி காலங்களில் கூட இரண்டு அணைகள் மூலம் தண்ணீர் வசதி பெற்று பூர்ண விளைச்சல் ஏற்பட்டு வருகிறது. மேலும் தோழர் நல்லகண்ணு அவர்கள் களக்காடு போன்ற பகுதிகளிலும் தோழர் முத்துமாணிக்கம் போன்றவர் களுடன் சேர்ந்து ஏராளமான கிராமங்களில் பணியை மேற்கொண்டார்.

கோவில்பட்டி தாலுகாவில் வரி பாக்கிக்காக விவசாயிகளுடைய ஏர் மாடுகளை அதிகாரிகள் ஜப்தி செய்து ஏலமிடும் போது ஏலத்தில் எடுக்கவிடாமல் தடுக்க தோழர் நல்லகண்ணு, தோழர் அழகர்சாமி ஆகியோர் தலைமையில் ஒரு பெரும் இயக்கம் நடத்தப்பட்டது. அதில் வி.வி.ரெங்கசாமி அவர்களின் மாட்டை அதிகாரிகள் கைப்பற்றி பல ஊர்களில் ஏலமிட்டும் யாரும் ஏலம் எடுக்கவில்லை. இறுதியாக தோழர் ரெங்கசாமியிடமே மாட்டை அதிகாரிகள் ஒப்படைத்தார்கள். இதுபோன்ற பல இயக்கங்கள் மாவட்டம் முழுவதும் தோழர் நல்லகண்ணு அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டன.

1970 பரமக்குடியில் நடந்த மாநில விவசாயிகள் மாநாட்டிற்கு முன்பு நடந்த மாநில மாநாட்டில் தோழர் காத்தமுத்து பொதுச் செயலாள ராகவும், நானும் தோழர் நல்லகண்ணு அவர்களும் உதவி செயலாளர்களாக வும் தேர்ந்தெடுக்கப்பட்டோம்.

பரமக்குடி மாநாட்டில் விவசாயத் தொழிலாளர் சங்கத்திற்கு தோழர் காத்தமுத்து அவர்கள் பொதுச் செய லாளரானார். தமிழ்நாடு விவசாயிகள் சங்கப் பொதுச் செயலாளராகுவதற்கு முடியாத வகையில் தோழர் நல்லகண்ணு அவர்களுக்கு மாவட்டத் தில் வேலை இருந்ததினால் என்னை பொதுச் செயலாளராக தேர்ந்தெடுத் தார்கள். பின்னர் தோழர் காத்தமுத்து அவர்கள் மக்களவைக்கு தேர்ந்தெடுக் கப்பட்டதால் தோழர் நல்லகண்ணு அவர்கள் தமிழ்நாடு விவசாய தொழி லாளர் சங்க பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு சென்னையை மையமாக கொண்டு செயல்பட்டு வந்தார். அன்றிலிருந்து சுமார் 20 ஆண்டுகாலம் நானும் தோழர் நல்லகண்ணு அவர்களும் நெருக்க மாக எங்களது பணியை செய்து வந்தோம்.

குடும்பப் பிரச்சினையிலிருந்து இயக்கப் பிரச்சினை வரை மனம் விட்டு பேசுவோம். தோழர் நல்லகண்ணு அவர்கள் நிதானமாக எந்த பிரச்சினையையும் அணுகுவார். என்னை பொறுத்தவரை அவசரமாக எந்தவொரு முடிவையும் அறிவித்து விடுவேன். அதில் சில தவறுகள் இருந்தால் அவற்றை சுட்டிக்காட்ட நல்லகண்ணு தவறமாட்டார்.

அவரை விவசாய தொழிலாளர் சங்க செயலாளராக மட்டும் பார்க்கா மல் விவசாய தொழிலாளராகவே பார்ப்பார்கள். அந்த அளவுக்கு அவருடைய பணி தாழ்த்தப்பட்ட மக்களுடன் நெருங்கிய பணியாகவே இருந்தது. அவர் என்னிடம் கூறியது, தஞ்சை மாவட்ட செயலாளர் தோழர்

சிவனேசம் தனது மகள் திரு மணத்தை ஒரு தாழ்த்தப்பட்டவர் தலைமையில் நடத்த விரும்பி தோழர் நல்லகண்ணுவை தாழ்த்தப் பட்டவர் என்று நினைத்து ஜாதிவெறி பிடித்த வாண்டையார் வீட்டில் தனது மகள் திருமணத்தை தோழர் நல்லகண்ணு தலைமையில் நடத்திவைத்தார். பின்னால்தான் தோழர் நல்லகண்ணு முக்குலத்தை சேர்ந்தவர் என்று தோழர் சிவசேன னுக்குத் தெரிய வந்தது. அந்த அளவுக்கு தாழ்த்தப்பட்டவர்களிடம் நல்லகண்ணு ஒன்றிப் பழகி வந்தார்.

தோழர் நல்லகண்ணு அவர்கள் கலைத்துறை யிலும் தன்னுடைய முயற்சியை தொடர்ந்து செய்து வந்தார். தோழர் ஜெயகாந்தன், திருமதி ராஜம் கிருஷ்ணன் போன்ற வர்களுடைய நூல்களை வாங்கிப் படித்து அதற்கு தனது பாராட்டுகளை அவர்களுக்கு எழுதுவது பழக்கமாக கொண்டிருந்தார். இது தொடர்பாக ஒவ்வொரு நூலாசிரியரும் தங்களு டைய படைப்புகளையும் தோழர் நல்லகண்ணு அவர்களுக்கு அனுப்பி வைப்பார்கள். இந்த வகையில் கலைஞர்களுடன் தனது தொடர்பை இடைவிடாமல் வைத்திருந்தார். தமிழ்நாடு பல்கலைக் கழக தமிழ் துறைத் தலைவர் ஔவை நடராஜ னிடம் நல்லகண்ணு அவர்களுடைய கலைப்பணியை விவரித்து பாட் டாளி பாடிய பாவலர்கள் என்ற தலைப்பில் ஆய்வறிக்கையை சமர்ப்பித்து விளக்கிப் பேசினார். திரு ஔவை நடராஜன் அவர்கள் தோழர் நல்லகண்ணு அவர்களுடைய முயற்சியைப் பாராட்டி சன்மானமும் பாராட்டுதலையும் பெற்றார். அந்த ஆய்வறிக்கை புத்தக வடிவிலும் வந்துள்ளது.

தனது கிழக்கு ஜெர்மனி பயணத்தைப் பற்றி ஒரு புத்தகத்தை வெளியிட்டார். அதேபோல் கங்கை காவேரி நூலையும் எழுதி வெளியிட்டார். இந்த வகையில் தோழரின் கலைப்பணி தொடர்ந்து நடந்து வருகிறது.

தோழர் நல்லகண்ணு அவர்கள் கட்சியின் மாநிலச் செயலாளராக வந்த பின் பல்வேறு மாற்றுக் கட்சி தலைவர்களின் நன்மதிப்பைப் பெற்றார்.

பொறுமையின் சிகரமான தோழர் நல்லகண்ணு விடம் நான் தொடர்ந்து பணியாற்றி வந்தது எனக்கு பெருமைக்குரிய விஷயமாக நான் கருதுகிறேன். நான் மதிக்க கூடிய மாநிலச் செயலாளர்களில் சிலர் எம்.ஆர்.வெங்கட்ராமன் அவர்களும் தோழர் நல்லகண்ணு அவர்களுமே ஆவார்கள்.

மீண்டும் அவர் மாநிலச் செயலாளராக இல்லாவிட்டாலும் கட்சிப் பணியை தொடர்ந்து ஆற்றிவர எனது மனமார்ந்த வாழ்த் துக்களை தெரிவித்துக் கொள் கிறேன்.

தோழர் நல்லகண்ணு அவர்கள் தியாகத்தை பற்றி சொல்லிக் கொண்டே போகலாம். இத்துடன் எனது வாழ்த்துரையை முடித்துக் கொள்கிறேன்.

வழிகாட்டி

சோ.அழகர்சாமி

தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்களுக்கு 80வது ஆண்டு நிறைவு விழாவும், சிறப்பு மலர் வெளியீடும் மகிழ்ச்சிக்குரிய நிகழ்வுகள் ஆகும். நட்பு ரீதியிலும், தோழமை ரீதியிலும் நீண்ட காலம் பழகியிருக் கின்றோம்.

இருவரும் சமகாலத்தவர்கள். ''இன்றைய காலகட்டத்தில் இப்படியும் ஒருவர்'' என்று எடுத்துக்காட்டாக விளங்குபவர். விவசாயிகள், தலித் மக்கள், பெண்கள் போன்ற பிரச்சினை களிலும் இயக்கங்களிலும் அதிகம் கவனம் செலுத்துபவர், இலக்கிய ஈடுபாடும், தமிழ் மொழிப் பற்றும் அவருக்கு உண்டு.

கோவில்பட்டி பகுதியில் நடைபெற்ற 'உழவுமாடுகள் ஜப்தி' செய்ததை எதிர்த்து போராட்டம், உணவுப் பொருள் பதுக்கலை வெளிக் கொண்டு வந்த போராட் டம், வறட்சி நிவாரணப் போராட் டம் போன்ற போராட்டங்களில் எங்களுக்கு உறுதுணையாக நின்று வழிகாட்டியவர்.

நிறைய எழுத வேண்டும் என்ற விருப்பம் இருந்தாலும் உடல் நிலை காரணமாக எழுத முடியவில்லை.

தோழர் நல்ல கண்ணு அவர்களுக்கும் அவரின் துணைவி யார் ஏ.ரஞ்சிதம் அவர் களுக்கும் மற்றும் அவரது குடும்பத்திற்கு எனது வாழ்த்துக் களைத் தெரி வித்து, அவரது பணி தொடர்ந்து சிறக்க வாழ்த்துகிறேன்.

தொண்டனும் தலைவனுமான தோழன்

ஏ.எம்.கோபு

விடுதலையில் பெரும்பாலான சுதேசி, முதலாளிகளும், நிலச்சுவாந்தார்களும் கூட ஆர்வம் கொண்டிருந்தனர். ஆயினும், அதனைப் போராடிப் பெறும் வலிமை படைத்தவர்களான தொழிலாளர் களையும் அணிதிரட்டிப் படைநடத்தும் பொறுப்பை பொதுஉடைமைவாதிகளும் (கம்யூனிஸ்ட்), சமதர்மவாதிகளும் (சோஷலிஸ்ட்களும்) ஏற்க வேண்டியிருந்தது.

பிரிவினையுடன் பிணைந்து பிறந்த சுதந்திர பூமி காமன்வெல்த்தில் முடிந்து போடப்பட்டிருந்தது. கிராமப்புறங்களில் பெருமக்களை வாட்டி வதைத்த நிலப்பிரபுக்களும், தொழிலாளர் களைச் சுரண்டிக் கொடுத்த முதலாளிகளும் தமக்கே பூரண சுதந்திரம் கிடைத்துவிட்டதாக நினைத்து ஆனந்தக் கூத்தாடினர். விவசாயிகளும் தொழிலாளர்களும் இதனால் ஆத்திரமூட்டப்பட்டனர்.

சொத்துவரி செலுத்துவோரும் பட்டதாரிகளுமே 6 1/4 சதவீத குடிமக்களே வாக்காளர்களாயிருந்து தேர்ந்தெடுத்த பட்டாதாரர்களின்

ஆட்சியாகவே காங்கிரஸ் அமைச்சரவை இருந்தது. 1950 ஜனவரி 26ல்தான் நாட்டின் அரசியல் சாசனம் நடை முறைக்கு வந்தது. குடியரசு பிரகடனப் படுத்தப்பட்டது.

சுதந்திர தினத்துக்கும் குடியரசு அறிவிப்புக்கும் இடைப்பட்ட காலம் சோதனை மிகுந்தது.

நாட்டின் பல இடங்களில் விவசாயி கள் தொழிலாளர்களின் மீது காங்கிரஸ் அரசாங்கங்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் பலர் பிணமாயினர். அக் கொடுமையை எதிர்த்து ஆயுதமேந்திய போராட்டங்கள் வெடித்தன. ஒன்று பட்டிருந்த கம்யூனிஸ்ட் இயக்கம் அவற்றுக்குத் தலைமை தாங்கியது.

தமிழ்நாட்டில் காங்கிரஸ் ஆட்சியின் அப்போதைய முதல்வராயிருந்தவர்கள் பிரபுக்கள் வழிவந்த குமாரசாமி ராஜா வும், ராமசாமி ரெட்டியாரும் என்ற விபரமும் அந்தக்கால அரசியலின் குணஇயல்பைச் சுட்டிகாட்டுவதாகும். அந்த சமயம் 95 பேர் மீது நெல்லை சதி வழக்குப் போட்டு ஆர்.நல்லகண்ணு, ப.மாணிக்கம், வி.மீனாட்சிசுந்தரம், ஐ.மாயாண்டிபாரதி, வேலுச்சாமி தேவர் உள்ளிட்ட 11 பேர் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டனர். ராஜாஜி அமைச்ச ரவை ஜென்ம தண்டனையை ரத்து செய்தது, சிறைவாசம் அனுபவித்த வரை போதுமென்று மற்றவர்களை விடுவித்த போதிலும், மத்திய வெடி மருந்துச் சட்டத்தின் கீழ் அவர் தண்டிக் கப்பட்டதை மட்டும் திரும்பப்பெற முடியாதென்று கூறிவிட்டதால், 1951 முதல் 1956 டிசம்பர் வரை ஏழாண்டு காலம் சிறையில் தவமிருக்க வேண்டிய தாயிற்று. அந்த நாட்கள் நிறையப் படிக்கவும், சிந்திக்கவும் அவருக்கு வெகுவாகப் பயன்பட்டிருக்கிறது.

மார்க்சிய விஞ்ஞானம், லெனினி யப் புரட்சி, சிங்காரவேலரின், பெரியா ரின் சமூக சீர்திருத்த எண்ணங்கள், தொழிலாளர்களையும் விவசாயிகளை யும் திரட்டி சமுதாய மாற்றங்களையும் உருவாக்குவதில் மெய்யான நாட்டம் கொண்டவர். அதேபோல், பாரதி மீதும் வற்றாத வாஞ்சை கொண்டவர்.

''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் - வீணில்
உண்டுகளித்திருப்போரை நிந்தனை செய்வோம்!''

என்ற பாரதியின் கட்டளையைச் சிரமேல் தாங்கி, அந்தக்கனவை நனவாக்க அந்தரங்க சுத்தியோடு அரும்பாடு படுவார்.

விவசாயத் தொழிலாளர்களை சங்கம் சேர்க்க 1964-65 முதல் மாநிலப் பொறுப்பேற்று, கிராமந் தோறும் பேருந்திலும் நடந்தும் போய் ஆள்திரட்டும் அற்புதத் தொண்டர். தமிழகத்தில் அவர் பாதம்படாத கிராமம் இல்லை என்றே சொல்லலாம். கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளராக 4 முறை ஒருமன தாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, கட்சித் தோழர்களின் அபரிமிதமான அன்புக்குப் பாத்திரமான தோழர்.

''இனிய உளவாக இன்னத கூறல், கனியிருப்பக் காய்கவர்ந்தற்று'' என்ற வரையறையை உய்த்து உணர்ந்து பேசுபவர். மாற்றுக் கருத்துடையோரின் மனமும் புண்படாத சொற்களைப் பிரயோகித்தாலும், தனது கட்சியின் அரசியல் நிலையை மயிரிழை யளவுகூட விட்டுக் கொடுக்கமாட்டார். கட்சிக் கருத்து அப்படி இருக்கிறது, தன்னிலை வேறு என்று வெளியில் இதுவரை பேசியறியாத தலைவர். பலவீனமானவர்களையும் எளியோரையும் மட்டம் தட்டியோ இளக்காரமாகவோ நினைத்தறியாதவர்.

தமிழிலியக்கியத்தின் உயிர்துடிப்டை உணர்ந்து பேணிக்காப்பவர். அதில் பொதிந்து கிடக்கும் முற்போக்கு வித்துக்களை விருட்சமாக்கிக் கண்டு பிடிப்பதில் கவனமாயிருப்பவர்.

ஆருயிர்க் கணவன், அன்புத் தந்தை, பிரியமான தாத்தா.

சாதி பேதங்களையும், பெருமைகளையும் வேரறுத்து, வெந்நீர் விட வரிந்துகட்டி நிற்பவர்.

பெண்ணுரிமை போற்றுபவர். மூட நம்பிக்கை களின் வைரி. தேசபக்தர். மனிதநேயர். மனித உரிமையை மதிப்பவர்.

மனிதரில் ஒரு மாமனிதன்.

எத்தனையோ விதத்தில் பிறர் பார்த்து பாடம் கற்றுக்கொள்ள உதவும் நல்லவர்.

சிறந்த கம்யூனிஸ்டுகள் எப்படிப் பட்டவர்கள் என்பதைப் பிறருக்கு அடையாளம் காட்டும் கலங்கரை விளக்கம்.

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லால் வோறொன்றறியாத உயர்ந்த உன்னதமான இந்தப் பெருந்தகையுடன் கடந்த 35 ஆண்டு காலமாகத் தோளோடு தோள்நின்று கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மாநில தலைமைக் குழுவில் பணியாற்றியதை இணையிலாப் பெருமையாகக் கருதி நெஞ்சம் புடைக்கிறேன்.

அளப்பரிய அன்புக்குரியவர்

எஸ்.எஸ்.தியாகராஜன்

40 ஆண்டுகளுக்கும் மேலாக நான் அறிந்த ஒருவரைப் பற்றி எழுதும்போது, பல்வேறு நினைவுகள் எழுகின்றன. அதிலும் கடந்த பல ஆண்டுகளாக நாடறிந்தவராக மட்டுமின்றி, நல்லவர், எளிமையானவர், நேர்மையானவர் எனப் புகழ் பெற்றுள்ள தோழர் ஆர்.நல்லகண்ணுவைப் பற்றி எழுதுவது சுலபமல்ல. அரசியல் வாழ்வில் அவருடன் பயணித்தவன் என்பதைக் காட்டிலும், என்னிலும் மூத்த சகோதரராகவே அவரைக் கருதி வந்துள்ளேன்.

சற்றேறக் குறைய 40 ஆண்டுகளுக்கு முன் கோவில்பட்டியில் அவரிடம் எனது முதல் சிறுகதை ஒன்றைக் கொடுத்துப் படித்துப் பார்க்கச் சொன்னேன். அதைப் படித்துவிட்டு, நன்றாக இருக்கிறது. ஜனசக்திக்குக் கொடுக்கிறேன் எனக் கூறினார். நான் ஏதோ ஒரு முயற்சியில் எழுதிய அக்கதை பின்னர் ஜனசக்தி சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்றது. அவரிடம் கொடுக்காமலிருந்தால், ஏதேனும் பிரபல பத்திரிகைக்கு அனுப்பி, அது பிரசுரமாகாது போயிருக்கும்.

ஆனந்தவிகடன் சிறுகதைப் போட்டியின் நடுவராக இருந்த பிரபல எழுத்தாளர் கு.அழகிரிசாமியை மருத்துவமனையில் தோழர் நல்லகண்ணு பார்த்தபோது, அவரிடம் கு.அழகிரிசாமி, போட்டிக்கு வந்த கதைகளில் சிறந்த இரண்டில் ஒன்று எட்டையபுரத்தைச் சேர்ந்த சதாசிவம் எழுதியது. பாரதி பிறந்த மண் என்பதால் அக்கதையை முதல் பரிசுக்குத் தேர்வு செய்ததாகக் கூறி இருந்தார். இச்செய்தியைப் பெருமகிழ்ச்சியுடன் நல்லகண்ணு கூறிமகிழ்ந்துள்ளார்.

மகாகவி பாரதியிடம் அவருக்கு ஆழ்ந்த ஈடுபாடு உள்ளது. எட்டையபுரம் பாரதி விழாவில் பங்கேற்கக் குடும்பத்துடன் வருவதும் எல்லா நிகழ்ச்சிகளையும் கண்டுகளிப்பதும் அவரது இயல்பு.

ஒரு பேச்சாளரின் நல்ல கருத்தை உடன் பாராட்டுவதுடன், ஏதேனும் தவறான கருத்துக் கூறியிருப்பாரானால், மிகுந்த தயக்கத்துடனும், இதமாகவும் அக்கருத்து சரியல்ல எனக் கூறுவதும் அவரது வழக்கம். நல்லதை உடனடியாகப் பாராட்டும் அவர், தவறான கருத்தை உடனடியாகத் தவறு எனக் கூறமாட்டார். நின்று நிதானித்து, உரிய நேரத்தில் அக்கருத்தைக் கூறியவரிடம் பேசிப் பேசி அது தவறான கருத்து என உணரும் வகையில் கூறுவார்.

நல்ல கதை, கவிதை எதைப் படித்தாலும், அதன் படைப்பாளிக்கு ஒரு வரி கார்டு போட்டு விடுவார். இல்லாவிடில், அவரை சந்திக்கும் போது, நேரில் பாராட்டுவார். பிரபல எழுத்தாளர்கள் என்றில்லை. ஒரு புதிய எழுத்தாளரென்றால் கூட, அவரது படைப்பின் சிறப்பைக் கூறி உற்சாகப்படுத்துவார்.

பொன்னீலனின் 'புதிய தரிசனங்கள்' வெளியீட்டு விழாவுக்கு சில தினங்களுக்கு முன்னர்தான் புத்தகம் அவரது கைக்குக் கிடைத்தது. மூன்று வால்யூம்களையும், இரவு பகலாகப் படித்து முடித்து விட்டுத் தான் விழாவில் உரையாற்றினார். பரிட்சைக்குப் படிக்கும் மாணவன் போல இதனைச் செய்து மனநிறைவு கொண்டார்.

நான் ஜனசக்திக்கு எழுதும் கட்டுரை களை அவரிடம் படித்து திருத்தம் செய்யக் கேட்டுக் கொள்வேன். ஒருபோதும் மேலோட்டமாகப் பார்த்துக் கொடுப்பதில்லை. எவ்வளவு வேலை இருப்பினும், மிக நிதானமாக ஊன்றிப் படித்து, தேவைப்படும் திருத்தங்களையும் கூறுவார். இத்தகைய ஈடுபாடு (involvement) மிக அரிதாகவே மற்றவர்களிடம் காணப்படுகிறது.

அவரது இலக்கிய ஈடுபாடு குறித்துக் கூறுவதற்கு எவ்வளவோ இருக்கிறது. எல்லாவற்றையும் எழுத இடமில்லை. ஒரு முறை நெல்லை சந்திப்பில், ஞாயிற்றுக்கிழமைகளில் பிளாட்பாரத்தில் பழைய புத்தகங்கள் விற்கும் கடை ஒன்றில் நான் ஒரு புத்தகத்தை விலை கேட்டேன். விலை திகையவில்லை. நான் அக்கடைக்காரரிடம் கூறினேன். ''இப் புத்தகத்தை நான் வாங்குவேன். இல்லாவிட்டால் வேறு ஒருவர் மட்டும் வாங்குவார். அவர் ஊரில் இல்லை. எனவே விலை குறைத்துக் கொடுக்காவிட்டால் பிறகு பார்த்துக் கொள்கிறேன்'' எனக் கூறி வந்து விட்டேன். அடுத்த வாரம் அந்த வேறு ஒருவர் அப்புத் தகத்தை வாங்கிக் கொண்டு கட்சி அலுவலகம் வந்து சேர்ந்தார். அவர்தான் தோழர் நல்லகண்ணு.

1968ம் ஆண்டு, பாளையங் கோட்டை அருகிலுள்ள நொச்சிகுளம் கிராமத்தில் விவசாயிகள் மீது காவல்துறை நடத்திய துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்து, நீதி விசாரணை கோரி தோழர்கள் ஆர்.நல்லகண்ணுவும் எஸ்.ஏ.முருகானந்தமும் நெல்லையில் உண்ணாவிரதமிருந்தார்கள். ஏழாவது நாள் தோழர் எம்.காத்தமுத்து எம்.பி. முதலமைச்சர் அறிஞர் அண்ணாவைச் சந்தித்து, அவரது உறுதிமொழியின் அடிப்படையில் நெல்லை வந்து உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார். அதன் பின் தோழர் நல்லகண்ணுவிடம் உண்ணாவிரதத்தால் பாதிப்பு உண்டா? எனக் கேட்டபோது,

சிறையில் 15 நாட்கள் வரை உண்ணாவிரத மிருந்துள்ளதாகவும், இது 7, 8 நாட்கள் தானே? ஒன்றும் பாதிப்பில்லை என்று கூறியதும், அவரது மன உறுதியைக் காட்டியது.

1972-ம் ஆண்டு விவசாயப் போராட்டத்தின் போது, பாளையங்கோட்டை சிறையில் ஒரு மாத காலம் சிறையில் இருந்தோம். இரண்டாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் சிறையில் இருந்ததால் அவ்வப்போது கிளர்ச்சி ஏற்படும். வேகமாக வந்து அமைதிப்படுத்துவதில் அவரது தலைமைப் பண்பு மிளிர்ந்தது. பல்வேறு கட்சியினரும் கட்சி சார்பற்ற விவசாயிகளும் திரண்டிருந்த அவ்விடத்தில் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் விதத்தில் அவரது செயல்பாடிருந்தது.

பின்னர் 1978 என்று கருதுகிறேன். பஞ்சாலைத் தொழிலாளர்கள் போராட்டத்தில் நானும் கைதாகிப் பாளையங் கோட்டை சிறையில் இருந்தபோது, எங்களைப் பார்க்க வந்த தோழர் நல்லகண்ணு, மற்றவர்களிடம் பேசும் போது, தோழர் தியாகராஜன், கட்சிக் கல்விக்கு மாஸ்கோ போக வேண்டியவர். உங்களுடன் கைதாகி இங்கிருக்கிறாரே? எனக் கூறியுள்ளார். சிறையிலிருந்த தி.மு.க. நண்பர்கள், சிறையில் அன்றாடம் நடைபெறும் கூட்டத்திலேயே இது குறித்துப் பேசி, நான் மிகப் பெரிய தியாகம் செய்துள்ளதைப் போல வர்ணித்தார்கள்.

தமிழ்நாட்டில் எங்கு ஜாதிப் பிரச்சினை ஏற்பட்டாலும் அது குறித்துக் கவலைப்படுவதுடன், நேரில் அங்கு சென்று காரணத்தை அறிந்து அதனைத் தீர்க்கப் பாடுபட்டு வருபவர் தோழர் நல்லகண்ணு. விவசாயப் பிரச்சினைகள் என்றாலும், விவசாயத் தொழிலாளர்கள் பிரச்சினை என்றாலும் அதனைப் பற்றி நன்கு அறிந்தவர். அதே போல் பழங்குடி மக்கள் நிலை அறிய தமிழ்நாட்டின் அனைத்து மலைகளுக்கும் சென்றுள்ளார்.

1961-ல் குத்தகை விவசாயிகள் பிரச்சினைக்கான இயக்கம் நடைபெற்ற போது தோழர் பி.சீனுவாசராவ் நெல்லைக்கு வந்து, சுற்றிப் பார்த்து, காவல்துறைக்கு எதிராகக் கண்டன அறிக்கை எழுதி வெளியிட்டார்.

அக்கையெழுத்துப் பிரதியினை நெல்லை கட்சி அலுவலகத்தில் பிரேம் (frame) செய்து மாட்டினார். ஏனெனில் தோழர் பி.சீனிவாசராவை ரயில்வே ஸ்டேஷனில் வழிஅனுப்பி வைத்த தோழர் நல்லகண்ணு, அதற்கு ஓரிரு தினங்கள் கழித்து தோழர் பி.சீனிவாசராவின் மறைவுச் செய்தி கேட்டதும் கலங்கி விட்டார்.

1980ம் ஆண்டுகளில் நெல்லை மாவட்டம் புளியங்குடி பகுதியில் ஜாதிக் கலவரம் ஏற்பட்டபோது, மிகுந்த மனக் கவலை கொண்ட தோழர் நல்லகண்ணு, அப்பகுதியில் அனைத்துக் கட்சியினரும் சென்று அமைதி காக்க முயற்சி மேற்கொள்ள வேண்டுமெனக் கூறி, தானும் கலந்து கொண்டு மூன்று நாட்கள் கிராமம் கிராமமாகச் சென்றார்.

பின்னர் 90ஆம் ஆண்டுகளில் ஜாதிக் கலவரம் ஒட்டப்பிடாரம் பகுதியில் ஏற்பட்டபோதும் அமைதி காக்க பெருமுயற்சி எடுத்தார். அவரது மாமனாரும், எனது மதிப்பிற்குரிய நீண்ட கால நண்பருமான தோழர் அன்னசாமித் தேவர், இக்கலவரத்தின் போது வெட்டிக் கொலை செய்யப்பட்டார். 80 வயதுக்கு மேற்பட்ட முதியவரின் படுகொலை அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது. இலேசாகக் குரல் கொடுத்தாலே தீப்பிடித்து எரியும் சூழ்நிலை.

தனது வேதனையை நெஞ்சின் ஆழத்தில் புதைத்துவிட்டு, தனது குடும்ப வருத்தத்தை வெளியில் காட்டாமல், மறுநாள் திட்டமிட்டபடி அமைதி ஊர்வலத்தில் பங்கேற்க நெல்லை சென்று சமூக அமைதியை நிலைநாட்டியவர் தோழர் நல்லகண்ணு.

பின்னாளில் முதலமைச்சர் கலைஞரிடம், மாவட்டங்களுக்கும் போக்குவரத்துக் கழகங்களுக்கும் தேசியத் தலைவர்கள் பெயர் சூட்டப்பட்டும், ஜாதியத் தலைவர்களாக இனங்காணும் சமூகச் சூழலில், இவை அறவே நீக்கப்பட்டு, சமூக அமைதி காண வேண்டுமென உறுதிமிக்க குரலில் கோரிக்கை வைக்க தோழர் நல்லகண்ணுவால் முடிந்தது.

தோழர் நல்லகண்ணுவிடம் உள்ள எளிமை, இயல்பானது. தற்போது மினரல் வாட்டர் வந்து விட்டது. இதற்குப் பல ஆண்டுகள் முன்பு வரை, கோவை சென்று வந்தால், சிறுவாணித் தண்ணீரைக் கொண்டு வந்து வைத்துக் கொண்டு, ஓரிரு நாட்கள் மதிய நேரம் குடித்து மகிழ்வார். உடனிருப்பவர்களுக்கும் கொடுப்பார்.

சீனாவுக்குப் பயணம் செல்ல முடிவான போது, லக்கேஜ் பை வேண்டுமெனக் கேட்டிருந்தார். பாண்டிச்சேரியிலிருந்து ஒரு தோல் பையை ஒரு தோழர் கொண்டு வந்தார். என்ன விலை இருக்குமெனக் கேட்டார். வந்த தோழர் ‘பணம் தேவையில்லை. கொடுத்து வரச் சொன்னார்கள்’ எனக் கூறினார். வலியுறுத்திக் கேட்ட போது ரூ.2500 இருக்கும் எனக் கூறினார்.

இவ்வளவு விலை உயர்ந்த பொருள் எனக்கு வேண்டாமெனக் கூறி திருப்பி அனுப்பி விட்டார்.

எந்த விலை உயர்ந்த பொருளுக்கும் ஆசைப்பட மாட்டார். ஒரு முறை கூறினார் (ஆனந்தவிகடனில் வெளி வந்தது) “என் குடும்பத்திற்கு நான் பொருளாதார ரீதியில் எந்த உதவியும் செய்ததில்லை. அளப்பரிய அன்பை மட்டுமே செலுத்தியுள்ளேன். அவர்களும் எதையும் எதிர் பார்க்காமல் என் மீது அன்பு செலுத்தி வருகிறார்கள்”

குடும்பத்தினர் மட்டுமல்ல; அவர் நேசிக்கும் கட்சியும், நாடும் அவர் மீது அளப்பரிய அன்பை செலுத்தி வருகிறது.

எமது தோழர்

சி. மகேந்திரன்

ஆர்.என்.கே. என்று எங்களால் அன்புடன் அழைக்கப்படும் எமது தோழர், ஆர்.நல்லகண்ணு அவர்களை முப்பது ஆண்டுகளுக்கு முன் சந்தித்தேன். அவசரகால சட்ட கெடுபிடிகளுக்கு இடையில் அந்த மாணவர்களின் மாநாடு திருச்சியில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்பொழுது நான் திருவாரூர் கல்லூரி மாணவன். மாநாட்டிற்கு செல்வதற்கான திட்டங்களை வகுக்காமலேயே முன்கூட்டியே மாணவர்களிடம் நிதிதிரட்டி விட்டோம். மாணவர்களை அழைத்துக் கொண்டு பஸ்ஸில் செல்வதா அல்லது ரயிலில் செல்வதா என்று கடைசி நேரத்தில் குழப்பம் வந்து விட்டது. லாரியில் செல்வது என்று முடிவெடுத்தோம். அவசர கால சட்டத்தைப் பற்றி எங்களுக்கு எதுவும் தெரியாது. லாரியில் மாணவர்களை அழைத்துச் செல்வது கூட, முதல் அனுபவம். பல இடங்களில் லாரி நிறுத்தப்பட்டது. காவல்துறை அதிகாரிகள் பலர் நிறுத்தி மிக அச்சம் தருமாறு விசாரணையை தொடங்கிவிட்டார்கள். என்னோடு வந்த மாணவர்களில் சிலர் தேவையற்ற தொல்லைகளில் மாட்டிக் கொண்டதாக யோசிக்கத் தொடங்கி விட்டார்கள். அதில் சிலர் நட்பு காரணமாக என்னால் அழைத்து வரப்பட்டவர்கள். காவல்துறை அதிகாரிகள் திருவாரூருக்கே திரும்பிச் செல்லுமாறு எங்களுக்கு ஆலோசனை வழங்கினார்கள். மாணவர்களில் சிலர் ஊருக்கே திரும்பி விடலாம் என்று உறுதியோடு கூறினார்கள். நானும், சில தோழர்களும் எப்படியும் சென்று விட வேண்டும் என்று போராடி, ஒருவாறாக மாநாட்டிற்கு போய்ச் சேர்ந்தோம். மாநாட்டின் தொடக்க விழா நிகழ்ச்சிகள் முடிந்து விட்டன.

கால தாமதமாக வந்தது குறித்து, நான் எங்கள் மாவட்டத் தலைவர்களால் மிக கடுமையாக விமர்சிக்கப்பட்டேன். நடந்தது என்னவென்று கேட்காமலேயே இப்படி பேசிக் கொண்டிருக்கிறார்களே என்ற கோபத்தில் நான் எதுவும் பேசாமல் மௌனமாகி விட்டேன். அப்பொழுது தான் தோழர் ஆர்.என்.கே. அவர்கள் அங்கு வந்து சேர்ந்தார். காவல்துறையால் காலதாமதம் ஏற்பட்டிருக்கலாம் என்று கூறி சமாதானப்படுத்தினார். எனக்கு இது மிகுந்த ஆறுதலைத் தந்தது. ஆனால் அதைவிட அதிர்ச்சி தரும் மற்றொன்றும் இங்கு நிகழ்ந்தது.

'ஜனசக்தி' வார இதழில் இதற்கு முந்தைய வாரத்தில் ஒரு கட்டுரை எழுதியிருந்தேன். அதுவும் இந்த வார இதழில் நான் எழுதிய முதல் கட்டுரை. அதைப் பற்றி அப்பொழுதே பேசத் தொடங்கி விட்டார். முதலில் என்னை அவர் தெரிந்திருக்கிறார் என்பது எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது. அதைவிடவும் நான் எழுதிய கட்டுரையை அவர் படித்திருந்ததும் பாராட்டியதும், எனக்கு அன்றிருந்த சோர்வைப் போக்கியதுடன், தனிப்பட்ட உற்சாகத்தை வழங்கியது. இதுதான் ஆர்.என்.கே. அவர்களிடம் எனக்கு ஏற்பட்ட முதல் சந்திப்பு. புதியவர்கள் யார் எழுதினாலும் அதைத் தேடிப் படிப்பதும், அவர்களைப் பாராட்டி ஊக்கப்படுத்துவதை இவர், இது நாள் வரை, முக்கிய கடமையாகக் கருதி வருவதை நான் கவனித்திருக்கிறேன்.

தோழர் ஆர்.என்.கே. அவர்களிடம், மிகவும் அருகில் இருந்து பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்துள்ளது. இதனை வாழ்வின் அரிய வாய்ப்பாகவே கருதுகிறேன். என்னிடம் இயல்பாகவே அமைந்த கோபத்தை போக்கிக் கொள்ள, இது எனக்கு உதவியது. தமிழக விவசாய வாழ்க்கையைப் பற்றியும் தமிழர்களின் பண்பாட்டு வாழ்க்கைக் குறித்தும் மிகவும் ஆழ்ந்த ஞானம் இவரிடம் விளைந்து கொண்டேயிருக்கும். சில நேரங்களில் இவர் கூறும் தகவல்கள் நம்மை அதிர்ச்சியில் வியக்க வைக்கும். நாம் படித்தறியாத கேட்டறியாதவைகளாக இவை இருக்கும். குறிப்பாக அடித்தள மக்களைப் பற்றிய இவரது பார்வை புதிய சிந்தனைகளைத் தூண்டக் கூடியவையாக அமைந்து விடும். இதற்கு இவரது வாழ்க்கையில் அவர் அமைத்துக் கொண்ட பாதை தான் காரணமாக இருக்க வேண்டும்.

தலித் மக்கள் விடுதலைக் குறித்த இவரது பார்வையை இளம் வயதிலேயே இவர் உருவாக்கிக் கொண்டிருக்க வேண்டும். காந்தியம் இதற்கான சிந்தனையை இவரிடம் விதைத்துள்ளது. கம்யூனிஸ்ட் இயக்கம் இதற்கான விஞ்ஞானப் பூர்வமான கண்ணோட்டத்தை வழங்கி, அச்சமற்று போராடுவதற்கானப் பேராற்றலை வழங்கியுள்ளது. தன் உயிரினும் மேலாக மதித்த தன் மாமனார் இறந்த போது இது சாதி மோத



லாக மாறிவிடக் கூடாது என்பதற்காக அவர் கூறியவை பலராலும் நினைவு கூரப்படுகிறது. தலித் விடுதலை குறித்த அசைக்க முடியாத உறுதிப்பாடும், ஆழ்ந்த அனுபவ ஞானமும் தான் இதற்குக் காரணமாகும். ஒடுக்கப்பட்ட வர்களுக்கான போராட்டத்தை வாழ்க்கையாகக் கொண்டவர்களுக்கு இது எத்தகைய முக்கியத்துவமுடையது என்று நான் பலமுறை யோசித்திருக்கிறேன். உணர்ச்சிப் பெருக்கு அறிவை செயலிழக்கச் செய்துவிடக் கூடாது என்பதில் ஆர்.என்.கே. எப்பொழுதும் உறுதி கொண்டவர்.

இந்துத்துவம் மறைந்தும் ஒளிந்தும் வருண தருமங்களை தமிழ் மண்ணில் விதைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்த காலம். பாரதீய ஜனதாக் கட்சி மத்திய ஆட்சியைக் கைப்பற்றியிருந்தது. அதிகாரத்தின் பல்வேறு வலிமையைப் பயன்படுத்தி, தமிழகத்தைக் கைப்பற்ற தீவிர முயற்சிகளில் ஈடுபட்டது. இந்த சூழல் தோழர் ஆர்.என்.கே. அவர்களுக்கு ஆழ்ந்த வேதனையைத் தந்திருக்க வேண்டும். பல நேரங்களில் மிகவும் சோர்வடைந்த மனநிலையில், அதே சமயம் அதை மாற்றுவதற்குரிய வழிகளை தேடிக் கொண்டிருப்பதை நான் கவனித்திருக்கிறேன். பெரியார், அம்பேத்கர் ஆகியோரின் கருத்துகளுக்கும், மார்க்சீய லெனினியத்துக்கும் இடையேயான இணக்கத்தை இயங்கியல் அடிப்படையில் இந்த தருணங்களில், இவர் யோசித்து வெளிப்படுத்தியக் கருத்துகள் முக்கியமானவையாகக் கருதுகிறேன். காங்கிரசுக்குள் இருந்த வருண தரும எதிர்ப்பு, சாதியற்ற சமூகத்திற்காக தந்தைப் பெரியார் நடத்தியப் போராட்டம், தலித் மக்களுக்கான அம்பேத்கர் மனித உரிமை சார்ந்த கருத்தமைவு, ஆகியவை குறித்து மிகவும் ஆழமாக யோசித்தார். தந்திரங்களாலும், சூழ்ச்சியாலும் தன்னை வளர்த்துக் கொள்ள திட்டமிட்டிருந்த இந்துத்துவ சக்திகளை தமிழக அரசியலில் தனிமைப்படுத்துவதில் தனிக்கவனம் செலுத்தினார். இந்த முயற்சியில் ஓரளவிற்கு வெற்றியும் கிடைத்தது.

பண்பாடு குறித்து பல கேள்விகள் தமிழகப் பின்புலத்தில் எழுந்துள்ளது. மனிதர்கள், இந்தியர்கள், தமிழர்கள், என்ற மூன்று நிலைகளில் வாழும் நமக்குள், முரண்பாடுகள் இல்லாமல் இவை மூன்றையும் ஒருங்கிணைத்து சமத்துவம் என்னும் திசையை நோக்கி நகரவைத்தல் அடிப்படை லட்சியமாகும். இதில் தமிழ், தமிழ் பண்பாட்டை புறக்கணித்தல் மிகவும் ஆபத்தானது. ஜீவா, தொ.மு.சி.ரகுநாதன், பேராசிரியர் வானமாமலை போன்றவர்கள், தமிழ் சமூகத்தின் பொதுவுடைமைப் பண்புகள், போராட்டப் பண்புகள் ஆகியவற்றை ஆய்வு செய்து இயக்கத்திற்கான வலிமையாக வளர்த்தெடுக்க முயற்சி செய்தார்கள். இதில் தோழர் ஆர்.என்.கே. அவர்கள் மிகுந்த தெளிவைக் கொண்டிருந்தார் என்று தான் கூற வேண்டும். தமிழுக்கு எதிரான சமஸ்கிருதத்தின் ஆதிக்கம் பற்றி பல செய்திகளைத் தோழரிடமிருந்து அறிந்து கொண்டேன். ஒரு முறை காஞ்சிபுரத்தில் சங்கராச்சாரியார் வள்ளலாரை, சந்தித்ததைப் பற்றி ஆர்.என்.கே. அவர்கள் குறிப்பிட்டு சொன்னார். சங்கராச்சாரியார் உலக மொழிகளுக்கெல்லாம் சமஸ்கிருதம் தாய்மொழி என்று குறிப்பிட்டதாகவும், அதற்கு வள்ளலார் தாய்மொழி ஒன்று உண்டென்றால் தந்தை மொழி இருக்க வேண்டுமல்லவா? அதுதான் எனது தமிழ் மொழி என்று தெரிவித்ததாகவும் கூறினார். தமிழ்த் தென்றல் திரு.வி.க. வோடு இவருக்குள்ள தொடர்பு நம்மை சிலிர்க்க வைத்தது. குற்றால அழகை ரசித்துக் கொண்டு, மலை மீது நடந்து சென்ற மறக்கவியலாத மனப் பதிவுகளை எல்லாம் நான் தோழர் ஆர்.என்.கே. அவர்களிடம் தெரிந்து கொண்டேன்.

கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஒற்றுமைக்கான அவசியத்தை சமீப காலங்களில் மிக கூடுதலாகவே ஆர்.என்.கே. வலியுறுத்தி வருவதை நான் அறிவேன். பிளவுபடாத கட்சியில் தோழர்களிடம் படர்ந்து செழித்திருந்த தோழமையைப் பற்றி ஆர்.என்.கே. அவர்கள் கூடுதலாக தெரிவிக்கக் கூடியவர். டெல்லி நகரில், குளிர்மிகுந்த ஒரு நாளில், மறைந்த கம்யூனிஸ்ட் தலைவர் பி.ராமமூர்த்தி அவர்களை மருத்துவமனையில் சந்தித்திருக்கிறார். ஆரம்ப காலங்களில் மிக நெருங்கிப் பழகிய தலைவர். தோழர் பி.ஆர். அவர்களின் கடைசி காலம் அது. குளிருக்கு கம்பளி உடை இல்லாமல் இருக்கிறாயே என்று அவர் கொடுத்த கம்பளி உடையை இன்னமும் பத்திரமாக வைத்திருக்கிறார். இன்றைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் செயலாளர் தோழர் என்.வி. அவர்களும் தானும் மதுரையில் இருந்தபோதுதான், பாலு தூக்கிலிடப்பட்டார் என்பதையும் சிறைக் கொட்டடிக்குள்ளிருந்து அந்தவீரப் புதல்வனுக்கு எப்படிப் புரட்சிகர முழக்கங்களோடு வழியனுப்பினோம் என்பதையும் ஆர்.என்.கே. அவர்கள் சொல்லும் போது சுற்றியிருப்பவர்களின் கண்கள் கலங்கி விடும். மறைந்த தலைவர் நல்லசிவம் அவர்களுக்கும் ஆர்.என்.கே. அவர்களுக்கும் இடையேயான தோழமை மிகவும் மதிப்புமிக்கது.

தோழர் ஆர்.என்.கே. அவர்கள், பொறுமையை

யும் உறுதிப்பாட்டையும் ஒருங்கே பெற்றவர். அவரிடம் கோபத்தையே பார்த்ததில்லை என்று அனைவரும் சொல்லுகிறார்கள். அவர் கம்பைக் கையிலெடுத்துக் கொண்டு சண்டைக்கு தயாரானதை நான் பார்த்திருக்கிறேன். இருபது ஆண்டுகளுக்கு முன், திருப்பத்தூர் இடைத்தேர்தல். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி போட்டியிட்டது. கம்யூனிஸ்ட் கட்சியைப் பற்றி, தரக்குறைவான முறையில் ஒரு காரின் மூலம் பிரச்சாரம் செய்து கொண்டேயிருந்தார்கள். காவல்துறையிடம் முறையிட்டோம். பலன் இல்லை. ஆர்.என்.கே. அப்பொழுது தேர்தல் பொறுப்பேற்றிருந்தார். இளைஞர்கள் அனைவரையும் அழைத்து அந்தக் காரைத் தடுத்து நிறுத்தும்படி உத்தரவிட்டார். நாங்களும் ஆவேசத்துடன் சென்று காரை நிறுத்திவிட்டோம். திரும்பிப் பார்த்தால் கோபம் பொங்கும் முகத்துடன் கையில் கம்புடன், ஆர்.என்.கே. ஓடி வந்ததைப் பார்த்தேன். சம்பந்தப்பட்டவர் மன்னிப்பு கேட்டதுடன் பிரச்சினை முடிந்தது. கட்சியின் கௌரவத்திற்கு இழுக்கு ஏற்பட்டால் இவர் பொங்கி எழுந்து விடுவார் என்பதை அன்று தெரிந்து கொண்டேன்.

ஆர்.என்.கே. அவர்களின் இல்லத்தில் நிகழ்ந்த சோகம் அவருடைய பேத்தி சண்முகபாரதியின் இழப்புத்தான். பதினைந்து வயதில் இந்த துயரம் நிகழ்ந்தது. ஆண்டுகள் கழிந்தாலும் யாராலும், இன்னமும் இந்த துயரத்திலிருந்து விடுபட முடியவில்லை. உடல் நலமற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோது மாமா என்று அழைத்தக் குரல் இன்னமும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது. சண்முகபாரதியின் சாயல் ஆர்.என்.கே. அவர்களை ஒத்திருக்கும். உடல், நிறம், அனைத்தும் அப்படியே ஈரோடு மாவட்டம் பவானியில் கட்சியின் மாநிலக் குழு நடைபெற்ற நேரத்தில் தான் இந்த மரணம் நிகழ்ந்தது.

செய்தி கிடைத்தவுடன், பவானியிலிருந்து புறப்பட்டு காரிலேயே சென்னைக்கு வந்து சேர்ந்தோம். ஆர்.என்.கே. அவர்கள் யாரிடமும் அதிகம் பேசவில்லை. ஆழ்ந்த மௌனத்துடனேயே அவரது பயணம் அமைந்தது. வீட்டில் நுழைந்த உடன், எல்லோரும் அழத் தொடங்கிவிட்டார்கள். எனக்குள்ளும் அழுகை பொங்கிக் கொண்டு வந்தது. ஆர்.என்.கே. அவர்கள் நிதானத்தை இழக்காமல், குடும்பத்தினரின் அழுகையை நிறுத்த முயற்சித்தார். இப்படி உணர்ச்சியை வெளிக்காட்டாமல் இருக்கும் குணம் இவருக்கு எப்படி அமைந்தது என்று யோசித்தேன். சிறிது நேரத்திற்குப் பின் அவருடைய மூத்த அண்ணன் வருவதாகச் சொன்னார்கள். மாடியிலிருந்து ஆர்.என்.கே. அவர்களுடன் கீழே இறங்கி செல்கிறோம். தனது அண்ணனைப் பார்த்த உடன் 'அண்ணா' என்றார். கதறியழத் தொடங்கி துயரம், வடிவதற்கு சில நொடிகள் தேவைப்பட்டது. கலங்காதவர் என்று பெயர் பெற்ற இவரின் மனக்குகைக்குள் தேங்கியிருந்த பாசப்பெருக்கை ஒரு நொடியில் கண்டுணர்ந்தேன்.

நமக்கு கிட்டிய கூடுதல் பலம்

தேவ. பேரின்பன்

அறுபது ஆண்டுகளுக்கும் மேலான அப்பழுக்கற்ற தூய அரசியல் வாழ்வுக்காகவும் ஓய்வும் சலிப்புமற்ற லட்சியப்பூர்வமான தியாகங்களுக்காகவும் தோழர் ஆர்.என்.கே. இன்று கம்யூனிஸ்டு 'எல்லை'யைத் தாண்டி தமிழகமெங்கும் போற்றப்படுகிறார். கொள்கைச் சரிவும் நெறிச் சீரழிவுகளுமே அறமாகிய நமது சமகால அரசியல் உலகில் தமது வாழ்நாள் முழுவதும் அவர் போற்றி வளர்த்து வந்த நற்பண்புகள் வியப்போடு நோக்கப்படுகின்றன.

தற்கால தமிழக அரசியலின் 'ஆற்றல்கள்' ஏதுமற்றவர் தோழர் ஆர்.என்.கே. அவர் சிறந்த நாவுக்கரசர் அல்ல; கவின்மிகு எழுத்தாளரல்ல; அதிரடி கலகக்காரருமல்ல. ஆயினும் அவர் தமிழக அரசியல் நற்பண்புகளின் 'மாடலாக' அனைவராலும் போற்றப்படுகிறார்.

மிகுந்த அடக்கம்; யாரிடமும் பணிவு; கூச்சம்; அன்பு; மென்மையான உரையாடல்; எளிய, வெளிப்படையான தனிநபர் வாழ்க்கை 'தலைவருக்கான' அடையாளங்களை பூசிக்கொள்ளாத உறுதி. கட்சி அரசியலைத் தாண்டிய நன்மதிப்பை தோழர் ஆர்.என்.கே.வுக்கு தமிழகம் தருவதற்கு, அதிலும் இன்று தருவதற்கு நியாயமான காரணங்கள் உண்டு. இப்படிப்பட்டவர்தான் அரசியலில் இருக்க வேண்டும் என்ற

தமிழக மக்களின் மனச்சாட்சியின் தாகம் தோழர் ஆர்.என்.கே.-வைக் கண்டறிவதன் வழியே வெளிப்படு கிறது. தானைத் தலைவர்கள் பற்றிய கனவுப்புனைவுகள் கேலிச்சித்திரமாக உடைந்து உருக்குலைந்த அவலமே அவரவர் அரசியல் வாழ்வாய் அமைந்த காலத்தில் ஒளிவீசப் பிரகாசிக்கும் 'உதாரணம்' ஒன்று அவர்களுக்குத் தேவை. அரசியல் உலகின் பெருமூச்சாக ஆர்.என்.கே. இன்று அறியப்படுவதற்கு இந்த ஒரு காரணம் போதும்.

ஆர்.என்.கே. வேறுவிதமாக இருக்க முடியுமா? 'இந்நிலையைத் தான் பற்றி நிற்கிறேன்; வேறு விதமாக என்னால் இருக்க முடியாது' என்று மார்டின் லூதர் சொன்னதைத்தான் இங்கு நினைவுகூற முடியும்.

அவர் வேறுவிதமாக இருக்க முடியாதுதான். ஏனெனில் எல்லா வற்றுக்கும் முதலாவதாக அவர் ஒரு கம்யூனிஸ்ட் ஊழியர். கம்யூனிஸ்ட் கட்சிதான் இத்தகைய ஊழியரை உருவாக்கியுள்ளது. பி.சீனிவாச ராவின் எதிர்பார்ப்பு அது.

ஆர்.என்.கே.-வை உருவாக்கிய கட்சிச் சூழல் அத்தகையது. பாப்லோ நெருடாவின் 'எனது கட்சி' என்ற கவிதை ஆர்.என்.கே.-வுக்கு பிடித்தமான கவிதைகளில் ஒன்று. அந்த கவிதையின் ஒளிவீசும் வரிகளின் ஆன்மாவை அத்தகு கட்சியில் வாழ்பவன் தான் அறிய முடியும். அத்தகைய தகுதியான கட்சி வழியே வாழ்ந்து உருவாகியதால் - கம்யூனிசம் என்ற உயரிய மனிதகுல லட்சியத்துக்காக போராடிப் போராடி... குருதி சிந்தி மாய்ந்த மாமனிதர்களின் தடம் தொடர்ந்த காரணத்தால் - தனது தியாக வாழ்வின் அத்தியாயங்களை தானாகவோ அல்லது யார் மூலமோ தம்பட்டம் அடித்துக்கொள்ளும் அற்பவாத அவலத்துக்கு அவர் ஆட்பட்டு விடவில்லை.

உழைக்கும் வர்க்கங்களை ஒன்றுபடுத்துவதில் - அவர்களை 'வர்க்கமாக' திரட்டுவதில், திட்டவட்டமாகக் களத்தில் நின்று தமிழகத்தின் ஏழை விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களின் வாழ்நிலை மீது, வர்க்க அரசியல் என்ற அடிப்படையின் மீது அவரது தொடர்ந்த செயல்பாடு நமது சமகால கம்யூனிச பரிசோதனையின் சிறந்த சான்றாக விளங்குகிறது.

ஒரு கம்யூனிஸ்ட் ஊழியனின் பரிசோதனை அனுபவம் நடைமுறை பற்றியது மட்டுமல்ல; கருத்தியல் சார்ந்த நடைமுறை பற்றியது அது; மார்க்சியத்தை படைப்பாக்க வழியில் ஆக்கம் செய்யும் வல்லமை வாய்ந்தது. அத்தகைய கருத்தியல் சார்ந்த நடைமுறை வழியே அறுபது ஆண்டு காலம் பயணித்த காரணத்தால் தமிழகத்தின் நிலம், நீர், வாழ்க்கை, இலக்கியம், பண்பாடு என அனைத்தின் மீதும் ஆழ்ந்த ஞானம் பெற்ற புலமை மேலோங்கிய அணுகுமுறை அவரிடம் காணப் படுகிறது.

வர்க்கச் சுரண்டலோடு சாதியக் கொடுமைகள் நீடிப்பதற்கு எதிரான நமது சமகால சமதர்ம இயக்கத்தின் கடமைகளை வர்க்கப் போராட்டத்தின் வழியேதான் நிறைவேற்ற முடியும். அதற்கான விரிந்த அளவிலான சமூக நீதி - சமதர்ம இயக்கங்களின் ஒற்றுமைமையை தமிழக அரசியலில் முன்மொழிந்து நிற்பவர் தோழர் ஆர்.என்.கே. இத்தகைய ஒற்றுமை நமது சமகால தமிழக சமூக பொருளாதார நெருக்கடி தீர்வதற்கு அவசியம். இத்தகைய அவசியம் கருதியே ஒரு 'கம்யூனிஸ்ட் முன்மொழிவு' செய்யப் பட்டுள்ளது. இந்த முன்மொழிவு மூலமே சாதி அரசியல் சகதியில் சிக்கிய தமிழகம் மீள முடியும். அத்தகைய மீட்சியோடு சேர்ந்துதான் தமிழகத்தின் உழைக்கும் வர்க்க அரசியலும் வளர முடியும்.

கம்யூனிஸ்டுகள் இந்திய நிலைகளுக்கு மார்க்சியத்தை வளர்க்கவில்லை என்ற 'குற்றச் சாட்டுகள்' நமது 'நண்பர்களால்' தொடர்ந்து முன்வைக்கப்படுகின்றன. அவர்கள் சாதி, மொழி, தேசிய, இனம் போன்ற அடையாளங்கள் மீது செயல்படவே இல்லை என்ற அவதூறு தொடர்ந்து பரப்பப்படுகிறது. ஆனால், இது முற்றிலும் பொய்யான உள்நோக்கங்கள் கொண்ட பிரச்சாரம் என்பதற்கு கட்சியின் எண்பது ஆண்டுகால வரலாறே சாட்சியம். தமிழ் மொழி வளர்ச்சியை - தமிழகத்தின் வளர்ச்சியை, சாதி எதிர்ப்பு போராட்டத்தை பூர்ஷ்வா வழியில் கம்யூனிஸ்டுகள் நடத்த முடியாது. கம்யூனிஸ்டுகளின் வழி உழைக்கும் வர்க்க அரசியல் பாதை. அதன் வழியேதான் இந்த பிரச்சினைகளைக்

கம்யூனிசம் எதிர்கொள்கிறது. தமிழகத்தின் முற்போக்கு மரபின் தொடர்ச்சியாகவே கம்யூனிஸ்ட் கட்சி தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. இத்த கைய மரபுவழிப் புரட்சி இயக்கத்தை கண்டறிவதில், ஆர்.என்.கே. ஒரு 'மரபுவாதியாகவே' விளங்குகிறார். அது சிங்கார வேலர், ஜீவானந்தம் ஆகியோரின் வழிப்பட்டதானப் படைப்பாக்க மார்க்சியத்தின் தொடர்ச்சியாகும்.

வரலாற்றில் தனிநபர் வகிக்கும் பாத்திரம் குறித்து மார்க்சிய வாதங்கள் நிறையவே நடந்துள்ளன. கட்சி அரசியலுக்கும் அப்பால் தனிநபர்களின் ஆற்றலே வரலாற்றைத் தீர்மானிக்கிறது. மக்களின் வரலாற்று இயக்கத்துக்கு அவர்களே மேய்ப்பர்களாக உள்ளார்கள் என்ற தனிநபர்வாத கருத்தியலை மார்க்சியம் நிராகரிக்கிறது. அதே சமயத்தில் வரலாற்றில் மாமனிதர்களாக அடையாளம் காணப்பட்ட தனிநபர்கள் தமது வரலாற்றுக் காலத்தின் சமூக இயக்கத்தின் அவசியத்தை மிகத் துல்லியமாக கூர்ந்து வெளிப்படுத்தி நிறைவு செய்வதில் தொலைநோக்கோடு செயல்பட்டதால்தான் தலைவர்களாக உயர்ந்தனர். இது முற்றிலும் ஒரு சிக்கலான இயக்கவியல். இந்த இயக்கவியலைத் தாண்டி வேறு தனிப்பட்ட நற்குணங்களுக்காக மட்டும் நிச்சயமாக அவர்கள் போற்றப்படுவதில்லை.

லெனின், மகாத்மா காந்தி, நெல்சன் மண்டேலா, மாசேதுங், பிடல் காஸ்ட்ரோ, ஹோசிமின் போன்ற மாமனிதர்கள், அவர்களே ஒரு இலக்கமாக - மேய்ப்பர்களாக- மக்கள் என்னும் மந்தையை புரட்சிக்கு இட்டுச் சென்றவர்களாக அடையாளம் காணும் மேலோட்டமான மனக்கிளர்ச்சி மார்க்சிய அற்பவாதம் வரலாற்று ஆக்கம் குறித்து முதலாளித்துவ கருத்தியலை கம்யூனிஸ்ட் இயக்கங்கள் புதுப்பித்து விடுகின்றன. இத்தகைய மார்க்சிய அற்பவாதத்துக்கு ஆளாகாதவர்கள் நமது கட்சியை கம்பீரமான முறையில் வழிநடத்தினார்கள் என்பதுதான் நமது பேறு.

டாக்டர் ஜி.அதிகாரி, இ.எம்.எஸ்., சி.ராஜேஸ்வரராவ், சர்தேசாய், அச்சுதமேனன், பூபேஷ்குப்தா, இந்திரஜித் குப்தா, என்.கே.கே., பி.ராமமூர்த்தி, கீதா முகர்ஜி என எண்ணற்ற தலைவர்கள், கம்யூனிஸ்டு இயக்கத்தின் இத்தகைய மாண்புகளைத் தாங்கி நின்றனர். கம்யூனிச நெறிகளின் சாரதிகளாகத் திகழ்ந்தனர். தமிழகத்தில் சிங்காரவேலர் தொடங்கி ஜீவா, சீனிவாசராவ், பாலன், கே.டி.கே., ப.மாணிக்கம் எனப் பெரும் பட்டியலே நீள்கிறது. இவர்கள் தனிநபர்கள் அல்ல. இவர்கள் இயக்கமாக வாழ்ந்தவர்கள். இயக்கத்தின் அருமை பெருமைகளை, ஆற்றல்களை, சிறப்புகளை தமது வாழ்வின் மூலம் வெளிப்படுத்திய வர்கள். எத்தகைய புகழ் மொழிகளுக்கும் இறையாகாத பேராண்மை என்ற ஆளுமை அவர்களிடம் நிரம்பி யிருந்தது.

கம்யூனிஸ்டு அரசியலின் மையப்புள்ளியாகிய வர்க்கப் போராட்ட வழியிலான மானுட விடுதலையே அவர்களது வாழ்வின் ஆதாரமாக அமைந்தது. அதை ஒரு யாகத் தீயாகவே அவர்கள் வளர்த்தனர்.

இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் வரலாற்றில் வட்டார அளவிலான குழுக்கள் என்ற நிலையிலிருந்து அகில இந்தியக் கட்சி நிலைக்குக் கட்சியைக் கட்டுவதில் 1930களில் கட்சி வெற்றிபெற்றது. விடுதலைக்குப் பின் கட்சியின் புரட்சிகர வீரியத்தின் மீதும் ஜனநாயகப் புரட்சி உத்திகளின் மீதும் பிளவுவாதம் ஊக்குவிக்கப்பட்ட போது சிறு வேறுபாடுகளும் பிளவுகளுக்கு நியாயமாய் அமைந்தன. பிளவுகளின் காரணமாய் இந்திய உழைக்கும் மக்களின் வர்க்க அரசியல் பலவீனமடைந்தது; அவற்றின் வரலாற்றுப் பிழைகள் நிஜமாகவே அரங்கேறிய போதும் அந்த துன்பியல் நாடகத்தை ஒப்பாமல் கட்சியை உறுதியாகப் பற்றி நின்று பல்லாயிரக் கணக்கானவர் தமது இன்னுயிரை ஆகுதியாக்கி வளர்த்து புரட்சி இயக்கத் தீ அணையாமல் காத்த கட்சியின் புகழார்ந்த மரபின் தொடர்ச்சியாகவே தோழர் ஆர்.என்.கே. விளங்குகிறார்.

நெருக்கடியில் சிக்கியுள்ள தமிழகத்தின் சமூக - பொருளாதார வாழ்நிலையில், சமூக நீதியும் சமதர்மமும் மாற்றாக மலர்வதற்கான நெடிய போரில் உறுதிமிகு பாறைக்குன்றுகளாக காலூன்றி நிற்கும் போராளிகள் வரிசையில் நம்மில் ஆர்.என்.கே. முன்னிலையில் நிற்கிறார் என்பதே நமக்குக் கிட்டியுள்ள கூடுதல் பலம்.

பொருள் பொதிந்ததோர் வாழ்க்கை

கே. சுப்பராயன், எம்.பி.,

காட்சிக்கு எளியதோர் உருவம்! கடுஞ்சொல் ஒன்றறியாத நாக்கு! கலக்கம் கண்டறியாத உள்ளம்! கருப்பு நிறம் கவ்விக் குடிகொண்ட கருமேனி! கசங்கிக் காட்சி தரும் சட்டை வேட்டி! முறையாக வாரிவிடப்படாத தலை முடி! கள்ளம் கபடமற்ற கிராமியத் தோற்றம்! ஒப்பனைகளைக் கடந்து ஊடுறுவி உண்மைக் கோலத்தை ஆழமாகப் பார்க்கும் தீட்சண்யப் பார்வை! அவரது 80ஆம் ஆண்டு பிறந்தநாள் நேரத்தில் இதுதான் தோழர் நல்லகண்ணு அவர்களைப் பற்றிய எனது படப்பிடிப்பு!

பொதுவாகக் கம்யூனிஸ்டுகள் தங்கள் பிறந்த நாட்களைக் கொண்டாடுவதில்லை. பிறந்த நாட்களைக் கொண்டாடுவதற்குரிய ஒன்றாக அவர்கள் என்றுமே கருதியதில்லை! மகத்தான புரட்சிகர இயக்கத்தின் வாழ்வும் வரலாறும் தானே கம்யூனிஸ்டுகளின் வரலாறு! விஞ்ஞானக் கம்யூனிசத்தின் மூலவர்களான மார்க்ஸ், ஏங்கல்ஸ் தொடங்கி இன்றுவரை, கட்சி வரலாற்றிலிருந்து தனித்துத் தன் வரலாற்றை யார் பார்த்தார்?

ஆனால் இயக்கத்தின் தேவை ஒன்றிற்காகக் கட்சியே தீர்மானிக்கிற போது, தனித் தோழர்களின் விழாக்கள், இயக்க வரலாற்றின் ஒரு அங்கமாகக் கொண்டாடப்படுவதுண்டு. அந்த வகையில்தான் தோழர் நல்லகண்ணுவின் பிறந்தநாள் கொண்டாடப்படுகிறது. இயக்க வாழ்க்கைப் போக்கில், இயக்கத்தோடு இயக்கமாக இரண்டறக் கலந்து வாழ்கிற கம்யூனிஸ்டுகளின் வரலாற்றை, இயக்க வரலாற்றிலிருந்து தனித்துப் பிரித்துப் பார்க்க முடியாது!

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எவ்வளவு மகத்தான பெருமை கொண்டது! இதிகாசங்களிலும் இலக்கியங்களிலும் காணமுடியாத மகத்தான சரித்திர புருஷர்களை ஈன்ற இயக்கம் கம்யூனிஸ்ட் இயக்கம்! கோடான கோடிக்கணக்கான மனிதர்கள் இன்னலும் இடறலும் நீங்கி இன்பக்கரை ஏறி மகிழ்ந்து வாழ்வதற்கு, துன்பம் நிறைந்த பாதையைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதில் இன்பம் கண்டவர்கள் கம்யூனிஸ்டுகள்!

வாழையடி வாழையாகத் தோன்றி வாழ்ந்து, போராடி மடிந்த அத்தகைய புரட்சிகரப் போர்க்கூட்ட மரபில் வந்த, புடம்போட்ட தங்கம் தான் தோழர் நல்லகண்ணு! மகா உன்னதமான கம்யூனிஸ்ட் இயக்கத்தை உருவாக்கி வளர்த்த போராட்டத்தில், தனது இளமைப் பருவத்தை சித்திரவதை நிறைந்த சிறைக் கூடத்தில் கழித்த தியாகசீலர்! அடக்குமுறை நெருப்பில் சுடப்பட்டுச் சாம்பலாகாமல், சுடர்விட்டு ஜொலித்த வெண்சங்கு அவர்! தன்னைத் தேய்த்துக் கட்சியின் கம்பீரத்தை உயர்த்திக் காப்பாற்றி நிற்கும் அடித்தளக் கற்களில் அவரும் ஒருவர்! வேடம் கட்டி நடித்து ஏமாற்றும் கள்ளிப்புதர் மனிதர்களுக்கு இடையில் அவர் ஓர் அகில் மரம்!

தோழர் நல்லகண்ணுவின் அரசியல் வாழ்க்கை பல அதிசயங்களைக் கொண்டது. அவற்றையெல்லாம் இந்தக் கட்டுரையில் மட்டும் விரித்துக் காட்டிவிட முடியாது. அவற்றில் ஒன்றை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். 1999ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், கோவை நாடாளுமன்றத் தொகுதி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஒதுக்கப்பட்டது. கோவைத் தோழர்கள் தோழர் நல்லகண்ணுவை வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்று விரும்பினார்கள். இதுகுறித்து முடிவெடுக்கத் திருச்சியில் கட்சியின் நிர்வாகக்குழு கூடியது. கூட்டத்தில் தோழர் நல்லகண்ணுவை வேட்பாளராக நிறுத்த மாநில நிர்வாகக்குழு ஒரு முழுநாளும் போராட வேண்டியதாயிற்று! ஆம், தாம் வேட்பாளராக நிற்பதையே இறுதிவரை ஏற்க மறுத்துவிட்டார்! ஆனால் கட்சி ஒருமனதாக அவரை வேட்பாளராக அறிவித்தது.

அப்போது எனக்கு நினைவிற்கு வந்தது, இராமாயணத்தில் மகுடம் சூட பரதனை வற்புறுத்திய போது,

'நஞ்சம் நுகர் என்றது போலும் அஞ்சினன் பரதன்' என்ற கம்பனின் வரிகள்தான். நஞ்சைக் குடி என்ற போது ஏற்படுகிற பதற்றத்தைப் போல், வேட்பாளர் என்றவுடன் நல்லகண்ணு பதறத் துடித்ததைக் கண்டேன். பதவிபெற வாய்ப்புக் கிடைக்கவில்லையே என்று பதறுகிற உலகில், என்னே அற்புதம்! என்னே அதிசய மனிதர்!

தோழர் நல்லகண்ணுவின் கட்சி வாழ்க்கை ஒவ்வொரு கம்யூனிஸ்டுகளும் பின்பற்ற வேண்டிய பொருள் பொதிந்த பாடமாக விளங்குகிறது. கம்யூனிஸ்டுகள் தங்கள் இலட்சியத்தையும், அரசியல் நோக்கத்தையும் நிறைவேற்றிக் கொள்ள கூடிச் செயல்படும் முறை அலாதியானது! பிறருக்கு ஆச்சரியம் அளிப்பது! ஆனால், அது அறிவியல் ரீதியானது! ஒடுக்கி வாழும் சுரண்டும் வர்க்கத்தை எதிர்த்து, ஒடுக்கப்பட்ட மக்கள் பல நூற்றாண்டு காலமாகப் போராடிப் பெற்ற அனுபவ ஞானத்தால் உருவான அறிவியல் முறையே, ஸ்தாபனக் கோட்பாடுகளாகும். இவற்றைச் செதுக்கிச் செப்பம் செய்தவர்தான் மேதை லெனின். அதனால்தான் அது லெனின் வகுத்த கட்சி வாழ்க்கை நியதிகளாக, கோட்பாடுகளாக, கம்யூனிஸ்டுகளால் கட்சி வாழ்க்கையில் கடைப்பிடிக்கப் படுகின்றன.

அரசியல் பொருளாதார சமூக வாழ்வில் ஏற்படுகிற நேர்மறையான அல்லது எதிர்மறையான வளர்ச்சிப் போக்குகள் குறித்து தங்களின் தனித்த கருத்தை, ஒரு போதும் கம்யூனிஸ்டுகள் பகிரங்கமாக வெளிப்படுத்துவதில்லை. அதன் காரணம், தனி மனிதனின் கருத்தைக் காட்டிலும் 'கூட்டுஞானம்' தான் கூர்மையானது; மேன்மையானது.

கூடிப்பரிசீலிப்பதற்கு முன்னர், தங்கள் தனி அபிப்பிராயங்களைக் கம்யூனிஸ்டுகள் வெளிப் படுத்துவதில்லை. தனது சொந்த அபிப்பிராயங் களைக் கட்சியிடத்திலும் கட்சியின் முடிவை மக்களிடத்திலும் முன்வைப்பதுதான் கம்யூனிஸ்டுகள் செயல்படும் முறை. இந்த அதிஅற்புத, அறிவியல் பூர்வமான செயல்பாட்டு ஒழுங்குமுறையை, உணர்வுபூர்வமாகக் கட்சி வாழ்க்கை முழுவதும் கட்டிக் காத்து நிற்கும் 'சொக்கத் தங்கம்' தோழர் நல்லகண்ணு.

80 வயதைக் கடந்த நிலையிலும் கட்சிக்குள் அவர் குழந்தை மாதிரித்தான். குடும்பத்தில் குழந்தை தனித்து இயங்க இயலாது, பிறரைச் சார்ந்தே இயங்கும். ஆனால் குடும்பத்தில் குழந்தைதான் ராஜா! அதுபோன்று எந்த ஒரு முடிவையும் தன்னிச்சையாகத் தானே எடுத்துச் செயல்படுத்த மாட்டார். முடிவிற்கு வருவதற்கு முன் கட்சித் தோழர்க ளோடு கலந்துபேசி, கருத்தைச் செதுக்கி செப்பம் செய்வது என்ற 'கூட்டுத் தலைமைப் பண்பை' கட்சி வாழ்நாள் முழுவதும் வழுவாது கடைப்பிடித்து நிற்கும் பண்பட்ட கம்யூனிஸ்ட் அவர்!

அவரது சிந்தனை லட்சிய பூர்வமானது; அவரது செயல்படும் முறை ஸ்தாபன பூர்வமானது. இதை அவரது கட்சி வாழ்க்கை நெடுகிலும் காணலாம். நிலை குலைக்க முயன்ற சம்பவங்களால் அவரை நிலை குலைய வைக்க முடியவில்லை. நிலை குலைக்க நினைத்த சம்ப வங்கள்தான் நிலைகுலைந்து அழிந் தன! காலம் அவரது இளமையைத் திருடிக் கொண்டது. ஆனால் கட்சி மீதான அவரது உறுதி இளமை முறுக்கோடு சேகேறி ஜெயித்து நிற்கிறது.

அறுபதாண்டு காலம் அப்பழுக் கற்ற பொதுவாழ்க்கையோடு கட்சி வாழ்க்கையை நடத்தி, கம்யூனிஸ்டு களுக்குப் பெருமை சேர்த்த புரட்சியாளரே, உமக்கு எங்கள் ரெட் சல்யூட்!

ஆயிரமாயிரம் தியாகிகளின் உயிர்த் தியாகத்தால் கட்டிக் காப்பாற்றப்பட்ட கம்யூனிஸ்ட் பாரம்பரியத்தின் பிரதிபலிப்பாய் வாழும், சீலம் நிறைந்த புரட்சி யாளரே, வாழ்க, வாழ்க, இன்னும் பல்லாண்டு வாழ்க!

மூதாதையர்களின் தியாக வாழ்க்கையை - கட்டுக்கோப்பான வழிமுறையை, பிதுரார்ஜித சொத் தாகக் கருதி கண்ணின் கருவிழிபோல் காத்து நிற்கும் கம்யூனிஸ்ட் தளகர்த்தரே! எங்கள் பயணம் நமது மூதாதையார்களின் பாதையிலேயே தொடரும்! அதுவே உமது பிறந்த நாளின் போது எங்கள் சங்கற்பம்!



என் நினைவுகளில் ஆர்.என்.கே.

எம்.அப்பாதுரை, எம்.பி..

தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரியில் நான் இரண்டாம் ஆண்டு பி.ஏ. படித்துக் கொண்டிருந்த சமயம். 1970ம் ஆண்டு ஜனவரி 18ல் நெல்லை மாவட்ட மாணவர் பெருமன்ற முதல் மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டில் மாணவர் பெருமன்ற மாவட்டத் தலைவராக நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன். இந்த மாநாட்டில் தான், எளிமை நாயகன் ஆர்.என்.கே. அவர்களை நான் முதன் முதலாகச் சந்தித்தேன்.

பின்னர் மீண்டும் மீண்டும் பல முறை பல்வேறு சமயங்களில் அவருடன் பழகும் வாய்ப்பும், எனக்கு கிட்டியது -

தோழர் ஆர்.என்.கே. அவர்களின் மாமனார் தோழர் அன்னசாமி அவர்கள் மருதன்வாழ்வு என்ற கிராமத்தில் வாழ்ந்து வந்தார். சாதிக் கலவரம் அங்கு தலைவிரித்தாடிய - கொடியன்குளம் சம்பவம் நடைபெற்ற சமயத்தில் - ஒரு நாள்...

நான் மருதன்வாழ்வு கிராமத்தில் தோழர் அன்னசாமி அவர்களைச் சந்தித்தேன். அப்போது தோழர் ஆர்.என்.கே. அவர்களும் உடன் இருந்தார்.

அப்போது நான் தோழர் அன்னசாமி அவர்களிடம் ''அய்யா, நீங்கள் இந்த ஊரில் இனி மேலும் இருக்க வேண்டாம்'' என்று கூறினேன்.

அதற்கு அவர், ''தம்பி கவலைப்படாதே நம்ம மக்கள் என்னை எதுவும் செய்யமாட்டார்கள்'' என்று நம்பிக்கை பொங்கக் கூறினார்.

அப்போது என் அருகில் இருந்த தோழர் ஆர்.என்.கே. ''தம்பி சொல்வதையும் கொஞ்சம் யோசியுங்கள்'' என்று கூறினார். இந்த சந்திப்பும் பேச்சும் என் வாழ்வில் மறக்க முடியாதவை. பின்னர் நடைபெற்ற கலவரம் தோழர் அன்னசாமியைக் காவு கொண்டதை அனைவரும் அறிவர்.

யாரையும் யாருடைய முகமும் புண்படாமல் பேசுவதும் பழகுவதும் தோழர் ஆர்.என்.கே. அவர்களின் பிறவிக் குணம் என்றே நான் கருதுகிறேன்.

எளிமைக்கு இதுவரை எவரும் பெயர் சூட்டியதில்லை. அதற்கு ஆர்.என்.கே. என்று பெயர் சூட்ட நான் விரும்புகிறேன்.

விவசாயிகளின் போர்க்களத்தில் சில காட்சிகள்

வே. துரைமாணிக்கம்

தோழர் ஆர்.என்.கே. விடு தலைப் போராட்ட வீரர். நெல்லை சதி வழக்கில் எட்டு ஆண்டு களுக்கு மேல் சிறையில் இருந்தவர். விவசாயிகள் சங்கத்தின் நெல்லை மாவட்டச் செயலாளராகவும் விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளராகவும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளராகவும் செயல்பட்டவர். இப்போதும் பல உயர் பொறுப்பு வகித்து செயல்படுபவர். தமிழ் இலக்கியம் பயின்று அதில் மிகுந்த ஈடுபாடு உடையவர். பாரதி மீது பற்றுக் கொண்டவர். அதனால்தான் அவரது இரண்டு மகள்களுக்கும் பாரதி, என்றும் ஆண்டாள் என்றும் பெயரிட்டுள்ளார்.

அவரது துணைவியார் ரஞ்சிதம் ஆசிரியராக இருந்து ஓய்வுபெற்றவர். ஆண்களின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருக்கிறாள் என்பது இவர்களது வாழ்க்கைக்கு முற்றிலும் பொருந்தும்.

தொண்டால் பொழுதளக்கும் தூயதலைவர் என்றால் மிகையாகாது. அவரது குடும்பச்சூற்று சார்பு விரிவானது. கல்வியில் மேம்பட்டவர்கள். பொது உடமை கொள்கையை தழுவி நிற்பவர்கள். இந்தப் பின்னணியில் அவர் சந்தித்த போர்க்களங்கள் பல. அதில் விவசாயப் போர்க்களம் ஒன்று. விவசாயப் போர்க்களத்தில் சில காட்சிகளைப் பதிவு செய்ய முயற்சி எடுத்துள்ளேன்.

9.11.1946-ல் ஆர்.என்.கே. முயற்சியால் நாங்குநேரி ஆதிதிராவிட மகா ஜனசங்கம் விவசாயத் தொழிலாளர் மாநாடு ஏர்வாடி லட்சுமி நரசிங்கபுரத்தில் நடைபெற்றது. மாவட்ட விவசாய சங்கத் தலைவர் எஸ்.சண்முகம்பிள்ளை தலைமை வகித்தார். மாவட்ட விவசாய சங்கச் செயலாளர் ஆர்.வி.அனந்த கிருஷ்ணன், மாவட்டக்குழு உறுப்பினர்

வி.எஸ்.காந்தி ஆகியோர் கலந்துகொண்டு பேசினார்கள். மாநாட்டுத் தீர்மானங்களை முன்மொழிந்து மாவட்டக் குழுவின் சார்பில் ஆர்.நல்லகண்ணு பேசினார்.

தீர்மானங்களில் முக்கியமானவை

(பழைய வாசகம் அப்படியே தரப்பட்டுள்ளது)

* சமூகத்துக்கே இழிவை ஏற்படுத்தும் அடிமைத் தொழிலாகிய நாழிக்கொத்துப் பண்ணை வேலைகளை, இன்றையிலிருந்து விட்டுவிடும்படி மேல் சமூகத்தினரை கேட்டுக்கொள்வது.

* ஒன்றுக்குப் பத்தாக ஏறிய விலைவாசிக்கொப்ப விவசாயத் தொழிலாளர்களுக்கு ஆண்களுக்கு தினக் கூலி 1-4-0ம் (ஒன்றேகால் ரூபாய்) உழவுக்கும், 2-8-0 (இரண்டரை ரூபாய்) பெண்களுக்கு தினக்கூலி 0-10-0ம் (பத்து அணா)நடுகைக் காலங்களில் 1-0-0-ம் (ஒரு ரூபாய்) சம்பளமாக கொடுக்கும் படியாக நிலச்சுவான்தாரர்களை கேட்டுக்கொள்வது.

* சர்க்காரால் வழங்கப்படும் 12 அவுன்சு உணவு கடினவேலை செய்யும் பாட்டாளி மக்களுக்கு போதாதாகையால் 4 அவுன்ஸ் கூட்டி 16 அவுன்சாக கொடுக்கும்படியும் தாழ்த்தப்பட்டவர்கள் யாவரும் களப்பு உணவு சாப்பிடுகிறவர்கள்தான் என நிரந்தரமாய் நிதானம்பண்ணி மனசிற்கும், சரீரத்திற்கும் ஒவ்வாத தானியங்களை கட்டாயமாக வழங்கி வருவதை கண்டித்தும் இடத்தையும் பழக்க வழக்கத்தையும் உத்தேசித்து உணவு பங்கீடு செய்யும் படியாகச் சர்க்காரை கேட்டுக்கொள்கிறது.

* பரம்பரை பாத்தியதையாய் கிராம முன்சீப்புகள் கணக்குப் பிள்ளைகள், உத்தியோகம் வகிப்பகவர்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு பல இன்னல்களை செய்து வருகிறபடியால், மேற்படி கிராம உத்தியோகஸ் தர்களின் பரம்பரை பாத்தியதையை ரத்து செய்வதன் மூலம் தாழ்த்தப்பட்டவர்களின் இன்னல்களை நீக்கும்படியாக சர்க்கரை கேட்டுக்கொள்கிறது.

* ஜமீன்தாரி, மாடாதிபதி முறையை ஒழித்து, சர்க்காரே நிலங்களை நிலமற்ற விவசாயிகளுக்கு உடனடியாக கொடுத்தும் மானியங்கள் கொடுத்தும் உதவும்படியாய் சர்க்காரை கேட்டுக்கொள்கிறது.

* தேவைக்கு குறைவான வருமானம் கொடுக்கக் கூடிய அளவு கொஞ்சம் (5 ஏக்கருக்கு குறைந்த) வைத்திருக்கும் விவசாயிகளுக்கு வரிவிதிக்க கூடாது என்று சர்க்காரை கேட்டுக்கொள்வது.

* பஞ்சம் தாண்டவமாடும் இச்சமயத்தில் புதிய நீர்ப்பாசன சாதனங்களை உடனடியாக நிர்மாணிக்கும்படி சர்க்காரை கேட்டுக்கொள்கிறது.

* ஜாதி, மத, அரசியல் பேதமின்றி பாட்டாளி மக்களை ஒருங்கிணைத்து பல கோரிக்கைகளைப் பெற்று அனுபவம் அடைந்திருக்கும் அகில இந்திய கிசான் சபையின் கிளை ஸ்தாபனமாக இங்குள்ள விவசாய சங்கத்தை மாற்றி அமைத்துக்கொள்ள தீர்மானிக்கப் பட்டது. இவைபோன்ற பல தீர் மானங்கள் இம்மாநாட்டில் நிறை வேற்றப்பட்டுள்ளன.

59 ஆண்டுகளுக்கு முன்பு ஆங்கிலேயன் ஆண்ட காலத்தில் விவசாயிகளுக்காகவும் விவசாயத் தொழிலாளர்களுக்காகவும் நாங்குநேரி மாநாட்டில் ஆர்.என்.கே. யும் நமது சங்கமும் குரல் எழுப்பி யுள்ளோம். அந்த கோரிக்கைகள் இன்றளவும் வரவேற்கப்பட்டு வருகின்றன. ஆங்கிலேய ஆட்சிக் கால அவலங்களை மாற்றுவதற்கு விடுதலைக்கு பின்பு ஆட்சிக்கு வந்தவர்கள் போதிய முயற்சிகளை மேற்கொள்ளவில்லை என்பது துயரமான நிகழ்வாகும்.

அம்பாசமுத்திரம் தாலுக்காவில் ரெங்கசமுத்திரம் கிராமத்தில் பிரா மணர்கள் நிலஉடமையாளர் களாகவும் ஆதிக்க சக்தியாகவும் இருந்தனர். ஜாதிய ஒடுக்குமுறையும் சனாதன பழக்கங்களும் பலமாக பின்பற்றபட்டு வந்தகாலம். அறு வடைக்குச் செல்லும் தலித் பகுதி மக்கள் களத்து மேட்டோடு நின்று விட வேண்டும். பிராமணர்களின் தெருக்களில் வரக்கூடாது. பிராமணர் களின் வீட்டு வாசலை மிதிக்கக் கூடாது என்பன போன்ற கட்டுப் பாடுகளை பிராமணர்கள் பின்பற்றி வந்தனர்.

இந்தச் சமயத்தில் அந்தக் கிராமத் தில் ஒரு பகுதியான நத்தம் தெரு என்ற தலித்துக்கள் தெருவில் 1956-ல் ஆர்.என்.கே., வி.பி.நாயகம் ஆகி யோர் முயற்சியால் தமிழ்நாடு விவ சாயிகள் சங்கம் அமைக்கப்பட்டது.

1957-ல் அவ்வூர் கிராம சங்கக் கூட்டத்தில் மேற்கண்ட இருவரும் கலந்து கொண்டனர். அக்கூட்டத்தில் ஆர்.என்.கே. பேசும் போது எல்லா வகையிலும் நாம் முன்னேற வேண் டும் என்றால் அநீதியை எதிர்த்து ஒன்றுபட்டுப் போராட வேண்டும். இது சந்திர மண்டலத்துக்கு மனிதன் செல்லுகிற காலம். நாம் எதற்கும்



தயங்கக்கூடாது என்ற நம்பிக்கை ஊட்டி பேசிக்கொண்டிருந்தார். அப்போது அக்கூட்டத்திலிருந்த தலித் இளைஞர் ஒருவர் எழுந்து சந்திர மண்டலத்துக்கு மனிதன் போரதெல் லாம் பெரிய விசயமல்ல தலைவரே நம்ம சங்கம் இங்கே வச்சப்பொறவு நாங்க ஐயர் வீட்டுக்குள்ளேயே நெல்மூட்டையே கொண்டுபோய் இறக்கி வைக்கிறோம் என்று கூறினார்.

இதைக்கேட்ட ஆர்.என்.கே. நம்முடைய உழைப்பு வீண் போகவில்லை என்று உடன் இருந்த வி.பி.நாயகத்திடம் கூறினார். மேலும் பேச்சைத் தொடர்ந்தார்.

1965-ம் ஆண்டுகளில் கோவில் பட்டி தாலுகாவில் தொடர்ந்து வறட்சி; வானம் பார்த்த கரிசல் பூமியான அப்பகுதியில் பயிர் விளைச்சலே இல்லை. பிழைப்பதற்கு வழி இல்லாமல் விவசாயிகள் தவித்தனர். இந்தச் சூழ்நிலையிலும் நிலவரி வசூலுக்காக அரசு கடும் நடவடிக்கை எடுத்தது.

கோவில்பட்டி தாலுகாவில் பரவலாக விவசாயிகளிடம் ஜப்தி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. நகை, பண்ட பாத்திரங்கள், தட்டு முட்டுச் சாமான்கள், வீட்டுக் கதவுகள் உள்ளிட்ட பொருள்களை எல்லாம் ஜப்தி செய்தார்கள். நாச்சியார்பட்டி வி.வி.ரங்கசாமி என்ற தோழர் நடுத்தர விவசாயி. அப்பகுதி விவசாய சங்க தலைவராக இருந்து வந்தார். அவருடைய உழவு மாட்டையும் ஜப்தி செய்து பவுண்டில் அடைத்து விட்டனர். விவசாயிகளிடம் ஜப்தி செய்த பொருட்களை ரெவின்யூ பிர்க்காவாரியாக பொது ஏலம் விடுவது அன்றைய வழக்கம். அன்றைய மாவட்ட விவசாய சங்கச் செயலாள ராக இருந்த ஆர்.என்.கே. மாவட் டக்குழுக் கூட்டத்தை கூட்டினார்.

அக்கூட்டத்தில் கோவில்பட்டி தாலுகாவில் ஜப்தி செய்யப்பட்ட பொருட்களையும் உழவு மாடுகளை யும் ஏலம் எடுக்கவிடாமல் அப்பகுதி மக்களிடம் விழிப்புணர்வு பிரச்சாரம் நடத்தி ஏலத்தைத் தடுக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அதன்படி மாவட்ட விவசாய சங்க பொறுப்பில் இருந்த எஸ்.அழகர்சாமி, எல்.அய்யலுசாமி உள்ளிட்டவர்கள் ஊர், ஊராகச் சென்று அரசு அதிகாரிகள் ஏலம் போடும் பொருட்களை பொதுமக்கள் யாரும் ஏலத்தில் எடுக்கக் கூடாதென்று தொடர்ந்து பிரச்சாரம் செய்து ஏலம் விடுவதை தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டார்கள். அரசு அதிகாரிகளால் ஜப்திப் பொருள்களை ஏலம் போட முடியவில்லை. ஜப்தி எதிர்ப்பு போராட்டமும் ஏலத்தடுப்புப் போராட்டமும் மூன்று மாதங்களுக்கு மேல் நீடித்தன.

இந்தச் சூழ்நிலையில் அன்றைய முதல்வர் பக்தவச்சலத்தை சட்டமன்ற உறுப்பினராக இருந்த எம்.கல்யாணசுந்தரம், ஆர்.என்.கே., எஸ்.அழகர்சாமி, ஆகியோர் சந்தித்து உழவுமாட்டை ஜப்தி செய்யக்கூடாதென்று ரெவின்யு போர்டு ஸ்டான்டிங் ஆர்டர் இருக்கும் போது உழவுமாட்டை ஜப்தி செய்வதும் வறட்சி வாட்டிக் கொண்டிருக்கும் போது விவசாயிகள் மீது ஜப்தி நடவடிக்கை எடுப்பதும் நியாயமற்ற செயல் என்று எடுத்துக் கூறினார்கள்.

நூறு நாட்களை கடந்த போதும் ஏர்மாடுகளையும் ஜப்திப் பொருட்களையும் அரசு அதிகாரிகளால் ஏலம் போட முடியவில்லை. அந்த நிலையில் மாடுகளையும் ஜப்தி எடுத்த பொருட்களையும் அதிகாரிகள் விவசாயிகளிடம் திருப்பி ஒப்படைத்துவிட்டனர். சிறையிலிருந்து விடுதலையாகும் தலைவர்களுக்கு வரவேற்பு அளிப்பது போல் நூறு நாட்களுக்கு மேல் அரசால் சிறை வைக்கப்பட்டு இருந்த ரெங்கசாமியின் உழவு மாடுகளுக்கு மாலை அணிவித்து ஊர்வலமாக அழைத்து வரப்பட்டன. இந்தப் போராட்டத்திற்கு பிறகுதான் 1967 தேர்தலில் கோவில்பட்டித் தொகுதியில் எஸ்.அழகர்சாமி சட்டமன்ற உறுப்பின ராக வெற்றிபெற்றார் என்பது கவனிக்கத்தக்க செய்தியாகும்.

கடனாநதி, மேற்குத் தொடர்ச்சி மலையில் உருவாகிறது. அந்தத் தண்ணீர் முழுவதும் கடலில் கலந்து வீணாகிக் கொண்டிருந்தது. அதைப் பாசனத்திற்குப் பயன்படுத்தும் வகையில் கடனாநதியின் குறுக்கே அணை கட்ட வேண்டுமென்று கோரிக்கை வைத்து விவசாயிகள் சங்கம் சார்பில் தொடர்ந்து போராட்டங்கள் நடந்தன. அன்றைய அரசு செவிசாய்க்கவில்லை. அணைக்கட்டுத் திட்டத்தை நிறைவேற்றச் செய்யவேண்டுமென்று விவசாயிகள் சங்கத்தில் முடிவு எடுத்து அதற்கான நடவடிக்கையாக சங்கத் தலைவர்கள் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டம் நடத்தும் முடிவு செய்யப்பட்டது. அம்முடிவின்படி அம்பாசமுத்தரம் பகுதி விவசாயிகள் சங்கத் தலைவராக இருந்த வி.பி.நாயகமும், ஆர்.என்.கே.யும் காலவரையற்ற உண்ணாவிரதப்

போராட்டத்தை 24.2.1966ல் துவங்கினார்கள். 3.3.1966 வரை உண்ணாவிரதம் நீடித்தது. அந்த அணைக்கட்டுத் திட்டத்தால் பயன்பெறக் கூடிய ஆம்பூர், சிவசைலம், அம்பாசமுத்திரம், பாப்பாக்குடி உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகளும் பொது மக்களும் எழுச்சியுற்று நாள்தோறும் ஆயிரக்கணக்கில் திரண்டுவந்து போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தனர். இருவரும் துவங்கிய உண்ணாவிரதப் போராட்டம் மக்கள் எழுச்சியாக மாறியதைக் கண்ட அரசு, அணைக்கட்டுத் திட்டத்தை நிறைவேற்ற ஒரு கோடியே 80 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும், திட்டப்பணிகள் உடனடியாக துவங்க இருப்பதாகவும் அறிவித்தது. அந்த வெற்றிச் செய்தி கிடைத்தபின்பு 8 நாள் உண்ணாவிரதப் போராட்டத்தை முடித்துக் கொண்டனர். 1974ம் ஆண்டு, அணை கட்டி முடிக்கப் பட்டது. அன்று முதல், அப்பகுதி பாசனத்திற்கும் குடிதண்ணீருக்கும் வசதி பெற்றதுடன், அப்பகுதி வளம் கொழிக்கும் பூமியாக காட்சியளிக்கிறது. அப்பகுதியைச் சார்ந்த மூத்த தலைமுறையினர் ஆர்.என்.கே., வி.பி.நாயகம் இருவரின் சாதனையை நினைவு கூறும் போது மெய் சிலிர்க்கிறது.

திருநெல்வேலி தாலுகா நொச்சி குளம் கிராமத்தில் நிலச்சுவான்தாரரான நடராஜன் குடும்பத்தினருடைய நிலத்தில் சிதம்பரத் தேவர், ஈஸ்வர குரும்பர் உள்ளிட்ட 10 ஏழை விவசாயக் குடும்பத்தினர் வாரச் சாகுபடி செய்து வந்தனர். அவர்களை காவல்துறை உதவியுடன் எந்த முகாந்திரமும் இல்லாமல் பலவந்தமாக நிலத்திலிருந்து வெளியேற்றும் முயற்சியில் ஈடுபட்டனர் நிலசுவான்தாரர்கள். நில வெளியேற்றத்தை எதிர்த்து விவசாயிகள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் அணி திரண்டனர். காவல்துறை கண்மூடித்தனமாக தாக்குதலும் துப்பாக்கிச் சூடும் நடத்தியது. துப்பாக்கிச் சூட்டுக்கு சீதாராமத் தேவர் என்ற விவசாயி பலியானார். கந்தசாமி என்ற விவசாயியின் வலது கரம் துண்டிக்கப்பட்டது. சுப்பம்மாள் என்ற பெண்மணியின் காது அறுபட்டது.அத்துடன் விவசாயிகளுக்குச் சொந்தமான 20க்கு மேற்பட்ட வீடுகள் நொறுக்கப்பட்டன. கோழிகள், ஆடுகள் காவல்துறையினரால் அபகரிக்கப்பட்டன. குடும்பப் பெண்கள் மானபங்கப்படுத்தப் பட்டனர். 50 மேற்பட்ட விவசாயிகள் மீது கடுமையான குற்றப் பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு கொடுமைப்படுத்தப்பட்டனர்.

இச்சூழ்நிலையில் காவல்துறையின் அத்துமீறலைக் கண்டித்தும் காவல்துறையைச் சேர்ந்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வற்புறுத்தியும் விவசாயிகள் மீது போடப்பட்டுள்ள வழக்குகளை திரும்பப்பெறக் வற்புறுத்தியும் நெல்லை மாவட்ட விவசாயிகள் சங்கச் செயலாளராக இருந்த ஆர்.என்.கே.யும், மாவட்டக்குழு உறுப்பினராக இருந்த எஸ்.ஏ.முருகானந்தமும் நெல்லை நகரத்தில் 7.12.68 முதல் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை துவக்கினார்கள். உண்ணாவிரதம் 9 நாட்கள் தொடர்ந்தது. உண்ணாவிரதப் போராட்டம் தொடர்வது காட்டுத்தீ போல மாவட்டம் முழுவதும் பரவியது. மக்களின் கோப எழுச்சி அதிகரித்த வண்ணம் இருந்தது. அதை உணர்ந்த மாநில அரசு, காவல்துறை அதிகாரியை ராமநாதபுரம் மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்தது. விவசாயிகள் மீது போடப்பட்ட வழக்குகள் திரும்பப்பெறப்பட்டன. விவசாயிகளுக்கு நிலத்தின் மீது உரிமை வழங்கப்பட்டது.

விவசாய சங்கத் தலைவர்களின் உண்ணாவிரதப் போராட்டத்தின் வீச்சும், விவசாயிகள் ஒன்றுபட்ட கிளர்ச்சியும், மாவட்ட மக்களின் எழுச்சியும், இந்த மாபெரும் வெற்றியைப் பெற்றுத் தந்துள்ளது என்று 1.2.1969 தேதியிட்ட உழவுச் செல்வம் குறிப்பிட்டது.

காவிரிப் பிரச்சினை தீர்வுக்காக 40 ஆண்டுகளுக்கு மேலாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும், விவசாயிகள் சங்கமும், விவசாயத் தொழிலாளர் சங்கமும் தெளிவாக கோரிக்கைகளை முன்வைத்து தொடர்ந்து போராடி வருகின்றன. 1972ல் பாராளுமன்றத்தில் எம்.காத்தமுத்து நடுவர்மன்றம் அமைக்க வேண்டுமென்று வற்புறுத்தினார். அது குறித்து எந்த நடவடிக்கையும் அன்றைய மத்திய அரசு எடுக்காத நிலை தொடர்ந்தது. 1989ம் ஆண்டு ஜூன் 12ல் நடுவர் மன்ற அமைக்க வேண்டுமென்று வற்புறுத்தி ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில் மனிதச்சங்கிலி போராட்டம் நடந்தது. தஞ்சை ராஜராஜ சோழன் சிலை முதல், வேதாரண்யம் ராஜாஜி பூங்கா வரை 110 கிலோ மீட்டர் தூரம் 5 லட்சத்துக்கு அதிகமான மக்கள் பங்குகொண்டனர். அப்போராட்டத்தை நடத்த தஞ்சை மாவட்டக் குழுவிற்கு ஊக்கமளித்தவர் ஆர்.என்.கே. அப்போது அவர் விவசாயத் தொழிலாளர் சங்கத்தின்

மாநிலப் பொதுச் செயலாளராகச் செயல்பட்டுவந்தார். அத்துடன் மனிதச் சங்கிலி போராட்டத்தில் அவரும் தமிழ்நாடு விவசாயிகள் சங்கப் பொதுச் செயலாளராகப் பொறுப்பு வகித்த எம்.ஆதிமூலமும் வேதாரண்யத்தில் பங்கேற்றனர். தஞ்சாவூரில் அமரர் ப.மாணிக்கம் பங்கேற்றார். போர்க்களம் என்றால் முன் நிற்பது ஆர்.என்.கே.யின் இயல்பு.

35 ஆண்டுகளுக்கு முன்பு தஞ்சை மாவட்டத்தின் விவசாயிகள் சங்க செயலாளராக தோழர் டி.சிவநேசன் செயல்பட்டு வந்தார். அவரது மகனது திருமணத்திற்கு ஆர்.என்.கே. தலைமை தாங்க வேண்டுமென்று தொடர்ந்து வற்புறுத்தி ஆர்.என்.கே. யிடம் ஒப்புதலைப் பெற்றார். அப் போது ஆர்.என்.கே. விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளராக செயல்பட்டு வந்தார். குறிப்பிட்ட தேதியில் திரு மணம் நடந்தேறியது. ஆர்.என்.கே-யுடன் நானும் திருமணத்திற்குச் சென்றிருந்தேன். விழா முடிந்த பின்பு ஒரு மரத்தடியில் ஆர்.என்.கே. ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார்.

அங்கு வந்த சிவநேசனிடம் இந்த திருமணத்திற்கு நான் தான் தலைமை ஏற்க வேண்டுமென்று பிடிவாதமாக இருந்தீர்களே என்ன காரணம் என்று கேட்டார் ஆர்.என்.கே. இதற்குப் பதில் அளித்த சிவநேசன் என் குடும்பத் திருமணத்திற்கு ஒரு தலித் சமூகத்தைச் சார்ந்த தலைவர்தான் தலைமை ஏற்க வேண்டுமேன்று நான் விரும்பியதுதான் காரணம் என்று கூறினார். ஆர்.என்.கே. வாய்க்குள் சிரித்தப்படி என்னைப் பார்த்தார். நானும் அவரை ஆச்சிரியத்தோடு பார்த்தேன். இதற்கு மேல் இது குறித்து எவ்வித பேச்சுக்களும் தொடர வில்லை.

ஆர்.என்.கே. தலித் சமூகத்தைச் சேர்ந்தவர் இல்லை. சிவநேசனும் தலித் சமூகத்தைச் சேர்ந்தவர் இல்லை. இருவரும் வேறு வேறு பிற்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர்கள். சிவநேசன் எந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர் என்று ஆர்.என்.கே. தெரிந்து வைத்திருந் தார். ஆனால் சுமார் 25 ஆண்டுகளுக்கு மேல் சிவநேசனும் ஆர்.என்.கே.யும் நெருங்கிப் பழகி இருந்தாலும் இணைந்து பணியாற்றியிருந்தாலும் ஆர்.என்.கே. எந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர் என்று சிவநேசனுக்கு தெரிந்து கொள்ள முடியவில்லை. அந்த அளவிற்கு ஜாதிய உணர்வுகளுக்கு அப்பாற்பட்டவராக ஆர்.என்.கே. திகழ்ந்து வருகிறார்.

ஆர்.என்.கே. மாமனார் அண்ணாச்சாமி ஜாதிய உணர்வுகளுக்கு இடம் கொடுக்காமல் ஜாதிய பாகுபாடு காட்டாமல் வாழ்நாள் முழுவதும் தலித் மக்களுடன் பழகி வாழ்ந்தவர். தென் மாவட்டங்களில் கலவரம் நடந்தபோது, தலித் பகுதியைச் சேர்ந்த வெறியர்களால் அண்ணாச்சாமி கொலை செய்யப் பட்டார். அந்தப் பகுதியில் நடந்து கொண்டிருந்த ஜாதிய கலகத்துக்கும் இவருக்கும் எந்த சம்மந்தமும் இல்லை. இந்நிலையில் அவரது கொலை சம்பவம் அப்பகுதியை உலுக்கிவிட்டது. அவரின் உறவினர்களும் கொதிப்படைந்தனர். எவ்வித பாவச் செயலிலும் ஈடுபடாத யாருக்கும் எந்த கெடுதலும் நினைக்காத ஒரு உத்தமருக்கு இந்நிலை ஏற்பட்டுவிட்டதே என்று வாய்விட்டு அழமுடியாமல், மனதிற்குள்ளேயே அழுது கொண்டிருந்தார்கள் ஆர்.என்.கே.யும், அவரது துணைவியாரும்.

சிலுவையில் அறையப்பட்ட போது இவர்கள் என்ன செய்வதென்று தெரியாமல் இதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். பிதாவே இவர்களை மன்னியுங்கள் என்று ஏசுபிரான் கூறியதாகச் செய்தி. அதைப்போலவே மாமனாரின் படுகொலை நடந்துவிட்டது. அக்கோரச்சம்பவத்தை தொடர்ந்து மேலும் மேலும் விபரீதமான விளைவுகளும் சேதாரங்களும் ஏற்பட்டுவிடக்கூடாது என்று கவலை கொண்டார் ஆர்.என்.கே. இச்சம்பவம் தொடர்பாக எந்த விதமான மேல் நடவடிக்கைகளும் தொடரக் கூடாது என்று எல்லோரிடமும் வற்புறுத்தியதுடன் ஜாதிய கலகங்கள் ஏற்பட்ட மாவட்டங்களில் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தானே தலைமையேற்று அமைதிப் பயணம் மேற்கொண்டார். அவரது அமைதிப் பயணத்தைத் தொடர்ந்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எடுத்த நடவடிக்கையாலும் முற்போக்கு சிந்தனையாளர்கள் எடுத்த முயற்சியாலும் அப்பகுதியில் அமைதி ஏற்பட்டது.

தோழர் ஆர்.என்.கே.யின் செயல் அனைவரையும் சிந்திக்கத் தூண்டுகிறது.

1986-ம் ஆண்டு அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் பொன்விழா கொண்டாட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயத்தில், கங்கை காவிரி இணைப்பு என்ற பிரசுரத்தை ஆர்.என்.கே. எழுதி வெளியிட்டார். அந்த புத்தகம் தான்

தமிழ்நாட்டில் நதிகள் இணைப்புப் பற்றிய கருத்து பரிமாற்றங்களுக்கு வழி வகுத்தது. அதனைத் தொடர்ந்து விவசாயிகள் சங்கமும் விவசாயத் தொழிலாளர் சங்கமும் தென்னக நதிகள் இணைப்பை வற்புறுத்தி வருகின்றன. 2001ம் ஆண்டு ஆர்.என்.கே.யின் வழிகாட்டுதலின் படி 'தென்னக நதிகள் இணைப்பை வலியுறுத்தி தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் தமிழகம் முழுவதும் விழிப்புணர்வு பிரச்சாரம் நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து 2002-ம் ஆண்டு தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் தமிழகத்தில் ஒரு கோடி கையெழுத்து இயக்கத்தை நடத்தி அன்றைய பிரதமரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. நதி நீர் இணைப்புக்கான செயல்வடிவம் உருவாகின்ற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. ஆர்.என்.கே.யின் உழைப்புடன் சேர்ந்து நம் அனைவரின் உழைப்பும் வீண்போகவில்லை; வீண்போகாது. பயணத்தை தொடருவோம்.

ஆடம்பர, ஆர்ப்பாட்ட வஞ்சக அரசியலில்...

இரா. முத்தரசன்

விடுதலைப் போராட்டத்தில் முன்நின்றும் விவசாயி களையும், விவசாயத் தொழிலாளர்களையும் ஓரணியில் திரட்ட கடின உழைப்பை வழங்கியவர் தோழர் பி.சீனிவாசராவ் அவர்கள். இந்த மிக உயர்ந்த தலைவர் யாரையும் எளிதில் பாராட்டிவிடக் கூடியவரல்ல. மதிப்பிட்டு பின்னர் தான் பாராட்டுவார். தோழர் ஆர்.என்.கே. அவர்களைப் பற்றி இவர் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

''இந்த பிரதேசத்தில் (நெல்லை மாவட்டம்) வேலை செய்யும் நம் கிசான் தலைவர் தோழர் நல்லகண்ணுவைப் பற்றி ஒரு வார்த்தை. இவரைப் பற்றி எனக்கு நல்ல அபிப்பிராயம் இண்டர்மீடியட் வரை படித்திருக்கிறார். அவர் உண்மையில் ஒரு நல்ல குடியான வாலிபன். பார்வையிலும், பழக்க வழக்கங்களிலும் கள்ளங்கபட மற்ற எளிய கிராம வாலிபனாகவே இருக்கிறார். கிராமம் கிராமமாக சளைப்பின்றி நடந்து வேலைகளைக் கவனிப் பார். எவ்வளவு வேலையிருந்தாலும் கொஞ்சம்கூட சளைப்பதில்லை. இவர் மாத்திரம் இன்னும் முன்கை எடுத்து தனது வேலைகளைச் செய்வாரேயானால், அந்த ஜில்லாவில் ஒரு சிறந்த கிசான் கட்சித் தலைவராக விளங்க முடியும்''

தலைமறைவு வாழ்க்கையின் போது கட்சித் தலைமைக்கு புனைப் பெயரில் கடிதம் எழுதும் வழக்கத்தைத் தோழர் சீனிவாசராவ் கொண்டிருந்தார். நெருக்கடி மிகுந்த அந்த வாழ்க்கையில் இவர் தனக்கு சூட்டிக் கொண்ட பெயர் சுந்தரராஜ் என்பதாகும். ஆர்.நல்லகண்ணு அவர்களைப் பற்றி எழுதிய இக்குறிப்பு அவர் எழுதிய பதினெட்டாவது கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. கடிதம் எழுதிய தேதி 3.7.1947.

தோழர் சீனிவாசராவ் அவர்கள் நெல்லை மாவட்டத்தில்தான் சிறந்த தலைவராக விளங்குவாரென்று மதிப்பிட்டிருந்தார். ஆனால், தோழர் நல்லகண்ணு அவர்கள் அதைப் பொய்யாக்கி விட்டார். மாநிலத்திலும் தேசிய அளவிலும் சிறந்தத் தலைவராக விளங்கிக் கொண்டிருக்கிறார்.

தேர்தல் வந்து விட்டால் அரசியல் கட்சிகளுக்கு இரண்டு பிரச்சினைகள் தோன்றி விடுகின்றன. ஒன்று, தேர்தல் கூட்டணி அமைப்பது. இதில் கொள்கைச் சாராத பிற கட்சிகளுக்கு எந்தப் பிரச்சினையுமில்லை. கொள்கை யுள்ள கட்சிகள் கடுமையான பிரச்சினைகளை சந்திக்கின்றன. இந்தப் போராட்டத்தில் சில நேரங்களில் கட்சியின் பலத்தைவிட குறைவான தொகுதிகளைப் பெற வேண்டிய அவசியம் ஏற்பட்டு விடுகிறது. இதைப் போலவே, கிடைத்த தொகுதிகளில் வேட்பாளர்களை உட்கட்சியில் தேர்வு செய்வதும் ஒரு முக்கியப் பிரச்சினை யாகும். சட்டமன்றம், நாடாளுமன்றம் பலருக்கும் மோகத்தை உருவாகக் கூடிய அதிகாரம் சார்ந்த இடமாக இருக்கின்றது. இன்றைய காலத்தில் இதனை அடைவதையே சிலபேர் வாழ்க்கை லட்சியமாகக் கருதுகிறார் கள். இந்தப் பின்னணியில் தோழர் நல்லகண்ணு அவர்களின் மன நிலையை ஆராய்ந்தும் பார்ப்பது மிக வும் அவசியமானதொன்றாக எனக் குத் தோன்றுகிறது. இதில் கம்யூனிஸ்ட் ஊழியர்களுக்கான பல முன்னுதார ணங்கள் அடங்கியிருக்கிறது.

கோவை நாடாளுமன்ற தேர்தலுக் காக, இவர் வேட்பாளராக நிறுத்தப்பட வேண்டுமென்று கிட்டத்தட்ட அனைவருமே வற்புறுத்துகிறார்கள். ஆனால் இவர் ஒருவர் மட்டும் வலுக்கட்டாயமாக தன்னை வேட்பா ளனாக நிறுத்த வேண்டாமென்று மிகத் தெளிவாகவும் உறுதியுடனும் நீண்ட நேரமாக மறுத்து வந்தார். கடைசியில் கட்சியின் கட்டுப்பாடு என்ற வற் புறுத்தலால்தான் அவர், கோவை நாடாளுமன்ற தொகுதி வேட்பாளராக நிறுத்தப்பட்டார். வேறு எந்தக்



காரணத்தாலும் இவர் மறுக்கவில்லை. யாராவது இளைஞர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்பதில் தான் அவர் உறுதியாக இருந்தார். கடைசியில் கட்சிக் கட்டுப்பாட்டுக்கு கட்டுப்படு கிறேன் என்று வேண்டாவெறுப்பாக வேட்பாளராக நிற்க சம்மதம் தெரிவித்தார்.

இதேபோல பாண்டிச்சேரியில் இவரைப் பற்றிய மற்றொரு அனுபவத் தைப் பெறுகின்ற வாய்ப்பு எனக்கு கிடைக்கின்றது. டாக்டர் புவனரட்சகன் பாண்டிச்சேரியைச் சார்ந்த தோல் மருத்துவர். ஏழை எளிய மக்களுக்கு உதவி புரிவதில் சேவை மனோபாவத் துடன் செயல்படக் கூடியவர். தோழர் பாகூர் பி.ராமமூர்த்தியின் சகோதரர் ஆவார். தோழர் ஆர்.என்.கே. அவர்களின் கை மற்றும் காலில் கறுப்பாக தடித்து, தடித்து இருக்கும் பகுதிக்கு சிகிச்சைச் செய்யவே சென்றோம். டாக்டர் ஊசி போட்டு விட்டதைப் பார்த்து இனி சரியாகி விடுமா?'' என்றேன். அதற்கு டாக்டர் புன்முறுவலை பதிலாகத் தந்துவிட்டு, ''இதற்கான மருந்து தலைவர் அவரிடமே உண்டு'' என்றார். டாக்டரின் பதில் எனக்கு வியப்பைத் தந்தது. மருந்து டாக்டரிடமிருக்கிறதா? அல்லது நோயாளியிடமிருக்கிறதா என்ற கேள்வி எழுந்து விட்டது. கடைசியில் இதற் கானப் பதிலை டாக்டரே கூறினார். ''ஆர்.என்.கே. கோபம் வந்தால் அதனை வெளிப்படுத்துவது இல்லை. அதனால் வந்த விளைவுகள் தான் இப்படி உள்ளது என்றும், உங்களுக்கு கோபம் வந்தால் வெளிப்படுத்துங்கள்'' என்று ஆலோசனை கூறினார். தோழர் ஆர்.என்.கே. வழக்கம் போல் இதற்கும் ஓர் புன்னகையை மட்டுமே உதிர்த்தார்.

''கோபமாக பேசி பிறரை ஏன் துன்பப்படுத்த வேண்டும். பிறர் மனம் புண்படக் கூடாது, நமது உடம்பு புண்ணானால் அது நம்மோடு போய்விடும்'' என்று பதிலளித்தார் என் கேள்விக்கு.

இவரைப் போன்றவர்களால்தான் வள்ளுவனின் குறள்கள் அங்கங்கே பரவிக் கிடக்கிறது.

'பணிஉடையான் இன்சொலன் ஆதல் ஒருவற்கு

அணி அல்லமற்றப் பிற.'

குடியரசுத் தலைவர் திரு.அப்துல் கலாம் தனது 'அக்கினிச் சிறகுகள்' என்னும் நூலில், குழுவின் ஒன்றுபட்ட செயல்பாட்டையும் உறுப்பினர்களை ஊக்கப்படுத்தி, உற்சாகமூட்டி அவரது பணிகள் மென்மேலும் சிறந்து விளங்கிட குழுத் தலைவரின் செயல்பாடு அமைந்திட வேண்டுமென்ற கூற்று ஆர்.என்.கே. மூலமாக புலப்படுவது என் அனுபவத்தில் உணர்ந்திருக்கிறேன்.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

- என்ற வள்ளுவரின் வாக்குக்கேற்றவாறு படிக்கிறார். கற்றது கை மண்ணளவு, கல்லாதது உலகளவு என்பதற்கேற்பவும் தொடர்ந்து மாணவனாகவே இருக்கிறார். படிப்பது மட்டுமின்றி அதன் வழியே நடக்கிறார் என்பதுதான் வியப்பளிக்கும் செய்தியாக உள்ளது.

அரசியல், சாக்கடை என்ற பொது மக்களின் கவனத்திற்கு ஒதுக்கித் தள்ளியது யார்? மக்களா? அரசியல் தலைவர்களா? என்ற வினாவிற்கு காலத்தில் விடைகாண வேண்டியவர்கள் மிகுந்தப் பொறுப்புடன் சிந்தித்து விரைவில் விடைகாண வேண்டும்.

ஆடம்பர அரசியல், ஆர்ப்பாட்ட அரசியல், பணம் பண்ணும் அரசியல், வஞ்சக அரசியல் என்ற நிலையை மக்கள் ஆதரிக்கிறார்களா? அல்லது தியாகம், நேர்மை, எளிமையை மக்கள் விரும்புகிறார்களா? என்பதனை அறிவதற்கு ஆராய்ச்சி தேவையில்லை. நல்லகண்ணு பயணம் செய்யும் போது உடன் சென்றால் உண்மை புரியும்.

மக்கள் போற்றும் நல்லவராக விளங்கிட, அவர்களுக்காகவே ஒரு வட்டத்திற்குள் வாழ பழகிக் கொண்டவர் நல்லகண்ணு அவர்கள். அதற்கான காரணம் என்ன என்றபோது ஒன்று, அவர் தேர்ந்தெடுத்த கட்சி. மற்றொன்று அவர் தவமிருந்து பெற்றது போல் துணையாள். அம்மா ரஞ்சிதம் அவர்களை எண்ணியே

'மனைத்தக்க மாண்புடையாள் ஆகித் தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை'

என்கிறது வள்ளுவம்.

பேரும் புகழும் போலவே அவருக்கு நெருடலும் உண்டு. இதனை பல்வேறு தருணங்களில் நான் யோசிக்கிறேன். எதையும் தாங்கிக் கொள்ளும் சக்தியும், வல்லமையும் அவரிடத்தில் இருக்கும் வரை அதிலிருந்து விடுபட்டு உயர்ந்து நிற்பது போலவே எப்பவும் இருப்பார்.

இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்து ஊர்வது அஃதுஒப்பது இல்

- என்ற வள்ளுவர் வழியில் அவரது முன்னுதாரணத்தை அனைவரும் பயில்வோம்.

ஆதிக்கங்களை அசைத்த மக்கள் தலைவர்

பொன்னீலன்

கோட்டைகள் என்பவை மன்னர்களின் அரண்மனைகளைச் சுற்றி அமைந்திருக்கும் பாதுகாப்புச் சுவர்கள். மன்னனும், அவனுடைய குடும்பமும், படைகளும், உதவியாட்களும் வாழும் காப்பிடம் அது. ஆனால் ஸ்ரீவைகுண்டத்தில் ஒரு வித்தியாசமான கோட்டை இருக்கிறது. சுமார் 450 அடி சுற்றளவும், 10 அடி உயரமும் கொண்ட மண்கோட்டை. மன்னர்கள் யாரும் இதனுள்ளே வாழவில்லை. கோட்டைப் பிள்ளைமார் என்னும் ஒரு சமூகப் பிரிவினர்கள் தான் வாழுகிறார்கள்.

இவர்கள் கோட்டைக்குள்ளே வாழ்ந்தது இராணுவ நோக்கங்களுக்காக அல்ல. வேறு அரசியல் நோக்கங்களுக்காகவும் இல்லை. அவர்களுடைய நோக்கம் ஒன்றே ஒன்றுதான். தங்கள் குலப் பெண்களை யார் கண்ணிலும் படாமல் பாதுகாப்பது. இந்தப் பெண்கள் கோட்டைக்குள்ளே பிறந்து, கோட்டைக்குள்ளே வளர்ந்து, வெளியுலகத்தைப் பாராமல் கோட்டைக்குள்ளேயே வாழ்ந்து மடிய வேண்டும்.

கோட்டைக்கு நான்கு வாசல்கள் உண்டு. ஆண்கள் வெளியே போக, உள்ளே வர. ஆனால் பெண்களையோ, கோட்டைக்கு வெளியேயுள்ள சூரிய வெளிச்சம் தீண்டியதே இல்லை. கோட்டைக்குள்ளே இதர சமூகப் பெண்கள் போகலாம். ஆனால் பிற சமூகத்தைச் சார்ந்த ஆண்கள் போக முடியாது. இந்த வழக்கம் ஐந்தாண்டு, பத்தாண்டுகள் அல்ல. கிட்டத்தட்ட முன்னூறு ஆண்டுகள் நடைமுறையில் இருந்தது.

கோட்டை, கல்லால் ஆனதல்ல. வெறும் மண் கோட்டை. ஆண்டுக்கொரு முறை கோட்டை உடைவுகளை மண்ணால் பூசிச் செப்பனிட வேண்டிய கட்டாயம். செப்பனிட வேண்டியவர்கள் யார்? கோட்டைக்கு வெளியே வாழும் தலித் பெருமக்கள் . கோட்டையைப் பழுது பார்க்க நெல்லாகச் சிறிது கூலியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். வயிற்றுப்பாட்டிற்கு? கோட்டைப் பிள்ளைமாரின் நஞ்சை நிலங்களில் இருக்கவே இருக்கிறது கூலி வேலை.

மூன்று நூற்றாண்டுகள் பிரச்சினையின்றிக் கடந்து விடுகின்றன. கோட்டையும் ஆண்டுதோறும் பழுது நீங்கிப் புதுமை பெற்று வருகிறது. அந்தச் சூழ்நிலையில் தான் அருமைத் தோழர்கள் பாலதண்டாயுதமும், ப.மாணிக்கமும் நெல்லை மாவட்டத்தில் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் உருவாக்கத்துக்கு வித்திடுகின்றனர். தோழர் இராமகிருஷ்ணன், அண்ணாச்சி சங்கர நாராயணப்பிள்ளை முதலியோர் ஸ்ரீவைகுண்டம் வட்டாரத்திலும் கட்சிக் கிளைகளை உருவாக்குகின்றனர். தோழர்கள் மீனாட்சிநாதன், பெ.சீனிவாசன் ஆகியோர் இந்த உருவாக்கத்தை வளர்க்கிறார்கள். விவசாய இயக்கம் வேர் பிடிக்கிறது. இந்த இயக்கத்தின் துடிப்பு மிக்க இளம் காளையாகத் தலைமை தாங்குகிறார் நம் மதிப்பிற்குரிய தோழர் ஆர்.நல்லகண்ணு. அவருக்கு உறுதுணையாக வாழவல்லான் ந.ஜெயபாண்டியனும் சிவகளை கந்தப்ப பிள்ளையும் இன்னும் பலரும் நிற்கிறார்கள்.

விவசாய இயக்கம் நீண்ட காலமாக ஒடுக்கப்பட்டுக் கிடக்கும் அடித்தள மக்களுடைய விடுதலை உணர்வைத் தூண்டுகின்றது. அவர்களுக்கு நம்பிக்கையூட்டுகிறது. சமூக விடுதலைக்காகப் போராட அவர்களுக்கு வலிமை தருகிறது. தங்களுடைய விடுதலைக்கான முதல் கோரிக்கையை வைக்கிறார்கள் அவர்கள். ''ஆண்டுதோறும் கோட்டையை புதுப்பிக்கிறோம். எங்களுக்குத் தரும் கூலி பத்தாது. நியாயமான கூலி தர வேண்டும். இந்தக் கோரிக்கை வெறும் கூலி உயர்வு கோரிக்கை அல்ல. நிலப்பிரபுத்துவ ஆதிக்கத்திற்கு எதிராக தலித் மக்கள் துணிந்து முன் வைக்கும் முதல் உரிமைக் குரல். அதிர்ந்து போகிறார்கள் ஆதிக்க வாதிகள். தங்களுடைய அடித்தளம் ஆட்டம் காணுவதை உணர்கிறார்கள். தொடக்கத்திலேயே இந்தக் குரலை நசுக்குவதற்காகத் தங்கள் அடியாட்களைத் தயார் செய்கிறார்கள். போர்க்களம் தயார் ஆகிவிட்டது. ஆதிக்கவாதிகளும் அவர்களின் அடியாட்களும் ஒருபக்கம், மறுபக்கத்திலோ காலம் காலமாக ஒடுக்கப்பட்ட தலித்துகள், தலித்துகள் தனியாக இல்லை. அவர்களோடு சமூக விடுதலைப் போராட்டத்தில் முன் நிற்கும் சகல மனித நேயர்களும் இருக்கிறார்கள். பிரச்சினை சிக்கலாகிறது. ரொம்பவும் அலட்சியமாகத் தலித்துக்களைத் தாக்குவதற்கு ஆயுதங்களோடு பாய்ந்து வந்த அடியாட்கள், தலித்துகளோடு தலித்துகளாக அணி திரண்டு நிற்கும் தங்கள் இன ஆட்களைப் பார்த்ததும் அதிர்ச்சியடைகிறார்கள். அனைவருக்கும் முன் நிற்கும் தளபதி யார்? தாங்கள் மதித்து போற்றுகின்ற மதிப்பிற்குரிய இராமசாமி தேவரின்

மகன். இளைஞர்கள் நல்லகண்ணு பாவி, நீயுமா! அவர்கள் அதிர்ச்சியில் வாயைப் பிளக்கிறார்கள் தொடர்ந்து நடந்த கடும் போராட்டத்தில் தலித்து கள் வெற்றி பெறுகிறார்கள். ஸ்ரீவை குண்டம் வட்டார தலித்துகள் பெற்ற முதல் வெற்றி அது. அதுமட்டுமல்ல, அந்தக் கோட்டை நொறுங்கி, பிரபுத் துவம் உடைவதற்கும், பெண்கள் விடுதலை பெறுவதற்குமான முதல் அதிர்வாகவும் அது அமைந்தது. தன் இன மக்களையே துணிந்து எதிர்த்து நின்று மகத்தான வெற்றியீட்டிய அந்த மாமனிதர் தென்தமிழகம் முழு வதும் இதுபோல் போராடி, பல வெற்றிகளை ஈட்டினார்.

அடித்தள மக்களின் இருபதாம் நூற்றாண்டு எழுச்சி வரலாற்றினை எழுத நினைக்கும் எவரும் தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்களின் பெயரை விட்டுவிட்டு யோசிக்க முடி யாது. அடித்தள மக்களின் எழுச்சி நாயகர் அவர்.

இதே நாயகரின் இன்னொரு மு கம் ஒளி வீசுகிறது. 1995ல் அவ ருடைய சொந்த மாமனார் மதிப்பிற் குரிடய அ.க.அன்னசாமி அவர்கள் படுகொலை செய்யப்பட்டுக் கிடக்கி றார். எந்த தலித் மக்களுக்காகக் காலம் முழுவதும் அந்த மாமனிதர் போராடி னாரோ, அந்த தலித் மக்களில் சிலரா லேயே வெட்டப்பட்டு இரத்த வெள்ளத்தில் கிடக்கி றார். அதிர்ச்சியில் திணறிப் போய் நிற்கிறது மருதன் வாழ்வு வட்டாரம். பச்சை இரத்தத்தையும், பிளந்து நிற் கும் வெட்டுக் காயங்களையும் பார்க்கப் பார்க்க சாதா ரண மக்களுக்கே பழிக்குப் பழி வாங்க வேண்டுமென் று வெறி ஏறிக் கொண்டிருக்கிறது. இந்தக் கொலை வெறி, கூடிநிற்கும் மக்கள் கூட்டத்தை இறுக்கி உணர்ச்சி வயப்படுத்தி, வெறியூட்டி வதைக்கிறது. ஒரு சின்ன அசைவு, இலேசான தீப்பொறி போதும். பல நாட்களுக்குக் கட்டுப்படுத்தபட முடியாத படுகொலை கள் இரண்டு பக்கமும் அரங்கேறியிருக்கும். மிகவும் பயங்கரமான இந்த சூழ்நிலையில், தன்னை முழுக்க முழுக்க சாந்தப்படுத்திக் கொண்டு, ஒரு மாபெரும் தலைவராக நிமிர்ந்து நிற்கிறார் நல்லகண்ணு. நம்மிடம் நல்லிணக்கம் வேண்டும். பழிவெளியோ, பகை வெறி யோ நம் இலட்சியங்களை சின்னாபின்னமாக்கிவிடும். சகோதர உறவுகளைப் பேணுங்கள். அன்பைப் பெருக்கி சாந்தம் அடையுங்கள் என்று அந்த பெரும் கூட்டத்தை சாந்தப்படுத்தினார் அவர். நவகாளியில் காந்தியடிகள் செய்த அதே காரியத்தை நல்லகண்ணு இங்கே செய்தார். இது அவரின் ஒளி ததும்பும் இன்னொரு முகம்.

இன்றைய தமிழகத்தில் இப்படிப்பட்ட ஒரு மக் கள் தலைவர் - மக்கள் நலனில் தன் நலத்தை இரண்ட றக் கரைத்துக் கொண்ட நேர்மையாளர். போர்க்குண மிக்கக் கருணையாளர் வேறு எவரும் இல்லை யென்று துணிந்து சொல்ல முடியும். 80 வயது நிறை யும் அந்த அற்புதத் தலைவர் இன்னும் இளமை யோடும் கதகதப்போடும் இருக்கும் இரகசியம் இது தான். பல்லாண்டு பல்லாண்டு அவர் நிறைவாக வாழ்ந்து, தமிழ் மக்களுக்குத் தொடர்ந்து தொண்டாற்ற வேண்டும். வழிகாட்ட வேண்டும்.

பாரதி புகழ்பாடும் கண்ணன்

இளசை மணியன்



நாற்பது ஆண்டுகளுக்கு முந்திய சம்பவம். அப்போது நெல்லை மாவட்ட கம்யூனிஸ்ட் கட்சி, ஜங்ஷனில் கண்ணம்மன் கோவில் தெருவில் செயல்பட்டு வந்தது. தொ.மு.சி.ரகு நாதன் அங்கு வந்து பேசிக் கொண்டு இருப்பது வழக்கம். இந்நிலையில், தோழர் நல்லகண்ணு மாதம் ஒருமுறை இலக்கியக் கூட்டம் அல்லது சந்திப்பு நடத்தலாம். அங்கு வரும் அன்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டார்கள்.

தோழர் நல்லகண்ணு முயற்சியில் முதல் கூட்டம் நடந்தது. பேராசிரியர் நா.வானமாமலை, தொ.மு.சி.ரகுநாதன், இன்னும் சில இலக்கிய அன்பர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். கி.ராஜநாராயணன் வந்திருந்தார் என நினைக்கிறேன். நானும் கூட்டத்திற்கு போயிருந்தேன். கூட்டத்தின் நோக்கம் பற்றி நல்லகண்ணு பேசினார். எடுத்த எடுப்பில்,

"என்று தணியும் இந்த சுதந்திர தாகம்?
என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்?"

என்ற பாரதி பாடலை உணர்ச்சிபூர்வமாக சொல்லித்தான் அறிமுக உரையைத் தொடங்கினார். பாட்டைச் சொல்லும் போது அவரது கண்களில் உணர்ச்சி பீறிட்டதை நான் பார்த்தேன். பாரதி பாடல்கள் என்றால் அவருக்கு உயிர். சாதாரணமாக பேசிக் கொண்டிருக்கும் பொழுது கூட, பாரதி பாடல்களை மேற்கோள் காட்டி பேசுவார். இளமைக் காலத்தில் மாணவனாக இருந்தபொழுது, பாரதி பாடல்களை பாடித் திரிந்ததை நினைவுபடுத்தி என்னிடம் கூறியுள்ளார். கலைத் தொண்டர் கழகம் என்ற அமைப்பின் செயலாளராகப் பொறுப்பேற்றுள்ளார்.

எட்டயபுரத்தில் பாரதி மணிமண்டபம் நிறுவ தோழர் ஆர்.நல்லகண்ணு நிதி வசூலித்து வழங்கியதுடன், மண்டபத் திறப்பு விழாவிற்கு பிரதிநிதியாக வந்துள்ளார்.

நெல்லையில் நடைபெற்று வந்த இலக்கியக் கூட்டங்களில் எட்டயபுரம் பாரதி விழா நிகழ்ச்சிகள் பற்றியும் பேச்சு வரும். நல்லகண்ணு, தொ.மு.சி. ஆகியோர் விழா நிகழ்ச்சிகள் பற்றி சில ஆலோசனைகளையும் கூறியுள்ளார்கள். இந்த இலக்கியக் கூட்டத்திற்கு முன்னரே எட்டயபுரம் பாரதிவிழா தொடங்கி விட்டது. தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் கிளையான பாரதி முற்போக்கு வாலிபர் சங்கம் நடத்தும் பாரதி விழாவில் தொடர்ந்து தோழர் நல்லகண்ணு கலந்து கொண்டுள்ளார். அவர் கட்சியின் செயலாளராக தேர்வு செய்யப்பட்ட பின்பு, அரசியல் பணியின் காரணமாக இடையே சில ஆண்டுகள் கலந்து கொள்ள முடியவில்லை.

எட்டயபுரம் பாரதி விழாவில் பட்டிமன்றம், கருத்தரங்கம், படத்திறப்பு என்று பல்வேறு இலக்கிய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டுள்ளார். ஒரு சமயம் விழாவில், ‘நிலம் உழுபவனுக்கா? உடைமையாளருக்கா?’ என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது. பேராசிரியர் நா.வானமாமலை நடுவர் என நினைக்கிறேன். ‘உழுபவனுக்கே நிலம் சொந்தம்’ என்பதை மிக ஆழமான கருத்தோட்டத்துடன் தோழர் ஆர்.என்.கே. வாதிட்டார். அந்த பட்டிமன்றத்தில் உடமையாளன் கட்சியில் நான் வாதிட்டேன். பட்டிமன்றம் முடிந்ததும், ‘பீஸ் வாங்கி வாதிடும் வக்கீல்கூட உங்களைப் போன்று வாதிட மாட்டார்’ எனக் கிண்டலாகச் சொன்னார்.

பாரதி விழாவில் படத்திறப்பு மிக முக்கிய நிகழ்ச்சி. மறைந்த எழுத்தாளர்கள், கவிஞர்கள் அல்லது கலைஞர்கள் படங்களைத் திறந்து வைப்பது வழக்கம். அதேபோன்று நூற்றாண்டு விழாக் காணும் அறிஞர்கள், சான்றோர்கள் படங்களை திறந்து வைப்பதுண்டு. சுப்பிரமணிய சிவா படத்தைத் திறந்து வைத்து தோழர் ஆர்.என்.கே. மிக உருக்கமாகப் பேசினார். வ.உ.சி., சிவா, பாரதி மூவரும் விடுதலைப் போராட்டத்தில் எவ்வாறு தீவிரவாத தேசிய இயக்கத்தை தமிழகத்தில் வழிநடத்தினார்கள் என்பதை ஆதாரபூர்வமாக எடுத்துரைத்தார். பாப்பாரப்பட்டியிலுள்ள அவரது பாரத ஆசிரமத்திற்கு சென்று வந்ததைக் குறிப்பிட்டார். அதேபோன்று, கவிஞர் திருமூர்த்தி படத்தைத் திறந்து வைத்து உழைக்கும் மக்களைப் பாடிய கவிஞன் என்பதை இனம் காட்டினார். நெ.து.சுந்தரவடிவேலு படத்தைத் திறந்து வைத்துப் பேசும்போது இந்திய - சோவியத் கலாச்சாரக் கழகத்தின் வளர்ச்சிக்கு ஆற்றிய பணியைக் குறிப்பிட்டதுடன், கல்வித் துறையில் அவரின் ஆற்றல் மிகுந்த செயல்களைப் புகழ்ந்து கூறினார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் ‘பாட்டாளிகளைப் பாடிய பாவலர்கள்’ என்ற தலைப்பில் திருமூர்த்தி பற்றியும் பேசினார் என்று நினைக்கிறன்.

எட்டயபுரம் பாரதி விழாவில் கருத்தரங்கம் நிகழ்ச்சி மிக மிக முக்கியமானது. பேராசிரியர் நா.வானமாமலை தான் இதற்கு வித்திட்டவர். தோழர் ஆர்.என்.கே. கருத்தரங்கை ஒரு ஒர்க்ஷாப், அதாவது, பட்டறை என்று கூறுவார். ‘கருத்தரங்கில் பேசப்படும் பல செய்திகளைத் தான், விழாவின் பொது நிகழ்ச்சிகளுக்கு கொண்டு செல்ல வேண்டும்’ என்றும் கூறியுள்ளார். பாரதி போற்றிய தேசபக்தர்கள் என்ற பொருளில், திலகர், அண்ணல் காந்தியடிகள், வ.உ.சி. சகோதரி நிவேதிதா தேவி ஆகியோர் பற்றிய கருத்தரங்கம் விழாவில் நடைபெற்றது. தோழர் நல்லகண்ணு கருத்தரங்கில் கலந்து கொண்டு ‘பாரதி போற்றிய தேசபக்தர்கள்: விபின் சந்திரபாலர்’ என்ற தலைப்பில் பேசினார். கருத்தாழமிக்கப் பேச்சு. புதிய செய்திகளைத் தொகுத்து வழங்கினார். அதிலும் குறிப்பாக, தீவிரவாத தேசிய இயக்கத்தில் பங்கு கொண்டதோடு மட்டுமல்லாமல், தமிழகத்தில் அதை தலைமை தாங்கி வழிநடத்திச் சென்றவர்களில் பாரதியின் பாத்திரத்தை, பங்களிப்பை விரிவாகக் கூறினார். அத்துடன் பாலரைப் பற்றி பாரதி எழுதிய கட்டுரைகளைத் தொகுத்துக் கூறி, சென்னையில் அவரது பிரசங்கத்திற்கு பாரதி செய்த ஏற்பாடுகளைப் பற்றியெல்லாம் வரலாற்று சான்றுகளுடன் எடுத்துக் கூறினார். கருத்தரங்கில் அவர் பேசியது பின்னால் கட்டுரையாக ‘சாந்தி’ பத்திரிக்கையில் வெளியானது என நினைக்கிறேன்.

பாரதி நூற்றாண்டு விழாவில் தோழர் நல்லகண்ணு பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. உலக சமாதானக் கவுன்சிலின் தலைவர் தோழர் ரொமேஷ் சந்திரா தலைமையில் பன்னாட்டு அறிஞர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் எட்டயபுரம் வந்தார்கள். கோலாகலமாக விழா நடைபெற்றது. விழாவின் சிறப்புக்களை இச்சிறு கட்டுரையில் விவரிக்க முடியாது. தியாகி கோபாலகிருஷ்ணயாதவ், தோழர்கள் சோ.அழகர்சாமி, எஸ்.எஸ். தியாகராஜன் ஆகியோர் முன்னின்று விழா ஏற்பாடுகளைச் செய்தார்கள். தோழர் நல்லகண்ணு இரு தினங்களுக்கு முன்னரே எட்டயபுரம் வந்து விட்டார். முதல் நாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பாரதி நூற்றாண்டு விழாவினைச் சிறப்பாக நடத்திய பின்னரும் தொடர்ந்து பாரதிப் புகழ் பாடிக் கொண்டே இருப்போம் என்று அறுதியிட்டுக் கூறினார். நூற்றாண்டு விழா ஊர்வலத்தில் கட்சி இயக்கத்தை முழுமையாக ஈடுபட செய்தார். அன்றைய நெல்லை மாவட்டம் முழுவதிலுமிருந்து கட்சித் தோழர்கள்

வந்திருந்தார்கள். பிரமாண்டமான ஊர்வலம் நடைபெற்றது. அதேபோல் பன்னாட்டு அறிஞர்கள் பங்கு கொள்ளும் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து அனைத்து நிகழ்ச்சிகளும் சிறப்புற அமைய பாடுபட்டார் ஆர்.என்.கே.

'பாரதி வாழ்க்கைச் சித்திரம்' என்ற நூலை தி.முத்துகிருஷ்ணன் எழுதினார். அவருக்கு விழாவில் பாராட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. பாராட்டி மிக அருமையாக பேசினார் தோழர் ஆர்.என்.கே. ''விழாக்கள் நடத்துவதோடு எங்கள் வேலை முடிவடைந்து விடவில்லை எனக் கூறி பேராசிரியர் நா.வா., தொ.மு.சி. தொடங்கி பொன்னீலன் வரை தலைசிறந்த இலக்கியப் படைப்புக்களையும் வெளிக் கொண்டு வருகிறோம்'' என்று பெருமையுடன் கூறினார்.

எட்டயபுரம் பாரதி விழாவில் இரு தினங்களும் குடும்பத்துடன் கலந்து கொள்வார். அதேபோல் அவரது மாமனார் அன்னசாமித் தேவர் ஆண்டு தோறும் விழாவிற்கு வந்து விடுவார். விழா நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டு நடத்தவும், பொதுமக்களை திரட்ட வேண்டுமென்பதையும் வற்புறுத்தி அவருக்கே உரிய பாணியில் மெல்ல சிரித்துக் கொண்டே சொல்வார். பொதுவாக விழாவில் கலந்து கொள்ள அழைப்புக் கடிதம் எழுதுவோம். அவரிடமிருந்து பதில் எப்படி வரும் தெரியுமா? 'இரு தினங்களும் எட்டயபுரத்தில் இருக்கிறேன்' என்று தான் எழுதுவார். ஆம். அவருக்கு - எட்டயபுரம் தேசியத் திருப்பதி. பாரதி விழாவில் பங்கு கொள்வதை தேசிய கடமையாக கருதுபவர்.

எட்டயபுரத்தில் ரகுநாதன் நூலகம், பாரதி ஆய்வு மையம் அமைவதற்கு உறுதுணையாக விளங்கினார். ரகுநாதன் கல்வி அறக்கட்டளை பதிவு செய்யப்பட்ட நாளில் எட்டயபுரத்தில் பத்திரிக்கையாளர்கள் கூட்டம் நடைபெற்றது. அதில் பேசும்போது 'சென்ற நூற்றாண்டில் பாரதிக்கு மணிமண்டபம் எழுப்பப்பட்டது. புத்தாயிரத்தில் பாரதி ஆய்வு மையம் அமைக்கப் பட்டுள்ளது வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சி' எனக் கூறினார்.

தோழர் ஆர்.என்.கே.யைப் பொறுத்தமட்டில், போராட்டமே அவரது வாழ்க்கை. அந்நிலையிலும், எட்டயபுரம் பாரதி விழாவிற்கு வருவது மனநிறைவு அளிக்கிறது என அடிக்கடி கூறுவார். பாரதி, கண்ணனை பல வடிவங்களில், தோற்றங்களில் பாடி மகிழ்ந்தான். பாரதியின் ஆளுமையை, இலக்கியத்தைப் புகழ்ந்துரைக்கும் நம் கண்ணன் - தோழர் ஆர்.நல்லகண்ணு பாரதி புகழ்பாடி வரும் நிலா.

உறுதிமிக்க தலைவர்

கோ.பழனிசாமி, எம்.எல்.ஏ.

உழைக்கும் மக்களின் உறுதி மிக்க தலைவர் தோழர் ஆர்.என்.கே. அவர்கள். சிறந்த படிப்பாளி; மிகச் சிறந்த படைப் பாளி. அரசியலில் நேர்மையும் நிதானமும் உடையவர். இலக்கியத் திலும் தமிழிலும் மிகவும் ஆர்வம் கொண்டவர். தமிழ்நாட்டின் உழைக்கும் மக்களின் ஒப்பற்ற தலைவராகவும், தியாகச் சீலராகவும் விளங்கும் தலைவர்களின் முதன்மை யான தலைவராவார். எளிமையான வாழ்க்கை வாழ்வதில் அவருக்கு நிகர் அவரே. அவருக்கு இணையாக வேறு யாரும் இருக்க முடியாது. அரை குடம் தழும்பும்; நிறை குடம் தழும்பாது என்று பழமொழி கூறுவது உண்டு. அதைப்போல அரசியலில் தோழர் ஆர்.என்.கே. தழும்பியது இல்லை.

என்னைப் போன்ற சாமானியர்கள் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட காலம் முதல், தமிழ்நாட்டு மக்களுக்கும் உழைக்கும் தொழிலாளர்களுக்கும் நம் நாட்டின் விவசாய வளர்ச்சிக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் சட்டமன்ற நடவடிக்கைகளில் கம்யூனிஸ்ட் கட்சி பங்கு பற்றியும், சட்டமன்ற உறுப்பினர்கள் எப்படிப் பேசுவது, நடந்து கொள்வது என்று சிறந்த ஆலோசனைகளை வழங்கி, எங்களுக்கும் கட்சிக்கும் பெருமை சேர்க்கும் மகத்தான தலைவர். அவரின் அரசியல் வாழ்வில் மலிவான அரசியல் நடத்துவதற்கு ஒரு போதும் விரும்பியது இல்லை. அறிவுப்பூர்வமான ஆலோசனை வழங்கி, இளம் தோழர்களை வளர்ப்பதில் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்கிறார்.

அவர் இடத்தில் பல அரசியல் அனுபவம் உண்டு, கோபத்தைத் காண முடியாது என்று கூறுவது உண்டு. தோழர்களோடு கலந்து ஆலோசனை செய்கின்றபோது கட்சிக்கு சிறிது விரோதமாக இருந்தால் சிலர் பேசி திருத்துவார்கள். ஆனால் தோழர் ஆர்.என்.கே. அவர்கள் பேசாமல் இருந்தாலே திருத்துவதற்கான அறிகுறி தென்படும்.

தலைவர் ஆர்.என்.கே. அவர்கள் எளிமையான வாழ்க்கையின் தோற்றத்தை பார்த்து என் இடத்தில்,

பேருந்திலும் புகை வண்டியிலும் பயணம் செய்கின்ற பொழுது தமிழ்நாட்டு தலைவர்களை ஒப்பிட்டு பேசும்பொழுது சக பயணியர்கள் அவர் என்ன இனத்தைச் சார்ந்தவர் என்று தெரியாமல் ஒரு தலித் தலைவர் ஒரு சிறந்த தலைவர் ஆக இருக்கிறார் என்று பேசுவார்கள், அந்தளவிற்கு அவர்களின் மனதில் எல்லாம் நீங்கா இடம் பிடித்தது என்றால், அது அவருடைய எளிமையான வாழ்க்கை; கம்யூனிஸ்ட் கட்சிக்கு புகழையும் பெருமையையும் மேலும் மேலும் சேர்க்கிறது.

தோழர் ஆர்.என்.கே. அவர்கள், புரட்சிகரமான கம்யூனிஸ்ட் இயக்கத்துக்கும், நம் நாட்டு வளர்ச்சிக்கும் அவருடைய அரசியல் அறிவாற்றல் சேவையாற்றிட பல்லாண்டு காலம் வாழ்ந்திட வாழ்த்துகிறேன்.

நான் அறிந்த நல்லவர்

வி.இராஜமோகன்

தோழர் நல்லகண்ணு அவர்களை நான் முதலில் பார்த்தது 60ஆம் ஆண்டுகளின் இறுதியில் என்று நினைவு. சென்னையில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் கிளை ஒன்றில் தோழர் சிருங்காக்கோட்டை தம்பிராசன், கவிஞர் ஜீவாதாசன், பாரதிப்பித்தன் ஆகியோரோடு இணைந்து நானும் செயல்பட்டு வந்தேன். ஞாயிறுதோறும், பிராட்வேயில் மதராஸ் ஹார்பர் தொழிலாளர் சங்கக் கட்டிடத்தில் உள்ள ஜீவா ஹாலில் யாராவது ஒரு எழுத்தாளரை அல்லது கவிஞரை அழைத்து வந்து இலக்கியக் கூட்டங்கள் நடத்துவதும், அக்கூட்டங்களில் வெவ்வேறு தலைப்புக்களில் நாங்கள் பேசுவதும் உண்டு.

ஆண்டுதோறும் நாங்களே நிதி வசூலித்து கோகலே ஹாலில் பாரதி விழா நடத்துவோம். அவ்வாறு நடந்த பாரதி விழா பட்டிமன்றத்தில் தோழர் நல்லகண்ணு கலந்து கொண்டார். விவசாய சங்கம், விவசாயத் தொழிலாளர் சங்கம் ஆகியவற்றின் மாநிலத் தலைமை அலுவலகங்கள் பெரியண்ண மேஸ்திரி தெருவில் இருந்த கட்டிடம் ஒன்றில் இயங்கி வந்தது. முன் பகுதியில் கட்சியின் சென்னை மாவட்டக் குழு அலுவலகம் அமைந்திருந்தது.

சைதாப்பேட்டை கிளைச் செயலாளராகவும், பின்னர் சைதை தொகுதியின் செயலாளராகவும் பொறுப்பேற்று நான் செயல்பட்டபோது, கட்சிப் பணிகள் நிமித்தம் அடிக்கடி மாவட்டக் குழு அலுவலகத்திற்குச் சென்று வருவேன். அப்போதெல்லாம் தோழர் நல்லகண்ணுவைச் சந்திக்கவும், உரையாடவும் வாய்ப்புகள் கிட்டின.

71ஆம் ஆண்டிற்குப் பிறகு, நான் மாவட்ட மையத்திலிருந்து செயல்பட்டேன். மதிய உணவை வீட்டிலிருந்து கொண்டு வந்து அலுவலகத்தில் வைத்துச் சாப்பிடுவேன். ஒருநாள் காலையில் அலுவலகம் வந்துவிட்டு, வேலையாக வெளியே சென்றிருந்தேன். பிற்பகல் 3 மணிக்குத் திரும்பி வந்து டிபன் டப்பாவை எடுத்து வைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். அப்போது ஜனசக்தி அலுவலகத்திற்குச் சென்று அங்கிருந்த நூலகத்திலிருந்து புத்தகம் எடுத்துக் கொண்டு தோழர் நல்லகண்ணு வந்தார். என்னைப் பார்த்து ''என்ன இவ்வளவு தாமதமாகச் சாப்பிடுகிறீர்களே?'' என்றார். ''வெளியே போயிருந்தேன். வேலையை முடித்து விட்டு வர நேரமாகிவிட்டது'' என்றேன். அதற்கு அவர், ''நம்முடைய தோழர்களில் பலருக்கும் வயிற்றுக் கோளாறு ஏற்படுவதற்கு காலத்தே சாப்பிடாதது தான் காரணம். வேலையாக வெளியே போகும் போது சாப்பிட வாய்ப்பு இல்லை என்றால், நாலணாவுக்கு வேர்க்கடலையாவது வாங்கிச் சாப்பிட்டு ஒரு தம்ளர் தண்ணீர் குடித்து விட வேண்டும். வயிற்றைக் காயப் போட்டால், பின்னால் தொந்தரவு வரும்'' என்று அன்போடு கூறினார். அவர் அன்று சொன்னது இன்று பசுமையாக என் நினைவில் உள்ளது.

நிலமீட்புப் போராட்டத்தின் போது, தமிழகத்தின் பெரும் நிலவுடமையாளர்களின் பட்டியலையும், அவர்கள் வளைத்துப் போட்டுள்ள நிலத்தின் அளவையும் பற்றிக் கட்சி ஒரு கணக்கெடுப்பை மேற்கொண்டது. சேகரித்த விபரங்களைப் பார்த்து வருவாய்த்துறை அதிகாரிகளே அயர்ந்து போனார்கள். அன்று கட்சி மேற்கொண்ட முயற்சியில் தோழர் நல்லகண்ணு அவர்களுக்குக் குறிப்பிடத்தக்க பங்கு உண்டு.

கட்சித் தோழர்கள் மீது, அவர்கள், பொறுப்பில் இருந்தாலும்,

சாதாரணத் தோழராக இருந்தாலும், அவர் காட்டுகிற அக்கறையே தனியானது. 1974இல் சென்னையில் நடைபெற்ற கட்சியின் மாநில மாநாட்டில் சென்னையில் கட்சியின் மாநிலத் தலைமை அலுவலகத்திற்கென சொந்தக் கட்டிடம் வாங்க முடிவெடுக்கப் பட்டு, நிதி திரட்டி, இப்போதுள்ள பாலன் இல்லம் வாங்கப்பட்டது. அப்போது, கட்சி அலுவுலகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த ராமநாதபரம் மாவட்டத்தைச் சார்ந்த இளைஞர் ஒருவர் இருந்தார். அலுவலகத்தில் பணியாற்றியோரில் எல்லோரிலும் அவர் தான் மிகவும் குறைந்த வயதுக்காரர். அவருக்கு, அவரது மாமா மில்லில் வேலை வாங்கித் தருவதாகவும், ஊருக்கு வந்து சேரும்படியும் கடிதம் வந்தது.

அந்த இளைஞர் எல்லோரிடமும், ''நான் ஊருக்குப் போய் மில்லில் வேலை செய்யப் போகிறேன்'' என்று மிகுந்த மகிழ்ச்சியோடு சொல்லிக் கொண்டிருந்தார். எல்லோரும், ''அப்படியா? ரொம்ப சந்தோஷம், நீ போய் நன்றாக வேலை செய்'' என்று சொல்லிக் கொண்டிருந்தனர். ஆனால் தோழர் நல்லகண்ணு, இது பற்றி மற்றவர்களிடமிருந்து மாறுபட்டுச் சிந்தித்தார். நானும், தோழர் துரைராஜ், மற்றும் சில தோழர்களும் அவரோடு பேசிக் கொண்டிருந்தபோது, ''கட்சி அலுவலகத்தில் இருந்து பணியாற்றிய ஒரு இளைஞர், வேறு வேலைக்குப் போவதில் இவ்வளவு மகிழ்ச்சியடைகிறார் என்றால் நம்மிடத்தில் ஏதோ குறை இருக்கிறது'' என்று சொன்னார் தோழர் நல்லகண்ணு.

ஓராண்டிற்கு முன்னர், எனது நண்பர் ஒருவர் இரவு 10 மணிக்கு மேல் என்னைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். அன்று தனது மனைவியை மதுரைக்கு அனுப்புவதற்காக ரயில் நிலையம் சென்றதாகவும், ரயிலில் இரண்டாம் வகுப்புப் பெட்டியில் தோழர் நல்லகண்ணுவைப் பார்த்ததாகவும், முதல் வகுப்பிலோ அல்லது ஏ.சி.கோச்சிலோ அவர் செல்ல ஏன் டிக்கெட் எடுக்கவில்லை என்று என்னிடம் கோபமாகக் கேட்டார். அதற்கு நான், ''அவர் எப்போதுமே இரண்டாம் வகுப்பிலே தான் பயணம் செய்வார்'' என்று சொன்னேன்.

''நிஜமாகவா சொல்கிறீர்கள், எப்போதுமே இரண்டாம் வகுப்பில் தான் பயணம் செய்வாரா? என்ன சார்! நீங்கள் சொல்வதை என்னால் நம்ப முடியவில்லையே?'' என்றார். இந்த உண்மையை அவரை ஏற்றுக் கொள்ள வைக்க நான் பெரும்பாடுபட வேண்டியிருந்தது.

இரண்டு நாட்கள் கழித்து அந்த நண்பர் என்னை நேரில் சந்தித்த போதும் அதே கேள்வி. நானும் அதே பதிலைச் சொன்னேன். அதற்கு, ''இப்படிப்பட்ட தலைவர்களும் இருக்கிறார்களா?'' என்றார். நான் நெஞ்சு நிமிர்த்திச் சொன்னேன்; ''ஆம் அப்படிப் பட்ட தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கம்யூனிஸ்டுகள்''

பார்வைக்கு எளிமை!
பழகுவதில் இனிமை!
பாசத்தில் தோழமை!

எண்பது வயதைக் கடந்தபோதிலும் இளைஞர்களுக் குரிய வேகம்!

சிரித்த முகம்!
எப்போதும் எளியோர் மீது பரிவு!

இயக்கத்தின் மீதும், இயக்கததின் வளர்ச்சியின் மீது மாறாத பற்று - இதுதான் 'தோழர் ஆர்.என்.கே.' என்று இயக்கத் தோழர்களால் அன்புடன் அழைக்கப் படும் எங்கள் தோழர் ஆர்.நல்லகண்ணு.

ஆர்.என்.கே.

உயிருள்ள
மனிதகுல வரலாறு
நூறாண்டு பல கடந்தும்
அமரத்துவம் வாய்ந்த
ஓர் சொல்லை
பொத்திப் பாதுகாக்கும்
குழந்தைமையின்
துள்ளலோடு
அது கூவி அழைக்கும்
பொதுவுடமை
நிலவெளியெங்கும்
மிக எளிமையோடு
அபூர்வமாய் ஒளிரும்
தழும்பேறிய அந்தச் சொல்
தோழர் நல்லகண்ணு

ஓவியம் - கவிதை : பெ.அன்பு

வரலாறோடு ஓர் பயணம்

எஸ்.குணசேகரன்

நான் இளைஞராக இருக்கும்போது 1976ம் ஆண்டு நெல்லையிலிருந்து தூத்துக்குடி பேருந்தில் சென்று கொண்டிருந்தேன். அப்போது என்னோடு தோழர் ஆர்.என்.கே. இல்லை, இல்லை ஓர் வரலாறோடு பயணித்தேன்.

நான் கட்சியில் சேர்ந்த புதிது. ஓரளவு நக்சல் கருத்துக்கள் என்னை பாதித்திருந்த நேரம். தோழர் ஆர்.என்.கே. முன்னணி தலைவர், எனக்கு கிடைத்த அந்த சந்தர்ப்பத்தில் நீண்ட நேரம் தொனத் தொனவென என் கருத்துக்களை கொட்டித் தீர்த்தேன்.

தோழர் ஆர்.என்.கே. அமைதியாக நிதானமாக அவற்றை செவிமடுத்து கேட்டு எனக்கு பதில் அளித்த முறை என்னை வியக்க வைத்தது.

அதே தோழர் ஆர்.என்.கே. கட்சியின் மாநில செயலாளராக மத்திய நிர்வாகக் குழு உறுப்பினராக பொறுப்பேற்று செயலாற்றிய போதும், தோழர்கள் பல்வேறு பிரச்சினைகளை அவரிடம் சந்தித்து பேசும் பொழுது முழுமையாக அவர்களுடைய கருத்துக்களை கேட்டுவிட்டு அவர் தோழர்களுக்கு கட்சியின் கொள்கை, அரசியல் சூழல், அவற்றை மையமாக வைத்து நிதானமாக அதே சமயம் உறுதியாக பதில் அளிக்கிற விதம் அலாதியானது.

நிதானம். நிதானம்... பொறுமை.. பொறுமை.. பொறுமை.. அதே சமயம் கொள்கையில் உறுதி.. உறுதி... உறுதி...! அதுதான் தோழர் ஆர்.என்.கே.!

சிறந்த அரசியல் தலைவர் பெற்றிருக்கவேண்டிய சிறந்த பண்புகளை தோழர் ஆர்.என்.கே. பெற்றிருக்கிறார். என்னைப் போன்ற தலைமுறை இடைவெளி உள்ள தோழர்களை சந்திக்கும் போதெல்லாம் பயனுள்ள அரசியல் நிகழ்வுகளை அனுபவங்களை நினைவு கூர்ந்து சிறந்த ஆசானாக வழிகாட்டுபவர்.

சக நண்பர்களிடம் சில குறைபாடுகள் இருந்தால் அவற்றை குத்திக் காட்டி அதையே முதலாக்கி ஓரங்கட்டும் அரசியல் உலகில் குறைகளை பின் நிறுத்தி திறமைகளை மட்டும் மதிப்பிட்டு பாதுகாப்பதிலும், வளர்ப்பதிலும், அவர் ஒரு தாயாக செயல்படுபவர்.

எல்லோரையும் பின்னுக்குத் தள்ளி வெற்றி பெற நினைக்கும் ஓட்டப் பந்தய வீரனல்ல புரட்சியாளன், சக மனிதனை தோழர்களை கரம் கோர்த்து சமநிலையோடு இழுத்து செல்பவனே புரட்சியாளன். அந்த வரிசையில் தோழர் ஆர்.என்.கே. அவர்கள் தன்னை அடையாளப்படுத்தி புரட்சியாளராக இயக்கத்தில் வரலாறாய் பணியாற்றுகிறார்.

அந்த வரலாற்றின் ஒரு பக்கமாய், வரியாய் அவரோடு அணிவகுப்பது பெருமைக்குரிய ஒன்றாகும்.

தாய்குலத்தைப் போற்றும் தலைவர்

பி. பத்மாவதி

மனிதப்பற்றும், மனித நேயமும் பிறப்பாகக் கொண்ட எங்களுடைய அரசியல் (தந்தை) தலைவர் தோழர் ஆர்.என்.கே. அவர்களின் 80வது அகவை நிறைவு நாளை காணுகின்ற வேளையில் அவர்களது எளிமையான வாழ்க்கை அமைதி நிறைந்த ஆற்றல் மிக்க தன்னலமற்ற மக்கள் சேவை, அசைக்க முடியாத உருக்கு போன்ற அரசியல் தன்னம்பிக்கை, லட்சியப்பிடிப்பு... இதற்கு மேலும் பல உயர்ந்த பண்புகள் நாங்கள் தலை வணங்கி மகிழ்கின்றோம்.

சுதந்திர போராட்ட களத்தில் தன்னை ஐக்கியப்படுத்திக்கொண்ட நமது ஒப்பற்ற தலைவர், தோழர் ஆர்.என்.கே. அவர்கள் அரை நூற்றாண்டுகளுக்கு மேற்பட்ட காலங்களில் கிராமப்புற மக்களைத் திரட்டி வரலாற்று சிறப்பு மிக்க பல போராட்டங்களுக்கு தலைமை ஏற்று நடத்தியதன் மூலம் அம் மக்கள் வாழ்வு சார்ந்த பல நன்மைகளை பெற்றிருக்கிறார்கள்.

சாதீய அடக்குமுறைகளையும், சமூகக் கொடுமைகளையும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளையும் கிராமங்களிலிருந்து விரட்டவும், உழைப்பில் ஈடுபட்டிருக்கின்ற வேளாண் தொழிலாளர்களுக்கு தொழிலாளர் உரிமை - உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைத்திடவும், குறிப்பாக பெண்கள் சம வேலைக்கு சம ஊதியம் பெற்றிடவும்

தொடர்ந்து போராடி வரும் விவசாய தொழிலாளர்கள் சங்கத்தின் மாநில செயலாளராக தோழர் ஆர்.என்.கே. அவர்கள் பொறுப்பில் இருந்தார்கள். அந்த காலத்தில்தான் 1974ல், தஞ்சையில் நடைபெற்ற மாவட்ட வி.தொ.ச. மாநாட்டில் நான் அச் சங்கத்தின் மாவட்டக் குழு உறுப்பின ராக தேர்வு செய்யப்பட்டேன். நமது மதிப்புமிகு தோழர்கள் எம். காத்த முத்து (நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்), கே. முருகையன் (நா.ம.மு.உறுப்பினர்), ஆர்.என்.கே. ஆகியோர் கொடுத்த ஆக்கமும், ஊக்கமும் அச் சங்கத்தில் நான் பல்வேறு பொறுப்புகளில் இருந்து பணியாற்ற வழிவகை செய்துள்ளது.

தோழர்கள், அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட காலங்களில் தலைமறைவு வாழ்க்கையில் ஈடுபட்டி ருந்தபோது அவர்களைக் காப்பாற்று வதிலும் உதவிகள் செய்வதிலும் பெண்கள் (குறிப்பாக தலித் பெண்கள்) பெரும் பங்கினை வகித் துள்ளார்கள். நமது கிராமப்புற எழுத்தறிவில்லாத தாய்மார்கள் கூடையில் சாதத்தை வைத்து மூடி அதன் மீது விராட்டிகளை வைத்து சுமந்து சென்று வயல்வெளிகளில் பதுங்கியிருக்கின்ற தோழர்களுக்கு உணவளித்திருக்கிறார்கள். அத் தோழர்களுக்கு பரங்கி இலையில் உணவு வைப்பார்கள். அவர்கள் உண்டபிறகு அந்த இலைகளை நீர் ஓடுகின்ற வாய்க்காலில் காத தூரம் சென்று வீசி வருவார்கள். ஏனென் றால் மோப்பம் பிடித்துவரும் காவல் துறையின் கெடுபிடிகளுக்கும் அச்சுறுத்தலுக்கும் பயந்து அப்படி செய்துள்ளார்கள்.

நெல்லை மாவட்டத்தில் அம்பை தாலுக்காவில் வாகைகுளம் கிராமத்தில் முடி திருத்தும் தொழிலாளர் வீட்டில் தோழர் ஆர்.என்.கே. மற்றும் பல தோழர்கள் தலைமறைவாக தங்கி இருந்துள்ளார்கள். அந்த வீட்டின ருக்கு ஊர்ச்சோறு வாங்கி சாப்பிடுவது தான் வழக்கம். அவ்வாறு ஊர்ச்சோறு வாங்கும்போது, தோழர்களுக்கும் சேர்த்து கூடுதலாக வாங்குவதில் பல சிரமங்கள். ஆனாலும் அந்தக் குடும்பத்தின் தாய் சரஸ்வதி, கூடுதலாக ஊர்ச்சோறு வாங்கிவந்து தோழர்கள் அனைவரையும் உட்கார வைத்து பறிமாருவாராம். இந்த நிகழ்வை தோழர் ஆர்.என்.கே. அவர்கள் கண்ணீர் மல்கச் சொல்வார். சிறைச்சாலைக்கு அடித்து இழுத்துச் சென்றபோது, 'ஏண்டா அந்த வீட்டுப்பொண்ணை நீ வச்சிருக்கியாடா? நீ கல்யாணம் பண்ணிக்க போறியாடா? ஏறுடா!' என்று சாதியைச் சொல்லிக் கேவலமாகப் பேசிய காவல் துறையினரின் செயலை தோழர் ஆர்.என்.கே. குறிப்பிட்டபோது நான் மிகவும் வேதனையடைந்தேன்.

சிறைச்சாலையில் தண்டனை அனுபவித்து வந்த நமது தியாக தோழர்கள், சிவப்பு பசுவிற்கு நன்கு தீனிபோடு, செவ்விழனி மரத்திற்கு தண்ணீர் ஊற்று என்ற வாசகங்களை மறைமுகமாக எழுதி வீட்டில் இருக்கும் தாய்மார்களுக்கு அனுப்பு வார்களாம். காரணம் கடிதத்தையும் அடக்குமுறை விட்டுவைக்க வில்லை. இப்படியெல்லாம் அடக்கு முறைகளை மீறி கட்சியையும், தோழர்களையும் காப்பாற்றிய பெருமை பெண்களுக்கு உண்டு. 'தலைவர்களின் தியாகங்களுக்கெல்லாம் உற்ற துணையாக இருந்தவர்கள் இருப்பவர்கள் பெண்கள் தான்' என்று கட்சியின் மீதான பெண்களின் பற்றைப்பற்றி தோழர் ஆர்.என்.கே. அவர்கள் அடிக்கடி கூறுவார்கள்.

'பெண்ணிற்கு விடுதலை நீர் இல்லையெனில்
பின் இந்த உலகில் வாழ்வெதற்கு!'

என்ற பாரதியாரின் பெண்ணிய கருத்துக்களுக்கு தோழர் ஆர்.என்.கே. வலுவாகக் குரல் கொடுப்பார்கள்.

பெண்கள் பொருளாதாரத்தில் முன்னேறவும், அரசியல் விழிப்புணர்வு பெறவும், சமூக சுரண்டலி லிருந்து விடுபடவும் அவர்களை ஒன்று சேர்த்து வலுவான பெண்கள் அமைப்பை உருவாக்க கடுமையான முயற்சிகளை மேற்கொண்டார்கள். தோழர் ஆர்.என்.கே. அவர்களின் வீரஞ்செறிந்த அரசியல் போராட்டங்களும், சிறை வாழ்க்கை அனுபவங்களும், படித்தவர்கள் முதல் பாமரர்கள் வரை அனைவரிடமும் எளிமையாக பழகும் விதமும், அரசியல் நேர்மையும் தமிழகத்தில் சாதி, மத அரசியல் உணர்வுகளுக்கு அப்பாற்பட்டு அனைத்துப் பகுதி மக்களின் உள்ளங்களிலும் நீங்கா இடத்தைப் பெற்று அனைவரும் போற்றுகின்ற, வாழ்த்துகின்ற இந்த வேளையில் கம்யூனிஸ்ட் கட்சியின் மிக உயர்ந்த ஒப்பற்ற எங்கள் தலைவர் தோழர் ஆர்.என்.கே. அவர்களின் மனம் நிரம்பிய வாழ்த்துக்களை நாம் பெற்று அவர்களது வரலாற்றுப்பாதையில் வீறுநடைபோடுவோம்.

வழிகாட்டும் ஒளிவிளக்கு

த.லெனின்

விடுதலைப் போராட்ட வீரர், அடக்குமுறைக் காலத்தில் ஒடுக்குமுறைக்கு எதிராக வீறுகொண்டு செயலாற்றிய தீரர். சதி வழக்கில் சிறை கண்ட சீலர். பாரதிப் பித்தர். இலக்கியத்தில் மனித நேயத்தையும் மனித நேயத்தில் இலக்கியத்தையும் தேடிய தலைவர். சகத் தோழர்களுக்கு கற்றதையும் பெற்றதையும் ஒரு தந்தைப் போல பரிமாறிக் கொள்ளும் பாங்கு. சந்தேகம் ஒன்றைக் கேட்டால் போதும் சடுதியில், சலசலக்கும் ஒரு தொடர் நீரோடை பலப் பிரதேசங்களுக்கு பயணித்து முழுமையாய் கடலில் சங்கமிப்பது போல சந்தேகம் நீக்கி வழி காட்டி சகலமும் அறிய வைக்கும் அறிவார்ந்த ஆசிரியத் தனம்.

துன்பப்படுவோர் துயருருவோர் அண்மை சென்று அக்கறையோடு விசாரிப்பதில் முடிந்த வரை உதவுவதில் காந்திய சாயல். எந்த இருக்கமான சூழலாக இருந்தாலும் குழந்தையைக் கண்டால் குழந்தையாக, மாணவர்களைக் கண்டால் மாணவராக, இளைஞரைக் கண்டால் இளைஞராக மாறி அதில் தன்னையும் இணைத்துக் கொண்டு இயல்பாய் உரையாடுவது இவருக்கு நிகர் இவரே.

அவர் மாணவராகப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த நேரம், சித்திரமும் கைப் பழக்கம் செந்தமிழும் நாப் பழக்கம் என்பதற்கிணங்க ஆசிரியர் கையெழுத்துப் பயிற்சிக்காக கையெழுத்து நோட்டில் ஏதாவது ஒரு புத்தகத்திலிருந்து உள்ளதைப் பார்த்து எழுதி வரச் சொன்னாராம். இவரது வகுப்பு மாணவர்களில் ஒருவர் அன்றைய நாளில் ரம்பையின் காதல் என்ற திரைப்படத்தின் வசனங்கள் எழுதினாராம். இன்னொருவர் அன்றைய ஆங்கில அரசால் தடை செய்யப்பட்ட எம்.எஸ்.சுப்பிரமணிய ஐயர் எழுதிய பஞ்சாப் சிங்கம் மாவீரன் பகத்சிங்கின் வாழ்க்கை வரலாற்றை எழுதியிருந்தாராம். வகுப்பு ஆசிரியர் மாணவர்களிடம் இரண்டையும் எடுத்துக் காட்டி இதுபோல் எழுதக் கூடாது என்றாராம். அதுவும் பிரிட்டிஷ் அரசின் கல்வி அதிகாரிகள் வரும் நேரத்தில் இதுபோல் எழுதக் கூடாது என்று கண்டித்தாராம்.

இப்படி அத்தனைப் பக்கங்களிலும் அலங்கரிக்கும் ஆளுமை அமையப் பெற்றவர். என்றாலும் என்னைப் பாதித்த ஒரு நிகழ்ச்சியை மட்டும் இங்கு நான் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

சாதித்த தலைவர்கள் மாறி 'சாதித் தலைவர்கள்' ஆன போது தமிழகத்தின் தென்பகுதி சாதிவெறிப் பேச்சாலும் வீச்சரிவாள் வெட்டாலும் ரத்தம் பாய்ந்த நேரம், செய்தித் தாள்கள் அனைத்தும் கொலைப் பட்டியலோடு பிணவாடை சுமந்து வந்த காலம்.

நான் அப்போது திருச்சி மாவட்ட கட்சி அலுவலகத்தில் தங்கி சட்டக் கல்லூரியில் பயின்று வந்தேன். திடீரென அன்று ஒரு நாள் மாலை தோழர் ஆர்.என்.கே. எங்கோ சுற்றுப்பயணம் முடித்து திருச்சி வந்து சேர்ந்தார். திருச்சி மாவட்டச் செயலாளர் தோழர் செல்வராஜ் அவர்களோடு அன்றைய நிகழ்ச்சிகள் குறித்து பேசியதுடன் பத்திரிக்கையில் வந்த கலவரச் செய்திகள் குறித்து தனது வேதனையை 'ச்சே என்ன இப்படி ஆகிப் போச்சே' என்று தெரிவித்தார். எனக்கு அடுத்த நாள் காலை தேர்வு இருந்தபோதும் படிப்பதில் கவனம் செலுத்தாது இவர்களையே கவனித்துக் கொண்டிருந்தேன். அப்போது ஒரு தொலைபேசி அழைப்பு மார்க்சிஸ்ட் தலைவர் தோழர் சங்கரய்யா அவர்களிடமிருந்து ஆர்.என்.கே. அவர்களுக்கு வந்தது. அது தோழர் ஆர்.என்.கே. அவர்களின் 80 வயது மாமனார் தோழர் அன்னசாமி கலவரக்காரர்களால் வெட்டப்பட்டு கொலையானச் செய்தியாகும்.

தோழர் அன்னசாமி அப்பகுதிகளில் 'இரட்டைக் குவளை' முறைக்கு எதிராக முதன்முதலில் தலித்துகளுக்காக தேநீர் கடை வைத்த கம்யூனிஸ்ட் ஆவார். அப்பகுதி தலித் மக்களோடு தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டு பாடுபட்ட தோழர். பல ஆண்டுகளுக்கு முன்பு அவரது உறவினர்கள் அந்த ஊரைவிட்டு வந்துவிடச் சொல்லியும், பிடிவாதமாக மறுத்து தான் பணியாற்றிய ஊரிலேயே இருக்க விரும்புவதாக சொல்லிவிட்டார்.

தோழர் ஆர்.என்.கே.யிடம் சொந்த மாமனார் வெட்டப்பட்ட செய்தி தெரிவிக்கப்பட்டவுடன் நான் அவரை கூர்மையாக கவனித்துக் கொண்டிருந்தேன். தோழர் செல்வராஜ் அவர்களிடம் அவர் திரும்பி ''மாமா அப்பகுதிகளில் தொடர்ந்து வசித்து வருகிறார் .அப்பகுதியைச் சார்ந்த தலித்துக்கள் நிச்சயம் இதை செய்திருக்கமாட்டார்கள். ஒரு வேளை மோதலை வளர்க்க வேண்டுமென விரும்பி ஆதிக்கம் செலுத்த விரும்புவோரே இதனை செய்து 'தலித்துக்கள்' வெட்டிவிட்டதாக வதந்தியை கிளப்பி விட்டிருப்பார்கள். நாம் மிகக் கவனமாக இருக்க வேண்டும்'' என்று அந்த கணத்திலும் நிதானமாக சொன்னபோது நான் அதிர்ந்து போனேன்.



அதுவரை சாதி உணர்வு ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு ஓரத்திலாவது கொஞ்சம் இருக்கும் என நான் கேள்விப்பட்டது, நினைத்தது எல்லாம் ஒரு

சேர வந்து என்னை கேவலப்படுத்திய தாக உணர்ந்தேன். இப்படியும் ஒருவர் உச்சகட்ட இழப்பில் இருக்கும்போது உணர்ச்சிக்கு இடம் கொடுக்காது சம்பவ வாய்ப்புகள் குறித்து உரையாட முடியுமா? என்ற கேள்வி என்னுள் எழுந் தது என்னை சிலிர்ப்பிற்குள்ளாக்கியது. அது எனக்குள் இருந்த சாதி உணர்வை தோட்டாக்களால் சல்லடையாக துளைப் பது போல துளைத்தெடுத்தது.அன்றோடு அவ்வுணர்வை தூக்கியெறிய வைத்தது.

நான் சென்னை வந்த பின்புதான் அறிந்து கொண் டேன் தோழர் ஆர்.என்.கே. அவர்களது மாமனார் மீது மிகுந்த மரியாதை உடையவர் என்பதும் அவரது பிரிவு குறித்து அவர் கவிதை எழுதியிருந்ததையும் கண்டேன்.

சாதி உணர்வறுத்த அந்தக் கொள்கை குன்றம் என்னுள் என்றும் சமத்துவப் போராளியாகவே சகவாசம் செய்கிறார். இதுவே முழுநேர அரசியலுக்கு என்னை உட்படுத்திக் கொள்ள முக்கிய உந்துச் சக்தியாக அமைந்து விட்டது!

ஒளி வீசும் சூரியன்

இரா. திருமலை

1995இல் நான் திருவண்ணா மலையில் பி.எஸ்.சி. படித்துக் கொண்டிருந்தபோதுதான் முதன் முதலில் நான் ஆர்.என்.கே.வை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. திருவண்ணாமலை தோழர்கள் அவரைப் பற்றி நிறைய சொல்லக் கேட்டிருக்கின்றேன். அதன்பிறகு ஓவியர் அன்பு அண்ணன் திருமணத் தின் போது பார்த்தேன். அப்போது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பத்திரிகையாளர் சந்திப்புக் கூட்டத்தில் ''நீங்கள் ஜெயிலுக்கு போயிருக் கிறீர்களா?''என்று கேட்ட நிருபர் களிடம் ''ஒரு வெடிகுண்டு வழக்கில் ஆயுள் கைதியாக வைத்திருந்தார்கள்'' என்று மிகவும் சாதாரணமாகக் கூறிய போது நிருபர்கள் வாயடைத்துப் போனதை நான் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தேன். அவர் மீதான பிரமிப்புகள் பிரமாண்டமான உருக்கொண்டு மனதில் குடியிருந்தது.

1997லிருந்து அவருடனேயே தங்கி நான் வேலை செய்யப் போகிறேன் என்று அப்போது நினைத்துகூடப் பார்த்ததில்லை. ''என்னசார்?'' என்று புன்னகையோடு ''வாங்க சார்'', ''உக்காருங்க சார்'' என்பார். என் வயது பையன்களை நண்பர்களை அல்லது தோழர்களை அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தி னால் எழுந்து நின்று வரவேற்பார். அவருடைய பேச்சு சுனைநீர் நிரம்பி வழிவது போலிருக்கும். அதில் உண்மையைத் தவிர வேறு எந்த ஆடம்பரமும் இருக்காது.



எல்லோரிடமும் அன்புடன் பழகுவார். யாரை யும் எந்தச் சூழ்நிலையிலும் கடிந்து பேசி நான் பார்த்தது கிடையாது. எவ்வளவு வயதில் குறைந்த வராக இருந்தாலும் அவரை ஒருமையில் பேச மாட்டார். மற்றவர்கள் நல்ல கருத்துக்களைச் சொன் னால் அதை ஏற்றுக் கொள்ள தயங்கவேமாட்டார். தவறான கருத்துக்களை நாசுக்காக எடுத்துச் சொல்லி திருத்துவார்.

நிறையப் படிப்பார். படித்தவற்றை மற்றவர் களிடம் சொல்லிக் கொண்டே இருப்பார். அவரது அறையில் எப்பொழுதும் புத்தகங்கள் சிதறிக் கிடக்கும். இலக்கியத்தில் தேர்ந்த ஞானி. திருக்குறள், பாரதியார் கவிதைகள், பாரதிதாசன் கவிதைகள் எப்பொழுதும் அவர் பையில் வைத்துக் கொண்டி ருப்பார். தமிழ்ஒளியை இன்னும் நாம் உயர்த்திப் பிடிக்க வேண்டும் என்பார். ''அம்பேத்கர் எவ்ளோ பெரிய ஆளு'' என்று வியந்து சொல்லுவார். ''சி.பி.ஐ. - சி.பி.எம். ஒண்ணாயிருந்திருந்தா எவ்வளவு நல்லாயிருந்திருக்கும்'' என்பார்.

புதுமைப்பித்தனிலிருந்து கார்க்கி, ரசூல், கம்ஸத்தோவ், பிரேம்சந்த் என அனைத்துப் படைப்பாளிகளைப் பற்றியும் எந்த நேரத்திலும் சாதாரணமாகப் பேசுவார்.

'குடியரசுத் தலைவராக அப்துல்கலாமை ஆதரிப்பதா வேண்டாமா' என்ற பிரச்சினை எழுந்த போது அப்துல்கலாம் எழுதிய அனைத்துப் புத்தகங் களையும் மூன்றே நாட்களில் படித்து முடித்து விட்டார். அவருடைய புத்தகங்களைப் படிப்பதில் ஒரு வெறி வந்துவிட்டதாக சொல்லிக் கொண்டி ருந்தார்.

எப்போதுமே எளிமையாக வாழ்வார். சிக்கனமாக இருப்பார். தினமும் என்னென்ன செலவு செய்தோம் என்று கணக்குப் போட்டுப் பார்ப்பார். தனது குடும்பத்தினரை பட்டினப்பாக்கம் ஹவுசிங்

போர்டில் சில வருடம் குடியமர்த்தினார். அதற்கான மாத வாடகை ரூ.394 . போன் செலவை கட்சியே கட்டினாலும், தனது குடும்பத்தினரும் அதை பயன்படுத்துவதற்காக தன்னுடைய மாதச் சம்பளம் ரூ.2000லிருந்து ரூ.500ஐ கழித்துக் கொள்வார். பட்டினப்பாக்கத்திலிருந்து அம்பத்தூர் திருமுல்லை வாயிலுக்கு வீட்டை மாற்றிய பிறகு ரயிலிலேயே சென்று வந்தார். எல்லா தோழர்களும் எவ்வளவு சொல்லியும் ''என் ஒருவனுக்காக மட்டும் கார் இவ்வளவு தூரம் சென்று வந்தால் எவ்வளவு செலவாகிறது. பணம் என்ன கொட்டியா கிடக்கிறது. நமது ஏழைத் தோழர்கள் ஒவ்வொரு ரூபாயாக சேர்த்து கொடுக்கிற நிதியை இப்படி விரயம் செய்யக்கூடாது'' என்று கூறி மறுத்துவிட்டார். சிறிது காலத்திற்குப் பிறகு மீண்டும் காரிலேயே சென்றார். ஏன் என்று நான் தனியாக கேட்டபோது, ரயிலில் செல்லும்போது நிறைய பேர் காலில் விழுந்து வணங்குகிறார்கள் என்று வருத்தப்பட்டார்.

''ரஞ்சிதம் அம்மா மட்டும் இல்லையென்றால் நீங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பீர்கள்?'' என்று நான், லெனின் போன்றவர்கள் கேட்டால் ''அதிலென்ன சந்தேகம்?'' என்று அழுத்தமாக பதில் சொல்வார்.

''தாத்தாவும் ஆச்சியும் ஒரு நாளாவது சண்டை போட்டுக்குவாங்கன்னு பார்த்தா நடக்கவே மாட்டேங்குது'' என்று அடிக்கடி பேரன் சதீஷ் வருத்தப்படுவான்.

''இவ்வளவு அன்பா, ஒற்றுமையா இருக்கீங் களே, நீங்க காதலித்து கல்யாணம் பண்ணிக்கிட்டீங் களா?'' என்று கேட்டால் ''இல்லை கட்சிதான் கல்யாணம் பண்ணி வச்சுச்சு'' என்று சிரிப்பார். பிறகு வேறொரு சுவாரசியமான செய்தியையும் நான் தெரிந்து கொண்டேன்.

ஆர்.என்.கே. சிறையில் இருந்த போது பல கவிதைகள், கட்டுரைகள் எழுதி அது ஜனசக்தியில் பிரசுரமாகி யிருக்கிறது. அதையெல்லாம் ரஞ்சிதம் அம்மா படித்திருக்கிறார்கள். அப்போதெல்லாம் அவர்களுக்கு ஒருவரை ஒருவர் தெரியாது. ஆர்.என்.கே. அப்படி எழுதிய ஒரு காதல் கவிதை

''ஓ அன்னமே ரஞ்சிதமே...

.....

.....''

என்பதாகும். இதை ரஞ்சிதம் அம்மாவும் படித்திருக்கிறார். இதில் ஒரு விசேஷம் என்னவெனில் ரஞ்சிதம் அம்மாவின் குடும்பத்தில் அவரை செல்லமாக அழைக்கும் பெயர் ''அன்னம்'' என்பதுதான். இது எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

ஒருநாள் ஆர்.என்.கே.யிடம் ''நீங்கள் காசிபாரதி அக்கா (மூத்த மகள்) கல்யாணத்திற்கு முந்தின நாள்தான் ஐநூறு ரூபாய் எடுத்துக் கொண்டு போனீங்களாமே'' என்று கேட்டபோது, ''உங்களுக்கு எப்படிசார் இது தெரியும்?'' என்று சிரித்தார்.

அந்த சிரிப்பில் ஆயிரமாயிரம் சூரியன்கள் ஒளிவீசிக் கொண்டி ருக்கின்றன.

ஆர்.என்.கே. கற்றுத் தந்த பாடம்

இரா. விஸ்வநாதன்

தோழர் ஆர்.என்.கே. அவர்களை நான் முதன் முதலில் 1973ம் ஆண்டு சந்தித்தேன். 1974-ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற, சட்டமன்ற தேர்தலுக்கு கட்சியின் தமிழ்மாநில பொறுப்பாளராக தோழர் ஆர்.என்.கே.வும், வழக்கறிஞர் கணேசன் அவர்களும் புதுவையில் தங்கி இருந்து தேர்தல் பணிகளை கவனித்தனர். நாடாளுமன்ற வேட்பாளராக தோழர் மோகன் குமாரமங்கலம் அவர்கள் புதுவையில் போட்டியிட்டார்.

* மறைந்த மக்கள் தலைவர் தோழர் வ.சுப்பையா அவர்கள் உடல்நிலை பாதிக்கப்பட்டு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டி ருந்தார். அப்பொழுது ரெட்டியார் பாளையம் தொகுதி வேட்பாளராக போட்டியிட அவரிடம் கையெழுத்து வாங்க நானும், தோழர் ஆர்.என்.கே. வும் மருத்துவ மனைக்குச் சென்று கையெழுத்து பெற்றுவந்தோம். முன் மொழிபவர்களின் கையெழுத் தைப் போடும்பொழுது நான் ஆங்கிலத்தில் கையெழுத்திட்டதை கண்டு தோழர் ஆர்.என்.கே. நீங்கள் இனி உங்கள் கையெழுத்தை தாய்

மொழியான தமிழில் இட வேண்டும் என்று கூறினார். அன்று முதல் நான் எனது கையெழுத்தினை தமிழில் தான் போடுகின்றேன்.

* தேர்தல் காலங்களில் சூடான விவாதங்களும் பரபரப்பான சூழ்நிலை களும் மிகுந்து காணப்படும். கட்சித் தோழர்கள் சொல்லக் கூடியக் கருத்துக் களை, மிகச் சாதாரணமாக இருப்பினும் கூட அதை செவிமடுத்து கேட்டார். தோழர்களிடம் பதட்டங்களை தணித்து தேர்தல் வேலைகளில் கவனம் செலுத் தச் செய்வார். இந்த அனுபவம் பிற் காலங்களில் எனது தேர்தல் பணிகளுக்கு மிகவும் வழிகாட்டியது.

* அவர் பொதுக்கூட்டங்களிலும் கட்சியின் பேரவைக் கூட்டங்களிலும் பேசி முடித்ததும் அருகில் இருப்பவர் களிடம் நான் பேசியது சரிதானா? ஏதாவது தவறாக பேசினேனா? என கேட்டு சுயமதிப்பீடு செய்து கொள் வதை பல சந்தர்ப்பங்களிலும் கண்டு இருக்கிறேன். மற்றவர்களின் கருத்துக் களை கேட்க வேண்டும் என்ற பாடத்தை இதன் மூலம் கற்றுக் கொண்டேன்.

* புதுச்சேரி வேளாண் அறிவியல் மையத்தில் விவசாயத் தொழிலாளர் சங்கம் அமைத்திட தோழர் ஆர்.என்.கே. அவர்களை ஒருமுறை அழைத்துச் சென்றோம். அவர் புதுவைக்கு அருகிலுள்ள வில்லியனூர் என்ற ஊருக்கு வந்துவிட்டார். அங்கி ருந்து சென்றோம். அப்பொழுது வாகன வசதி இல்லை. அவர் எடுத்துவந்த பையைக்கூட மற்றவர்களிடம் கொடுக்கவில்லை. அவரே தூக்கி வந்தார். இதன் மூலம் எளிமையாக வாழ வேண்டுமென்று பாடம் கற்றுக்கொண்டேன்.



* புதுச்சேரி கட்சி அமைப்பில் ஸ்தாபன பிரச்சினைகள் ஏற்பட்ட பொழுது, அவர் கட்சியின் அமைப்பு விதிகளுக்கு உட்பட்டு, யாருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படக் கூடாது என்ற உணர்வுடன், கட்சிக்கு எந்தவித சேதாரமும் இல்லாமல், நீண்ட கால பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வந்தார். இதில் அவரது ஸ்தாபன அனுபவத்தையும் , அணுகுமுறையை யும் காணமுடிந்தது. இதன் மூலம் ஸ்தாபன பிரச்சினைகள் எழும் பொழுது நிதானத்தை கடைபிடிக்க வேண்டுமென்ற பாடத்தினை கற்றுக்கொண்டேன்.

* புதுச்சேரியின் விடுதலை இயக்கத் தளபதி மறைந்த மக்கள் தலைவர் வ.சுப்பையா அவர்கள் மீது அளவற்ற மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தார். எப்பொழுது புதுவைக்கு வந்தாலும் தோழர் வி.எஸ். அவர்களுடன் பல மணி நேரம் பேசிக்கொண்டு இருப்பார்.

* நான் புதுச்சேரியில் சட்டமன்றத் தேர்தலில் முதன் முதலாக போட்டியிட வற்புறுத்தியவர். நான் அமைச்சர் பதவி ஏற்றபொழுதும் அவர் வந்திருந்தார். அகம் மகிழ்ந்தார். அவ்வப்பொழுது பல ஆலோசனைகளையும் வழங்கினார். அதே போல தி.மு.க., பா.ஜ.க.வுக்கு ஆதரவு அளித்ததைத் தொடர்ந்து அமைச்சரவையில் இருந்து விலகிவிடுவது என்று கல்கத்தாவில் நடைபெற்ற தேசியக் கவுன்சில் கூட்டத்தில் முடிவு செய்ததைத் தொடர்ந்து நான் அமைச்சர் பொறுப்பினை இராஜினாமா செய்த அன்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர் ஆர்.என்.கே. பேசியது இன்றைக்கும் நினைவில் நிற்கின்றது.

தன்னைவிட சிறுவர்களாக இருந்தாலும், அவர்களின் செயல்களை பாராட்டுகின்ற பெருந் தன்மையை இதன் மூலம் உணர்ந்து கொண்டேன்.

இதுபோல் பல்வேறு அனுபவங்களையும் பாடங்களையும் அவரிடமிருந்து கற்றுக்கெள்ள முடிந்தது.

தோழர் ஆர்.என்.கே. அவர்கள் கிராமப்புற சாதாரண ஏழை - எளிய மக்கள் வறுமையிலும், சாதிக் கொடுமையிலும் சுரண்டலிலும் சிக்கித் திணறுவதைக் கண்டு அவர்களின் விடுதலைக்குக் குரல் கொடுத்து போராட தன் வாழ்நாளை அர்ப்பணித்துக் கொண்ட தலைவர்.

பொது வாழ்வில் நேர்மை, எளிமை, நாணயம் போன்ற குணங்களுடன் வாழ்ந்து வரும் அற்புதத் தலைவர். அவர் வாழ்வும், செயலும் ஒவ்வொரு வருக்கும் பாடம் கற்பிப்பவை. அவருடைய செயலும் வாழ்வும் ஆதர்சமாக இருக்கக் கூடியவை.

80வது பிறந்த நாள் விழா காணும் தோழர் ஆர்.என்.கே. அவர்களின் வழியில் உறுதியுடன் செயல்பட்டு பொதுவுடமை இயக்கத்தினை வலுப்படுத்திட செயல்படுவோம்.

என் மனம் கவர்ந்த ஆர்.என்.கே.

நாரா. கலைநாதன், எம்.எல்.ஏ.,

என் குடும்பம் கம்யூனிச பாரம்பரியத்தில் வந்தது. என் தந்தையார் தோழர் கவி.வெ.நாரா, விடுதலைப் போராளி மட்டுமல்ல, உழவர்கரை கொம்யூன் மேயராக பணியாற்றிக் கொண்டிருந்தார். புதுச்சேரி தேர்தல் பணிப் பொறுப்பாளராக வந்திருந்த தோழர் ஆர்.என்.கே. அவர்களை எனது 14 வயதில் முதன் முதலாக பார்த்தேன். அவர் என்னைப் பார்த்து அன்போடு பெயர் என்ன? என்ன படிக்கிறாய்? என்று கேட்டது இன்னும் நினைவில் நிழலாடுகிறது.

புதுச்சேரி கட்சி மாவட்டக் குழுக் கூட்டம் முடிந்த பின்னால், இரவு 9 மணி அளவில், தோழர் ஆர்.என்.கே., தோழர் கே.டி.ராஜு, என் தந்தை கவி.வெ.நாரா ஆகியோருடன் நானும் ரிக்ஷாவில் கந்தன் தியேட்டருக்குத் திரைப்படம் பார்க்கச் சென்றோம். தேர்தல் வெற்றி வாய்ப்பு குறித்தும் தேர்தல் பணியாற்றுவது குறித்தும் திரைப்படம் துவங்குவதற்கு முன் விவாதித்துக் கொண்டிருந்தனர். நான் இவர்கள் பேச்சைக் கேட்பதும் ஓடி விளையாடுவதுமாக இருந்தேன். அதுதான் என் முதல் அனுபவம். அதற்குப் பின் தோழர் ஆர்.என்.கே. அவர்களை நீண்ட நாட்கள் பார்க்கவில்லை.

1980க்குப் பின் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் புதுச்சேரி மாவட்டச் செயலாளர் ஆனேன். தமிழ்நாடு மாநில துணைத் தலைவராகவும் பொறுப்பளிக்கப்பட்டேன். தமிழகத் தலைவர்களைச் சந்திக்கின்ற வாய்ப்பையும் பெற்றேன். அந்த வகையில், தோழர் ஆர்.என்.கே. இயக்கப் பணி நிமித்தம் புதுச்சேரி வரும்போதும் தமிழகத்திற்கு இளைஞர் பெருன்ற கூட்டங்களில் நான் கலந்து கொள்ள செல்கின்றபோதும் அவரைச் சந்திப்பது உண்டு. அப்பொழுதெல்லாம் 'நாரா பையனா?' ''அப்பா, தாத்தா (தோழர் சாம்பசிவம் சுதந்திரப் போராட்ட வீரர் மத்திய அரசின் தாமிரப்பட்டயம் பெற்றவர்) எல்லாம் நலமா?'' என்று கனிவோடு மறக்காமல் விசாரிப்பார்.

1985ல் புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலுக்குப் பொறுப்பேற்று தோழர் ஆர்.என்.கே. ஒரு மாத காலம் புதுச்சேரி கட்சி அலுவலகத்தில் (மக்கள் தலைவர் தோழர் வி.எஸ்.இல்லம்) தங்கியிருந்தார். அத்தேர்தலில் அவருடன் பணியாற்றிட எம்.ஆதிமூலம், மீனாட்சி சுந்தரத் தம்மாள், எம்.அப்பாதுரை (தற்போதைய நாடாளு மன்ற உறுப்பினர்) ஆகியோரும் வந்திருந்தனர்.

ஒவ்வொரு நாளும், தொகுதிப் பொறுப்பாளர்கள் பின்னிரவில் தேர்தல் பணி குறித்து தோழர் ஆர்.என்.கே.யுடன் விவாதிக்க வேண்டும். அந்தத் தேர்தலின் போது நானும் தோழர் எம்.கே.இராமனும் தோழியர் சரசுவதி சுப்பையா போட்டியிட்ட காசுக்கடை தொகுதிப் பொறுப்பு அளிக்கப்பட்டிருந்தோம். அங்கு கட்சிக் கிளைகள் அறவே கிடையாது. இரு இளைஞர் பெரு மன்ற கிளைகள்தான். பகல் முழுக்க மக்களைச் சந்திக்கவும் இரவு நேரங் களில் மின் கம்பங்களில் ஏறி தோர ணம் - தட்டி கட்டுவது உட்பட என் பணியாக இருந்தது. ஒவ்வொரு இரவிலும் ஆர்.என்.கே.யிடம் தொகுதி நிலவரம் பற்றி பேசிட வந்தால், தோழியர் சரஸ்வதி சுப்பையா அவர்கள் எங்கள் இருவரைப் பற்றியும் புகார் கூறிச் சென்றிருப்பார்கள். அப்பொழுது எனக்கு கடும் கோபமும் ஆத்திரம் பீறிட்டு வரும். சத்தம் போடுவேன். மீனாட்சி சுந்தரத்தம்மாள் உண்மை யைக் கூறி யார் மீது தப்பு என்பதைத் தோழர் ஆர்.என்.கே.யிடம் கூறு வார். அதற்குப் பின்னர், நிதானமாக ஆர்.என்.கே. என்னைப் பார்த்து ''யார் எப்படி பேசினாலும் கோபப் படக்கூடாது - ஆத்திரப்பட்டால் அது உன் வளர்ச்சியைப் பாதிக்கும். சிறு வயது கோபத்தைக் கட்டுப்படுத்த முயற்சி செய். திருமணம் ஆகாதவர் களுக்கு கோபம் பொத்துக் கொண்டு வரும். படிப்படியாக குறைத்திட முயற்சி செய் என்று திரும்பத் திரும்ப எனக்கு ஆலோசனைகளையும் அறி வுரைகளையும் கூறியது என் நெஞ்சில் ஆழமாக பதிந்தது. எனது வளர்ச்சிக்கு அவைகள் அடித்தளமாக அமைந்தது.

அவரின் தோற்றம், அவரின் பழக்க வழக்கம், தோழரிடம் அன்பொழுக பழகும் பாங்கு -

எடுத்து எறிந்து பேசாத போக்கு, எதையும் நிதானத்துடனும் பொறுமை யாகவும் கையாளும் திறன் இன்னும் என் நெஞ்சில் பசுமையாக நிற்கிறது.

தோழர் ஆர்.என்.கே. பழைய கட்சி அலுவலகத்தில் தான் (தோழர் வி.எஸ். இல்லம்) ஒவ்வொரு முறையும் புதுச்சேரி வரும்போதும் தேர்தல் பணியாற்றும் போதும் தங்குவார். தோழர் வி.எஸ். அறைக் குப் பக்கத்திலிருந்த சிறு அறையில் அவர் தங்கி இருந்தார். அவருடன் கட்சி அலுவலகத்தில் பணியாற்றிய சிறுவன் பூத்துறை சேகர் தங்குவது வழக்கம். ஒருநாள் அவருடன் பக்கத்தில் படுத்து தூங்கியவன், தோழர் ஆர்.என்.கே.யின் வயிற்றின் மேல் தன்னுடைய இரு கால்களையும் போட்டு தூங்கிக் கொண்டிருந்தான். அவனுக்கு தூக்கம் கெட்டுவிடக் கூடாது என்பதற்காக, விழித்தெழுந்த தோழர் ஆர்.என்.கே. படுக்கையை விட்டு எழாமலும், தன் வயிற்றின் மீது போடப்பட்டிருந்த கால்களை விலக்கா மலும் படுத்துக் கொண்டிருந்த காட்சி யைக் கண்ட நான் மிரட்சி அடைந் தேன். இப்படியொரு தலைவரா? சொல் ஒன்று செயல் வேறு என்று வாழும் தலைவர்கள் மத்தியில், தோழர் ஆர்.என்.கே. தூக்கத்திற்கு ஊறு விளைவிக்கா மனம் படைத்தவராக திகழ்ந்தார்.

தேர்தல் மைய செலவிற்காக தோழர் ஆர்.என்.கே. அவர்களிடம் பணம் இருப்பது வழக்கம். ஒரு நாள் இரவு உணவுக்குப் பணம் எடுத்துக் கொடுத்துவிட்டு மீதிப் பணத்தை ஞாபக மறதியாக எங்கேயோ வைத்து விட்டார். பணத்தைக் காணவில்லை என்றும் அது கட்சிப் பணம் என்றும் திரும்பத் திரும்ப வாய் முணுமுணுத்த வாறே தேடிக் கொண்டிருந்தார். அடுத்த நாள், அதனைத் தானே கண்டெடுத்து, கை தவறுதலாக வேறு இடத்தில் வைத்துவிட்டதை அனைவரிடமும் கூறினார்.

1990 மற்றும் 1991 ஆண்டுகளில் நடைபெற்ற இரு தேர்தல்களிலும், கட்சி அணிசேர்க்கை மற்றும் வேட்பாளர் தேர்வு குறித்து விவாதித்து முடிவு செய்ய கட்சியின் செயற்குழு, மாவட்டக்குழுக் கூட்டங்களில் பங்கு கொண்டவர் தோழர் ஆர்.என்.கே. 1990 தேர்தலில் கட்சியில் யார் வேட்பாளர் என்பதில் பிரச்சினை எழுந்தது. புதுச்சேரி கட்சி இரண்டுபட்டிருந்த நேரம். தோழர் என்.குருசாமி, ரெட்டியார்பாளையம் தொகுதியை வற்புறுத்திக் கொண்டிருக்க, மறுபுறம் தோழர் வி.எஸ். தனது துணைவியார் தோழர் சரசுவதி சுப்பையா அவர்களை முதலியார்பேட்டை தொகுதி யில் நிறுத்த வற்புறுத்திக் கொண்டிருந்தார். நானும் தோழர் அ.இராமமூர்த்தியும், தோழர் ஆர்.என்.கே. யிடம் ரெட்டியார்பாளையத்தில் தோழர் ஆர்.விஸ்வ நாதனும், முதலியார்பேட்டையில் தோழர் எம்.மஞ்சினியும் நிறுத்தப்பட வேண்டும் என்று கூறி இதுவே கட்சியில் இணக்கம் ஏற்படவும், வெற்றிக்கும் வழி வகுக்கும் என வலியுறுத்தினோம். ஆனால் தோழர் ஆர்.விஸ்வநாதனோ, தோழர் என்.குரு சாமியே போட்டியிடட்டும் போட்டியிலிருந்து நான் விலகிக் கொள்கிறேன் என்று கூறிய கருத்தை மாற்றிக் கொள்ளச் செய்ய நீண்ட நேரம் போராடினோம்.

இரவு 11.30 பேருந்தில் தோழர் ஆர்.என்.கே. அவர்களை சென்னைக்கு ஏற்றிவிட நானும் தோழர் அ.இராமமூர்த்தியும் பேருந்து நிலையம் வந்தோம். பேருந்தில் தோழர் ஆர்.என்.கே. உட்கார்ந்து கொண்டு இரண்டு மூத்த தலைவர்களை எதிர்கொண்டு எப்படி சமாளிக்கப் போகிறீர்கள் என்று வினவினார். நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் துணிச்சலாக வேட்பாளர்களை அறிவிக்க ஏற்பாடு செய்யுங்கள் என்று கேட்டுக் கொண்டோம். அத்தேர்தலில தன்னுடைய படத்தைப் போட்டு மக்களிடம் ஓட்டு சேகரிக்கக் கூடாது என்று தோழர் வி.எஸ். கூறியிருந்தார்.

மத்தியக்குழு ஒப்புதலோடு தமிழ்நாடு மாநிலக்குழு தோழர் ஆர்.விசுவநாதன், தோழர் எம்.மஞ்சனி ஆகியோரை வேட்பாளர்களாக அறிவித்தது. இருவரும் தேர்தலில் அமோக ஆதரவுடன் வெற்றி பெற்றனர்.

வேட்பாளர் தேர்வு, தேர்தல் பணி, பிரச்சார உத்தி ஆகியவைகளுடன், தோழர்கள் இணைந்து செயல்பட தோழர் ஆர்.என்.கே. எடுத்துக் கொண்ட முயற்சிகளும் அவர் பணியாற்றிய விதமும் அனைவராலும் பாராட்டப்பட்டது.

1996- தேர்தலில் வேட்பாளர் தேர்தலில் பிரச்சினை எழவில்லை. ஆனால் கூட்டணி அரசில் யார் அமைச்சர் பொறுப்பேற்பது என்ற பிரச்சினை எழுந்தது. தோழர் ஆர்.விஸ்வநாதன் ஒருசில

ஆட்சேபனையுடன் அமைச்சர் பொறுப்புக்கு முடிவு செய்யப்பட்டார். தோழர் எம்.மஞ்சனி அவர்களுக்கு வாரியத் தலைவர் பொறுப்பு அளிக்கப்பட்டது.

தி.மு.க., பா.ஜ.க.வுடன் சேர்ந்ததால், கட்சியின் மத்தியத் தலைமை எடுத்த முடிவு அடிப்படையில் தோழர் ஆர்.விஸ்வநாதன் அமைச்சர் பொறுப்பி லிருந்து விலகினார். தோழர் எம்.மஞ்சனி கால அவகாசம் கேட்டார் அளிக்கப்பட்டது. பின்னர் முடிவை அமுலாக்க மறுத்து வேறு கட்சிக்கு ஓடினார். சட்டமன்ற உறுப்பினர் பதவியையும் இழந்தார்.

புதுச்சேரியில் கட்சியில், ஸ்தாபன நெருக்கடி ஏற்பட்ட காலத்தில் எல்லாம் தோழர் ஆர்.என்.கே. அவர்கள் நிதானமாக அணுகி ஒற்றுமையை உருவாக் கிடவும், கட்சி வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்று ஆலோசனை வழங்கிடவும் செய்தார். இவருக்கு துணையாக கோவை எல்.ஜி.கீதானந்தன் இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சில சமயங்களில் தோழர் ஆர்.என்.கே. பிரச்சினை எழுகின்ற போது, தன்னுடைய கருத்தைத் தோழர்கள் மனம் புண்பட்டுவிடக் கூடாது என்பதற் காக லாவகமாக கையாளுவார். உரிய நேரத்தில் உரிய முடிவை வெளிப்படுத்தத் தயங்குவார். எனக்குகூட சில சமயங்களில் ஒருவித எண்ணம் ஏற்படும்.

ஆனால் தோழர் ஆர்.என்.கே. நிலையில், பிரச்சினைக்கு சம்மந்தப்பட்டவர்கள் கட்சி அனுபவம், கட்சியின் பொறுப்பு, எதிர்கால இளைஞர்களை வடிவமைக்கும் திறன் ஆகிய முக்கிய நிலைகளுக்குப் பொறுப்பு வகிக்க கூடியவர்களாக தாங்களாக மாறமாட்டார்களா? மாற்றிக்கொள்ள மாட்டார்களா? திருந்த மாட்டார்களா? என்று ஒரு சந்தர்ப்பம் வழங்கும் நடவடிக்கையாக இருக்குமோ என்று பின்னால் தேற்றிக்கொண்ட அனுபவம் எனக்கு உண்டு. அந்த அளவு பொறுமையின் இலக்கணமாக திகழ்வார்.

தோழர் ஆர்.என்.கே. புதுச்சேரி வந்தால், கட்சி அலுவலகத்தில் தங்குவதையே பெரிதும் விரும்பு வார். வெளியில் வாடகை அறைகளில் தங்க ஒப்புக்கொள்ள மாட்டார். தோழர்கள் நிர்ப்பந்தம் காரணமாக சமீப காலங்களில் வெளியில் தங்குவார். அன்றாடம் தான் அணிந்து வரும் அழுக்கு வேட்டி, சட்டை எத்தனை இருந்தாலும், இரவில் துவைத்துப் போட்டுவிடுவார். துணி காய்ந்ததும், தலையணைக்கு கீழ் வைத்துவிடுவார். மறுநாள் உடுத்திக்கொள்வார். எளிமையின் சின்னமாக திகழ்வார் - காலம் மாறி விட்டது என்று வற்புறுத்தி துணிகளைச் சலவைக்குக் கொடுத்துவிட்டாலும், நம்மை விமர்சித்துக்கொண்டே இருப்பார்.

தோழர் ஆர்.என்.கே., புதுச் சேரியுடன் நீண்ட நெடிய தொடர்பை ஏற்படுத்திக் கொண்டுள் ளார். அவருடைய தடம் பதிக்கப் படாத பகுதி என்று எதுவும் இல்லை. சாதி மோதலுக்கு உட் பட்ட டி.என். பாளையம் - விவ சாயப் போராட்டக் களம் கண்ட பனையடிக்குப்பம் - துப்பாக்கிச் சூட்டிற்கு பலியான வீராணம் சொரப்பூர் கிராமங்கள் - நல்லுறவு கூட்டங்களுக்கு இலக் கணமாக திகழ்ந்த பண்ட சோழநல்லூர். இப்படி ஏராளமான இயக்க நடவடிக்கைகளில் தோழர்கள் எம்.என்.கோவிந்தநாயர், எம்.காத்தமுத்து, எம்.ஆதிமூலம், எம்.இளையபெருமாள் (தமிழ்நாடு மனித உரிமைக் கழகம்) ஆகி யோருடன் புதுச்சேரி மண்ணில் காட்சி அளித்தது மறக்க முடியாத அனுபவங்கள்.

தான் வாழ்ந்து வரும் 80 ஆண்டுகளில், 60 ஆண்டுகால பொதுவாழ்வுக்கு சொந்தக்காரராக தோழர் ஆர்.என்.கே. மிளிர்கிறார். விடுதலைப் போராட்டம் - தலை மறைவு வாழ்க்கை - காவல்துறை அடக்குமுறை - 8 ஆண்டு சிறை வாசம் என வாழ்ந்து - தமிழகத்தின் கிராமப்புற பாட்டாளிகளுக்குச் சொந்தமாக திகழ்ந்து வருகிறார்.

அரசியலில் நிறைவான வாழ்க்கையை எய்தி விட்டார் என்றே கூறமுடியும். அரசியல் கட்சித் தலைவர் என்றால் மந்திரி யாக, பாராளுமன்ற உறுப்பினராக, சட்டமன்ற உறுப்பினராக, சேர்ம னாக, பஞ்சாயத்து தலைவராக, வார்டு உறுப்பினராக, ஏதாவது ஒன்றில் என்றில்லாமல், மக்கள் மன்றத்தில் செயல்பாட்டின் மூலம் உச்சநிலையை எய்த முடியும் என்பதற்கு தோழர். ஆர்.என்.கே. உதாரணமாக விளங்குகிறார். இத்தகைய லட்சிய மனிதரை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் புதுச்சேரி மாநிலக் குழுவின் சார்பில் வணங்கி மகிழ்கிறோம்.

தோழர் ஆர்.என்.கே...



ஏழைகளின் பாதுகாவலருக்கு
எண்பது வயதா?
நம்பத்தான் முடியவில்லை
அம்பது வயதின் தோற்றம்
இருபது வயதின் செயலாற்றம்
நூறு வயதின் நிதானமே புகழின் ஏற்றம்
எளிமைக்கு எளிமையாய்
எதிரியும் போற்றும் அரசியல் தூய்மையாய்
மனிதனை மதிக்கத் தெரிந்தவராய்
மனிதநேயத்தின் மணி மகுடமாய்
பண்புக்கு உறைவிடமாய்
பாசத்தின் இருப்பிடமாய்
கொள்கையில் குன்றாய்
குணத்தில் சொக்கத் தங்கமாய்
அரசியல் வித்தகராய்
ஆயகலைகள் கற்றவராய்
நட்சத்திரங்களுக்கு மத்தியில் ஒரு சந்திரனாய்
அல்லிக் குளத்திலொரு செந்தாமரையாய்

இருண்ட வானிலொரு விடிவெள்ளியாய்
கருணைக்குக் கார்மேகமாய்
கடமைக்குக் கடலலைகளாய்
பொறுமைக்குப் பூமியாய் - சினம்
பொங்கினால் புயலும் தோற்குமாம்
இயக்கத் தோழர்களின் துன்பத்தை - தன்
இதயத்தில் ஏற்றுக் காப்பவராய்
அதிகாரம் செலுத்திப் பார்த்ததில்லை - அவரிடம்

அன்புமொழி தவிர வேறு கேட்டதில்லை
கொள்கையில் முரண்பட்டவர்களும் - இவர்
பண்புக் கண்டு தோழமைக் கொள்வர்
இத்தனையும் சேர்த்து வைத்து
மொத்தமாக கூட்டிப்பார்த்தால்
அங்கே தெரிபவர்தான் ஒரு கம்யூனிஸ்ட்
அவர்தான்
ஆர்.என்.கே. என்னும் எவரெஸ்ட்

கவிஞர் செ.மாயகிருட்டிணன்

நான் பேச நினைத்ததெல்லாம்...

திருமதி ரஞ்சிதம் நல்லகண்ணு - நேர் காணல்

நான் பேச நினைத்ததெல்லாம்...

"நீண்ட சிறை வாழ்க்கை, அப்பழுக்கற்ற தியாகம், அதிராத பேச்சு, இன்றைய ஆடம்பர அரசியல் உலகில் எளிமையின் எடுத்துக்காட்டு... இன்னும் எவ்வளவோ அவரைப் பற்றி சொல்ல லாம். ஆனால், இப்படி எழுதுவதைக் கூட அவர் விரும்பமாட்டார். 'தோழர் ஆர்.என்.கே.' என்று இயக்கத் தோழர்கள் அழைப்பதில்தான் அவருக்குப் பேரானந்தம். அவர்தான் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தோழர் ஆர்.நல்லகண்ணு.

எண்பது வயதைத் தொட்டபோதும் இளைஞருக்குரிய எழுச்சியோடு இன்றும் செயல்படுபவர். இவருடைய பிறப்பும், இவர் சார்ந்திருக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தோற்றமும் ஒரே ஆண்டில் நிகழ்ந்திருப்பது தனிச் சிறப்பு. நான்குமுறை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளராக தோழர் ஆர்.என்.கே. இருந்திருக் கிறார்.

அப்போது பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு பத்திரிகைகளில் அவர் பேட்டி அளித் திருக்கிறார். மீண்டும் அவரிடமே பேட்டி காண்பது புதுமையாக இருக்காது. அத்துடன் அவரைப் பற்றி பாதிப் பகுதிதான் கிடைக்கும். அதனால் தோழர் ஆர்.என்.கே.யின் மீதிப் பகுதியையும் அறிந்து எழுதுவதே சிறப்பாக இருக்கும் என்று எண்ணினேன். தோழர் ஆர்.என்.கே.யின் மீதிப் பகுதியை அவருடைய பாதிப்பகுதியாக இணைந்து வாழ்ந்து கொண்டிருக்கும் தோழர் ஆர்.என்.கே. அவர்களின் துணைவியார் ரஞ்சிதம் அவர்களை சந்திக்க விரும்பினேன்.

இதோ! நான் தொடுத்த வினாக்களும், அதற்கு அன்னை ரஞ்சிதம் கொடுத்த விடைகளும் அணிவகுக்கின்றன...)

***உங்கள் பிறந்த வீடு குடும்பச் சூழல் பற்றி...**

கோவில்பட்டி வட்டாரத்தில் ஓம்சரவணபுரம் என்ற கிராமத்தில் வாழ்ந்த அண்ணாமலைத் தேவர் செங்கம்மாள் தம்பதிக்கு பிறந்த ஐந்து குழந்தை களில் ஒருவர் தான் என் தந்தை. அவருக்கு பெற்றோர் இட்ட பெயர் கந்தசாமி. தன்னுடைய அண்ணன் தங்கையா மூலம்தான் காந்தியையும், கைராட்டினத்தையும், கதரையும் என் தந்தை அறிந்தார். அதனால் சிறு வயதிலேயே காந்திய நூல்களைப் பயின்று காந்திஜியின் பற்றாளராக மாறினார்.

எங்கள் தாத்தா அண்ணாமலைத் தேவர் எங்கள் பாட்டி ஊரான குமரெட்டையாபுரத் (கோவில்பட்டி வட்டம்)தில் நடத்தி வந்த பலசரக்குக் கடை பொருளாதார நெருக்கடியில் சிக்கியதால், என் தந்தை கந்தசாமி இலங்கைக்குச் சென்றார். அங்கு வேலை செய்து கொண்டிருந்த போது மணியாச்சியைச் சேர்ந்த சின்னப்பத் தேவர் என்பவர் இலங்கை சென்றிருக்கின்றனர்.

அவருடைய அழைப்பை ஏற்று எங்கள் தந்தை மணியாச்சிக்கு வந்து எங்கள் அத்தை (தந்தையின் சகோதரி), மாமா, பாட்டி ஆகியோரு டன் வாழ்ந்து கொண்டு, மணியாச்சியில் பெருமாள் பிள்ளை என்பவர் நடத்திய 'மணி ஸ்டோரில்' வேலைக்குச் சேர்ந்தார்.

'மணி ஸ்டோரின்' ஏஜெண்டாக பணியாற்றிய மந்திரத் தேவர் என்பவரின் அறிமுகம் என் தந்தைக்குக் கிடைத்தது. சட்டமறுப்பு இயக்கம் இந்தியாவில் தீவிரமாக நடந்து கொண்டிருந்த காலகட்டம் அது. 'சுதந்திரச் சங்கு', 'தமிழ்நாடு', 'இந்தியா' ஆகிய பத்திரிகைகளின் ஏஜெண்டாகவும் மந்திரத் தேவர் இருந்தார். இந்தப் பத்திரிகைகளை தொடர்ந்து வாசித்த எங்கள் தந்தை விடுதலைப் போராட்டத்தை ஆர்வத்துடன் கவனிக்கத் தொடங்கி னார். மணியாச்சி, ஒட்டநத்தம் பகுதிகளில் நடந்த சட்டமறுப்பு இயக்கங்கள் என் தந்தையைப் பாதித்தது.

என் தந்தை ரயிலில் வியாபாரம் பார்த்துக் கொண்டிருந்தபோது 1933-ம் ஆண்டு கத்தோலிக்க கிறிஸ்துவ தேவர் குடும்பத்தைச் சார்ந்த மிக்கே லம்மா என்பவரை திருமணம் செய்தார். ஆம்! என் தந்தை இந்து; என் தாய் கிருஸ்தவர். இந்தத் திருமணத்தின் போது தான் என் தந்தைக்கு 'அன்னசாமி' என்று பெயர் சூட்டப்பட்டது. அன்றி லிருந்து 'கந்தசாமி' என்ற இயற்பெயரைக் கைவிட்டு 'அன்னசாமி'யாக என் தந்தை மிக்கேலம் மையாருடன் வாழ்க்கையைத் தொடங்கினார்.

தேச சேவையை குறிக்கோளாகக் கொண்ட என் தந்தையின் தேச சேவைக்கு, தேவகுமாரனின் புகழ்பாடும் என் தாய் சரியாக ஒத்துழைப்பு தருவாரா? என்ற குழப்பம் என் தந்தைக்கு இருந்தது. ஆனால் காலப்போக்கில் தன்னுடைய செயல்களின் மூலம் என் தந்தையின் பணிகளுக்கு துணை நின்று தோள் கொடுத்தார் என் அன்னை.

1934-ல் மணியாச்சியில் என் பெற்றோர் தனிக்குடித்தனம் தொடங்கினர். அப்போது தங்கள் வாழ்க்கைக்காக பலசரக்குக் கடை ஒன்றை என் தந்தை ஆரம்பித்தார். என் பெற்றோருக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்கு 'சூசைப் பாண்டியன்' என்று பெயரிட்டனர்.

இந்தச் சூழ்நிலையில் என் தந்தை உடல் நிலை

பாதிக்கப்பட்டது. அதனால் ஆரம்பித்த கடையையும் கவனிக்க முடியாமல் போயிற்று. இந்த வேளையில் மந்திரத் தேவர் தன்னுடைய கடையின் ஏஜெண்டாக என் தந்தையை பணியாற்ற வேண்டினார். இந்தப் பணியில் என் தந்தை இருந்தபோதுதான் அவ ருடைய தலைமகன் சூசைப் பாண்டியன் இறந்தார்.

அப்போது ஜமீன் கொடுமையும், தீண்டாமைக் கொடுமையும் மணியாச்சியில் தலைவிரித்தாடியது. இதை எதிர்த்து உடையார் என்பவரின் துணை கொண்டு மிகப் பெரிய ஊர்வலத்தையும் ஆர்ப்பாட் டத்தையும் என் தந்தை நடத்தினார். இதுதான் மக்களுக்காக என் தந்தை களமிறங்கிய முதல் போராட்டமாகும்.

ஆம்! தலித் மக்களுக்கு ஏற்பட்ட கொடுமை களைக் கண்டித்துத்தான் என் தந்தை முதன் முதலாக போராட்டத்தில் குதித்தார்.

நாளுக்கு நாள் ஜமீன்தார்களின் அடியாட்களின் தொல்லை அதிகரித்தது. அதனால் மந்திரத் தேவருக் கும் என் தந்தைக்கும் மணியாச்சியில் கடை நடத்துவதில் சிரமம் ஏற்பட்டது. மந்திரத் தேவர் திருவேங்கடத்திற்கும், என் தந்தை குமரெட்டையா புரத்திற்கும் அவரவர் குடும்பத்துடன் சென்றனர்.

இதன் பின் மருதன்வாழ்வு என்ற கிராமத்தில் இருந்த குருசாமி நாடார் என்பவர் என் தந்தை மருதன்வாழ்வில் வியாபாரம் செய்யத் தூண்டினார். அதனால் 1936ல் எங்கள் குடும்பம் மருதன்வாழ்வில் வசிக்கத் தொடங்கியது.

மருதன்வாழ்வு கிராமத்திற்கு என் பெற்றோர் வந்த பின் அவர்களுக்கு 1936 நவம்பர் 25 அன்று நான் பிறந்தேன். எனக்கு 'ரஞ்சிதம்' என்று என் தந்தை பெயரிட்டார்.

**** மருதன்வாழ்வு கிராமத்தில் உங்கள் தந்தை அன்னசாமி செய்த பணிகள் பற்றி...***

ஒட்டப்பிடாரம் அருகில் இருக்கும் மருதன் வாழ்வு கிராமம் தலித் மக்கள் அதிகமாக வாழும் பகுதி. பள்ளி, போக்குவரத்து, மின்சாரம், மருத்துவம் போன்ற எந்த வசதிகளும் இல்லாத கிராமம். இந்தக் கிராமத்திற்கு வந்ததும் என் பெற்றோர் 'கிராம சீர்திருத்த சங்கம்' ஒன்றை ஆரம்பித்தனர். 1945ல் 'ஜவஹர் வாலிபர் சங்க'த்தைத் தொடங்கினர்.

தலித் சிறுவர்களும், முதியோர்களும் கல்வி பயில்வதற்காக, இரவுப் பாடசாலை ஒன்றையும் ஆரம்பித்தனர். இந்த தேசத்திற்கு விடுதலை கிடைத்த பின்பும் மருதன்வாழ்வு கிராமத்தில் உள்ள டீ கடைகளில் இரட்டை டம்ளர் முறை அமுலில் இருந்தது. இதை எதிர்த்து என் தந்தை போராடி வெற்றியும் பெற்றார்.

இந்த ஊரில் மருத்துவ வசதி இல்லாததால் மக்கள் அல்லல்பட்டனர். தூத்துக்குடியில் ஆச்சாரி என்ற அலோபதி மருத்துவரிடம் களிம்பு, டெட்டால், பஞ்சு, மாத்திரைகள் வாங்கி வந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு பரிகாரம் செய்தார். என் தாயும் செவிலித்தாய் போன்று அங்குள்ள தலித் மக்களுக்கு சேவைகள் செய்தார்.

மருதன்வாழ்வில் தாழ்த்தப்பட்ட வகுப்பில் பிறந்த அர்ச்சுனன் என்ற இளைஞர் மருத்துவத் துறையில் எம்.டி. பட்டம் பெற்றார். இவருடைய படிப்புக்கு என் தந்தையும் காரணமாகும். இது போன்று தலித் இளைஞர்கள் பலர் படிப்பதற்கும், பட்டம் பெறுவதற்கும் என் தந்தைப் பாடுபட்டார்.

மருதன்வாழ்வு கிராமத்திற்கு பஸ் வசதி இல்லாதிருந்தது. என் தந்தை எடுத்த முயற்சி யாலும், அவர் தலைமை ஏற்று நடத்திய பஸ் மறியல் போராட்டத்தாலும்தான் மருதன்வாழ்வுக்கு பஸ் வந்தது. பஸ் வருவதற்கு அரசு ரோடு போட இடம் கேட்டது. அந்த ஊரில் இருந்த அனைவரும் தங்கள் நிலம் பாதிக்கக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தனர். இடம் ஒதுக்கித் தராமல் எப்படி ரோடு போட முடியும்? ரோடு போட எங்கள் தந்தை எங்கள் தோட்டத்தைக் கொடுக்க முன் வந்தார். வளமான, கிணறுள்ள அந்தத் தோட்டத்தின் மையத்தில் ரோடு போட்டனர். அதனால் கிணற்றையும் இரண்டு ஏக்கர் நிலத்தையும் இழந்தோம். இருப்பினும் என் தந்தை மனமுவந்து செய்த அந்தச் செயலால் மருதன்வாழ்வு கிராமத்திற்கு ரோடு போடப்பட்டு பஸ் வரத் தொடங்கியது.

மருதன்வாழ்வில் ரேஷன் கடை கிடையாது. இந்தக் காலகட்டத்தில் என் தந்தை எங்கள் வீட்டின் முன் பகுதியில் பல சரக்குக் கடை நடத்திக் கொண்டி ருந்தார். தலித் மக்களின் பெரும் பகுதியினர் எங்கள் கடையில்தான் சாமான்கள் வாங்குவர். எங்கள் வீட்டில் அனைவரும் தலித் மக்களை உறவு சொல்லி அழைப்பதுதான் வழக்கம். இப்படித்தான் என் தந்தை எங்களை வளர்த்தார்.

அன்றாடம் உழைத்துப் பிழைக்கும் மக்கள் ரேசன் பொருட்களுக்காக பத்து மைல் நடந்து சென்று புளியம்பட்டி கூட்டுறவு சங்கத்தில் தான் வாங்க வேண்டும். இந்தப் பிரச்சினையிலிருந்து இந்த ஊர் மக்கள் விடுபடுவதற்காக தோழர்கள் எஸ்.ரங்க நாதன், கோதண்டு ஆகியோரை அழைத்துக்

கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்து மருதன்வாழ்வுக்கு கூட்டுறவு சங்கம் வர என் தந்தை ஏற்பாடு செய்தார். அதற்கு எங்கள் வீட்டின் முன் பகுதியை ஒதுக்கிக் கொடுத்தார். கூட்டுறவு சங்கப் பணியையும் என் தந்தையே ஏற்றுச் செய்தார்.

**** உங்கள் தந்தை கம்யூனிஸ்ட் கட்சியில் எப்போது சேர்ந்தார்? அந்த இயக்கத்தில் அவருடைய பணி பற்றி...***

14 வயதிலேயே என் தந்தை காந்திஜியின் பக்தராகிவிட்டார். கதர், தேச விடுதலை, தீண்டாமை ஒழிப்பு ஆகியவற்றில் இளம் வயதிலேயே தீவிரம் காட்டினார். இளைஞர்களை படிக்க வைப்பதிலும், தலித் மக்களுக்கு உதவி செய்வதிலும், பொது வாழ்வை சுயநலமின்றிச் செய்வதிலும் என் தந்தை தொடர்ந்து பாடுபட்டார்.

மருதன்வாழ்வில் என் தந்தை செய்த இத்தகைய பணிகள் கோவில்பட்டி தாலுகா முழுவதும் பரவியது. அப்போது கம்யூனிஸ்டுகளாக இருந்த தோழர்கள் கோடங்கால் கிருஷ்ணசாமி, கொல்லன்கிணறு வரதராசன், எஸ்.அழகர்சாமி (கோவில்பட்டி முன்னாள் எம்எல்ஏ) ஆகியோர் அடிக்கடி என் தந்தையை சந்தித்து கம்யூனிஸ்ட் கட்சியில் சேர வற்புறுத்தினர். எங்கள் வீட்டிற்கும் அடிக்கடி வந்து விவாதித்தனர்.



இதன் விளைவால் 1953ல் கம்யூனிஸ்ட் கட்சியில் என் தந்தை சேர்ந்தார். நெல்லை மாவட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் அன்றைய மாவட்டச் செயலாளர் தோழர் பாலவிநாயகம் என் தந்தைக்கு கட்சிக் கார்டு வழங்கினார். அதன்பின் முதன் முதலாக மருதன்வாழ்வு கிராமத்தில் கம்யூனிஸ்ட் கட்சிக் கிளையை உருவாக்கி, அதன் முதல் செயலாளராகவும் என் தந்தை பொறுப்பேற்றார்.

சுற்று வட்டாரக் கிராமங்களில் கட்சிக் கிளைகளை உருவாக்கப் பாடுபட்டார். கட்சியின் ஒட்டப்பிடார வட்டாரக் குழு, நெல்லை மாவட்டக் குழு ஆகியவற்றின் உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டு தொடர்ந்து பணியாற்றினார். மருதன்வாழ்வு கிராம கட்சிக் கிளைக் கூட்டமும், ஒட்டப்பிடாரம் வட்டார கட்சிக் கூட்டமும் எங்கள் வீட்டில்தான் நடக்கும்; குடும்பம், வியாபாரம் ஆகியவற்றைவிட கட்சிப் பணியிலேயே முழுக் கவனத்தையும் முழுநேரத்தையும் என் தந்தை செலவிட்டார். தூத்துக்குடி போன்ற நகரங்களுக்குச் சென்றால் புத்தகங்களை வாங்காமல் அவர் வீட்டிற்கு வந்தது கிடையாது. வாங்கி வந்த புத்தகங்களை இரவெல்லாம் படிப்பார். படித்த புத்தகங்களின் ஓரங்களில் குறிப்பும் எழுதி வைப்பார். என் தந்தை சேகரித்த புத்தகங்கள் ஏராளம். ஒரு சின்னஞ்சிறு கிராமத்தில் வாழ்ந்தவர்களில் அதிக புத்தகம் சேகரித்தவர் என் தந்தையாகத்தான் இருக்கும். அந்த அளவுக்கு அவர் புத்தகப் பிரியர். அவர் படித்ததுடன் மற்றவர்களையும் படிக்கத் தூண்டுவார். மாக்ஸிம் கார்க்கியின் 'தாய்', 'கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை' போன்ற நூல்களை நானும் என் தம்பி தங்கைகளும் படித்தது எங்கள் அப்பாவால்தான்.

கம்யூனிஸ்ட் கட்சியில் என் தந்தை இணைந்த பின் இயக்கம் நடத்திய அனைத்துப் போராட்டத்திலும் கலந்து கொண்டு சிறை சென்றார். கட்சி நடத்திய நிலமீட்சிப் போராட்டத்தின் போது என் தந்தையும் தோழரும் (ஆர்.என்.கே.) ஒன்றாக சிறையில் இருந்தனர்.

கீழவெண்மணியில் ஆதிக்க சக்திகளால் 44 தலித் மக்கள் கொல்லப்பட்டனர். தென்பகுதியில் முதன் முதலாக இந்தக் கொடுஞ் செயலுக்கு கண்டனக் கூட்டம் நடத்தப்பட்டது மருதன் வாழ்வில்தான். இதற்கு முன்முயற்சி எடுத்தவர் என் தந்தை.

'தினமலர்' பத்திரிகையை நெல்லையில் தொடங்கிய போது, அந்தப் பத்திரிகையின் நிறுவனரும் ஆசிரியருமான ராமசுப்பு அய்யர் எங்கள் வீட்டிற்கு வந்து, என் தந்தையைச் சந்தித்து 'தினமலர்' பத்திரிகைக்கு ஏஜெண்டாகும்படி வலியுறுத்தினார். 'தினமலர்', 'ஜனசக்தி', தூத்துக்குடியிலிருந்து தோழர் எஸ்.ஏ.முருகானந்தம் நடத்திய 'சாந்தி' ஆகிய பத்திரிகைகளின் ஏஜெண்டாக பணியாற்றினார் என் தந்தை. 'ஜனசக்தி' அல்லது 'தாமரை' எப்போதும் என் தந்தை கைகளில் இருக்கும்.

**** உங்களுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர்?***

என்னுடன் பிறந்தவர்கள் பதினோரு பேர். இருவர் இறந்து விட்டனர்.

மிக்கேலம்மாவுக்கு முதல் ஆண் குழந்தை பிறந்து இறந்த பின் நான் பிறந்தேன். எனக்குப் பின் பிறந்த குழந்தைக்கு நேருஜியின் மனைவி நினைவாக 'கமலா' என்றும், அதன் பின் பிறந்த குழந்தைக்கு காந்திஜியின் மனைவி நினைவாக 'கஸ்தூரி' என்றும், அடுத்துப் பிறந்த குழந்தைக்கு கவிக்குயில் சரோஜினி நாயுடுவின் நினைவாக 'சரோஜினி' என்றும் என் தந்தை பெயரிட்டார். ஆறாவது குழந்தை பிறந்ததும் எங்கள் அம்மா மிக்கேலம்மா இறந்து விட்டார். அதனால் அப்போது

பிறந்த குழந்தைக்கு எங்கள் அம்மா நினைவாக 'மிக்கேலம்மா' என்று என் தந்தை பெயரிட்டார்.

இதன்பின் சந்தோசியம்மாவை என் தந்தை திருமணம் செய்தார். அவர்களுக்கு பிறந்த முதல் குழந்தைக்கு கேரள கம்யூனிஸ்ட் தலைவர் பாலசந்திர மேனன் நினைவாகவும், மகாகவி பாரதியார் நினைவாகவும் 'பாலச்சந்திர பாரதி' என்றும், அதன் பின் பிறந்த குழந்தைக்கு ஜெயப்பிரகாஷ் நாராயணன் மனைவி நினைவாக 'பிரபாவதி' என்றும், கேரளத்தில் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சிக்கு வந்த ஆண்டு பிறந்த குழந்தைக்கு 'கேரள குமாரி' என்றும், அடுத்து பிறந்த குழந்தைக்கு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் கல்யாணசுந்தரம் நினைவாக 'கல்யாணசுந்தரம்' என்றும், கடைசி யாகப் பிறந்த குழந்தைக்கு எங்கள் தாத்தாவும், எங்கள் தந்தையின் தந்தையுமான அண்ணாமலை தேவரின் நினைவாக 'அண்ணாமலை ராஜா' என்றும் என் தந்தை பெயரிட்டார்.

**** உங்கள் தந்தை இரண்டாவது தாரமாக சந்தோசியம்மா என்பவரைத் திருமணம் செய்ததாகக் கூறினீர்கள். அவரைப் பற்றி...***

எங்கள் அம்மா மிக்கேலம்மாள் இறந்தது எங்கள் குடும்பத்தில் இடிவிழுந்தது போன்ற தாயிற்று. 22 நாள் கைக்குழந்தையை வைத்துக் கொண்டு எங்கள் பாட்டி மிகவும் கஷ்டப்பட்டார். அப்போது மூத்தவளான எனக்கே பதினோறு வயதுதான். மற்றவர்கள் என்னைவிட சின்னஞ் சிறுவர்கள்.

மருதன்வாழ்வைப் பூர்வீகமாகக் கொண்டு உசிலம்பட்டியில் ஆசிரியர் வேலை பார்த்துக் கொண்டிருந்தவரின் மகள்தான் சந்தோசியம்மாள். இவர் மருதன்வாழ்வுக்கு அருகில் உள்ள நாரைக்கிணறு நடுநிலைப் பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்தார்.

இவருக்கு என் அம்மா இறப்பு, 22 நாள் குழந்தையை வைத்துக் கொண்டு எங்கள் குடும்பத் தார் படும் துயரம் ஆகியவை தெரிந்து, குழந்தை களைப் பார்ப்பதற்காக எங்கள் வீட்டிற்கு வந்தார். குழந்தைகள் மீது ஏற்பட்ட அவருடைய அனுதாபம் எங்கள் குடும்பத்தின் மீதும் படர்ந்தது. சந்தோசி யம்மாள் சீர்திருத்தக் கிறிஸ்துவப் பிரிவைச் சார்ந்தவர். எங்கள் தந்தை கத்தோலிக்க சபையைச் சார்ந்தவர். சந்தோசியம்மாவின் அணுகுமுறையும், குடும்பத்தார் மீது செலுத்திய அன்பும் என் தந்தையை யோசிக்க வைத்தது. அந்த யோசனை அவரை திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்ற ஆவலில் முடிந்தது.

மதத்தில் உள்ள பிரிவும், ஐந்து குழந்தை களைப் பெற்ற ஒருவருக்கு இரண்டாம் தாரமாக மகளைக் கொடுப்பதிலும் சந்தோசியம்மாவின் அப்பாவிற்கு விருப்பமில்லை. காலப்போக்கில் அவருடைய மனம் மாறி உசிலம்பட்டியில் என் தந்தைக்கும் சந்தோசியம்மாவிற்கும் திருமணம் நடந்தது.

சந்தோசியம்மா எங்கள் வீட்டிற்கு வந்ததும் எங்கள் வீட்டில் மீண்டும் சந்தோஷம் குடி வந்தது. தாயை இழந்த எங்களை தாயில்லா குறையின்றி வளர்த்தார். எங்கள் படிப்பில் தனிக் கவனம் செலுத்தி எங்களை படிக்க வைத்தார்.

சந்தோசியம்மா தனக்கு பிறந்த குழந்தை களையும், மிக்கேலம்மாவுக்கு பிறந்த எங்களையும் பிரித்துப் பார்க்காமல் வேறுபாடின்றி வளர்த்தார். சிறிது காலம் எங்களை கவனிப்பதற்காக ஆசிரியர் வேலையை விட்டிருந்த சந்தோசியம்மா, அதன் பின் மீண்டும் ஆசிரி யர் பணியில் சேர்ந் தார். சந்தோசியம் மாள் எங்களுக்கு அம்மாவாக வாய்த்த பின்பு தான் எங்கள் தந்தை கம்யூனிஸ்டாகிய நிகழ்வும் நடந்தது.

குழந்தைகளைக் கவனிப்பது, குடும்ப நிர்வாகத்தையும் பார்த்துக் கொள்வது, கடை வியாபாரத்திலும் கவனம் செலுத்துவது, எங்கள் அப்பாவைத் தேடி வரும் கட்சிக்காரர்களை அன்போடு உபசரிப்பது, கட்சிக் கிளைக் கூட்டம் நடக்கும் போதெல்லாம் தேவையான உதவிகளைச் செய்வது, வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் எங்கள் தந்தையின் பொது வாழ்க்கைப் பணிகளில் பங்கெடுப்பது, ஆசிரியப் பணியையும் சிறப்பாகச் செய்வது என எங்கள் சந்தோசியம்மா ஓய்வின்றிப் பணி யாற்றினார்.

தலித் பெண்களுக்கு பிரசவம் பார்ப்பதும் எங்கள் சந்தோசியம்மாள் தான். அந்த அளவுக்கு சாதி கடந்து மக்களுக்காக அவர் உழைத்தார். எங்கள் அப்பாவுக்கு ஏற்ற ஜோடி என்பதை சந்தோசி யம்மாள் நிரூபித்தார். சந்தோசியம்மா ஆசிரியர் இயக்கப் பணிகளிலும் தம்மை இணைத்துக் கொண்டார். 1971ல் ஆட்சித் தலைவர் அலுவலகம் முன் நடந்த ஆசிரியர்கள் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர் சந்தோசியம்மா. 1977ல் சென்னையில் நடந்த அகில இந்திய ஆசிரியர் பேரணிக்கு தலைமை தாங்கிய சிறப்பும் அவருக்கு உண்டு.

மனைவி, குடும்பத் தலைவி, தாய், ஆசிரியை, போராட்ட நாயகி என்று

சந்தோசியம்மாவுக்கு பல்வேறு பரிமாணங்கள் உண்டு.

**** தோழர் நல்லகண்ணு உங்களுக்கு உறவினரா?***

தோழர் எங்களுக்கு உறவினர் இல்லை. என் திருமணத்திற்கு முன் ஒரே ஒருமுறை எங்கள் வீட்டிற்கு அவர் வந்தபோது பார்த்திருக்கிறேன்.

கள்ள மரக்கால் ஒழிப்புப் போர், விவசாயிகளை நிலத்திலிருந்து வெளியேற்றுவதை எதிர்த்துப் போர், தீண்டாமை ஒழிப்புப் போராட்டம், நிலப்பிரபுக்களின் ஆதிக்கத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் என தென்மாவட்டங்களில் மிகப் பெரிய அதிர்வுகளை ஏற்படுத்திவிட்டு தோழர் 1949ல் சிறை சென்றார். ஏழாண்டு சிறை வாழ்ந்து வெளி வந்தார்.

எங்கள் அப்பா கட்சியின் மாவட்டக் குழு உறுப்பினராக இருந்ததால் கட்சியின் முக்கிய தோழர்கள் அனைவருக்கும் அறிமுகம். கட்சித் தோழர்களின் முன் முயற்சியில் தான் எங்கள் திருமணம் பேசப்பட்டது. அதன் பின் தோழருடைய அப்பா, அம்மா, மற்றும் காளியப்பா பிள்ளை, ஸ்ரீவை குண்டம் முத்தையா ஆகியோர் என்னை பெண் பார்க்க வந்தனர்.

அமிர்த சரஸில் நடந்த கட்சி மாநாட்டில் கலந்து கொண்டு விட்டு தோழர் எங்கள் வீட்டிற்கு வந்து சென்றார். அதன் பின் மணமகனாகத் தான் அவரைப் பார்த்தேன்.

**** உங்கள் திருமணத்தைப் பற்றிச் சொல்லுங்கள்.***

மாமா அந்தக் காலத்திலேயே அரசாங்க உத்தியோகம் பார்த்தவர். எங்களைவிட அவங்களுக்கு அதிக நிலபுலன்கள் இருந்தன. மாமா விஷ்ணு பக்தர். நான் கிறித்துவப் பெண். இந்த வேறுபாட்டையெல்லாம் பார்க்காமல் என்னை மருமகளாக்க மாமா விரும்பினார். கல்யாண நாளும் முடிவு செய்யப்பட்டது.

பதிவுத் திருமணம் செய்யணும்னு தோழர் விரும்பினார். ஆனால் அம்மா அதற்கு ஒத்துக் கொள்ளாமல் நாலுபேரு அறியும்படி என் திருமணத்தை செய்ய வேண்டுமென்றார்.

திருமாங்கல்யத்தில் கட்சிச் சின்னம் போடணும்னு தோழர் சொன்னார். இதற்கு அம்மா ''தாலி போடுவதுதான் சரியானது'' என்று சொல்லிட்டாங்க.

1958 ஜூலையில் பேராசிரியர் நா.வானமாமலை தலைமையில் செட்டியார் சத்திரத்தில் எளிமையாகவும் சிறப்பாகவும் எங்கள் திருமணம் நடந்தது.

**** தோழர் முழுநேர அரசியல்வாதி; நீங்கள் ஆசிரியை. நீங்கள் மிகவும் சிவப்பாக இருக்கிறீர்கள்; தோழர் உங்களுக்கு நேர் எதிரான நிறம். இதெல்லாம் உங்கள் மனதை நெருடவில்லையா?***

எனக்கு திருமணம் ஆவதற்கு முன் தோழரிடம் என் அம்மா, ''உங்களுக்கு மாதச் சம்பளம் எவ்வளவு?'' என்று கேட்டார். ''அதெல்லாம் கேட்கக் கூடாது'' என்று சொல்லி என் அம்மாவை அப்பா தடுத்து விட்டார்.

என் தந்தை கம்யூனிஸ்ட் என்பதால் தோழரை கட்டிக் கொள்வதில் எனக்கு எந்தவித அந்தஸ்துப் பிரச்சினையும் வரவில்லை.

மக்களுக்காக தொடர்ந்து போராடி, சிறை வாழ்ந்த தோழரின் வாழ்க்கை எனக்குப் பிடித்திருந்தது. அதனால் நிறத்தைப் பற்றியெல்லாம் நான் கவலைப்படவில்லை. மேலும் என் தந்தையின் தேர்வு சரியாகத்தான் இருக்கும் என்ற எண்ணமும் எனக்கு வலுவாக இருந்தது. எனக்கு திருமணம் ஆகும்போது கட்சியின் முழுநேர ஊழியர் என்ற முறையில் தோழருக்கு மாதச் சம்பளமாக முப்பது கொடுக்கப்பட்டது. இதை அறிந்தபோதுகூட என் மனத்தில் எந்தவிதச் சஞ்சலமும் ஏற்படவில்லை. ஏனெனில் குடும்பத்தைக் காப்பாற்ற என்னுடைய வருமானம் இருக்கிறது. அவருடைய தேவைக்கு ரூபாய் முப்பது போதும் என்று நினைத்தேன். ஆனால் தேவைப்படும் போது அவருக்கு நான் உதவி செய்ய வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

**** கிறித்துவ பின்னணியில் பிறந்து வளர்ந்த நீங்கள் இந்து பாரம்பரியமிக்க குடும்பத்திற்கு மருமகளாகப் போனபோது ஏதாவது சிரமங்கள் ஏற்பட்டதா?***

எங்களுக்கு திருமணம் ஆனதும் மாமாவை தொட்டு வணங்கச் சொன்னாங்க. நான் கிறிஸ்துவ முறைப்படி முழங்கால் முட்டிபோட்டு வணங்கினேன். அதை யாரும் வித்தியாசமா எடுத்துக்கிறல. மாமா என் நெற்றியில் திருநீர் பூசினார். என் நெற்றியில் திருநீர் ஏறியது இதுதான் முதல் தடவை. இதன் பின் அடுத்த நாள் அவங்க குலதெய்வமான காசினிவேந்தன் பெருமாள் கோவிலுக்கு எங்களை அனுப்பி வைத்தார் மாமா. அப்ப வில் வண்டியில் நானும் என் நாத்தனாரும் சென்றோம். தோழர் நடந்தே வந்தாங்க. இந்துக் கோவிலுக்குள் முதன் முதலாக அன்னைக்குத்தான் நான் போனேன். அது

எனக்கு புதிய அனுபவமாக இருந்தது.

**** திருமணமான பின் உங்களை தோழர் எந்த சினிமாவுக்கு அழைத்துச் சென்றார்?***

ஸ்ரீவைகுண்டம் ஆசாரம் மிக்க ஊர். அந்தக் காலத்தில் ஆணும் பெண்ணும் இணைந்து வீதியில் செல்லமாட்டார்கள். அவ்வளவு கட்டுப்பாடு. எங்களுக்குக் கல்யாணம் ஆனதும் பார்த்த சினிமா 'ராமபக்தர்'. இந்தப் படத்திற்கு நாங்கள் போனதே வேடிக்கை தான்.

அந்த ஊர் கொட்டகை தியேட்டர் உரிமையாளர் எங்கள் மாமாவுக்கு நண்பர். அதனால் சில டிக்கெட்டுகளை வீட்டிற்கு அனுப்பி விட்டார். 'ராமபக்தர்' படம் பார்க்க மாமா எங்களை அனுப்பி வைத்தார். நானும் என் நாத்தனாரும் பெண்கள் பகுதியிலும், தோழர் ஆண்கள் பகுதியிலும் அமர்ந்து 'ராமபக்தர்' என்ற சினிமாவைப் பார்த்தோம். இந்தப் படம் எங்க மாமா விருப்பத்திற்காக நாங்க பார்த்தது.

அதன் பின் ஸ்ரீவைகுண்டத்தில் 'ஃபால் ஆஃப் பெர்லின்' என்ற ரஷ்யப் படம் ஓடியது. இந்தப் படத்தை நான் அவசியம் பார்க்க வேண்டுமென்று சொல்லி என்னை தோழர் அழைத்துச் சென்றார். நாங்கள் தியேட்டருக்குப் போகும்போது எங்களை வேடிக்கையாக ஜனங்க பார்த்தாங்க. இது அன்றைக்கு அந்த ஊருக்கு புதுமையாக இருந்தது.

**** வீட்டில் இருக்கும்போது சமையல் வேலைகளில் தோழர் உங்களுக்கு உதவி செய்வாரா?***

அவர் வீட்டில் இருப்பதே அரிது. அப்படியே வீட்டில் இருந்தாலும் கட்சித் தோழர்களும், உறவினர்களும் அவரை சந்திக்க வந்து விடுவார்கள். இப்படிப்பட்ட சூழலில் எனக்கு உதவி செய்ய அவருக்கு ஏது நேரம்?

நான் ஆசிரியப் பணியில் இருந்தபோது நான் வேலைக்கு புறப்பட்டுக் கொண்டும், குழந்தைகளை பள்ளிக்கு தயார்படுத்திக் கொண்டும் இருக்கும் போது வெளியூரிலிருந்து தோழர் வருவார். அப்படிப்பட்ட சூழலில் ஒரு நாள் ''தோசை மாவு இருக்கு... சுட்டு சாப்பிடுங்க!'' என்றேன். அவரும் ஆர்வத்தோடு தோசை சுடுவதற்கு முன் தோசைக் கல்லில் எண்ணெய் தடவும்போது கையைச் சுட்டுக் கொண்டார். இதுதான் அவருடைய முதலும் முடிவுமான சமையல் முயற்சி.

இப்போதும் ஓய்வு கிடைக்கும் போது ''சமையல் கற்றுக் கொள்ள வேண்டும்'' என்று சொல்வார். ஆனால் அது மட்டும் அவரால் இதுவரை முடிந்ததில்லை.

**** உங்களுக்கு தோழர் பரிசுப் பொருள் எதுவும் வாங்கிக் கொடுத்திருக்கிறாரா?***

நான் ஆசிரியை வேலை பார்த்துக் கொண்டிருந்த போது இசை கற்றுக் கொண்டிருந்தேன். ஒருமுறை தோழர் எனக்கு 'புல்புல்தாரா' வாங்கி கொடுத்தனுப்பினார். இதுதான் எனக்கு திருமணமானபின் தோழர் வாங்கிக் கொடுத்த முதல் பரிசு.

**** தோழர் உங்களிடம் எதிர்பார்த்த ஏதாவதொன்று நிறைவேறாமல் போயிருக்கா?***

என்னை தமிழ் படிக்க வைத்து தமிழ் பண்டிட்டாக்கணும்னு தோழர் ரொம்பவும் விரும்பினார். அதற்காக நன்னூல், யாப்பெருங்கலக் காரிகை போன்ற நூல்களை எல்லாம் தோழர் வாங்கிக் கொடுத்தார். அந்த நேரம் எனக்கு உடல் நிலை பாதிக்கப்பட்டது. அதன் பின் படிக்க வாய்க்கவில்லை. இதுதான் என்னிடம் தோழர் எதிர்பார்த்து இன்று வரை கைகூடாமல் போனதாகும்.

**** உங்களை துணைவியாகப் பெற்றதைப் பற்றி தோழர் எப்போதாவது கருத்துச் சொல்லியிருக்கிறாரா?***

தோழர் பிறந்த வீடு வசதியான வீடு. அதனால் பல பணக்காரக் குடும்பங்கள் தோழருக்கு பெண் கொடுக்க விரும்பியிருக்கின்றன. அதை தோழர் நிராகரித்திருக்கிறார். அது பற்றி, ''அன்று நான் எடுத்த முடிவு எவ்வளவு சரியானது, உன்னை திருமணம் செய்யாமல் வேறொருவரை நான் திருமணம் செய்திருந்தால் என்னுடைய பொது வாழ்க்கை நிச்சயம் பாதிக்கப்பட்டிருக்கும். என்னுடைய பொது வாழ்க்கைப் பணிகளுக்கு நீ கொடுக்கும் ஒத்துழைப்பைப் போன்று வேறு எவரும் கொடுத்திருப்பார்களா!'' என்பார் தோழர்.



**** தேர்தலில் போட்டியிட்டு தோழர் வெற்றி பெற்றது கிடையாது. இது பற்றி தோழரிடம் நீங்கள் பேசியிருக்கிறீர்களா?***

இதுபோன்ற விஷயங்களை தோழர் என்னிடம் ஆரம்பத்தில் சொல்ல மாட்டார். மத்தவங்க மூலமாகவும், பத்திரிகைகள் வழியாகவும் தான் தோழர் தேர்தலில் போட்டியிடப் போகிறார் என்பது எனக்குத் தெரியவரும். தெரிந்த பின் கேட்டால் ''எனக்கு தேர்தலில் போட்டியிட விருப்பம் இல்லை. கட்சி முடிவு. அதை நான் நிறைவேற்றித்தான் ஆகணும்'' என்பார் தோழர்.

1977 அம்பாசமுத்திரம் சட்டமன்ற தொகுதிக்கும் கடந்த தேர்தலுக்கு முன் நடந்த நாடாளுமன்ற தேர்தலில் கோவை நாடாளுமன்ற தொகுதிக்கும் தோழர் போட்டியிட்டார். ஆரம்பத்தில் தோழர் ஜெயிப்பது போன்றுதான் பத்திரிகைகளில் செய்தி வரும். முடிவு அவருக்கு பாதகமாகத் தான் வெளிவரும். ஆனால் தோல்வியைக் கண்டு அவர் எப்போதும் துவண்டதில்லை.

**** திருமணமானபின் முதன் முதலாக தோழரின் மேடை சொற்பொழிவை எங்கு கேட்டீர்கள்?***

எட்டயபுரம் பாரதி விழாவில். 'சுதந்திரம் இதுவரை அடையவில்லை' என்ற பொருள் பட தோழர் பேசி னார். பலரும் தோழரின் பேச்சை ஆச்சரியத்துடன் கேட்டனர். அதன்பின் ''அரசியல் சுதந்திரம் இந்த தேசத்திற்கு கிடைத் திருக்கிறது; ஆனால் பொருளாதார சுதந்திரம் இதுநாள் வரை கிடைக்கவில்லை'' என்று தோழர் தெளிவுபடுத்திப் பேசினார். இதுதான் நான் கேட்ட தோழருடைய முதல் மேடைப் பேச்சு.

**** மாநிலச் செயலாளர் பொறுப்பிலிருந்து விடுபட்ட பின்பும் தோழர் ஓய்வின்றி பயணம் மேற்கொள்கிறாரே, இது பற்றி அவரிடம் நீங்கள் பேசியதுண்டா?***

மாநில செயலாளர் பொறுப்பிலிருந்து தோழர் விடுபட்டதும் நான் ரொம்ப மகிழ்ந்தேன். இனி போதுமான அளவுக்கு ஓய்வு எடுப்பார் என்று எண்ணினேன். ஆனால், மீண்டும் முன்பைவிட அதிகமாக அலைந்து கொண்டுதான் இருக்கிறார். என்ன செய்ய? குடும்பத்தில் வளர்ந்ததைவிட அதிகம் கட்சியில் தான் தோழர் வளர்ந்தார். உறவினர்களோட இருக்கிறதவிட கட்சித் தோழர்களோடும், மக்களோடும் இருப்பதைத்தான் தோழர் விரும்புகிறார். அதுதான் அவருடைய உடல்நிலைக்கும் ஒத்ததாக இருக்கிறது. அதனால் மக்களைச் சந்திப்பதற்குச் செல்லும், கட்சித் தோழர்களை பார்க்கச் செல்லும் அவருடைய பயணங்களை நிறுத்த முடியாது; நிறுத்தினால் அவர் உடம்பு ஏற்றுக் கொள்ளாது.

எங்கள் மூத்த மகள் காசிபாரதியின் திருமணத் திற்கு முதல் நாள்தான் தோழர் வந்தார். அவருக்கு எங்கள் மகளைவிட இயக்கத் தோழர்களை மகனாகவும் இயக்கத் தோழியர்களை மகளாகவும் உறவாகவும் தெரிகிறது. அதனால் இதை எல்லாம் பெரிதாக எடுத்துக் கொள்ள எங்கள் குடும்ப உறவினர்கள் எவரும் விரும்புவதில்லை. பெருமை யாகத்தான் இன்று வரை கருதி வருகிறோம்.

**** எளிமையைத் தோழர் எவரிடமிருந்து கற்றுக் கொண்டார்?***

கம்யூனிஸ்ட் தலைவர்கள் அனைவரும் எளிமையானவர்கள்தான். இவருடைய தோற்றம் எளிமையிலும் எளிமையாகத் தெரியலாம். தோழர் பாலதண்டாயுதம்கூட, ''கல்லூரியில் படித்திருக்கிறார். இருப்பினும் கிராமத்தார் போல இருக்கிறாரே!'' என்று ஆச்சரியத்துடன் சொல்லி இருக்கிறார்.

சிக்கனமாக இருக்க விரும்புவார்; மற்றவர்களும் சிக்கனமாக இருக்க வேண்டுமென்று சொல்வார். இந்த வயதிலும் கட்சி அலுவலகத்தில் தங்கியிருந்தால் அதிகாலையில் எழுந்து குளித்து விட்டு அவர் அணிந்திருந்த ஆடைகளை அவரே துவைத்து விடுவார். ''ஏன்? இப்படிச் செய்கிறீர்கள்?' என்றால் ஏதாவது பதில் சொல்லி தோழர் எங்களை சமாளித்து விடுவார்.

**** உங்கள் தந்தை சாதிக் கலவரத்தில் கொலை செய்யப்பட்டது பற்றி...***

1995-ம் ஆண்டு தென் தமிழகத்தில் அரசியல் சாதி புகுந்து சாதிக் கலவரம் தீயாக பரவியது. அது ஒட்டப்பிடாரம் தாலுகாவிலும் படர்ந்தது. தேவமார்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்குமாக இந்த மோதல் திட்டமிட்டு தூண்டி விடப்பட்டது. ஆண், பெண், வயது முதிர்ந்தவர், சிறுவர் என்ற பாகுபாடுகள் பார்க்காமல் இரண்டு தரப்பிலும் கொலைகள் விழுந்தன.

''இந்தச் சூழ்நிலையில் மருதன்வாழ்வில் இருக்க வேண்டாம்'' என்று எங்கள் பெற்றோரிடம் உறவினர் அனைவரும் சொன்னோம். என் தம்பி தூத்துக்குடி வந்து விடும்படி பெற்றோரை அழைத்தான். அதற்கு என் அப்பா, ''இந்த ஊருக்கு நான் எவ்வளவோ பாடுபட்டிருக்கிறேன். இங்கிருக்கும் தலித் மக்களுடன் சாதி பேதமின்றி பழகி யிருக்கிறேன். வேற ஊர்க்காரர்கள் என் மீது துரும்பைப் போட்டால்கூட நம் ஊர் மக்கள் அதை அனுமதிக்கமாட்டார்கள். இப்படிப்பட்ட மக்களிடமிருந்து நான் விலகிச் சென்றால், நான் இந்த ஊர் மக்களை நம்பாதவன் என்று எண்ண வாய்ப்பு ஏற்பட்டு விடும். அதனால் எனக்கு ஒன்றும் ஆகாது! இந்த ஊர் தலித் மக்களைப் பற்றி உங்களைவிட எனக்கு நன்றாகத் தெரியும். அவர்களோடு இரண்டறக் கலந்தவன்'' என்று சொல்லி வெளியூர்களுக்குச் செல்ல மறுத்து விட்டார்.

இப்படி எண்ணம் கொண்டிருந்த என் தந்தையை 1995 டிசம்பர் 3 ஞாயிறு பகல் 12 மணிக்கு வீட்டுக்குள் நுழைந்த சாதி வெறியர்கள் சிலர் என் தாய் கண் எதிரிலேயே கொலை செய்து விட்டனர்.

எந்த சாதி முன்னேற வேண்டுமென்று என் தந்தை பாடுபட்டாரோ அந்த சாதியில் வெறியூட்டப்பட்ட சிலர் என் தந்தையை கொன்றது வேதனைமிக்கது.

சாதியை வெறுத்தவரை சாதி வெறியர்கள் வெட்டி சாய்த்து விட்டனர். ஆம்! மதவெறிக்கு மகாத்மா பலியானார்; சாதி வெறிக்கு அப்பழுக்கற்ற என் தந்தை பலியானார். இதைவிட அதுபற்றி நான் என்ன சொல்ல...

**** உங்கள் தந்தை சில சாதி வெறியர்களால் கொலை செய்யப்பட்டது பற்றி உங்களிடம் தோழர் ஏதாவது பேசியிருக்கிறாரா?***

தோழர் எதையும் வெளிக்காட்டிக் கொள்ள மாட்டார். மகிழ்ச்சியான செய்தி என்றால் ஒரு சிரிப்பு; வருத்தமான செய்தி என்றால் சிறிது நேரம் முகம் வாடல். இதுதான் அவருடைய பழக்கம். இதுபற்றி அவர் விரிவாக என்னிடம் எதுவும் பேசியதில்லை. இந்தச் செய்திக் கேட்டு, கலைஞரிலிருந்து பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் தோழரிடம் துக்கம் விசாரித்தனர். அப்போதும் ஏதோ சொல்லி சமாளித்தாரே தவிர, அவருடைய உள்ளக் கிடக்கையை எவரிடமும் அவர் காட்டிக் கொள்ளவில்லை.

ஆனால் எங்கள் தந்தை கொலை செய்யப்பட்ட இருபதாம் நாள் சென்னை கட்சி அலுவலகம் பாலன் இல்லத்தில் அமர்ந்து 'அன்புத் தோழர் மரியாதைக்குரிய மாமாவுக்கு அஞ்சலி' என்ற தலைப்பில் தோழர் ஒரு கவிதை எழுதியிருக்கிறார். அந்தக் கவிதை:

''அன்பின் திருவுருவே - எதற்கும்
அசையாத கொள்கைக் குன்றே!
சாதிகளையே நம்பும் ஜனங்களிடையே
சாதிஉணர்வு அண்டாத நெருப்பாக
வாழ்ந்து காட்டினீர்!
பொதுவுடைமைக் கொள்கையின்
அடிநாதமான மனித நேயத்தையே
உயிர் மூச்சாக்கி வாழ்ந்த உத்தமனே!
வயதாக ஆக வயிரம் பாய்ந்த நெஞ்சினனாய்
அயராது உழைத்து வந்த அஞ்சாத வீரனே!
உம் முதுமைக் காலத்தில் - எனது
நன்றிக் கடன் செலுத்த நான்
நெஞ்சில் சுமந்திருந்த நினைவெல்லாம்
கண்ணாடிச் சிதறலாய்
நொறுக்கப்பட்டதை நினைக்கும்
போதெல்லாம் பொறுமிக்
கொண்டேயிருக்கிறேன்!
நீர் - தாரை வார்த்துக் கொடுத்த என் மனைவி
உம்மைப் போல் குணவதி!
என்னை மேலும் உறுதியுள்ளவனாக - என்றும்
துணை நிற்கும் உத்தமியாம் ரஞ்சிதமும்
அவள் பெற்ற பேத்திகளோடு
என் இல்லத்தில் உங்களிருவரையும்
பராமரிக்கும் எண்ணம் கொண்டிருந்தேன்!
கடமையாகவும் கருதினேன்! நினைப்பேன்
இல்லத்தாளுடன் கலந்து பேசுவேன்!
இறுதியாக உம்மிடம் உரையாடும்போது
அசையாதிருப்பதைக் கண்டு நானும்
அசந்து விடுவேன் - இதுவே என்
பழக்கம் - எல்லாப் பிரச்சினைகளிலும்
எனது குறையும் இதுவாகவே
இன்றும் காணுகிறேன் - இதன் விளைவை
இப்போது அனுபவித்து விட்டேன்.
அமைதிப் பேருருவே
நீவிர் பெற்றெடுத்த
மக்கள்
செல்வங்களாம்
- அவர்களின்
கொடிகளோடும்
பூப்பிஞ்சுகளும்
புடைசூழ
அமைதியாக
உம்
மூச்சடங்கும்
என்றல்லோ நான்
நினைத்திருந்தேன்!
அத்தையின்
கண் முன்னே
சுவரும் கதறிஅழ
வாழ்வு முடிந்ததென்ற முடிவோடு
அசையாது நின்ற போது கொடு அரிவாளால்
கொலையுண்டு வீழ்ந்த கதை
குவலயமுள்ளளவும் - தமிழினமும்
சாதிப் பித்தர்களும் கதிகலங்கும் வண்ணம்
உம்சாவு என்றும் நினைவிருக்கும்!
உங்கள் பணியைத் தொடர்வோம்
குடும்பத்தையும் தோழர்களையும்
ஊராரையும் உறவினரையும்
அணைத்து நின்ற ஆலமரமாய் வாழ்ந்து காட்டிய
லட்சியமும் - மனித நேயமும்
அணையாது காப்போம் - இதுவே
எனது அஞ்சலியாகும்

சென்னை **தோழமையுள்ள**

22.12.1995 **ஆர்.நல்லகண்ணு**

ஒரு மாமனாருக்கு ஒரு மருமகன் அஞ்சலிக் கவிதை வடித்தது உலகத்திலேயே இதுவாகத் தான் இருக்கும். அதுவும் இருவரும் ஒரே இயக்கத்தில் பணியாற்றி னார்கள் என்பது கூடுதல் சிறப்பு. இந்தக் கவிதை எங்கள் உறவினர்கள் வீட்டில் எல்லாம் இடம் பெற்றிருக் கிறது.

** உங்களுடைய வாழ்க்கையில் ஒரு குறையாக எதை எண்ணுகிறீர்கள்?*

எனக்கு திருமணம் ஆவதற்கு முன்பே நம் கட்சித் தலைவர்கள் பலரும் எங்கள் வீட்டிற்கு வந்திருக்கின் றனர். அவர்கள் எங்கள் வீட்டில் சாப்பிட்டு விட்டு, கூட்டத்தில் பேசியதையும் நான் கேட்டிருக்கிறேன். என் திருமணத்திற்குப் பின்னும் பல தலைவர்களை எங்கள் வீட்டில் சந்தித்திருக் கிறேன். எட்டயபுரம் பாரதி விழாவுக்கு தொடர்ந்து சென்று வருகிறேன். ஆனால், தோழர் ஜீவாவை மட்டும் நான் பார்த்த தில்லை. மிகச் சிறப் பாக அவர் பேசுவார் என்று பலரும் சொல்லி யிருக் கிறார்கள். அவருடைய பேச்சையும் நான் கேட்டதில்லை.

ஒரு முறை தூத்துக்குடிக்கு வரும் ஜீவாவை எங்கள் ஊரிலும் பேசுவதற்கு ஏற்பாடு செய்திருந்தனர். அந்த நாளும் வந்தது. அவரை அழைத்து வர மணியாச்சி ரயில்வே ஸ்டேஷ னுக்கு வில் வண்டியை என் அப்பா ஓட்டிச் சென்றார். திரும்பி வரும்போது ஜீவா இன்றி வண்டி வந்தது. தோழர் ஜீவாவுக்கு உடல் நிலை சரியில்லாததால் எங்கள் ஊர் கூட்டத்திற்கு வர இயலாமல் சென்னை சென்று விட்டதாக மேடையில் அறிவித்தனர்.

ஜீவாவைப் பார்க்காததும், அவருடைய பேச்சை கேட்காததும் என் வாழ்வின் பெரும் குறையாகக் கருதுகிறேன்.

நேர்காணலை முடித்துக் கொண்டு வெளியே வந்தேன். ஒரு லட்சிய தம்பதி வாழும் வீட்டை திரும்பிப் பார்த்தேன். வாசலில் 'டாக்டர் ஆர்.ஆண்டாள்' என்ற பெயர் பலகை என் கண்களில் பட்டு ஒரு புதிய செய்தியைச் சொல்லி யது. ஆம்! தோழர் நல்லகண்ணுவும் தோழியர் ரஞ்சிதமும் தங்கள் இரண்டாவது மகள் வீட்டில்தான் வாழ்ந்து கொண்டி ருக்கிறார்கள்!

அடடே! இத்தனை ஆண்டு கால பொதுவாழ்க்கையில் தோழர் ஆர்.என்.கே. வுக்கு தனியாக வீடு எதுவும் இல்லையா? ஏன் இல்லை! கோடான கோடி உழைக்கும் மக்கள் உள்ளங்கள் எல்லாம் அவருடைய இல்லம் தான்!

நேர்காணல்: கே.ஜீவபாரதி

பண்பாளர் நல்லகண்ணு வாழ்க!

எல்லார்க்கும் எல்லாமும்
இங்கு கிடைத்திட
நல்லகண்ணு தந்திட்டார்
நல்லுழைப்பை-பொல்லாரின்
ஏற்றம் பொறுக்காமல்
ஏற்றிட்டார் போர்க்களம்!
மாற்றத்தைக் கண்டது மண்!

உள்ளும் புறமும்
ஒருநிலையில் வாழ்க்கையை
வெள்ளை மனத்தால்
விரித்திட்டார்- குள்ள
மனத்தாரை கூனிக்
குறுகிடச் செய்த
இனியவர் நல்லகண்ணை ஏந்து!

பொதுவுடைமைக் கொள்கை
புனிதமென ஏற்று
எது வரினும் போராடி
இன்றும்- அதிவேகத்
தொண்டுசெய்யும் ஆற்றல்
திறணாளர்! தென்பொதிகை
பண்பாளர் நல்லகண்ணு வாழ்க!

நெல்லை தந்த சான்றோரின்
நீண்ட வரிசையில்
நல்லகண்ணு சேர்ந்தார்
நனிசிறக்க -இல்லார்
விழிப்பெய்த பல்லாண்டு
வாழ்கவென சொன்னோம்
எழுத்தாளர் எல்லாம் இன்று!

அடித்தட்டு மக்களுக்கு
அன்றாட வாழ்வில்
படிக்கட்டாய் வாழ்ந்துபயன்
பட்டார்-நடப்பு
அரசியலில் நல்லகண்ணு
ஆற்றிடும் தொண்டு
உரமாகும் மக்களுக்கே ஓது!



கவிஞர் குமார. சுப்பிரமணியம்

இருள்காலை உதயம் நீ!

ஏழைகளின் இதயம்நீ!
இருள்காலை உதயம்நீ!
தோழர்களின் துணைவன்நீ!
தொண்டறத்தின் சிகரம்நீ!

அலைகடலின் ஆழம்நீ!
அகல்வானப் பரப்பும்நீ!
மலைமுகட்டின் உயரம்நீ!
மாநதியின் ஈரம்நீ!

எளியோரின் இலக்கியம்நீ!
எளிமைக்கு இலக்கணம்நீ!
தெளிவளிக்கும் ஒளிச்சுடர்நீ!
திசைகாட்டும் தத்துவம்நீ!

தாய்நெஞ்சம் கொண்டவன்நீ!
தன்னலத்தைத் தகர்த்தவன்நீ!
தூய்மையின் இருப்பிடம்நீ!
தோற்காத இலட்சியம்நீ!

மார்க்சியம் கற்றவன்நீ!
மானிடரைப் படிப்பவன்நீ!
போர்க்களம் கண்டவன்நீ!
பொதுவுடைமை சமைப்பவன்நீ!

மனிதத்தை மதிப்பவன் நீ!
மடமைகளை எதிர்ப்பவன்நீ!
தனிவுடைமை சிதைப்பவன்நீ!
தலைநிமிர்ந்த இமயம்நீ!

தென்றல்நீ! புயலும்நீ!
தேன்பிழி மகரயாழ்நீ!
இன்றைக்கும் எரிமலைநீ!
இயக்கத்தின் மகுடம்நீ!

வயலுழவர் தொழிலாளர்
வாழ்வுயர்த்தும் போராளிநீ!
வியர்வைக் குலம் உயர்த்த
வியர்வை சிந்தும் உழைப்பாளி நீ!

வறியாரை உயர்த்தும் பார்வை
வர்க்கப்போருடற்றும் பார்வை
சரிநிகர் சமூகப் பார்வை
சாயாத கொள்கைப் பார்வை

நல்லகண்ணு பார்வையன்றோ?
நம்பிக்கைத் தலைவன் அன்றோ?
நல்லொழுக்க நம்பியன்றோ?
நாடுயர்த்தும் தோழனன்றோ?

நாயகன் எண்பதாண்டை
நண்ணினான் நீடு வாழ்க!
ஓயாமல் நமக்கு ழைக்கும்
உயர்குணச் செம்மல் வாழ்க!



கவிஞர் பல்லவன்

தோழர் ஆர்.என்.கே.

இளமைக்கால நினைவுகள்



நம்பற்குரியர் நண்பர் நல்லகண்ணு!

வாத்தியார் ஆர்.எஸ்.ஜேக்கப்

நல்ல கண்ணு, எல்லோருக்கும் தோழர், எனக்கு நண்பர். என்னைவிட சரியாக ஒரு வயதிற்கு மூத்த நண்பர்.

சுதந்திரத்திற்குப் பிறகு தேசிய அரசு போட்ட முதல் சதி வழக்கு ''நெல்லை கம்யூனிஸ்ட் சதி வழக்கு'' ஆகும்.

எழுபது தோழர்களோடு விசாரணைக் கைதியாக சிறையில் வதைந்த மூன்றாண்டுகளும் நல்லகண்ணோடு நண்பராகவே பழகினேன்

1952 ஆகஸ்டில் செஷன்ஸ் கோர்ட் தீர்ப்பு வழங்கியது. நல்லகண்ணுவிற்கு ஆயுள் தண்டனை. எனக்கு விடுதலை.

அதன் பின்பு வாழ்க்கைப் போராட்டம் தொடங்கியது. எனது ஆசிரியர் சர்டிபிக்கேட் பறிமுதல் செய்யப்பட்டிருந்தது. வெளியே வந்த பிறகும் அரசின் நிர்ப்பந்தங்கள் அதிகமாயிருந்தன.

'சிறுவர் ஊழியன்' என்ற பணி எனக்குக் கிடைத்தது. நெல்லை மாவட்ட கிறிஸ்தவப் பள்ளிகள், சபைகள் தோறும் சென்று சமூகப் பிரக்ஞைகளோடு கூடிய ஆன்மீகப் போதனைகள் கொடுத்து வந்தேன்.

என் மனைவி வழியிலான சித்தி திருமதி ராஜம்மாள் ஜெயராஜ் அவர்களுக்கு பாளையங் கோட்டையில் ஒரு காம்பவுண்டிற்குள் இரு வீடுகள் இருந்தன. ஒரு வீட்டில் நாங்கள் இருந்தோம். அடுத்த வீட்டில் அவர்கள் இருந்தார்கள்.

எனக்குப் பெண் குழந்தை பிறந்து திரு முழுக்குக் கொடுக்க இருந்தோம்.

ஏழு ஆண்டுச் சிறைக் கொடுமைகளுக்குப் பிறகு நண்பர் நல்லகண்ணு விடுதலையாக, கட்சிப் பணியை தொடர்ந்தார்.

1957 ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் காலம்.

திருநெல்வேலிக்கு வந்திருந்த நண்பர் நல்லகண்ணு- பாளையங்கோட்டை வடக்குப் படைத் தெருவில் குடியிருந்த எங்கள் வீடு தேடி வந்து விட்டார்.

நான் வெளியூர் போயிருந்தேன்.

சித்தி வராண்டாவில் இருந்தார்கள். சற்றுக் கடுமையான ஆள். கிறிஸ்தவ பக்தியில் மிகவும் வேகமாக இருப்பார்கள். கிறிஸ்தவ ஆசாரங்களை அப்படியே கடைப்பிடிப்பார்கள். வெள்ளைக்காரன் இந்த நாட்டை விட்டுப்போன கோபம் அவர்களுக்கு இன்னும் தீரவில்லை. அவர்கள் வீட்டில் எட்டாம் எட்வர்ட் படம் இன்றும் தொங்குகிறது.

அந்த வீட்டில் அவர்களின் ஆதிக்கம் அதிகம். மகனின் முற்போக்கான செயல்கள் அவர்களுக்குப் பிடிக்காது.

சித்தியோ, என் மனைவியோ நல்ல கண்ணைப் பார்த்ததில்லை. ஆனால் என் மனைவியிடம் நல்ல கண்ணு பற்றி சொல்லி இருக்கிறேன்.

இனி அவர்களின் உரையாடல்களைக் கேட்போம்:

சித்தி: ஐயா வாங்க, யார் வேணும் உங்களுக்கு?

நல்லகண்ணு: வாத்தியார் ஆர்.எஸ்.ஜேக்கப் வீடு தானே...

சித்தி: இதே தான், வாங்க.

நல்லகண்ணு: வாத்தியார் இருக்காங்களா?

சித்தி: இங்க வாங்க, நிக்றீங்களே....

அவன் வெளியூர் போயிருக்கான், வர இருட்டாகுமே...

(அதற்குள் என் மனைவி வந்து, வரவேற்று, வணக்கம் சொல்லி ஹார்லிக்ஸ் கொடுக்கிறாள்)

நல்ல கண்ணு ஒரு நாற்காலியிலும் சித்தி ஒரு நாற்காலியிலும் இருக்கிறார்கள்.

நல்லகண்ணு: வீட்டைச் சுத்தமாக வச்சிருக்கீங்களே....

சித்தி: இதென்ன சுத்தம்? நான் மூணாறில் இருக்கும் போது வீட்டைப் பார்த்தால் விழுங்கிரலாம் போல இருக்கும். இதென்ன ஊரு, வீட்டைச் சுத்தி, ஒரே குப்பையும் கூளமும்தான்...

அது இருக்கட்டும். நீங்க 'வாத்தியார்'ன்னு சொன்னீங்களே, அது எனக்குப் பிடிக்கல. அவன் சில்ரன் மிஷனெரியா இருக்கான். அந்தக்காலம் வெள்ளைக்கார மிஷனெரிகள் இந்த நாட்டுக்கு வந்து கல்வி, மருத்துவம் என்று எவ்வளவு செய்திருக்காங்க.

இதோ நமக்கு எதிரில் தெரியுது பாருங்க அது மேரி ஆர்டன் பள்ளி, இங்கிலாந்திலிருந்து பணத்தைக் கொட்டி இந்த இடத்தில் கோயில் கட்டாம பள்ளிக்கூடம் வச்சாங்க. நூற்று ஐம்பது வருடமா... இன்னிக்க வரையில வேற பள்ளிக்கூடம் கிடையாது. இந்த குருட்டு ஜனங்களுக்குக் கல்வி கிடைச்சது. கண்ணத் திறந்து விட்டாங்க...

ஐயோ.. நான் பேசிட்டே இருக்கேன்... ஹார்லிக்ஸ் ஆறுமுன் குடியுங்க...

(நல்லகண்ணு புன்முறுவலோடு கேட்டுக்

கொண்டிருந்தார், சித்திக்கு நல்ல கண்ணை ரொம்பப் பிடித்துவிட்டது)

நல்லகண்ணு: குழந்தை பிறந்தவுடன் உங்க மகன் எனக்குக் கடிதம் எழுதி இருந்தாங்க... இந்தப் பக்கம் வந்தேன், அதான்...

சித்தி: உங்க வாத்தியார் ரொம்ப மோசம்....

நல்லகண்ணு: ஐயோ... ரொம்ப நல்லவங்க, ஏன் அப்படிச் சொல்றீங்க?

சித்தி: இங்க பாருங்க,கிறிஸ்துமஸ் நாளில் பிள்ளைக்குப் பேர் வைக்கணும், பார்வதின்னு ஒரு இந்துப் பேர வைக்கப் போறானாம், சொன்னால் கேக்க மாட்டேங்றான்...

நல்லகண்ணு: அப்படி இல்ல, ஜெயபாரதின்னு வைக்கப் போறதா எனக்கு எழுதி இருந்தாங்க. பாரதி விழா நாளில் கல்யாணம், அடுத்த பாரதி விழா நாளில் குழந்தை பிறந்திருக்கு. அதனால பேர் பாரதின்னு தெளிவா எழுதி இருந்தாங்களே...

சித்தி: பாரதி...பார்வதி எல்லாம் ஒண்ணுதானே... பைத்தியம்.

நல்லகண்ணு: பாரதி மகா கவிஞர், தேச விடுதலைக்காகப் பாடிய மக்கள் கவிஞர், அவர் பிறந்த ஊர் எட்டையபுரம், உங்க மகன் ஊருக்குப் பக்கம். மேலும் உங்க மகனுக்குப் பாரதின்னா ரொம்பப் பிரியம்.

சித்தி: ஓ... நீங்களும் கம்யூனிஸ்ட்டா? பேதுரு, பவில், சீலா போன்ற பக்திமான்கள் இயேசுவுக்காக ஜெயிலுக்குப் போனாங்க. இவன் என்னடான்னா நாட்டு மக்களுக்காக ஜெயிலுக்குப் போனானாம். இந்த மக்களை திருத்த முடியுமா?

உங்க கூட்டாளிட்ட கொஞ்சம் சொல்லுங்க, பார்வதிங்ற பேர் வேண்டாம். நல்ல இங்கிலீஸ் பேரா பார்த்து வைக்கச் சொல்லுங்க.. வயலட், பிள்ளய தூக்கிட்டு வந்து காட்டு.

(என் மனைவி வயலட், பிள்ளையைக் கொண்டு வந்தாள்- நல்லகண்ணு பிள்ளையைக் கையில் வாங்கி ஜெயபாரதி என்று திருத்தமாகச் சொல்லி கன்னத்தில் தட்டிக் கொடுத்து ஆசீர்வதித்தார்)

நல்லகண்ணு: அம்மா, நான் வருகிறேன்.

என் மனைவி: இருந்து சாப்பிட்டுப் போகலாமே

நல்லகண்ணு: எனக்கு அவசர வேலை இருக்கு, நாளை மாலை ரயிலுக்கு சென்னை போகிறேன்.

பின்குறிப்பு:

பின்பு நான் பாதிரியார் ஆகாமல் பாளையில் மேல்நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியராகப் பணி புரிந்து ஓய்வு பெற்றேன். முழு நேர இலக்கியப் பணி செய்து வருகிறேன். ஏழு பிள்ளைகளின் பெரிய குடும்பத் தலைவன்.

பின் நாட்களில் நல்லகண்ணு என்னைக் காணும் போதெல்லாம் இந்தப் 'பார்வதி' கனதியைச் சொல்லி மகிழ்வார். சித்தியையும் அடிக்கடி விசாரிப்பார்.

என் மகள் 'ஜெயபாரதி' என்ற பெயரிலேயே இரண்டு பிள்ளைகளுடன் குடும்பமாகச் சென்னையில் இருக்கிறார்கள். கணவர் வங்கியில் பணிபுரிகிறார்.

★★★

நெல்லை கம்யூனிஸ்ட் சதிவழக்கில் 1950களில் எழுபதிற்கும் மேற்பட்ட தோழர்கள் வெஞ்சிறையில் வெந்தனர்.

1952 ஆகஸ்ட், செசன்ஸ் கோர்ட் ஜட்ஸ்மென்ட நாள். சிறை நண்பர் வேலாயுதத்தின் குடும்பம் நினைவிற்கு வந்தது.

சோகமே உருவான வேலாயுதத்தின் குடும்பம். அவரது தர்மபத்தினி பாப்பு அம்மாள் இடுப்பில் கைக்குழந்தையோடும் கையில் சிறுமியோடும் வரும் துயரக் காட்சி. அந்த அம்மாவின் வருகையைக் கண்ட அனைத்துத் தோழர்களின் உள்ளமும் உருகுகிறது. வேலாயுதம் சிறைக்கு வந்த பிறகு பிறந்த இடுப்பிலுள்ள ஆண் மகனை வேலாயுதம் பாசத்தோடு பார்க்கிறார். அந்தக் கோலத்தைக் கண்ட தோழர் நல்லகண்ணின் கண்கள் நனைகின்றன. கண்ணீர் துளிகள் சொட்டுச் சொட்டாய் விழுகின்றன.

நியாயத் தீர்ப்பு நாளில் நடந்த இந்தக் காட்சிகள் இன்றும் என் மனதில் பசுமையாய் உள்ளன.

ஆயுள் தண்டனை பெற்ற நல்லகண்ணு உட்பட ஒன்பது பேரில் வேலாயுதமும் ஒருவர்.

எனவே என் விடுதலையை என்னால் அனுபவிக்க முடியவில்லை.

எனது ஆசிரியர் சர்டிபிகேட் பறிபோயிருந்தது வேலை கிடைக்கவில்லை. இறுதியாக 1957ல் நெல்லைத் திருமண்டல கிறித்துவ ஆதீனத்தின் மூலம் சிறுவர் திருப்பணியை மேற்கொண்டேன் (Children's Missionary).

நெல்லை மாவட்டத்தில் நூற்றுக்கணக்கான கிராமங்களில் சுற்றி அலைந்தேன். ஒவ்வொரு கிராமச் சூழல்களையும் நன்கு புரிந்து தெரிந்து - அந்த மக்களோடு பழகி நூற்றுக் கணக்கான சிறுகதைகளை வடித்தேன்.

அம்பை வட்டம் செல்லும் போது வேலாயுத்தின் குடும்பச் சூழல் கண்டு மனம் நொந்தேன்.

தோழர் வேலாயுதம் 1955 அக்டோபர் 26ம் தேதி தாம்பரம் காசநோய் மருத்துவமனையில் வாளி வாளியாக இரத்தம் கக்கி மரித்துப்போன சேதி கேட்டு அலறி அழுதேன்.

ஐயகோ, அவரது பிள்ளைகள் அநாதைகளாயினர்.

சிறையில் தோழர் நல்லகண்ணு என்னிடம் சொன்ன செய்திகள் நினைவிற்கு வந்தன:

''அம்பை ரயில் நிலையத்தில் இறங்கி வானகக் குளம் எல்லைக்குள் நுழையும்போது மகிழ்வுடன் வரவேற்று தோழர்களின் வயிற்றை நிறைத்து அனுப்பும் முதல்வீடு தோழர் வேலாயுதம் வீடே. நெருக்கடியான காலங்களில் தலைமறைவுத் தோழர்களுக்கு புகலிடம் கொடுத்த குடும்பம் கட்சிக்காக சர்வபரித்தியாகம் செய்த குடும்பம்''

என் நெஞ்சு வெடித்து விடும் போலிருந்தது. தோழர் நல்ல சிவம் பிறந்த பிரம்மதேசம் ஊரில் உள்ள கிருத்துவர் கோயிலினுள் அமர்ந்திருந்து - இரவு முழுவதும் விழித்து வீரத்தியாகி வேலாயுதத்தின் சரிதையை எழுதினேன்.

''தியாகி வேலாயுதம்'' என்று மகுடமிட்டு சிறு நூலாக்கினேன். 1957ஆம் ஆண்டில் நூலை வெளியிட்டோம். நூல்கள் அனைத்தையும் நண்பர் நல்லகண்ணுவிடம் ஒப்படைத்தேன். அவர்கள் நூலை விற்று முழுத் தொகையையும் தியாகி வேலாயுதத்தின் மகள் சரஸ்வதி திருமணத்திற்கே செலவிட்டார்கள்.

தாயும் - தந்தையும் இல்லாத சரஸ்வதியின் திருமணம் கட்சித் திருமணமாக ஜே, ஜே என்று நடந்தது.

'நம்பற்குரிய நல்லகண்ணு!'

நாணயமிக்கவர் நல்லகண்ணு! என்று நினைத்துப் பெருமிதம் கொண்டேன்.

குறிப்பு: *4.9.2004* அன்று பாளை மார்க்கெட் மைதானத்தில் நடந்த 'கலை இரவு' வேளையில் வேலாயுதம் மகள், மருமகன் என்று குடும்பமாக வந்திருந்தனர். நல்லகண்ணு அவர்களை எனக்கு அறிமுகம் செய்தார். அந்த மகிழ்ச்சியை வர்ணிக்க முடியாது.

❖

தோழர் நல்லகண்ணுவும் நானும்!

சு. பலவேசம் செட்டியார்

நான் *1939*ல் நெல்லை மாவட்டம் ஸ்ரீவைகுண்டத்தில் உள்ள காரநேஷன் உயர்நிலைப் பள்ளியில் இந்திமொழி ஆசிரியராகப் பணியாற்றி வந்தேன். அக்காலத்தில் ஆங்கில ஆட்சி கொடி கட்டிப் பறந்ததால் அரசியலாரைத் திருப்திப் படுத்த ''காரநேஷன்'' உயர்நிலைப் பள்ளி என்று பெயரிடப்பட்டிருந்தது. இந்தி மொழி முதல் பாரத்திலிருந்து 3வது பாரம் (Form) வரை இருந்தது. அக்காலத்தில் முதலாவது பாரம் என்பது இன்றைய ஆறாம் வகுப்பு. நல்லகண்ணு அப்பொழுது மூன்றாம் பாரம் படித்துவந்தார். இந்தி மொழி கட்டாயமாக இல்லாத போதும் அம்மொழியை ஆர்வமாகப் படிப்பார். வகுப்பிலும் மிக அமைதியாக இருப்பார்.

1939 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 2 ந் தேதி இரண்டாம் உலகப் போர் தொடங்கியது. இது ஆதிக்க நாடுகள் உலகைத் தங்கள் நலனுக்காகப் பிரித்துக் கொள்வதற்காக ஏற்பட்ட போராகும். ஜெர்மன் நாடு உலகச் சந்தையில் தனக்கு இடம் வேண்டுமென்பதற்காகவே போரில் இறங்கியது. ஆகவே அது ஏகாதிபத்தியப் போர். அதிவிரைவில் ஜெர்மனி இங்கிலாந்தைத் தவிர மற்ற மேற்கு நாடுகளின் தடைகளைத் தகர்த்தெறிந்து கிழக்கு நோக்கிப் பாய்ந்தது.

1941 ஜூன் 22ல் ஹிட்லரின் நாஜிப்படை சோவியத் யூனியன் மீது படையெடுத்தது. இந்நிகழ்ச்சி உலகத்தையே திகைக்க வைத்தது. இதனால் போரில் திருப்பம் ஏற்பட்டது. பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் மற்றும் பல நாட்டுத் தலைவர்கள் கூடி விவாதித்து இது ''மக்கள் யுத்தந்தான்'' என்ற முடிவுக்கு வந்தனர். இந்தியாவிலுள்ள கம்யூனிஸ்ட் தலைவர்கள் (பலர் சிறையில் இருந்தனர்) மறைமுகமாகக் கூடி கிட்டத்தட்ட ஆறு மாதங்கள் வரை விவாதித்து முடிவுக்கு வந்தனர்.

''இது மக்கள் யுத்தந்தான். மக்கள் யுத்தத்தில் இந்திய மக்களின் பங்கைச் ஆற்றச் செய்க'' எனக் குரல் கொடுத்தனர்.

எனவே நாம் யுத்தத்தை எதிர்க்காமல் ஜெர்மனிக்கு எதிராகத் தீவிரப்படுத்த வேண்டுமென்றனர். இதனை அறிந்த ஆங்கில அரசாங்கம் சிறையிலிருந்த கம்யூனிஸ்ட் தலைவர்களை விடுதலை செய்தது. பலர் தங்கள் சொந்த மாவட்டத்திற்கு வந்து கட்சியை அமைக்கத் தொடங்கினர்.

நெல்லை மாவட்டத்தில் தோழர்கள் ஐ.வி. இராமகிருஷ்ணன், தூத்துக்குடி சங்கர நாராயண பிள்ளை, மீனாட்சிநாதன், பி. சீனிவாசன், ஏ.நல்ல சிவன், பாப்பாங்குளம் சொக்கலிங்கம் பிள்ளை, அம்பை ஏ.சுப்பையா முதலிய தோழர்கள் முக்கிய மானவர்கள். தோழர் ஐ. இராமகிருஷ்ணன் எனது பள்ளித் தோழர். மாணவர்களாக இருக்கும் போதே நாங்களிருவரும் தேசீய இயக்கத்தில் ஈடுபட்டு பல போராட்டங்களை நடத்தி யிருக்கிறோம்.

தோழர் மீனாட்சி நாதன் நெல்லை மாவட்டத்தின் அமைப்பாளராக இருந்தார். அக்காலத்தில் கம்யூனிஸ்ட் தலைவர்களின் நடை உடையே தனி. அரைக்கால் கட்டை, மேலே அரைக் கைச் சட்டை, கையில் ஒரு தோல் பையுடன் வருவார் கள். இது ஒரு

புதுமையாய் இருக்கும். தோழர் மீனாட்சிநாதன் தன் சொத்துக்கள் அனைத்தையம் கட்சிக்குக் கொடுத்தவர். ஸ்ரீவை குண்டத்தில் அவரது உறவினர் பலருண்டு. ஆயினும் கட்சி வேலையாகத் தான் வருவார். நாங்கள் அவருடன் பழகி கட்சிக் கொள்கையைப் பற்றித் தெரிந்து கொண்டோம். நான் ஆசிரியராக இருந்ததால் மறைமுக அமைப்பாளர் மாதிரி செயல்பட்டு வந்தேன்.

தோழர் நல்லகண்ணு உயர்நிலைப் பள்ளிக்கல்வி முடித்து விட்டு திருநெல்வேலி இந்துக் கல்லூரிரியில் மாணவரானார். அவருடன் வி.இராமசுப்பிரமணியன் என்றும் தோழரும் படித்து வந்தார். இவர்கள் காலை இரயிலில் நெல்லை சென்று மாலை திரும்புவர்.

ஸ்ரீவைகுண்டத்தில் ஒரு பழைய வாசகசாலை இருந்தது. அங்கு ஒன்றிரண்டு தினப் பத்திரிகைகள் வரும். செய்தி படிக்க அங்கு போவோம். நல்லகண்ணுவும் அங்கு வருவார். அப்பொழுதெல் லாம் அவர் பக்தி நூல்களையும் குறிப்பாக சுத்தானந்த பாரதி எழுதிய பாடல்களை படித்து வருவார். நான் அவருடன் விவாதிப்பேன். சோஷலிஸத்தின் பெருமை யையும் சோவியத் யூனியனின் வளர்ச்சியைப் பற்றியும் கூறுவேன்.

அக்காலத்தில் வே.சாமிநாத சர்மா என்ற எழுத்தாளர் பிரபலமாயிருந்தார். அவர் எழுதிய ''சோவியத் ருஷ்யா'' ''காரல் மார்க்ஸ் வரலாறு'' முதலிய நூல்களை அவருக்குக் படிக்கக் கொடுப்பேன். அவற்றை ஆழ்ந்து படிப்பார். மேலும் அவரும் நண்பர்களும் தினமும் நெல்லை சென்று வந்ததால் பல தலைவர்களின் தொடர்பு ஏற்பட்டது. மறைந்த தோழர் ப.மாணிக்கம் மாணவர் இயக்கத்தை வலுப் படுத்துவதற்காக நெல்லை வந்தார். அவருடன் சிந்துபூந்துறை அண்ணாச்சி சண்முகம் பிள்ளை, திரிகூட சுந்தரம் பிள்ளை என்ற வக்கீல் முதலி யோருடனும் தொடர்பு கொண்டு உறுதியான தோழரானார்.

ஸ்ரீவைகுண்டத்தில் பொதுக்கூட்டங்கள் நடத்துவோம். நல்லகண்ணு, கா.முத்தையா, இராமசுப்பிரமணியன் மற்றும் பலர் ஒத்துழைப் பர். மேஜை நாற்காலி எடுத்துப் போடுவது, கூட்டத்தை அறிவிக்க மெகா போன் செய்வது, பெட்ரோமேக்ஸ் விளக்கு கொண்டு வருவது முதலிய எல்லா வேலைகளையும் நல்லகண்ணு சேர்ந்து செய்வார். எதிலும் தற்பெருமை பார்ப்ப தில்லை. யாரையும் வேலை வாங்குவதில்லை. தானே முன்னின்று செய்வார்.

ஸ்ரீவைகுண்டத்தில் ''உணவுக் கமிட்டி''

இரண்டாம் உலகப் போர் நடந்துவந்ததால் தாமிர வருணிக்கரையிலுள்ள முப்போகம் விளையும் ஸ்ரீவைகுண்டத்திலும் உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. ''நெல் விலை ஏறும்'' என்ற எதிர்பார்ப்பில் பெருநிலச் சொந்தக்காரர்கள் நெல்லைப் பதுக்கி வைத்தனர். ''ஜனசக்தி'' வார ஏட்டில் ஊர் ஊருக்கு ''உணவுக் கமிட்டி'' எற்படுத்தும்படி தோழர் ஆர்.கே.கண்ணன் கட்டுரை எழுதி வந்தார். நாங்களும் ''உணவு கமிட்டி'' ஏற்படுத்தினோம். எங்களுடன் முத்துரெங்க நாயுடு என்ற காங்கிரஸ்காரரும் ஒத்துழைத்தார். அவர் மிகுந்த ஆர்வமுள்ளவர். ஆங்கில அரசு பொது விநியோகத்திற்காக எங்கிருந்தோ கல்மண் கலந்த, தீட்டாத அரிசியை அனுப்பும்.

ஒரு சமயம் யாரும் சாப்பிட முடியாத மக்கி, உளுத்துப் போன சோளத்தை மக்களுக்கு விநியோகிக்கத் தொடங்கினர். அச்சோளத்தை கோழி, குருவி கூடத் தின்னாது. சாப்பிட்ட சிலருக்கு வயிற்றோட்டம் ஏற்பட்டது.

அப்பொழுது தோழர் பாலதண்டாயுதம் இம்மாவட்டத்திற்குக் கட்சி அமைப்பாளராக சென்னையிலிருந்து அனுப்பப்பட்டார்.

அவர் பல ஊர்களில் பொதுக்கூட்டத்தை நடத்தி வந்தார். இச்சோளத்தை எதிர்த்து, ''உளுத்த சோள எதிர்ப்பு தினம்'' நடத்தும்படி பணித்திருந்தார். அத்தினத்தில் சுவரெல்லாம் உளுத்த சோள எதிர்ப்பு தினக் கோஷங்கள் எழுதப் பட்டன. மாலையில் பொதுக்கூட்டம், ஊர்வலம். ஊர்வலத்தில் பொதுமக்கள் திரண்டு வந்தனர். அவ்வூர்வலத்திற்கு எல்லா ஏற்பாடுகளையும் நல்லகண்ணுவே செய்தார். ஊர்வலம் முடிந்ததும் பொதுக்கூட்டம். சரியான கூட்டம். பாப்பாங் குளம் சொக்கலிங்கம் பிள்ளையின் அனல் கக்கும் பேச்சு. விரிவாகப் பேசிவிட்டு இறுதியில் ''மறுநாள், சோளத்தை விநியோகித்தால் அதை வாங்கி தாசில்தார் காலடியில் கொண்டு கொட்டுங்கள்'' என அறைகூவல் விடுத்தார்.

ஸ்ரீவைகுண்டம், தாலுகா தலைநகர். மறுநாள் தாசில்தார் எங்களையெல்லாம் அலுவலகத்திற்கு அழைத்து ''நாங்கள் இனிமேல் சோளம் விநியோகிக்க மாட்டோம். நல்ல அரிசி அனுப்புகிறோம். நீங்கள் ஒன்றும் செய்யக் கூடாது'' என்று கேட்டுக் கொண்டதுடன் ரேஷன் கார்டு விநியோகிக்கும் பொறுப்பை உங்களிடமே ஒப்படைக்கிறோம் என்று கூறி வெற்றுக் கார்டுகளையும் கொடுத்து இரவில் பெட்ரோமாக்ஸ் விளக்குக்கும் ஏற்பாடு செய்தார். விடிய விடிய உணவுக் கார்டுகள் வழங்கப்பட்டன. அதிலும் நல்லகண்ணு சிறப்பாக ஒத்துழைத்தார். அச்சமயத்திலிருந்து பொது விநியோகத்திற்கு வரும் எல்லாப் பொருள்களும் எங்களிடமே உணவுக் கமிட்டியிடமே ஒப்படைக்கப்பட்டன. இதைக் கண்டு சில காங்கிரஸ்காரர்களுக்கு கோபம், இதை வெளிப்படையாகவே கூறுவர். கட்சிக்கு மக்கள் மத்தியில் நல்ல செல்வாக்கு ஏற்பட்டது.

வர்த்தகக் குமாஸ்தாக்கள் சங்கம்

இந்தக்காலம் மாதிரி அப்பொழுதெல்லாம் கடைச் சிப்பந்திகளுக்கு வார விடுமுறை கிடையாது. அவர்கள் எங்களிடம் இவ்விஷயத்தைக் கூறி ஒரு வழி காட்டச் சொன்னார்கள். ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று ஒருவரும் கடைக்குச் செல்லக்கூடாது எனத் தீர்மானிக்கப்பட்டது. குறிப்பிட்ட தினத்தன்று ஒருவரும் கடைகளுக்குச்



செல்லவில்லை. எல்லோரும் சங்க அலுவலகத் தில் வந்து உட்கார்ந்து கொண்டனர். அப்பொழுதி லிருந்து வார விடுமுறை தருவதாக கடைச் சொந்தக்காரர்கள் ஒப்புக்கொண்டனர். ஸ்ரீவை குண்டத்தில் ''மாவட்ட வர்த்தகக் குமாஸ்தாக்கள்'' மாநாடு நடந்தது. தோழர் பாப்பாங்குளம் சொக்க லிங்கம் பிள்ளை தலைவர். பாலதண்டாயுதம் சிறப்புச் சொற்பொழிவாளர். பல இடங்களிலிருந்து பிரதிநிதிகள் வந்திருந்தனர். இதிலெல்லாம் நல்லகண்ணு முன்னின்று செயல்பட்டார்.

ஸ்ரீவைகுண்டத்தில் ஊர்காவல்படை

இரண்டாம் உலகப்போர் நடந்து வந்த வேளையில் ஊர்முழுவதும் திருட்டுகள் நடந்து வந்தன. மக்களிடையே பீதி நிலவியது. தோழர்கள் கூடி இரவு நேரங்களில் தெருக்களிலும் சந்த பொந்துகளிலும் பெட்ரோமாக்ஸ் விளக்குடன் ''ரோந்து'' வரத் தீர்மானித்தோம். அதன்படி எல்லாத் தெருக்களிலும் இரவில் சுற்றிச்சுற்றி சத்தம் கொடுத்து வந்தோம். மக்களும் வேண்டிய உதவி செய்தனர். டீ, சிற்றுண்டி தயாரித்துக் கொடுத்தனர். மக்களின் எதிர்பார்ப்பை அறிந்து முன்னின்று வேலை செய்தால் நமக்கு ஆதரவு தரத்தான் செய்கிறார்கள்.

1942 ஆகஸ்ட் கிளர்ச்சியின் விளைவாக காங்கிரஸ் தலைவர்கள் சிறையில் இருந்தனர். தேசிய இயக்கம் ஸ்தம்பித்தது. மாவட்ட, நகர காங்கிரஸ் கமிட்டி அலுவலகங்கள் மூடப்பட்டன. இதனால் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைக்குழு, ஒரு அகில இந்திய தேசிய இயக்கம் முடங்கிவிடக் கூடாது என்ற முடிவுக்கு வந்து இந்தியா முழுவதும் அவ்வியக்கத்தை மீண்டும் புதுப்பிக்கக் கம்யூனிஸ்டு களுக்கு கட்டளையிட்டது.

ஆனால் வெளியில் இருந்த காங்கிரஸ்காரர் களோ கம்யூனிஸ்டுகளை திட்டியும், 42 இயக்கத் தைக் காட்டிக்கொடுத்த துரோகிகள் என்று தூற்றியும் வந்தனர். ஆனாலும் சில தலைவர்களைச் சந்தித்தோம். அப்பொழுது சிலர் சரியான பதில் கூறவில்லை. ஆங்கில அரசின் அடக்குமுறைப் பயத்திலிருந்து அவர்கள் மீளவில்லை.

திருநெல்வேலி மாவட்டக் காங்கிரஸின் பிரபல தலைவராகிய திரு கே.டி.கோசல்ராம் சிறையி லிருந்து விடுதலை பெற்று திருச்செந்தூர் செல்லும் ரயிலில் தன் ஊருக்குச் செல்வதாக தகவல் வந்தது. அவரை நல்லகண்ணு தலைமையில் ஸ்ரீவைகுண்டம் இரயில் நிலையத்தில் மாலையிட்டு வரவேற்றோம்.

1945 என்று நினைக்கிறேன். காந்தி பிறந்த நாள் விழாவைக் கொண்டாடத் தீர்மானித்தோம். விழா விற்கு அழைக்க திரு எஸ்.டி.ஆதித்தன், திரு சின்னத் தம்பித் தேவர் (இருவரும் தனிநபர் சத்தியாகிரத்தில் சிறை சென்றவர்கள்) வீட்டிற்கு சென்றோம். ''நீங்கள் விழா நடத்துங்கள். நாங்கள் ஊர்வலத்தை வீட்டு மாடியிலிருந்து பார்த்துக் கொள்கிறோம்.'' என்றனர்.

ஆனால் திருவேங்கடம் பிள்ளை, முத்துரெங்க நாயுடு போன்றவர்கள் விழாவை உடனிருந்து சிறப்பித்தனர்.

தோழர் நல்லகண்ணு எளிய வாழ்க்கை நடத்துபவர். கதர்தான் அணிவார். அவர் கோபப் பட்டு நான் பார்த்ததில்லை. தன் உடல் நலனைப் பற்றி யோ, தன்னை அழகுபடுத்தும் எண்ணமோ இல்லாதவர். நான் எது சொன்னாலும் தட்டாது செய்துமுடிப்பார்.

ஸ்ரீவைகுண்டத்தில் வைகுண்ட ஏகாதேசித் திருவிழா, சிறப்பாக நடக்கும். அதிகக் கூட்டம் வரும். அன்று கட்சிக்காக உண்டியல் ஏந்தி வசூலிக்க வேண்டுமென்று அவரிடம் கூறினேன். அவர் தன் சகதோழர்களுடன் உண்டியலைக் குலுக்கிக் கொண்டு அங்குமிங்கும் ஓடி ஓடி வசூலித்தது இன்றும் என் கண் முன் நிற்கிறது. கொஞ்சம்கூடக் கூச்சமின்றி செய்தார். சில காங்கிரஸ் காரர்கள் உண்டியல் தூக்கிக்கட்சி என ஏளனம் செய்தனர்.

சென்னை ''ஜனசக்தி'' அலவலகத்திற்கு வரும்படி அவரை ஜீவா அழைத்திருந்தார். நான் அதற்கு வேண்டிய செலவுக்குக் கொடுத்து இரயில் மூலம் நல்லகண்ணுவை அனுப்பி வைத்தேன். ஆனால் அங்கு அவருக்குக் கொடுக்கப்பட்ட வேலை பிடிக்காமல் திரும்பி வந்துவிட்டார். கொஞ்ச நாட் கழித்து திரும்பவும் அனுப்பி வைத்தோம்.

தோழர் நல்ல நல்லகண்ணு மாநிலச் செயலாளரான பின்கூட என்னிடம் மிகவும் அன்பும் மரியாதையும் வைத்திருந்தார். 1995 - 96ம் ஆண்டுகளில் நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர் மாவட்டங்களில் ஜாதிக்கலவரம் ஏற்பட்டது. அதில் அவரது மாமனார் கொலை செய்யப்பட்டார். இருந்தும் சில நாட்களில் ''ஜாதி நல்லிணக்கப் பாதயாத்திரை'' மேற்கொண்டார். அச்சமயம் நான் இராஜபாளையத்தில் இருந்தேன். அங்கு நடத்த ஊர்வலம், பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டேன். ஏதோ அவரிடம் சொல்வதற்காக மாநிலச் செயலாளர் என்ற நினைவில்லாமல் ''நல்லகண்ணு'' என்று கூறி அழைத்துவிட்டேன். ஆனால் அவரோ சிறிதும் தயக்கமின்றி வழக்கம் போல் ''சார்'' என்று என்னருகே வந்தார். சிறிது நேரத்தில் நான் எனது தவறை உணர்ந்தேன். அவ்வளவு பாசமுள்ளவர். கர்வம் என்பது எது என்றறியாதவர். எண்பது ஆண்டிலும் இளையோனாய் இருக்க வாழ்த்துகிறேன்.

❖

நல்லகண்ணு சித்தப்பா!

கேப்டன் பாரதி ராமநாதன்

ஒரு நாள் காலை சுமார் 4 மணியிருக்கும். அப்போது எனக்கு 5 வயதிருக்கலாம். அப்போது நாங்கள் திருநெல்வேலியில் சந்திப் பிள்ளையார் கோயில் தெருவில் குடியிருந்தோம். என் அம்மா அவசரமாக என்னை எழுப்பினார்கள். ஹாலில் ஒளி அதிகமாக இருந்தது. அங்கு நாற்காலியில் உயரமான ஒரு மனிதர் அமர்ந்திருந்தார். வெள்ளை வேட்டியும் வெள்ளை சட்டையும் போட்டிருந்தார். என்னை அம்மா அவரிடம் கொடுக்க அவர் மடிமீது வைத்தக் கொண்டு கன்னம் வலிக்குமாறு பல முறை கொஞ்சினார். மெதுவாக கீழே இறங்க முயற்சிக்க இன்னும் இறுகப் பிடித்துக் கொண்டார். அம்மா முகத்திலும் அப்பா முகத்திலும் சொல்ல முடியாத மகிழ்ச்சி தெரிந்தது. வெளியில் நிறைய ஆட்கள். சிறிது நேரம் கழித்து அந்த விருந்தினர் போன பின்பு அம்மா 'அவர்தான் உன் சித்தப்பா, நீ பிறக்குமுன்பே ஜெயிலுக்குப் போனவர்' என்று சொன்னார்கள். என் சித்தப்பாவின் முதல் அறிமுகம் எனக்கு இதுதான் (என் அப்பாவின் அடுத்த தம்பி).



என் வீட்டில் இருக்கும் அத்தனை பையன்களை விடவும் என்னிடம் எப்போதும் மிகுந்த அன்பு கொண்டிருந்தார். ஒரு வேளை என் பெயர் 'பாரதி' என்பதாலும் அவருக்கு பாரதியார் ஒரு லட்சிய புருஷனாக இருந்ததால் கூட இருக்கலாம்.

என்னுடைய தாத்தா (நல்லகண்ணுவின் அப்பா) எப்போதும் கோவிலில் இருப்பார். தாத்தா மடியில் உட்கார்ந்து கொண்டு தாத்தா சித்தப்பா பற்றி பேசும் போதெல்லாம் ''என்ன தப்பு பண்ணியதற்காக சித்தப்பாவை ஜெயிலில் அடைத்தார்கள் தாத்தா'' என்று கேட்பேன். என் தாத்தா டால்ஸ்டாய் மாதிரி நீண்ட தாடி வைத்திருப்பார்.

தாத்தா தன்னுடைய நீண்ட தாடியை தடவி விட்டுக் கொண்டே எங்கோ பார்த்தபடி அவன் ஒரு தப்பும் பண்ணவில்லையடா. ஏழை மக்களுக்காக அவன் சிவப்பு கட்சியில் சேர்ந்தான். அதனால்தான் அவனை பிடித்துக் கொண்டு போனார்கள் என்பார், வேதனை மிகுந்த குரலில். ''உன் சித்தப்பன் ரொம்ப நல்லவன்'' என்று 2 , 3 முறை கூறுவார். அப்போது எனக்கு எதுவும் விளங்கவில்லை. சுமார் 20 வருடம் கழித்துத்தான் நிறைய தெரிந்து கொண்டேன்.

என் தாத்தாவும் மிகவும் வைராக்கியமுடையவர். மிகுந்த பக்திமான். கடைசி 20 வருட காலத்தை எங்கள் குலதெய்வத்தின் கோயிலிலேயே கழித்தார். ஒருமுறை எண்ணெய் தேய்த்துக் கொண்டு, வீட்டில் ஆட்டுக்கறி குழம்புக் கொதிக்க, குளிப்பதற்கு தயாராகிக் கொண்டு இருந்தார். அப்போது என் அப்பா, ''அவன் ஏழை எளிய மக்களுக்காக ஜெயிலில் களி தின்று கொண்டிருக்கிறான். இங்கு எண்ணெய் குளியல், ஆட்டுக்கறி'' என்று திட்டி விட்டுப் போய்விட்டார். கடைசியில் மரணப் படுக்கையில் சுமார் 40 வருடம் கழித்து இறக்கும் வரை என் தாத்தா அன்றிலிருந்து, எண்ணெய் தேய்த்து குளிப்பதையும், அசைவம் உண்ணுவதையும் விட்டு விட்டார்!

அடிக்கடி இந்தியாவின் பல இடங்களுக்கு போகும் போது மறக்காமல் எனக்கும், என் அக்காவுக்கும் சித்தப்பா ஏதாவது ஒரு நல்ல பொருள் வாங்கி வருவார். அவருடைய எளிய வாழ்விலும் எங்களுக்காக ஒரு சிறிய பணத்தை செலவு செய்து வாங்கி வருவது, இப்போதும் ஆச்சரியத்தை தருகிறது. ஒரு தடவை பம்பாயில் இருந்து எனக்கு சீனா, ஜப்பான் தபால் தலைகள் வாங்கி வந்தார். பின்னர் நான் இந்தியன் ஏர்லைன்ஸில் விமானியாக பணியாற்றப் போன போதும் என் அம்மாவுக்கு எவ்வளவோ தைரியத்தைக் கொடுத்தவர்.

ராமநாதபுரத்தில் என்னுடைய அப்பா சுங்க இலாகாவில் அதிகாரியாக பணியாற்றும் போது பல முறை எங்கள் வீட்டிற்கு சித்தப்பா வருவார். அதிகாலையில் சித்தப்பாவுடன் நடப்பது எனக்கு மிகவும் பிடிக்கும். அப்போது 'பெரிய மனுஷத் தன்மையோடு' சித்தப்பாவுடன் பேசிக் கொண்டே போவேன். அம்மா எப்போதும் என்னிடம் ''உன் சித்தப்பா பெரிய அதிகாரியாக ராணுவத்தில் வந்திருக்கலாம், அல்லது கலெக்டர் ஆயிருக்கலாம், வீணாக இப்படி கட்சி என்று போய்விட்டான், நீயும் அவன் கூட சேர்ந்து வீணாகாதே' என்று ஓயாமல் கூறுகிறாள்'' என்று சொல்வேன். சித்தப்பா எனது கையை உதற முயற்சித்து ''நீ போய் படி, உன் அம்மா கூறியபடி என்னிடம் ஏன் பொழுதைப் போக்குகிறாய்'' என்பார். சித்தப்பாவின் கையை



இறுகப் பிடித்துக் கொண்டு என் நெஞ்சோடு சேர்த்துக் கொண்டு, ''சித்தப்பா! அது அம்மாதான் அப்படிச் சொன்னாள். நான் உன்மேல் மிகவும் பிரியம் வைத்திருக்கிறேன்'' என்பேன். என் தலையில் கையை வைத்து அன்புடன் தடவி, ''ஏ லோலாய்!'' என்பார். அந்த வார்த்தைக்கு அவருக்குத்தான் அர்த்தம் தெரியும்! அப்போது எனக்கு 10 வயது. ராமநாதபுரத்தில் எப்போதாவது பெய்யும் மழையில் 2, 3 அடி விட்டத்துக்கு சாலையில் திட்டு திட்டாக தண்ணீர் கிடக்கும். அவர் தாண்டிப் போகும் போது அவர் கையைப் பிடித்துத் தொங்கிக் கொண்டே அதை கடந்து விடுவேன். அவர் மனஉரம் போன்றே அவரிடம் உடலுறமும் இருந்தது. நான் தொங்கினாலும், மார்க்கெட்டில் காய்கறிப் பையை தூக்குவது போல அலட்சியமாக என்னை தூக்கிக் கொண்டு போவார். சிறிது நேரம் கழித்து, ''உன் அம்மா சொன்ன வேலைக்கெல்லாம் நிறைய பேர் வருவார்கள். இந்த ஏழை மக்களை கைதூக்கி விட என்னைப் போல் சிலர் தான் வருவார்கள். என்றாவது ஒருநாள் இந்த நாட்டில் ஏழை மக்கள் இல்லாமல் போகும் போது நானும் உங்க அம்மா சொன்ன மாதிரி வேற வேலைக்குப் போய் விடுவேன்'' என்பார் சிரித்துக் கொண்டே.

எல்லா குடும்ப விஷயத்திலும் மிகவும் நிதானத்துடன் பேசுவார். ஒரு முறை ''சித்தப்பா, உன்னை மிகவும் அடித்துத் துன்புறுத்திய போலீஸ் அதிகாரிகளை, நீ இந்த மாகாணத்தின் முதலமைச்சராக வந்தால் அவர்களை, நீ தண்டிப்பாயா'' என்று கேட்டேன். ''பாரதி, நீ ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். நீ நன்றாக விமானமோட்டினால் உனக்கு பதவி உயர்வு கிடைக்கும். அதைப் போல எங்களை போன்றவர்களை மிகவும் அடித்து எங்கள் இயக்கங்களை பற்றிய பல உண்மைகளை தெரிந்து கொண்டால் அவர்களுக்கு பதவி உயர்வு வரும். அது அவர்களது தொழிலாகப் போய்விட்டது. இது ஒரு மாற்ற முடியாத சமூகக் கேடு. அதில் அவர்கள் ஒரு அங்கம் அவ்வளவுதான். அதற்காக அவர்கள் மீது வன்மம் கொண்டால், அது சரியல்ல'' என்பார். தன்னை இம்சித்த... மிகக் கேவலமாக இம்சித்த மனித ஜென்மங்களையும் இப்படிப் பார்க்கும் ஒரு கண்ணோட்டம் என்னால் புரிய முடியாத ஒன்றாக இருந்தது.

ஒரு முறை அவருடைய மகள் டாக்டராக பணியாற்றுபவர். கட்சி அலுவலகத்தில் 3 நாள் தங்கியிருந்தார். போகும் போது 110 ரூபாய் கொடுக்கும்படி கட்டாயப்படுத்த, என் தங்கை அழ, நீ என்ன அழுதாலும் சரி, வண்டியிழுப்பவனும், ஆட்டோ ஓட்டுபவனும் கூட சந்தா கட்டிய பணம் அதில் நீ சாப்பிட்டிருக்கிறாய். இதை கொடுத்து விட்டுப் போ என்று கூறிவிட்டார்! இன்று பல லட்சங்களை மகளுக்கும் மகனுக்கும் சேர்த்து வைக்கும் அரசியல்வாதிகளுக்கிடையில், இந்த சித்தப்பாவை நினைக்கும் போது மனம் புல்லரித்துப் போகும்.

என்னுடைய பெரிய தங்கையின் மகள், அவருடைய பேத்தி மரணமடைந்த போதும், திருச்சியில் கட்சி பொதுக்குழு கூட்டத்தில் கண்ணில் நீர் மல்க அமர்ந்திருந்தார். கடைசியில் செய்தியை கேள்விப்பட்ட சகதோழர்கள் வலுக்கட்டாயமாக அனுப்பி வைத்தனர்.

என்னுடைய அப்பா எக்ஸைஸ் இலாகாவில் உதவி கலெக்டராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். ஒருமுறை நாங்குநேரியில் இருந்து பஸ்ஸில் வரும்போது, பக்கத்திலிருந்த ஒருவரிடம் பேசிக் கொண்டு வரும்போது, 'நல்லகண்ணு உங்கள் அண்ணனா என்று மிகுந்த மரியாதையுடன் பார்த்தார். தொடர்ந்து அவர், இன்றும் எங்கள் பகுதியில் ஆண் பிறந்தால் நல்லகண்ணு என்றும் பெண் பிறந்தால் நல்லத்தாய் என்றும் பெயர் வைப்போம். எங்கள் வாழ்வை எவ்வளவோ உயர்த்தி இருக்கிறார். தாழ்த்தப்பட்டவர்களான எங்களை செருப்புப் போட்டு மேல் ஜாதி வீட்டு வழியாக கூட்டமாக நடந்து போங்கள் என்று கூறுவார். (அப்போதெல்லாம் செருப்புப் போட்டு ஹரிஜனங்கள் நடக்கக் கூடாது, நடந்தால் காலை வெட்டி விடுவார்கள்) செருப்பு வாங்க பணமில்லை என்றால், ''உங்கள் மனைவியின் தாலியை அடகு வைத்தாவது செருப்பு வாங்குங்கள் என்று கூறியிருக்கின்றார்'' என்று பெருமைபடக் கூறினாராம்.

சித்தப்பா செஞ்சீனா சென்றபோது உதவி பிரதமரிடம் கைகுலுக்கிய படத்தை வெகுநாட்கள் மேஜையில் வைத்திருந்தேன். விமானத்தில் எந்த கட்சியை சேர்ந்த அரசியல்வாதியை சந்திக்க நேர்ந்தாலும் சித்தப்பா பற்றிப் பேசும்போது பெருமதிப்புடன் பேசுவார்கள்.

கைகளிலும், கால்களிலும் விலங்கிடப்பட்டு 1948ஆம் ஆண்டு சித்தப்பாவை எங்கள் ஸ்ரீவைகுண்டத்தில் உள்ள எங்கள் வீட்டுக்கு கூட்டி வந்தார்கள். அதை கேள்விப்பட்ட உடனே எங்கள் ஆச்சி (நல்லகண்ணு சித்தப்பாவின் தாயார்) மயங்கி விழுந்து விட்டார். உடம்பெல்லாம் புழுதி, சிறிது அடிபட்ட இடமெல்லாம் ரத்தக்கறை. அத்தனை உறவினர்கள் முன்னிலையிலும் சித்தப்பாவை நிறுத்தி எங்களது நான்கு வீடுகளையும் போலீஸ் சோதனையிட்டனர்.

சிங்கங்களின் கால்களில் விலங்குகள் மாட்டப்படுவதால் அவற்றின் நடை தளர்வதில்லை. அதற்காக அந்த சிங்கங்கள் வேதனைப்படுவது மில்லை. நாங்குநேரி காட்டில் இந்த சிங்கம் உலவிக் கொண்டு இருந்தபோது, தனிமனிதனாக ஆயுதம் ஏந்திக் கொண்டுகூட எதிர்க்கும் துணிவு எந்த காவல் துறை மனிதனுக்கும் இருந்ததில்லை.

இந்த அன்பு கொண்ட மாமனிதனின் வாழ்க்கை, வாழ்ந்த விதம், எங்கள் குடும்பத்தில் எல்லோரையும் நெறிப்பட வைத்தது மிகவும் உண்மை. இந்த மனிதரின் நெருங்கிய உறவினர் என்று எங்களை அறிமுகப்படுத்துவதில் அளவிலாத பெருமிதம் அடைந்தோம். அந்தத் தகுதியை நாங்கள் மரணமடையும் வரை மகிழ்ச்சியுடன் தக்க வைத்திருப்போம். எவன் ஒருவன் ஏழை எளிய மக்களுக்காக தன் குருதியை தரையில் சிந்துகிறானோ அவன் மரணத்திற்குப் பின்னால் என்னுடன் சரிசமானமாக அமர்வான், என்று - பைபிள் கூறுகின்றது.

என்னுடைய நல்லகண்ணு சித்தப்பாவுக்கு கடவுள் மீது நம்பிக்கை கிடையாது. ஆனால் நாங்குநேரியின் முச்சந்தியில் வைத்து, பின்னால் கைகள் கட்டப்பட்டு, காவல்துறை ஆட்களால் கடுமையாக அடித்து, உதைத்து மிதிக்கப்பட்டு, ரத்தம் மண்ணில் சேறாக, இனம் புரியாத ஏழை மக்களுக்காக அத்தனை வேதனையையும் தாங்கிக் கொண்ட இந்த மனிதன், இவர் வாழ்ந்த காலத்துக்கு பின்னால் இறைவனுடன் சரிசமமாக அமர்ந்திருப்பார் என்பதில் எங்களுக்கு சந்தேகம் ஏதும் இல்லை.

நல்லகண்ணு மாமா!

ராஜேஸ்வரி பாரதி

பழமையான பழக்க ஒழுக்கங்களை பின்பற்றும் ஒரு பெரிய குடும்பத்தில் 25 வருடங்களுக்கு முன் நான் மூத்த மருமகளாக காலடி வைத்த நாள் முதல் இன்று வரை எல்லோரும் வியக்கும் வண்ணம் வாழ்ந்து கொண்டிருக்கிற ஒரு மனிதர், எனது மதிப்பிற்குரிய சின்ன மாமனார் திரு.நல்லகண்ணு அவர்கள்தான்.

அவருடைய எளிமை பாங்கான வாழ்வும், தன்னிகரற்ற நம்பிக்கையும், அப்பழுக்கில்லாத நெறி முறையும் எங்கள் குடும்பத்தினருக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாகவே திகழ்ந்திருக்கின்றது.

அவர் சொல் வேறு செயல் வேறு அல்ல. சொன்னால் நடத்தி முடிக்கும் மனப்பாங்கு கொண்டுள்ளவர்.

தேசத்திற்காக அரும்பாடுபட்டு, அவர் ஆற்றிய சீர்திருத்தங்கள் என்றும் குறிப்பிடத்தக்கவையாகும். நலிந்த இனத்திற்காக போராடிய நல்லுள்ளம் படைத்தவர். நலிந்த விவசாயிகள் கடுமையான வறட்சியின் போது பட்ட வேதனைகளின் போதும் அவர் ஒரு தெய்வமாக காட்சியளித்துள்ளார்.

சில வருடங்களுக்கு முன் ஒரு தைப் பொங்கல் மறுநாள் அவரது இல்லத்திற்கு நானும், கணவரும், குழந்தைகளும் சென்ற போது அத்தை அவர்கள் இப்போது தான் ஒரு திருமணம் வீட்டில் முடித்து வைத்தோம்'' என்று சந்தோஷமாக கூறியதை கேட்டது, எங்களை வியப்பில் ஆழ்த்தியது. இதை ஏன் நான் சொல்கிறேன் என்றால் பிறர் நன்றாக வாழ வேண்டும் என்று ஆசிவழங்கும் தம்பதியர் இருவரும்.

எனது தாயும், திருமதி ரஞ்சிதம் அத்தையும் பள்ளி நாட்களிலேயே பரிச்சயம் ஆனார்கள். சிறு பெண்ணான அத்தையின் நற்பண்புகளை கண்டு வியந்தது உண்டாம். அது போலவே இப்பொழுதும் ஒரு சிறந்த இலட்சிய தலைவருக்கு இலட்சிய மனைவியாக வாழ்கிறார். தன்னுடைய கணவரின் சிறந்த கொள்கைகளுக்காக தனிப்பட்ட வாழ்க்கையில் எத்தனையோ தியாகங்களை எதிர்கொண்டவர். ஒரு சராசரி பெண்ணின் சாதாரண ஆசைகளைக்கூட புறக்கணித்தவர்.

நல்லகண்ணு மாமா எப்போதும் ஆண் பெண் என்ற சரிசம அந்தஸ்தை கொடுப்பவர். எங்கள் குடும்பத்தின் மிகப் பெரிய 'கல்தூண்'. அவர் ஒரு லட்சிய மகான். இன்றைய சமுதாயத்திற்கு ஒரு சிறந்த வழிகாட்டியாவார். லட்சியத் தொண்டுகள் பல ஆற்ற அவர் நீண்ட ஆயுள் பெற இறைவனை பிரார்த்திக்கிறோம்.

❖

சிந்தனைச் சிதறல்கள்



பத்திரிகைகளில்

வெளிவந்த

கருத்துக்களின்

தொகுப்பு:

தனி ரத்தமில்லை

ஒவ்வொரு சாதிக்கென்று தனி ரத்த மில்லை, ரத்த வகை ஏ, பி, சி, ஓ என்றுதான் இருக்கிறது. தேவருக்கு தேவர் ரத்தம்தான் பொருந்தும் என்று கூற முடியுமா? அல்லது தேவேந்திரருக்கு தேவேந்திரர் ரத்தம் தான் பொருந்துமா?

ஆர்.என்.கே. - நந்தன் - 1997, ஜூன், 15-30

போலி அரசியலுக்கு முடிவு கட்டுவோம்

ஆடம்பர ஆர்ப்பாட்ட அரசியல் சூழலுக்கு இடையில் அமைதியாக தெளிவாகச் செயல்படுபவர். தோற்றப் பொலிவில் ஒரு சராசரி தமிழ் விவசாயியின் வார்ப்படம். வாழ்விலும் வாக்கிலும் எளிமை. அவர்தான் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்மாநிலச் செயலாளர் ஆர்.நல்லகண்ணு.

- தினமணி அரசியல் அரங்கம் - 13.9.1997

குடும்பம் குறித்து

என் துணைவியார் ஆசிரியையாக பணியாற்றி ஓய்வு பெற்றுவிட்டார். எங்களுக்கு இரண்டு பெண்கள். இருவருக்கும் திருமணமாகிவிட்டது. என்னால் பண உதவிகள் இல்லாவிட்டாலும் அன்பு பிணைப்பில் பாசமுள்ள குடும்பமாக வாழ்ந்து வருகிறோம். எனது அரசியலுக்கு ஊக்கமளிப்பார்களே தவிர தடையாக இருந்ததில்லை.

ஆர்.என்.கே. தினமணி 13.9.1997

ஆலமரத்தின் விதை

விழுது பரப்பி நிற்கும் ஆலமரத்தின் விதையைக் கண்ணால் காண முடியாது. அதுபோல் எதிர்கால வாழ்வை வளமாக்கும் இளைஞர் சமுதாயம் ஆலம் விதைப் போல் உள்ளது. நிச்சயம் நம்பிக்கையூட்டும் விருட்சமாகப் பெருகும்.

ஆர்.என்.கே. தினமணி 13.9.1997

மெழுகுவர்த்தி

நெல்லைப் பக்கம் கங்கை கொண்டான் அருகில் உள்ள நாரைக்கிணறு கிராமத்திலுள்ள இயக்க தோழர் ஒருவரின் மகள் ரஞ்சிதம். ஆசிரியையாக வேலை பார்த்துவந்தார். இயக்கத் தோழர்கள் நல்லகண்ணுவிற்கு அவரைத் திருமணம் செய்து வைத்தனர்.

பேராசிரியர் வானமாமலை தலைமையில் திருமணம். இரண்டு பெண்களை வளர்த்து ஒன்றாகவே படிக்க வைத்து திருமணம் செய்து கொடுத்து கணவரின் இயக்கப் பணிக்கு மெழுகுவர்த்தியாக இருந்து இப்போதுதான் ஓய்வு பெற்றிருக்கிறார் ரஞ்சிதம். குடும்பச் சொத்தாகக் கிடைத்த நிலத்தைப் பெண்களின் திருமணச் செலவுக்காக விற்றுவிட்டார்.

- ஸ்ரீனிவாசன், கல்கி 23.5.1999

அருமை புரிய வரும்

கருத்துக்கணிப்பு என்று பெயரில் கருத்து உருவாக்கத்தைத் தான் பத்திரிக்கைகள் தோற்றுவித்தன. இன்றில்லாவிட்டாலும் என்றாவது மதத்தை அடிப்படையாகக் கொண்டு அரசியல் நடத்தும் பா.ஜ.க.வின் ஆபத்து தெரியத்தான் போகிறது. அப்பொழுது மனிதகுலத்தின் ஒற்றுமை மற்றும் மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்ட கம்யூனிஸ்டுகளின் அருமை மக்களுக்கு புரிய வரும்.

ஆர்.என்.கே. பேட்டி, துக்ளக் - 20.10.1999

என்னைச் செதுக்கிச் செதுக்கிச் செப்பனிட்டவர்

மிக, மிக எளிமையான தர்க்க நியாயங்களைச் சொல்லி மார்க்சியத்தை என்னை, ஏற்றுக்கொள்ளச் செய்தவர் என் ஆசிரியர் பலவேசம்.

அவருக்கு அடுத்தபடியாக என்னை ஒரு முழுமையான பொதுவுடமைச் சிந்தனைவாதியாக மாற்றியதும் என் பொதுவாழ்வு முழுவதும் எனக்குத் தத்துவம், நடைமுறை இரண்டிலும் நல்லாசானாய் இருந்து நெறிப்படுத்தியதும் தோழர் ப.மாணிக்கம் அவர்கள். இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படிக்கும்போதே இயக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காகப் பல்கலைக் கழகத்திலிருந்து வெளியேற்றப் பட்டார்.

மாணவனாய் இருந்தபோதும் கல்லூரிப்

படிப்பை பாதியில் நிறுத்திக் கட்சியில் சேர்ந்த போதும் முழுநேர ஊழியரான பிறகும் சிறையிலும் என் கூடவே இருந்து என்னைச் செதுக்கிச் செதுக்கி செப்பனிட்டவர் தோழர் ப.மாணிக்கம்.

இந்த இருவரோடு கூட பேராசிரியர் வானமாமலை அவர்களையும் நான் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

நான் நெல்லை இந்துக் கல்லூரியில் படித்தபோது நான்குனேரி போர்டு உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராக இருந்தார் நா.வா. அந்நாட்களில் என்னுடைய தேடல்களுக்குத் தீனி போட்டவர் வானமாமலை அவர்கள்தான். தத்துவம், வரலாறு, பொருளாதாரம், இலக்கியம், அத்தனையிலும் வித்தகர் அவர். சிலமணி நேரம் அவரோடு உரையாடினால் பலநூறு நூல்களை படித்து முடித்த உணர்வு ஏற்பட்டுவிடும்.

ஆர்.என்.கே., நந்தன், செப்டம்பர், 1.15.2000

எளிமையான வாழ்க்கை, சுடுசொற்கள் அற்ற பேச்சு, விவசாயிகள் பிரச்சினைகளில் தனி அக்கறை - இவை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் ஆர்.நல்லகண்ணு வின் சிறப்புப் பண்பு நலன்கள்.

- துக்ளக் 2.11.2000

இலக்கணம்

சுதந்திரப் போராட்ட வீரர், சிறைக்கஞ்சாத சிங்கம், தோழர் என்ற சொல்லுக்கு இலக்கணமாய் இருப்பவர் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் ஆர்.நல்லகண்ணு.

- நந்தன் மார்ச் 16-31, 2001

நம்பமுடியவில்லை

அது ஓர் அரசியல் கட்சியின் தலைமை அலுவலகம்தானா? நம்பமுடியவில்லை, நூலகம் மாதிரி இருக்கிறது. அவர் ஓர் அரசியல் கட்சியின் தலைவர்தானா? நம்ப முடியவில்லை. எளிமையாக இருக்கிறார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழகச் செயலாளர் ஆர்.நல்லகண்ணு வுக்கு கட்சியே சுவாசம். கட்சி அலுவலகத் திலேயே வாசம்.

- இதய அலைகள் 2004, ஜூன்

தரமான அதிசயம்

விரல்களை மறைக்கும் அளவுக்கு தங்க வைர மோதிரங்கள். அதில் விசுவாசத்தை பறைசாற்றும் வண்ணம் பொறிக்கப் பட்டிருக்கும் தலைவரின் முகம். கையளவு கனம் கொண்ட கழுத்துச் சங்கிலி. மணிக்கட்டை Money-க்கட்டையாய் மாற்றும் பிரேஸ்லெட் டுகள். மடங்காது விரைப்பாய் நிற்கும் சாதிக்கரை வேட்டிகள். ஆர்டர் கொடுத்து தயாரிக்கப்படும் பொருத்தமான கலர் காலணிகள். இதுதான் இன்றைய ஒரு கடைநிலை ஒன்றியச் செயலாள ரின் ஏழ்மையான தோற்றம்.

இப்படிப் பகட்டாகிப் போன தமிழக அரசியல் வட்டாரத்தில் இவர் (ஆர்.நல்ல கண்ணு) ஒரு இமாலய விதிவிலக்கு. திரா விடர்க்கே உரிய நிறம். தலை வாராத முகம். வயலிலிருந்து நேரே வந்திறங்கியது போன்ற ஒரு விவசாயச் சாமானியன் தோற்றம். மொட மொடப்பு இல்லாத வேஷ்டி - சட்டை. தோளில் மடித்துக் கிடக்கும் துண்டு. மொத்தத்தில் சுமார் எண்பது வயதை எட்டித் தொட்டுவிட்ட இந்த எளிய மனிதர் தற்காலிக அரசியலில் ஒரு தரமான அதிசயம்.

பாக்யா, 2004 ஜூன் 25 - ஜூலை 21

முகர்ஜி குறித்து

மனிதனின் சுயமரியாதை உணர்வை அங்கீகாரம் செய்வதையே பாவம் என்று கருதும் மதம் மதமல்ல.

அது ஒருவித நோயாகும். இறந்து போன மிருகத்தைத் தொடலாம். ஆனால் மனிதனைத் தீண்டலாகாது எனச் சொல்லுகிற மதம் மதமல்ல. பைத்தியக்காரத்தனமாது. ஒரு குறிப்பிட்ட வர்க்கமானது செல்வத்தையடையக்கூடாது, ஆயுதங்களை ஏந்தக்கூடாது என்று சொல்லுகிற மதம் மதமல்ல. அது மனிதனின் வாழ்க்கையைக் கேவலப்படுத்துவதாகும். படிப்பறிவில்லாத

வர்கள் அப்படியே கல்வி கற்காதவர்களாகவே இருக்க வேண்டும் என்று போதிக்கிற மதம் மதமல்ல. அது ஒரு தண்டனையாகும் என்று பேராசிரியர் ஹிரேன் முகர்ஜி குறிப்பிடுகிறார்.

ஆர்.என்.கே., முரசொலி புதையல், 8.8.2004

நீதித்துறையிடமிருந்து நீதியையும், காவல் துறையிடமிருந்து பெண்களையும் காப்பாற்ற வேண்டிய சூழ்நிலையில்தான் நாடு இருக்கிறது. மருத்துவமோ ரொம்ப காஸ்ட்லி ஆகி கொண்டிருக்கிறது.

எனக்கு திடீரென்று ஹார்ட் அட்டாக் வந்துவிட்டால், இரண்டு மூன்று லட்ச ரூபாய் செலவழித்து வைத்தியம் செய்ய வேண்டி யிருக்கும். அதற்கு நான் எங்கே போவேன்?

சென்னையில் மருத்துவர்கள் அமைப்பு சார்பில் சமீபத்தில் நடந்த சமத்துவம் பற்றிய நிகழ்ச்சியில் இப்படி நெக்குருகிப் பேசி சமுதாயத்தின் மீது அக்கறையோடு இருக்கும் பலரையும் சிந்திக்க வைத்திருக்கிறார் ஆர்.நல்லகண்ணு.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளராக இருக்கும் நல்லகண்ணு, ஆரவார அரசியலுக்கு அப்பாற்பட்ட மிகவும் எளிமையான, கை சுத்தமான அரசியல்வாதி.

அவரது இந்த மனக்குமுறல், சாமானியர் களின் பாதிப்பை எதிரொலிப்பதாகவே இருக்கிறது என்று அரசியல் வட்டாரத்தையும் தாண்டி சூடான விவாதத்தை எல்லோர் மத்தியிலும் கிளப்பி இருக்கிறது.

- ஜூனியர் விகடன், 12.9.2004





தோழர் ஆர்.என்.கே.

வாழ்க்கை குறிப்புகள்



தொகுப்பு

கே.ஜீவபாரதி

தோழர் ஆர்.என்.கே. வாழ்க்கை குறிப்புகள்

★ தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டத்தில் ராமசாமி - கருப்பாயி தம்பதிக்கு 1925 டிசம்பர் 26 அன்று மூன்றாவது குழந்தையாக நல்லகண்ணு பிறந்தார். இவருடன் பிறந்தவர்கள் மூன்று ஆண்கள்; ஐந்து பெண்கள்.

★ ஸ்ரீவைகுண்டம் காரனேஷன் உயர்நிலைப்பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோதே நல்லகண்ணு பாரதி பாடல்களில் மனதை இழந்தார்.

★ வ.உ.சிதம்பரனார், முத்துரங்க முதலியார், சத்தியமூர்த்தி, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், திரிகூட சுந்தரம் பிள்ளை, சோமயாஜுலு ஆகியோர் ஸ்ரீவைகுண்டத்தில் பேசியதைக் கேட்டு தேசப்பற்றை நல்லகண்ணு வளர்த்துக் கொண்டார்.

★ திருச்சி கல்லூரி ஒன்றில் படித்துக் கொண்டிருந்த நல்லகண்ணுவின் அண்ணன் ஆர். முத்துராமலிங்கம் நேருஜி நீதிமன்றத்தில் அளித்த வாக்குமூலத்தை டைப் செய்து பள்ளி மாணவராயிருந்த தம்பி நல்லகண்ணுவிற்கு அனுப்பி வைத்தார். இதுவும் நல்லகண்ணுவின் விடுதலைப் போராட்டப் பணிகளுக்கு வித்திட்டன.

★ மெகபோன் பிரச்சாரம் செய்தல் - கூட்டம் நடக்கும்போது பெட்ரமாக்ஸ் விளக்கை சுமத்தல் என நல்லகண்ணுவின் தேசபக்த பணி தொடங்கியது.

★ 1937ல் நடந்த தேர்தலின்போது காங்கிரஸ் கட்சிக்கு வாக்குக் கேட்கும் பணியில் நல்லகண்ணு ஈடுபட்டார்.

★ 1938ல் மில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தபோது ஜீவா போன்ற தோழர்கள் மக்களிடம் அரிசி வசூல் செய்தனர். இந்தப் பணியிலும் பள்ளி மாணவன் நல்லகண்ணு ஆர்வத்துடன் ஈடுபட்டார்.

★ காரனேஷன் பள்ளியில் போர் பிரச்சார நாடகத்தை போட்டனர். சக மாணவர்களை இணைத்துக் கொண்டு நாடகத்தை எதிர்த்து நல்லகண்ணு கோஷம் போட்டார். அப்போது மாணவர்கள் மீது போலீசார் தாக்குதல் நடத்தினர். இதைக் கண்டித்து மாணவர்கள் ஸ்டிரைக் செய்தனர். இதற்கு அடித்தளமாக இருந்தவர் நல்லகண்ணு.

★ உலக மகா யுத்தத்தின்போது உணவுக் கமிட்டி ஒன்றை அரசு அமைத்தது. இந்தக் கமிட்டியில் மிராசுதாரர்கள், வசதிபடைத்தவர்கள் ஆகியோருடன் பள்ளி மாணவன் நல்லகண்ணுவும் பெரிய குடும்பன் என்ற தாழ்த்தப்பட்ட தோழரும் இணைக்கப்பட்டனர். தங்களுக்குச் சமமாக தாழ்த்தப்பட்டவர் அமர்வதை விரும்பாத மிராசுதாரர்கள் கமிட்டிக் கூட்டத்திற்கு பெரிய குடும்பனை அழைக்காமல், அவருடைய வீட்டிற்கு ஆள் அனுப்பி கமிட்டிக் கூட்டத்தில் அவர் கலந்து கொண்டதாக கையொப்பம் பெற்றனர். இதை விரும்பாத பள்ளி மாணவன் நல்லகண்ணு ஒரு கமிட்டிக் கூட்டத்திற்கு பெரிய குடும்பனை அழைத்து வந்து, மிராசுதாரர்களுக்கு இணையாக அமரச் செய்தார். இதன்பின் உணவுக் கமிட்டிக் கூட்டத்தில் மிராசுதாரர்களும், வசதிபடைத்தவர்களும் கலந்து கொள்ளவே இல்லை. சாதிய பாகுபாடுகளை தகர்க்கும் போக்கு பள்ளி மாணவன் நல்லகண்ணு நெஞ்சில் இப்படித்தான் உருவானது.

★ தடை செய்யப்பட்ட சித்தரஞ்சன் தாஸ், மோதிலால்நேரு, காந்தி, பகத்சிங் போன்றோரின் வாழ்க்கை வரலாற்று நூல்களை பயின்றார். இந்த நூல்கள் நல்லகண்ணு சிந்தனையில் புதிய வெளிச்சத்தை கொடுத்தன.

★ தேச பக்த நூல்களைப் பயில்வதிலும், தேசபக்த பணிகளில் ஈடுபடுவதிலும் முனைப்பாக இருந்த பள்ளி மாணவன் நல்லகண்ணுவிடம், இந்தி பண்டிட் பலவேசம் செட்டியார் மார்க்சிய நூல்களைக் கொடுத்தும், மார்க்சீயம் பற்றி விவாதித்தும் நல்லகண்ணு நெஞ்சில் மார்க்சீய கருத்துகளை விதைத்தார்.

★ திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் நல்லகண்ணு இண்டர்மீடியட் பயின்றார். அப்போது அந்தக் கல்லூரியில் பயின்ற தொ.மு.சி.ரகுநாதன் தொடர்பு நல்லகண்ணுவுக்கு கிடைத்தது.

★ கல்லூரியில் படித்துக்

கொண்டிருந்தபோதே ஸ்ரீவைகுண்டத்தில் 'கலைத் தொண்டர் கழகம்' என்ற அமைப்பை நல்லகண்ணு உருவாக்கினார்.

★ தமிழில் பி.ஓ.எல். இரண்டாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்தபோது தூத்துக்குடியில் இயங்கிய கம்யூனிஸ்டுக் குழுவுடன் தோழர் நல்லகண்ணுவிற்கு தொடர்பு ஏற்பட்டது.

★ *1944*ல் ஸ்ரீவைகுண்டத்தில் முதன் முதலாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக் கிளை உருவாக்கப்பட்டது. இந்தக் கிளையில் முத்தையா, ராமசுப்பிரமணியன், திருமூலநாதன் ஆகியோருடன் தோழர் நல்லகண்ணுவும் இணைந்து அதன் செயலாளராகப் பொறுப்பேற்றார்.

★ *1945* செப்டம்பரில் மதுரையில் சென்னை மாகாண தொழிற்சங்க காங்கிரசின் (ஏஐடியுசி) மாநாடு நடந்தது. அந்த மாநாட்டிற்கு தோழர் நல்லகண்ணுவும் சென்றிருந்தார். கம்யூனிஸ்டுகளைப் பற்றி காங்கிரசார் செய்து வந்த பொய்ப்பிரச்சாரத்திற்கு இந்த மாநாட்டில் தோழர் ஜீவா கொடுத்த பதில் முழக்கம் தோழர் நல்லகண்ணுவை அதிகம் கவர்ந்து கட்சிப் பணியில் தீவிரமாக செயல்படத் தூண்டியது.

★ நாங்குனேரி வட்டார விவசாய சங்க ஊழியராக தோழர் நல்லகண்ணு பொதுவாழ்க்கைப் பணியைத் தொடங்கினார். தோழர்கள் பாலதண்டாயுதம், தளவாய், என்.வானமாமலை, என்.டி.வானமாமலை, வி.எஸ்.காந்தி ஆகியோரின் துணை கொண்டு, நாங்குனேரி ஜீயர் மடம், திருக்குறுங்குடி ஜீயர் மடம், களக்காடு, வடமனேரி பண்ணையார் ஆகியோரை எதிர்த்து ''பட்ட மரக்கால் கூடாது; முத்திரை மரக்கால் வேண்டும்; சுத்தபாரம் வேண்டும்'' என்ற கோரிக்கைகளை முன்னிறுத்தி நடந்த போராட்டங்களை தோழர் நல்லகண்ணு தலைமை ஏற்று நடத்தினார்.

★ *1946* பிப்ரவரி *17* அன்று அம்பாசமுத்திரம் கோடாரங்குளம் கிராமத்தில் அம்பாசமுத்திரம தாலுகா விவசாய சங்க அமைப்பை உருவாக்கும் கூட்டம் நடந்தது. இந்தக் கூட்டத்தில் கல்லூரி மாணவராக இருந்த தோழர் நல்லகண்ணுவும் கலந்து கொண்டார். இந்தக் கூட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட விவசாய சங்க மாவட்டக் குழுவிற்கு தோழர் நல்லகண்ணு தேர்வு செய்யப்பட்டார். இத்துடன் அவருடைய கல்லூரிப் படிப்பிற்கு முற்றுப்புள்ளி விழுந்தது.

★ கீளக்கட்டளையில் திருவாடுதுறை ஆதீன அதிகாரிகள் சாகுபடி செய்த நெல்லை கொடுக்க மறுத்தனர். இதை விவசாயிகள் தடுத்தனர். கைபாண்டியன், செல்லத்துரைப் பாண்டியன் ஆகிய ரவுடிகளைக் கொண்டு களத்து மேட்டிலிருந்து நெல்லைக் கொண்டு போக ஆதீன அதிகாரிகள் முயன்றனர். தோழர்கள் நல்லகண்ணுவும், தளவாயும் தலைமை ஏற்று விவசாயிகளை திரட்டி களத்து மேட்டிலிருந்து ரவுடிகளை விரட்டி அடித்தனர்.

★ போக்குவரத்து வசதியில்லாத அந்தக் காலத்தில் நாங்குனேரி தாலுகாவில் உள்ள கிராமங்களுக்கும், வடகரையிலிருந்து வள்ளியூர் வரை உள்ள கிராமங்களுக்கும் நடந்தே சென்று விவசாய சங்கங்களை தோழர் நல்லகண்ணு உருவாக்கினார்.

★ மடாதிபதிகளும் அவர்களுடைய அடியாட்களும் விவசாய சங்கத் தோழர்களை தாக்குவதிலும், விவசாயிகள் வீடுகளுக்கு தீவைப்பதிலும் தொடர்ந்து ஈடுபட்டனர். தோழர் நல்லகண்ணு விவசாயிகளைத் திரட்டி இந்தக் கொடுஞ் செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

★ எட்டயபுரம் பாரதி மணி மண்டபம் கட்டுவதற்கு தோழர் நல்லகண்ணு ரூபாய் 700 வசூல் செய்து அனுப்பி இருந்தார். அதனால் மணி மண்டப அடிக்கல் நாட்டு விழாவிற்கு பிரதிநிதியாகக் கலந்து கொள்ளும் வாய்ப்பு தோழர் நல்லகண்ணுவிற்குக் கிடைத்தது. இந்த விழாவில் பாரதி பற்றி ஜீவா பேசியது தோழர் நல்லகண்ணுவிற்கு புத்துணர்ச்சி தந்தது.

★ சிறிது காலம் சென்னை 'ஜனசக்தி' அலுவலகத்தில் செய்திக் குழுவில் தோழர் நல்லகண்ணு பணியாற்றினார். சென்னை வாழ்க்கை அவருக்கு ஒத்துக் கொள்ளாததால் மீண்டும் மாவட்டப் பணிக்கே தோழர் நல்லகண்ணு திரும்பிவிட்டார்.

★ *1947* மே *11* அன்று நில வெளியேற்றத்தைத் தடுக்க வேண்டும்; குத்தகைக்காக பெரிய மரக்காலில் நெல்லை அளக்கக் கூடாது;

குத்தகையில் கால் பகுதியைக் குறைக்க வேண்டும்; வாரக் குத்தகையில் சரிபாதி குறைக்கவேண்டும் ஆகிய கோரிக்கை மனுவுடன் ஒன்பது பேர் கொண்ட குழுவில் தோழர் நல்லகண்ணுவும் சென்னைக்கு வந்து அன்றைய சென்னை ராஜதானியில் அமைச்சர் காளா வெங்கட்ராவைச் சந்தித்தார்.

★ ''இந்தப் பிரதேசத்தில் வேலை செய்யும் நம் கிஸான் தலைவர் தோழர் நல்லகண்ணுவைப் பற்றி ஒரு வார்த்தை. இவரைப் பற்றி எனக்கு நல்ல அபிப்பிராயம். இடைநிலை வகுப்புவரை படித்திருக்கிறார். ஆனால், அவர் உண்மையில் ஒரு நல்ல குடியான வாலிபன். பார்வையிலும் பழக்க வழக்கத்திலும் கள்ளம் கபடமற்ற எளிய கிராம வாலிபனாகவே இருக்கிறார். கிராமம் கிராமமாகக் களைப்பின்றி நடந்து வேலைகளை கவனிப்பார். எவ்வளவு வேலை இருந்தாலும் கொஞ்சம்கூட சளைப்பதில்லை. இவர் மாத்திரம் இன்னும் முன்கை எடுத்து தனது வேலைகளைச் செய்வாரேயானால் அந்த ஜில்லாவில் ஒரு சிறந்த கிஸான் (விவசாய), கட்சித் தலைவராக விளங்க முடியும்'' என்று 1947ல் ஒரு கடிதத்தில் தோழர் பி.சீனிவாசராவ் குறிப்பிட்டார். அது எவ்வளவு சத்தியமான வார்த்தைகள் என்பதை தோழர் நல்லகண்ணுவின் பிற்கால வாழ்க்கை பிரதிபலித்தது.

★ 1948ல் காங்கிரஸ் அரசு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை தடை செய்தது. அன்றிலிருந்து 1949 டிசம்பர் 20 நள்ளிரவு வரை தோழர் நல்லகண்ணு தலைமறைவாக வாழ்ந்தார்.

★ 1948 டிசம்பர் 20 நள்ளிரவில் நாங்குனேரி தாலுகா புலியூர்குறிச்சி என்ற கிராமத்தில் ஒரு தாழ்த்தப்பட்ட தோழர் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த தோழர் நல்லகண்ணுவை போலீசார் கைது செய்தனர்.

★ உண்மையை வரவழைப்பதற்காக தோழர் நல்லகண்ணுவை கொடிய முறையில் சித்ரவதை செய்தனர். கைகளை பின்புறம் கட்டி வீதியில் இழுத்துச் சென்றனர். ஆத்திரமூட்டவும் அவமானப்படுத்தவும் செய்தனர். இதன் உச்சகட்டமாக தோழர் நல்லகண்ணு வைத்திருந்த அடர்த்தியான மீசையில் இன்ஸ்பெக்டர் கிருஷ்ணமூர்த்தி என்பவர் சிகரெட்டின் தீ முனையால் கொளுத்தினான். தோழர் நல்லகண்ணு துடிக்கத் துடிக்க இந்தச் செயலை அந்த இன்ஸ்பெக்டர் என்ற கொடியவன் தொடர்ந்து செய்தான். அதனால்தான் அன்றிலிருந்து இன்றுவரை மீசை வைக்கும் வழக்கத்தை விட்டொழித்தார் தோழர் நல்லகண்ணு.

★ நான்குனேரி சப் ஜெயில், கொக்கிரகுளம் ஜெயில், மதுரை ஜெயில் ஆகியவற்றில் தோழர் நல்லகண்ணு வாழ்ந்தார். இவர் சிறையில் வாழும்போதே நெல்லை சதி வழக்கிலும் இணைக்கப்பட்டார். நீதிமன்றம் தோழர் நல்லகண்ணுவிற்கு ஆயுள் தண்டனையும், அவரைக் கைது செய்தபோது வெடிகுண்டுகளும் கைப்பற்றப்பட்டதால் மேலும் ஆறு வருட சிறைத்தண்டனையும் வழங்கியது. சிறையில் இருந்து தோழர் நல்லகண்ணு எழுதிய கட்டுரைகளும், கவிதைகளும் 'ஜனசக்தி'யில் வெளிவந்தன.

★ ஏழாண்டு சிறைவாழ்வுக்குப் பின் 1956 டிசம்பர் 13 அன்று மதுரை சிறையிலிருந்து தோழர் நல்லகண்ணு விடுதலை செய்யப்பட்டார்.

★ 1958 ஜூலையில் பேராசிரியர் நா.வானமாமலை தலைமையில் ஸ்ரீவைகுண்டம் செட்டியார் திருமணத்தில் தோழர் நல்லகண்ணுவிற்கும், தோழியர் ரஞ்சிதத்திற்கும் திருமணம் நடந்தது. தோழியர் ரஞ்சிதத்தின் தந்தை அன்னசாமி நெல்லை மாவட்டத்தில் கம்யூனிஸ இயக்கம் வளர்வதற்காக அரும்பாடுபட்டவர். இத்தகைய பொதுநலத் தொண்டரை 1995 டிசம்பர் 3 அன்று சாதி வெறியர்கள் வெட்டிக் கொலை செய்தனர். தோழர் நல்லகண்ணு - ரஞ்சிதம் தம்பதிக்கு காசிபாரதி, ஆண்டாள் என்ற இரண்டு மகள்கள் இருக்கின்றனர். இவர்கள் வழியாக பேரன் பேத்திகளும் தோழர் நல்லகண்ணுவிற்கு உண்டு.

★ தமிழக முதல்வராக எம்.பக்தவச்சலம் இருந்தபோது மழையின்றி கோவில்பட்டி வட்டார விவசாயிகள் பெரும் துயரத்தைச் சந்தித்தனர். விளைச்சல் இன்றி அவதிப்பட்டனர். இந்தவேளையில் அரசு விவசாயிகளிடம் ஈவிரக்கமின்றி வரிவசூலில்

ஈடுபட்டது. இதை எதிர்த்து விவசாய சங்கமும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் போராடியது.

கோவில்பட்டி, சங்கரன்கோவில், விளாத்திகுளம், குறுக்குச்சாலை, எட்டயபுரம், இடைச்செயல், கயத்தாறு, கழுகுமலை போன்ற இடங்களில் வரிகட்டாத விவசாயிகளிடம் தமிழக அரசு ஜப்தி செய்தது. நாச்சியார்பட்டி என்ற கிராமத்தில் விவசாய சங்கத் தலைவராகவும், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவராகவும் இருந்த தோழர் வி.வி.ரெங்கசாமி வீட்டில் இருந்து இரண்டு காளை மாடுகளை அரசு அதிகாரிகள் ஜப்தி செய்து இழுத்துச் சென்றனர்.

ஜப்தி செய்த பொருட்களை பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை அரசு அதிகாரிகள் பகிரங்கமாக ஏலம்விடுவர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களும் விவசாய சங்கத் தோழர்களும் கிராமம் கிராமமாகச் சென்று ஏலம் எடுக்க வேண்டாம் என்று பொதுமக்களிடம் வலியுறுத்திப் பேசினர். அன்றைய தமிழக முதல்வர் எம்.பக்தவச்சலத்தையும், அன்றைய ரெவின்யூ அமைச்சர் ராமையாவையும் புதுக்கோட்டை, தூத்துக்குடி, கொடைக்கானல் ஆகிய இடங்களுக்கு தோழர் எம்.கல்யாணசுந்தரம் தலைமையில் தோழர்கள் நல்லகண்ணு, எஸ்.அழகர்சாமி ஆகியோர் சென்று சந்தித்து, விவசாயிகள் பிரச்சினையையும், அரசின் கொடிய ஜப்தி நடவடிக்கைகளையும் எடுத்துச் சொல்லியும் தொடர்ந்து போராடியும் ஜப்தி நடவடிக்கையை தமிழக அரசைக் கைவிடும்படி செய்தனர்.

நூறுநாட்கள் கழித்து தோழர் வி.வி.ரெங்கசாமி வீட்டில் ஜப்தி செய்த இரண்டு காளை மாடுகளையும் அரசு அதிகாரிகளே தோழர் வி.வி.ரெங்கசாமி வீட்டிற்குக் கொண்டு வந்து சேர்த்தனர். இந்தப் போராட்டத்திற்கு முன்னாள் எம்எல்ஏ அழகர்சாமியும், முன்னாள் எம்எல்ஏ அய்யலுசாமியும் தலைமை ஏற்று நடத்தினர். இவர்களுக்கு பின்புலமாக இருந்து போராட்டத்தை வழிநடத்தியவர் தோழர் நல்லகண்ணு. இந்த ஜப்தி நடவடிக்கையை கருவாகக் கொண்டு கி.ராஜநாராயணன் எழுதியதுதான் 'கதவு' என்ற சிறுகதை!

★ அம்பாசமுத்திரம் வட்டம், பாபநாசம் அணைக்கு அருகில் சுமார் பதினைந்து மைல் தூரத்தில் உற்பத்தியாகி தாமிரபரணி ஆற்றில் கலக்கும் கடனாநதி மீது அணைகட்ட வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் பல ஆண்டுகளாக அரசுக்கு கோரிக்கை வைத்தனர். இந்தக் கோரிக்கை கண்டுகொள்ளப்படாததால் 1966 ஜூலை 24 அன்று தோழர் நல்லகண்ணு தலைமையில் கம்யூனிஸ்ட் கட்சியினர் அம்பாசமுத்திரம் தாலுகா அலுவலகம் முன் கடனாநதியில் அணைகட்ட வலியுறுத்தி உண்ணாவிரதம் இருந்தனர். இந்தப் பிரச்சினை தமிழக சட்டப் பேரவையிலும் எழுப்பப்பட்டது. மணலி கந்தசாமியை அழைத்துப் பேசிய தமிழக அரசு கடனாநதியில் அணைகட்ட முயற்சி எடுப்பதாக வாக்குறுதி அளித்ததால் 1966 ஆகஸ்ட் 4 அன்று தோழர் நல்லகண்ணுவும் தோழர்களும் உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டனர். 1966லேயே தமிழக அரசு கடனாநதியில் அணைகட்ட அடிக்கல் நாட்டியது. இன்று கடனாநதி மீது கம்பீரமாக அணை திகழ்வதற்கும் அந்தப் பகுதி மக்கள் அணை நீரைப் பயன்படுத்தி பயன்பெறுவதற்கும் தோழர் நல்லகண்ணு மேற்கொண்ட உண்ணாவிரதம் முக்கிய காரணமாகும்.

★ 1968ல் நெல்லை மாவட்டம் நொச்சிகுளம் என்ற ஊரில் விவசாயிகள் மீது போலீசார் கொடிய அடக்குமுறையை ஏவினர். சீதாராம தேவர் என்ற விசவாயி போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டார். கந்தசாமி என்ற விவசாயியின் வலது கரம் வெட்டப்பட்டது. துப்பாக்கி முனையால் ஈஸ்வரக் குடும்பர் என்பவர் குத்தப்பட்டார். ஒரு விவசாயத் தாயின் காது அறுக்கப்பட்டது. இவ்வளவு கொடுமை நடந்தும் அன்றைய தமிழக அரசு கண்டு கொள்ளவில்லை. போலீசாரின் காட்டு மிராண்டித்தனத்தையும் தமிழக அரசின் கண்டு கொள்ளா போக்கையும் கண்டித்து 1968 டிசம்பர் 7 அன்று தோழர்கள் நல்லகண்ணுவும், எஸ்.ஏ.முருகானந்தமும் உண்ணாவிரதம் இருந்தனர்.

தோழர் ஏ.கே.சுப்பையா எம்எல்ஏ, தமிழ்நாடு விவசாயிகள் சங்க பொதுச்

செயலாளர் தோழர் எம்.காத்தமுத்து, தோழர் எஸ்.அழகர்சாமி எம்எல்ஏ, ஏஐடியுசி, நெல்லை மாவட்டத் தலைவர் வீ.மீனாட்சிநாதன் ஆகியோர் அன்றைய தமிழக முதல்வர் அறிஞர் அண்ணாவைச் சந்தித்து போலீசாரின் காட்டு தர்பாரையும், தோழர்களின் உண்ணாவிரதத்தையும் விளக்கினர். தமிழக முதல்வர் தூதுக்குழுவிடம் சொல்லிய வாக்குறுதியை ஏற்று 12ம் நாள் தோழர்கள் நல்லகண்ணுவும், எஸ்.ஏ.முருகானந்தமும் உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டனர்.

★ கிழக்கு ஜெர்மனி, சோவியத் யூனியன், சீனா போன்ற நாடுகளுக்கு தோழர் நல்லகண்ணு சென்று வந்திருக்கிறார்.

★ பி.சீனிவாசராவ் வாழ்க்கை வரலாறு, விடுதலைப் போரில் விடிவெள்ளிகள், கங்கை காவிரி இணைப்பு, பாட்டாளிகளைப் பாடிய பாவலர்கள், கிழக்கு ஜெர்மனியில் கண்டதும் கேட்டதும், பேராசிரியர் நா.வானமாமலை முன்னுரையுடன் 'வீணாதி வீணன் கதை', 'இந்திய விவசாயிகளின் பேரெழுச்சி' மொழி யாக்க நூல் ஆகியவை தோழர் நல்லகண்ணு படைப்புகளில் குறிப்பிடத்தக்கவைகள்.

★ தமிழ்நாடு விவசாய சங்கத்தின் செயலாளராக 5 ஆண்டும், தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் செயலாளராக 1968 முதல் 1991 வரையும், அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்கத்தின் செயலாளர்களில் ஒருவராக சில காலமும் பணியாற்றிய தோழர் ஆர்.நல்லகண்ணு 1992 ஏப்ரலில் மதுரையில் நடந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் மாநில மாநாட்டில் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். இதன்பின் மூன்று முறை மாநிலச் செயலாளராக தேர்வு பெற்ற தோழர் ஆர்.நல்லகண்ணு இந்த ஆண்டு (2005) அந்தப் பொறுப்பில் இருந்து விடுபட்டார்.

★ இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக் குழு உறுப்பினராக இருக்கும் தோழர் ஆர்.நல்லகண்ணுவிற்கு 80ம் ஆண்டு நிறைவு பெறுகிறது. வயது, பதவி ஆகியவற்றை யெல்லாம் கடந்து இன்னும் இயக்கப் பணிகளிலும் எழுத்துப் பணியிலும் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார். ஆம்! தோழர் நல்லகண்ணுவின் தியாகப் பயணம் இன்னும் தொடர்கிறது; இனியும் தொடரும்!

தோழர் ஆர்.என்.கே. படைப்புகள்



கங்கையும் காவிரியும் ஒன்றிணைய வேண்டும்!

ஆர்.நல்லகண்ணு

''வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்

மையத்து நாடுகளில் பயிர்செய்குவோம்''

என்று உலக மகாகவி பாரதி ஐம்பதாண்டுகளுக்கு முன்பு பாடினார். பாரதத்தின் நிலையைப் பார்த்தார். பஞ்சமும் நோயும் இந்திய மக்களை வாட்டி வதக்குவதைக் கண்டு வருந்தினார். வளமான பூமி வறண்டு தரிசாகக் கிடந்தன. பிறந்த நாட்டில் பிழைப்பில்லாமல் பீஜித் தீவிற்கும், ஆப்ரிக்கா கண்டத்திற்கும் அதற்கப்பாலும் சென்று வேலை செய்து வந்தனர், பஞ்சத்திலும் நோய்களிலும் பாரத மக்கள் புழுக்கள் போல செத்து மடிவதைக் கண்டு மனம் வெதும்பினார். மக்களின் துயர் துடைக்க இந்தியா அந்நியர் ஆட்சியிலிருந்து விடுதலைப் பெற வேண்டுமென்பதற்காக சுதந்திர வேட்கையைத் தட்டியெழுப்பினார். வெறும் விடுதலை மாத்திரம் அல்ல. விடுதலைப் பெற்ற இந்தியா - எதிர்கால இந்தியக் குடியரசு எவ்வாறு இருக்க வேண்டுமென்று திட்டங்கள் வகுத்துக் கொடுத்தார்.

தேசபக்தர் சீனிவாச ஐயங்கார் நாடு செழிப்படைய கங்கை நதியையும் காவிரி நதியையும் இணைக்க வேண்டுமென்ற கருத்தை வெளியிட்டார்.

''வருங்கால இந்தியாவில் தொழில்கள் வளரவேண்டும்; விவசாயம் செழிக்க வேண்டும்; தொழிலும் விவசாயமும் வளர்ந்து, இல்லை என்ற கொடுமை இல்லை என்ற சமுதாயமாகத் திகழ வேண்டும்'' என பாரதி கனவு கண்டார். திரு. சீனிவாச ஐயங்காரின் கருத்திற்கும் கவிதை உருக்கொடுத்தார் பாரதி. எதிர்கால இந்தியா எப்படி இருக்கவேண்டுமென்ற லட்சியக் கனவுகளையெல்லாம் கவிதைகளாகப் பொழிந்தார்.

''சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்

சேதுவை மேடுறுத்தி வீதிசமைப்போம்

வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்

மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்''

என்று பாடினார் பாரதி.

கனவு நனவாக வேண்டிய காலம்

நாட்டின் உணவுப் பெருக்கத்திற்கு, வான் மழையை நம்பியே அமைச்சர்கள் மக்களுக்கு நம்பிக்கையூட்டுகிறார்கள். 1968 உணவு உற்பத்தியில் வெற்றி பெற்ற சிறப்பான ஆண்டு என்று ஜனாதிபதியும், பிரதமரும் அறிவித்தனர். உற்பத்திப் பெருக்கின் சின்னமாக குடியரசு தினத்தில் அரசாங்க முத்திரை (ஸ்டாம்பு) வெளியிட்டனர். அமோக உற்பத்தி பற்றி உற்சாக அறிவிப்புகள் வானொலியில் ஒலிபரப்பப்பட்டன.

குடியரசு தின அறிவிப்புக்கு மூன்று தினங்கள் கழித்து ஆகஸ்ட் 18ல் மத்திய அரசின் வானிலை இலாகா விவசாயப் பகுதியினர் கீழ்கண்ட அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள்.

''நாட்டின் பல பகுதிகளில் வெள்ளத்தினாலும் இன்னொரு பக்கம் மற்றப் பகுதிகளில் மழை குறைவினாலும் (Deficiency of Rain) கார்ப்பயிர் பாதிக்கப்படலாம். சென்னை, குஜராத், மேற்கு ராஜஸ்தான், ஆந்திரப் பிரதேசத்தில் ராயலசீமை ஆகிய பகுதிகளில் மழை போதவில்லை. அஸ்ஸாம், பீகார், மேற்கு வங்காளம், கிழக்கு உத்தரப்பிரதேசம், பஞ்சாப், ஹரியானா, கிழக்கு ராஜஸ்தான், கேரளம் ஆகிய இடங்களிலுள்ள நதிகள் வெள்ளப் பெருக்கெடுத்து பெரும் சேதத்தை உண்டாக்கியுள்ளன. ஆந்திர மாநிலத்தில் கடற்கரையோரப் பகுதிகளில் கார்ப் பருவ விதைப்பு மழைபெய்யாததால் பிந்தி விட்டது.'' (இந்தியன் எக்ஸ்பிரஸ், ஆகஸ்ட் 18)

இந்த அறிக்கையைப் படித்தாலே விளங்கும். நாட்டில் ஒரு பகுதியில் வெள்ளச் சேதமும் இன்னொரு பகுதியில் வறட்சியும் ஏற்பட்டு வருகின்றன. இது இந்தியாவில் வாடிக்கையான நிகழ்ச்சியாக இருக்கிறது. கோஸி நதி துக்க நதி என்றே அழைக்கப்படுகிறது. இயற்கைக் கோளாறுகளைக் கட்டுப்படுத்த முடியாமல் தவிக்கிறோம். இவைகளையெல்லாம் ஊன்றிக் கவனித்தார் பாரதி. வங்க நாட்டில் பாய்ந்து செழிப்பாக்கும் கங்கை நதி, வெள்ளப் பெருக்கெடுத்து கடலில் வீணாகப் போய் விழுவதைத் தடுத்து - நாட்டின் நடுப்பகுதிகளில் வறட்சியான இடங்களுக்கு கால்வெட்டி நீர்ப்பாசனம் வசதிகளைப் பெருக்கலாம் ,என்றுதிட்டம் வகுத்தார்.

பாரதியின் கனவை இதுவரை லட்சியக் கனவாகக் கருதினோம். இன்று நம்நாட்டில் பக்ரா நங்கல், நாகார்ஜுன சாகர், ஹிராகுட் அணைக்கட்டுகள் கட்டப்பட்டுள்ளன.

சோவியத் ரஷ்யாவில் வால்கா நதியையும், டான் நதியையும் இணைத்ததின் மூலம் நாட்டின் நடுப்பகுதிகளிலும் நீர் வழிப் போக்குவரத்துகள் நடைபெறுகின்றன.

ரஷ்யாவில் வால்காவையும் டான் நதியையும் இணைத்ததைப் போல் நம் நாட்டிலும் கங்கையையும் காவிரியையும் இணைக்க முடியாதா? முடியும். இத்திட்டத்திற்குப் பெரிய முயற்சியும், அதிகமான முதலீடும் தேவைப்படும். இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் வெள்ளச் சேதம் தடுத்து நிறுத்தப்படும் - துக்க நதிகளெல்லாம் - செழிப்பை வழங்கும் இன்ப நதிகளாகக் கருதப்படும். இந்தியா முழுவதும் நதிகளின் தண்ணீரைப் பயன்படுத்துவதால் மாநில வேற்றுமைகள் குறையும். ஆண்டுதோறும் வெள்ளத்தால் ஏற்படும் கோடிக்கணக்கான நஷ்டத்தை தடுக்கலாம். வறட்சியால் ஏற்படும் பஞ்சத்தைப் போக்கலாம். பூமிக்கடியிலும் கிணறுகளிலும் வற்றாத நீரூற்றுகள் ஏற்படும். நாடெங்கும் சோலைகளும், பசுமையும் பரந்துகாணப்படும். நீர்வழித்துறை போக்குவரத்தினால் ரோடுகளில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கலாம்.

- நாடு முழுதும் வறட்சி நீங்க
- வெள்ளச் சேதம் குறைய
- நிரந்தர நீர்ப்பாசன வசதிபெற
- கரம்புக் காடுகளை கழனி நிலங்களாக மாற்ற
- சோலைகளும் பயிர்களும் செழிக்க

கங்கை நதியையும், காவிரி நதியையும் இணைக்கும் பாரதியின் கனவை நிறைவேற்ற வேண்டும்.

- உழவுச் செல்வம் இதழிலிருந்து

உலக பாங்கின் உண்மை உருவம்

ஆர்.நல்லகண்ணு

உலக பாங்கின் தலைவர் மக்னமாரா இந்தவாரம் இந்தியாவுக்கு வந்திருக்கிறார். பாகிஸ்தானுக்கும் போகிறார். வந்தார்... பங்களாதேஷ் தலைநகர் டாக்காவுக்கு அழைக்காமலேயே போகிறார். இலங்கை, நேபாளம் ஆகிய நாடுகளுக்கும் செல்கிறார். உலக பாங்கு என்றால் என்ன? அதன் தலைவர் மக்னமாரா யார்? இவைகளைப் பற்றி விளக்கம் கொடுக்காமலே பத்திரிகைகள் செய்திகள் வெளியிடுகின்றன.

எங்கிருந்தோ மக்னமாரா என்பவர் ஜனவரி 23ம் தேதி டெல்லிக்கு வந்தார். இந்தியாவின் வளர்ச்சிக்கும் வறுமையைப் போக்குவதற்கும் தொழில் அம்சம் இல்லாத பல்வேறு நலத் திட்டங்களுக்காக கோடிக்கணக்கில் ரூபாயை அள்ளிக் கொட்டப்போவதாகவும் செய்திகள் போடப்பட்டு வருகின்றன.

பங்களாதேஷ் போர் நடைபெற்ற சேதத்திலிருந்து மீட்பதற்கும் இயன்ற அளவு வாரிவழங்கத் தயாராக இருப்பதாகவும் அறிவிக்கிறார்.

இந்த அறிவிப்புகளைக் கண்டவுடன் இந்தியாவில் உள்ள தினமணி, ஹிந்து, எக்ஸ்பிரஸ் போன்ற பத்திரிகைகள் மத்திய அரசுக்குப் புத்திமதிகளைக் கூற ஆரம்பித்துவிட்டன. ''அந்நிய உதவி பற்றி பிடிவாதமாக கொள்கை வேதாந்தம் பேசிக் கெடுத்து விடாதீர்கள்'' என்று எழுதினார்கள்.

இந்தியாவுக்கு அள்ளிக் கொடுக்க வந்திருக்கும் இந்தக் கொடை வள்ளல் யார்? அவரிடம் எந்த அட்சயபாத்திரம் இருக்கிறது? என்ற விபரங்களைத் தெரிவிக்காமல் நாட்டை ஏமாற்றுகிறார்கள்.

உலக பாங்கு:

இந்த பாங்குக்கு உலக பாங்கு என்ற பெயர் சூட்டப்பட்டிருந்தாலும், இதன் பிறப்பிடமும் இருப்பிடமும் அமெரிக்காவே. அமெரிக்காதான் அதிகமான முதலீடுகளை பாங்கில் போட்டிருக்கிறது. அமெரிக்க (வால் ஸ்டிரீட்) முதலாளிகளே இந்த பாங்கின் நிர்வாகிகள். இதன் முதல்வர் பொறுப்புக்கு அமெரிக்கரைத் தவிர வேறு யாரும் வர முடியாது. அமெரிக்க அரசின் அனுமதியில்லாமல் இந்த உலக பாங்க் எந்த நாட்டுக்கும் கடன் கொடுக்க முடியாது. கடன் கொடுக்கக்கூடாது. உலக பாங்கின் கடன் வழங்கும் கொள்கையை தீர்மானிப்பவர்கள் அமெரிக்கப் பெருமுதலாளிகளே! உலக பாங்கு எப்படிப்பட்டது என்று தெரிந்து கொள்வோம்.

நம் ஊர் லேவாதேவி வட்டிக்கடைகாரனிடம் கடன் வாங்கினவர்கள் மீண்டது உண்டா? கிடையாது. பிள்ளை தலைமுறைக்கும் பேரன் வழித் தலைமுறைக்கும் கடனை வரிச் சுமையாக வைக்கிறோமல்லவா? அதைப்போலவே அமெரிக்காவின் ஆதிக்கத்திலுள்ள உலக பாங்கில் கடன் வாங்குவதும் என்று சொல்வது மிகையாகாது.

வங்கியின் கடன் வழங்கும் கொள்கை:

* வட்டி 4.5 சதவீதம்

* அமெரிக்க டாலர் நாணயச் செலாவணியிலேயே திரும்பச் செலுத்த வேண்டும்.

* உலக பாங்கில் கடன்பெறும் தொகையில் பெரும் பகுதி அமெரிக்காவிலேயே செலவழிக்கும் வகையில் திட்டம் இருக்கும். அமெரிக்காவில் உற்பத்தியாகும் பொருள்களை வாங்க வேண்டும்.

* வங்கியின் நிபுணர்கள் ஆலோசனைப்படியே நாம் திட்டமிட வேண்டும்.

இவைபோன்ற இன்னும் பல கட்டுப்பாடுகளுக்கும் விதிகளுக்கும் உட்பட்டே நம் நாடு உலக பாங்கில் கடன் வாங்கியிருக்கிறது.

உலக பாங்கில் வாங்கிய கடனும், அமெரிக்காவின் பி.எல்.480 திட்டத்தின் கீழ் நம் நாட்டுக்கு எவ்வளவு தீங்கை விளைவித்தன என்ற விபரங்களுக்கு விரிவாகப் போக வேண்டியதில்லை.

அமெரிக்கரே சாட்சி:

உலக பாங்கு மூலம் அமெரிக்கா செய்யும் உதவிகளின் நோக்கங்களைப் பற்றி அமெரிக்க ஆசிரியர் எழுதியிருப்பதைப் படித்தால் உண்மை அம்பலமாகிறது.

வேளாண்மை வளர்ச்சியில் பசுமைப் புரட்சியை ஏற்படுத்த இந்தியா போன்ற வளர்ச்சியடையாத பின் தங்கிய நாடுகளுக்கு அமெரிக்கா உதவி செய்துவருவதாக அமெரிக்க ஆசிரியர் வெஸ்டர். ஆர்.ப்ரௌன் என்பவர் கூறுகிறார். இவர் அறிவின் அறுவடை (Seeds of Change) என்ற நூலில் அமெரிக்க உதவியினால் புதிய வீரியவித்துக்களைக் கண்டுபிடித்து பசுமைப்புரட்சி நடத்தி வருவதாகக் கூறும்போதே அமெரிக்காவின் உள்நோக்கங்களை அவரை அறியாமலே வெளியிட்டு விடுகிறார்.

''பி.எல். 480 என்னும் சட்டத்தின் கொடுக்கப்படும் உணவு தான்ய உதவி மற்ற நாடுகளில் பஞ்ச நிலையைப் போக்கவும்.

1. அமெரிக்காவின் உபரி தான்யங்களை உபயோகப்படுத்தவும் வழிவகுத்தது உண்மையே. ஆனால், இவ்விரண்டு பிரச்சினைகளையும் முடிவாகத்தீர்க்க இது உதவவில்லை. அதுமட்டுமின்றி வெளிநாட்டு உணவு தானியம் கிடைப்பதால் சில நாடுகளில் உள்நாட்டு அரிசி கோதுமை இவற்றின் விலை குறைந்தது. இதனால் விவசாயிகளுக்கு கிடைத்த வருமானம் அவர்களுடைய செலவுக்கு குறிப்பாக ரசாயன உரம் போன்ற செலவுகளுக்கு ஈடுகட்டவில்லை. இதனால் உணவு உற்பத்திப் பிரச்சினை தீவிரமாகிறது.

ஆகவே, நேரடியாக உணவு தானியங்களை அனுப்பி உதவுவதை விட ஏழை நாடுகளுக்கு தங்கள் தங்கள் உணவு உற்பத்தியை அதிகரிக்க உதவி செய்வதே சிறந்தது என்று அமெரிக்க அரசாங்கம் 1965ம் ஆண்டு தீர்மானித்தது. இதைத் தொடர்ந்து விவசாய வளர்ச்சிக்கென பிறநாடுகளுக்கு அளிக்கப்படும் உதவி பெருகியது. AID எனப்படும். அனைத்துலக வளர்ச்சிக்கு உதவும் ஸ்தாபனத்தால் விவசாய வளர்ச்சிக்கு அளிக்கப்பட்ட உதவி 1976ல் 450 கோடி ரூபாய்க்கு அதிகரித்தது. இதில் பெருமளவு ரசாயன உரத்தை இறக்குமதி செய்வதற்காக அளிக்கப்பட்ட உதவி.

2. அமெரிக்க உபரி தான்ய சேமிப்பும் குறைந்து கொண்டே வந்ததும் அமெரிக்காவின் இந்தப் புதுக் கொள்கை செயல்பட உதவிற்று (பக்கம் 9-10)

3. (டிராக்டர்) பண்ணைக் கருவிகளை வாடகைக்கு கொடுப்பது, பராமரித்துப் பழுது பார்ப்பது போன்ற அலுவல்களை மேற்கொள்ளக்கூடிய உள்ளூர் நிலையங்கள் அமைப்பதற்கு அயல்நாட்டுத் தொழில் நிறுவனங்களுக்கு ஊக்கம் அளிக்கவேண்டும்'' (பக்கம் 82)

மேலே கூறப்பட்டுள்ள மூன்று கட்டங்களும் நம் நாட்டில் அமெரிக்கத் திட்டத்தின் உள்நோக்கங்களிலிருந்தும் நிரூபணமாகியிருக்கின்றது.

பி.எல்.480ன் கீழ் அமெரிக்க உபரி கோதுமை வந்து குவிந்தது. உள்நாட்டில் கோதுமை விவசாயிகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டது. பருத்தி இறக்குமதி செய்யப்பட்டது. இங்கே பருத்தி விலையைக் குறைத்து ஆலை முதலாளிகள் கொள்ளையடித்தனர்.

இரண்டாவதாக அமெரிக்க உரங்களை இறக்குமதி செய்து குவித்தார்கள்.

இப்போது அமெரிக்க டிராக்டர்களையே இறக்குமதி செய்ய வேண்டுமென்று உதவி கொடுத்து நிர்ப்பந்தித்திருக்கிறார்கள்.

அமெரிக்காவில் தமிழ்நாடு அரசு ஒப்பந்தம்:

இந்தியாவில் தமிழ்நாடு, ஆந்திரா, மைசூர் மாநிலங்கள் அனைத்துலக வளர்ச்சிக்கு உதவும் நிறுவனத் (IDA - International Development Association)துடன் இந்திய அரசு மூலம் அமெரிக்காவில் ஒப்பந்தம் நடைபெற்றிருக்கிறது.

தமிழ்நாடு அரசு 26.5 கோடிக்கு ஒப்பந்தம் செய்துள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் பெருமைகளைப் பாராட்டி தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியின் துணைத்தலைவர் திரு.பி.எஸ்.முத்துச்செல்வன் பி.ஏ., எம்.எல்.ஏ., அவர்கள் கீழ்க்கண்டவாறு (செப். 71) 'நிலவளம்' பத்திரிகையில் எழுதியிருக்கிறார்.

''நிலவள வங்கி இயக்கம் பசுமைப் புரட்சியின் நல்லதொரு சாதனமாகியது. பசுமைப் புரட்சி தமிழகத்தினைப் புதிய வார்ப்பகத்தில் வார்க்கக்கூடிய அமைதிப் புரட்சி.. இப்பெரிய பணிக்குக் கூட்டுறவு இயக்கத்தை தோள்கொடுக்க வைத்திருக்கிறார் மாண்புமிகு ஆதித்தனார் அவர்கள். தமது ஓயாத உழைப்பாலும் உற்சாக சேவையாலும் இப்பசுமைப் புரட்சிக்கு பெரிய வாய்ப்பு ஒன்று நமது மாநில வங்கியின் தலைவர் திரு. மு.சண்முகம் எம்.எல்.ஏ. அவர்களின் சீரிய தலைமையில் உதயமாகி இருக்கிறது. நமது தலைவர் அவர்களின் தலைமையில் தூதுக்குழு ஒன்று வாஷிங்டனுக்குச் சென்று உலக வங்கியுடன் வெற்றிகரமாகப் பேச்சு நடத்திக் கண்ட உடன்படிக்கையின் விளைவாக தமிழகப் பசுமைப் புரட்சிக்கு ரூ.26.5 கோடி கிடைக்க இருக்கிறது. இதனை வரலாறு காணாத சாதனை என்று கூட்டுறவு அமைச்சர்களே பாராட்டினார்கள். இந்தப் பெரிய உதவியினால் தமிழகத்தின் வறண்ட பகுதிகள் எல்லாம் முப்போகம் விளையும் வளவயல்களாக மாறப்போகின்றன. 1500 டிராக்டர்கள் தமிழக விவசாயிகளுக்குக் கிடைக்கப்போகிறது. பலன் விளைவிக்கக்கூடிய உதவியை நமது தலைவர் பெற்றுவந்தது உண்மையிலேயே பெரிய சாதனை. பசுமைப் புரட்சிக்கு இது புதிய வேகம் தரப்போவது திண்ணம்''.

தமிழ்நாடு அரசு உலக பாங்குடனும் இணைப்புள்ள அனைத்துலக வளர்ச்சி உதவி நிறுவனத்துடன் 1971 ஜூன் மாதம் ஒப்பந்தம் செய்துள்ளது. அந்த ஒப்பந்தப் பெருமையைத்தான் திரு. முத்துசெல்வன் புகழ்ந்திருக்கிறார்.

இதுபோன்ற உதவிகளின் உள்நோக்கங்களை அமெரிக்க ஆசிரியரின் நூலின் பகுதி கொடுத்துள்ள விளக்கங்களுக்குமேல் ஆதாரமே வேண்டியதில்லை.

1. அமெரிக்க டிராக்டர்களின் விலை கடனுக்கு 40 ஆயிரம் ரூபாயாம். இந்தியாவில் உற்பத்தியாகும். டிராக்டரை விடவும் சோஷலிஸ நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் டிராக்டரை விட இருமடங்கு விலை அதிகம் என்று சொல்லப்படுகிறது.

2. அனைத்துலக வளர்ச்சி உதவி நிறுவனத்தின் ஆலோசனைப்படிதான் சிறுவிவசாயிகளுக்கு கிணறு வெட்டுவதற்கோ, ஆழப்படுத்துவதற்கோ கடன் கொடுப்பது தடுக்கப்பட்டு வருகிறது.

இருக்கிற கிணறுக்கும் தோண்ட உத்தேசிக்கப்பட்டிருக்கும் கிணறுக்கும் இடையே 2400 அடி தூரம் இருக்க வேண்டுமன்று கடன் கொடுத்திருக்கும் அந்த நிறுவனம் ஆலோசனை கூறுகிறது. அதன் ஆலோசனைபடி நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பு நிலத்தை ஒரே இடத்தில் வைத்திருக்கும் பெரும் பணக்காரர்களே பெற முடியும். அல்லது வலுக்கட்டாயமாக கூட்டுறவு என்று மாற்றிக்கொள்ள வேண்டும். இன்றைய நிலையில் ஆதிக்கம் உள்ளவர்கள் கையில்தான் நிலம் மாறிவிடும். நம்நாட்டு நில உடமைக்கும், அமைப்பு முறைக்கும் இணையான யோசனையை அந்த ஸ்தாபனம் கூறுகிறது. நம்நாட்டில் சில மாநிலங்களும் ஒத்துக் கொண்டுள்ளன. 52 கோடிமதிப்புள்ள ரயில்வே சாதனங்களையும் வேளாண்மைக் கருவிகளையும் இத்திட்டத்தின் மூலம் இந்தியாவுக்கு இறக்குமதிசெய்யப் போகிறது.

அமெரிக்க சதி:

உலக பாங்கின் மூலம் அமெரிக்க கடன் சூழ்ச்சிகளின் ஒரு பகுதியைப் பார்த்தோம்.

பாகிஸ்தானைத் தூண்டிவிட்டு நம் நாட்டின் மீதுபடையெடுக்கச் செய்தது அமெரிக்காவும், சீனாவும்.

பாகிஸ்தான் படையெடுப்பின்போது அமெரிக்கா பாகிஸ்தானுக்கு எல்லா உதவிகளும் செய்தது நமக்கு வழங்கிவந்த கடன் உதவிகளையும் நிறுத்திப் பணியவைக்க முயற்சித்தது. இந்தியாதான் ஆக்கிரமிப்பு நாடு என்ற பட்டத்தைச் சூட்டித் தாக்குவதற்கு ஐக்கிய நாட்டு சபையில் கரடியாகக் கத்தியது. ஏழாவது கப்பல் படையை இந்துமகா சமுத்திரத்தில் கொண்டு வந்து பயமுறுத்தியது.

நம் படைவீரர்களைக் கொன்றது அமெரிக்க ஆயுதம். நமது 'குக்ரி' கப்பலை மூழ்கடித்தது - அமெரிக்க அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்.

பங்களாதேஷில் பத்து லட்சம் மக்கள் படுகொலை செய்யப்பட்டபோது கவலைப்படாதிருந்தது அமெரிக்க அரசு.

அக்கொடிய அமெரிக்க அரசின் ஆதிக்கத்திலுள்ள பாங்கின் தலைவர் மக்னமரா இன்று போர் நிறுத்தப்பட்டிருக்கும் நேரத்தில் இந்தியாவுக்கு வருகிறார்.

இந்த மக்னமாராதான் வியட்நாமில் ராணுவத் தாக்குதலைத் துவங்கிய அமெரிக்க ராணுவத் தாக்குதலைத் துவக்கிய அமெரிக்க ஜனாதிபதி ஜான்சனின் பாதுகாப்பு இலாகா செயலாளராக இருந்தார். மூன்றாண்டுகளுக்கு முன்பு இந்தியா வந்தபோது இவரை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடந்தது.

பங்களாதேஷ் படுகொலை நடத்தி முடித்து விட்டார்கள். அதில் படுதோல்வி கிடைத்தது. உலக அரங்கிலும் அமெரிக்கா வரலாறு கண்டிராத பெரும் தோல்வியைக் காண வேண்டியதேற்பட்டது. இந்திய மக்களிடம் சோஷலிஸ்ட் பொன்னாடான சோவியத் யூனியனைப் பற்றியும் இதர சோஷலிஸ நாடுகளைப் பற்றியும் நல்லெண்ணம்

வளர்ந்தோங்கி வருகிறது. இந்நிலையைத் தெரிந்து மீண்டும் அமெரிக்கா முயற்சிக்கிறது. சீதையைக் கவர்வதற்கு ராவணன் மாரீசனை அனுப்பினான். மாரீசன் மானாக உருவெடுத்து பஞ்சவடிக்குச் சென்று சீதையை ஏமாற்றியதாக ராமாயணக் கதை கூறுகிறது.

அமெரிக்க எதிர்ப்பு உணர்வில் வளர்ந்துள்ள 55 கோடி மக்களையும் ஏமாற்றுவதற்கு அமெரிக்கப் பெருமுதலாளி களும் அமெரிக்க அரசும் உலக பாங்கின் மூலம் மக்னமாராவை அனுப்பி வைத்திருக்கிறது. மக்னமாரா மான் அல்ல; கொடிய வேங்கை. இந்திய ரயில்வேக்களுக்கும் வேளாண்மைக்கும் வறுமையைப் போக்கவும் கடன் வழங்குவதாகக் கூறுகிறது. இதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

அமெரிக்க உதவியும், உலக பாங்கும் இந்திய நாட்டு வளர்ச்சிக்கு உதவுவதற்கு அல்ல. இந்திய நாட்டைச் சந்தைக் காடாக்க சதித்திட்டமாகும்; இந்திய மக்களின் கோபத்தைத் தணியச் செய்ய ஏமாற்றும் எத்துவாளித் தனமாகும்!

உலக பாங்கின் தலைவர் மக்னமாரா உதவி செய்ய வரும் கருணை வள்ளல் அல்ல; கடன் கொடுக்க வரும் 'சைலக்' போன்ற வட்டிக் கடைக்காரன். உலக பாங்கு அமெரிக்கப் பெருமுதலாளிகள் போட்டுள்ள தூண்டிமுள். அதில் சிக்கிவிட்ட நாடுகள் பல்வேறு வேதனைகளை அனுபவிக்கும் சம்பவங்களைப் பார்க்கிறோம். அமெரிக்காவிடம் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

- உழவுச் செல்வம் (1972, பிப்ரவரி-1)

தியாகத்தின் திருவுருவம் அமரர் சீனிவாசராவ்

ஆர்.நல்லகண்ணு

இருட்டறையில் மெழுகுவர்த்தியைக் கொளுத்தி வைக்கிறோம். எரிந்து வெளிச்சம் கொடுக்கிறது. ஆனால் மெழுகுவர்த்தி எரிந்து மெழுகாக உருகிவிடுகிறது. ஒளி கொடுத்து தன்னை அழித்துக் கொள்ளும் மெழுகுவர்த்தியைப் போல் ஒரு சில லட்சியவீரர்களின் வாழ்க்கை அமைந்துவிடுகிறது.

தோழர் சீனிவாசராவ் கன்னடத்தில் பிறந்தார். பெற்ற தாய், தந்தையார் யாரென்று தெரியவில்லை. ''தலைமறைவு வாழ்க்கை'' என்ற நூலில் ஒரு அத்தியாயத்தில் தனது வாழ்க்கையைப் பற்றிப் பொதுவாகக் குறிப்பிட்டிருக்கிறாரே தவிர, குடும்பப் பூர்வீகத்தைப் பற்றித் தெரிய முடியவில்லை. நல்ல திடகாத்திரமான சரீரம், நாகரிகமான வாலிபன். துள்ளும் இளம்வயதில் அரசியலில் புகுந்தார். 1932ல் சென்னை நகரத்தில் அரசியலில் ஈடுபட்டார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியில் தீவிரமான ஊழியர்களில் முக்கியமானவராக மதிக்கப்பட்டார்.

விடுதலைப் போராட்டத்தில் 'விதேசித் துணி பகிஷ்காரம்' என்பது அந்நியர் ஆட்சியை எதிர்த்து நடத்தும் வலுவான போராட்டமாகக் கருதப்பட்டது. இப்போராட்டத்தால் தங்கள் சுரண்டல் தன்மை பொதுமக்கள் மத்தியில் அம்பலமாவதால், இந்த இயக்கத்தில் ஈடுபடுபவர்களை பிரிட்டிஷ் ஆட்சி ஈவிரக்கமின்றி அடித்து இம்சித்தது. சென்னை நகரில் 'கிளாஸ்கோமல்' துணி விற்பனையாகும் 'சேட்'களின் பெரிய கடைகளின் முன்பு, தோழர் சீனிவாசராவ் மறியல் செய்யாத நாளே இருக்காதாம். அடிபட்டு ரத்தம் சிந்தவில்லை என்றால் மனம் நிம்மதி அடையாதாம். ஒருநாள் மறியலில் போலீஸ்காரர்கள் அடித்துக் காயப்படுத்திக் குற்றுயிராகப் போட்டுவிட்டுச் சென்றனர். பிரபலமான 'ஹிந்து' பத்திரிகைகூட சீனிவாசராவ் இறந்து விட்டாரென்று செய்தி பிரசுரித்துவிட்டது. செத்துவிட்டாரென்று போட்டிருந்த உடலை அந்த இடத்தின் அருகில் வாழ்ந்த ஒரு தாய், தூக்கி வீட்டில் மறைத்து வைத்திருந்து மருந்துகள் போட்டு காயங்களைக் குணப்படுத்தி அனுப்பினார்களாம்.

தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சியின் மூல புருஷர்களில் ஒருவராக இருந்திருக்கிறார். 1943ல் தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சியில் விவசாயிகள் அரங்கத்திற்கு வலியப் பொறுப்பெடுத்தார். கிராம வாழ்க்கையே தெரியாதவர், தமிழ்நாட்டின் கிராமங்களுக்குச் சென்று இயக்கத்தைக் கட்டினார். தஞ்சை, சேலம், ராமநாதபுரம், நெல்லை மாவட்டங்களில் பல கிராமங்களுக்குச் சென்று மக்களிடையே பழகினார். லட்சிய உணர்வோடு, மக்களிடம் கேட்டுத் தெரிந்து பிரச்னைகளுக்குப் பரிகாரம் காணும் வழிகளை ஊழியர்களுக்குப் போதித்தார். பல போராட்டங்களுக்குத் தலைமை தாங்கினார்.

1947ல் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மீது அடக்குமுறை ஏவிவிடப்பட்டது. தோழர் பி.எஸ்.ஆர். தலைமறைவாகச் சென்றார். பின்பும் 1949ல் கட்சி சட்டவிரோதமாக்கப்பட்டது. அப்போதும் தலைமறைவாக இருந்தார்.

தமிழ்நாட்டில் பிறக்காத தோழர் சீனிவாசராவ், தமிழ்நாட்டுக் கிராமங்களில் வாழும் தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கையை ஊன்றிக் கவனித்தார். பொருளாதாரச் சுரண்டலோடு நிலப்பிரபுத்வத்திற்கு அடித்தளமாக அமைந்திருக்கும் சமூகக் கொடுமைகளினாலும் இன்னலுற்று வருவதைக் கண்டார். பண்ணையாட்களை பண்ணையார்கள் ஆடுமாடுகளைப் போல சவுக்கால் அடிப்பதும், பெண்கள் இம்சிக்கப்படுவதும், நாள் முழுவதும் பாடுபட்டும் கஞ்சிக்குக்கூடவழியில்லாமல் குறைந்த கூலி வாங்குவதையும் ''தஞ்சையிலே நடப்பதென்ன?'' என்ற சிறு நூலில் விவரமாக எழுதினார். விவசாயிகள் இயக்கத்தைப் பற்றி அவ்வப்போது எழுதிய பிரசுரங்கள் சுமார் 40க்கு மேலிருக்கும்.

போராட்டக் காலத்தில் பம்பரமாகச் சுழன்று வருவார். 1961ல் உச்சவரம்பு மசோதாவிற்குத் திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று தமிழகம் முழுதும் பாதயாத்திரை நடைபெற்றது. உடல் மெலிந்து ஆஸ்துமாவினால் அவதிப்பட்டுக் கொண்டிருந்த நேரத்திலும் கோவையிலிருந்து புறப்பட்ட உழவர் பாத யாத்திரைக்கு குழுவிற்குத் தலைமை தாங்கினார். மதுரையிலிருந்து புறப்பட்ட குழுவிற்கு தோழர் மணலி தலைமை தாங்கினார். 1961 செப்டம்பரில் உச்சவரம்பு மசோதாவில் குடும்பத்திற்கு 15 ஏக்கராவாகக் குறைக்க வேண்டுமென்று அரசை வற்புறுத்த தமிழ்நாடெங்கும் தாலுகா, சப்-கலெக்டர் அலுவலகங்கள் முன்பு விவசாயிகள் சங்கத் தொண்டர்களும், கம்யூனிஸ்ட் கட்சித் தொண்டர்களும் மறியல் செய்தனர். இரண்டு வாரங்கள் மறியல் போராட்டம் நடந்தது. பதினோறாயிரம் தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர். மறியல் செய்யும் இடங்களுக்கெல்லாம் தோழர் சீனிவாசராவ் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு தொண்டர்களுக்கு ஊக்கமூட்டி வந்தார். 21.9.61ல் நெல்லை மாவட்டத்திற்கு வந்தார். சங்கரன்கோவில் தாலுகா அலுவலகத்தின் முன்பு மறியல் செய்த தொண்டர்களை போலீஸ்காரர்கள் கைது செய்யாமல் சித்ரவதை செய்வதைக் கண்டு ஆத்திரமடைந்தார். அறிக்கை வெளியிட்டார். அவர் கையெழுத்திட்ட அறிக்கையைப் புகைப்படம் எடுத்து அப்படியே வைத்திருக்கிறோம். ஸ்ரீவைகுண்டம், நான்குனேரித் தாலுகாக்களில் மறியல் செய்த தொண்டர்களைப் பார்த்தார்.

நான்குனேரித் தாலுகாவிற்குச் சென்றவுடன் ஆஸ்த்மா அதிகத் தொந்திரவு கொடுத்துவிட்டது. சிறிது நேரத்திற்குள் இளைப்பு அதிகமாகிவிட்டது. பேச முடியவில்லை. உடனே டாக்டரை அழைத்து ஊசி போட்டோம். இரண்டு மணி நேரம் ஓய்வு எடுத்தார். ஊர்வலமாக வந்திருந்த விவசாயிகளிடம் பேச வேண்டுமென்று விரும்பினார். எங்களால் அவருடைய ஆர்வத்தைத் தடுக்க முடியவில்லை. விவசாயப் போராட்ட அனுபவங்களை எடுத்துக் கூறினார். போராட்டங்கள் நடக்கும் போதெல்லாம் தங்களுக்குத் தளபதியாக வந்து நின்று உறுதியூட்டும் தலைவன் - ராணுவத் தளபதி போன்று காட்சியளித்து வந்த வீரன் - இப்போது களைத்து இளைத்து,பேசுவதற்குக் கூட சக்தியற்று திணறிக் கொண்டு பேசுவதைப் பார்த்து விவசாயிகள் கண்ணீர் உகுத்தனர்.

மறுநாள் மாலை நெல்லை ரயிலில் தஞ்சைக்கு வழியனுப்பி வைத்தோம். ரயிலுக்காகக் காத்து நின்ற ஒரு மணி நேரத்திற்குள் முழு நேர ஊழியர்களின் வாழ்க்கை நிலைமைகளைப் பற்றித் துருவித் துருவிக் கேள்விகளைப் போட்டு பதில் வாங்கினார். பொறுப்பான குடும்பத்தலைவனைப் போல அனுதாபத்துடன் கேட்டார். ஊழியர்களின் வாழ்க்கையைப் பற்றி பரிவோடு கேட்ட பண்பான பேச்சுக்களை இன்றும் மறக்க முடியவில்லை.

அவருடைய உடல் நிலையை கவனித்து, நானும் தோழர் மாணிக்கம் அவர்களும், அவரை இரண்டாவது வகுப்பில் பிரயாணம் செய்ய எவ்வளவோ வேண்டினோம். மூன்றாவது வகுப்பில் ஏதாவது ஒரு இடத்தில் துண்டு விரித்தால் போதும் என்று பிடிவாதமாகக் கூறிவிட்டார். அன்றே வேதனையுடன் வழியனுப்பி வைத்தோம்.

உச்சவரம்புச் சட்டத்தில் தனி நபருக்கோ, குடும்பத்திற்கோ முப்பது ஏக்கர் என்பதை 27 ஏக்கராவாகக் குறைப்பதாக அரசாங்கம் அறிவித்தது. இன்னும் சில திருத்தங்களையும் தெரிவித்தது. பதினோறாயிரம் பேர் சிறை சென்றுவிட்டனர். 15 தினங்கள் மறியல் போராட்டம் நடத்திவிட்டோம். இத்துடன் போராட்டத்தை நிறுத்தியிருக்கிறோம். மறியலில் ஈடுபட்ட தொண்டர்களுக்கும் நல்வாழ்த்துக் கூறி செப்டம்பர் 29ம் தேதி பத்திரிகைகளுக்கு அறிக்கை வெளியிட்டார். 30ம் தேதி காலை 5 மணிக்கு நெஞ்சுவலியால் இறந்தார் என்ற செய்தியும் தொடர்ந்து கிடைத்தது. ஆறாத்துயரில் ஆழ்ந்தோம்.

தமிழகத்தில் விவசாயிகள் இயக்கத்திற்கு வித்தூன்றிய தலைவனை இழந்தோம். ஏழாண்டுகள் கடந்துவிட்டன. மற்ற போராட்டங்கள் நடந்து வருகின்றன. விவசாயத் தொழிலாளர் கோரிக்கைகளும், விவசாயிகளின் பிரச்னைகளும் முன்பு இருந்ததைவிட துலாம்பரமாகத் தீவிரமடைகின்றன. இக்கட்டத்தில் தோழர் சீனிவாசராவ் அவர்களின் தியாக உணர்வும், லட்சியப் பிடிப்பும் ஊர் ஊராகச் சென்று விவசாயிகளின் வாழ்க்கையைத் துருவிப் பார்த்து ஆராயும் சிந்தனைப் போக்கும் ஊழியர்களிடம் காட்டிய பண்பான பரிவும் நமக்கு வழிகாட்டிகளாகத் திகழ்கின்றன. அமரர் சீனிவாசராவ் அவர்களின் நினைவு நாளில் விவசாயிகளின் இயக்கத்தை மேலும் விரிவுபடுத்த உறுதி கொள்வோம்!

- உழவுச் செல்வம் (1.10.1968)

பாட்டாளிகளைப் பாடிய பாவலர்கள்

ஆர்.என்.கே.!

மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், கவிஞர் தமிழ்ஒளி, கவிஞர் வெ.நா.திருமூர்த்தி, பாவலர் வரதராசன் - நால்வரும் சமகாலத்தில் வாழ்ந்தவர்கள், சமுதாயப் பார்வையிலும் ஒருமித்த கருத்துக் கொண்டவர்கள்.

அமரர் ஜீவா உருவாக்கிய இலக்கியத் துறையில் ஈடுபட்டவர்கள்.

தமிழ் இனத்தில் வாழையடி வாழையாக, காலத்துக்குக் காலம் புதிய கருத்துகளுக்காகவும், சமுதாய மாற்றத்துக்காகவும் குரல் கொடுத்த கவிஞர் பெருமக்களின் மரபு வழி நின்று, புதிய கருத்துக்களை அதற்கேற்ப உருவங்களைக் கையாண்டு தமிழகத்தில் தடம் பதித்துச் சென்றவர்களாவர்.

பண்டைத்தமிழ் கவிஞர்களில் மூன்று பிரிவினர் உண்டு. 1. அரசவைக் கவிஞர்கள், 2. மக்களவைக் கவிஞர்கள், 3. பக்திக் கவிஞர்கள்.

இவர்கள் முறையே ஆஸ்தானக் கவிஞர்கள் என்றும் பாணர்கள் என்றும் நாயன்மார்கள் ஆழ்வார்கள் என்றும் வழங்கப்படுகிறார்கள்.

உண்மைக்கு மாறாக உள்ள எதையும் ஒத்துக் கொள்ள முடியாது என்று உறுதியோடு, 'இறைவனே ஆனாலும், குற்றம் குற்றமே' என்றுவாதிட்டதாகக் கூறப்படும் 'புலவர் நக்கீரன்' - அவர் புகழ் இன்றும் நிலைத்து நிற்கிறது. உள்ளத் தெளிவோடு, உறுதி குலையாது, நியாயத்தை நிலைநாட்ட நிற்பவர்கள் - 'நக்கீரன் பரம்பரை' என்று சொல்லிக் கொள்வதிலே பெருமிதம் கொள்கிறார்கள்.

வாழ்வாருக்கு வாழ்த்துக்கூறும் துதிபாடிக் கவிஞர்கள் -உலாவும், தூதுக்களும் பாடினார்கள்.

இனக்குழுத் தலைவனிடமோ, மன்னனிடமோ பரிசில் பெறச் செல்லும் புலவர்களில் சிலர், மக்களின் துயரை எடுத்துச் சொல்லி, நிவாரணம் தேடும் மக்கள் தூதுவர்களாகச் செயல்பட்டிருக்கிறார்கள்.

புலவர் வெள்ளைக்குடி நாகனார், சோழமன்னன் கிள்ளி வளவனிடம் உழவர்களின் துன்பங்களை எடுத்துக் கூறுகிறார். அவர்களின் பெருமைகளையும் சேர்த்துச் சொல்கிறார்.

ஏரோட்டும் உழவர்களின் குறைகளை நீக்கினால், எல்லாக்குடிகளும் வாழ்வார்கள். இதன்மூலம் உனது எதிரிகள் புறமுதுகு காட்டி ஓடிவிடுவார்கள் என்று இடித்துரைக்கிறார் புலவர்.

''பகடு புறந்தருநர் பாரமோம்பிக்

குடிபுறந்தருகுவை யாயின்

அடிபுறந்தருகுவர் அடங்காதோரே''

என்று அறிவுறுத்துகிறார்.

வேளாண்மைத் தொழில் தோன்றிய பின்னரே நாகரிகம் பரவுகிறது.

''உழுவார் உலகத்தார்க்காணி' ''உழவினோர் கைமடங்கின் இல்லை விழைவதூஉம் விட்டேம் என்பார்க்கு நிலை''-

உழவு நடக்காவிட்டால் எல்லாம் துறந்த சந்நியாசிகளின் வாழ்வுகூட நடக்காது என்று உழவுத் தொழிலின் பெருமையைத் திருவள்ளுவர் பாராட்டுகிறார்.

கவிச்சக்கரவர்த்தி கம்பன் ஏரெழுபது பாடிச் சிறப்பித்ததாகச் சொல்லப்படுகிறது.

உழவுத் தொழிலுக்கு அடுத்து, நாடு முழுதும் பரவலாக நடத்தப்பட்டுவந்த தொழில் நெசவு. நெசவாளர்களின் கை நேர்த்தியுடன் நெய்யப்பட்ட ஆடையைப் 'பாலாடையன்ன நூலாடை'யென்று ஒரு புலவர் வர்ணிக்கிறார்.

''செய்யும் தொழிலைச் சீர்தூக்கிப் பார்த்தக்கால் நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை'' என்று தனிப்பாடல் கூறுகிறது.

உழவும், கைத்தறி நெசவும் தமிழகத்தின் அடிப்படையான, பழமையான தொழில்களாகும். ''கொட்டை நூற்று சம்பாதித்த சொத்து'' என்று கிராம முதியவர்கள் கூறக் கேள்விப்பட்டிருக்கிறோம். நூற்றல் பொதுவான தொழிலாக இருந்தது, நெசவு - தொழில் நுட்பமுள்ளதாக இருந்ததால் - தனியாகத் தேர்ச்சியடைந்த ஒருசில வகுப்பாரின் தொழிலாகப் பிரிக்கப்பட்டது.

ஐரோப்பிய நாடுகளில் தொழில் புரட்சி ஏற்பட்டு எந்திரக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர், உற்பத்திக் கருவிகளிலும் உறவு முறைகளிலும் மாற்றங்கள் தோன்றின.

இந்திய நாட்டிலும் அதன் பாதிப்புகள் ஏற்பட்டன. பிரிட்டனின் வாணிபச் சுரண்டலைத் தொடர்ந்து அந்நிய மூலதன முதலீடுகள் செய்யப்பட்டதும் ஏற்றத்தாழ்வுகள் அதிகரித்தன.

கிராமப் புறங்களிலும் பாகுபாடுகள் தோன்றின. நேரடி சாகுபடி செய்யாத நிலப் பிரபுத்துவ முறை புகுத்தப்பட்டது. (Absentee Landlordism) ஜமீன்தாரி ரயத்துவாரி முறைகள் அமுலாக்கப்பட்டன.

உழைப்புக்குள்ள பெருமை குறைந்து, உழைக்கிறவர்கள் சமுதாயக் கட்டமைப்பில் தாழ்த்தப்பட்டவர்களாகவும் தரம் குறைந்தவர்களாகவும் கருதப்பட்டார்கள். இந்த நிலையே நாடு அடிமைப்படக் காரணமாக இருந்ததைப் பாரதி புரிந்து கொண்டார்.

''உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம் - வீணில்
உண்டு களித்திருப்போரை
நிந்தனை செய்வோம்'' என்றார்.

தொழிலாளர்களை - *''பிரம்மதேவன் கலை இங்கு நீரே''* என்று ஏற்றிப் புகழ்ந்தார்.

1918ல் தொழிலாளர் வேலை நிறுத்தத்தை ஆதரித்து பாரதி எழுதினார்.

''இப்பொழுது நமது நாட்டில் அங்கங்கே பல தொழிற்சங்க ஸ்தாபனங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கத்தார்கள் சம்பள ஏற்றத்துக்கும் வேலை நேரத்தைக் குறைப்பதற்கும் வேண்டிய யத்தனங்கள் செய்து வருகிறார்கள். இப்பிரயத்தனங்கள் எல்லாம் முற்றிலும் நியாயமே. இதில் ஐயமில்லை'' என்று ஆணித்தரமாகக் குறிப்பிடுகிறார்.

பாரதி வழிவந்த புரட்சிக்கவி பாரதிதாசன்.

''நடவு செயும் தோழர் கூலி
நாலணாவை ஏற்பதும்
உடலுழைப்பிலாதோர்
உலகை ஆண்டு உலாவலும்''
என்ன நீதி என்று வினவுகிறார்.
'மண்மீதில் உழைப்போரெல்லாம்
வறியராம் உரிமை கேட்டால்
புண்மீதில் அம்பு, பாய்ச்சும்
புலையர் செல்வராம்'' என்று கொதிப்படைகிறார்.

மேட்டுப் பாங்கான வானம் பார்த்த பூமி தமிழ்நாட்டில் அதிகம். ஆதலால் புஞ்சைப் பிரதேசங்களில் குறிப்பாகக் கரிசல் பூமியில் பருத்தி பயிரிடப்பட்டது. மூலப் பொருளான பருத்தியைக் கொண்டே நெசவுத் தொழிலும் வளர்ந்தது. நம்நாட்டுத் துணிகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுவந்தன.

பருத்தி விளைவதோடு தமிழகத்தின் வெப்ப, தட்ப நிலையும் பஞ்சாலைகளைத் துவங்குவதற்கு வாய்ப்பாக உள்ளது.

சென்னை பக்கிங்காம் மில்லும் மதுரை, தூத்துக்குடி, விக்கிரமசிங்கபுரம் கோரல் (பவள) மில்லும், பாண்டிச்சேரி ரோடியர், பிரெஞ்சு மில்களும், கோவை ஸ்டேன்ஸ் மில் ஆகியவை வெள்ளை முதலாளிகளால் துவங்கப்பட்டன.

இதைத் தொடர்ந்து தமிழகத்தில் புதிய தொழிலாளி வர்க்கம் உருவாக்கியது. செய்யும் தொழிலுக்குரிய கருவிகள் சொந்தமில்லாமல் உடல் உழைப்பு மட்டுமே செய்யும் தன்மையுள்ள உழைப்பாளி வர்க்கம் உருவாக்கியது. உற்பத்தி இடமும் மாற்றமடைந்து, தொழிற்சாலைகளாக வளர்ந்தது. ஆலைத் தொழிலாளராக மாறினார்கள். செய்யும் தொழிலுக்கும் உழைப்புக்கும் தக்கவாறு தன்மை மாறியது.

'தொழிலாளர்கள் உழைப்பிலிருந்து உருவான மூலதனச் செல்வம், அவர்களிடமிருந்து பிரிக்கப்படுகிறது. அதிலிருந்து அந்நியமாக்கப்படுகிறார்கள்' என்று மாமேதை மார்க்ஸ் குறிப்பிடுகிறார்.

1930வது ஆண்டுகளில் தொழிலாளி வர்க்கப் போராட்டங்கள் வெடித்தன. ஜீவா அவர்கள் போர்க்களத்தில் முன்னின்றார்.

பாடுபடும் பாட்டாளித் தோழா - இந்தப்
பாருலகின் சொந்தக்காரன் வேறில்லை நீதான்
....
இன்று புதிதாகப் பிறந்தோம் - என்று
எழுந்து புது உலகில் ஏறு போல் நட!

என்ற ஜீவாவின் பாடல்கள் எங்கும் ஒலித்தன.

புதிதாகப் பிறந்த பாட்டாளி வர்க்கம் (Proletariat) என்று ஜீவா வரையறுத்துக் கூறுகிறார்.

''கோடிக்கால் பூதமடா - தொழிலாளி
கோபத்தின் ரூபமடா''

என்று பாட்டாளி மக்களின் ஆவேசத்துக்கு உருவமைத்தார்.

ஜீவா வழிவந்த மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டையும், கோடிக்கால் பூதமாகப் புறப்பட்ட தொழிலாளர்கள் வெற்றி பெறுவார்கள் என்ற உறுதியோடு - முரசு கொட்டுகிறார்.

காலி என்றும் கூலி என்றும்
கேலி செய்யும் கூட்டமே
காத்துமாறி அடிக்குது - நீர்
எடுக்கவேணும் ஓட்டமே!
ஏழைகளின் புதுஉலகம் தெரியுதடா

ஏமாந்து வந்தநிலை ஒழியுதடா!

என்று கட்டியங் கூறுகிறார்.

புதுமை காணப் போராடிய தமிழ்ப் புலவர்கள் வரிசையில் நின்று கவிஞர்கள் தமிழ்ஒளி, திருமூர்த்தி, வரதராசன் மூவரும் புத்துலகம் படைக்கப் புறப்பட்டிருக்கும் பாட்டாளி வர்க்கத்தின் பல பிரிவினர்களையும் கருப்பொருளாகக் கொண்டு பாடல்களை புனைந்திருக்கிறார்கள்.

— ஆர்.என்.கே. - 'பாட்டாளிகளைப் பாடிய பாவலர்கள்' - என்.சி.பி.ஹெச் வெளியீடு - 1968.

ஜீவாவுக்கு இரங்கல்

''குற்றாலம் அருவியிலே ஜீவா - நீ
குளித்து நிற்கையிலே
வற்றாத தமிழ்க் கடலும்
வந்து நிற்குதென்பேன்
வற்றாத தமிழ்க் கடலும்
வறண்ட விறகாகி
பற்றி எரியக் கண்டேன்
பார்த்த மனம் பதறுதையா''

இரா.நல்லகண்ணு

(ஜீவா இறந்து எரியூட்டப்பட்ட பின் பிராட்வே ஜனசக்தி அலுவலகம் வந்த ஆர்.என்.கே. எழுதிய கவிதை *1963, ஜனவரி, 18)*

மதுரை சிறையில் தோழர்.சுடலைமாடன்

ஆர்.நல்லகண்ணு

விவசாயிகள் நிறைந்த கிராமம் பாப்பான்குளம். ஊரைச் சுற்றிலும் படைத்தளம் குவித்ததுபோல் திட்டுத்திட்டாக தாழ்த்தப்பட்ட வகுப்பினர் வசிக்கிறார்கள். வயல்களையெல்லாம் உழுது பயிராக்கி தானியத்தை அள்ளிக் கொடுத்துவிட்டு, இறுதியில் வெறும் பெட்டியும் சுளகுமாக வீடு திரும்புவதே பழக்கமாக இருந்தது. பொழுதெல்லாம் உழைத்தாலும் பிழைப்பில் கௌரவமில்லை; வறுமை நீங்கியபாடில்லை. பிரபுத்துவச் சுரண்டல் ஒருபுறம்; தீண்டாதாரென்று ஒதுக்கிவைக்கப்பட்டதால், சாதிச் சமூகச் சுரண்டல் மற்றொரு புறம். இவ்வாறு தாழ்த்தப்பட்டோர் இரட்டைச் சுரண்டலுக்கு இரையாயினர். யானைக்குத் தன்பலம் தெரியாதது போல, உழைப்பின் பலனை பிறர் தட்டிப் பறித்துச் செல்வதை அறியாதிருந்தனர்.

நாட்டில் விடுதலை வேட்கை மிகுந்த நேரத்தில்தான் சமுதாயத்தில் இவ்வாறு ஏன் தாழ்வுற்றிருக்கிறோமென்ற சுயநினைவு தோன்றியது. 1945ல் பாப்பான் குளத்திலும் வைத்தியர் சண்முகம் தலைமையில் இந்திரகுல வேளார் சமூக சீர்திருத்த சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இச்சங்கத்தில் தோழர் சுடலைமாடனும் சேர்ந்து தீவிரமாகச் செயலாற்றினார். குடிப்பழக்கத்தைக் கட்டுப்பாடாக நிறுத்தினார். ஊர்க்கட்டுப்பாட்டை அமுலாக்குவதில் முன்நிற்பார். சாதி சீர்திருத்தங்களைத்தான் சமூக சங்கங்களால் நினைக்க முடிந்ததே தவிர வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படுத்த வழியில்லை; இச்சாதி ஒற்றுமையைக்கூட நிலப்பிரபுக்கள் அனுமதிக்கத் தயாரில்லை; உடைக்க முற்பட்டனர். நிலப்பிரபுக்களின் சூழ்ச்சியை முறியடிக்க சாதிச் சங்கத்தால் முடியவில்லை. ஆகையால் சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட சாதியினர் முன்னேற வேண்டுமானாலும், வர்க்க ஸ்தாபனத்தில் சேர்ந்துதானாக வேண்டுமென்பதை அனுபவத்தில் கண்டனர். வைத்தியர் சண்முகம் உட்பட அனைவரும் செங்கொடி விவசாயிகள் சங்கத்தில் சேர்ந்தனர். அப்பொழுது தோழர் சுடலை மாடனும் விவசாயிகள் சங்கத்தில் சேர்ந்தார்.

1949ல் கம்யூனிஸ்ட் கட்சி, விவசாயிகள் இயக்கம் போன்ற முற்போக்கு இயக்கங்களின் மீது சர்க்காரின் அடக்குமுறைப் பாணம் அவிழ்த்துவிடப்பட்டது. பாப்பான்குளத்தில் நெல்லை மாவட்ட கம்யூனிஸ்ட் தலைவர்களான பாலதண்டாயுதம், மீனாட்சிநாதன் மற்றும் பலரும் தலைமறைவாக இருப்பதாகக் கேள்விப்பட்டு போலீஸ் படைகள் விரைந்தன. சங்கத்தின் முக்கிய ஊழியர்களைப் பிடிக்க வலைபோட்டனர்; வீடுகளைச் சூறையாடினர். தோழர் சுடலை மாடனையும் போலீஸ் தேடியது, பல நாட்கள் ஊருக்கே வராமல் கிராமங்களில் சுற்றியலைந்தார். இவ்வாறு பல விவசாய வாலிபர்கள் கிராமத்தில் அமைதியாக வாழமுடியாத நிலை இருந்தது.

அடித்தால் பந்து துள்ளும்; அடக்கு முறையினால் மக்கள் இயக்கத்தை அடக்கிவிடமுடியாது; உறுதியுடன் வளர்ந்தோங்கும் என்பதைப் பாப்பான்குளத்தில் பார்த்தோம்.

1955ல் விவசாயிகள் சங்கம் வேகமாக வளர்ந்தது. நிலத்தை விட்டு வெளியேற்றுவதைத் தடுக்கப் பெரும் போராட்டம் நடைபெற்றது. தண்ணீர் பாய்ச்சித் தொழி கலக்கிய வயல்களில், கொடுத்த கூலியை வாங்கிக் கொண்டு, குனிந்த தலை நிமிராமல், நாற்று நட்டு முடிந்து வெளியேறும் விவசாயத் தாய்மார்கள், இப்பொழுது நடுகைக்குச் செல்லவில்லை. நிமிர்ந்து நின்றார்கள். பரம்பரையாகப் பயிரிட்ட வயலில் பிறரை இறங்க விடமாட்டோம் என்று போர்க் குலவையிட்டனர். பெண்களுட்பட 150 விவசாயிகளைப் போலீஸ் கைது செய்தது. அப்பொழுது தோழர் சுடலைமாடனும் கைது செய்யப்பட்டார்.

விவசாயிகள் சிறை சென்றாலும், கோரிக்கையில் வெற்றி கண்டனர். சர்க்கார் சட்டமியற்றாவிட்டாலும், விவசாயிகளின் ஒன்றுபட்ட பலத்தால், பாப்பான்குளம் கிராமத்தில் நில வெளியேற்றம் தடுத்து நிறுத்தப்பட்டது. வெற்றி கண்ட விவசாயிகள் 1957ல் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநாட்டை நடத்த முன்வந்தனர். மகாநாட்டில் தோழர் சுடலைமாடனும் தொண்டராகச் சேர்ந்து சிறந்த முறையில் சேவை செய்தார்.

பாப்பான்குளத்தில் பொது இயக்க வேலைகளில் தீவிரமாகப் பங்குகொண்ட தோழர் சுடலைமாடனை 1958ல் சுப்பையா சேர்வை கொலை வழக்கில் சேர்த்துவிட்டார்கள். தோழர்கள் சண்முகசுந்தரம், சம்பந்தம், வேலு ஆகியோருடன் ஆயுள் தண்டனை அனுப்பிவித்து வருகிறார்.

உழைப்பையே மூலதனமாகக் கொண்டு வாழ்ந்த குடும்பத்தில் தோழர் சுடலைமாடன் அன்றாடம் வேலை

செய்துதான் மற்றவர்களை காப்பாற்றி வந்தார். குடும்ப ரட்சகன் சிறையிலே! அன்புக் குழந்தைகளிருவர் - எட்டு வயதுப் பையன்; ஐந்து வயது நிரம்பிய பெண்; இளம் மனைவி, வயோதிகப் பெற்றோர். தோழர்.சுடலைமாடனை நம்பி வாழ்ந்த ஐந்து ஜீவன்கள் வறுமையால் வாடுகின்றனர். மனைவி பாடுபட்டுத்தான் குடும்பம் ஜீவித்து வருகிறது.

உரிமைக்குரலெழுப்பிய உழைப்பாளிக் குடும்பத்தின் கதியைப் பாரீர்! விவசாயப் பெருங்குடி மக்களே! கிராமத்தில் ஜனநாயகம் தழைக்கப் பாடுபட்ட விவசாயிகள் சங்க ஊழியர் சுடலைமாடனை ஆயுள் தண்டனை அனுபவிக்கவிடலாமா?

சாந்தி - 15.4.1964

இரு உலகங்கள்

ஆர்.நல்லகண்ணு

கடல் சூழ்ந்த உலகம் ஒன்றாக இருந்தாலும், உலகில் வாழும் மக்கள் இரு பிரிவுகளாக வாழ்கின்றனர். மானிடசாதி இனமாகக் கருதப்பட்டாலும் இருவிதமான வாழ்க்கை முறை, வாழ்வு நெறி, அரசியல் அமைப்புகள் உலகில் இருக்கின்றன. ஒன்று சோஷலிச அமைப்பு. இரண்டாவது முதலாளித்துவ அமைப்பு. சோஷலிச வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ள அரசு சோவியத் ரஷ்யா முதலாளித்துவ வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டாக உள்ளது அமெரிக்கா.

''எல்லோரும் எல்லாச் செல்வமும் எய்தலாலே இல்லாரும் இல்லை எடுப்பாரும் இல்லை.'' என்று சமூக அமைப்பைக் கனவு கண்டான் கவிச்சக்கரவர்த்தி கம்பன். ''இல்லை என்ற கொடுமை உலகில் இல்லை எனச் செய்வோம்'' - ''ஏழை என்றும் அடிமை என்றும் எவனுமில்லை சாதியில்'' என்று கொள்கை முழக்கம் செய்தான் - புரட்சிக்கவி பாரதி. கவிஞர்களெல்லாம் கனவு கண்ட இன்பபுரியாகத் திகழ்கிறது சோவியத் யூனியன்.

அமெரிக்கா

நினைத்ததையெல்லாம் ஒரு சிலரால் பெற முடியும்; அவர்களால் அந்நாட்டின் அரசியலை நிர்ணயிக்க முடியும் என்று கோடீஸ்வரர்களுக்கு தனிமனித சுதந்திரம்'' வழங்கியுள்ள குபேரபுரி அமெரிக்கா.

இரு நாடுகளிலும் உள்ள அரசியல் அமைப்பு, வாழ்க்கை முறை, வாழ்வு நெறி, பொருளாதார அமைப்பு ஆகிய எல்லாமே நேர்மாறானவை. இன்று இந்த இரு அமைப்புகளில் எது சிறந்தது எந்த அமைப்பு உலகில் அமைதியை நிலைநாட்டும்? இந்தத் தத்துவம் மானிட சமூதாயத்தில் நோய் நொடி நீங்கி, வறுமை ஒழிந்து, நிரந்தர சமாதானத்தை நிலைநிறுத்தும் என்பதை உலக மக்கள் சொந்த அனுபவத்தில் பார்த்துத் தேர்ந்து வருகிறார்கள். தங்கள் நாடுகளிலும் எம்முறையைக் கொண்டு வந்தால் பிரச்சினைகள் தீர வழி ஏற்படும் என்பதையெல்லாம் சிந்தித்துச் செயலாற்றும் காலம் நெருங்கிவிட்டது.

இந்திய நீதிதேவர்களின் பொய்மைக் கூற்று

நம் நாட்டில் அமெரிக்கா குபேரபுரி வாழ்க்கையின் சிறப்பு பற்றித்தான் தினத்தாள்களில் சிலாகித்துச் சொல்லப்படுகின்றது. நாட்டில் நீதியை நிலைநிறுத்தத் துடியாகத் துடிக்கும் பெருநீதிமன்ற (Supreme Court) தர்மபூபதிகள் அண்மையில் சென்னை நகரில் நடைபெற்ற அறிஞர் பெருமக்களின் கூட்டத்தில் பேசினர், ''உலகில் ஜனநாயக அமைப்பு சிறப்பாக இருக்கும் முதல் நாடு அமெரிக்கா, இரண்டாவது பிரிட்டன், மூன்றாவது நாடு கனடா'' என்று பேசினார் ஒரு நீதிபதி. பூனை கண்ணை மூடிக்கொண்டு 'சிவசிவா' என்று சைவமந்திரம் ஜெபித்து ரத்தம் குடிக்கக் காத்திருந்ததாம்! அதைப்போல் இருக்கிறது நீதிமகனாரின் பேருரை! பூனை கண்ணை மூடிவிட்டால் உலகம் இருண்டுவிடுமா? அறிவு ஒரு சிலருக்கு பட்டா பத்தியதை அல்ல; பூர்வீகச் சொத்துமல்ல.

ஜனநாயகம் தழைத்து ஓங்குவதாக பறைசாற்றும் 'அமெரிக்காவில் நீக்ரோக்களின் உரிமைக்கு செவிசாய்த்த ஜனாதிபதி ஜான் கென்னடி அமெரிக்க முதலாளிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார். அமெரிக்காவின் காந்தி - நீக்ரோக்களின் தலைவர் - மார்டின் லூதர் கிங்கை சுட்டுக் கொன்றார்கள். லூதர்கிங் அரசியல்வாதியல்ல; கிறிஸ்துவ மதப் பாதிரியார் ஜனாதிபதித் தேர்தலுக்கு அபேட்சகராக நிற்கத் தயாராக இருந்த ராபர் கென்னடியும் - வியத்நாம் பிரச்சினையில் ஜான்சனுக்கு விரோதமாகப் பிரச்சாரம் செய்தாரென்பதற்காக அவரை வன்கொலை செய்தனர்.

உலகைக் குலுக்கிய இக்கொலைகளைச் செய்பவர்கள் சாதாரண - படித்தறியாதவர்களல்ல. இக்கொலைகளுக்கெல்லாம் சூத்ரதாரிகளாக இருப்பவர்கள் அமெரிக்கக் குபேரர்கள் - உலக எண்ணை அரசர்கள் - ராக்பெல்லர் போன்ற டெக்சாஸ் முதலாளிகள் என்பதை உலகம் அறியும்.

நாள் தவறாமல் கொலைகளும், கொள்ளைகளும் நடத்திவரும் அமெரிக்கா ''பணநாயக அமைப்பு முறை''யை மனமாரப்புகழ்ந்துரைக்கும் பெரிய மனிதர்களின் கையில்தான் - 50 கோடி இந்திய மக்களின் நீதித்தராசு கொடுக்கப்பட்டிருக்கிறது - நீதித் தராசு நேர்மை தவறாது என்பதற்கு என்ன உத்திரவாதம்? ஓரஞ்சாயாது நிற்குமா என்பதே சந்தேகமாக இருக்கிறது.

ஒலிம்பிக்கில் அமெரிக்காவுக்கு அவமானம்

உலக விளையாட்டுப் போட்டி ஒலிம்பிக் மெக்ஸிகோவில் நடைபெறுகிறது. அமெரிக்காவிலிருந்து கலந்து கொண்டிருப்பவர்களில் பலர் நீக்ரோக்கள் முதலில் நீக்ரோ வாலிபர்கள் அமெரிக்கா சார்பில் கலந்துகொள்வது பற்றி சந்தேகம் கொண்டனர். உலகப் போட்டியில் ஈடுபட்டு பரிசுகளைப் பெற்றுத் தரும் எங்களுக்கு - அமெரிக்காவில் உரிமை இல்லையே என்ற வேதனையை தெரிவித்தனர்.

200 மீட்டர் ஓட்டப் பந்தயம் நடைபெற்றது. அதில் தாமி ஸ்மித் என்ற அமெரிக்க நீக்ரோ வாலிபர் தங்கப் பதக்கம் பெற்றார். ஜான் கார்லோஸ் என்ற மற்றொரு அமெரிக்க நீக்ரோ இளைஞர் வெண்கலப் பதக்கம் பெற்றார். பரிசுபெற்ற மூவர்களையும் மேடையில் ஏற்றி அவர்களின் தேசிய கீதம் பாடப்பட்டது. அமெரிக்க தேசிய கீதம் பாடும் பொழுது அந்த இரு இளைஞர்களும் தலையைச் சாய்த்தனர். கறுப்பு உடையணிந்த கைகளை உயர்த்தி முஷ்டி மடக்கி நீக்ரோ வணக்கம் (Black Power Salute) செலுத்தினர். இந்நிகழ்ச்சி தொலைதூரக் காட்சிகளில் காட்டப்பட்டுவிட்டன. உலக அரங்கில் அமெரிக்காவிற்கு அவமரியாதை செய்தனர் என்பதற்கு இரண்டு அமெரிக்க நீக்ரோ இளைஞர்களையும் ஒலிம்பிக் குடிசையிலிருந்து அமெரிக்கக் குழு வெளியேற்றிவிட்டது.

குபேரபுரியில் கொல்வறுமை

அமெரிக்க வாழ்க்கைக்கு வருவோம்! வறுமை கொழிக்கும் குபேரபுரிக்கு வருவோம்! கடந்த ஆகஸ்ட் மாதத்தில் ஏழைகளின் அணிவகுப்பு நியூயார்க் நகரத்தில் நடைபெற்றது. லட்சக்கணக்கான ஏழைகள் கலந்துகொண்டனர்.

அமெரிக்காவில் 5 கோடி ஏழைகள் இருக்கிறார்கள் என்று அமெரிக்கப் பத்திரிகை ஆசிரியர் ஹாரிங்டன் என்பவரே கூறுகிறார். அமெரிக்க ஜனாதிபதி கென்னடி '1 கோடி 70 லட்சம் அமெரிக்கர்களுக்குப் போதுமான ஆகாரம் கிடைப்பதில்லை' என்று ஒத்துக்கொண்டார்.

50 லட்சம் பேருக்கு வேலை கிடைக்காமல் தெருச் சுற்றித் திரியும்போது, அதே நாட்டில் 120 குபேரர்கள் ஆண்டொன்றுக்கு லட்சோபலட்சம் டாலர் வருமானத்தைப் பெறுகிறார்கள். மலையும் மடுவுமான ஏற்றத்தாழ்வு மிகுந்த சமுதாயத்தில் - நீதி நடக்குமா? நேர்மை இருக்குமா? துப்பாக்கி உற்பத்தி செய்யும் பெருமுதலாளி - துப்பாக்கி லைசன்ஸ் முறையைக்கொண்டு வராமல் தடுக்கும் சக்தி படைத்திருக்கின்றன. ஜனாதிபதியின் கென்னடியைக் குறி தவறாமல் சுட்ட துப்பாக்கி பற்றிப் பெருமையாக விளம்பரப்படுத்தும் முதலாளிகள் வாழும் அவர்களின் தனிமனித சுதந்திரத்தை அனுமதிக்கும் பணநாயக நாடு அமெரிக்கா! கொடிய ஆயுதங்களைத் தயாரிக்கும் முதலாளிகளைப் பாதுகாக்கவே, இளம் வாலிபர்களை அவர்களுடைய விருப்பத்திற்கு மாறாக வியத்நாமிற்கு அனுப்பிக் கொடுமை செய்யும் அமெரிக்கா!

சோவியத் ரஷ்யா!

புதிய உலகம்! புதிய அமைப்பு! புதிய நாகரிகம்! பாண்பாடுள்ள பழக்க வழக்கங்கள்! சிசுவிலிருந்தே சிறந்த கல்வி முறை! சாதி,மத, நிற, பால் வேறுபாடற்ற மனோபாவம்! உழைப்பிற்கு சிறப்புக் கொடுக்கும் அரசியல் அமைப்பு. வாலண்டினாவையும், ககாரியனையும் உருவாக்கிய சோவியத்தில் மத்திய ஆசியப் பகுதி பின்தங்கிய இடமாக இருந்தது. இப்பொழுது அங்கே 10 ஆயிரம் மக்களில் 88 பேர் பல்கலைக் கழகத்தில் படிக்கும் மாணவர்களாக இருக்கிறார்கள். பிரான்சில் 10 ஆயிரத்தில் 40 பேர்தான் பல்கலைக்கழக மாணவர்கள். இத்தாலியில் 34; மேற்கு ஜெர்மனியில் 31; மத்திய ஆசியப் பகுதியிலேயே மேற்கத்திய முதலாளித்துவ நாடுகளைவிட அதிகமான மாணவர்கள் படிக்கிறார்கள்.

முதலாளித்துமும் சோஷலிஸமும் உருவாக்கும் இரு வேறு இளைஞர் உலகம்

மேற்கத்திய முதலாளித்துவ நாடுகளில் வாலிபர்களிடம் ஒழுக்கம் சீர்குலைகிறது. ஆண் பெண் உறவிலேயே அதிகக் கவனம் செலுத்திக் காமக் களியாட்டங்களில் அதிகமாக ஈடுபடுகின்றார்கள். ஒரு சிலரைத் தவிர பெரும்பகுதி வாலிபர்கள் - இளைஞர்களும் - இளம்பெண்களும் - மேலோட்டமாகத் தெரியும் பொய்மையான வாழ்வைப் போற்றிக் கையாண்டு வருகிறார்கள். காய்ந்த வைக்கோலில் சிறுபொறி விழுந்து தீப்பற்றி விடுவதைப் போலுள்ள நிலையில் - பீதியில் வாழ்கிறார்கள்'' என்று மேற்கு ஜெர்மனியிலுள்ள கல்வி நிபுணர் ஹெயின்ஸ் கிராப்னர் தனது ''புதல்வர்களும் புதல்விகளும்'' (Sons and Daughters) என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

அமெரிக்காவில் 17 வயதுக்குட்பட்ட இளைஞர்களில் 100க்கும் 12 பேர் குற்றவாளிக் கூண்டில் விசாரணைக்கு நிறுத்தப்படுகிறார்கள்! இது உலகில் ஒருபுறம் - குபேரபுரி வாழ்வின் லட்சணம்!

உலகில் - நவம்பர் புரட்சிக்குப் பின் புதியவாழ்வு மலர்ந்துள்ள சோவியத் ரஷ்யாவில் -

1961ல் காம்சோமால் பத்திரிகை மாணவர்களிடையே விபரம் சேகரித்தது, 17446 பேர்களிடம் கேள்வி அனுப்பியதில் 96 சதவீதம் பேர் பதில் கொடுத்தார்களாம். உங்கள் தலைமுறையில் என்ன நினைக்கிறீர்கள்? உன் தனிவாழ்வில் எதாவது குறிக்கோள் இருக்கிறதா? என்பதே கேள்வி.

மக்களுக்கு சேவை செய்வது! குறிப்பிட்ட தொழிலில் முன்னேறுவது, மகிழ்ச்சிகரமான குடும்பத்தை நடத்துவது புதிய கண்டுபிடிப்புகளை ஏற்படுத்துவது, எல்லா வகைகளிலும் முன்னேற்றம் காண்பது - வெகுதூரம் உள்ள ஸ்டெப்பி, துந்தரா பனிக்காடுகளுக்கும் வனாந்தரமான தைகா காடுகளுக்கும் பாலைவனங்களுக்கும் சென்று கன்னி நிலங்களைத் திருத்தி கழனிகளாகச் செய்வேன்'' என்றெல்லாம் தங்கள் லட்சியங்களைத் தெரிவித்தார்களாம்!

சோவியத் இளைஞர்கள் 'நான்', 'எனது' என்பதற்கே புதிய பொருளைக் கொடுத்துள்ளனர். எனது வீடு, எனது தொழிற்சாலை எனது அரசு என்றே அனைத்தையும் கருதி, நாட்டையும், அங்கு வாழும் மக்களையும் தன் மயமாகக் கருதி அனைவரும் ஒவ்வொருவருக்குள் ஐக்கியமாகிக் காணும் - ஒரு சிறந்த சமூக அமைப்பை - புதிய உலகை - நவம்பர் புரட்சி உருவாக்கித் தந்துள்ளது!

'மனிதனின் குணங்கள் சூழ்நிலையால் உருவாக்கப்படுகிறது! சூழ்நிலை மனிதத் தன்மை நிறைந்ததாக மாற்றப்பட வேண்டும்' என்றார் மாமேதை மார்க்ஸ். மனிதத் தன்மை நிறைந்த சமூகத்தை நவம்பர் புரட்சி ரஷ்யாவில் சிருஷ்டித்திருக்கிறது.

வாழ்க நவம்பர் புரட்சி!
வாழ்க சோவியத் யூனியன்!

(சாந்தி, 1.11.1968)

அமெரிக்கப் பொதுச் சட்டம் 480 (பி.எல்.480) பிறந்த கதை

ஆர்.நல்லகண்ணு

அமெரிக்காவின் தாராளத்தைப் பலர் புகழக் கேட்கிறோம். பால்பவுடரும் உணவுப் பொருட்களும் கோதுமையும் கொடுத்துதவும் தயாள குணத்தைப் பாராட்டி வருகிறார்கள். அமெரிக்க உதவி என்று பறைசாற்றுகிறார்களே தவிர, அந்த உதவியின் உள்ளடக்கத்தை, உண்மை சொரூபத்தை யாரும் விளக்குவதில்லை.

அமெரிக்க அரசின் ராஜாங்கச் செயலாளர் டீன்ரஸ்க் என்பவர் அமெரிக்காவின் வெளிவிவகாரக் கொள்கையின் பெருமதியான கருவியாக உணவு உதவித் திட்டம் இருந்து வருகிறதென்பதை வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். ஏனென்றால், திட்டமிட்ட மாறுதல்களுக்காகவும், ஜனநாயக அரசுகளைப் பலப்படுத்துவதற்காகவும் பொருளாதார, அரசியல் உறுதிப்பாடு அடைவதற்காகவும், அபிவிருத்தி பெறுவதற்காகவும் அமெரிக்க உதவி பயன்படுத்தப்படுகிறது'' என்று செனட் சபையில்

கூறியிருக்கிறார். பிற நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிட்டு, தங்களுடைய ஆதிக்கத்தை நிலை நிறுத்தச் செய்வதற்கு அமெரிக்க உதவித் திட்டம் பயன்படுகிறது என்பதை மறைமுகமாகக் கூறுகிறார்.

''ஆதாயமில்லாமல் வியாபாரி ஆத்தோடு போகமாட்டார்'' என்பது பழமொழி.

தனக்கு லாபமில்லாமல் அமெரிக்கா எதையும் செய்வதில்லை.

பி.எல்.480 பிறந்தது

அமெரிக்கா இரண்டு உலக மகாயுத்தத்திலும் நேரடியாக பாதிக்கப்படவில்லை. உலகம் முழுதும் தாக்குதலினால் அழிவு ஏற்பட்டு வந்த நேரத்தில், அமெரிக்காவில் உற்பத்தி பெருகி வந்தது. நேரடித் தாக்குதல் பிரதேசத்தை விட்டு ஒதுங்கியிருந்தது.

இரண்டாவது உலகப் போர் முடிந்தது. ஐரோப்பா, ஆசிய நாடுகள் யுத்தத்தினால் ஏற்பட்ட அழிவிலிருந்து மீள்வதற்குப் பல ஆண்டுகள் பிடித்தன. இன்னும் பூரணமாக முன்னேற முடியவில்லை. நாடுகளெல்லாம் புனர் நிர்மாண வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது, அமெரிக்காவில் உற்பத்தி பெருகியது. பண்ணைகளில் உணவுத் தானியங்களின் இருப்பு அதிகரித்தது. பருத்தியும், இதர தானியங்களும் தேக்கமடைந்தன. 1954ல் 9030 லட்சம் புஷல் கோதுமையும், 9180 லட்சம் புஷல் இதர தானியமும், 9070 லட்சம் பேல் பருத்தியும் தேங்கிவிட்டன.

இத்தேக்கத்தால், பல புதிய நெருக்கடிகள் ஏற்பட்டன. விலைகள் தலைகீழாக வீழ்ச்சியடைந்தன. ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகளின் கூட்டுப் பண்ணைகள் நஷ்டமடைய ஆரம்பித்தன. அமெரிக்க சட்டமன்றத்தில் இப்பிரச்சினை கிளப்பப்பட்டது.

இந்தியாவில் புகுந்த கதை

1954ல் அமெரிக்கப் பொதுச் சட்டம் 480 (Public Law 480) உருவாகியது. அமெரிக்காவில் தேக்கமடைந்திருந்த விவசாய உற்பத்திப் பொருள்களை இச்சட்டத்தின் மூலம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தனர். உலகிலுள்ள 111 நாடுகளில் பட்டினியால் வாடும் மக்களுக்கு பசிதீர்க்கும் பணியைச் செய்வதாகப் பாசாங்கு செய்தனர். அமெரிக்க உதவித் திட்டம் வெளியானதுதான் தாமதம் இந்திய அமைச்சரவையிலிருந்தவர்கள் தலையசைக்க ஆரம்பித்தனர். பிற்போக்காளர்களான - வாழைப்பழச் சோம்பேறிச் சிந்தனையாளர்கள், அமெரிக்க உதவிக்குக் கையேந்த தயாராகினர். இந்தியாவில் உற்பத்தியைப் பெருக்கத் திட்டமிடுவதற்கு பதிலாக நிலச்சீர்திருத்தச் சட்டங்களை அமலாக்குவதற்கு மாறாக - அமெரிக்காவிடம் காவடி எடுத்து திருவோடு ஏந்தினர். பி.எல்.480 திட்டத்தை வரவேற்று வாழ்த்துக் கூறினார்கள். இதன் மூல விபரத்தை இந்திய உணவு அமைச்சர் அவையில் உயர் அதிகாரியாக இருந்த திரு.சி.வி.எச்.பதி என்பவர் (சித்திரை புத்தாண்டு மலர் தினமணி 13.4.1969) கங்கை காவிரி இணைப்பு என்ற கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

''உணவுப் பஞ்சத்தைத் தீர்ப்பது எப்படி என்பது குறித்து ஸ்ரீ ஜெயப்பிரகாஷ் நாராயண் விவரமான அறிக்கை தயாரித்தார். ஆற்றுப் பகுதிகளுக்கு அப்பாலுள்ள நிலங்களிலெல்லாம் பம்ப் செட்டுகள் நிறுவியும், உரங்கள் இட்டும் லட்சோபலட்சம் ஏக்கர் கரம்பு நிலங்களை விளையும் பூமிகளாக மாற்ற முடியும் என்பதையும் அதற்கு சில கோடி ரூபாய்களே செலவாகும் என்பதையும் அதில் அவர் விவரமாகத் தெரிவித்திருந்தார்.

அவருடைய அந்தத் திட்டம் அன்றைய உணவு அமைச்சர் ஸ்ரீகே.எம்.முன்ஷியிடம் சென்றது. அவர் அதைப் பார்த்துவிட்டு 'சில கோடி ரூபாயைக் கொண்டு நாம் அமெரிக்காவிலிருந்து அரிசியையும் கோதுமையையும் இறக்குமதி செய்துவிடலாம். கரடுமுரடான நிலத்தையெல்லாம் 'தாஜா' செய்வானேன்? அவற்றைப் பண்படுத்தும் திட்டத்திற்கு லட்சக் கணக்கில் ரூபாய் செலவழிப்பானேன்?' என்று சொல்லியபடியே அதை உதறிவிட்டார்.

இந்திய உணவு அமைச்சர்களின் துரோகம்

அமெரிக்கக் குபேரர்களின் கொள்ளைக்கு இந்தியாவின் வாயிலைத் திறந்து விட்டவர் அன்றைய உணவு அமைச்சரும் இன்றைய சுதந்திராக் கட்சியின் தலைவருமான கே.எம்.முன்ஷியாகும். அவருக்குப் பின்வந்த எஸ்.கே.படீல் அமெரிக்கர்கள் சொன்ன இடத்தில் கையெழுத்திட்டு அமெரிக்கர்களுக்குப் பாதுகாவலனாகத் தொடர்ந்து பணியாற்றி வந்தார். உணவு அமைச்சராகப் பணியாற்றிய சுப்பிரமணியமும் அமெரிக்க அடிவருடியாக மாறிவிட்டார். இறுதியாகப் பொறுப்பெடுத்த அசோக் மேத்தா இந்தியத் தாயையே அமெரிக்காவுக்குக் கூட்டிக் கொடுக்கத் துணிந்தார். ''இந்தியாவின் கற்பப்பை அமெரிக்க உதவிக்காக எப்பொழுதும் திறந்திருக்கும்' என்று மானமில்லாமல் கூறினார்.

1956ல் இந்திய அமெரிக்க ஒப்பந்தம் பி.எல்.480ன் கீழ் கையெழுத்தாகியது. கடந்த பதின்மூன்றாண்டுகளில் 10 முறை ஒப்பந்தம் புதிப்பிக்கப்பட்டுள்ளது. கடைசியாக 1969 ஏப்ரல் 25ல் ஒரு ஒப்பந்தம் கையெழுத்தாயிருக்கிறது. புதிய ஒப்பந்தப்படி 1 லட்சம் டன் அரிசியும், 3 லட்சம் டன் சொங்குச் சோளமும், கோதுமையும், 40 ஆயிரம் டன் சோயா பீன்ஸ், 1 லட்சம் பேல் பருத்தி - ஆகியவை இறக்குமதியாகும். 1969 ஜூலை 1க்குப் பின் 43 கோடி ரூபாய் பெறுமானமுள்ள பொருள்கள் இறக்குமதியாகும். அமெரிக்காவிலிருந்து சென்ற ஆண்டுகளைவிட உணவு இறக்குமதி குறைந்து வருகிறது. இதர பொருள்களின் இறக்குமதி அதிகரித்து வருகிறது.

பி.எல்.480ன் புதிய உருவம்

அமெரிக்காவில் தானியக் கையிருப்பு குறைந்து விட்டது. அமெரிக்க மக்களுக்குத் தேவையான இருப்பு வைக்க வேண்டியுள்ளது. உணவுப் பொருள்களைவிட இயந்திர உற்பத்திப் பொருள்களின் தேக்கம் அதிகரித்து வருவதால், அப்பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு அமெரிக்கா அக்கறை கொண்டிருக்கிறது. உணவுப் பொருள்களுக்குப் பதிலாக, பால்பவுடர், உர உற்பத்திச் சாதனங்கள், இயந்திரக் கருவிகள் மற்றும் பல பொருள்களை ஏற்றுமதி செய்வதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறது. பி.எல்.480யை புதிய உருவத்தில் திருத்துவதற்கு அமெரிக்கா திட்டமிட்டு வருகிறது.

இந்தியாவிற்கு பருத்தி ஏற்றுமதி செய்கிறது. குஜராத்திலும், விசாகப்பட்டினத்திலும் திராவக அமோனிய (Liquid Ammonia)வை மூலப் பொருளாகக் கொண்டு ரசாயன உரத் தொழிற்சாலை அமைக்க அமெரிக்காவிடம் ஒப்பந்தம் செய்யப்படுகிறது. அமெரிக்காவிலிருந்து இறக்குமதியாகும் திராவக அமோனியாவுக்கு சுளைசுளையாகப் பணம்

கொடுத்தாக வேண்டும். நெருக்கடியான நேரத்தில் மேலும் நெருக்கடி கொடுத்து பணியவைப்பதற்காக ஏற்றுமதியை நிறுத்தி தொழிலை முடமாக்கவும் அமெரிக்கா தயங்காது.

அமெரிக்கப் பெருமுதலாளிகளுக்கு லாபமாக இருப்பதை அடிப்படையாகக் கொண்டு தான் ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கை வகுக்கப்படுகிறது. உணவுப் பொருள் தேக்கத்தைக் குறைக்க வெளிநாடுகளுக்கு உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்தது. இப்பொழுது இதர இயந்திரப் பொருள்களின் தேக்கத்தைக் குறைக்க அப்பொருள்களை மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத் திட்டமிட்டு வருகிறது.

அமெரிக்காவின் பி.எல்.480 உதவித் திட்டத்தின் அடிப்படை இதுதான். நம் நாட்டிலுள்ள பிற்போக்காளர்கள் அமெரிக்கத் திட்டத்தின் அபாயத்தைத் தெரிவிப்பதில்லை.

அமெரிக்க உதவியைப் பற்றிப் பரிசீலனை செய்ய மத்திய அரசிலிருந்து நியமிக்கப்பட்ட பேராசிரியர் திரு. ஏ.எம்.குஸ்ரோ என்பவர் பி.எல்.480யைக் கண்டித்திருக்கிறார். நம் நாட்டில் உணவு உற்பத்தியைப் பெருக்க, தன்னிறைவு பெற, முழுமையான நிலச் சீர்திருத்தத்தை அமுல் நடத்த வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார்.

பி.எல்.480ன் கீழ் இறக்குமதி செய்யப்படும் தானியம் நமது தேவையின் 5 சதவீதத்தை தான் பூர்த்தி செய்கிறது மீதமுள்ள 95 சதவீதத்தை உற்பத்தி செய்யும் இந்தியர்களுக்கு மிகக் குறைந்த உதவியே செய்து கொடுக்கிறோம்.

தானிய இறக்குமதி மூலம் அமெரிக்கர்களுக்கு 2240 கோடி ரூபாய் கடன்பட்டிருக்கிறோம். நமது பேரப்பிள்ளைகளால்கூட இப்பெருங்கடனை திருப்பி அடைக்க முடியாது'' என்று ஒரு பேராசிரியர் எச்சரிக்கிறார். இந்திய மக்களை அமெரிக்காவுக்கு கடனாளியாக்கியதற்கு மத்திய அரசும் பிற்போக்காளர்களுமே பொறுப்பாகும்.

(சாந்தி 1.7.1969)

சூத்திரதாரி

ஆர்.என்.கண்ணன் (ஆர்.என்.கே)

கைலாசபுரம் வளசல் பண்ணையார்களைப் பற்றி பத்துப் பதினைந்து மைல் சுற்றுவட்டாரத்தில் தெரியாதவர்களே கிடையாது. நஞ்சை, புஞ்சை, காடு கரைகளில் பெரும்பகுதி அவர்களுக்கே சொந்தம் நெருங்கிப் பழகினவர்களுக்குக் கூடப் பண்ணையார்களின் பேர்ச் சொல்லிப் பழக்கமிராது. 'கீழச்சேர்ப்பண்ணை', 'மேலச்சேர்ப்பண்ணை' என்று திசை சொல்லித் தான் பழக்கம். வியாபாரிகள் கல்லாப் பெட்டியடியில் காவலிருப்பது போல, இப்பண்ணையார்கள் நெல் களஞ்சியத்திலேயே இராப்பகலாகத் தங்கியிருப்பதால், பண்ணைார்களைக் குறிப்பிட வேண்டுமானால், களஞ்சியத்தின் திசைப் பெயர்தான் நினைவுக்கு வரும்.

காலையிலும், மாலையிலும் வேலைக்குப் போகும் பண்ணையாட்கள் கூட்டமிருக்கும், இடைவேளைகளில் கிராமத்தாட்கள் கூட்டம்கூட்டமாகக் களஞ்சியங்களின் முன்னால் நிற்பதைப் பார்க்கலாம். பள்ளர், பறையர், மறவர், கோனார் போன்ற தாழ்த்தப்பட்ட, பின்தங்கிய சாதிக்காரர்கள் அடங்கி ஒடுங்கி பெட்டிப் பாம்பாக 'நாயன் வாயிலே என்ன உதிக்கோ' வென்று காத்து நிற்பார்கள். போலீஸ் அதிகாரியின் முன்னால் கூட இவ்வளவு அமைதியைப் பார்க்க முடியாது.

விவகாரங்களைத் தீர்த்து வைப்பது பண்ணையாரின் அனுபவத்தையும் அறிவையும் பொறுத்ததல்ல; அரண்மனைக் கோழிமுட்டை ஏழை வீட்டு அம்மியையும் உடைக்குமென்பதைக் கேட்டுப் பழக்கமாகி விட்டதல்லவா! பண்ணையார் மைனராக இருந்தாலும் தீர்ப்புச் சொன்னால் தீர்ப்புக்கு மேல் அப்பீல் கிடையாது. பண்ணையார்களின் போலீஸ், நீதி, நிர்வாகத்திற்கு அரசாங்கத்தின் 'குவாலிபிகேஷன்ஸ்' தேவையேயில்லை.

பண்ணையார் சண்முகம்பிள்ளை மதிய உணவு அருந்திவிட்டு விச்சிராந்தியாக சாய்வு நாற்காலியில் அமர்ந்தார். கோடை காலத்தில் பொதிகை மலையில் அழுது வடியும் அருவி நீர்போல பண்ணையாரின் பருத்த திரேகத்தில் உண்ட களைப்பில் வேர்வை சிந்தி சிற்றோடைகளாக ஓடியது. பண்ணைக்காரன் முழுக்குறுத்தோலை விசிறியால் வீசி வேர்வை நீரை உலற வைத்தான்.

களைப்பாறியவுடன் பண்ணையார், வே! ஆண்டித்தேவா! உம்ம தெருக்காரனுக நேத்து கூட்டத்துக்கு வந்தானுகளா? நேத்து வந்தவரு ரொம்பப் பெரிய மனுஷன்! பெரிய அதிகாரியாக இருந்தவருவே! கட்சி ஆரம்பிச்சிருக்காரு! உலக முத்துராமலிங்கத் தேவரு கூட அவரைத் தான் 'சப்போட்டுப்' பண்ணுதாரு! நானும் அவரிட்ட பேசிக் கிட்டிருந்தன்! மாலையும் போட்டேன். அவரு கட்சிக்கு ஆதரவு கொடுக்கணும்னு என்னை ஸ்பெஷலாக் கேட்டாருவே!

இந்தச் சாணான் மந்திரியாக இருக்காம் பாரும், அவனை ஒழிக்க இவருதான் சரி; பள்ளப்பய, பறப் பய்லலாம் தலகால் தெரியாம அலையுதானுக பாரும்! அவனுகளையும் ஒடுக்கதுக்கு இதுதான் சரி!'' என்று அரசியல் போதித்தார்.

ஒருநாளு மில்லாமல் திடீரென்று பண்ணையார் இவ்வளவு அன்பாகப் பெயர் சொல்லி அழைத்தது பண்ணைக்காரருக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆமான்னு சொன்னாலும், ஆத்திரம் வரும். இல்லைன்னு சொன்னாலும் எரிச்சல் வரும், நமக்கெதுக்கு வம்பு சனியனென்று நினைத்து ''எனக்கென்ன தெரியும் எசமான்! பண்ணைக்கு வீடிஞ்சால் வாரேன்; அடஞ்சால் போரன்' என்று பௌவியமாகப் பதில் சொன்னார்.

'அதுக்கில்லவே! தேவரே! இருந்தாலும் காலம் வார வரத்தப் பார்த்தால் நல்லா இல்ல பாரும்! நம்ம கிராமத்துப் பயல்களும் கட்சி கட்சின்னு கிளம்புதானுகளில்லையா! முளையிலேயே கிள்ளி யெறியனுமில்லவே! அதுக்குத்தான் சொல்லுதேன்!! என்று பேசி முடித்தார்.

நாடெங்கும் பொதுத்தேர்தல் நெருங்கியது. கைலாசபுரம் தொகுதியிலும் காங்கிரஸ், சுதந்திரா, கம்யூனிஸ்ட் கட்சி அபேட்சகர்கள் போட்டியிட்டனர். காங்கிரஸ் கட்சியின் சார்பில் திருவாளர் குமாரசாமியாபிள்ளை அவர்கள் மூன்றாவது தடவையாகவும் சட்டமன்றத்திற்குப் போட்டியிடுகிறார்.

பருவ வேலை ஆரம்பமாகும் பொழுது தரகர்களோடு மாடுபிடிக்க கிளம்பும் விவசாயிகளைப் போல, அபேட்சகர்கள், வோட்டர் மகாஜனங்களை நோட்டம் பார்க்க சில பெரிய மனுஷாட்களைக் கூட்டிச் சென்றனர். மன்னர்கள் 'ரதகஜதுரகபதாதி'களைத் தயாரிப்பார்களல்லவா! காங்கிரஸ் அபேட்சகர் குமாரசாமியா பிள்ளையைக் கேட்கவா வேண்டும். அவருக்குச் சொந்தக்காரர்களே ஏராளம். வெளியில் அடிக்கும் வெயில் உள்ளே தெரியாமலிருக்கும்

கார்கள், 'பியட்' 'பிளைமவுத்' இன்னும் புதுப்புது ரகங்கள். அழகிய அன்னங்கள் வருவது போல ரோட்டில் கார்கள் மிதந்து வரும். ஒவ்வொன்றும் ஒவ்வொரு ராகதாளத்தோடு ஹார்ன் அடித்து வருவதைப் பார்த்தால், வைராக்கியமுள்ள எதிரிகூடப் பிரமித்து விடுவார்கள். மேற்கண்ட தோரணைகளோடு, திரு.குமாரசாமியா பிள்ளை அவர்கள், அபேத்சாபத்திரம் தாக்கல் செய்தவுடன் கைலாசபுரம் வளசல் பண்ணையார்களைப் பார்க்க வந்தார். பண்ணையார்களெல்லாம் கூடிவிட்டனர்.

''இந்தத் தடவையும், நம்மைத் தான் இந்தத் தொகுதியில் அபேட்சகராக நிறுத்தியிருக்கிறார்கள். உங்க தயவில்தான் ஜெயிக்கணும்! வேண்டிய ஆதரவு கொடுக்கணும்! என்றார் குமாரசாமியா பிள்ளை.

அதற்கென்ன! நீங்க நிற்கும் போது வேறு யாருக்கு உதவி செய்ய முடியும். ஆனால் காங்கிரஸ் கட்சி செய்திட்டு வர்ரது ஒன்னும் சரியாகத் தெரியலை'' என்று பண்ணையார் சண்முகம் பிள்ளை வெறுப்பைக் காட்டினார்.

பண்ணையார் இப்படிச் சொல்லுவாரென்று குமாரசாமியாபிள்ளை எதிர்பார்க்கவே இல்லை. பண்ணைார் வகையறாக்களுக்குத்தான் செய்த உபகாரத்திற்கு துரோகம் செய்ய மாட்டார்களென்பதில் நம்பிக்கையுண்டு. தான் செய்ததை மறந்து விடாமல் நினைவூட்ட விரும்பினார்.

''பண்ணையார்வாள்! காங்கிரஸ் கட்சி என்ன செய்திரும்ன்னு நினைக்கேள்; நம்மைப் போலுள்ளவர்களைப் பகைச்சு எப்படி ஆட்சி நடத்த முடியும். வெளிப்பகட்டுக்கு அப்படி இப்படின்னு சட்டம் கொண்டு வந்ததுதான். அமுல் நடத்துவது யாரு! எல்லாம் நாம தானே! சட்டம் வருதுன்னு தெரிஞ்சதும் உங்களிடம் பட்டாப் பிரிச்சு எழுதிடுங்கன்னு சொல்லலையா! எல்லாம் இந்த மாதிரித்தான். ஒன்னும் கவலைப்படாதீங்க! காலம் போற போக்கில எதுவும் பச்சையாகப் பகைச்சிடக் கூடாது. ஸ்ரீமான் சி.ஆர். ஒரு போக்காப் போறாரு! அப்படியும் எதிர்ப்பிருக்க வேண்டியதுதான். காரியத்திலே வரும்பொழுது மூன்றாவது கட்சிக்கு இடங் கொடுத்திடக் கூடாது பாருங்க' என்று விநயமாகக் கூறினார்.

''நீங்க சொல்வதுஞ் சரிதான். இந்தத் தடவை ஒருத்தருக்கும் இறங்கக் கூடாதுன்னு இருந்தோம். நீங்களும் எங்களைத் தேடி வந்திட்டேள்! போன தேர்தல் மாதிரி இருக்காது! ஊருக்கு ஊரு படிச்சிட்டானுக. ஊருக்கு இரண்டு கட்சிகள் வச்சிருக்கானுக ரோடு போடணும், ரேடியோ வைக்கணும், அந்தச் சட்டம் வேணும், இந்தச் சட்டம் வேணுமின்னு பேசுதானுக! இப்போ ஆள் பிடிமானமும், பணச் செலவும் அதிகமாகும் போலத் தெரியுது'' என்றார் பண்ணையார் சண்முகம் பிள்ளை.

கைலாசபுரம் தொகுதி வாக்காளர்களில் கணிசமான எண்ணிக்கையுள்ளவர்கள் மறவர் சாதியினர். அந்த சாதிக்காரர்களின் உதவி பண்ணையார்களுக்கு வேண்டுமல்லவா! அதே நினைப்பில் சுதந்திராக் கட்சியும் மறவர் சமூகத்தைச் சேர்ந்த ராமையாப் பாண்டியன் என்பவரை அபேட்சகராக நிறுத்தியது. சந்நியாசிக்கே சாதிப்பித்து வந்து விடுகிறதே! படித்தவனும் அரசியல் அறிவாளிகளுமே சாதியைக் கருத்தில் கொண்டு செயல்படும் போது, கிராமத்திலுள்ள பின்தங்கிய மக்களைப் பற்றிக் கேட்கவா வேண்டும்! மறவர் சாதிக்காரர்களிடம் சாதிப்பற்று என்றுமில்லாதவாறு கிளம்பி விட்டது. இம்முறை எப்படியாவது நம்ம சாதிக்காரனை ஜெயிக்க வச்சிர வேண்டியது தானென்று ஊரூராக வரிஞ்சுகட்டிப் புறப்பட்டார்கள். பாவம்! அவர்களுக்கு இதிலுள்ள உள்சூது என்ன தெரியும்! கைக்காடையை கொண்டு காட்டுக்காடையைப் பிடிப்பது போல, கட்சிக்கு ஆள் சேர்ப்பதற்காகத் தான் திரு.ராமையாப் பாண்டியனைப் போட்டிருப்பது அவர்களுக்குத் தெரியாது.

ஊருக்கு இரண்டு தலைமைக்காரத் தேவர்களைக் கூட்டிக் கொண்டு அபேட்சகர்கள் ராமையாப் பாண்டியனும் கைலாசபுரம் வளசல் பண்ணையார்களைப் பார்த்து தேர்தல் களத்தில் நிற்பதைச் சொல்லி ஆசீர்வாதம் பெறச் சென்றார்.

கீழச்சேர் பெரிய பண்ணையிடம் போனார்கள். எல்லாப் பண்ணைகளும் இருந்தனர். பண்ணையார்களை பார்த்தவுடன், போனவர்களுக்கு வழக்கமான மரியாதை கலந்த அச்சம் அறியாமலே வந்து விட்டது. மேல் துண்டை இறக்கி பௌவியமாக நின்றார்கள்.

'என்ன ராமையா! ஒருநாளும் வராத ஆளு! வந்திருக்கயா என்ன?'' என்று குத்தலாகக் கேட்டார் பண்ணை சண்முகம்பிள்ளை.

எல்லாம் பண்ணையைப் பார்க்கத் தான் வந்திருக்கம்! தம்பி ராமையாவைத் தான் ஓட்டுக்கு நிறுத்திருக்காங்களாம். பண்ணையில்... உதவணும்னு கேட்கத் தான் வந்திருக்கம்' என்று வந்தவர்களில் முதியவரான பெரியபாண்டித் தேவர் அடக்கமாக பதிலளித்தார்.

''அதுக்கென்ன! பேஷா நிக்க வேண்டியதுதான்! இப்பத்தான் யாரும் நிக்கலாம்னு சட்டமிருக்க! ராமையா நம்ம மனுஷந்தான்! கட்சியும் நம்ம கட்சிதான். ஆனா வந்திருக்கேளவே! கடைசி வரை ஒத்துமையா நிப்பேளா'' என்றார் பண்ணையார்.

''அதென்ன! அப்படிச் சொல்லிட்டியே... பண்ணையில சொன்னா மாறுவமா! ஒத்துமையா நிக்கணும்னுதான் பண்ணையிலே கேட்க வந்திருக்கம்'' என்று சொன்னார் பாண்டித்தேவர்.

''வே! அதெல்லாம் சரிதான்! ராமையா, முன்னாலேயே நம்ம குமாரசாமியா பிள்ளைவாளும் வந்து கேட்டுட்டாரு! அவரும் பெரிய மனுஷன்; படிச்சவன்; சொத்துக்காரன் நம்ம தயவு வேணும்னு சேருதேடி வந்திட்டாரு! நாங்களும், சரியின்னு சொல்லிட்டோம்! வாக்கு மாறுறது சரியில்லை பாரும்! நீங்களும் ஓட்டுக் கேளுங்க! வம்பு கிம்பு பண்ணீராதீங்க! பண்ணையில இப்படிச் சொல்லுதாகளேன்னு நினைக்கக் கூடாது. நீங்களும் நாமும் என்னைக்கும் தோண்டியும் கயிறுமாகத் தான் இதுவரை இருந்து வந்திருக்கோம்! காலத்தை அனுசரிச்சுப் போங்கவே! என்று புத்திமதிகளைக் கூறி ஆசீர்வதித்து அனுப்பி வைத்தார்.

ராமையாப் பாண்டியனும், இனத்தார்களும் பண்ணையார்கள் சொன்னதை ஒவ்வொரு வரும் ஒவ்வொரு விதமாகப் புரிந்து கொண்டு, தலைகுனிந்து துண்டு மேல ஏறவும், இறங்கவுமாகத் திரும்பினர்.

தேர்தல் நெருங்க, நெருங்க கட்சிகள் பிரச்சார வேகத்தில் இறங்கின. ஓட்டர்களை விலைக்கு வாங்க பணப்பையுடன் ஊருக்குள் இறங்கினர் ஒரு சாரார். தங்களுக்கு நிச்சயமாக ஓட்டுப் போட மாட்டார்களென்று தெரிந்தவர்களைப் பணம் கொடுத்தும், பயமுறுத்தியும் ஓட்டுச் சாவடிக்கு வரக் கூடாதென்று தடுத்து நிறுத்தினர் ஒரு சாரார். ஊர்க்கோவிலுக்கு வசூல் செய்து கொடை கொடுப்பது போல்,

கம்யூனிஸ்ட் கட்சி தன் அபேட்சகருக்காக அங்கங்கே ஏழை எளியவர்களிடம் பணம் வசூலித்துப் பிரச்சாரம் செய்து வந்தது. கம்யூனிஸ்டு அபேட்சகரை ஆதரித்து பிரமாண்டமான சைக்கிள் ஊர்வலம் நடந்தது. ஊர்வலத்தில் பெரும்பகுதி தாழ்த்தப்பட்ட வாலிபர்கள். வேதனைப்படும் காலத்தில் ஆதரவு கொடுத்து ஆறுதலளிப்பது கம்யூனிஸ்ட் கட்சி தானென்று தெளிந்த முடிவுக்கு வந்தவர்கள், ஊர்வலத்தினர் உள்ளத்தில் இருந்து கோஷமெழுப்பினர். வெயிலையும் பாராமல், காற்றையும் எதிர்த்து 'விர் விர்'ரென்று சைக்கிளை மிதித்து முன்னேறிச் சென்றனர். எதிரிப்படைகளைப் போருக்கு அழைக்க 'வாங்கா' போன்ற போர்க் கருவிகளை உபயோகித்தது போல், மெகபோனைக் கையிலேந்தி, உரிமைக் குரலெழுப்பிச் சென்றனர். கைலாசபுரம் வளசல் பண்ணையார்களின் களஞ்சியங்களின் முன்பும் சைக்கிள் ஊர்வலம் போனது.

ஊர்வலத்தைப் பார்த்ததும் பண்ணையார்கள் வெடவெடத்துப் போயினர். ஆத்திரத்தில் தொண்டை கம்மியது. காற்றோட்டத்திற்காக வெளியிலிருந்தவர்கள் இறுமிக் கொண்டு திரும்பித் திரும்பிப் பார்த்து கதவுஓரத்தில் நின்று ஊர்வலத்தின் மீது பார்வையைச் செலுத்தினர். இவ்வளவு வேதனையும் ஊர்வலத்தைப் பார்த்து மாத்திரமல்ல, ஊர்வலத்தில் சென்றவர்களில் மெகபோன் வைத்திருந்ததும்தான்.

ஏலே! ஆண்டித் தேவா! பாக்க சகிக்குதா! நீயெல்லாம் மறவன்னு திரியலாமா? மனசு கேட்கலியே! நம்ம அடியான் பறப்பய. முனியன் மகனில்ல குமாய் வைத்து ஊதிகிட்டுப் போறான் பாத்தியா! எவ்வளவு திமுறு! அந்தப் பயல வீட்டை விட்டு விரட்டி, பூட்டிச் சாவியை கொண்டுவா! நெல்லைக் கசக்கினாம்னு முனியன் மகனை புறங்கையைக் கட்டிக் கொண்டு வா! போலீஸில் ஒப்படைச்சு கழுதையை ஜெயிலுக்கு அனுப்புவம்! என்று ஆணையிட்டார்.

ஆளரவமில்லாத நேரம்; அதிகாலை மூன்று மணிக்கு முனியன் வீடு தீப்பற்றி எரிந்தது. தீவைத்தது யாரென்று ஊருக்குத் தெரியாது. தெரிந்தவர்களுக்கும் வெளியில் சொல்லப் பயம். நெல்லுச் சாக்குடன் முனியன் மகன் மாடசாமி புறங்கை கட்டப்பட்டு போலீஸ் ஸ்டேஷனில் நின்றான்.

''திமிறு புடிச்ச பய! இவன் கசக்குவான் ஐயா! பூடந்தெரியாம சாமி ஆடியிருக்கான்! இப்ப ஆப்புட்டுக்கிட்டானா!'' என்று பார்த்தவர்களில் சிலர் பேசிப் போனார்கள்.

(சாந்தி, 1.4.1962) (ஆர்.என்.கண்ணன் என்ற புனைப் பெயரில் ஆர்.நல்லகண்ணு அவர்கள் எழுதியது).

ரகுநாதனின் சமுதாய இலக்கியம்

ஆர்.நல்லகண்ணு

புராண, இதிகாசங்களெல்லாம் அறியாமலிருந்தாலும், சமுதாயச் சிக்கல்களைப் பற்றியும், ஆதிக்கத்திலுள்ள கருத்துக்களை எதிர்த்தோ, கண்டித்தோ, விமர்சித்தோ எழுதிய நூல்கள் வேண்டுமென்றே மறைக்கப்பட்டுள்ளன, பல நூல்கள் மறைந்து விட்டனவென்றும் ஆராய்ச்சியாளர் பலர் கூறுகிறார்கள். சமூகச் சூழ்நிலைகளைக் களனாக வைத்து எழுதப்பட்ட ஐந்து நூல்களைப் பற்றிய அறிமுகமாக இப்புத்தகத்தை தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத் தலைவர் திரு.ரகுநாதன் எழுதியிருக்கிறார்.

தந்திவிடு தூது, பணவிடு தூது, டம்பாச்சாரி விலாசம், காந்திமதி அந்தாதி, பஞ்சலட்சணம் ஆகிய நூல்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அறிமுகமாக எழுதியிருந்தாலும், தூது, நாடகம், இலக்கியத்தில் புதிய பார்வை பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகளாகத் திகழ்கின்றன.

முன்னுரையிலேயே இந்நூல்களின் தன்மையை விரிவாகக் கூறியிருக்கிறார். ''இந்தத்தொகுதியில் நான் அறிமுகம் செய்து வைக்க முனைந்துள்ள நூல்கள் அனைத்தும் ஒரு குறிப்பிட்ட தகுதியை உரைகல்லாகக் கொண்டு அதாவது சென்ற நூற்றாண்டுகளின் சமுதாயச் சூழ்நிலை, சரித்திர நிகழ்ச்சிகள், சமுதாய சம்பந்தப்பட்ட இலக்கியப் படைப்பு, சமுதாய சம்பந்தமான கருத்துக்கள் முதலியவற்றைப் பிரதிபலிக்கும் தகுதியைக் கணக்கிலெடுத்துத் தேர்ந்தெடுக்கப்பட்டவை. இவற்றில் இருநூல்கள் சென்ற நூற்றாண்டின் தமிழ்நாடகத் துறையின் நிலைமையை புலப்படுத்துவன; இரண்டுமே ஒவ்வொரு விதத்தில் புதுமையான இலக்கியங்களும் கூட, இவ்விரண்டில் ஒன்று தமிழ்நாட்டின் சமூக நாடகங்களுக்கே முதற்பெரும் வழிகாட்டியாக நின்ற நூல், மேலும் இரு நூல்கள் சென்ற நூற்றாண்டில் நாட்டையே உலுக்கிக் குலுக்கி மக்கள் மனத்தில் வடுப்பாய்ந்தது போல் பதிந்து விட்ட மாபெரும் பஞ்சத்தைக் கருப்பொருளாகக் கொண்டவை. மற்றும் ஒரு நூல் பணத்தின் - பொருளாதாரத்தின் வலிமையைக் குறித்து, முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பே திறம்பட எழுதப்பட்ட நூல். எனவே தான் இந்த நூல்களை அறிமுகப்படுத்தும் முயற்சிக்கு 'சமுதாய இலக்கியம்' என்ற பொதுத்தலைப்பை வழங்கியுள்ளேன்'' என்று குறிப்பிடுகிறார், இதைவிட விளக்கம் தேவையில்லை.

டம்பாச்சாரி விலாசம்

டம்பாச்சாரியின் நாடகத்தையும், திரைப்படத்தையும் பலர் பார்த்து ரசித்திருக்கிறோம். இருப்பினும் இக்கதையை எழுதத் தூண்டிய சம்பவங்களையும், உயர் குடும்பத்தினர் வாழ்க்கை முறைகளையும் இடித்துக்காட்டும் ஆசிரியரின் திறனையும் திரு.ரகுநாதன் அவர்கள் சொல்லும் பொழுது தமிழகத்தின் சென்ற நூற்றாண்டிற்கே வாசகர்களை அழைத்துச் செல்கிறார்.

டம்பாச்சாரி விலாசத்தின் ஆசிரியர் சைதாப்பேட்டை காசி விஸ்வநாத முதலியார், ஆங்கிலேயருக்கு துபாஷியாக (மொழி பெயர்ப்பாளராக) இருந்த போதிலும் பிரமஞான சமாஜத்தில் சேர்ந்திருந்ததால் சீர்திருத்தக் கருத்துக்களைக் கொண்டிருந்தார், ''காட்சியினாலும் கேள்வியினாலும் எனக்குண்டாகிய அபிப்பிராயத்தை நான் வெளியிடத் துணிகிறேன். - துர்நடத்தைகளை விவரமாகவும், அந்த நடத்தையினால் வரும் துன்பத்தை வெளிப்படையாகவும், அனுபவமாகவும், காட்சியாகவும் எடுத்துக்காட்டி ஒரு நூல் செய்ய வேண்டுமென்று சில கனவான்கள் கேட்டுக் கொண்டபடியால் இந்நாடகம் செய்தேன்'' என்று நாடக ஆசிரியரே கூறியிருக்கிறார்.

இந்த அறிமுகத்தில் தமிழ்நாட்டில் நாடகத் துறையின் வரலாற்றைப் பற்றி ஆராய்ந்திருக்கிறார். தொல்காப்பியத்திலும், பெரும்பாணாற்றுப் படையிலும் நாடக வழக்கு 'நாடக மகளிர்' என்று கூறப்பட்டுள்ள ஆதாரங்களைக் கொண்டு, நாடகத் துறை, தமிழில் தொன்மையுடையது என்ற கருத்து கொண்டுள்ளவர்களுக்கு பல்வேறு எடுத்துக்காட்டுகள் மூலம் பதில் கூறியிருக்கிறார். ''நாடகம் என்ற சொல்லுக்கு இன்றுள்ள அர்த்தபாவம் வேறு. களம், காலம் ஆகியவற்றின் பொறுத்து அமைதியோடு

குறிப்பிட்ட கதையொன்றை நடிகர்களைக் கொண்டு சொல்லாலும் செயலாலும் நடித்துக் காட்டப்படுவதற்காக எழுதப்படும் இலக்கியத்தையே நாடகம் என்று சொல்லி வருகிறோம். ஆங்கிலத்தில் Drama என்று வழங்கப்பெறும் சொல்லின் அர்த்த பாவத்தையே இன்று நாம் கையாண்டு வருகிறோம். நாடகம் என்ற சொல்லுக்கு அன்று இருந்து வந்த அர்த்தம் நாட்டியம் என்பது தான் (பக்கம் 114) என்று அறுதியிட்டுக் கூறியிருக்கிறார்.

தந்திவிடு தூது

நாடகக் குழுவை நடத்தி வந்த ஒருவர் பணத்தையும் இழந்து திண்டாடுகிறார். சொந்த ஊரில் இருக்கும் மனைவிக்குத் தந்நிலை குறித்து தந்தி அனுப்புகிறார். பிரிந்திருந்த குடும்பத்திற்குத் தொடர்பேற்படுத்தும் தந்தியைத் தூதுப் பொருளாகப் பாவித்து எழுதப்பட்ட கதைக்குத் தந்திவிடு தூது என்று பெயரிட்டிருக்கிறார். நாடகக் கம்பெனி நொடிந்த நேரத்தில் படும் இன்னல்கள் விளக்கப்படுகின்றன.

பண்டைக் காலந்தொட்டே தூது நிகழ்ச்சி தமிழ் இலக்கியத்தில் இடம் பெற்று வந்திருக்கும் விபரத்தைத் தெளிவாகக் கூறியிருக்கிறார். தூது இலக்கியத்தின் வளர்ச்சியை ஆராய்ந்திருக்கிறார். இலக்கியத்தின் புதிய பார்வையை விளக்கிக் கூறுகிறார்.

அன்னத்தையும், கிளியையும், மேகத்தையும், போன்ற இயற்கைப் பொருள்களையே தூது அனுப்பிய தொன்மை மரபுகளுக்குப் புறம்பாகத் தந்தியைத் தூதாக வைத்து சிருஷ்டிக்கப்பட்டுள்ள இலக்கியம் தந்திவிடு தூது.

தென்றலையும் நிலவையும் பாடுகின்ற அளவுக்கு ஒரு அணைக்கட்டையோ, நிலக்கரிச் சுரங்கத்தையோ மின்சார நிலையத்தையோ கவிப்பொருளாக்கி அழகுறப் பாட முடியுமா? என்று ஒரு நண்பர் கேட்டதாகக் கூறி திரு.ரகுநாதன் அவர்களே அதற்குப் பதிலும் சொல்லுகிறார், இலக்கியத் துறையில் புதிய கண்ணோட்டத்துடன் சிருஷ்டியிலிறங்கும் இளம் எழுத்தாளர்களுக்கு இப்பகுதி தெளிவைக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

'பாரதி பழகிப் போன பல்வேறு சந்தங்களைக் கையாண்டான்; ஆனால் அவற்றில் புதிய விஷயங்களையும் புதிய கருத்துக்களையும் அல்லவா தந்தான்! ஓர் உண்மையை மறந்துவிடக் கூடாது. இயற்கை, செயற்கை எந்தப் பொருளானாலும், அது மனித வர்க்கத்தோடும், மனித உணர்ச்சிகளோடும் கொள்கின்ற உறவுகள், ஏற்படுத்துகின்ற உணர்ச்சிகள் முதலியவற்றின் மூலமே முக்கியத்துவம் பெறுகின்றன. உதாரணமாகக் காதலன் அருகிலிருக்கும் போது தண்ணென்றிருக்கும் நிலா, காதலன் பிரிந்து சென்ற போது தணலாய்க் காய்கிறது. ஆனால் உண்மையில் நிலவு நிலவாகத் தான் இருக்கிறது. அது மனித உணர்ச்சியோடு பங்குபெறும் போதுதான் கவிப் பொருளாகிறது. எனவே இந்த உறவையும் உணர்ச்சியையும் புரிந்து கொள்ளத் திராணி வாய்ந்தவனுக்கு எந்தவொரு பொருளையும் கவிப்பொருளாக்கிவிட முடியும். மகாபலிபுரச் சிற்பத்தையும் மதுரைக் கோபுரத்தையும் கவிப்பொருளாக்கி விட முடியுமென்றால் மணிமுத்தாறு அணையையும் நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தையும் கவிப்பொருளாக்க முடியும். இவை எல்லாமே மனிதன் படைப்பு சக்தியின் சாதனைகள் தானே. பாரதி அதைத்தானே செய்தான். 'காசி நகர்ப் புலவர் பேசும் உரைதான் காஞ்சியிற் கேட்பதற்கோர் கருவி செய்வோம்' என்றும் 'வெட்டுக்கனிகள் செய்து தங்கம் முதலாம் வேறுபல பொருளும் குடைந்து எடுப்போம்' என்றும் அவன் அன்று பாரத தேசத்தைப் பாடியவை தானே. இன்று நமது நாட்டின் விஞ்ஞான வெற்றிகளாகவும், பொருளாதாரத் திட்டங்களாகவும் நம்முன் காட்சி தருகின்றன. அவனைப் போல் நாமும் காண முடியாதா என்ன? - சைக்கிள் வண்டியைப் பற்றிப் பாடி, சைக்கிள் சக்கரங்களை 'அக்காவும் தங்கையையும் போல் அவை போகும் அழகைப்பார்' என்று வியந்து போற்றி அதிலும் மனித உணர்ச்சியோடு சம்பந்தப்பட்ட கவிதையழகையும், நயத்தையும் வெளிப்படுத்திவிட்டார் தேசிகவிநாயகம் பிள்ளை. எனவே எந்த ஒரு பொருளைப் பற்றியும் கற்பனை நயமும் அழகுணர்ச்சியும் தோன்றப் பாடமுடியா தென்பதல்ல'' (பக்கம் 23) என்று திரு.ரகுநாதன் அவர்கள் தனக்கே உரித்தான உறுதியான தெளிந்த நடையில் கூறியிருப்பது சிந்தனைக்கு விருந்தாக இருக்கிறது; இலக்கிய எதிர்காலத்திற்கு ஒளிகாட்டுகிறது.

பணவிடுதூது

முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப்பட்டது. மதுரை மன்னன் முத்துவீரப்ப நாயக்கனின் பிரதானியாக நெல்லைச்சீமையை ஆண்டு வந்த வெங்கடேசப்பையனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட நூல். பரிசில் பெற்ற புலவர் கோவில் தாசியின் மேல் மோகங் கொள்கிறார்; அவளை அடைய விரும்புகிறார். அதற்குப் பணம் தேவை. பணத்தைத் தூதுவிடுகிறார். கதைத் தன்மை சுருக்கமாக இருந்தாலும் 74 பாடல்களின் வரிகளில் 490 வரிகள் தூதுப் பொருளான பணத்தின் பல்வேறு சக்திகளையும், தன்மைகளையும் புலப்படுத்துவதற்கே பயன்படுத்தப்பட்டுள்ளன. வெங்கடேசப்பையனின் செல்வச் செழிப்பும், ஆட்சி முறைகளும், கிராமக் கணக்கர்களின் கள்ளக் கணக்குகளும் கூறப்பட்டுள்ளன.

கட்டுரையில் பணத்தின் பலத்தைப் பற்றி தமிழ் இலக்கியங்களிலிருந்து சான்றுகளைக் கூறியிருக்கிறார் கட்டுரை ஆசிரியர். பணத்தின் மகிமையைப் பற்றிக் கார்ல் மார்க்ஸ் எழுதிய நூலிலிருந்து மேற்கோள் காட்டியிருப்பது பணத்தைப் பற்றிய கட்டுரையை மிகவும் சிறப்பிக்கிறது. 'ஷேக்ஸ்பியர் நாடகமான 'ஏதென்ஸ் நகரத்துடைமன்' கதையில் பணத்தைப் பற்றிக் கதாநாயகன் வாயிலாகக் கூறப்பட்டுள்ளதை மார்க்ஸ் எடுத்துக் காட்டி தன் கருத்தையும் வெளியிட்டிருப்பதை இக்கட்டுரையில் திரு.ரகுநாதன் குறிப்பிட்டிருக்கிறார்.

ஏழைகளின் ஏக்கமெல்லாம் பணத்திற்கே, செல்வந்தர்களின் வீடுகளுக்குச் சென்றலைவதும் பணத்திற்கே என்று கூறி விட்டு வசதி படைத்தவர்களின் வாழ்வும் பணத்தின் பெருமையை வைத்தே என்பதைப் பணவிடு தூதில் விளக்கப்பட்டுள்ளது.

கட்டப்புடவையின்றி

கந்தையுமாய்ச் சென்றுசெல்வர்

கிட்டப் பலகாலும் கெஞ்சிப் போய் கிட்டமுட்டத்

தாங்குவாரற்று, தடுமாறி இராப்பகலாய்

ஏங்குவார் ஏக்கமும் உன் ஏக்கமே!

சாவடியும், வீடும் தலைவாசலும் சதங்கையும்

சேவடியும் மைந்தர்களும் தேவியரும் பாவடியிட்டு

ஏறும்கடும்புரியும் எச்சேவையும் அவைகளை

ஆறும் கலந்த அமுதுணவும் ஐயன் (பணம் பெருமையே!

அவர் ஏழைகள் படும்பாட்டையும் விவரிக்கிறார்.

நட்ட நடுக்காடுதோறும் ஆயத்துறைகாத்து
அலைவாறும் காயத்தில்
நூலைத் தரித்து நூறு மலையேறி நித்தம்
சேலைச் சுமடு சுமப்பாரும்
ஒற்றைமரமேறி, ஒலிகடலில் மீன்பிடித்து
விற்று நரகில் வீழ்வாரும்
வல்லமைகள் சொல்வதென்ன!
மானிடரெல்லாம்
உன்னை அல்லது தேடும்
பொருள் ஏது ஆம்மடவனே!
என்றும்
மூக்கறையர் ஆனாலும்,
மொண்டி குருடு ஆனாலும் - நோக்கமுன்
ஆக்கமுள்ள சாதிஇழுக்கு ஆனாலும்
கண்ணார உன்னை யங்கு கண்டுவிட்டால் இங்கு வர
ஒண்ணாதோ?
கூத்திமார் ஒட்டாரோ''

என்றும் பணத்தின் மகிமையை விவரிக்கிறார், பணத்தின் மகிமையைப் பற்றி இத்துணை விரிவாகவும், ஆணித்தரமாகவும் வாழ்க்கையனுபவத்தையொட்டி வருணித்த வேறு எந்தவொரு நூலையும் தமிழ் இலக்கியத்தில் காண்பதற்கில்லை என்றே சொல்லலாம் என்று கூறிப் பணவிடு நூலின் சிறப்பை விளக்குகிறார்.

காந்திமதி அந்தாதி

நெல்லைக்கு அருகிலுள்ள தச்சநல்லூரில் பிறந்த அழகிய சொக்கநாதபிள்ளை அவர்கள் இயற்றியது. தாதுவருஷப் பஞ்சத்தில் மக்கள் பட்ட கஷ்டங்களை தத்ரூபமாக விளக்குகிறார், பஞ்சநிலைப் பற்றி நெல்லை காந்திமதி அம்மையிடம் முறையிடுகிறார்.

பரிசுற்ற காந்திமதி அம்மையே!
இந்தப் பன்னிரண்டு
வருசத்துப் பஞ்சத்தை நீக்கி
அன்பாய் எமை
வாழ்விப்பையே!
என்றும் வேண்டுகிறார்.
நாளுக்குநாள் விலை ஏறுதம்மா!
கடன் ஆகுதம்மா
தேளுக்கு நேர் இந்தப் பஞ்சத்திலே என்ன செய்வம்
அம்மா!

'கொண்டாடுவார் இந்தப் பஞ்சத்தை
நெல் கட்டிக் கொண்டு விற்போர், திண்டாடினோம்;

புகல்வேறே இடமின்றி
செல்வரைப் போய்க் கண்டாலும் பேசிலர்'

இவ்வாறு தாதுவருடப் பஞ்சத்தில் பாடியதில் சில இன்றும் உண்மையாக இருக்கின்றதைப் பார்க்கிறோம். பஞ்சம் பாரதத்தை விட்டபாடில்லை. வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட பஞ்சங்களைப் பற்றி வெள்ளையர்களே எழுதி வைத்துள்ள குறிப்புகளை எடுத்துக் காட்டுகிறார் திரு.ரகுநாதன். ஒரு இடத்தில் மயிர் கூச்செறிகிறது.

''பஞ்சத்தினால் வாடி பிழைப்பை நாடிச் சென்ற ஒரு கணவனும் மனைவியும் களைத்துப் போய் பாதையோரத்தில் படுத்துறங்கினார்களாம், இடையிலே விழித்தெழுந்த கணவன் எவனோ ஒரு வழிப்போக்கனிடம் சிறிது அரிசியை வாங்கிக் கொண்டு, அதற்கு விலையாகத் தூங்கிக் கொண்டிருந்த மனைவியை விற்றுவிட்டு ஓடிவிட்டானாம். விழித்தெழுந்த மனைவி... கேட்ட மாத்திரத்திலேயே அவமானமும் அதிர்ச்சியும் தாங்கமாட்டாமல் அங்கேயே செத்து விழுந்து தன்மானத்தைக் காப்பாற்றிக் கொண்டாளாம் (மதுரை மிஷனரி 1709ம் ஆண்டு அறிக்கை).

பல்வேறு பஞ்ச விபரங்களையும் அந்நிய ஆட்சி கையாண்ட முறைகளையும் பஞ்ச காலத்தில் எழுதப்பட்ட உள்ளம் உருக்கும் இலக்கியங்களையும் பற்றி விபரமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பஞ்ச லட்சணத் திருமுக விலாசம்

தாதுவருஷப் பஞ்சத்தால் வாடிய மக்கள் மதுரை சோமசுந்தரக் கடவுளிடம் முறையிட்டு அவரிடமிருந்து சிவகங்கை ஜமீன்தாருக்கு சிபாரிசுக் கடிதம் வாங்கி வந்து கொடுப்பதாகப் பாடும் பிரபந்தம் வில்லியப்பிள்ளை என்பவர் இயற்றியது.

பஞ்சத்தின் கொடுமைகளை கிண்டலாகக் கூறினும் பரிதாபத்துடன் கண்ணீர் விடும்படி விளக்குகிறார் பஞ்சலட்சண ஆசிரியர்.

ஆடவர்கள் மங்கையரை நாடுதற்கும் மங்கையர்கள் ஆடவரின்

சங்கமத்தை நாடுதற்கும் சத்து விட்டு பொங்கியெழும்

காமைய நாயக்கர் கனகுதிப்பெல்லாம் ஒடுங்கி ஆமையப்பர் போலாய் அடங்கினரே!

பாவை நல்லார் சாந்தணிந்து, கச்சைத் தடாரித்து வீங்கியிறு

மாந்து பூரிந்த வனமுலைகள் - தேய்ந்து வற்றிப் பட்டமரப் பொந்தினிலும் பாழ்மண்டபத்தினிலும்

ஒட்டிய வௌவால்போல் உறங்கினவே!

என்று பசியினால் வாடி வதங்கிய மனித உருவங்களைச் சித்தரித்திருக்கிறார்.

சமூகத்தின் ஊழல்களைக் கண்டறிந்து அவற்றைக் கூடுதலான முறையில் கண்டிப்பதே நையாண்டி (Satire) யாகும். இத்தகையதொரு கருமத்தில் அந்தரங்கமான அனுதாபத்தோடும் பரிவோடும்தான் அவர் எழுத முனைய வேண்டும். இவ்வாறு எழுதுவதை ஆங்கிலத்தில் (Banovelent Satire) நன்மை பயக்கும் நையாண்டி என்பார்கள். இத்தகைய நையாண்டிச் சுவையை மேலைநாட்டில் பலர் வழங்கியுள்ளார்கள். தமிழ்நாட்டில் இம்மாதிரியான நையாண்டி இலக்கியம் குறிப்பிடத்தக்கதாக எதுவும் தோன்றவில்லை. இத்துறையில் பஞ்ச லட்சணம்தான் முதற்பெரும் நூலாகவும் முன்னோடியாகவும் விளங்குகிறது என்று சொல்லலாம். இதற்கு அடுத்தபடியாகச் சொல்லக்கூட

தமிழ்நாட்டில் ஒரே ஒரு நூல்தான் உள்ளது. அதுதான் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை எழுதியுள்ள 'நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழிமான்மியம்' தமிழ் இலக்கியத்தில் புதுமையொளி வீசும் இரு தீபஸ்தம்பங்களாக இவ்விரு நூல்களும் விளங்குகின்றன என்று பஞ்சலட்சணத்தை அறிமுகப்படுத்துகிறார். தமிழ் இலக்கியத்திலுள்ள குறைகளைப் பற்றி சிந்திக்கத் தூண்டுகிறது.

தமிழ் ஆர்வம் உள்ள மக்கள் அனைவரும் படிக்க வேண்டியது அவசியம். சமுதாய இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள மூல நூல்களைத் தனித்தனியாகப் பிரசுரித்து அத்துடன் இந்த அறிமுகக் கட்டுரையையும் சேர்த்தால் வாசகர்களுக்கு படித்துணர உதவியாக இருக்கும்.

(சாந்தி, 15.6.1966).

சோவியத் ஒன்றியம் லெனின் கிராடிலிருந்து அஞ்சலி

தமிழகத்தின் தலைவிதியை நிர்ணயித்தவர்களில் முதல்வர்

அன்புத் தோழனே! உனது அகால முடிவை நினைக்கவே முடியவில்லை. என் நினைவெல்லாம் உன்னையே நோக்குகிறது. கண்ணீர் வந்துகொண்டே இருக்கிறது! இரகசியமாகத் துடைத்துக் கொள்கிறேன். தனிமையாக இருக்கும்போது அழுதுகொண்டே இருக்கிறேன்.

2-ந் தேதி காலை 'பிராவ்தா' பத்திரிகையில் பிரசுரித்திருந்தார்கள். லெனின்கிராடு 'அக்டோபர் ஸ்காயா' விடுதியில் சோவியத் தோழர்கள் வாசித்துக் காட்டினார்கள். இந்தியத் தோழர்கள் அனைவரும் துக்கத்தில் ஆழ்ந்தனர்.

பிரெஞ்சு, இத்தாலி, அர்ஜண்டைனா, ஆஸ்திரேலியா, மடகாஸ்கர், தென்அமெரிக்கா நாடுகளின் தோழர்களெல்லாம் செய்தி தெரிந்து தங்கள் அனுதாபத்தை வந்து தெரிவித்தார்கள். எங்களை வழி அனுப்பி வைக்கும் போதும் லெனின்கிராடு கட்சி செயலாளர் நினைவு அஞ்சலி செலுத்தினார்.

செய்தியை நினைக்கவே இருதயம் வெடிக்கிறது. வேதனையாக இருக்கிறது! என்னைப் போல எத்தனை ஆயிரம் தோழர்கள் உன்னை நினைத்து அழுது கொண்டிருக்கிறார்களோ! இளைஞர்களின் துருவ நட்சத்திரமாக பிரகாசித்து வந்தாய்! எடுத்த காரியத்தை நிறைவேற்றி வைப்பதிலே உனக்கு நிகர் யாரும் இருந்ததில்லை! தமிழகத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் தலைவர்களில் ஒருவனாகத் திகழ்ந்து வந்தாய்!

உனக்கு வயது 56 ஆக இருந்தாலும் தமிழகத்தில் 35 வருட வரலாற்றை சுமந்து கொண்டிருந்தாய். உனது பணிக்கும், தியாகத்துக்கும் ஆவேசத்துக்கும் அறிவுக்கும் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்து செயலாற்றும் வாய்ப்பை மிகவும் பிந்தித்தான் மக்கள் கொடுத்தனர். அதிலும் ஒளிவிட்டுப் பிரகாசிக்கத் தொடங்கினாய்!

உன்னை 56 வயதாகிய பெரியவரென்று உன்னோடு பழகிய யாரும் நினைத்ததில்லை!

குழந்தையைப் போல் கள்ளமற்ற உள்ளமும், இளைஞனுக்குள்ள துடிப்பும், வயதானவர்களுக்குள்ள அனுபவத்தையும் ஒருங்கே தாங்கி நின்றதால், எல்லோரும் உன்னைப் பாலனென்று அழைப்பதிலே சுகம் கண்டோம்!

உன்னோடு மாற்றுக் கருத்துக் கொள்ளலாம்! சிஷ்யனாக இருந்தவன் எதிர்க்கிறானே என்று நினைக்க மாட்டாய்! உரிமையோடு சண்டை போடலாம்! அனுமதிப்பாய்! நீயும் வேகமாய்ப் பேசுவாய்! ஆனால் உனது பழகும் முறையே அலாதியானது! லட்சிய வாழ்வில் உன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டவன் நீ!

தோழர் பாலனே! முப்பத்தைந்து வருட சேவை முழுவதும் அலை அலையாக வந்துகொண்டே இருக்கிறது! உன்னோடு அரசியலில் நெருங்கிக் கொண்டிருந்த சம்பவங்களெல்லாம் தொடர்ந்து நினைவுக்கு வருகிறது! 1944-லிருந்து நெல்லை மாவட்டத்தில் நீ கூட்டங்களில் ஆவேசமாகப் பொங்கிப் பொழிந்த பேச்சுகளெல்லாம் ஒலிக்கின்றன! நீ பேசும்போது கூட்டத்தில் தனியாக ஓரமாக நின்று மக்களையும் உன்னையும் பார்த்துக் கொண்டே இருப்பேன்!

'இந்தோ - சோவியத் நட்புறவுக் கழக'த்தின் செயலாளராக இருந்தாய்! 'வீரமங்கை டான்யா' தீரத்தை சிறுபுத்தக வடிவில் வடித்துக் கொடுத்தாய். பாசிஸ்ட் பேயர்களின் கொடுமையை நீ சித்தரித்து ஆவேசமாகப் பேசும் போது கூட்டமே அழப் பார்த்திருக்கிறேன்! அநேக தோழர்கள் பெண் குழந்தைகளுக்கு 'டான்யா' என்று பெயரிட்டனர்! திரு.வி.க. உனதுப் பேச்சை பாராட்டக் கேட்டிருக்கிறேன்!

வங்கப் பஞ்சத்தைப் பற்றி கூட்டங்களில் விவரித்தாய்! "பாஞ்சாலி பிறந்த நாட்டிலே, சீதை பிறந்த நாட்டிலே, கண்ணகி பிறந்த நாட்டிலே, என் தாய் ஒருவேளைக் கஞ்சிக்கு கற்பை இழப்பதா!" என்று நீ மார்பிலே ஓங்கி அடித்துக் கதறும்போது நெல்லை மாவட்டக் கூட்டத்தில் இருந்த பெண்களெல்லாம் "யார் பெத்த பிள்ளையோ" என்று கதறி அழக் கண்டிருக்கிறேன்.

கொடுமையைக் கண்டு கொதித்து எல்லோருக்கும் உணர்ச்சி ஊட்டினாய்! இப்போது உன்னை நினைத்து அழுது கொண்டிருக்கிறோம்!

"மக்காச் சோளத்தை கோவில்பட்டியில் கோழிக்குப் போட்டார்கள். கோழிகளெல்லாம் இறந்துவிட்டன." என்ற செய்தியைத் துருவித் தேடி எடுத்துச் சொன்னாய்! அன்று பரபரப்பான செய்தியாக இருந்தது! வெள்ளை ஏகாதிபத்தியம் ஆளத் தகுதியில்லை என்று காட்ட சூடான செய்தியாக இருந்தது. எல்லாப் பத்திரிகைகளும் பிரசுரித்திருந்தன! 'கல்கி'யில் கட்டம் கட்டி சிறப்பான செய்தியாக அதை கல்கி வெளியிட்டார்.

'பதுக்கலை வெளியே எடு' என்ற இயக்கம்! டாக்டர் ராஜன் உணவு அமைச்சராக இருந்தார்! அவரிடம் அரசின் குறைபாட்டை எடுத்துக் கூறினாய்! "நீ இளைஞன்! உன் கட்சி எதையாவது சொல்லும்! எங்கப்பா நெல் இருக்கு?" என்று உன்னிடம் நெல்லையில் கேட்டார்! ஒரே வாரத்தில் 7000 மூட்டை நெல் பதுக்கலை வெளியே எடுத்துக் கொடுத்தாய்! கம்யூனிஸ்டுகளின் சேவையைப் பதுக்கல்காரர்கள் தவிர அனைவரும் நெல்லை மாவட்டத்தில் பாராட்டினார்கள்!

சிங்கை(விக்ரமசிங்கபுரம்)த் தொழிலாளி வர்க்கம் உனது சிம்மக்குரலை மறக்கவே இல்லை! ஐந்துலாம்புச்

சவுக்கமும் தேரடியும் உனது குரலை ஒலித்துக் கொண்டே இருக்கும்! பாபநாசத்தில் குளிக்கச் செல்லும் போதுகூட தோழர்கள் உன்னைச் செல்லமா அழைப்பார்கள். பெண் தொழிலாளிகள் மரியாதையோடு வணக்கம் செலுத்துவார்கள்! அந்த நாட்களை மறக்கவே முடியவில்லை! அயினி மஸ்தான், அருணாச்சலம் இருவரும் சுட்டுக் கொல்லப்பட்டபோது, நீ இன்ஸ்பெக்டர் ராமராவின் கொடுமையைச் சித்தரித்தும் ஹார்வி மில் நிர்வாகத் திமிரைத் தாக்கிப் பேசும்போதும் ஆவேசம் பொங்கி எழும்! ''தாமிரபரணி ஆறு ரத்த ஆறாகப் பெருக்கத்தோடு ஓடும்'' என்று ஓங்காரக் குரல் கொடுக்கும் போது சிங்கைத் தொழிலாளி வர்க்கம் அலையலையாகக் குரல் எழுப்பியது!

தூத்துக்குடி தோணித் தொழிலாளர்களுக்கு முதல் முதல் சங்கம் அமைத்தாய்! பெரிய போராட்டமாக நடத்தினாய்! சென்னைக்கு வந்து திரும்பும் போதுகூட தோணியில் வந்த உப்புப் படிந்த மேனியோடு டேவிட்சன் தெரு கட்சி அலுவலகத்துக்கு வந்து உன்னை விசாரிப்பார்கள்; அந்தப் பரம்பரையில் இருந்த முதியவர்களெல்லாம் இன்று உன் பிரிவை நினைத்து அழாமல் இருக்க மாட்டார்கள்.

நீ எந்தக் காரியமானாலும் எடுத்ததை முடிக்கும் வல்லமை படைத்திருந்தாய்!

1947-ல் நீ தலைமறைவு! பிரகாசம் அமைச்சரவை உனக்கு வாரண்டு போட்டிருந்தது! அரசு ஊழியர்கள் வேலைநிறுத்தத்தைத் தூண்டியதாக!

நான்குனேரித் தாலுகா கட்டளைக் கிராமத்தில் மாவட்டக்குழுக் கூட்டம். முக்கிய ஊழியர்களுக்கு 'இன்றைய இந்தியா' (ரஜினி பாமித் எழுதியது) பற்றி வகுப்பு எடுத்தாய். அவ்வாட்டாரத்தில் புதிதாக விவசாயிகள் சங்கம் அமைத்திருந்தோம்! திருவாடுதுறை மடத்துக் கிராமம்! அறுவடை நேரம்.

முதல் நாளிரவு கூட்டம் போட்டோம். ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் கூட்டத்தில் பேசிப் பழக்கப்பட்டவன் நீ! பின்தங்கிய - ரயிலையே பார்த்திராத பலர் வாழும் சிறு கூட்டத்தில் எவ்வாறு பேசப் போகிறாய்? என்று எல்லோரும் நினைத்தோம்! பிரச்சினைகளை மட்டும் கேட்டுக் கொண்டாய்! சிறு சிறு கதைகளைச் சொல்லி சிரிக்கச் செய்து புரிய வைத்தாய். இறுதியில் ஆவேசமாகப் பேசி முடித்தாய்! இச்சிறுகதைகளை எப்போது யோசித்தாயென்று எல்லாரும் திகைத்தோம்! மறுநாள் அறுவடையில், மடத்துக் கருங்காலிகளை விவசாயிகள் ஓட ஓட விரட்டினார்கள்! கள்ள மரக்காலை (10 படி) பிடுங்கி உடைத்தார்கள்! நியாயமான மரக்காலை வைத்துத்தான் அளக்க விடுவோமென்று - களங்களில் அப்படியே அம்பாரமாகக் குவித்தார்கள்! இச்செய்தி 1947-ல் கிராமங்களில் தீயாகப் பரவியது.

அண்மையில் நடந்த விவசாயப் போராட்டத்திலும் - விவசாயப் பிரச்சினையைப் புரிந்து - கோவை மாவட்ட மக்களிடம் தெளிவாகப் பிரச்சாரம் செய்தாய்!

எதையும் இலகுவில் புரியும் சக்தி உன்னிடம் இருந்தது! அரசியலே பேசிக் கொண்டிருந்த நீ! சிங்கைத் தொழிலாளி வர்க்கத்துக்கு தலைமை தாங்க வந்தாய்! பஞ்சாலைத் தொழிலாளர் பிரச்சினையைத் தெளிவாகத் தெரிந்துகொண்டாய்! 'பஞ்சாலை நெருக்கடி' என்று சிறுநூலை எழுதினாய்! அக்காலத்தில் பஞ்சாலை பற்றித் தெரிந்துகொள்ள அந்நூல் விளக்கமாக இருந்தது! ஸ்பிண்டில், கவண்ட், பஞ்சு வியாபாரக் கொள்ளை அனைத்துப் பிரச்சினைகளையும் தெளிவாக எழுதியிருந்தாய்!

இலக்கியத்திலும் வல்லவனாகத் திகழ்ந்தாய்! மனப்பாடம் உனக்குப் பழக்கமில்லை! ஆனால் சிருஷ்டிகர்த்தா! நீ பேசிய பேச்சுக்களே இலக்கியமாக உருவாக்கப் பயன்பட்டது. எழுத்தாளர்கள் பலர் சிறந்த சிறு கதைகளை உன் பேச்சிலிருந்து உருவாக்கியிருக்கிறார்கள்!

சிறையிலிருந்து நீ தமிழாக்கம் செய்த 'தேனீக்கள்' சிறந்த தமிழாக்கம் என்று பாராட்டப்பட்டது! அறிவியல் பாடமாகத் திகழும் அந்நூலைத் திறமையாகத் தமிழில் கொடுத்தாய்! அறிவியல் துறை மாணவர்களுக்கு என்றென்றும் அந்த நூல் உன் நினைவாகத் துலங்கும்!

1948-ல் நெல்லை மாவட்டத்தில் முக்கியத் தோழர்களெல்லாம் தலைமறைவாக இருந்தோம். நான்குனேரித் தாலுகாவிலுள்ள ஒரு கிராமத்தில் 'கமிட்டி'க் கூட்டம் நடத்திக் கொண்டிருந்தோம். ஊரில் ஆளும் கட்சிக்காரர்களுக்கு நாம் வந்திருப்பது தெரிந்து விட்டதென்று கேள்விப்பட்டதும் அனைவரும் கால்நடையாக இரவோடு இரவாகப் புறப்பட்டோம். 25 மைல்கள் கால்நடையாக மலையடிவாரமாக வந்தோம். அப்போது மணிமுத்தாறில் அணை கட்டவில்லை. குகையில் தங்கினோம். இரு தினங்கள் கழித்து அந்த இடமும் போலீசுக்கு தெரிந்து விட்டதாகத் தகவல் கிடைத்ததும் எல்லோரும் - நீங்கள் உட்பட தோழர்கள் மாணிக்கம், வேலுச்சாமித் தேவர், மீனாட்சிநாதன் எல்லோரும் அங்கிருந்து வெளியேறிப் பிரிந்துவிட்டோம். அப்போது உன்னையும், மீனாட்சி சுந்தரத்தையும் போலீஸ் அதிகமாக வலைபோட்டுத் தேடித்திரிந்தார்கள். நாம் வெளியேறியது தெரியாமல் போலீஸ் படைகள் நாம் தங்கியிருந்த இடத்தில் குண்டுகளைப் பொழிந்தார்கள்!

நெல்லை சதி வழக்கில் தண்டிக்கப்பட்டு மதுரை சிறைக்கு வந்ததும் உண்ணாவிரதம் இருந்தோம். 15வது நாளில் உன்னை மட்டும் 'ஸ்ட்ரெச்சரில்' தூக்கிச் சென்றனர். எங்கே தூக்கிச் செல்கிறார்கள் என்பது எங்களுக்குத் தெரியாது. 18 பவுண்டுகள் குறைந்த உன்னை நாக்பூர் மத்திய சிறைக்கு எடுத்துச் சென்றார்கள் என்பது பின்னால்தான் தெரியவந்தது.

எத்தனையோ சம்பவங்கள் அலைஅலையாக நினைவில் வந்து கொண்டிருக்கின்றன!

நீ கல்லூரி மாணவராக இருந்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மாணவர்கள் போராட்டத்தை நடத்தினாய். மூன்றுமாதப் போராட்டத்தை சர்வகலாசாலையா, சர்வகலட்டா சாலையா? என்று 'ஆனந்தவிகடன்' எழுதிய கட்டுரையில் உன்னுடைய தீரத்தைப் பக்கம் பக்கமாக எழுதியிருந்தது!

நீ திருச்சி சிறையிலிருந்த சம்பவத்தை 'கல்கி' எழுதிய 'மூன்று மாதக் கடுங்காவல்' நூலில் சோகநாடகம் என்று குறிப்பிட்டிருக்கிறார்! காதலி வந்து சிறையில் சந்திப்பதையும் விடுதலையாகும் போது காதலி வரவேற்று நின்றதையும், சிறை வாசலிலேயே மீண்டும் பிரிட்டிஷ் நிர்வாகம் உன்னை பாதுகாப்புக் கைதியாகப் பிடித்துச் சென்ற வரலாற்றை கல்கி எழுதியிருந்தார்.

அன்றைய 'சோக நாடகம்' இறுதியிலும் சோகமாகவே முடிந்துவிட்டதே உன்வாழ்வு!

அன்புத் தலைவனே! நீ புகை பிடிக்கும் பைத்தியமாக இருந்தாய்! ஒரு நாளைக்கு எத்தனையோ பாக்கெட்டுகளைக் காலி பண்ணுவாய், உன்னைப் பார்த்து இளம் தோழர்களெல்லாம் புகைப்பிடிக்கும் பழக்கத்துக்கு வந்தார்கள். இது தெரிந்ததும் உடனே நிறுத்திவிட்டாய்!

கம்யூனிஸ்ட் கட்சி முழுநேர ஊழியனாக வரக் கூடாதென்று தடுத்த காதலியையும் கட்சிக்காகத் துறந்தாய். கட்சிக்காக எதையும் செய்யத் துணிந்தவனாக விளங்கி வந்தாய்.

நெல்லை சதி வழக்கை விசாரித்த திரு.நாகராஜ அய்யர் நீதிமன்றத்தில் போலீஸ்காரர் சமர்ப்பித்த கட்சி அறிக்கைகள், கையெழுத்துக்கள் அனைத்தையும் படித்துவிட்டு, உனது கையெழுத்தைக் குறிப்பிட்டு, ''வேகமாக ஒரே போக்கில் தெளிவாக இருக்கிறது. இதை எழுதிய பாலதண்டாயுதம் தெளிந்த சிந்தனையுடைய அரசியல் தலைவன்'' என்று பாராட்டினார்.

வெறும் அரசியல் கிளர்ச்சிக்காரனாக மட்டும் உன்னை பார்த்த மக்கள், தங்களின் பிரதிநிதியாகவும் தேர்ந்தெடுத்து அனுப்பி வைத்தார்கள். வருங்காலத்தில் உன் சேவையைப் பல வகைகளிலும் பயன்படுத்த எத்தனையோ இளந்தோழர்கள் எவ்வளவோ கற்பனைகளைத் தீட்டியிருந்தார்கள்.

எத்தனையோ எதிர்ப்புகளை துச்சமாகத் தள்ளி ஒதுக்கி விட்டாய். அடக்குமுறைக்கு அஞ்சவில்லை. துப்பாக்கி குண்டுக்கும் தப்பி வந்தாய்! நீண்ட நெடும் உண்ணாவிரதத்திலும் மீண்டு வந்தாய்! பிரிட்டிஷ் ஆட்சியிலும், காங்கிரஸ் ஆட்சியிலும், தி.மு.க. ஆட்சியிலும் சிறைச்சாலைகளில் அடைபட்டுக் கிடந்திருக்கிறாய்! தொடர்ந்து பதினைந்தாண்டுச் சிறைவாசம். கோவை தனிமைச் சிறை! இவ்வளவு பெரும் சோதனைகளையெல்லாம் கடந்து நீந்திவந்த உனக்கு - உனது உறுதியான வாழ்வு - 'ஆயுள் தண்டனைக் கைதி' எனப் பட்டம் பெற்ற நீ! உன் ஆவேசமான ஓங்காரக் குரல் எப்படி அடங்கியதோ! தோழர் பாலனே, எத்தனை பேரின் பிரச்சினைகளைப் பையில் எடுத்துச் சென்றாயோ? மோகனோடும், சதீஸ் லூமும்பாவுடனும் உணர்ச்சிப் பெருக்கில் உலகப் பிரச்சினைகளைப் பேசிக் கொண்டிருந்தாயோ? பாலன்! இளைஞர்களின் துருவ நட்சத்திரமாக துலங்கிய நீ! எதிர்பாராமல் விபத்துக்குள்ளாகி மறைந்துவிட்டாய்!

உனது முடிவை நினைக்கவே நெஞ்சு வலிக்கிறது! லெனின் கிராடு நகரில் இருந்து அழுது கொண்டிருக்கிறேன்.

தமிழகத்தில் எல்லாத் தோழர்களும் தலைவனை இழந்து - கலங்கரை விளக்கு அடிசாய்ந்து விழுந்து அணைந்ததைக் கண்டு கதிகலங்கிக் கதறிக் கொண்டிருப்பார்கள்.

தோழனே! தலைவனே! பாலனென்று பரிவோடு அழைத்துப் புலம்பி உன் புரட்சிக் காவியத்தை ஒரு வரியில் முடித்துவிட முடியாது.

பாலனின் பயணம் தடைப்பட்டிருக்கலாம். ஆனால், அவர் அடி ஒற்றி வந்த பாதை தடைப்படுத்தப்பட முடியாது. அவரது அஸ்திக் கலசத்தின் அடக்கம் முடிந்திருக்கலாம். ஆனால், அவர் ஆயுள் முழுதும் போராடி வந்த ஆளும் வர்க்கத்தின் அஸ்தி, உழைப்பாளர்களின் கண்ணீர் நதியில் இன்னும் கலக்கப்படவில்லை. அந்தக் கடமையை முடிக்காமலேயே முடிந்துவிட்ட அந்த மாமனிதன் கல்லறையிலிருந்து கை நீட்டி முழங்குகிறார்.

''என்னை நினைத்து ஏங்காதே, அதோ என் தலைவனைப் பலப்படுத்து'' என்று, ஆம்! பாலனுக்கு தலைவனாய் நின்ற பாட்டாளி வர்க்க பாசறையான நமது கட்சியைத்தான் பலப்படுத்தச் சொல்கிறார்.

அந்த உலைக் களத்தில் - அவரைப் போன்ற செயல் திறனும், நெஞ்சுறுதியும், பேராற்றலும் கொண்ட பாலன்களை உருவாக்குவோம்.

பயத்திற்கு விடை கொடுத்துப் புரட்சிப் பயணத்தைத் தொடங்கிய பாலனைப் போன்றே வறுமையையும், வளர்ந்து வரும் வேலையின்மையையும் கட்டிக் காத்துவரும் முதலாளித்துவக் கோட்டையை நோக்கியே நமது குறி இருக்கட்டும். முப்புரங்களையும் பிடிசாம்பலாக்கிய சிவனைப் போல், முப்பீடங்களான ஏகாதிபத்தியம், ஏகபோகம், நிலப்பிரபுத்துவங்களையும் நிர்மூலமாக்குவதை விரைவுபடுத்துவதே பாலனுக்கு இதமானதாகும்.

தாயின் வயிற்றிலும் தத்தி நடப்பதிலும் சிறையிலும் தலைமறைவிலும், சாகிற போது செந்நெருப்போடும் போராடி வாழ்ந்து போராடியே மடிந்த அந்த பாலனைப் போல் நாமும், வாழ்வதே ஒரு போராட்டமாதலால் போராடியே வாழ்ந்து, போராடியே முடியவும் நெஞ்சைத் தயாரிப்போம்.

சிறைகள் மோதி மிதித்த போதும் சித்திரவதைகள் சீறி அடித்தபோதும் போராடும் முடிவை மாற்றாத பாலனின் வைரநெஞ்சைப் போல் நாமும் உருவாக்கிக் கொள்வோம்.

காலங்கள் மாறுகிற போது காலநிலைகள் மாறலாம். கண் இமை திறந்தால் கனவுகள் முடியலாம். ஆனால், கருகிய பாலனின் உடலோடு அவரது சரித்திரம் முடிந்துவிடப் போவதில்லை என்பதை உறுதிப்படுத்துவோம்.

அன்பு பாலனே,

உனது வெந்து முடியாத உடல் மீது வெள்ளைச் சாம்பலின் மீது நாங்கள் சபதமேற்கிறோம். உனது உடல் செந்தீயில் வேகிறபோது. - உனது இதயத்தில் நிறைவு பெறாமல் நின்றுவிட்ட சோசலிஷ சுகபூமியை அமைத்து இறுதி அஞ்சலியை இளைய தலைமுறை நிறைவேற்றி வைக்கும். பெரும் துன்பத்தையும், வெறும் கண்ணீரை மட்டுமே காணிக்கை ஆக்காமல். நீ கட்டிக்காத்த கம்யூனிஸ்ட் கட்சியை மேலும் கட்டி, உருக்குப் போன்று வளர்த்து உனது இதய நோக்கத்தை ஈடேற்றுவோம்!

ஜனசக்தி - 24.6.1973

அன்பான பேத்தி பாரதிக்கு...

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் நல்லகண்ணுவின் பேத்தி சண்முக பாரதி மிக இளம் வயதில் (16) திடீரென்று இறந்துபோனார். பேத்தி பற்றிய தன் நினைவுகள் ஒரு கடிதம் மூலம் எழுதுகிறார் நல்லகண்ணு.

என் அன்பான பேத்தி சண்முக பாரதி!

இப்பவும் எனக்கு உன் ஞாபகமாகவே இருக்கிறது. உனது கறுப்பான, களையான முகமும், துறுதுறுப்பான கண்களும் நினைவை விட்டு அகலமறுக்கின்றன. என் மகள் காசிபாரதிக்கு நீ சின்னப் பாப்பாவாகப் பிறந்த போது, கோவில்பட்டிக்குச் சென்று பார்த்ததிலிருந்து வரிசையாக

நடந்த நிகழ்ச்சிகள் நினைவுக்கு வந்து கண்களில் நீர் பனிக்கச் செய்கின்றன. நம் குடும்பத்தில் பிறப்பவர்களுக்கு பாரதியின் பெயரைச் சூட்டுவதை வழக்கமாகக் கொண்டிருப்பதால் உனக்கும் 'சண்முக பாரதி' என்று பெயர் வைத்தோம்.

நான் கட்சி வேலை காரணமாக தமிழ்நாடு முழுக்கப் பயணப்பட்டுக் கொண்டே இருப்பேன். சமயம் கிடைக்கும் போதெல்லாம் கோவில்பட்டிக்கு வந்து உன்னைப் பார்ப்பேன். 'தாத்தா' என்று ஆசையுடன் ஓடிவருவாய். என்னிடம் எவ்வளவு பிரியமாக இருப்பாய்? என்னையும், பாட்டியையும் நீ 'அம்மா, அப்பா' என்றுதானே அழைப்பாய்! ஒருமுறை என் தோளில் ஏறிக்கொண்டு கெஞ்சியபடி 'என்னையும் உன் மூன்றாவது மகளாக வைச்சுக்க தாத்தா' என்று கேட்டாய்.

நான் எப்போதாவது கோவில்பட்டிக்கு வந்தாலும் பாட்டி உன் கூடவே இருந்தாலும் -உனக்குப் பாட்டி என்றால் ரொம்பப்பாசம். ஊருக்கு வந்து உன்னைப் பார்த்துவிட்டு நான் மறுபடி கிளம்பும்போது என்னுடைய இடுப்புப் பெல்ட்டிலிருக்கும் பர்ஸைப் பிரிப்பேன். 'போ தாத்தா! நீ ரெண்டு ரூவாதான் கொடுப்ப. பாட்டி 10 ரூவா தரும்'னு சிணுங்குவ. படிப்புல நீ ரொம்பச் சூட்டிகை பாரதி! புத்தசாலிக் குழந்தை! உன் கறுப்பு நிறத்தை பத்தி உன் மனசுக்குள் நிறைய வருத்தம் இருந்தது எனக்குத் தெரியும்.

'நான் கறுப்பா இருக்கேனே தாத்தா?'ன்னு நீ ஒவ்வொரு முறை வருத்தப்படும் போதும் 'அதனால என்னம்மா? உன் கண்ணு அழகா இருக்கு. புத்திசாலியா இருக்கிற... வாழ்க்கையில் பெரிய பெரிய சாதனைகள் செஞ்ச பலபேர் கறுப்பானவங்கதான்...'ன்னு நான் சொல்வேன். கோவில்பட்டிக்கு உரிய ஒரு குறும்பான பாப்பாவா இருந்த நீ, ஸ்கூல் முடிச்சு, தூத்துக்குடிக்கு +2 படிக்கப் போனபோது ரொம்ப அமைதியா மாறியிருந்த... 'தாத்தா! நான் படிச்சு டாக்டராகி, கட்சியிலே சேர்ந்து ஏழை மக்களுக்கு உதவுவேன்'ன்னு என் தோள்ல சாஞ்சிக்கிட்டு நீ சொன்னது இப்ப நினைவுக்கு வருது. திடீர்னு எங்களை விட்டுட்டுப் போயிட்டியே பாரதி!

உனக்கு ஏழு வயது இருக்கும்போது மதுரையில், கட்சி நடத்திய பாரதியார் விழாவுக்கு நான் உன்னைக் கூட்டிட்டுப் போனேன். விழா முழுக்க முதல் வரிசையில் உட்கார்ந்து நீ ஆர்வமாக கவனிச்சிக்கிட்டே இருந்த, நாங்களெல்லாம் பேசினோம். எம்.எல்.ஏ. சுப்பராயன் பேசினதைப் பத்தி ''சுப்பராயன் மாமா நல்லா பேசினாரு... நீ பேசினதுதான் எதுவும் புரியலை தாத்தா''ன்னு என்னை கிண்டல் பண்ணிக்கிட்டிருந்த...

போன மாசம் திடீர்னு உடம்பு டயர்டாகி சோர்ந்து படுக்க ஆரம்பிச்ச. மஞ்சள் காமாலைன்னு கண்டுபிடிச்சு காரையாற்றுக்குக் கூட்டிப்போய் கீழாநெல்லி கொடுத்ததுல, எல்லாம் சரியாப் போச்சுனுதான் நினைச்சோம். ஆனா மெட்ராஸ் வந்ததும் மறுபடி இருமல், சோர்வுன்னு உன்னை நோய் பாடாய்படுத்த ஆரம்பிச்சிடுச்சு... ஆஸ்பத்திரியில் அட்மிட் பண்ணினதும் உனக்கு 'லெப்ட்டோபைரோஸி'ன்னு கண்டுபிடிச்சு அதையும் சரி பண்ணினாங்க. ஆனா அடுத்து மலேரியா அட்டாக் பண்ணிடுச்சு. இந்தியாவுல மலேரியாவை ஒளிச்சுக் கட்டியாச்சுன்னு நினைச்சிருந்தோமே... அந்த அரக்கன் இன்னும் உயிரோடத்தான்மா இருக்கான்...

நுரையீரல், லிவர் இரண்டுமே பழுதாயிடுச்சுன்னு சொன்னாங்க... நீ என் தைரியமான பேத்தியாச்சே... 'குணமாயிடுவேன் தாத்தா... எனக்கு சரியாயிடும்'ன்னு சொல்லிக்கிட்டே இருந்தே... டாக்டர் கூட சொன்னாரே. 'very charming girl எங்களால் முடிஞ்ச அளவு காப்பாத்தப் போராடறோம்'ன்னு... ஆனா கடைசில பலனில்லாமப் போச்சு பாரதி!

''நீ ரொம்ப நல்லவர்னு பத்திரிகைகள் எல்லாம் எழுதுதே தாத்தா, நீ எலக்‌ஷன்ல தோத்துப் போயிட்டா நான் ஒட்டே போட மாட்டேன்...''ன்னு சொன்னியே, ஒட்டுப்போடும் வயது வர்றதுக்கு முன்னாடியே போயிட்டியேம்மா... 'மூனாவது மகளா என்னை வைச்சுக்கு தாத்தா'ன்னு சொன்ன நீ கோவில்பட்டிலேர்ந்து உடம்பு முடியாம வந்து இந்த தாத்தா வீட்டிலேயே மறைஞ்சு போயிட்டியேம்மா...

கட்சித் தோழர்கள் எல்லாம் அவங்களாகவே முன் வந்து ஆஸ்பத்திரியில உனக்கு ரத்தம் கொடுத்தப்போ, அதைப் பார்த்து, 'இதுக்கெல்லாம் ரொம்ப செலவாகுமே தாத்தா?'ன்னு கவலைப்பட்டியே பாரதி. இத்தனை கட்சித் தோழர்களோட பலம், பெரிய டாக்டர்களோட முயற்சி இதெல்லாம் உன்னை காப்பாத்த முடியாமப் போயிடுச்சே மகளே!

தமிழ்நாட்டில் இருக்கிற கோடிக்கணக்கான ஏழைக் குழந்தைகளுக்கு இது மாதிரியான நோய்கள் வந்தா அதுக என்ன பண்ணும்? அவங்களுக்கெல்லாம் மருத்துவ வசதி இலவசமா எப்பக் கிடைக்கும்?

இந்தக் கேள்விகளும் மனதை அரிச்சிக்கிட்டே இருக்கு பாரதி. தீபாவளிக்கு உனக்கு வாங்கின புதுச் சுடிதார், துப்பட்டா, புதுச் செருப்பு எல்லாத்தையும் பாட்டி அமைதியா சிதையில எடுத்து வைச்சபோது கட்சித் தோழர்கள் கதறி அழுதுட்டாங்கம்மா...

குழந்தைகளுக்கு மலேரியா, மஞ்சள்காமாலை இதுமாதிரி வந்தா ரொம்ப ஜாக்கிரதையா இருக்கனும்னுதான் இப்ப நான் எல்லோர்கிட்டேயும் சொல்லிக்கிட்டிருக்கேன்... நீ என்னைக்கும் எங்க நினைவுகள்ல வாழ்ந்திட்டு இருப்ப பாரதி.

அன்பான நினைவுகளுடன்

உன் தாத்தா

நல்லகண்ணு

★★★



புகைப்படங்கள் சொல்லும் போராட்ட வாழ்க்கை



தோழர் ஆர். நல்லகண்ணு அவர்களின்
தந்தையார் ராமசாமி
தாயார் கருப்பாயி அம்மாள்

தாயார், மனைவி
மக்களுடன்



சகோதர, சகோதரி
குடும்பங்களுடன்

பேரன்,
பேத்திகளுடன்

80

ஆயுள் தண்டனை,
வெடிகுண்டு
வைத்திருந்ததாக
தனியாக
ஐந்தாண்டு தண்டனை

சிறையிலிருந்து விடுதலை

கைது செய்யப்பட்ட நாள்
20–12–1949
7 ஆண்டுகளுக்கு பின்
விடுதலை
13–12–1956

வரி வஜா
எதிர்ப்பு
இயக்கம்
1963

100 நாட்கள்
போராடி
நாச்சியார் குளத்தில்
ஜப்தி செய்யப்பட்ட
மாடுகள்
மீட்கப்பட்டன

நாடாளுமன்ற
கட்சி அலுவலகம்.
தோழர்கள்
வ. சுப்பையா,
வி.பி. சிந்தன்,
எஸ். பார்த்தசாரதி
ஆகியோருடன்
—1958

காஷ்மீர் பள்ளத்தாக்கு
தோழர்கள்
கே. உமாநாத்
ஏ. பாலசுப்ரமணியன்
கே.பி.எஸ். கோன்
கே.எஸ். சோமு
ஆகியோருடன்
—1958

ஒய்.வி. கிருஷ்ணாராவுடன்
கிழக்கு ஜெர்மனியில்
1969

மறைந்த
தோழர் எஸ். ஜி. முருகையன்
அவர்களுடன்
மாஸ்கோவில்
அரசியல் கல்விக்காக
1973

சீனாவில்
தோழர் பரதன்
ஆகிய குழு தோழர்களுடன்
1998

1971ல் நில மீட்சிப் போர்
சிறையில் இருந்து விடுதலை பெற்று, தோழர்களுடன்

வெண்மணித் தீயில் தப்பிய
நந்தன், எம்.என். கோவிந்தநாயர் ஆகியோருடன் – 1978



பதிந்தா தேசிய மாநாடு – 1978

தோழர் கல்யாணசுந்தரம்,
நெல்லைத் தோழர்களுடன்

கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில சிறப்பு மாநாடு — 1966
நெல்லைப் பிரதிநிதிகள், தலைவர்களுடன்

கட்சிக் கல்வி பயிற்சி முகாம், குற்றாலம் — 1973
தோழர்கள் ராஜேஸ்வரராவ், வ. சுப்பையா, ப. மாணிக்கம் ஆகியோருடன்.

நில உச்சவரம்பு பிரச்சார போராட்டத்தில்
தோழர் ஏ.கே.கோபாலன் அவர்களுடன் –1961

தோழர் கல்யாணசுந்தரம் அவர்களுடன்– 1965



நான்குநேரி
விவசாய சங்க
பிரச்சார
யாத்திரை – 1960



தோழர் காத்தமுத்து, மற்றும் நெல்லை தோழர்களுடன் – 1970

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் – 1965

சாதிக் கலவரத்திற்கு எதிராக பிரச்சார யாத்திரை – 1996



தோழர் சங்கரய்யாவுடன்

வெண்மணியில்

விடுதலைப் போராட்ட வீரர்
முத்தையாவுடன்

இராமநாதபுரம்
சாதி கலவரத்தில்
தோழர்களுடன்
நேரடியாக
பார்வையிடுதல்

இராமநாதபுரம்
சாதி கலவரத்தில்
தோழர்களுடன்
நேரடியாக
பார்வையிடுதல்

விவசாய தொழிலாளர் சங்க மாநாடுகளில்



தோழர் டி.ராஜா, பி.எஸ். தனுஷ்கோடி ஆகியோருடன்



தோழர்கள்
பரதன், ராஜா
ஆகியோருடன்

மேடையில்
குன்றக்குடி அடிகளாருடன்

தோழர் இந்திரஜித் குப்தா
அவர்களுடன்

திருப்பூர் குமரன்
நூற்றாண்டு விழாவில்

தோழர் பரதன்
சரஸ்வதி சுப்பையா
ஆகியோருடன்



தியாகி தீர்த்தகிரி முதலியார்
அவர்களின் சிலைதிறப்பு
விழாவில்

கவிஞர் தமிழ் ஒளி அன்பர்
சஞ்சீவியுடன்

தோழர்கள் சங்கரய்யா
எழுத்தாளர் ஜெயகாந்தன்
இயக்குநர் வி.சேகர்
தா.பாண்டியன்
ஆகியோருடன்

அகில இந்திய
விவசாய சங்கப்
பொதுச் செயலாளர்
அதுல் குமார் அஞ்சான்
அவர்களுடன்



குடியரசுத் தலைவர்
அவர்களுக்கு
பொன்னாடை
அணிவிக்கிறார்

முதுபெரும் கம்யூனிஸ்ட்
தலைவர் சி. சுப்ரமணியம்
அவர்களுடன்

செங்கொடி காத்த
சிவப்பியம்மாள்



சென்னையில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம்

வறுமையால் தற்கொலை செய்துகொண்ட தஞ்சை வீரய்யன் குடும்பத்தினருக்கு உதவி

திருவாரூர் மாவட்ட கட்சி மாநாட்டில் மாணவருக்கு உதவித்தொகை வழங்குதல்



சென்னையில்
சுனாமி பாதிப்பு
நிவாரனம்

தான் நேசிக்கும்
கொடியுடன்
தோழர்...

வரட்சிக்கு எதிராக...



தென் மாவட்டங்களின்
சாதிக்கலவர
எதிர்ப்புயாத்திரை – 1997

தோழர்
பி.கே. வாசுதேவ நாயருடன்

தோழர்
என். வரதராஜன்
அவர்களுடன்

சாதிக்கலவர
பாதிப்பு

திருவாரூர்., நாகை
மாவட்டத்தில் வறட்சி



தென்மாவட்ட

சாதிக்கலவர

எதிர்ப்பு

யாத்திரை – 1997

தென்மாவட்ட

சாதிக்கலவர

எதிர்ப்பு

யாத்திரை – 1997



திருப்பூர்
நிதியளிப்பு
கூட்டத்தில்

தோழர்
தா.பாண்டியன்
டி.ராஜா
ஆகியோருடன்

தலைமை அலுவலகத்தில்






தனது அறையில்





வரலாற்றுப்
பயணம்
தொடர்கிறது...

நல்ல தலைவர் நல்லகண்ணு

மே.து.ராசுகுமார்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பட்ட வகுப்பு மாணவனாக இருந்தபோது, தோழர் எஸ்.ஏ.முருகானந்தம் அவர்கள் ஆசிரியராக இருந்து நடத்தி வந்த 'சாந்தி' இதழில் அரசியல் கட்டுரைகளை எழுதி வந்தேன். அப்போது நெல்லை மாவட்ட விவசாயிகள் சங்க செயலாளராக இருந்த தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்கள், அக்கட்டுரைகளைப் போற்றியும் என்னை ஊக்குவித்தும் ஒரு மடல் எழுதியிருந்தார். அதற்கு முன் எங்களுக்குள் எத்தகைய அறிமுகமும் ஏற்பட்டிருக்கவில்லை. 'சாந்தி' அலுவலகத்தில் எனது முகவரியைப் பெற்று, அம்மடலினை எழுதியிருக்க வேண்டும். ஆனால், மாணவப் பருவத்தில் இருந்த எனக்கு, கம்யூனிஸ்ட் இயக்கத்தின் தலைவர் ஒருவரிடமிருந்து வந்த அம்மடல் மிகுந்த மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் அளித்தது.

அதனையடுத்து, கோவில்பட்டியில் 1967 ஜூலை 29, 30, 31 ஆகிய நாட்களில் நடைபெற்ற அரசியல் வகுப்பில் பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன் அவர்களது ஏற்பாட்டில் கலந்து கொண்டேன். அவ்வேளையில்தான் 30.7.1967 அன்று நெல்லை சந்திப்புக்கு அருகில் இருந்த விடுதி ஒன்றில் தோழர் நல்லகண்ணு அவர்களை முதன்முறையாக நேரில் அறிமுகம் செய்து கொண்டேன். 31.7.1967 அன்று நடந்த அரசியல் வகுப்பில் 'இன்றைய நிலையும் கல்கத்தா தேசியக் குழுத் தீர்மானமும்' என்ற தலைப்பில் அவர் பாடம் எடுத்தார்.

அதற்குப் பின்னர் எங்களது தொடர்பு இன்று வரை தொடர்கிறது. பேரா. ஆ.சிவசுப்பிரமணியன் அவர்கள் அழைத்து வந்ததைப் போன்றே நானும் 'அண்ணாச்சி' என்று அவர்களை அன்புடன் விளிப்பதும் நீடிக்கிறது.

இளைஞர்களை ஊக்கப்படுத்துபவராக, திறமைகளைப் போற்றுபவராக, தொண்டர்களை மதிப்பவராக, தோழமையைக் கடைப்பிடிப்பவராக அவரைப் பார்க்கும் போதெல்லாம் தலைமைப் பண்புகள் தலைதூக்கி நிற்பதை உணர்கிறோம்.

காட்சிக்கு எளியவராக, எல்லோருக்கும் இனியவராக, அன்பைப் பொழிபவராக, உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாதவராக, நேர்மையும் நியாயமும் கொண்ட உள்ளத்தவராக அவரைக் காணும்போதெல்லாம் மாமனிதர் ஒருவர் நம்மிடையே வாழ்ந்து வருவதை அறிகிறோம்.

ஆனால், அண்ணாச்சி அவர்களின் மேன்மைகளை இயக்கத் தலைமைப் பண்புகளோடும் மனிதநலக் குணங்களோடும் மட்டும் அடக்கி விட முடியாது.

பல முனைகளில், அவரது ஈடுபாடும் ஆர்வமும் பயிற்சியும் தொடர்புகளும் நாட்டமும் பங்களிப்பும் பலரும் அறியாததாகும்.

